

# முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி

கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி

முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து

# முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி

*கலாநிதி  தாஹா ஜாபிர் அல்-அல்வானி*

முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து

# முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி

*கலாநிதி  தாஹா ஜாபிர் அல்-அல்வானி*

*தமிழில்:*

**அக்ரம்  அப்துஸ் ஸமத்**

*செம்மையாக்கம்:*

**பாத்தும்மா நாச்சியா**

**Muranpaattu Olukkaththilirunthu**
**Murapaattuth Thavirppai Nookki**

Tamil edition of

من أدب الاختلاف إلى نبذ الخلاف

by Dr. Taha Jabir al-Alwani

Originally published by
The International Institute of Islamic Thought (IIIT)
P.O.Box 669 Herndon, VA 20172 U.S.A.
www.iiit.org

London office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

All rights reserved

Tamil edition 2022
Translated by Akram Abdul Samad
Edited by Paththumma Naachchiya

ISBN 978-624-5832-02-6

Published by
Fuzin Texts
23/3, Market Road, Dharga Town – 12090, Sri-Lanka.
Cover design by Gihan Indunil
Printed by Millennium Graphics, Maharagama

**நன்றி**
அம்மார் ஹஸீப்
ஷாதியா ரமீஸ்
அஸார் வஸீர்

# பதிப்புரை

கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி அவர்களது 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' எனும் நூலை நாம் 2007 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தோம். அது 2017 இல் மீள்பிரசுரம் செய்யப்பெற்றது. அந்த நூலினை கலாநிதி அல்வானி அவர்களே மீளாய்வு செய்வதாகவும் அதில் அவர் முன்வைத்திருந்த பல கருத்துகளை மறுத்துரைப்பதாகவும் அமைந்தது 'முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி' எனும் இந்த நூல். எமது சமகாலத் தலைமுறையினர் இந்த நூல் மூலம் பெரும் பயன் ஈட்டிக்கொள்ள இயலும் என்பது எமது நம்பிக்கை. இந்த நூலின் வெளியீடு எமக்கு அளவிறந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

நூற்றுக்கணக்கான அடிக்குறிப்புகளை இந்நூலில் வழங்கியுள்ளார் கலாநிதி அல்வானி. அவற்றுள் மிகப்பெரும்பாலன அரபு மூலநூல்கள் குறித்தன. சிலபோது அடிக்குறிப்புகளில் வந்துள்ள மேற்கோள்களுக்கான ஆதாரங்கள் மேலதிக அடிக்குறிப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன. அனைத்துமே அரபு மூல நூல்கள். இந் நூலின் வாசகர்கள் அடிக்குறிப்புகளையும் இணைத்தே வாசிக்க வேண்டும் என மொழிபெயர்ப்பாளர் அறிவுறுத்தல் செய்திருந்தும் அவற்றுள் ஏராளமானவை தவிர்க்கப்பட்டுள்ளன.

செம்மையாக்கத்தின்போது அவசியம் சேர்க்கப்பட வேண்டியன வாகக் கருதப்பட்ட குறிப்புகள் மாத்திரம் இதில் இணைக்கப் பட்டுள்ளன.

மேலதிக விவரங்கள் விழைவோர் من أدب الاختلاف إلى نبذ الخلاف எனும் அரபு மூல நூலைக் கலந்து கொள்ளலாம்.

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக.

*Fuzin Texts*
*23/3 மார்கட் வீதி,*
*தர்கா நகர்.*
*மார்ச் 2022*

## உள்ளடக்கம்


மொழி பெயர்ப்பாளன் உரை xi

முன்னுரை xv

முதல் நூல் பற்றிய ஒரு குறிப்புரை xxxiii

பகுதி ஒன்று 1

**'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' என்ற முதல் நூலின் சாராம்சம்**

பகுதி இரண்டு 29

**முரண்பாடுகள் பற்றிய ஒழுக்க நெறிகளிலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி**

பகுதி மூன்று 65

**இல்முல் கலாமும் உம்மத்தின் பிரிவினையும்**

பகுதி நான்கு 105

**புதியதொரு இல்முல் கலாம் உருவாக்கத்தை நோக்கி**

பகுதி ஐந்து 203

**கருத்து வேறுபாடுகளை எதிர் நிலையாகவன்றி பன்முக வடிவமாக நோக்குதல்**

பகுதி ஆறு 263

**இஸ்லாமிய இயக்கங்களுக்கான சாசன சிந்தனைகள்**

முடிவுரை 381

# மொழி பெயர்ப்பாளன் உரை

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். சாந்தியும் சமாதானமும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களை மறுமை நாள் வரை பின்பற்றுகின்ற அனைவர் மீதும் உண்டாவதாக.

'முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி' எனும் தலைப்பிலான கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி அவர்களது இந்த நூல் என்னுடைய மற்றொரு மொழி பெயர்ப்பு அனுபவம். இந்த அனுபவம் சற்று வித்தியாசமானது. கலாநிதி அல்வானி அவர்களை ஒப்பீட்டளவில் நான் வாசித்தது குறைவு. சில தேவைகள் நிமித்தம் மாத்திரம் அவரது சில நூல்களையோ அல்லது நூல்களின் சில பகுதிகளையோ வாசித்திருக்கிறேன். ஆனால் ஒன்றை வாசிப்பதற்கும் அதனை மொழி பெயர்ப்பதற்கும் இடையில் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. மொழி பெயர்ப்பு மிகவும் வேறுபட்ட ஓர் அனுபவம். அல்வானி அவர்களுடைய சிந்தனை, அணுகுமுறை, இலக்கு, இயல்பு போன்றவற்றை இன்னும் ஆழமாக அறிந்து கொள்வதற்கு இந்த மொழி பெயர்ப்பு வாய்ப்பளித்தது என்று சொல்லலாம்.

இந்த நூலை அவர் எழுதினாரா அல்லது பேசினாரா என்ற சந்தேகம் வருமளவு மிகவும் சரளமான சமூக மொழியை இதில் கையாண்டிருக்கின்றார். ஒருவகையில் இது அவரது மன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு மொழி எனலாம். நீண்ட நாட்களாக அவரது சிந்தனையில் கருக் கொண்டு வளர்ந்து வந்த எண்ணங்கள், கருத்துகளைத் தொகுத்துப் பரிமாறிக் கொண்டுள்ளமையை இதில் அவதானிக்க முடிகின்றது. ஆய்வியல் சட்டகத்தின் இறுக்கங்களை இங்கு காண முடியவில்லை. இதற்கான பிரதான காரணம், இந்த நூல் அவரது முன்னைய நூல் ஒன்றின் மீள் பரிசீலனையாக அமைந்துள்ளமை. அவர் தொன்னூறுகளில் எழுதிய முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள் என்ற நூலில் முன்வைத்த சிந்தனைகளை இன்றைய நிலையில் மீள் பரிசீலனை செய்து அதில் அவர் விட்டுள்ள தவறுகளையும் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு, அவற்றைச் சீரமைக்கும் வகையில் தனது புதிய பார்வையை முன்வைப்பதாகவே இந்த நூல் அமைந்திருக்கின்றது. எனவே அறிவை உணர்ந்து பேசிய மொழி இங்கு பிரதிபலிப்பதில் வியப்பில்லை.

கலாநிதி அல்வானியுடைய விமர்சன பூர்வமான அணுகுமுறையை அவரது நூல்களில் பொதுவாக அவதானிக்கலாம். துணிந்து புதிய பார்வைகளை முன்வைப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். இந்த நூலை வாசிக்கின்ற போதும் அதே விமர்சன அணுகுமுறையையும் அதே துணிச்சலையும் வெகுவாக அவதானிக்க முடிந்தது. அதனாலோ என்னவோ இந்த நூலை மொழி பெயர்ப்பதா, இல்லையா என்பதில் என்னுள் ஒரு சிறிய தடுமாற்றம் ஏற்பட்டது. நீண்ட காலமாக சமூகம் உண்மை என்று நம்பி வந்த விடயங்களை தடாலடியாக மறுத்துரைப்பது போன்று இருக்க மாட்டாதா? என்ற இலேசான பின்வாங்கல் மனதில் இருந்தது. இந்த இடத்தில் நண்பர் கலாநிதி பீ. எம். எம். இர்பான் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரது வார்த்தைகள் தைரியத்தைத் தந்தன. இது ஒரு சிந்தனைக் கிளறல் தானே; அது எம்மவர்க்கு அவசியமான ஒன்று தானே என்றார். ஆம்! நிச்சயமாக இது ஒரு சிந்தனைக் கிளறல் தான். இந்தச் சிந்தனைக் கிளறலை, சிந்திப்பதற்காக அவர் பரிந்துரைக்கும் புதிய மாதிரியில் நான் காண்கின்றேன். அல்-குர்ஆனே அனைத்துக்குமான மூலாதாரம் என்ற வகையில் இஸ்லாமியக் கலைகள், சிந்தனைகளை அல்-குர்ஆனை மையப்படுத்தி மீள் வாசிப்புச் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் அல்வானி. இது தான் அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மையை நிலை நிறுத்துவதன் உண்மையான பொருள் என்கின்றார். கருத்து வேறுபாட்டுச் சிந்தனையை இந்த நூலில் அல்-குர்ஆனை மையப்படுத்தி மீள் வாசிப்புச் செய்வதன் மூலம் இஸ்லாமிய த∴வா பற்றிய சித்தாந்தத்தையே ஒரு புதிய பார்வையில் அவர் நோக்குகின்றார். ஆக, இது ஒரு சிந்தனைக் கிளறல் தான்.

அல்-குர்ஆனை மையப்படுத்திய மீள் வாசிப்பு அணுகுமுறையைப் புரிந்து கொள்வது தான் இவரது இந்த நூலை சமநிலையில் புரிந்து கொள்வதற்கான பிரதான சட்டகம் என நான் நினைக்கிறேன். சட்டம், வரலாறு, நம்பிக்கை, இஸ்லாமிய கலைகள் என்பனவெல்லாம் குறித்து அல்வானி முன்வைக்கும் விமரிசனங்கள் எதிர் நிலையில் புரிந்து கொள்ளப்படாமல் இருக்க இது முக்கியமானது. 'அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்க மூலாதாரம்; அதன் மையத்துவத்தில் நின்று தான் அனைத்தும் நோக்கப்பட வேண்டும்; மனித வாசிப்பின் அடிப்படையிலேயே அல்-குர்ஆன் புரிந்து கொள்ளப்படுகின்றது; மனிதப் புரிதல்களுக்கு அல்-குர்ஆனின் புனிதத் தன்மை கிடையாது'. இந்த மையப்புள்ளியில் இருந்து தான் அவரது அல்-குர்ஆனை மையப்படுத்திய மீள் வாசிப்பு அணுகுமுறை கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டால் அல்வானியின் சிந்தனைகள், விமர்சனங்களுக்கான நியாயத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

வாசகர்களிடம் இன்னொரு விடயத்தையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த நூலை வாசிக்கும் போது இதன் அடிக்குறிப்புகளையும் கட்டாயம் இணைத்து வாசியுங்கள். காரணம், அல்வானியின் அநேகமான அடிக்குறிப்புகள், தனது கருத்துகளுக்கான மூல நூல்களை அடையாளம் காட்டுதல் என்ற எல்லையைத் தாண்டி, தான் பேசுகின்ற பல கருத்துகளுக்கான விளக்கக் குறிப்புகளாகவே அமைந்துள்ளன. அவற்றையும் இணைத்து வாசிப்பதே கருத்துகள் முழுமை பெற உதவும்.

இஸ்லாமிய நூல்களை மொழி பெயர்ப்பதில் இருக்கின்ற பிரதானமான ஒரு பிரச்சினை, ஷரீஆக் கலைச் சொற்களை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது என்பது. அதற்கு நிகரான ஒரு தமிழ்ச் சொல்லைத் தேடுவதா? அல்லது அந்தக் கருத்தை விளங்கப்படுத்துவதா? என்ற தடுமாற்றம் மொழி பெயர்ப்பின் போது ஏற்படுகின்றது. இரண்டு அணுகுமுறைகளையும் நான் கையாண்டிருக்கின்றேன். ஆனால் எல்லா மொழி பெயர்ப்பாளர்களும் ஒரே மாதிரியான தமிழ்ப் பிரயோகங்களைக் கையாள்வார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தமிழ் மூல வாசகர்கள் மத்தியில் இது ஒரு சிந்தனைச் சிக்கலை ஏற்படுத்திவிட வாய்ப்பிருக்கிறது என நான் அஞ்சுகின்றேன். எனவே ஷரீஆக் கலைச் சொற்களைத் தமிழ்ப்படுத்துவது தொடர்பில் ஒரு பொது உடன்பாட்டுக்கு வருவது நல்லதென மொழி பெயர்ப்பாளர்களை நோக்கி ஓர் அழைப்பை விடுக்கின்றேன். அது கலைச் சொல் அகராதி ஒன்றை உருவாக்குவதாகவும் அமைய முடியும். இதற்காக மொழிபெயர்ப்பாளர்களின் முயற்சி கூட்டிணைக்கப்படுவது காலத்தின் தேவை எனக் கருதுகின்றேன்.

இறுதியாக, இந்த மொழி பெயர்ப்புப் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு உதவிய அனைவருக்கும்.. குறிப்பாக, தூண்டுதல் அளித்த நண்பர் கலாநிதி பீ. எம். எம். இர்பான் அவர்களுக்கும் தட்டச்சில் உதவிய சகோதரர் பர்ஸானுக்கும் எனது நன்றிகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்து விடை பெறுகின்றேன். அல்லாஹ்வே போதுமானவன்.

அக்ரம் அப்துல் ஸமத்

*22.03.2021*

# முன்னுரை

சட்டவியல் பள்ளிகளைச் சார்ந்தவர்களும் சரி; அகீதா சிந்தனைப் பள்ளிகளைச் சார்ந்தவர்களும் சரி; பேராசிரியர் எனும் அந்தஸ்த்தை ஈட்டிக் கொண்டவர்களும் சரி; கலாநிதிப் பட்டங்களைச் சுமந்தோரும் சரி தமக்கோ, தாம் எழுதியவற்றிற்கோ கடுமையான விமர்சனங்களை எதிர் கொள்ள இன்னும் பழக்கப்படவில்லை. விமர்சனங்களைப் புறந்தள்ளி விடுவார்கள், அல்லது கடுமையாகவோ, எளிமையாகவோ பதில் அளித்து விடுவார்கள். நான்கு இமாம்கள் போன்ற முன்னைய அறிஞர்களுக்கு அல்லது அவர்களிலும் முன்னையவர்களுக்கு ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுகின்ற போது, விமர்சித்தவருக்கான பதில்கள் மிகவும் கடுமையாகவே அமைகின்றன.

பொதுவாகப் பல விடயங்களை நினைவில் வைத்திருப்பவன் அல்லன் நான் என்றிருந்தாலும் எனது கலாநிதிக் கலந்துரையாடலின் போது நடந்த ஒரு நிகழ்வை என்னால் மறக்க முடியவில்லை. எனது ஆய்வில் இமாம் ராஸி மீது ஒரு சிறிய விமர்சனத்தை நான் முன்வைத்திருந்தேன். அவ்வேளை பிக்ஹ் துறைத் தலைவராக இருந்த ஷெய்க் இப்றாஹீம் அஷ்ஷாறாவி கடும் கோபத்துடன் எனக்கு மறுப்புத் தெரிவிக்கலானார்: ‘இமாம்களின் பிழை திருத்துவதற்கு நீ யார்? அந்த ஜாம்பவான்கள் மீது எல்லை மீறும் தைரியம் உனக்கு எங்கிருந்து வந்தது?’ என வினவினார். நான் சொன்னேன்: ‘அல்லாஹு தஆலா தான் சம்பந்தப்பட்ட விடயத்திலும் கூடத் தனது படைப்புகளுடன் நீதியாக நடந்து கொண்டான். அவன் கூறுகின்றான்:

رُسُلًا مُبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى اللَّهِ حُجَّةٌ بَعْدَ الرُّسُلِ وَكَانَ اللَّهُ عَزِيزًا حَكِيمًا - النساء: ١٦٥

**“தூதர்கள் வந்த பின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்.) மேலும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும் பேரறிவாளனாகவும் இருக்கின்றான்” (நிஸா: 4:165)**

நான் ஒரு மாணவன். சிலவேளை இமாம் ராஸியிடத்தில் ஒரு தவறை இனம் கண்டு அதனை விவாதிக்க முடியும். இதில் என்ன

தவறு இருக்கிறது?' வெறுப்புடன் மௌனமானார் அவர். முன்னைய அறிஞர்களின் கூற்றுகளை நாம் எவ்வாறு விமர்சிப்பது, அல்லது மீள் பரிசீலனை செய்வது எனக் கற்றுக் கொள்ளாமலேயே அல்லது அறிந்து கொள்ளாமலேயே கலாநிதிக் கலந்துரையாடல் நிறைவு பெற்றது. சட்ட ஒப்பீடு, நியமமான பரிட்சைகள் தவிர வேறு எதிலும் எமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திர வெளியை நாம் காணவில்லை.

மிகுந்த எச்சரிக்கையுடன், எல்லாவிதமான கௌரவ வார்த்தைகளைக் கொண்ட பீடிகைகளுடன், மிக்க வெட்கத்துடன் தான் விமர்சனங்களை நாம் முன்வைக்க வேண்டியிருந்தது. நாம் வாரிசாகப் பெற்றுள்ள அறிவியல் சொத்து எவ்வாறு இருக்கின்றதென்றால், 'குறித்த இமாம் சொன்னார்', 'குறித்த நூலாசிரியர் குறிப்பிட்டார்', 'விரிவுரையாளர் சொன்னார்', 'பிற்குறிப்பாளர் சொன்னார்' எனக் கூறிக் கொள்வதாகவே அமைந்துள்ளது.

ரியாதில் அமைந்துள்ள இமாம் முஹம்மத் பின் ஸுஊத் இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் நான் கற்பித்த வேளை, எனது கலாநிதிக் கற்கைக்கான ஆய்வை வெளியிடுவதற்குப் பல்கலைக்கழகம் ஆலோசித்தது. அதனை மதிப்பீடு செய்வதற்காகப் பல்கலைக்கழகம் அந்த ஆய்வை ஒருவரிடம் ஒப்படைத்தது. அந்த ஆய்வில் இமாம் இப்னு தைமிய்யா குறித்த சில விமர்சனங்கள் இருந்தன. மதிப்பீட்டாளர் நஜ்த் பிரதேசத்தவர். ஆய்வில் மேல் வரும் எனது வார்த்தைகளை வாசித்ததும் அவர் கொதித்தெழுந்தார்: 'ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, முஃதஸிலாக்களுக்கு மறுப்புச் சொல்லும் போது இமாம் பக்ருத்தீன் அல்-ராஸியின் கருத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வார்; தனது கருத்துகளையும் சிறிது சேர்த்துக் கொள்வார். அவ்வாறே அஷ்அரிய்யாக்களுக்குப் பதில் சொல்லும் போது முஃதஸிலாக்கள் அவர்களுக்கு அளித்த பதில்களைப் பயன்படுத்திக் கொள்வார். அதேவேளை இமாம் ராஸியை விமர்சிக்கக் கூடாத வார்த்தைகளில் விமர்சிக்கவும் செய்வார்'. ஆய்வு மதிப்பீட்டாளர் அறிவியலுக்குத் தொடர்பில்லாத கடுமையான தொனியில் ஓர் அறிக்கையைத் தயார் செய்திருந்தார். அதில் அவர் எனக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் என்னை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்றும் 'ஷெய்குல் இஸ்லாத்தை விமர்சிக்கும் ஒருவருக்கு இந்த நாட்டில் இடமில்லை' என்றும் குறிப்பிட்டிருந்தார். என்றாலும் நாம் ஏற்கனவே அறிந்திருந்தபடி 'ஷெய்குல் இஸ்லாம் அவர்களே சிறையில் அடைக்கப்பட்டவராயிருந்தார். சிறையிலிருந்து அவர் கொண்டு செல்லப்பட்டது அடக்கஸ்தலத்துக்குத் தான். மூன்று கிளை விவகாரங்களில் ஜும்ஹூருடைய நிலைப்பாட்டுக்கு மாற்றமான தீர்ப்புகளை அவர் வழங்கியிருந்தமையே காரணம். அவை: ஒன்று, ஒரே வார்த்தையில் முத்தலாக் நிறைவேற மாட்டாது; இரண்டு,

அல்லாஹ் அல்லாத பிறிதொன்றின் மூலம் வஸீலா தேட முடியாது; மூன்று, நபிகளாரின் கப்ரைத் தரிசிக்க புனிதப் பயணம் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் புனிதப் பயணம் பள்ளிவாயிலை நோக்கியே அமைய முடியும்; கப்ரை நோக்கியல்ல.

ஆக, ஆரம்ப கால அறிஞர்களது கருத்துகளை மீள் பரிசீலனை செய்வது மார்க்கக் கல்வி நிலையங்களில் ஏற்புக்குரியதொன்றாக இருக்கவில்லை. மீள் பரிசீலனைகள், திருத்தங்கள் பிரேரிக்கப்படின், இஜ்மாவுக்கு முரண்படுதல், பித்அத் முதலான கண்டனங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அதன் மூலம் முன்னையவர்களது சரி - பிழைகள் அனைத்தினதும் மூலாதார அந்தஸ்த்தில் பாதிப்புகள் ஏற்பட்டுவிடாமல் கவனித்துக் கொண்டனர்.[1]

'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' என்ற எனது நூல், நான் எழுத்துத் துறையைத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் எழுதிய மிக முக்கியமான நூல்களில் ஒன்று. அதற்கு முன்னர் 'இஜ்திஹாதும் தக்லீதும்', 'ஹன்பலி மத்ஹபினரிடத்தில் காரணம் கற்பித்தல்', 'இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்', 'உஸூலுல் பிக்ஹின் வரலாறு' முதலான பல நூல்களை எழுதியிருந்தேன். 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' எனும் தலைப்பில் 'கிதாபுல் உம்மா'வின் ஒன்பதாவது வெளியீடாக, உஸ்தாத் உமர் அபீத் ஹஸனாவின் முன்னுரையுடன் அந்நூல் வெளிவந்த போது அதற்குப் பெரும் வரவேற்பு இருந்தது. பலரது கவனத்தையும் அது ஈர்த்தது. நூலின் பிரபல்யம் அதிகரித்து, ஒரே வருடத்தில் பல பதிப்புகளைக் கண்டது. சில சமயம், அக்காலத்தில் அதிகம் வாசிக்கப்பெற்ற எனது நூலாக அது தான் விளங்கியது என நினைக்கின்றேன். இதன் மொழி பெயர்ப்பு பதினெட்டு மொழிகளில் வெளிவந்து என்னால் கணக்கிட முடியாத அளவு பதிப்புகளைக் கண்டன.

என்றாலும் அல்லாஹு தஆலா 'அறிவு முதுசங்களை அல்-குர்ஆனின் ஒளியில் மீள் வாசிப்புச் செய்தல்' என்ற விதியை என்னுள் உதிப்புச் செய்ததன் பின்னர், என்னுடைய இந்த நூலை நானே மீள் வாசிப்புச் செய்ய நினைத்தேன். அதன் மூலம் சுய விமர்சனம், மீள் வாசிப்பு, விமர்சனம் என்பன குறித்து எனது மாணவர்களுக்கு ஒரு புதிய முன்மாதிரியை விட்டுச் செல்லவும் அவாவினேன்.

சில வெளியீட்டாளர்கள், அந்த நூலில் சில இணைப்புகளைச் செய்து சற்று மாற்றியமைக்குமாறு ஆலோசனை வழங்கினார்கள். இந்தப்

---

(1) எனது ஆய்வை மதிப்பீடு செய்த அந்த அறிஞர் பின்னர் எனக்கு நெருங்கிய நண்பராக மாறினார்.

பின்னணியில் மீள் வாசிப்பை ஆரம்பித்த போது, பல தவறுகளை நான் இழைத்துள்ளமையை அவதானித்தேன். அல்லாஹ் என்னை மன்னிப்பானாக! அதே சமயம் எனது சில மாணவர்களும் என்னுடன் பணியாற்றிய சில ஆய்வாளர்களும் சிற்சில தவறுகளைச் சுட்டிக்காட்டினர். அவற்றையெல்லாம் நானே திருத்தியமைக்க முனைந்தேன். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! உண்மையில் எனது நூலைப் பற்றி என்னிடம் பிறர் சொல்லாத அல்லது மிகவும் சங்கடப்பட்டு தயக்கத்துடன் சொன்ன பல விடயங்களை இப்போது என்னால் தைரியமாகப் பேச முடிகிறது.

இப்போது நான் சொல்கிறேன்: 'அல்-குர்ஆனின் ஒளியில் அறிவு முதுசங்களை வாசிப்புச் செய்தல்' என்ற விதிக்கு உட்படுத்திய போது, இந்த நூல், நான் பாரம்பரியப் பாதுகாவலன் ஒருவனாக, அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய காலத்தில் இருந்த எந்தவோர் அஸ்ஹர் பட்டதாரியை விட்டும் வித்தியாசப்படாத ஒருவனாக இருந்த போது வெளிவந்திருக்கின்றது என்பதைக் கண்டு கொள்ள முடிந்தது. அச்சமயம் 'ஸலப்'கள் என்போர் அடிப்படையில் தவறு விட மாட்டார்கள், ஆனால் 'கலப்'கள் அடிப்படையில் தவறு விடுவார்கள் என்ற மனோ நிலை தான் என்னுள் இருந்தது.

'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' என்ற நூலிலும் பின்னைய காலங்களில் வெளி வந்த எனது ஏனைய நூல்களிலும் அல்-குர்ஆனின் ஒளியில் அறிவு முதுசங்களை மீள் வாசிப்புச் செய்வதற்கான அழைப்பைக் காண முடியாதிருக்கும். அந்த வகையில் எனது அனைத்து நூல்களும் அல்-குர்ஆனை நீதிபதியாக நிறுத்தும் விதிக்கு ஏற்ப, முறையானதொரு மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. அதன் அடிப்படையில் நான் விட்ட சில தவறுகளைக் குறித்துக் காட்டக் கூடிய, சில உதாரணங்களைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

முதலாவது: கருத்து வேறுபாட்டுச் சிந்தனையில் பொதுப் புத்திக்கு உட்பட்டுத் தான் நானும் சென்றிருக்கின்றேன்: 'கருத்து வேறுபாடு இயல்பானது;பொது விதி; நிலையானது; அதனை இல்லாமல் செய்ய முடியாது. இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும், அது ஓர் அருள்'.[2] இதற்கு ஆதாரமாக அமைந்தது, "எனது உம்மத்தின் கருத்து

---

(2) இமாம் ஸகாவி அவர்கள் தனது 'அல்-மகாஸித் அல்-ஹஸனாத் பீ பயானி கதீரிம் மினல்-அஹாதீஸ் அல்-முஷ்தஹிரா அலல்-அல்ஸினா' என்ற நூலில் இந்த ஹதீஸ் அடிப்படையற்றது என்கிறார். அத்துடன், 'மத்கல்' எனும் நூலில் இமாம் பைஹகி இதனை பின்வரும் அறிவிப்பாளர் வரிசை ஊடாக அறிவிப்பதாகக் குறிப்பிடுகிறார். ஸுலைமான் இப்னு அபீ கரீமா என்பவன் ஜுவைபிரிடமிருந்து.. அவர் ழுஹ்ஹாக் என்பவரிடமிருந்து.. அவர் இப்னு அப்பாஸிடமிருந்து அறிவிக்கிறார்.

வேறுபாடு ஓர் அருள்" எனும் இட்டுக் கட்டப்பட்ட ஒரு ஹதீஸே. அந்த

---

நபியவர்கள் கூறினார்கள்: "அல்-குர்ஆன் உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற போது அதனையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும். அதனை விடுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை. அல்-குர்ஆனில் ஆதாரம் கிடைக்காத போது எனது ஸுன்னா செல்லுபடியாகும். எனது ஸுன்னாவில் ஆதாரம் கிடைக்காத போது எனது ஸஹாபாக்கள் கூறியவை செல்லுபடியாகும். எனது ஸஹாபாக்கள் வானில் உள்ள நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்கள் எவரிடமிருந்து பெற்றுக் கொண்டாலும் நேர்வழி பெறுவீர்கள். எனது ஸஹாபாக்களின் கருத்து வேறுபாடு உங்களுக்கு அருளாகும்" என்றார்கள்.

இதே அறிவிப்பாளர் வரிசை மூலம், இதே வசனங்களுடன் இந்த ஹதீஸை இமாம் தைலமி தனது 'அல்-பிர்தௌஸ் பிம.'.ஸூரில்-கிதாப்' எனும் முஸ்னதில் பதிவு செய்துள்ளார்கள். இங்கு ஜுவைபிர் என்பவர் பலவீனமானவர். இப்னு அப்பாஸிடமிருந்து ழுஹ்ஹாகின் அறிவிப்பாளர் வரிசை இடையில் துண்டிக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் தனது இறுதித் தருவாய்களில் அடிக்கடி கூறிய முக்கிய உபதேசம் அல்-குர்ஆனைப் பற்றிப் பிடிக்குமாறு தான். ஏனெனில், அது தான் வழிகேட்டிலிருந்து பாதுகாக்கக் கூடியது.

இமாம் ஸர்கஷி அவர்கள், இந்த ஹதீஸ் நஸ்ர் அல் மக்திஸியின் 'அல்-ஹுஜ்ஜா' எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதன் அறிவிப்பாளர் வரிசை தொடர்பில் எந்த விளக்கமும் சொல்லவில்லை. அதே போன்று இமாம் கிராகி அவர்கள் இந்த ஹதீஸ் ஆதம் இப்னு அபீ இயாஸ் என்பவரின் 'கிதாபுல்-இல்ம் வல்-ஹிகம்' எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். "எனது ஸஹாபாக்களின் கருத்து வேறுபாடு எனது உம்மத்துக்கு அருள்" என வந்துள்ளது என்னும் இந்த ஹதீஸ் முர்ஸல் வகையைச் சேர்ந்த பலவீனமானது எனவும் குறிப்பிடுகிறார். இந்த ஹதீஸை மேற்சொன்ன வசனங்களில் இமாம் பைஹகீ அவர்கள் தனது 'ரிஸாலதுல் அஷ்அரிய்யா' எனும் நூலில் அறிவிப்பாளர் வரிசையின்றிக் குறிப்பிடுகிறார்.

இமாம் ஸகாவி சொல்கிறார்: 'இந்த ஹதீஸ் பொது மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்த ஒன்று என எனது ஆசிரியர் எழுதி வைத்திருந்ததை நான் வாசித்துள்ளேன்'. இமாம் இப்னுல்-ஹாஜிப் அவர்கள் தனது 'அல்-முக்தஸர் பீ மபாஹிஸில்-கியாஸ்' எனும் நூலில் இந்த ஹதீஸை "எனது உம்மத்தின் கருத்து வேறுபாடு மக்களுக்கு அருளாகும்" என்ற வசனங்களில் பதிவு செய்துள்ளார்கள். இந்த ஹதீஸின் தரம் குறித்து மக்கள் மத்தியில் பல கேள்விகள் தோன்றின. அதிகமான அறிஞர்கள் இது அடிப்படையற்றது என்று தான் கூறியுள்ளனர். ஆனாலும் கத்தாபி அவர்கள் இதனை 'கரீபுல் ஹதீஸ்' எனும் நூலில் பதிவு செய்துவிட்டு பின்வருமாறு கூறுகிறார்: 'இந்த ஹதீஸை ஒரு பொய்யனும் ஒரு நாஸ்திகனும் மறுத்துள்ளனர். அவர்கள் இஸ்ஹாக் அல்-மொஸிலியும் அம்ர் இப்னு பஹ்ர் அல்-ஜாஹிலும் ஆவர்.

வகையில் கருத்து வேறுபாட்டின் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் அதன் ஒழுக்கங்கள் அந்த நூலில் பேசப்பட்டன.

ஆனால், அல்-குர்ஆனை ஆராய்ந்து பார்க்கும் போது, கருத்து வேறுபாடு என்பது ஓர் எதிர் மறையான காரணி; எந்த வகையிலும் அதன் முன்னால் மண்டியிட்டு நிற்க முடியாது; அது இல்லாது செய்யப்படல் வேண்டும்; மு∴மின்கள் அதில் விழுந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைத் தான் புரிந்து கொள்ள முடிகிறது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنَّ الَّذِينَ فَرَّقوا دينَهُم وَكانوا شِيَعًا لَستَ مِنهُم في شَيءٍ إِنَّما أَمرُهُم إِلَى اللَّهِ ثُمَّ يُنَبِّئُهُم بِما كانوا يَفعَلونَ - الأنعام: ١٥٩

**“நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் (நபியே!) உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே உள்ளது. அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான்.” (அன்ஆம் 6:159)**

قُل هُوَ القادِرُ عَلى أَن يَبعَثَ عَلَيكُم عَذابًا مِن فَوقِكُم أَو مِن تَحتِ أَرجُلِكُم أَو يَلبِسَكُم شِيَعًا وَيُذيقَ بَعضَكُم بَأسَ بَعضٍ انظُر كَيفَ نُصَرِّفُ الآياتِ لَعَلَّهُم يَفقَهونَ - الأنعام: ٦٥

**“(நபியே!) நீர் கூறும் உங்கள் (தலைக்கு) மேலிருந்தோ அல்லது உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்குத் துன்பம் ஏற்படும்படி செய்யவும், அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி உங்களில் சிலர் சிலருடைய கொடுமையை அனுபவிக்கும்படி செய்யவும் அவன் ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான். அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக (நம்) வசனங்களை**

கருத்து வேறுபாடு அருள் எனின் கருத்து ஒற்றுமை ஒரு தண்டனையாக அமையும் என அவர்கள் இருவரும் கூறியுள்ளனர்' என்கிறார். தொடர்ந்து இமாம் கத்தாபி அவர்கள் இதற்கு மறுப்புத் தெரிவிக்கிறார். ஆனாலும் அவர் இந்த ஹதீஸுக்கான தெளிவான ஆதாரம் ஒன்றைக் குறிப்பிடவில்லை. அவரது வாதம் இந்த ஹதீஸுக்கு ஓர் அடிப்படை இருக்கிறது என்பதை உணர்த்தும் வகையில் மாத்திரமே காணப்பட்டது. பின்னர் எனது ஆசிரியர் இந்த ஹதீஸ் பற்றிய மேற்குறிப்பிட்ட அவரது கருத்தை முன்வைத்துள்ளார் என்கிறார்.

இந்த ஹதீஸ் பலவீனமானது என்பதற்கு இது அல்-குர்ஆன் கூறும் உண்மைக்குப் புறம்பாக இருக்கிறது என்ற ஒன்றே போதுமானது.

எவ்வாறு (பல வகைகளில் தெளிவாக்கி) விவரிக்கின்றோம் என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக." **(அன்ஆம் 6:65)**

كانَ النّاسُ أُمَّةً واحِدَةً فَبَعَثَ اللَّهُ النَّبِيّينَ مُبَشِّرينَ وَمُنذِرينَ وَأَنزَلَ مَعَهُمُ الكِتابَ بِالحَقِّ لِيَحكُمَ بَينَ النّاسِ فيمَا اختَلَفوا فيهِ وَمَا اختَلَفَ فيهِ إِلَّا الَّذينَ أوتوهُ مِن بَعدِ ما جاءَتهُمُ البَيِّناتُ بَغيًا بَينَهُم فَهَدَى اللَّهُ الَّذينَ آمَنوا لِمَا اختَلَفوا فيهِ مِنَ الحَقِّ بِإِذنِهِ وَاللَّهُ يَهدي مَن يَشاءُ إِلى صِراطٍ مُستَقيمٍ - البقرة: ٢١٣

"(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும் (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான். எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள் தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்து விட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர்வழி காட்டினான். இவ்வாறே அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்." **(பகரா 2:213)**

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَو شاءَ رَبُّكَ لَجَعَلَ النّاسَ أُمَّةً واحِدَةً وَلا يَزالونَ مُختَلِفينَ إِلّا مَن رَحِمَ رَبُّكَ وَلِذلِكَ خَلَقَهُم وَتَمَّت كَلِمَةُ رَبِّكَ لَأَملَأَنَّ جَهَنَّمَ مِنَ الجِنَّةِ وَالنّاسِ أَجمَعين - هود: ١١٨ - ١١٩

"உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (அவன் அப்படி ஆக்கவில்லை.) எனவே அவர்கள் எப்போதும் பேதப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர, இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான். நிச்சயமாக நான் ஜின்கள், மனிதர்கள் ஆகிய யாவரைக் கொண்டும் நரகத்தை நிரப்புவேன் என்ற உம் இறைவனுடைய வாக்கும் பூர்த்தியாகிவிடும்." **(ஹூத் 11: 118–119)**

கருத்து வேறுபாட்டுச் சிந்தனைக்கு ஆதாரம் சொல்லும் போது இந்த வசனம் தவறாகப் புரியப்பட்டிருக்கின்றது. அதிகமான தப்ஸீர் ஆசிரியர்கள் அல்லாஹு தஆலா, மனிதர்களைக் கருத்து வேறுபாடு கொள்ளவே படைத்திருக்கின்றான் என்று பொருள் கொண்டார்கள். "அதற்காகவே அவர்களைப் படைத்தான்" **(ஹூத் 11:119)** என்ற வாசகத்திலிருந்தே அவ்வாறு புரிந்து கொண்டனர். உண்மையில் இந்த வசனத்தில் "அதற்காகவே"

என்பதற்கு அல்லாஹ்வின் அருளுக்காகவே என்று பொருள் கொள்வது தான் சரியானது. அதாவது அல்லாஹ்வின் அருளுக்காகவே படைத்தான்; கருத்து வேறுபாடு கொள்வதற்கல்ல. ஏனெனில் அல்லாஹு தஆலா கருத்து வேறுபாட்டைத் தவிர்த்து இணக்கப்பாட்டை நிலை நிறுத்துவதற்காக அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறு தான் எங்களுக்குக் கட்டளை இட்டுள்ளான். ஆனால் சிலர் "எனது உம்மத்தின் கருத்து வேறுபாடு ஓர் அருள்" என்ற வாசகத்தை இட்டுக் கட்டி அது ஒரு ஹதீஸ் எனப் பகிரங்கப்படுத்தினர்.

கருத்து வேறுபாடு என்பது எப்போதும் தீங்கானது; அது நன்மையைக் கொண்டு வர மாட்டாது. அத்துடன் அது அடிப்படையில் பன்முகப்பட்டது. அதில் சில முழுமையாக மறுக்கப்படக் கூடியன; சில முழுமையாக ஏற்கக் கூடியன; சில சற்று விளக்கமாக நோக்கப்பட வேண்டியன. நாம் அதன் வகைகளை ஆராயும் போது இந்த உண்மையைக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். என்றாலும் பொதுவில் கருத்து வேறுபாடு என்பது கண்டிக்கத் தக்கதாகும். இணக்கப்பாடு என்பதே வரவேற்கத் தக்கது.

இரண்டாவது: அகீதாவுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இஜ்திஹாதுக்கு உட்படாதவை என்று தான் கருதப்பட்டது. இதுவே ஜும்ஹூருடைய நிலைப்பாடு. ஆனால் இமாம் ஜாஹிழ் (மறைவு ஹி. 255) அவர்களும் இமாம் உபைதுல்லாஹ் இப்னு அல்-ஹஸன் அல்-அன்பாரி அவர்களும் மு.:.தஸிலாக்களைச் சேர்ந்த இன்னும் பலரும் இஜ்திஹாத் என்பது கிளை விவகாரங்கள், பிக்ஹ் விகாரங்களுடன் சுருங்கி விட மாட்டாது; அகீதா விவகாரங்களிலும் பிரயோகிக்கப் படும் என்றனர். சரி - பிழை என்ற விதியை அகீதா விவகாரங்களிலும் அவர்கள் பயன்படுத்தினர். இன்றைய காலத்தில் இக்கருத்து மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. அப்போது தான் சில இஸ்லாமிய குழுக்கள் பிறருக்கு அவசரமாகக் காபிர் பட்டம் வழங்கும் கலாச்சாரத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

ஜும்ஹூர் கடுமையாக மறுத்து நிற்கும் நிலையிலும் இமாம் ஜாஹிழ், அன்பாரி போன்றோரது கருத்து இன்று நாம் ஆய்வுக்குட்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான ஒன்று. இன்று நாம் எதிர் கொள்ளும் சடுதியான மாற்றங்கள் அனைத்து விடயங்களையும் விவாதத்திற்கு உட்படுத்திவிடும் சூழலில் இது மிக அவசியமானதொன்று. அற்ப காரணங்களுக்காக ஒருவர் காபிராக்கப்படுவதையும் பித்அத் வாதியாக்கப்படுவதையும் இக்கருத்து தடுத்துவிடும்.

மேலும் நம்பிக்கை பற்றிய விவகாரங்கள் அளவுக்கு மீறி விரிவாக்கப்பட்டுள்ளன. அல்-குர்ஆன், குறிப்பிட்ட மிக முக்கிய நம்பிக்கைகளான ஐந்து அடிப்படைகளுடன் நின்று விடவில்லை

எனக்கூறி அதனுடன் இன்னும் நிறைய விடயங்களை இணைத்து விட்டுள்ளனர். அதனால் நம்பிக்கை சார் அடிப்படைகள் இரு நூறுக்கும் மேற்பட்டவையாகப் பெருகி விட்டன. இவற்றை வைத்துக் கொண்டு ஒவ்வொரு தரப்பினரும் வேறு தரப்பினரைக் காபிராக்கும் நிலை காணப்படுகிறது.

மூன்றாவது: முன்னர் ஒரு வித பக்கச் சார்பான வடிவில் கருத்து வேறுபாடுகளை வகைப்படுத்தியிருந்தேன். சத்தியம் தோற்றுவித்த கருத்து வேறுபாடு என்று ஒரு வகையைக் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், சத்தியம் எவ்வாறு கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்தது? இதனை நான் ஏன் கருத்து வேறுபாடாகக் கருதினேன்? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் ஒன்றை சத்தியமாகவும் பிறிதொன்றை அசத்தியமாகவும் கருதினேன்? இவ்வாறான எந்த ஒரு கேள்விக்கும் அன்று நான் விளக்கமளிக்கவில்லை.

அது போலவே, மனோ இச்சைகள் தோற்றுவித்த கருத்து வேறுபாடுகள் என்ற மற்றொரு வகையைக் குறிப்பிட்டு அவை பித்அத் வாதிகளின் கருத்து வேறுபாடுகள் எனவும் பதிவிட்டிருந்தேன். ஷீயாக்கள், கவாரிஜ்கள் போன்றோர் இதில் உள்ளடக்கப் பெற்றிருந்தனர். எனது நூலின் பல இடங்களில் இதனைத் தெளிவாகவே அடையாளப்படுத்தியிருந்தேன். அடுத்து, பித்அத் வாதிகளுக்கு எதிர் நிலைப்பாட்டிலிருந்தோர் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் (இதன் மூலம் அஷ்அரிக்களையே நாடியிருந்தேன்) எனக் கருதினேன்.

முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய சிந்தனைக் குழுக்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறைக்கவும் பிரச்சினைகளைத் தணிக்கவும் விழைகின்ற ஒருவர் அக்குழுக்களைச் சம நிலையில் நோக்க வேண்டும். அவர்களுள் ஒரு பிரிவினருக்கான தனது சார்பு நிலையை ஆரம்பத்திலேயே வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடாது. தெரிவித்தால், அந்தக் குழுக்கள் தமது நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் கை விட்டு, தான் சார்ந்திருக்கும் குழுவில் இணைந்து கொள்ள விடுக்கப் படும் ஓர் அழைப்பாகவே அது அமைந்துவிடும். இது அல்-குர்ஆனின் அணுகுமுறைக்கு முரணானது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

قُل يا أَهلَ الكِتابِ تَعالَوا إِلى كَلِمَةٍ سَواءٍ بَينَنا وَبَينَكُم -آل عمران: ٦٤

**“(நபியே! அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்..” (ஆல இம்ரான் 3:64)**

அது போலவே,

قُل مَن يَرْزُقُكُم مِنَ السَّماواتِ وَالأَرضِ قُلِ اللّهُ وَإِنّا أَو إِيّاكُم لَعَلى هُدًى أَو في ضَلالٍ مُبينٍ -سبأ: ٢٤

**"வானங்களிலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவு (வசதிகளை) அளிப்பவன் யார்? என்று (நபியே!) நீர் கேளும், அல்லாஹ் தான்! இன்னும் நிச்சயமாக நாங்களா அல்லது நீங்களா நேர்வழியில் அல்லது பகிரங்கமான வழிகேட்டில் இருப்பவர்கள் என்றும் கூறும்." (ஸபஃ 34:24)**

முஸ்லிம் சிந்தனைக் குழுக்கள் பற்றிய அறிஞர்களது கருத்துகளுக்கும் அவர்களது சார்பு நிலைகளுக்கும் ஆட்பட்டே அன்று நான் கருத்துக் கூறியிருந்தேன். அதற்காக இன்று நான் வெட்கப்படுகின்றேன். அந்தக் கருத்துகள் என்னோடு இணைக்கப்படுவதையோ, நான் அவற்றோடு இணைக்கப்படுவதையோ இன்று நான் விரும்பவில்லை.

நான்காவது: அந்த நூலில் நான் பயன்படுத்திய மொழி அகீதா மொழி; அவசரமாய் ஒருவருக்கு காபிர் பட்டம் வழங்கிவிடும் மொழி. அதில் நான் இவ்வாறு கூறியிருந்தேன்: 'முதல் பரம்பரையினர் மீளவும் உருவாவது சாத்தியமற்றது என்ற வாதம் அல்-குர்ஆனினதும் ஸுன்னாவினதும் இயலாமையைக் குறிப்பிடுவது போன்றதாகும்...' இந்த வார்த்தைகள் தெளிவாக குப்ருக்கு எடுத்துச் செல்லக் கூடியவை. ஆனால் முதல் பரம்பரையினர் மீளவும் உருவாகாமைக்கான வேறு பல காரணங்களையும் பௌதீக உண்மைகளையும் எனது வேறு பல ஆய்வுகளில் பேசியுள்ளேன்.

ஐந்தாவது: ஸகாத் கொடுக்க மறுத்தோருக்கு எதிரான யுத்தம் பற்றி நான் பேச முற்பட்ட போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன். 'முதலாம் கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தின் பயணம் தொடர வேண்டும் என விரும்பியதனால் அவர்களுடன் போராடும் தீர்மானத்தை எடுத்தார்கள். அதன் மூலம் அவர்கள் தவ்பா செய்து இஸ்லாத்திற்குள் மீள வேண்டும் என நினைத்தார்கள்'. மற்றோர் இடத்தில் கூறியிருந்தேன்: 'தொழுகையைக் கை விடுவது மத மாற்றத்திற்கான அடையாளம் என்பதில் முழு உம்மத்தும் உடன்பட்டிருப்பது போல, ஸகாத்தைக் கை விடுவதும் மத மாற்றத்துக்கான அடையாளம் என்றும் அவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்படுவது அவசியம் என்றும் கருதப்படல் வேண்டும்.' இப்போது அனைவரும் அறிவர் -அதிலும் குறிப்பாக 'லா இக்ராஹ பித்தீன்' என்ற எனது நூல் வெளிவந்ததன் பின்னர்- மத மாற்றத்திற்கு உலகியல் தண்டனை இல்லை என்பதனை. அல்-குர்ஆன் கூறுகின்றது:

لا إِكراهَ فِي الدّينِ قَد تَبَيَّنَ الرُّشدُ مِنَ الغَيِّ فَمَن يَكفُر بِالطّاغوتِ وَيُؤمِن بِاللَّهِ فَقَدِ استَمسَكَ بِالعُروَةِ الوُثقى لَا انفِصامَ لَها وَاللَّهُ سَميعٌ عَليمٌ -البقرة: ٢٥٦

**"(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகையால் எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்." (பகரா 2:256)**

மக்கள் எந்த ஒரு நியாயத்தின் அடிப்படையிலும் குறித்த ஒரு நம்பிக்கையில் நிர்ப்பந்திக்கப்படக் கூடாது என்று நான் நம்புகின்றேன். நடந்திருப்பதென்ன? எனது முன்னைய ஆய்வுகள் எனது தற்போதைய நிலையிலிருந்து செய்யப்பட்டனவல்ல. அத்துடன் அக்கருத்துகளை எவ்வாறு விமர்சனத்துக்கு உட்படுத்துவது, அல்-குர்ஆனுடன் எவ்வாறு பொருத்திப் பார்ப்பது என்றெல்லாம் எனக்கு எவரும் சொல்லித் தரவுமில்லை. எனவே இது போன்ற தவறுகளை நான் இழைத்திருக்கின்றேன். இன்று எனது ஆயுளை நீட்டித்து, எனது கருத்துகளை அல்-குர்ஆனுடனும் ஸுன்னாவுடனும் பொருத்திப் பார்த்து நானே அவற்றை விமர்சனம் செய்வதற்குரிய அறிவைத் தந்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். வல்ல அல்லாஹ் இதன் மூலம் எனக்கு விமோசனத்தை நாடியிருப்பான். எனது இரட்சகனே புகழனைத்தும் உனக்கே! அறிவொளி தந்த உனக்கே நன்றிகள் அனைத்தும்!

ஆறாவது: எனது மொழி நடையில் இன்று நான் கடைப்பிடிக்கின்ற நாகரிக அகராதிக்குப் பகரமாக அன்று நான் அகீதா அகராதியைக் கடைப்பிடித்திருக்கின்றேன். அதனால் எனது ஆரம்ப நூல்களில் ஒருவரைக் காபிராக்கும் படலங்கள் அதிகமாகக் காணப்பட்டன. ஒரு தடவை அதனை பித்அத் வாதிகள் மீது பிரயோகித்திருக்கின்றேன். மற்றொரு தடவை ஏகாதிபத்திய வாதிகள் மீது பிரயோகித்திருக்கின்றேன். பின்னரும் தொடர்ந்திருக்கின்றேன்.

ஏழாவது: விமர்சன ரீதியான ஹதீஸ் திறனாய்வின் பின்னர், சில ஹதீஸ்கள் அல்-குர்ஆனுடன் முரண்படுவதாக நான் உறுதி செய்திருக்கின்றேன். ஹதீஸ் விற்பன்னர்களும் ஏனைய அறிஞர்களும் அல்-குர்ஆனுடன் முரண்படும் ஹதீஸை மறுத்துரைப்பதில் ஒத்த நிலைப்பாட்டில் உள்ளனர். அந்த வகையில், "லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை மொழியும் வரை மக்களுடன் யுத்தம் செய்ய நான் பணிக்கப்பட்டுள்ளேன்" என்ற ஹதீஸ் பல வழிகள் மூலம் அறிவிக்கப்பட்டிருப்பினும் அதனுடைய எந்த ஒரு

வழியும் ஏதேனும் ஒரு விமர்சனத்திற்கு அல்லது பலவீனத்துக்கு உட்படாமல் இல்லை.

இதனை நானும் இன்னும் பலரும் ஆய்வுக்குட்படுத்தியிருக்கின்றோம். இந்த ஹதீஸ் ஏற்றுக் கொள்ளப் படுமாயின், அல்-குர்ஆனின் இருநூறு வசனங்களுடன் முரண்படுகின்ற நிலை தோன்றும். இது, முஸ்லிம்கள் த.்.வா சமூகம் என்ற நிலையில் இருந்து வெற்றி அடைந்த சமூகமாக மாறிய ஒரு சூழலில் பிரபல்யம் அடைந்த ஒரு ஹதீஸாகும். ஆக, சமாதான த.்.வா கருத்தியலை விடவும் வெற்றிக் கருத்தியலை பலப்படுத்தும் வகையிலேயே இந்த ஹதீஸ் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

أَلَم تَرَ إِلَى الَّذينَ قيلَ لَهُم كُفّوا أَيدِيَكُم وَأَقيمُوا الصَّلاةَ وَآتُوا الزَّكاةَ فَلَمّا كُتِبَ عَلَيهِمُ القِتالُ إِذا فَريقٌ مِنهُم يَخشَونَ النّاسَ كَخَشيَةِ اللَّهِ أَو أَشَدَّ خَشيَةً وَقالوا رَبَّنا لِمَ كَتَبتَ عَلَينَا القِتالَ لَولا أَخَّرتَنا إِلى أَجَلٍ قَريبٍ قُل مَتاعُ الدُّنيا قَليلٌ وَالآخِرَةُ خَيرٌ لِمَنِ اتَّقى وَلا تُظلَمونَ فَتيلًا -النساء: ٧٧

**“உங்களுடைய கைகளை(ப் போர் செய்வதினின்றும்) தடுத்துக் கொண்டும் தொழுகையை நிலை நிறுத்தியும் ஸகாத்தை கொடுத்தும் வருவீர்களாக! என்று எவர்களுக்குக் கூறப்பட்டதோ அவர்களை (நபியே!) நீங்கள் பார்க்கவில்லையா? பின்னர், போர் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட போது, அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வுக்குப் பயப்படுவதைப் போல் அல்லது அதை விட அதிகமாகவே மனிதர்களுக்குப் பயப்பட்டு, எங்கள் இறைவனே! எங்கள் மீது ஏன் (இப்)போரை விதியாக்கினாய்? சிறிது காலம் எங்களுக்காக இதைப் பிற்படுத்தியிருக்கக் கூடாதா? என்று கூறலாயினர். (நபியே!) நீர் கூறுவீராக, இவ்வுலக இன்பம் அற்பமானது. மறுவுலக( இன்ப)ம் பயபக்தியுடையோருக்கு மிகவும் மேலானது. நீங்கள் எள்ளளவேனும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள்.” (நிஸா 4:77)**

எட்டாவது: நான் பல தடவைகள் ஸலப்களது நிலைப்பாடுகளின் மூலாதாரத் தன்மை குறித்துப் பேசியுள்ளேன். ஆனால் அவற்றை அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மையுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவில்லை. அவ்வாறான போக்கு, தற்போதைய எனது புனர் நிர்மாணப் பணியான எமது இஸ்லாமிய அறிவு முதுசங்களை பிக்ஹ், அகீதா, ஹதீஸ், தப்ஸீர், உஸூல் என அனைத்தையும் அல்-குர்ஆனுடன் ஒப்பு நோக்கிக் காண வேண்டும் என்ற முனைப்புடன் முரண்படுகின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

قُل إِنّي عَلى بَيِّنَةٍ مِن رَبّي وَكَذَّبتُم بِهِ ما عِندي ما تَستَعجِلونَ بِهِ إِنِ الحُكمُ إِلّا لِلَّهِ يَقُصُّ الحَقَّ وَهُوَ خَيرُ الفاصِلينَ -الأنعام: ٥٧

**“பின்னும் நீர் கூறும் நான் என்னுடைய ரப்பின் தெளிவான அத்தாட்சியின் மீதே இருக்கின்றேன். ஆனால் நீங்களோ அதைப் பொய்ப்பிக்கின்றீர்கள். நீங்கள் எதற்கு அவசரப்படுகின்றீர்களோ அ(வ்வேதனையான)து என் அதிகாரத்தில் இல்லை. அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்விடமேயன்றி வேறில்லை. சத்தியத்தையே அவன் கூறுகின்றான். தீர்ப்பு வழங்குவோரில் அவனே மிகவும் மேலானவனாக இருக்கிறான்.” (அன்ஆம் 6:57)**

மற்றோர் இடத்தில் வருகின்றது:

أَلَم تَرَ إِلَى الَّذينَ أوتوا نَصيبًا مِنَ الكِتابِ يُدعَونَ إِلى كِتابِ اللَّهِ لِيَحكُمَ بَينَهُم ثُمَّ يَتَوَلّى فَريقٌ مِنهُم وَهُم مُعرِضونَ -آل عمران: ٢٣

**“வேதத்திலும் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்(களான யூதர்)களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களிடையே (ஏற்பட்ட விவகாரத்தைப் பற்றி) அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்க அவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களில் ஒரு பிரிவார் (இதைப்) புறக்கணித்து விலகிக் கொண்டனர்.” (ஆல இம்ரான் 3:23)**

ஆரம்பத்தில் நான் ‘அனைத்து வகையான கருத்து வேறுபாடுகளும் ஸலப் அறிஞர்களின் மத்ஹபுகளுடன் ஒப்பு நோக்கிப் புரியப்படல் வேண்டும்’ என்று குறிப்பிட்டிருந்தேன். இது தற்போதைய அல்-குர்ஆனிய வேலைத் திட்டத்துடன் தெளிவாக முரண்படுகின்றது. எமது அல்-குர்ஆனிய வேலைத் திட்டத்தில் சட்டங்களை உருவாக்கும் மூலம் என்ற வகையில் அல்-குர்ஆனும் அல்-குர்ஆனுக்குச் செயல் வடிவம் கொடுத்த ஒரு மாதிரி என்ற வகையில் நபியவர்களது ஸுன்னாவுமே மூலாதாரப் பண்பைக் கொண்டிருக்கின்றன.

ஒன்பதாவது: நானும் ஏனைய அஸ்ஹரிக்களைப் போல ‘நஸ்க்’ எனும் முன்னைய சட்டம் பின்னைய சட்டத்தின் மூலம் மாற்றப் படும் கோட்பாட்டைக் கூறியிருந்தேன். அது போல், ஷாபிஈ மத்ஹபினரும் ஏனையோரும் கூறும் இஜ்மா கோட்பாட்டையும் அதன் அனைத்து விளக்கங்களுடனும் ஏற்றிருந்தேன் நான். என்றாலும் நான் இப்போது அவற்றைக் கடந்து வந்து விட்டேன். மூலாதாரப் பண்பு அல்-குர்ஆனுக்கு மாத்திரமே உரியது எனக் கருதுகின்றேன். அல்-குர்ஆனிலிருந்து ஆதாரம் பெறுவதற்கு ஏதேனும் சில கோட்பாடுகளை இந்த உம்மத் கடைப்பிடிக்க முடியும். ஆனால் அல்-குர்ஆன் சொல்லாத ஒரு விடயத்தில் ‘இஜ்மா’ என்ற கோட்பாட்டை முன்வைக்க முடியாது.

பத்தாவது: எனது நூலில் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கவாரிஜ்களுடன் உரையாடியமை, இமாம்கள் தமக்கு மத்தியில் உரையாடியமை போன்ற பல அறிவிப்புகளைக் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆனால் அவை உண்மையில் நிகழ்ந்தனவா, அல்லவா என எந்த உறுதிப்படுத்தல்களையும் நான் செய்யவில்லை. இவை கலந்துரையாடல் ஒழுக்கங்கள் என்ற எல்லையினுள்ளேயே சொல்லப் பெற்றன.

மேலும் ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்ற நிலைப்பாட்டையே நானும் ஏற்றிருந்தேன். ஸஹாபி என்பதன் பொருள் குறித்து அஷ்அரிக்களும் ஷாபிஈக்களும் முன்வைத்த கருத்தையே நானும் கொண்டிருந்தேன். அந்த வகையில் ஸஹாபாக்கள் அனைவரும் சத்தியத்தில் இருக்கின்றனர் என்பதையே நானும் உறுதிப்படுத்தினேன். இந்த விடயத்தில் இப்போது எனது நிலைப்பாட்டில் மாற்றம் இருக்கின்றது. நான் அல்-குர்ஆனில் இருந்து கற்றுக் கொண்ட உண்மையின் அடிப்படையில் ஸஹாபி என்பதன் பொருள் மீள் வரைவிலக்கணம் செய்யப்பட வேண்டும். ஸஹாபாக்கள் நபிகளாருடன் உடனிருந்தமையை அல்-குர்ஆன் ஒரே படித்தரத்தில் நோக்கவில்லை. படித்தரங்கள் வேறுபடுத்திப் பேசப்பட்டுள்ளன. நீண்ட கால உறவு இருக்கின்ற போதே ஸஹாபி என்ற பண்பு பேசப்பட்டுள்ளது. அவ்வாறன்றி, ஹதீஸ் துறை அறிஞர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுவது போல வெறுமனே நபிகளாரைக் கண்களால் கண்டதனாலோ அல்லது ஒரு சிறிய சந்திப்பின் காரணமாகவோ மாத்திரம் ஸஹாபி எனக் கருதப்படுவதில்லை. அல்-குர்ஆன் ஸஹாபி எனக் கருதாத ஒருவரை நாம் ஸஹாபி எனக் கூற வேண்டியதில்லை. எனவே ஸஹாபி என்ற பதம் அல்-குர்ஆனின் ஒளியில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதனால் தான் அல்-குர்ஆன் நபியவர்களுக்குத் தெரியாமல் இருந்த பல விடயங்களைத் தெரியப்படுத்தியது. அது கூறுகின்றது:

وَمِمَّن حَولَكُم مِنَ الأَعرابِ مُنافِقونَ وَمِن أَهلِ المَدينَةِ مَرَدوا عَلَى النِّفاقِ لا تَعلَمُهُم
نَحنُ نَعلَمُهُم سَنُعَذِّبُهُم مَرَّتَينِ ثُمَّ يُرَدّونَ إِلى عَذابٍ عَظيمٍ -التوبه: ١٠١

**“உங்களைச் சுற்றியுள்ள கிராமப்புறத்தவர்களில் நயவஞ்சகர்களும் இருக்கிறார்கள். இன்னும் மதீனாவில் உள்ளவர்களிலும் நயவஞ்சகத்தில் நிலைபெற்று விட்டவர்களும் இருக்கிறார்கள். (நபியே!) அவர்களை நீர் அறிய மாட்டீர். நாம் அவர்களை நன்கறிவோம். வெகு சீக்கிரத்தில் நாம் அவர்களை இரு முறை வேதனை செய்வோம். பின்னர் அவர்கள் கடுமையான வேதனையின் பால் தள்ளப்படுவார்கள்.” (துவ்பா: 9:101)**

இதனால் தான் ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்று சொல்லப்படுவதற்கு ஸஹாபி என்றால் யார் என்பது

அல்-குர்ஆனின் ஒளியில் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதன் பின்னர், உண்மையில் ஸஹாபாக்களாகக் கருதப்படக் கூடியோர் யாவர், நேர்மைப் பண்பு யாருக்கு வழங்கப்பட முடியும் என்பன தீர்மானிக்கப் படலாம். உதாரணமாக அல்-குர்ஆன் புகழ்ந்து பேசிய அஹ்லுஸ் ஷஜரா -ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்வுக்கு முன்னர் பைஅத் செய்தவர்கள்- அவர்களுக்கான உதாரணம் தவ்ராத்திலிருந்தும் இன்ஜீலில் இருந்தும் கூட சொல்லப்பட்டது:

مُحَمَّدٌ رَسولُ اللَّهِ وَالَّذينَ مَعَهُ أَشِدّاءُ عَلَى الكُفّارِ رُحَماءُ بَينَهُم تَراهُم رُكَّعًا سُجَّدًا يَبتَغونَ فَضلًا مِنَ اللَّهِ وَرِضوانًا سيماهُم في وُجوهِهِم مِن أَثَرِ السُّجودِ ذٰلِكَ مَثَلُهُم فِي التَّوراةِ وَمَثَلُهُم فِي الإِنجيلِ كَزَرعٍ أَخرَجَ شَطأَهُ فَآزَرَهُ فَاستَغلَظَ فَاستَوى عَلى سوقِهِ يُعجِبُ الزُّرّاعَ لِيَغيظَ بِهِمُ الكُفّارَ وَعَدَ اللَّهُ الَّذينَ آمَنوا وَعَمِلُوا الصّالِحاتِ مِنهُم مَغفِرَةً وَأَجرًا عَظيمًا -الفتح: ٢٩

**"முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார். அவருடன் இருப்பவர்கள், கா.:பிர்களிடம் கண்டிப்பானவர்கள். தங்களுக்கிடையே இரக்கமிக்கவர்கள். ருகூ.: செய்பவர்களாகவும் ஸுஜூது செய்பவர்களாகவும் அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய) திருப் பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அவர்களுடைய அடையாளமாவது அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும். இதுவே தவ்ராத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும். இன்ஜீலிலுள்ள அவர்கள் உதாரணமாவது: ஒரு பயிரைப் போன்றது. அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது. பின்னர் அது பருத்துக் கனமாகி பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில் அது தன் அடித் தண்டின் மீது நிமிர்ந்து செவ்வையாக நிற்கிறது. இவற்றைக் கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோபமூட்டுகிறான். ஆனால் அவர்களில் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களிக்கின்றான்." (பத்ஹ் 48:29)**

ஸஹாபி யார் என்ற வரையறையின் போதும் சரி; ஸஹாபாக்களின் நேர்மை பற்றிப் பேசுகின்ற போதும் சரி, 'அவருடன் இருப்பவர்கள்' என்ற பிரயோகத்தை நாம் சரிவரக் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

பதினொன்றாவது: ஸகீபா பனீ ஸாஇதா நிகழ்வுகள், ஸஹாபாக்கள் காலத்தில் நடைபெற்ற குழப்பங்கள் பற்றிய விவரணங்களை வரலாற்றாசிரியர்கள் சொல்லியிருப்பது போலவே அவற்றை எந்த

ஆய்வுக்கும் உட்படுத்தாமல் எனது நூலில் கொண்டு வந்துள்ளேன். உண்மையில் இந்த சம்பவங்களில் சில விடயங்கள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன; சில நீக்கப்பட்டுள்ளன. ஆக, இவற்றைத் தெளிவான ஆய்வுக்கு உட்படுத்தி, ஹதீஸ் திறனாய்வு விதிகளுக்கு ஏற்பப் பகுத்தறிந்து உண்மையில் நிகழ்ந்தன யாவை என்பதை உறுதிப்படுத்தாத வரை அவற்றை ஆதாரங்களாகக் கொள்தல் இயலாது.

பன்னிரண்டாவது: இஸ்லாமிய சகோதரத்துவத்தின் வரையறைகள், சமூக ஒருமைப்பாடு என்பன குறித்து நான் பேசியிருக்கின்றேன். எனது அன்றைய எழுத்துகளை இன்று பார்க்கும் போது மின்பர் மேடையில் பேசுகின்ற ஒருவரைப் போல் அல்லது பொது மக்கள் மத்தியில் உரையாற்றும் ஒரு ஜனரஞ்சக பேச்சாளன் போன்று தான் கருத்துகளை முன்வைத்திருக்கின்றேன். ஒருமைப்பாட்டுச் சிந்தனையை அல்-குர்ஆன் பேசுவது போல, ஒரு நாகரிகப் பின்புலத்திலிருந்து நான் முன்வைக்கவில்லை. அல்-குர்ஆன் பேசும் ஒருமைப்பாடு தான் சாத்தியமானது. ஏனெனில் அது தன்னையே மூலமாகக் கொண்டு உலகளாவிய மொழியில் எழுகிறது. நபிகளார் கூறினார்கள்: "ஓர் அரேபியனுக்கு அறபி அல்லாதவனை விட சிறப்பு இல்லை; அறபி அல்லாதவனுக்கு அறபியை விடவும் சிறப்பு இல்லை; ஒரு வெள்ளை இனத்தவனுக்கு கறுப்பு இனத்தவனை விட சிறப்பு இல்லை; சிறப்புகள் அனைத்தும் தக்வாவின் மூலமே கிடைப்பன."

அவ்வாறே பூமியின் பௌதீக, நில வரையறைகளுக்கிடையிலும் சமநிலை பேணப்படுகின்றது. நபிகளார் கூறினார்கள்: "சிறப்பான நான்கு விடயங்கள் எனக்குத் தரப்பட்டுள்ளன. எனது உம்மத்திருக்கு இந்த பூமி ஸுஜூது செய்யக் கூடிய தளமாகவும் சுத்தப்படுத்தக் கூடிய பொருளாகவும் அமைக்கப்பட்டுள்ளது. நான் முழு மனித சமுதாயத்துக்காகவும் அனுப்பப் பெற்றுள்ளேன். எனக்கும் எனது எதிரிகளுக்குமிடையிலான தூரம் ஒரு மாத கால நடைதூரம் என்றிருந்தாலும் அவர்களது உள்ளத்தில் ஏற்படுத்தப் படும் அச்சத்தின் ஊடாகவே எனக்கு வெற்றி கிடைத்துவிடும். யுத்த கொள்ளைப் பொருட்கள் எனது உம்மத்துக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளன."

பூமியின் வளங்களிலிருந்து பயன் பெறுவதிலும் மக்கள் மத்தியில் சமநிலை பேணப்படுகிறது:

وَجَعَلَ فِيها رَواسِيَ مِن فَوقِها وَبارَكَ فيها وَقَدَّرَ فيها أَقواتَها في أَربَعَةِ أَيّامٍ سَواءً لِلسّائِلينَ

-فصلت: ١٠

**"அவனே அதன் மேலிருந்து உயரமான மலைகளை அமைத்தான். அதன் மீது (சகல விதமான) பாக்கியங்களையும் பொழிந்தான். இன்னும் அதில் அவற்றின் உணவுகளை நான்கு நாட்களில் சீராக நிர்ணயித்தான்.**

(இதைப் பற்றி) கேட்கக் கூடியவர்களுக்கு (இதுவே விளக்கமாகும்).”
**(புஸ்ஸிலத் 41:10)**

இவை அனைத்தும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ‘அதபுல் இக்திலாப்’ எழுதிய தாஹா அல்வானி மாறி விட்டார் என்ற செய்தியைத் தான் எனக்குச் சொல்லி வைத்தன. இஸ்லாமிய அறிவு முதுசங்கள் தராத சில புதிய நிலைப்பாடுகளுக்கு அல்-குர்ஆன் அவரைக் கொண்டு வந்திருக்கின்றது. இன்று நான் அல்-குர்ஆனுடன் சுழலும் கொள்கையைக் கடைப்பிடிப்பவன். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இறங்கி, அவர்களது முழு வாழ்விலும் பிரதிபலித்த அனைத்தையும் பின்பற்றுபவன். அதனால் தான் எனது முன்னைய முனைவுகளுக்கு நான் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்கின்றேன். இதனை நான் பகிரங்கமாகச் சொல்லத் தயங்கவில்லை. அல்லாஹ் என்னிடமிருந்து வெளிப்பட்டவற்றை மன்னிப்பானாக! எனது உள்மனத்து நோக்கத்தை ஏற்றுக் கொள்வானாக! அது அன்றும் இன்றும் தூய்மையாகவே இருக்கின்றது.

மீள் பரிசீலனை என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதனை எனது சகோதரர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்வைக்கின்றேன். இமாம் ராஸி தனது மறைவுக்கு முன்னர் தனது அறிவு முனைவுகள் அனைத்தையும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தினார். பின்னர் வஸிய்யத்தாகக் கூறினார்கள்: ‘நான் இறையியல் தத்துவங்களையும் மெய்யியல் கோட்பாடுகளையும் நிறையவே ஆராய்ந்திருக்கின்றேன். என்றாலும் நான் அல்-குர்ஆனில் கண்ட பயனுக்கு நிகராக எதனையும் அவற்றில் காணவில்லை. ஏனெனில் குர்ஆன் ஆனது, அனைத்து மகிமையையும் அல்லாஹ்வின் முன்னால் மண்டியிட வைத்துவிடுகின்றது; முரண்பாடுகளில் ஆழ்ந்து செல்வதைத் தடுக்கின்றது; உண்மையில் அறிவு என்பது இது தான். நுண்ணிய தத்துவ விசாரணைகள் புனித மூளைகளைக் களைப்படையச் செய்து, பலவீனப்படுத்தி விடுவன.’

தெட்டத் தெளிவான ஆதாரங்கள் மூலம் நிறுவப்பட்டவற்றையே நான் கூறுகின்றேன். இதனையே அல்லாஹ் என்னுள் போட்டுள்ளான். தான் ஒரு தவறு செய்துவிட்டதாக உணர்ந்து கொள்கின்ற போது அதனைத் திருத்திக் கொள்ள ஒரு போதும் பின்னிற்க வேண்டாம் என எனது சகோதரர்களிடமும் மாணவர்களிடமும் நான் வேண்டிக் கொள்கின்றேன்.

இயன்ற அளவு ‘பத்வா’ சொல்வதை நான் தவிர்த்துக் கொள்கின்றேன். நான் ஒரு பத்வா சொல்லி, பின்னர் அதில் தவறு இருக்கிறது எனக் காணப்படின், ஒவ்வொருவரிடமும் அந்தத் தவறை எடுத்துச் சொல்லி, அந்த பத்வாவின்படி செயல்பட வேண்டாம் என

வேண்டிக் கொள்ள இயலாமல் போய்விடுமே என்ற பயம் தான் அதற்குக் காரணம். என்னிடம் யாரேனும் பத்வா கேட்டு வந்தால் அதற்கு உரியவர்களை நான் காட்டிக் கொடுக்கின்றேன். எனது வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். எனக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்கின்றேன். எனது தவறான கருத்தையும் செயலையும் விட்டு எனது பாதையைச் சீர்படுத்துமாறும் எனது ஸாலிஹான எண்ணங்களை ஏற்றருளுமாறும் நான் அவனை வேண்டுகின்றேன். நான் தற்போது கடைப்பிடிக்கும் அல்-குர்ஆனுடன் ஒத்திசைந்து பார்க்கும் முறையியலின் அடிப்படையில், நான் உயிரோடு இருக்கும் வரையில், எனது எந்த நூலிலேனும் தவறுகள் தென்பட்டால் அவற்றை மீள் பரிசீலனை செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். எனது வாழ் நாளில் என்னால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த முடியாமல் போகும் விடயங்களுக்காக எனது சகோதரர்களிடமும் மாணவர்களிடமும் மன்னிப்பை வேண்டுகிறேன். அல்லாஹ் அனைவருக்கும் வெற்றியைத் தருவானாக!

# முதல் நூல் பற்றிய ஒரு குறிப்புரை

இது எமது முதல் நூல் பற்றிய சுருக்கமான ஒரு குறிப்பு. அதனைச் சற்றே விரிவாகப் பேசுவதாயின் 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' என்ற எமது முதலாவது வெளியீடு உண்மையில் அன்றைய நாளில் உம்மத்தின் ஒரு நோயை நிவர்த்திப்பதற்கான ஒரு முயற்சியாகவே அமைந்தது. அன்று உம்மத் பல நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் மிகவும் ஆபத்தானது கருத்து வேறுபாடு எனும் நோய்.

கருத்து வேறுபாடு என்பது தனியான ஒரு கலை. அதைப் பற்றி ஆரம்ப கால, பிற்பட்ட கால அறிஞர்கள் பலரும் எழுதியுள்ளனர். இமாம்களான மாலிக், அபூ ஹனீபா, அபூ யூஸுப், அவ்ஸாஇ, பைஹகி போன்றோரின் கருத்து வேறுபாடுகள் குறித்து எமக்குத் தெரியும். பின்னர் இது விடயம் சம்பந்தமாக அஷ்ஷைபானி (மறைவு ஹி. 560) இப்னு நஸ்ர் அல்-பக்தாதி ஆகியோரின் நூல்களோடு மேலும் பல பிரசுரங்களும் வெளி வந்தன.

கருத்து வேறுபாட்டு பிக்ஹ் அல்லது நவீன காலத்தில் பிக்ஹ் ஒப்பீட்டாய்வு என அழைக்கப் படும் கலை, ஒரு வகையில் எமது அறிவுப் பாரம்பரியத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 'கருத்து வேறுபாடு என்பது பிக்ஹுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம்; ஏனைய விடயங்களில் கருத்து வேறுபாடு தோன்ற மாட்டாது; அல்லது அவற்றில் அடிப்படையில் கருத்து வேறுபாடு நிகழ மாட்டாது' போன்ற ஒரு மனோ நிலை எம்முள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த பிக்ஹ், எமது வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் ஆக்கிரமிக்கும் வகையில் ஒரு புற்று நோய் போல் பரவியுள்ளது. மக்கள் தமது வாழ்வில் எதிர் கொள்ளும் ஒவ்வொரு விடயத்தையும் -அது உணவு சம்பந்தப்பட்டதாகவோ, வேறு ஒரு விடயமாகவோ கூட இருக்கலாம்- இது ஹலாலானதா, ஹராமானதா என்று வினவப் பழக்கப்பட்டிருக்கின்றார்கள். அவற்றிற்கு பத்வா வழங்குபவர்களும் எமது சிந்தையை சட்டவியல் கருத்து வேறுபாடு நோக்கியே திருப்பிவிடுகின்றனர். ஒற்றுமை குறித்து நாம் பேசினால், 'பிளவுபட்டிருக்கும் இந்த அறிஞர்கள் அனைவரையும் ஒரே கருத்துக்குக் கொண்டு வர முடியாதா? கருத்து வேறுபாடுகளுக்கு என்ன தான் தீர்வு?' என்றே கேட்பார்கள். ஆக, 'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்' எனும் முதல் வெளியீட்டில், நான்கு மத்ஹபுகளினது கருத்து வேறுபாடுகளைப் பேசும் பிக்ஹுப் பகுதியாகவே மையக் கருத்து

அமைந்திருந்தது. அது தவிர்ந்து ஏனைய அனைத்தும் ஒரு முன்னுரை போன்றே அன்று பேசப்பட்டன.

நூலின் முதல் தலைப்பில் கருத்து வேறுபாடுகளின் உண்மை நிலை பற்றியும் அத்துடன் சம்பந்தப்பட்ட சில விடயங்களும் பேசப்பட்டன. அவற்றில் ஏற்புக்குரியன, மறுப்புக்குரியன, கருத்து வேறுபாட்டின் வகைகள், அவை பற்றிய அறிஞர்களின் கருத்துகள் என அனைத்தும் மத்ஹபுகளது சட்டக் கருத்து வேறுபாடுகளைப் பேசுவதற்கான முன்னுரையின் ஒரு பகுதியாகவே அமைந்தன.

நூலின் இரண்டாவது தலைப்பில் கருத்து வேறுபாட்டின் வளர்ச்சி, வரலாறு பற்றிப் பேசினேன். அதில் நபியவர்கள் காலத்தில் ஸஹாபாக்கள் மத்தியிலான கருத்து வேறுபாடுகளைக் குறித்துக் காட்டியுள்ளேன். அதில் த.்.வீல் எனும் அல்லாஹ்வின் பண்புகளுக்கு விளக்கம் கூறுதல் பற்றியும் அதன் வரையறைகள், அது பற்றிய ஸஹாபாக்களின் கருத்து வேறுபாடுகள், பத்வா வழங்குனர், இஜ்திஹாத், காரிக்கள் பற்றிய நிலைப்பாடுகள் குறித்தும் பேசப்பட்டது. மேலும் அக்காலத்தின் அரசியல் வேறுபாடுகளையும் அவை சட்டவியல், அகீதா கருத்து வேறுபாடுகளில் செலுத்திய தாக்கம், அதனைச் சுற்றி எழுந்த வாதப் பிரதிவாதங்கள் குறித்தும் பேசியுள்ளேன்.

மூன்றாவது தலைப்பில் சட்ட வசனங்களில் இருந்து முடிவுகளைப் பெறும் முறையியல் பற்றிப் பேசினேன்.

நான்காவது தலைப்பை, கருத்து வேறுபாட்டுக்கான காரணங்களுக்காக ஒதுக்கியிருந்தேன். ஏனெனில் கருத்து வேறுபாடுகள் நபிகளாரின் காலத்திலும் குலபாஉர் ராஷிதூன் காலத்திலும் கூட நிலவின. ஆக சட்டவியலாளர் மத்தியில் கருத்து வேறுபாட்டுக்கான காரணங்களை விளக்கினேன். இங்கு தான் சட்டவியல் கருத்து வேறுபாடுகள் குறித்தும் அவற்றிற்கான மூல வேர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாத வேளைகளில் கடைப்பிடிக்க வேண்டிய கருத்து வேறுபாட்டு ஒழுக்கம் குறித்தும் விரிவாகப் பேசியுள்ளேன்.

ஐந்தாவது தலைப்பில், அறிஞர்கள் மத்தியிலான கருத்து வேறுபாடுகளுக்கும் அவர்கள் பேணிய ஒழுக்க நெறிகளுக்குமான அடையாளங்கள் குறித்து எழுதியுள்ளேன். இதற்கான ஒரு மாதிரியாக இமாம் லைஸ் இப்னு ஸஅத், இமாம் மாலிக்குக்கு எழுதிய கடிதத்தைக் குறிப்பிட்டேன். மேலும் இமாம்கள் கருத்து வேறுபாடுகளைக் கையாண்ட முறைகள், ஒழுக்கங்கள் ஆகியவற்றை விளக்கும் பல சம்பவங்களை முன்வைத்துள்ளேன். இவை, கருத்து வேறுபாட்டின் எதிர் விளைவுகளைக் குறைக்கும் வகையில் எவ்வாறான ஒரு முறைமைக்கு அல்லது

வரையறைகளுக்குள் கொண்டு வரப்படலாம் என்பதற்கான ஒரு கோட்பாட்டுச் சட்டகத்தை வகுத்துத் தரக் கூடியனவாக இருந்தன.

ஆறாவது தலைப்பு சிறந்த நூற்றாண்டுக் காலப் பகுதிக்குப் பின்னர் கருத்து வேறுபாடும் அதன் ஒழுக்கமும் எவ்வாறு காணப்பட்டது என்பது பற்றிப் பேசுகிறது. இதில் இஜ்திஹாத் நின்று போனமை குறித்தும் தக்லீத் பல நூற்றாண்டுகளாக -இற்றை வரை- தொடர்கின்றமை குறித்துப் பேசியிருக்கிறேன். மூன்று தசாப்தங்களுக்கு முன்னரான கருத்து வேறுபாடுகளுக்குரிய காரணங்களை விளக்கியிருந்தேன்.

முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடானது, ஒருவரையொருவர் கொலை செய்து கொள்ளவும் நாட்டுக்கு நாடு யுத்தங்களை மேற்கொள்ளவும் ஆன நிலைமைகளுக்கு அதிகரிக்கும் என நான் அப்போது அறிந்திருக்கவில்லை. அன்று நான் முரண்பாட்டிலிருந்து மீளும் வழிகள் குறித்துப் பேசினேன். இன்றோ மென்மேலும் முரண்பாடுகள் பெருகி, பிளவுகள் தான் அதிகரித்திருக்கின்றன. பல குழுக்களாகவும் கட்சிகளாகவும் பிரிந்து தனித்தனித் தீவுகளில் வாழ்ந்து வருகின்றோம்.

என்றாலும் எனது நூல் மொத்தமாக, கருத்து வேறுபாட்டு ஒழுக்கத்திற்கான ஓர் அடித்தளத்தையே இட்டது. அன்றைய சூழலில் காணப்பட்ட மிக முக்கியமான, அபாயகரமான ஒரு விவகாரம் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்கான ஒரு பங்களிப்பாக அது அமைந்தது. அன்றைய இஸ்லாமிய எழுச்சி எனது நூலில் இருந்து பயன்பெற்றிருந்தால், சற்றே ஆழ்ந்து கற்றிருந்தால், இயக்கங்களுக்கிடையே அடுத்த தரப்பின் இரத்தத்தை ஹலாலாக்கும் அளவு கருத்து வேறுபாடுகள் வளர்ச்சியுறுவதைத் தவிர்த்திருக்கலாம்.

எனது இந்த இரண்டாம் நூல் முதல் வெளியீட்டில் இடப்பட்ட அத்திவாரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இது ஆற்றுவது முதலாவதை முழுமைப்படுத்தும் பணியே. ஆக, 'முரண்பாடுகள் பற்றிய ஒழுக்க நெறிகள்' பற்றிய எனது முதல் வெளியீட்டிலிருந்து பயன்பெற விரும்பும் ஆய்வாளர்களும் பல்கலைக்கழகங்களும் இந்த இரண்டாவது நூலை முதல் நூலின் இணைப்பாகக் கருத வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். முதல் வெளியீட்டின் அடித்தளம் இன்றி இரண்டாம் வெளியீடு தோற்றம் பெற்றிருக்காது. ஆக இந்த இரு நூல்களும் இணைத்தே கற்கப்பட வேண்டும் என நான் ஆலோசனை வழங்குகின்றேன். அதனால் இரண்டுக்கும் இடையில் ஒரு முழுமைப்படுத்தல் பிணைப்பு ஏற்பட்டு, பயன்பாடு அதிகரிக்கும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்ள முதல் நூலின் சுருக்கத்தை இரண்டாம் நூலில் ஒரு தனித் தலைப்பாகக் கொண்டு வந்துள்ளேன். அதிலிருந்தே இரண்டாம் நூலுக்குச் செல்கின்றேன். இரண்டாம் நூல் சுமந்து வருவது முதல் நூல் கொண்டு

வந்த அதே செய்தியைத் தான். அதாவது 'சமூக ஒருமைப்பாட்டை நோக்கி அழைத்தலும் பிரிவினையைத் தவிர்த்தலும்'. இரண்டாம் நூல் இந்த சிந்தனைக்கான அடித்தளத்தை பிக்ஹ் கண்ணோட்டத்தில் மாத்திரமன்றி சிந்தனா ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் அணுகியுள்ளது.

எதிர்பார்க்கும் இலக்குகளை இந்த நூல் அடைந்து கொள்ள அல்லாஹ்வை பிரார்த்திக்கிறோம்.

# பகுதி ஒன்று

# ‘முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்’ என்ற முதல் நூலின் சாராம்சம்

இஸ்லாம் ஏகத்துவத்தையும் கருத்தொற்றுமையையும் வலியுறுத்திய அளவுக்கு வேறெதனையும் வலியுறுத்தவில்லை. இவற்றில் முதலாவது, எவ்வித கலப்பும் இன்றி, தூய்மையாக அல்லாஹ்வை ஈமான் கொள்வதைக் குறிக்கின்றது. இரண்டாவது, முதலாவதின் செயற்பாட்டு வடிவத்தைப் பிரதிபலிக்கின்றது. எந்த சமூகத்தின் இரட்சகனும் தூதுவரும், வேத நூலும் கிப்லாவும், படைப்பின் நோக்கம், வாழ்வின் நோக்கம் முதலிய அனைத்துமே ஒன்றாக இருக்கின்றதோ நிச்சயமாக அதன் கருத்தும் சிந்தனையும் ஒன்றாகவே இருக்கும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنَّ هٰذِهِ أُمَّتُكُمْ أُمَّةً واحِدَةً وَأَنا رَبُّكُمْ فَاعبُدونِ -الأنبياء: ٩٢

**“நிச்சயமாக உங்கள் உம்மத்து –சமுதாயம்– (வேற்றுமை ஏதுமில்லா) ஒரே சமுதாயம் தான். மேலும் நானே உங்கள் இறைவன்; ஆகையால் என்னையே நீங்கள் வணங்குங்கள்.” (அன்பியா 21:92)**

ஆனால் துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம்கள் ஏகத்துவத்தில் குறை விட்டார்கள்; கருத்தொற்றுமையில் கவனம் இழந்தார்கள்.

நாம் அறிவைப் பெற்றுக் கொண்டோம். ஆனால் அறிவை உருவாக்கத் தவறி விட்டோம். அனைத்து வழிவகைகளும் எம்மிடம் இருக்கின்றன. ஆனால் நோக்கத்தை இழந்து நிற்கின்றோம். வேதம் வழங்கப்பட்ட சமூகங்களுக்கு குறைந்த, மேலோட்டமான அறிவைத் தான் அல்லாஹ் வழங்கினானா? இல்லையே! வேதங்களை அவர்களே

திரிபுபடுத்தினார்கள். இங்கு தான் அவர்களது அழிவு இருந்தது. தமக்கு வழங்கப் பெற்ற அறிவை, தம் மத்தியில் பொறாமையை விதைக்கவே அவர்கள் பயன்படுத்தினர். அதுவே அவர்களது அழிவுக்குக் காரணமானது:

وَمَا اختَلَفَ الَّذينَ أوتُوا الكِتابَ إلّا مِن بَعدِ ما جاءَهُمُ العِلمُ بَغيًا بَينَهُم -آل عمران: ١٩

**"...வேதம் கொடுக்கப்பட்டவர்கள் (இது தான் உண்மையான மார்க்கம் என்னும்) அறிவு அவர்களுக்குக் கிடைத்த பின்னரும் தம்மிடையேயுள்ள பொறாமையின் காரணமாக (இதற்கு) மாறுபட்டனர்..." (ஆல இம்ரான் 3:19)**

நாம் வேத நூலைப் பெறுவதற்குப் பகரமாக, வேதம் வழங்கப் பெற்றவர்களின் பலவீனங்களைத் தான் வாரிசாகப் பெற்றுள்ளோமா? வேதம் வழங்கப் பட்டோரிடமிருந்து அவர்களது அறிவையும் பண்பாட்டையும் பெறுவதற்குப் பதிலாக அவர்களது பொறாமையைத் தான் வாரிசாகப் பெற்றுள்ளோமா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

முஸ்லிமுடைய அறிவு எதிர் கொண்டுள்ள சிந்தனைச் சிக்கலில் இருந்து மீள்வதாக இருப்பினும் சரி; முஸ்லிமுடைய நடத்தை எதிர் கொண்டுள்ள பண்பாட்டு நெருக்கடியில் இருந்து மீள்வதாக இருப்பினும் சரி, நாம் அந்த நெருக்கடிகளின் வேர்களை இனம் கண்டு சரி செய்வதே சிறந்த வழி. எமது மூளைகளின் சிந்திக்கும் முறையை மீள் கட்டமைக்க வேண்டும்; முதன்மைக் காரணிகளை மீள் ஒழுங்கமைக்க வேண்டும்; இவற்றின் மீது அடுத்த முஸ்லிம் பரம்பரையைப் பயிற்றுவிக்க வேண்டும்.

## முதலாவது: கருத்து வேறுபாடு ஏற்கப்படுவது எப்போது? மறுக்கப்படுவது எப்போது?

அல்லாஹு தஆலா மனிதர்களை வித்தியாசமான அறிவுத் தரத்துடனும் புரிதல் ஆற்றலுடனும் படைத்திருக்கின்றான். மேலும் அவர்களது மொழி, நிறம், சிந்தனைகள் முதலியனவும் வேறுபடுகின்றன. இவையனைத்தும் அவர்களது கருத்துகளும் முடிவுகளும் வேறுபடுவதற்கு வழி வகுக்கின்றன. ஒவ்வொரு கருத்தும் அதனைச் சொல்பவனைப் பொறுத்து வித்தியாசப்பட்டமையையும் மொழி, நிற, தோற்றப்பாடுகளையும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் என்று நாம் நம்புகின்றோம். அது போல் மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகப் படைக்கப்பட்டிருந்தால் இவ்வுலகில் மனித வாழ்வு நிலைப்பதும் வளர்வதும் கூட சாத்தியமற்றதாகிவிடும். ஒவ்வொரு படைப்பும் அததற்குரிய பணிக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَو شاءَ رَبُّكَ لَجَعَلَ النّاسَ أُمَّةً واحِدَةً وَلا يَزالونَ مُختَلِفينَ إِلّا مَن رَحِمَ رَبُّكَ وَلِذلِكَ خَلَقَهُم - هود: ١١٨ - ١١٩

**"உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (அவன் அப்படி ஆக்கவில்லை.) எனவே அவர்கள் எப்போதும் பேதப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர, இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான்..." (ஹூத் 11: 118–119)**

ஸலப்கள் மத்தியில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள், மேற்குறித்த வித்தியாசங்களின் ஓர் அங்கம் தான். கருத்து வேறுபாடுகள் எல்லை தாண்டாத வரை, அதன் ஒழுக்க வரையறைகளை மீறாத வரை சாதகமான ஒன்றாகவே கருத முடிகின்றது. கருத்து வேறுபாடுகள் குறித்த ஓர் ஆதாரத்திற்கான பல்வேறு புரிதல் இடம்பாடுகளை அறிந்து கொள்ள உதவுகின்றன. அது போல் அவை மனித மூளைகளுக்கு ஒரு பயிற்சியையும் சிந்தனைகள் கருக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன. இவை கருத்து வேறுபாட்டின் சாதகமான பக்கங்களுக்கான சில உதாரணங்கள் மட்டுமே. ஆனால் இது எல்லை தாண்டி, ஒழுக்க வரையறைகளைப் பேணாது செல்கின்ற போது முஸ்லிம் உம்மத்தில் பிளவுகளும் வீணான விவாதங்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகளே பெருகும்.

**கருத்து வேறுபாட்டிற்கான தூண்டல் காரணியை மையப்படுத்தி வகைப்படுத்தல்.**

அ) மனோ இச்சைகளின் அடிப்படையில் தோன்றும் கருத்து வேறுபாடு: இது சுயநலனை அல்லது லௌகீக லாபம் ஒன்றினை அடைந்து கொள்ளும் உள்ளார்ந்த ஆசையின் விளைவாக ஏற்படுவது. இவ்வகைக் கருத்து வேறுபாடு கண்டிக்கத் தக்கது. ஏனெனில் மிகை மனோ இச்சை, சத்தியத் தேட்டத்தைத் தடுத்துவிடும். அல்-குர்ஆன் கூறுகிறது:

وَلا تَتَّبِعِ الهَوى فَيُضِلَّكَ عَن سَبيلِ اللَّه -ص: ٢٦

**"மனோ இச்சையைப் பின்பற்றாதீர். (ஏனெனில் அது) உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி கெடுத்துவிடும்..." (ஸாத் 38:26)**

ஒரு சிந்தனையில் மனோ இச்சையின் பாதிப்பை அடையாளம் கண்டு கொள்ள பல வழிகள் இருக்கின்றன. சில புறவழிகள்; சில அகவழிகள். புறவழிகளுள் குறித்த சிந்தனைகளை அல்-குர்ஆனுடனும் ஸுன்னாவுடனும் ஒப்பிட்டுப் பார்த்தல், சாதாரணமாக ஏற்கத் தக்க மனிதப் பகுத்தறிவுடன் முரண்படுகின்றதா எனக் காணல் முதலியன அடங்கும். அக வழிகளைப் பொறுத்து, குறித்த சிந்தனைகளின் மூலம் எது என்பதை

சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அந்த சிந்தனை தோற்றிய காரணத்தை தத்தமது உள்ளத்தையே கேட்டுப் பார்க்க வேண்டும். அதில் சூழல் எந்தளவுக்குத் தாக்கம் செலுத்தியிருக்கிறது? தான் அறியாமலேயே ஏதும் ஓர் அழுத்தம் தன்னை வழி நடாத்தியதா எனத் தன்னைத் தானே விசாரணை செய்து பார்க்க வேண்டும். அது போலவே தனது சிந்தனையின் உண்மைத் தன்மை குறித்தும் விமர்சன பூர்வமாக சற்று ஆழமாகவே தேடிப் பார்க்க வேண்டும்.

ஆ) சத்தியத்தின் அடிப்படையில் அமைந்த கருத்து வேறுபாடு: மு.ஃ.மின்கள், காபிர்களுடனும் முஷ்ரிக்குகளுடனும் முனாபிக்குகளுடனும் கொள்ளும் கருத்து வேறுபாடுகள் அவசியம் ஆய்ந்து காணப்பட வேண்டும். இதில் அவர்களுடன் இணக்கப்பாட்டோடு செல்ல முடியாது. இதன் பொருள் முஸ்லிம்கள் எப்போதும் அவர்களுடன் போராட்ட நிலையில் வாழ வேண்டும் என்பதல்ல. அவர்களுடன் யுத்தம் செய்யவும் சமாதானமாக வாழவும் வேறு விதிகளும் ஒழுங்குகளும் இருக்கின்றன.

இ) ஏற்புக்கும் மறுப்புக்கும் இடம்பாடான கருத்து வேறுபாடு: இவை கிளைக் கருத்து வேறுபாடுகள் சம்பந்தப்பட்டன. பல்வேறு நிலைப்பாடுகள் தோன்றுவதற்கான இடம்பாடுகள் இங்கு இருக்கும். இவற்றில் ஒன்று மற்றையதை விடவும் பலமானதாக அடையாளப்படுத்தப்பட முடியும். இவ்வகைக் கருத்து வேறுபாடுகளில் தான் சறுக்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஏனெனில் இங்கு தக்வாவுடன் மனோ இச்சையும் கலந்துவிடும். இதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டுமானால் சில விதிகளையும் வரையறைகளையும் ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பது அவசியம். இல்லையேல் பிளவுகள் உருவாக வாய்ப்புகள் அதிகம்.

## இரண்டாவது: கருத்து வேறுபாட்டின் வரலாறு

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வடிவிலான கருத்து வேறுபாடுகள் நபியவர்கள் காலத்தில் காணப்படுவில்லை. மக்கள் மத்தியில் எவ்வகை வேறுபாடுகள் தோற்றினாலும் அவற்றின் சரி - பிழையைத் தெளிவுபடுத்த நபிகளார் உடன் இருந்தார்கள். அனைவரும் ஏற்றுக் கொண்ட மூலாதாரமாக அவர்கள் விளங்கினார்கள். சில வேளைகளில், மதீனாவில் அன்றி தூரப் பகுதிகளில் ஸஹாபாக்கள் இருந்த நிலைமைகளில் அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியிருக்கின்றன. இச்சந்தர்ப்பங்களில் கூட மதீனாவுக்குத் திரும்பி வந்தவுடன் தமது முரண்பாட்டை நபியவர்களிடம் முன்வைத்து தெளிவுகளைப் பெற்றுக் கொள்வார்கள். உதாரணமாக, அஹ்ஸாப் யுத்த காலத்தில் நபிகளார், "பனீ குரைளா பூமியில் அன்றி வேறு எங்கும் அஸர் தொழக் கூடாது" என்றார்கள். ஆனால் வழியின் நடுவில் அஸர் தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. சிலர், பனூ

குரைளா பூமியை அடையும் வரை நாம் தொழ மாட்டோம் என்றனர். மற்றும் சிலர், இல்லை நாங்கள் தொழுவோம்; நபிகளார் எங்களிடம் அதனை எதிர்பார்க்கவில்லை என்றனர். இவ்விவகாரம் நபிகளாரிடம் முன்வைக்கப்பட்ட வேளை அன்னார் எவரையும் கடிந்து கொள்ளவில்லை.

வெளிப்படையில் இந்த ஹதீஸ் ஸஹாபாக்கள் இரு குழுக்களாகப் பிரிந்தமையைக் காட்டுகின்றது. ஒரு குழுவினர் ஹதீஸின் வெளிப்படையான கருத்தைப் பெற்றனர்; மற்ற குழுவினர் அதிலிருந்து குறிப்பான ஒரு கருத்தைப் புரிந்து கொண்டனர். இந்த இரண்டு புரிதல்களையும் நபியவர்கள் அங்கீகரித்தார்கள். இது ஒரு சட்ட வசனத்தை நேரடியான பொருளில் விளங்குதல், சட்ட வசனம் குறித்துக் காட்டும் கருத்தின் அடிப்படையில் விளங்குதல் எனும் இரு வகை அணுகுமுறைகளும் அனுமதிக்கப்பட்டன என்பதைக் காட்டுகின்றது.

நபிகளார் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஸஹாபாக்களது எல்லா இஜ்திஹாத்களையும் ஏற்றுக் கொண்டு விடவில்லை. உதாரணமாக, ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஊடாக அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸைக் காண்போம். அபூ தாவூத், தாரகுத்னி முதலியோர் இதனைப் பதிவு செய்துள்ளனர். ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்: நாங்கள் ஒரு பிரயாணத்தில் இருந்தோம். ஒருவரது தலையில் காயம் ஏற்பட்டது. அவருக்கு குளிப்பு கடமையான போது, நான் தயம்மும் செய்து கொள்ள அனுமதியிருக்கின்றதா என ஏனையோரிடம் கேட்டார். உங்களுக்கு தயம்மும் செய்ய அனுமதியில்லை; நீங்கள் நீரைப் பயன்படுத்தலாமே என அவர்கள் கூறினர். பின்னர், குளித்ததனால் அவர் இறந்து போனார். இந்த விடயம் நபிகளாரிடம் தெரிவிக்கப்பட்ட போது அன்னார், “அவர்கள் அவரைக் கொன்று விட்டனர். அல்லாஹ் அவர்களைக் கொல்லட்டும். தெரியா விட்டால் கேட்டிருக்கக் கூடாதா? அறியாமைக்கான மருந்து கேள்வி தான். அவர் தயம்மும் செய்திருந்தாலே போதுமானது. தனது காயத்தின் மீது ஒரு துணியைக் கட்டி அதன் மீது தடவி விட்டு, உடம்பின் ஏனைய பகுதிகளைக் கழுவியிருக்கலாமே!” என்றார்கள் இங்கு ஸஹாபாக்களுடைய பத்வாவை நபியவர்கள் சலுகைக் கண் கொண்டு நோக்கவில்லை. அவர்களைக் கடிந்து கொண்டார்கள். அறிவின்றி வழங்கிய பத்வா எனக் குறை கூறினார்கள். தெரியாதவிடத்து கேட்டுத் தெரிந்து கொள்வது தான் ஒழுங்கு; அவசரப்பட்டு பத்வா வழங்க முற்பட்டுவிடக் கூடாது எனத் தெளிவுபடுத்தினார்கள்.

1. த:.வீலும் அதன் வகைகளும்

அல்-குர்ஆன் ‘த:.வீல்’ எனும் சொல்லை, செயற்படுத்துதல் எனும் கருத்திலேயே பயன்படுத்தியுள்ளது. எந்த ஒரு விடயத்துக்கும் கற்பனையில்,

மொழியில், நடைமுறையில் என ஒவ்வொரு கருத்து இருக்கின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَقَد جِئناهُم بِكِتابٍ فَصَّلناهُ عَلى عِلمٍ هُدًى وَرَحمَةً لِقَومٍ يُؤمِنونَ هَل يَنظُرونَ إِلّا تَأويلَهُ يَومَ يَأتي تَأويلُهُ يَقولُ الَّذينَ نَسوهُ مِن قَبلُ قَد جاءَت رُسُلُ رَبِّنا بِالحَقِّ فَهَل لَنا مِن شُفَعاءَ فَيَشفَعوا لَنا أَو نُرَدُّ فَنَعمَلَ غَيرَ الَّذي كُنّا نَعمَلُ قَد خَسِروا أَنفُسَهُم وَضَلَّ عَنهُم ما كانوا يَفتَرونَ - الأعراف: ٥٢ - ٥٣

**“நிச்சயமாக நாம் அவர்களுக்கு ஒரு வேதத்தை கொடுத்தோம். அதை நாம் பூரண ஞானத்தைக் கொண்டு விளக்கியுள்ளோம். அது நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நேர் வழியாகவும் அருளாகவும் இருக்கிறது. இவர்கள் (தங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு வந்த) இறுதியையன்றி –த.ஃவீலை– (வேறு எதையும்) எதிர்பார்க்கிறார்களா? அந்தத் தண்டனை –த.ஃவீல்– நாள் வந்த பொழுது, இதற்கு முன் அதனை முற்றிலும் மறந்திருந்த இவர்கள், நிச்சயமாக எங்கள் இறைவனின் தூதர்கள் சத்திய( வேத)த்தையே கொண்டு வந்தனர். எங்களுக்குப் பரிந்து பேசக் கூடியவர்கள் எவரும் இருக்கின்றனரா? அவ்வாறாயின் அவர்கள் எங்களுக்காகப் பரிந்து பேசட்டும். அல்லது நாங்கள் (உலகத்திற்குத்) திருப்பி அனுப்பப் படுவோமா? அப்படியாயின், நாங்கள் முன்செய்து கொண்டிருந்த( தீய)வற்றை விட்டு வேறு (நன்மைகளையே) செய்வோம் என்று கூறுவார்கள். நிச்சயமாக அவர்கள் தம்மைத் தாமே இழப்புக்கு ஆளாக்கிக் கொண்டார்கள். அவர்கள் கற்பனை செய்து வந்தவை அவர்களை விட்டு மறைந்துவிடும்.” (அஃராப் 7:52–53)**

மேலும் அது கூறுகின்றது:

وَما يَعلَمُ تَأويلَهُ إِلَّا اللَّهُ - آل عمران: ٧

**“...அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் த.ஃவீலை (உண்மையான விளக்கத்தை) அறிய மாட்டார்கள்...” (ஆல இம்ரான் 3:7)**

இங்கு த.ஃவீல் என்பதன் மூலம், நாம் மூலாதாரமாகக் கொள்வதற்குரிய ஒன்று அல்லது ஒன்றின் மூலம் நாடப் படும் கருத்து எனப் பொருள்படுகிறது.

பிறிதோர் இடத்தில் அல்-குர்ஆன் கூறுகின்றது:

ذلِكَ خَيرٌ وَأَحسَنُ تَأويلًا - النساء: ٥٩

> **“...இது தான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான த∴வீலாக (முடிவாக) இருக்கும்.” (நிஸா 4:59)**

த∴வீல் என்ற சொல்லுக்கான பொருள் குறித்து அறிஞர்கள் தந்துள்ள விளக்கங்கள் பல. அவற்றுள், ‘ஒரு சொல்லின் வெளிப்படையான கருத்தை விட்டும் ஆதாரபூர்வமாக நிறுவ முடியுமான வேறொரு கருத்தை வழங்குதல்’ என்பது சட்டவியலாளர் மத்தியில் பரவலான ஒரு பிரயோகமாகும். என்றாலும் அல்-குர்ஆனின் பிரயோகம் தான் அடிப்படையானது. நடைமுறையில் ஒரு கருத்து வெளிப்படையாக விளங்குகின்றது எனின், அது தான் அதன் மூலம் நாடப் படும் கருத்தாகும். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸில் நபியவர்கள் தொழுகையின் ருகூவில் “எனது இரட்சகனே! நீ தூய்மையானவன்; உனது புகழின் மூலம் எனது பாவங்களை மன்னித்து விடு” என துஆக் கேட்பார்கள். அது அல்-குர்ஆனை த∴வீல் செய்வதாகும் என்றார் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா. இது அல்-குர்ஆன் கூறும்,

فَسَبِّح بِحَمدِ رَبِّكَ وَاستَغفِرهُ إِنَّهُ كانَ تَوّابًا - النصر: ٣

> **“உம்முடைய இறைவனின் புகழைக் கொண்டு (துதித்து) தஸ்பீஹ் செய்வீராக! மேலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுவீராக! நிச்சயமாக அவன் தவ்பாவை (பாவமன்னிப்புக் கோருதலை) ஏற்றுக் கொள்பவனாக இருக்கின்றான்.” (நஸ்ர் 110:3)**

எனும் வாசகத்தை செயற்படுத்தியமையாகும். மேற்சொன்ன வாசகத்துக்கு சில ஸஹாபாக்கள் கூறியது போல, தூதுத்துவம் நிறைவடைந்தமையையும் நபிகளாரின் மறைவையும் இது குறிக்கிறது என்று விளக்கம் அளித்திருக்க முடியும். ஆனால் நபியவர்கள் தூரமான ஒரு கருத்தைத் தவிர்ந்து வெளிப்படையானதொரு கருத்து அதற்கு வழங்கப்படுவதை முதன்மைப்படுத்தியிருக்கின்றார்கள்.

த∴வீல் என்பது ‘வெளிப்படையான மொழிக் கருத்தைத் தாண்டிய ஒரு கருத்தைப் பெறுதல்’ என்றும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இது மூன்று நிலைகளில் காணப்படலாம்.

முதலாவது: மிகவும் தூரமான விளக்கம் அல்லாமல், மிக எளிமையானதொரு பார்வையின் ஊடாகப் புரிந்து கொள்ளக் கூடிய, நெருக்கமான ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல். இங்கு குறித்த சொல் இந்த விளக்கத்தைத் தரக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக,

إِنَّ الَّذِينَ يَأْكُلُونَ أَموالَ اليَتامى ظُلمًا إِنَّما يَأكُلونَ في بُطونِهِم نارًا وَسَيَصلَونَ سَعيرًا - النساء: ١٠

**"நிச்சயமாக யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத் தான். இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெரியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள்." (நிஸா 4:10)**

என்ற அல்-குர்ஆன் வசனத்தில் அநாதைகளின் சொத்துகளைச் சாப்பிடுதல் என்ற பிரயோகம், அந்த சொத்துக்களை ஸதகா செய்தல், பிறருக்கு நன்கொடையாக வழங்குதல், அழித்தல் போன்ற எல்லா செயற்பாடுகளையும் குறிக்கும். அந்த வகையில் தான் அதை அநியாயமாகச் சாப்பிட்டால் எந்த அளவு ஹராமானதோ அதனைப் போன்று அல்லது அதனை விடவும் மேலாக இந்த செயற்பாடுகளும் ஹராமானவையாகும்.

இரண்டாவது: மிகவும் தூரமான ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல். இது சற்று ஆழ்ந்த பார்வையின் மூலமே பெறப் படும். அதேவேளை குறித்த சொல் அக்கருத்தைத் தரக் கூடியதாகவும் இருக்கும். உதாரணமாக, அலீ ரழியல்லாஹு அன்ஹு கீழ்வரும் இரண்டு அல்-குர்ஆன் வாசகங்களை இணைத்து ஆகக் குறைந்த கர்ப்ப காலம் ஆறு மாதங்கள் எனப் புரிந்து கொண்டார்கள்.

وَحَملُهُ وَفِصالُهُ ثَلاثونَ شَهرًا - الأحقاف: ١٥

**"...(கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும் அவனுக்குப் பால் குடி மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பது மாதங்களாகும்..." (அஹ்காப் 46:15)**

அடுத்த வாசகம்,

وَالوالِداتُ يُرضِعنَ أَولادَهُنَّ حَولَينِ كامِلَينِ لِمَن أَرادَ أَن يُتِمَّ الرَّضاعَةَ - البقرة: ٢٣٣

**"குழந்தைகளுக்குப் பூர்த்தியாகப் பாலூட்ட வேண்டுமென்று விரும்பினால், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிரப்பமான இரண்டு ஆண்டுகள் பாலூட்டுதல் வேண்டும்..." (பகரா 2: 233)**

மூன்றாவது: மிகவும் தொலைவான ஒரு கருத்தைப் பெற்றுக் கொள்ளுதல். இக்கருத்தை குறித்த சொல் குறிக்கவும் மாட்டாது. அதற்கான ஆதாரமும் கிட்டாது. உதாரணமாக,

عَمَّ يَتَساءَلونَ، عَنِ النَّبَإِ العَظيمِ - النبأ: ١ - ٢

> **"எதைப் பற்றி அவர்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்கின்றனர். மகத்தான அச்செய்தியைப் பற்றியா?" (நபஉ 78:1–2)**

என்ற வசனத்தில் 'மகத்தான செய்தி' என்பது அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் குறிக்கும் என்ற விளக்கம்.

சிலர் த.்.வீல் என்பது, தப்ஸீர் எனும் பொருளைத் தரும் என்றனர். இமாம் ராகிப் அல்-இஸ்பஹானி போன்ற சிலர், த.்.வீலை விட்டும் தப்ஸீர் சற்று வித்தியாசப்படுகின்றது என்றனர். அதாவது தப்ஸீர் என்பது அதிகமாக சொற்களுக்கு விளக்கம் அளிப்பதைக் குறிக்கும்; த.்.வீல் என்பது கருத்துகளை விளக்குவதைக் குறிக்கும். இதன் அடிப்படையில் தப்ஸீர் செய்வதற்குரிய அதே வரையறைகள் த.்.வீலிலும் பேணப்படுகின்றன. அல்-குர்ஆனில் சில மறைவான உண்மைகள் தொடர்பில் அல்லாஹ் பேசியுள்ளான். அவை பற்றிய விளக்கம் அவனுக்கு மட்டுமே சொந்தமானது. அத்தகையனவற்றில் எவரும் த.்.வீல் செய்யவோ, தப்ஸீர் செய்யவோ முற்படக் கூடாது. உதாரணமாக, அல்லாஹ்வின் திருநாமங்களது உண்மை நிலை என்ன? அவனது பண்புகளின் செயல் வடிவம் எவ்வாறு அமைகின்றது? போன்ற விடயங்களில் ஆழ்ந்து செல்லுதல் கூடாது. அது போல, த.்.வீலுக்கு இன்னும் சில வரையறைகளும் சொல்லப்படுகின்றன. அறபு மொழி விதிகளின்படியும் அறபு வழக்காற்றின்படியும் ஒரு சொல்லில் இருந்து புரிந்து கொள்ளப் படும் வெளிப்படைக் கருத்தை விட்டும் வெளிச் செல்லக் கூடாது; அல்-குர்ஆனின் நேரடி வசனம் ஒன்றுக்கு முரண்படக் கூடாது; அல்-குர்ஆன் வாசகம் இறங்கியமைக்கான காரணங்களை இனம் காண்பதன் மூலம், குறித்த வசனம் இறக்கப்பட்ட நோக்கத்தையும் சந்தர்ப்பத்தையும் கருத்தில் கொண்டிருத்தல் வேண்டும்; இமாம்களுக்கு மத்தியில் உடன் பாடான ஓர் அடிப்படை விதிக்கு முரணாக அமையக் கூடாது.

2. நபியவர்கள் ஸஹாபாக்களைக் கருத்து வேறுபாட்டிலிருந்து எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

இந்த உம்மத்தின் நிலைத்த இருப்பை உத்தரவாதப்படுத்தும் பிரதான காரணி, அல்லாஹ் மீதான நேசத்தின் அடியாக எழும் உள்ளங்களின் பிணைப்பு தான் என்பதையும், உள்ளங்களின் முரண்பாடு தான் உம்மத்தின் மரணம் என்பதையும் நபிகளார் தெளிவுறுத்தி வந்தார்கள். எனவே தான் கருத்து வேறுபாடு குறித்து ஸஹாபாக்கள் எச்சரிக்கப்பட்டார்கள். "கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்; உங்கள் உள்ளங்கள் முரண்பட்டுவிடும்" என அறிவுரை பகர்ந்தார்கள்.

அல்-குர்ஆன் கற்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கருத்து வேறுபாட்டு ஒழுக்கம் ஒன்றினை நபிகளார் தம் தோழர்களுக்குக்

கற்பித்தார்கள்: “உங்கள் உள்ளங்கள் ஒன்றியிருக்கும் வரை குர்ஆனை ஓதுங்கள்; கருத்து வேறுபாடு தோன்றினால் எழுந்து சென்று விடுங்கள்.” அல்-குர்ஆனைக் கற்கும் போது சில எழுத்துகளிலோ, சில ஆயத்துகளின் கருத்துகளிலோ குழப்பம், தெளிவின்மை என்பன ஏற்பட்டால் அல்-குர்ஆன் கற்பதை இடைநிறுத்தி, உள்ளங்கள் அமைதி அடையும் வரையும் பிளவுக்கு இட்டுச் செல்லக் கூடிய வாதாட்டங்களின் கூர்மை இல்லாது போகும் வரையும் எழுந்து செல்வதே சிறந்தது என்பதைத் தான் நபிகளார் இங்கு உணர்த்தியிருக்கின்றார்கள். அல்-குர்ஆனை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற உண்மையான விருப்பு இருக்குமாயின் கற்பதைத் தொடரலாம்.

3. ஸஹாபாக்கள் மத்தியில் இருந்த கருத்து வேறுபாட்டு ஒழுக்கம்

நபிகளாரின் பின்னர் ஸஹாபாக்கள் சமூக வாழ்வின் போக்கையே மாற்றியமைக்கும் பாரிய விவகாரங்களில் கூட கருத்து வேறுபட்டிருக்கின்றார்கள். கிலாபத் விவகாரம், ஸகாத் செலுத்த மறுத்தோருடனான போர் போன்றன உதாரணங்கள். என்றாலும் கூட அவை நபிகளார் ஸஹாபாக்களுள் விதைத்திருந்த சகோதரத்துவத்தின் மீது தான் கட்டமைக்கப்பட்டிருந்தன. இஸ்லாமிய உம்மத்துக்கு அவை வினையாக அமையவில்லை. அவர்கள் தமது கருத்துகளை விட்டுக் கொடுத்தார்கள். தாம் கொண்ட நிலைப்பாடுகளை இஸ்லாத்துக்காகவும் உம்மத்துக்காகவும் கை விட முன்வந்தார்கள். அதனால் அத்தகைய பாரிய நிகழ்வுகள் கூட முஸ்லிம் உம்மத்தில் மரண அடிகளை ஏற்படுத்தவில்லை.

ஆனால் பௌதீக எல்லைகளும் மக்கள் தொகையும் தொடர்ந்து விரிவடைந்து செல்லும் ஓர் உம்மத்தில் உருவாகும் பல்லின மனிதக் கூட்டு நீண்ட காலத்தில் பிளவுகளை விதைக்கக் கூடியதே. ஏனெனில் இந்த உம்மத் தனித்து, முதல் சமூகங்களான அன்ஸாரீன்கள், முஹாஜிர்களுடன் மாத்திரம் மட்டுப்பட்ட ஓர் உம்மத்தாக இருக்கவில்லை.

4. சிந்தனைக் கருத்து வேறுபாடுகளில் அரசியல் தாக்கம்

உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது கொலை, கிலாபத் தலைமை கூபாவுக்கும் பின்னர் ஷாமுக்கும் நகர்ந்தமை, இடையே நடந்த பாரிய வரலாற்று நிகழ்வுகள் என்பனவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கருத்து வேறுபாடுகள் பல புதிய விடயங்களை கருத்து வேறுபாட்டுப் பரப்புக்குள் கொண்டு வந்து சேர்த்தன. மேலும் ஒவ்வொரு பிரதேசத்தாரும் ஏற்கனவே தமக்குக் கிட்டியிருந்த நபிகளாரது ஸுன்னாக்களுடன் மாத்திரம் தம்மைச் சுருக்கிக் கொள்ளத் தலைப்பட்டனர். இதனால் ஏனைய பிரதேசத்தார் வசம் இருந்த நபிகளாரின் ஸுன்னாக்கள் குறித்து சந்தேகங்கள் கொள்ளவும் தொடங்கினர். அத்தகைய

வித்தியாசங்களுக்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம் என அவர்கள் கொண்டமை போலி ஹதீஸ்கள் இட்டுக் கட்டப்படுவதற்கு வழி வகுத்தது. அரசியல் நோக்கங்களுக்காக பலதரப்பட்ட கதைகள் உருவாகின. ஈராக், ஷாம் பிரதேங்களிலிருந்து வரும் ஒரு ஹதீஸ் குறித்து தம்மிடமும் ஏதேனும் ஆதாரம் இருந்தாலே ஒழிய ஹிஜாஸ் பிரதேசத்தவர்கள் அதனை ஏற்க மறுத்தார்கள். அனைத்து ஹதீஸ்களையும் தாம் தவறின்றிச் சேகரித்து வைத்துள்ளதாகவும் அந்நியமான எதுவும் அதில் கலந்து விடவில்லை எனவும் ஹிஜாஸ் மக்கள் கூறி வந்தனர்.

மதீனாவில் சுமார் பத்தாயிரம் ஸஹாபாக்கள் வாழ்ந்து வந்தனர். ஹுனைன் யுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் மதீனாவிலேயே வாழ்ந்து மரணித்தனர். உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஹதீஸையும் பிக்ஹையும் கற்றுக் கொடுக்கும் வகையில் கடிதங்கள் எழுதுவார். என்றாலும் அவர் மதீன மக்களுக்கு எழுதும் போது, அவர்களிடம் உள்ள ஹதீஸையும் பிக்ஹையும் தனக்கு அறிவிக்குமாறும் ‘அவற்றை நான் ஏனையோருக்கும் அறிவிப்பேன்’ என்றும் தான் எழுதுவார்.

மதீனாவில் ஸுன்னாவையும் ஸஹாபாக்களது பிக்ஹையும் நடைமுறைகளையும் சுமந்தவர்கள் ஸஈத் இப்னு முஸய்யபும் அவரது மாணவர்களுமாவர். பின்னர் அவர்களிடமிருந்து மாலிகி, ஷாபிஇ, ஹன்பலி, லாஹிரி மத்ஹபினர் அந்த அறிவை ஈட்டிக் கொண்டனர். மதீனாவின் தாபிஈன்கள் தம்மிடம் உள்ள ஸுன்னாக்கள் அன்றைய கால கட்டத்து சட்டவியல் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவை என்றும் பகுத்தறிவைப் பயன்படுத்தவதற்கான அவசியம் இல்லை என்றும் கருதினர். எனினும் சம காலத்தில் சிலர் இதற்கு மாற்றமான நிலைப்பாட்டுடன் பகுத்தறிவைப் பயன்படுத்தியமையையும் காணலாம். இமாம் மாலிகின் ஆசிரியரான ரபீஆ இப்னு அபீ அப்துல் ரஹ்மான், ‘ரபீஅதுர் ர.்.யி’ (பகுத்தறிவு ரபீஆ) என்ற நாமத்தைப் பெறும் அளவுக்குப் பகுத்தறிவைப் பயன்படுத்தியிருந்தார். பெரும்பான்மை அறிஞர்கள் நேரடி ஸுன்னாக்களுடன் போதுமாக்கிக் கொண்டனர்.

இப்றாஹீம் அந்நகஇ போன்ற ஈராக் பிரதேசத்து அறிஞர்கள், ஷரீஆ சட்டங்கள் காரணங்களுடன் தான், மானுட நலன்களின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன, எனவே ஒரு சட்ட அறிஞர் அந்தக் காரணங்களையும் நலன்களையும் கண்டறிய வேண்டும் எனக் கொண்டனர். மேலும், சட்ட வசனங்கள் முற்றுப் பெற்றவை, இதன் பின்னர் வரமாட்டா; தீர்வுகளை நாடி நிற்கும் பிரச்சினைகள் முற்றுப் பெறாதவை, தொடர்ந்தும் வந்து கொண்டேயிருக்கும். எனவே சடடங்களின் பின்னால் உள்ள காரணங்களும் நலன்களும் இனங்காணப் படல் வேண்டும் எனக் கருதினர். இல்லாது போனால், மக்களது சட்டத் தேவைகளை எதிர் கொள்ள முடியாத

ஒரு நிலையை எதிர் கொள்ள வேண்டி வரும் எனக் கொள்ளவே, ஒரு சட்ட வசனம் கிடைக்காத போது பகுத்தறிவைப் பிரயோகிக்கின்ற இயல்பு ஈராக் பிரதேசத்தவர்களிடம் காணப்பட்டது.

மதீன அறிஞர்கள் காரணங்களைப் பெரிதும் தேடவில்லை. ஒரு சட்ட வசனம் எந்த வகையிலும் கிடைக்காத போது மாத்திரமே பகுத்தறிவைப் பயன்படுத்த முற்பட்டனர். ஈராக்கிய சூழல் எதிர் கொள்ள வேண்டியிருந்த மாற்றங்கள், நிகழ்வுகள் போல் மதீன சூழல் எதிர் கொள்ளாமையும் இந்த வித்தியாசத்திற்குக் காரணமாக இருக்கலாம். இதனால் தான் ஈராக் அறிஞர்கள் ஸுன்னாக்களை ஏற்றுக் கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தனர். ஏற்புக்கு பல நிபந்தனைகளை விதித்தனர். அதாவது அவர்களின் முன்னைய அறிஞர்களிடம் காணப்படாத ஒரு ஸுன்னா வருகின்ற பொழுது, தமது சட்டப் பாரம்பர்யத்தினுள் சுயநலமிகளதும் பிளவுக் குழுக்களதும் சிந்தனைகள் உள் நுழைந்து தமது தீனைச் சேதப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் விதித்த நிபந்தனைகள் பாரியனவாக இருந்தன.

## மூன்றாவது: சட்டப் பெறுகையில் இமாம்களின் முறையியல் வேறுபாடு

ஸஹாபாக்கள், மூத்த தாபிஈன்களது காலத்துக்குப் பின்னர் சுமார் பதின்மூன்று சட்ட மத்ஹபுகள் தோன்றியதாகச் சிலர் கருதுகின்றனர். இவற்றின் அனைத்து இமாம்களும் 'அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ'வைச் சார்ந்தவர்களாவர். அவர்களில் எட்டு அல்லது ஒன்பது இமாம்களின் மத்ஹபுகள் மாத்திரமே தொகுக்கப்பட்டுள்ளன; மற்றும் சிலருடைய சில பகுதிகள் மாத்திரம் தொகுக்கப்பட்டுள்ளன. அந்த இமாம்கள்:

- இமாம் அபூ ஸஈத் அல் ஹஸன் இப்னு யஸார் அல் பஸரி (மறைவு ஹி. 110)
- இமாம் அபூ ஹனீபா நுஃமான் பின் ஸாபித் இப்னு ஸௌதீ (மறைவு ஹி. 150)
- இமாம் அல் அவ்ஸாஇ அபூ அம்ர் அப்துல் ரஹ்மான் இப்னு அம்ர் இப்னு முஹம்மத் (மறைவு ஹி. 158)
- இமாம் ஸுப்யான் இப்னு ஸஈத் இப்னு மஸ்ரூக் அஸ்ஸௌரி (மறைவு ஹி. 160)
- இமாம் லைஸ் இப்னு ஸஅத் (மறைவு ஹி. 175)
- இமாம் மாலிக் இப்னு அனஸ் அல் அஸ்பஹீ (மறைவு ஹி. 179)

• இமாம் ஸுஃப்யான் இப்னு உயைனா (மறைவு ஹி. 198)

• இமாம் முஹம்மத் இப்னு இத்ரிஸ் அஷ்ஷாபிஈ (மறைவு ஹி. 204)

• இமாம் அஹ்மத் இப்னு முஹம்மத் இப்னு ஹன்பல் (மறைவு ஹி. 241)

• இமாம் தாவூத் இப்னு அலி அல்-இஸ்பஹான் அல்-பக்தாதி (மறைவு ஹி. 270) - இவர் லாஹிரி எனப் பிரபல்யமானவர். அல்-குர்ஆன், ஸுன்னாவின் நேரடிக் கருத்தைப் பெறுகின்றவர் என்பதனால் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

இன்று வரை நின்று பிடித்துள்ள, இஸ்லாமிய உலகெங்கும் பின்பற்றாளர்களைப் பெற்றுள்ள, கற்பதற்கும் பத்வாவுக்கும் பெரும்பான்மையினர் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மத்ஹபுகள் நான்கு. அவை: இமாம் அபூ ஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகியோருடையவை.

### பிரபல்யமான இமாம்களின் சட்ட முறையியல்

இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகிய மூவரும் 'புகஹாஉல் ஹதீஸ்' எனும் மரபு வழியாகப் பெற்றுக் கொண்ட ஹதீஸ்கள், பத்வாக்களைக் கடைப்பிடித்தவர்கள்; மதீன வாசிகளின் அறிவையும் பிக்ஹையும் சுமந்தோர். ஆனால் இமாம் அபூ ஹனீபா 'அஹ்லுர் ர∴யீ' எனும் பகுத்தறிவு வாத சட்ட சிந்தனையின் வாரிசாவார். ஸஹாபாக்களின் பிக்ஹை மையப்படுத்தி எழுந்த ஸஈத் இப்னு முஸய்யபின் சிந்தனைப் பள்ளியினதும், ஹதீஸ்கள் கிடைக்காத விடத்து பகுத்தறிவில் தங்கி நின்ற இப்றாஹீம் அந்நகஇயின் சிந்தனைப் பள்ளியினதும் கருத்து வேறுபாடுகள் இயல்பாகவே ஒவ்வொரு பள்ளியையும் பின்பற்றிய அடுத்த பரம்பரையினர்க்குக் கடத்தப்பட்டன. ஆனால் அப்பாஸியக் கிலாபத் காலப் பகுதியாகின்ற பொழுது இக்கருத்து வேறுபாடுகளின் கூர்மை பெருமளவில் மழுங்கத் தொடங்கியிருந்தது.

ஹிஜாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த பல அறிஞர்கள் ஈராக்கிற்குச் சென்று ஸுன்னாவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுள் ரபீஆ இப்னு அபீ அப்துல் ரஹ்மான், யஹ்யா இப்னு ஸஈத், ஹிஷாம் இப்னு உர்வா, முஹம்மத் இப்னு இஸ்ஹாக் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். மேலும் பலரும் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அது போலவே ஈராக்கிய அறிஞர்கள் பலர் மதீனா சென்று அங்குள்ள அறிஞர்களிடம் கற்கலாயினர். உதாரணமாக அபூ யூஸுப் ய∴கூப் இப்னு இப்றாஹீம், முஹம்மத் இப்னு அல்-ஹஸன் அஷ்ஷைபானி ஆகியோரைக் கூறலாம். இவர்கள் இருவரும் இமாம் அபூ ஹனீபாவின் மாணவர்கள். இருவரும் இமாம் மாலிக்கிடமும்

கற்றனர். ஈராக் பிரதேச அறிஞர்களின் அதிகமான கருத்துகள் ஈராக்கிற்கு நகர்த்தப்பட்டன.

இமாம் மாலிக், ஷாபிஈ, அஹ்மத் போன்றோர் சட்டப் பெறுகையில் சில குறிப்பிட்ட வழிமுறைகளில் வேறுபட்டிருந்தாலும் கூட, பொதுப்பட நெருக்கமான முறையியலையே கொண்டிருந்தனர். இமாம் அபூ ஹனீபா அவர்களது முறையியல் இவர்களை விட்டும் பெரிதும் வேறுபட்டிருந்தது. அன்னார் கூறுவார்: 'அல்-குர்ஆனில் தீர்வு இருப்பின் அதிலே தேடுவேன். அங்கு கிடைக்காவிடின் நபிகளாரது ஸுன்னாவிலும் ஸஹீஹான நடைமுறைகளிலும் தேடுவேன். அவை நம்பத் தகுந்தவர்களிடத்தில் பிரபல்யமாக இருக்க வேண்டும். அல்-குர்ஆனிலும் நபிகளாரின் ஸுன்னாவிலும் கிடைக்காத போது ஸஹாபாக்களது கருத்தை எடுப்பேன். அவர்களுள் நான் விரும்பியவரது கருத்தைத் தேர்ந்து கொள்வேன். அடுத்து வேறு எவரது கருத்துக்களை நோக்கியும் செல்ல மாட்டேன். கருத்துகள் இப்றாஹீம் அல்-ஷஅபி, இப்னு அல்-முஸய்யப் போன்றோரினது என வந்து விட்டால் அவர்கள் செய்தது போல் நானும் இஜ்திஹாத் செய்வேன்.'

ரிவாயத்களை ஆதாரமாகக் கொள்வதில் இமாம் அபூ ஹனீபா சற்று கடினமான விதிகளைக் கடைப்பிடித்திருக்கின்றார். மிகவும் பரவலாக நடைபெற முடியுமான ஒரு செயற்பாடு குறித்து ஓரிருவர் மூலம் (ஆஹாதான வழி மூலம்) அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தால் அதனை ஏற்க மாட்டார். ஆஹாதான ஒரு ஹதீஸை விடவும் தெளிவான கியாஸை முற்படுத்துவார். மேலும் சட்ட நிபுணத்துவம் உள்ள ஓர் அறிவிப்பாளர் தான் அறிவிப்புச் செய்த ஒரு செய்திக்கு மாற்றமாகச் செயல்படுவாராயின், அவரது வார்த்தையை விடவும் செயலே முற்படுத்தப் படும் என்பார். இதன் அடிப்படையில் தான் அவர் கூறுவார்: 'இது ஒரு பகுத்தறிவுக் கருத்து என எமக்குத் தெரியும். எமது இயலுமைக்குட்பட்ட மிகச் சிறந்த முடிவு இது தான். இதனை விடவும் சிறந்த கருத்தொன்றை எவரேனும் கொண்டு வந்தால் நாம் அதனை ஏற்றுக் கொள்வோம்.' ஆனால் இமாம் மாலிக் கூறுவார்: 'ஒரு மனிதனுடைய வாதத்தை வைத்துக் கொண்டு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கியவற்றை விட்டு விடுவோமா?.. மாட்டோம்!'

மாலிக் மத்ஹபின் அடிப்படைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்: அல்-குர்ஆனின் மொழிக் கருத்தை ஆதாரமாக எடுத்தல்; அடுத்து அதன் வெளிப்படையான பொதுக் கருத்தை ஆதாரமாகக் கொள்தல்; அடுத்து மொழியிலிருந்து புலப்படும் எதிர்க்கருத்தை ஆதாரமாகக் கொள்தல்; அடுத்து அதன் உடன்பாட்டுக் கருத்தை ஆதாரமாகக் கொள்தல்; அடுத்து அது சுட்டும் காரணத்தை ஆதாரமாகக் கொள்தல் என்ற ஐந்து விதிகள் கடைப்பிடிக்கப்பட்டன. இதே போன்று ஸுன்னாவிலும் ஐந்து

விதிகள் என மொத்தமாகப் பத்து விதிகள் கடைப்பிடிக்கப்பட்டன. பின்னர் இஜ்மா, கியாஸ், மதீன மக்களின் வழக்காறு, இஸ்திஹ்ஸான் எனும் கியாஸை விடவும் சிறந்த நியாயத்தைக் கண்டு கொள்தல், ஸத்துத் தராஇ எனும் காரணங்களைத் தடை செய்தல், மஸ்லஹா முர்ஸலா எனும் வரையறுக்கப் படாத நலன்கள், ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் வரிசை மூலம் அறிவிக்கப் படும் ஸஹாபாக்களின் கூற்றுகள், மாற்றுக் கருத்துக்குரிய ஆதாரமும் பலமாக அமைகின்ற போது கருத்து வேறுபாடுகளைக் கவனத்தில் எடுத்தல், இஸ்திஸ்ஹாப் எனும் முன்னைய தீர்மானம் மாற்றமுறாமையைக் கருத்தில் கொள்தல், எமக்கு முன்பு வாழ்ந்த சமூகங்களின் சட்டங்கள் என்றவாறு அதன் அடிப்படைகள் அமைந்தன.

அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் சட்டவாக்கத்தில் சம தரத்திலேயே வைத்து நோக்குவார் இமாம் ஷாபிஈ. ஹதீஸைப் பொறுத்தவரையில் அது ஸஹீஹானதாகவும் அதன் அறிவிப்பாளர் வரிசை முறியாததாக இருக்க வேண்டும் என்பன தவிர வேறு நிபந்தனைகள் எதையும் அவர் விதிக்கவில்லை. ஏனெனில் ஹதீஸும் ஒரு பிரதான அடிப்படை. அடிப்படைகளில் ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் கேட்கப்படுவதில்லை என்பார். பரவலாக, அடிக்கடி நிகழும் ஒரு விடயத்தைப் பேசும் ஹதீஸை ஏற்பதற்கு இமாம் ஹனீபா விதித்தது போல, அந்த ஹதீஸ் பிரபல்யமானது என்ற தரத்தில் இருக்க வேண்டும் என நிபந்தனை இடவில்லை. இமாம் மாலிக் விதித்தது போல மதீன மக்களின் செயற்பாடுகளுடன் முரண்படக் கூடாது எனவும் விதி செய்யவில்லை. ஆனால் அவர், முர்ஸல் எனும் அறிவிப்பாளர் வரிசையில் ஸஹாபியின் பெயர் குறிப்பிடப் படாமல் வரும் ஹதீஸை ஏற்பதில்லை. ஆனால் தாபிஈயான ஸஈத் இப்னு முஸய்யப், ஸஹாபியின் பெயரைக் குறிப்பிடாது ஒரு ஹதீஸை அறிவித்தால் அதனைப் பெற்றுக் கொள்வார். ஏனெனில் ஸஈத் இப்னு முஸய்யபின் பதிவுகள் அனைத்துக்கும் ஸஹாபியின் பெயர் குறிப்பிட்ட அறிவிப்பாளர் வரிசைகள் அவரிடம் இருந்தன.

இமாம் ஷாபிஈயுடைய இந்த நிலைப்பாடு அவரது சம காலத்தோரான இமாம் மாலிக், இமாம் ஸௌரி போன்றவர்களது கருத்துக்கு மாற்றமானதாகும். அவர்கள் முர்ஸல் வகை ஹதீஸை ஆதாரமாகக் கொண்டனர். இஸ்திஹ்ஸான் எனும் கியாஸை விடவும் சிறந்த நியாயத்தைக் கண்டு கொள்தல் எனும் முறையை இமாம் ஷாபிஈ, ஆதாரமாகக் கொள்ளக் கூடாது என்பார். இது மாலிகி, ஹனபி மத்ஹபினருக்கு மாற்றமான ஒரு நிலைப்பாடு. மேலும் அவர் ஏற்றுக் கொள்ளாது விட்டவற்றுள் பின்வருவனவும் அடங்கின:

- மஸ்லஹா எனும் வரையறுக்கப்படாத நலனை ஆதாரமாகக் கொள்தல்

- வெளிப்படையான, வரையறுக்கப்பட்ட காரணத்தின் மீது எழாத கியாஸ்

- மதீன மக்களது வழக்காறுகள்

இமாம் அபூ ஹனீபா, தான் மேலதிகமாக இட்டுக் கொண்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்படவில்லை என்ற காரணத்தினால் பல ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்ளாது விட்டமையை, வன்மையாகக் கண்டிப்பார் இமாம் ஷாபிஈ. மேலும் அவர், இமாம் மாலிக் செய்தது போல ஹிஜாஸ் பிரதேசத்தோரின் ஹதீஸ்களுடன் மாத்திரம் தமது தேர்வைச் சுருக்கிக் கொள்ளவுமில்லை.

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் முதலில் குர்ஆனையும் ஸுன்னாவையும் ஆதாரமாகக் கொள்வார். அடுத்து ஸஹாபாக்களது பத்வாக்களுக்குச் செல்வார். கருத்து வேறுபாடே இல்லாத ஒரு ஸஹாபியின் கூற்றைக் கண்டு கொண்டால் பிறிதொரு கருத்தைத் தேட முற்பட மாட்டார். ஸஹாபாக்கள் மத்தியில் பல கருத்துகள் காணப்படின், அவற்றுள் அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் நெருக்கமானதைத் தெரிவு செய்வார். அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் நெருக்கமானதைத் தீர்மானித்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் அனைத்துக் கருத்துக்களையும் குறிப்பிடுவார்; எதனையும் உறுதிபடக் கூற மாட்டார். முர்ஸல் வகை ஹதீஸையும் இலகுவான பலவீனமான ஹதீஸையும் குறித்த விடயத்தில், வேறு எந்த ஆதாரமும் கிடைக்காத போது ஆதாரமாகப் பயன்படுத்துவார்; இவற்றை கியாஸை விடவும் முற்படுத்துவார். கியாஸ் என்பது இவரிடத்தில், முன்னர் குறிப்பிடப்பட்ட, வேறு எந்த ஆதாரமும் கிடைக்காத போது நிர்ப்பந்தமாய்ப் பயன்படுத்தும் ஓர் ஆதாரமாகும். ஸத்துத் தரீஆ எனும் காரணத்தைத் தடுத்தலை ஆதாரமாகக் கொள்வார் இமாம் இப்னு ஹன்பல்.

லாஹிரி மத்ஹபினர் அல்-குர்ஆன், ஸுன்னாவின் வெளிப்படை வசனங்களையே ஆதாரமாகக் கொள்வர். அவற்றின் காரணங்கள், நலன்கள் என்பன கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கியாஸுக்கான காரணம் தெளிவாக சட்ட வசனங்களில் குறிப்பிடப் பட்டு, அதே காரணம் புதிய பிரச்சினையிலும் திட்ட வட்டமாகக் காணப் பெற்றால் மாத்திரமே கியாஸை ஆதாரமாகக் கொள்வர். இஸ்திஹ்ஸானை ஆதாரமாகக் கொள்வது ஹராம் என்பது இவர்களது நிலைப்பாடு. ஸஹாபாக்கள் காலத்து இஜ்மாக்களை மாத்திரம் ஏற்றுக் கொள்வர். முர்ஸல் வகை ஹதீஸ்களோ, முன்கதிஃ எனும் அறிவிப்பாளர் வரிசை துண்டிக்கப்பட்ட ஹதீஸ்களோ ஏற்கப்பட மாட்டா. முன்னைய சமூகங்களின் சட்டங்களும் ஏற்புக்குரியனவல்ல. மொழிக் கருத்துக்கு எதிர் பொருளும் ஆதாரமாகாது. தக்லீத் செய்வது அறிஞனுக்கும் சரி; பொது மகனுக்கும் சரி ஹராமாகும்.

உண்மையில் இமாம்கள் கடைப்பிடித்த அடிப்படைகள் என இங்கு பேசப் பட்டன அனைத்தும் அவரவர்களது வார்த்தைகளில் இருந்து பெறப் பட்டனவே. இவற்றைப் பிடித்துக் கொண்டு வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதும் அல்-குர்ஆன், ஸுன்னாவை விடவும் அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தருவதும் எமக்கு மத்தியில் வெறுக்கத் தக்க கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளன. முஸ்லிம் உம்மத்துள் இதனால் பெரும் பாதகங்கள் விளைந்துள்ளன.

## நான்காவது: சட்டக் கருத்து வேறுபாட்டுக்கான காரணங்கள்

சிந்தனை சார் விவகாரங்களில், அதிலும் குறிப்பாக சட்ட விவகாரங்களில் கருத்து வேறுபாடுகள் தோற்றுவது இயல்பு. ஏனெனில் மானுடரின் அறிவும் புரிதல் ஆற்றல்களும் இயல்பாகவே வேறுபடுகின்றன. சட்டம், பிக்ஹ் என்பது சட்டவியல் அறிஞர் ஒருவர் ஒரு பிரச்சினைக்குரிய தீர்வை அல்-குர்ஆன், ஹதீஸ் சட்ட வசனங்களில் இருந்து அறிந்து கொள்வதையே குறிக்கின்றது. அந்த சட்ட வசனங்களை அல்லாஹு தஆலா தனது சட்டங்களைக் குறித்துக் காட்டும் வகையில் அமைத்து வைத்துள்ளான். சட்ட அறிஞரது தேடலில், அவர் அல்லாஹ்வின் சட்டத்தை மிகச் சரியாகக் கண்டு கொள்ளவும் முடியும்; காணாதிருக்கவும் முடியும். இந்த இரு நிலைகளிலும் அவர் சட்டத்தை அறிந்து கொள்வதற்காகத் தனது அதிக பட்ச அறிவாற்றலைப் பிரயோகித்திருக்க வேண்டும் என்பதற்கப்பால் வேறு எதுவும் அவரிடம் எதிர்பார்க்கப்படுவதில்லை. அவர் அல்லாஹ்வின் சட்டத்தைக் கண்டு கொள்ளாத போதும், குறைந்த பட்சம் அவர் கண்டு கொள்கின்ற முடிவு அல்லாஹ்வின் நோக்கங்களுக்கு நெருக்கமானதாகவே இருக்க முடியும். அந்த வகையில் இரண்டு நியாயங்கள் இருக்கின்ற பொழுது, சட்டக் கருத்து வேறுபாடுகள் அங்கீகாரம் பெறுகின்றன. ஒன்று, வேறுபட்ட ஒவ்வொரு கருத்துக்கும் ஆதாரம் காணப்பட வேண்டும். இரண்டு, மாற்று அபிப்பிராயம் அங்கீகரிக்கத் தகாத ஒரு விடயத்துக்கு எடுத்துச் செல்வதாக அமையக் கூடாது. இந்த இரு காரணிகள் மூலம், அங்கீகரிக்கத் தக்கதும் தகாததுமான கருத்து வேறுபாடுகளுக்கு இடையிலான வித்தியாசங்கள் வெளியாகின்றன. இதில் இரண்டாவது வகையானது மனோ இச்சை, பிடிவாதம் முதலியவற்றின் தாக்கத்தால் விளைவதாயிருக்கும்.

சட்டவியல் கருத்து வேறுபாடுகளுக்கான காரணங்கள் பல. அவற்றை மேல்வரும் மூன்று அடிப்படைகளில் நின்று நோக்கலாம்:

*1. மொழியுடன் சம்பந்தப்பட்ட காரணங்கள்.*

பல்வேறு வித்தியாசமான பொருள்களைத் தரக் கூடிய சொற்கள் சட்ட வசனங்களில் இடம் பெற முடியும். சில வேளைகளில் ஒரு சொல் நேரிடையாகவும் சிலேடையாகவும் இருவகையில் பிரயோகிக்கப்படுகின்றது. அவ்வேளை குறித்த சட்ட வசனத்தில் அந்த சொல் எவ்வகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்ற கருத்து வேறுபாடு இமாம்கள் மத்தியில் எழுகின்றது. இதற்கிடையில் சட்ட வசனங்களில் சிலேடை இடம் பெற முடியுமா என்பதே பிரச்சினைக்குரியதாய் விட்டது. இமாம் இஸ்பிராயீனி முதலான பெரும்பான்மையினர் முடியும் என்றனர்; இப்னு தைமிய்யா முதலான வெகு சிலர் முடியாது என்றனர்.

அது போல் ஏவல் மொழி வடிவம், விலக்கல் மொழி வடிவம் போன்றவற்றின் பிரயோகம் குறித்தும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. 'செய்' என்ற மொழி வடிவம் ஏவலையும் 'செய்யாதே' என்பது விலக்கலையும் குறிக்கும் என்பது யாவரும் அறிந்ததே. வரையறுக்கப்படாத ஏவல்கள் அனைத்தும், அவை 'கட்டாயமாக செய்யப்பட வேண்டியவை' என்ற கருத்தைக் குறிக்கின்றன. அது போலவே வரையறுக்கப்படாத விலக்கல்கள் அனைத்தும், அவை 'கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டியவை' என்ற கருத்தைக் குறிக்கின்றன. இது தான் இரண்டிற்குமான நேரிடைப் பிரயோகமாகும். சில வேளைகளில் இந்த நேரிடைக் கருத்துக்கு மாற்றமான கருத்திலும் இவை பயன்படுகின்றன.

சில சமயங்களில் ஏவல்கள் 'கட்டாயமானதல்ல' என்ற கருத்திலும் அல்லது 'வழிகாட்டும்' நோக்கிலும் அல்லது 'எச்சரிக்கும்' நோக்கிலும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். அவ்வாறே விலக்கல்களும் கட்டாயமாகத் தவிர்ந்து கொள்தல் என்ற பொருளுக்கு மாற்றமான பிரயோகங்களிலும் பயன்பட்டுள்ளன. உதாரணமாக, 'வெறுப்புக்குரியது' அல்லது 'இழிவாகக் காணுதல்' அல்லது 'தவிர்த்தல் நல்லது' போலப் பலவாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏவல் மொழி வழக்கும், விலக்கல் மொழி வழக்கும் கட்டளையாகவன்றி ஒரு செய்தியைக் குறிப்பிடுவதற்காக மாத்திரம் பயன்பட்டுள்ளமையையும் காணலாம். இவை அனைத்தும் இமாம்கள் மத்தியிலான கருத்து வேறுபாடுகளுக்குக் காலாய் அமைந்துள்ளன.

*2. ஹதீஸ்களுடன் சம்பந்தப்பட்ட காரணங்கள்:*

ஏதேனும் ஒரு விவகாரம் குறித்து ஒரு முஜ்தஹிதுக்குக் குறித்ததொரு ஹதீஸ் கிடைக்காது போயிருக்கும்; பிறிதொருவருக்கு அது கிடைத்திருக்கும். இந்நிலையில் அவ்விவகாரம் தொடர்பில் இருவரது கருத்துகளும் வித்தியாசப் படும். சில வேளை ஒருவர் ஹதீஸ் கிடைத்தாலும்

அதனை ஆதாரமாகக் கொள்ள இயலாத ஏதேனும் ஒரு தடைக் காரணி இருப்பதை அடையாளம் கண்டு அதனைப் பயன்படுத்தாமல் விட்டு விடுவார். வேறொருவர் அந்தக் காரணியைத் தடையாகக் கருதாது ஹதீஸை ஆதாரமாகக் கொள்வார். அது போலவே குறித்த ஒரு ஹதீஸ் குறித்து நிற்கும் கருத்து என்ன என்பதில் இமாம்கள் மத்தியில் எழும் வேறுபட்ட நிலைப்பாடுகள் காரணமாக வேறுபட்ட பத்வாக்கள் தோற்றுகின்றன.

சில சமயம் ஒரு முஜ்தஹித் ஒரு ஹதீஸை ஸஹீஹானது எனக் கருதினாலும் அந்த ஹதீஸின் கருத்துடன் முரண்படக் கூடிய, அதனை விடவும் பலமான வேறு ஓர் ஆதாரத்தைக் கண்டு கொள்வதால் பலமானதை முற்படுத்துவார். சில வேளைகளில் எது பலமானது என இனம் காண முடியாது போகும் போது தீர்ப்புகள் ஏதும் சொல்லாதுவிடுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. ஒருவர் குறித்ததொரு ஹதீஸின் சட்டத்தை மாற்றக் கூடிய மற்றொரு ஹதீஸ் இருக்கிறது எனக் காண முடியும். அல்லது அதனை வரையறுக்கக் கூடிய ஒரு ஹதீஸைக் கண்டு கொள்ள முடியும். மற்றொருவர் இவை எதனையும் கண்டு கொள்ளாத போது ஒவ்வொருவரதும் பத்வாக்கள் வேறுபட்டு அமைவது தவிர்க்க இயலாதது.

3. சட்ட அடிப்படைகள், சட்டப் பெறுகை விதிகளுடன் சம்பந்தப்பட்ட காரணங்கள்

உஸூலுல் பிக்ஹை ஒரு கலையாக வகைப்படுத்தினால் இவ்வாறு கூறலாம்; பிக்ஹுக்குரிய பொதுவான ஆதாரங்கள் எவை? அவற்றைப் பிரயோகிப்பது எவ்வாறு? அவற்றைப் பிரயோகிப்பவரின் தரம் யாது? என்பவற்றை அறிந்து கொள்வதாகும். ஆக, உஸூலுல் பிக்ஹ் கலை என்பது இஜ்திஹாத் செயற்பாட்டை ஒழுங்கமைக்கின்றது. சட்டம் ஒன்று எவ்வாறு பெறப்பட வேண்டும் என்பதற்கு இமாம்கள் விதியாக்கிய சில விதிகளையும் வரையறைகளையும் தெளிவாக்குகின்றது. எனவே முஜ்தஹிதுகள் முதலில் சட்டப் பெறுகைக்கான தமது ஆதாங்கள் எவை என்பதை வரையறை செய்வார்கள்; பின்னர் அவை ஆதாரமாகக் கொள்ளத் தக்கன என்பதை நிறுவுவார்கள்; அடுத்து, அந்த ஒவ்வோர் ஆதாரத்திலிருந்தும் சட்டம் ஒன்றைப் பெறுகின்ற பொழுது தடையாக அமையக் கூடிய காரணிகளைத் தெளிவுபடுத்துவார்கள்; ஓர் ஆதாரத்தைப் பயன்படுத்தி சட்டம் ஒன்றை அடைந்து கொள்வதற்கான ஒவ்வோர் எட்டையும் விளக்குவார்கள். மேற்கண்ட விதிகள், வரையறைகளில் ஒவ்வொரு முஜ்தஹிதுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆக, இவற்றின் அடிப்படையில் அவர்களது சட்ட மத்ஹபுகளும் வேறுபடுவது தவிர்க்கக் கூடியதல்ல.

உதாரணமாக, ஒரு ஸஹாபியுடைய கூற்றை ஆதாரமாகக் கொள்ளல், மஸ்லஹா முர்ஸலா எனும் வரையறுக்கப்படாத நலனை ஆதாரமாகக்

கொள்தல் போன்றவற்றில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ‘கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட ஆதாரங்கள்’ என உஸூலுல் பிக்ஹ் கலையினுள் பிரபல்யமான ஒரு பிரயோகம் இருக்கின்றது. அதனுள்ளே ஸத்துத் தரீஆ எனும் காரணங்களைத் தடுத்தல், இஸ்திஹ்ஸான் எனும் கியாஸை விடவும் சிறந்த நியாயத்தைக் கண்டு கொள்தல், பேணுதலானதைக் கடைப்பிடித்தல், இலகுவானதைக் கடைப்பிடித்தல், பாரமானதைக் கடைப்பிடித்தல், வழக்காறு போன்ற பலவற்றை இணைத்துக் கொள்ளலாம். அது போல் ஒரு சட்ட வசனம் குறித்துக் காட்டும் பொருளைத் தீர்மானிக்கும் விடயத்திலும் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன.

## ஐந்தாவது: இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாட்டுக்கான சில உதாரணங்களும் ஒழுக்கங்களும்

இஜ்திஹாதுக்குரிய அதிகமான விவகாரங்களில் ஸஹாபாக்கள், தாபிஈன்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் போலவே இமாம்கள் மத்தியிலும் பல நிகழ்ந்திருக்கின்றன. இங்கு ஒவ்வொருவரும் அல்லாஹ்வுடைய திருப்தியை எதிர்பார்த்து, சத்தியத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே தமது முழு முயற்சியையும் செலவு செய்திருக்கின்றார்கள். இதனால் தான் எல்லாக் காலப் பகுதியிலும் முஜ்தஹிதுகளுடைய பத்வாக்களை அறிஞர்கள் பொதுவாகவே ஏற்றுக் கொள்வார்கள். அந்த முஜ்தஹிதுகள் தகுதியானவர்களாகக் காணப்படுதல் மட்டுமே போதுமானது. அவர்களது முடிவுகள் சரியாக அமைகின்ற போது ஏற்பார்கள்; தவறாக அமையின் அவர்களுக்காக இஸ்திஹ்பார் செய்வார்கள். அனைவர் மீதும் நல்லெண்ணமே வைப்பார்கள். நீதிபதிகளும் தேவை ஏற்படுகின்ற பொழுது தமது மத்ஹபுக்கு வெளியில் உள்ள கருத்துகளையும் எவ்வித சங்கடமும் இன்றிப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் தமது தெரிவுகளை முன்வைக்கும் போது ‘இது பேணுதலானது’, ‘இது சிறந்தது’,’இவ்வாறு நடப்பதே பொருத்தமானது’, ‘இதனை நாம் விரும்பவில்லை’, ‘இதனை நான் ஏற்கவில்லை’ போன்ற பண்பாடான சொற்களையே பயன்படுத்துவார்கள். பிறரைக் குறை சொல்லும் வாசகங்களைக் காண்பது அரிது.

ஸஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்களில் பிஸ்மில் சொல்பவர்களும் இருந்திருக்கின்றார்கள்; சொல்லாதோரும் இருந்திருக்கின்றார்கள். சிலர் அதனைச் சத்தமாக ஓதினர்; மற்றும் சிலர் மெதுவாக ஓதினர். சிலர் ஸுபஹ் தொழுகையில் குனூத் ஓதினர்; சிலர் ஓதவில்லை. மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறுதல், வாந்தியெடுத்தல், இரத்தம் குத்தியெடுத்தல் போன்றன காரணமாக வுழூ முறிவடைவதாக சில இமாம்கள் கருதினர்;

சிலர் அவ்வாறு கருதவில்லை. சிலர் பெண்களைத் தொடுவதால் வுழூ முறியும் என்றனர்; சிலர் முறியாது என்றனர். இத்தகு வேறுபாடுகள் எல்லாம் ஒருவர் பின் ஒருவர் நின்று தொழுவதைத் தடுக்கவில்லை. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலின் கருத்துப்படி மூக்கிலிருந்து இரத்தம் வெளி வருதல், இரத்தம் குத்தியெடுத்தல் போன்றவற்றின் காரணமாக வுழூ முறிந்துவிடும். தொழுகை நடாத்தும் ஒருவர் இரத்தம் வெளியேறிய பின்னர் வுழூ செய்யாமல் தொழுகை நடாத்த வந்தால் அவருக்குப் பின்னால் இருந்து தொழலாமா? என இமாம் ஹன்பலிடம் வினவிய போது, இமாம் மாலிக், ஸஈத் இப்னு முஸய்யப் போன்றோரின் பின்னால் எப்படித் தொழாமல் இருக்க முடியும்? எனப் பதில் தந்தார் அவர்.

ஒரு தடவை இமாம் ஷாபிஈ, இமாம் அபூ ஹனீபாவின் கப்ருக்கு அருகாமையில் ஸுப்ஹு தொழுகை நடாத்தினார். அதில் அவர் குனூத் ஓதவில்லை. அவரது கருத்துப்படி ஸுப்ஹில் குனூத் ஓதுவது கட்டாயமான ஸுன்னாவாகும். இது பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது இமாம் ஷாபிஈ கூறினார்: 'இமாம் அபூ ஹனீபாவின் சந்நிதானத்தில் நான் அவருக்கு முரண்படலாமா?'.. மற்றொரு சமயம் இமாம் ஷாபிஈ, 'சில சமயம் நாம் ஈராக் வாசிகளின் மத்ஹபுக்கு இறங்கி வருவோம்' என்றார்.

கலீபா அபூ ஜஃபர் அல்-மன்ஸூர், மக்கள் அனைவரையும் இமாம் மாலிக்கின் மத்ஹபைக் கடைப்பிடிக்கும்படி செய்ய முனைந்தார். அதனை மறுத்தவராய் இமாம் மாலிக் கூறினார்: 'அவ்வாறு செய்யாதீர்கள் அமீருல் முஃமினீனே! மக்களிடம் ஏற்கனவே பல கருத்துகள் வந்து சேர்ந்துள்ளன; பல ஹதீஸ்களை அறிந்துள்ளனர். ஒவ்வொரு சமூகத்தாரும் அவர்களிடத்தில் முதலில் வந்தது எதுவோ அதனைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். மக்களிடத்தில் உள்ள பல்வேறு கருத்துகளில் அதுவும் ஒன்று. ஒவ்வொரு பிரதேசத்தவரும் தாம் தெரிவு செய்துள்ள கருத்தைப் பின்பற்ற விட்டு விடுங்கள்.'

இமாம்கள் மத்தியிலான அறிவியல் கருத்தாடல்கள், வாதப் பிரதிவாதங்கள் ஆகியன மிக்க ஒழுக்கத்துடன் நடைபெற்றுள்ளமையை வரலாற்று ஏடுகள் நிறையவே பதிவு செய்துள்ளன. இஸ்லாமிய உலகில் தக்லீத் நடைமுறை பரவத் தொடங்கி, தொடர்ந்து வந்த வெறியுணர்வுகள், அறிஞர்களின் நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கருத்து வேறுபாட்டு ஒழுக்கம் தடம் மாறிப் போய் விட்டது. அறிஞர்கள் மத்தியில் அறிவு குறித்தே ஐயங்கள் எழலாயின.

கருத்து வேறுபாட்டுக்கான சிறந்த உதாரணம், எகிப்தின் சட்டவியல் அறிஞரான இமாம் லைஸ் இப்னு ஸஅத், இமாம் மாலிக்குக்கு எழுதிய பிரபலமான கடிதங்களாகும். இமாம் மாலிக்குடைய கருத்துகளில் தனக்கு உடன்பாடில்லாத விவகாரங்களை மிக்க ஒழுக்கத்துடன்

கௌரவமான மொழி நடையில் விளக்குவார் அவர். 'உங்கள் பிரதேச மக்களின் நடைமுறையில் இருக்கின்ற பலவற்றுக்கு மாற்றமாக நான் பத்வா கொடுத்திருப்பதாக உங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கின்றது. நான் வழங்குகின்ற பத்வாக்களின் மீதே மக்களது செயற்பாடுகள் அமைகின்றன என்ற வகையில் அதனையிட்டு நான் பயந்து கொள்ள வேண்டியிருக்கின்றது என்பது உண்மை. அல்-குர்ஆன் இறங்கிய பூமி, ஹிஜ்ரத் மேற்கொள்ளப்பட்ட பூமி என்றவகையில் இயல்பாகவே மக்கள் மதீனா வாசிகளைப் பின்பற்றுவார்கள். இது குறித்து நீங்கள் எழுதியிருப்பதும் உண்மை. இவ்விடயத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் இடத்தில் தான் நானும் இருக்கின்றேன். அறிவு, ஞானம் அளிக்கப் பெற்றவர்களுள் முறைபிறழ்ந்த, எதிர் மாறான தீர்வுகளை வெறுப்பவரோ, மதீனாவின் பண்டைய அறிஞர்களுக்குப் பெரு முக்கியத்துவம் அளிப்பவரோ, ஏகமனதானதாக அமைந்த அவர்களது தீர்வுகளை எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக் கொள்பவரோ.. என்னிலும் மேலாக யாரும் இரார். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.'

தொடர்ந்தும் இமாம் லைஸ் இப்னு ஸஅத், தனக்கும் இமாம் மாலிக்குக்கும் இடையில் மதீன மக்களின் வழக்கங்களுக்கான அதிகார பூர்வ தன்மை குறித்து நிலவும் கருத்து வேறுபாடு பற்றிப் பேசுகின்றார். தாபிஈன்கள் கூட பல விடயங்களில் முரண்பட்டிருக்கின்றனர் என்பதையும் தெளிவுபடுத்திக் கடிதத்தை நிறைவு செய்கின்றார்: 'அல்லாஹ் உங்களுக்கு சித்தியையும் நீண்ட வாழ்வையும் அருள் செய்வானாக! அதன் மூலம் மக்கள் எவ்வளவோ நன்மைகளை ஈட்டிக் கொள்ளலாம். உங்கள் இழப்பின் மூலம் அவர்கள் பெரும் நஷ்டவாளர்கள் ஆகி விடுவார்கள் என நான் அஞ்சுகின்றேன். நாங்கள் எவ்வளவு தான் சேய்மைப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தாலும் உங்கள் மீது நான் கொண்டுள்ள நேசத்தின் நெருக்கம் குறித்து உறுதி கூற விரும்புகின்றேன். இது தான் உங்களைக் குறித்து என் மனதில் உள்ள மேலான கௌரவம்.'

இந்த உம்மத்தின் முன்னைய அறிஞர்களின் பண்பாடுகள், பிறரைக் குறை சொல்லாமை என்பதுடன் மாத்திரம் சுருங்கி விடவில்லை. அந்தப் பரம்பரையில் பரவலாகக் காணப்பட்ட ஒரு பண்பாடு என்னவென்றால், மிகவும் நம்பகமான இடத்திலிருந்தே அறிவைப் பெறுவார்கள்; தமக்குத் தெரியாத ஒரு விடயத்தில் தலையிட மாட்டார்கள். இமாம் மாலிக் கூறுவார்: 'இந்த அறிவு என்பது மார்க்கம். நீங்கள் யாரிடமிருந்து உங்கள் அறிவைப் பெற்றுக் கொள்கின்றீர்கள் என்பது குறித்து எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பள்ளிவாசலைச் சுட்டிக் காட்டி 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த சுவர்களின் மத்தியிலிருந்து கூறினார்கள்..' எனக் கூறும் ஏராளமானோரை நான் சந்தித்துள்ளேன்.

அவர்கள் கூறியன எதனையும் நான் நம்பிக்கை கொண்டதில்லை. அவர்களிடம் எமது பொதுத் திறைசேரி ஒப்படைக்கப்பட்டால் நிச்சயம் அவர்கள் மிக்க நேர்மையாக நடந்து கொள்வார்கள். ஆனால் அறிவு பூர்வ நேர்மையைப் பொறுத்து அவர்கள் எமது எதிர்பார்க்கைக்கு இயைய நடந்து கொள்ள மாட்டார்கள்.' கூத் எனும் நூலாசிரியர் கூறுகின்றார்: 'அப்த்-அர்-ரஹ்மான் அபீ லைலா கூறுவார்: நபிகளாரின் பள்ளிவாசலில் அன்னாரின் தோழர்கள் நூற்றியிருபது பேரை நான் அறிந்திருந்தேன். அவர்கள் யாரிடமும் ஒரு ஹதீஸ் குறித்து அல்லது ஏதேனும் ஒரு பிரச்சினைக்கான தீர்வு குறித்து வினவப்பட்டால், தம்மைத் தவிர்த்து வேறு யாரேனும் ஒரு தோழர் அதற்குப் பதில் அளிக்க மாட்டாரா? என்று தான் அவர் விரும்புவார்.'

இமாம் மாலிக் அவர்களிடத்தில் நாற்பத்தெட்டு விடயங்கள் குறித்து வினவப்படடது. அதில் முப்பத்திரண்டு வினாக்களுக்கு அவரது பதிலாக அமைந்தது: 'நான் அறிய மாட்டேன்.'

இந்த இடத்தில் பகுத்தறிவுப் பார்வை கொண்ட இமாம் அபூ ஹனீபா குறித்து, வாக்கிய வாதப் பார்வை கொண்ட அறிஞர்கள் சிலரது கருத்துகளைக் காண்பது பொருத்தம். ஹதீஸ் துறையில் அமீருல் மு.'.மினீன் எனக் கருதப்பட்ட இமாம் ஷு'.பா இப்னு அல்-ஹஜ்ஜாஜ் அவர்களுக்கும் இமாம் அபூ ஹனீபாவுக்கும் இடையில் நெருங்கிய உறவும் கடிதப் பரிமாற்றமும் இருந்தன. அவர் இமாம் அபூ ஹனீபாவை 'ஸிகத்' எனும் நம்பகமானவராகக் கருதினார். இமாம் அபூ ஹனீபாவின் மரணச் செய்தி எட்டிய வேளை அவர் கூறினார்: 'கூபாவின் நியாயவியல் அனைத்தும் அன்னாரோடே போய் விட்டன. அல்லாஹ் தன் கருணையை அவர் மீதும் எம் மீதும் சொரிவானாக!' இமாம் யஹ்யா இப்னு ஸஈத் அல்-கத்தானிடம் இமாம் அபூ ஹனீபா குறித்து வினவிய வேளை அவர் கூறினார்: 'இறைவனை அஞ்சியவராக, அவருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் அருளிய அறிவினைப் போற்றி, அதனையே சிபாரிசு செய்வார் அவர். அவரது வாக்குகள் ஏதும் தேர்ந்து கொள்ளப்படக் கூடியது எனக் கண்ட போதெல்லாம் அதனையே நான் ஏற்றுக் கொள்வேன்.' இவ்வாறு தான் கருத்து வேறுபாடுகள் என்பது அடுத்த மனிதரிடத்தில் உள்ள நல்ல கருத்தை ஏற்பதற்குத் தடையாக அமையவில்லை.

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் கூறுவார்: 'என்னிடத்தில் ஒரு கேள்வி கேட்கப்பட்ட அதற்கான ஹதீஸ் ஏதும் கிடைக்கவில்லையாயின் நான், இமாம் ஷாபிஈ கூறுகின்றார் என அவரது கருத்தைக் கூறுவேன். ஏனெனில் அவர் குறைஷி குலத்து அறிஞர்.' இமாம் ஷாபிஈ அவர்களும் இமாம் அஹ்மத் அவர்களது மாணவர் என்பதால் அன்னாரின் சிறப்பையும் ஹதீஸ் துறை அறிவையும் ஏற்பதில் பின் நிற்கவில்லை. அவர் இமாம்

அஹ்மதைப் பார்த்துக் கூறுவார்: 'நீங்கள் என்னை விடவும் ஹதீஸ்களையும் அறிவிப்பாளர்களையும் நன்கு அறிந்தவர்கள். ஒரு ஹதீஸ் ஸஹீஹானது என்றிருந்தால் அதனை எனக்கு அறியத் தாருங்கள். ஹதீஸ் ஸஹீஹாக இருப்பின் அது கூபா வாசியிடமிருந்தாலும் ஷாம் வாசியிடமிருந்தாலும் பஸரா வாசியிடமிருந்தாலும் அதனைப் பெற்றுக் கொள்ள நான் செல்வேன்.'

## ஆறாவது: பிற்பட்ட நூற்றாண்டுகளில் தோன்றிய கருத்து வேறுபாடு

நான்காம் நூற்றாண்டின் முடிவுடன் இஜ்திஹாதும் நின்று விட்டது; தக்லீத் பரவலடையத் தொடங்கியது. ஒரு மத்ஹபில் மாத்திரம் நின்று பத்வா சொல்லும் நிலை அல்லது, ஒரு மத்ஹபுக்கு உள்ளே மாத்திரம் சுருங்கிவிடும் நிலை முதல் இரண்டு நூற்றாண்டுகளில் காணப்படவில்லை. மூன்றாம் நூற்றாண்டுக் காலத்தில் இஜ்திஹாத் தான் பரவலாகக் காணப்பட்டது. சில வேளைகளில் சில அறிஞர்கள், முன்னைய அறிஞர்கள் முன்வைத்த விதிகள், அடிப்படைகளைத் தழுவிச் செயற்பட்டார்கள். என்றாலும் அவர்கள் முன்னையவர்களை தக்லீத் செய்யவோ அவர்களது கருத்துகளுடன் மாத்திரம் சுருங்கி விடவோ இல்லை.

நான்காம் நூற்றாண்டுக் காலத்தில் அறிஞர்களின் ஹதீஸ் கலை ஈடுபாடு அதிகரித்தது. குறித்த ஒரு விவகாரம் பற்றிய ஆய்வில் முதலில் நபிகளாரின் ஹதீஸ்களைத் தேடினார்கள். அடுத்து ஸஹாபாக்களதும் தாபிஈன்களதும் அறிவிப்புகளைத் தேடினார்கள். வித்தியாசமான அறிவிப்புகள் காணப்பெற்று அவற்றுள் ஒன்றைப் பலமானதாகக் காண இயலாதவிடத்து, முன்னைய இமாம்களது கூற்றுகளுக்குச் சென்றார்கள். அங்கும் பல கூற்றுகள் காணப் படும் நிலையில் மிக ஆதாரபூர்வமானதைத் தேர்ந்து கொள்வார்கள். அவை மதீன வாசிகளது என்றோ கூபா வாசிகளது என்றோ வேறுபடுத்திப் பார்க்க மாட்டார்கள்.

முன்னைய இமாம்களின் அடிப்படைகளையும் விதிகளையும் தழுவி செயற்படும் ஒருவர், அன்னவர்கள் தெளிவாகப் பேசாத ஒரு விவகாரத்தில் குறித்த மத்ஹபுக்கு உள்ளிருந்தே இஜ்திஹாத் செய்வார். கிட்டும் முடிவை குறித்த மத்ஹபுடனேயே சம்பந்தப்படுத்துவார். இதன் காரணமாகவே அவர் ஷாபிஈ மத்ஹபுக்குரியவர்; ஹனபி மத்ஹபுக்குரியவர் என அடையாளம் காணப்பட்டார். பிற்பட்ட காலங்களில் நிகழ்ந்தது போல் தனியொரு மத்ஹபை மாத்திரம் பின்பற்றும் நிலை காணப்படுவில்லை. இக்காலப் பகுதியின் நீதிபதியாகச் செயற்படுபவர் முஜ்தஹிதாகவே காணப்பட்டார். ஓர் அறிஞர் முஜ்தஹிதாக இருந்தால் மாத்திரமே பகீஹ் என வழங்கப் பெற்றார்.

**நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர்**

இக்காலப் பகுதியில் முன்னூகித்த பிக்ஹும் கோட்பாட்டு வாதங்களும் செல்வாக்குப் பதித்திருந்தன. இவற்றிற்கும் மக்கள் பிரச்சினைகளுக்கும் சம்பந்தம் இருக்கவில்லை. உஸூலுல் பிக்ஹ் எனும் சட்ட அடிப்படைகளிலும் கற்பனைக் கோட்பாடுகள் உள் நுழைந்தன. அவை வெறுமனே வாதாட்டங்களும் தர்க்கங்களும் பிரசவித்த விளைவுகளாகவே காணப்பட்டன. இதற்கான பிரதான காரணம் குலபாஉர் ராஷிதூன்களின் பின்னர், சிந்தனைத் தலைமைத்துவத்துக்கும் அரசியல் தலைமைத்துவத்துக்கும் இடையில் ஏற்பட்ட இடை வெளியாகும். இதனால் ஒரு புறம் அரசியல் அதிகாரத்துடன் சம்பந்தப்பட்ட பரப்பில் இஸ்லாமிய பிக்ஹ், நடைமுறையை விட்டும் வெகு தொலைவில் சென்று விட்டது. மற்றொரு புறம் நடைமுறையில் இருக்கின்ற அனைத்தையுமே சரி கண்டு, ஷரீஆவின் மகாஸித்களுக்கே முரண்பட்டுச் செல்லும் நிலை உருப்பெற்றது. ஒரு புறம் சட்டப் பெறுகையில் கவனக் குறைவு ஏற்பட, மறுபுறம் சிலர் இறுக்கமான அணுகுமுறையைக் கையாண்டனர். இஸ்லாத்துக்குப் பணி செய்வதாக எண்ணிக் கொண்டு மிகவும் கடினமான சட்டங்களை வெளியிட்டனர். இதனால் பத்வா உலகம் பாரிய குழப்பங்களுக்குள்ளானது.

இந்தப் பிரச்சினையிலிருந்து வெளி வருவதற்கான வழிமுறைகள் பற்றி உம்மத்தின் சீர் திருத்த அறிஞர்கள் ஆலோசனை நடாத்தினர். முன்னைய அறிஞர்களது கருத்துகளை நோக்கி மீள்வதைத் தவிர -அதாவது அவர்களைத் தக்லீத் செய்வதைத் தவிர- அவ்வறிஞர்களால் வேறு தீர்வினைக் காண இயலவில்லை. மக்கள் நீதிபதிகளிலும் நம்பிக்கை அற்றுப் போயினர். அவர்கள் ஆட்சியாளர்க்குச் சார்பானவர்களாகவும் லௌகீக லாபங்களை அதிகமதிகம் ஆசை வைத்ததாலும் தீர்ப்புகள் பலவற்றில் அநியாயங்கள் நிகழ்ந்தன. ஆகவே, மக்கள் நான்கு இமாம்களில் ஒருவரது தீர்ப்புடன் உடன்பட்டு வரும் போது மாத்திரமே நீதிபதிகளின் தீாப்பில் நம்பிக்கை வைத்தனர்.

இமாமுல் ஹரமைன் (மறைவு ஹி. 478), குறித்த ஒரு ஸஹாபியை தக்லீத் செய்வது கூடாது என்றும் மத்ஹபுகளில் ஒன்றைத் தான் பின்பற்ற வேண்டும் என்றும் கூறுவார். ஏனெனில் முன்னைய அறிஞர்களின் கருத்துகளையும் உள்வாங்கி மத்ஹபுடைய இமாம்கள் அனைத்தையும் முறையாகத் தொகுத்திருக்கின்றார்கள். ஆகவே பொது மக்கள் ஏதேனும் ஒரு மத்ஹபைப் பின்பற்ற வேண்டும். அதுவே இஜ்மாவான நிலைப்பாடு என்பார் அவர். அன்னவரின் கருத்தை மையப்படுத்தி இமாம் இப்னு ஸலாஹ் (மறைவு ஹி. 642), நான்கு இமாம்களை தக்லீத் செய்வது வாஜிப் என்றார். அவர்களது மத்ஹபுகள் செம்மைப்படுத்தப்பட்டு முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன என்பது அவரது வாதம். இக்கருத்தை

இவரிடம் இருந்து பெற்று பிற்பட்ட காலத்தவர்கள் தொடர்ந்து பேசி வந்தனர். விளைவாக வீழ்ச்சி தொடர்ந்தது; கருத்து வேறுபாடுகள் ஆழமாய் வேரூன்றின; பின்னர் முழுமையான தக்லீத் பாரம்பர்யம் தோற்றி சிந்தனைத் தேக்கத்துக்கு வழியமைக்கப்பட்டது; இஜ்திஹாத் மறைந்து அறியாமை பரவலானது.

மக்களது பார்வையில் அறிஞர் என்பவர் முன்னைய அறிஞர்களது சில கூற்றுகளை அவற்றின் பலம், பலவீனம் பாராது மனனமிட்டு வைத்திருப்பவர் என்ற அளவுக்கு மனோ நிலை மாறியது. ஹதீஸ் துறை அறிஞர் என்பவர் பலம், பலவீனம் என்ற வேறுபாடு இல்லாமல் சில ஹதீஸ்களை மனனம் செய்திருப்பவர் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. இத்தகு தேக்க நிலை, இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் இஸ்லாமிய நாகரிகத்தைச் சீரழித்து இஸ்லாமிய பூமிகளை ஆக்கிரமித்துக் கொள்ள வழியமைத்துக் கொடுத்தது. முஸ்லிம் உம்மத் இந்த நிலையில் இருக்க, ஐரோப்பிய எழுச்சி நிகழ்ந்த வேளை குறிப்பிடத் தக்க எந்த விழுமியத்தையும் கொண்டிராத ஒரு மக்கள் கூட்டமாகவே முஸ்லிம் சமூகத்தை அவர்கள் கண்டார்கள்.

அகீதா உறக்கத்திலும் சிந்தனைத் தேக்கத்திலும் இஜ்திஹாத் செயலிழந்தும், முரண்பாடுகளும் மோதல்களும் உம்மத்தைச் சிதைத்து வைத்திருந்த நிலையில் தான் ஏகாதிபத்தியர்கள் தமக்கான இடை வெளியைக் கண்டு கொண்டார்கள். ஆயுத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உள் நுழைய முன்னர் அவர்கள் சிந்தனா ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் உள் நுழைந்தார்கள்.

இஸ்லாமிய எழுச்சிக்கான எந்தவொரு முயற்சிக்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடிய அபாயம் எதுவெனின், கிளைகளையும் அடிப்படைகளையும் குழப்பிக் கொள்வதனாலும் மொத்த அடிப்படைகளையும் மகாஸித்களையும் மறந்து போவதனாலும் ஏற்படக் கூடிய கருத்துச் சிக்கல்களும் முரண்பாடுகளும் ஆகும். ஷரீஆவின் மொத்த அடிப்படைகளையும் மகாஸித்களையும் விதிகளையும் யார் சரிவர விளங்கிக் கொள்ளவில்லையோ அவரால் ஒருபோதும் கிளை விவகாரங்களை அடிப்படைகளின் ஒளியில் புரிந்து கொள்ள முடியாது. ஆக, கிளை விவகாரங்களுக்குரிய கருத்து வேறுபாட்டு அனுமதிப் பரப்பையும் புரிந்து கொள்ள முடியாது. எமது முன்னோரிடமிருந்து வாரிசாகப் பெற்றுள்ள கருத்து வேறுபாடுகளை, அவற்றின் பின்னணிகளைச் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றின் காரணங்களை அடையாளம் கண்டு ஒவ்வொன்றுக்கும் உரிய தீர்வுகளைக் காணாது விடின், எமது செயற்பாடுகளால் விரிசல்களே பெருகும்; உம்மத்தின் எழுச்சிக்கான எல்லா முயற்சிகளும் சிதைந்துவிடும்.

இந்த உம்மத் உலகளாவிய செய்தியுடன், வேத நூலின் இறைமையுடன், அருளும் எளிமையும் நிறைந்த ஷரீஆவுடன், இறுதி நுபுவ்வத்துடன் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உம்மத் தற்போது எதிர் கொண்டு வரும் அனைத்து சிந்தனைச் சிக்கல்கள், திரிபுகளில் இருந்து அதனை மீளவும் தூக்கி நிறுத்துவது மேற்கண்ட அடிப்படைகளின் மீது மாத்திரம் தான் சாத்தியப் படும். இவையல்லாத வேறு வழிகள், சிதைந்த உம்மத்தை மீள உயிர்ப்பிப்பதில் எந்தப் பயனையும் தர மாட்டா என்பது நிரூபணமாகி விட்டது.

எமது முதல் நூலின் பிரதான சிந்தனைகள் பற்றிய ஒரு குறிப்பே இது. இதன் மூலம் முன்னைய நூலுக்கும் தற்போதைய நூலுக்கும் இடையிலான தொடர்பைத் தெளிவாக்குவதே நோக்கம்.

## பகுதி இரண்டு

# முரண்பாடுகள் பற்றிய ஒழுக்க நெறிகளிலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி

### *1.* மனித இன ஒருமைப்பாடு

மனித இன ஒருமைப்பாட்டைப் பிரகடனம் செய்யும் வகையிலேயே நபியவர்கள் மீது குர்ஆன் இறங்கியது. அல்-குர்ஆன் கூறுகிறது:

يا أَيُّهَا النّاسُ اتَّقوا رَبَّكُمُ الَّذي خَلَقَكُم مِن نَفسٍ واحِدَةٍ وَخَلَقَ مِنها زَوجَها وَبَثَّ مِنهُما رِجالًا كَثيرًا وَنِساءً وَاتَّقُوا اللَّهَ الَّذي تَساءَلونَ بِهِ وَالأَرحامَ إِنَّ اللَّهَ كانَ عَلَيكُم رَقيبًا - النساء: ١

**“மனிதர்களே; உங்களுடைய இறைவனை நீங்கள் அஞ்சி நடந்து கொள்ளுங்கள். அவன் எத்தகையோனென்றால் ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை அவன் படைத்தான்; அதிலிருந்து அதனுடைய ஜோடியைப் படைத்து அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். (எனவே) அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; அவன் எத்தகையோனென்றால் அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (உங்களுக்கு வேண்டியவற்றைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். இன்னும் (இரத்தக் கலப்புடைய) சொந்தங்களையும் (பேணி ஆதரியுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் உங்களின் மீது கண்காணிப்பவனாக இருக்கின்றான்.” (நிஸா 4:1)**

மனித இனத்தின் மூலம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே. மண்ணிலிருந்து தான் அவர் படைக்கப்பட்டார். ஒருமைப்பாட்டுக்கான

தனிச் சிறப்புகள் அனைத்து மனிதர்களிலும் இருக்கின்றன. ஒரே மூலம் என்பதில் அவர்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். என்றாலும் நிறம், மொழி, விருப்புகள், அவாக்கள், நம்பிக்கைகள், இயல்புகள், கால - இட வேற்றுமைகள் முதலியனவற்றைப் பொறுத்து மனிதர்கள் மத்தியில் வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன. இவையனைத்தும் பன்முகத் தன்மையைக் குறிக்கும் வேறுபாடுகளன்றி எதிர் நிலை வேறுபாடுகள் அல்ல. பன்முகத் தன்மை ஒரு போதும் ஒருமைப்பாட்டை இல்லாது செய்யாது; மறுதலிக்கவும் மாட்டாது. அது ஒருமைப்பாட்டை உறுதி செய்வதாகவும் ஒருமைப்பாட்டின் தேவையை அதிகமாய் உணர்த்தக் கூடியதாகவுமே விளங்கும்.

வானங்கள், பூமி முதலிய இயற்கை உலகின் படைப்புகளில் எவ்வளவோ வேறுபாடுகள்! இதன் காரணமாகத் தான் மனித சிந்திப்புக்கான அழைப்பை இந்த படைப்புகளைச் சம்பந்தப்படுத்தி முன்வைக்கிறது அல்-குர்ஆன்:

إِنَّ فِي خَلقِ السَّماواتِ وَالأَرضِ وَاختِلافِ اللَّيلِ وَالنَّهارِ وَالفُلكِ الَّتي تَجري فِي البَحرِ بِما يَنفَعُ النّاسَ وَما أَنزَلَ اللَّهُ مِنَ السَّماءِ مِن ماءٍ فَأَحيا بِهِ الأَرضَ بَعدَ مَوتِها وَبَثَّ فيها مِن كُلِّ دابَّةٍ وَتَصريفِ الرِّياحِ وَالسَّحابِ المُسَخَّرِ بَينَ السَّماءِ وَالأَرضِ لَآياتٍ لِقَومٍ يَعقِلونَ - البقرة: ١٦٤

**“நிச்சயமாக வானங்களையும் பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும் இரவும் பகலும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதிலும் மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும் காற்றுகளை மாறி மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும் பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு (அல்லாஹ்வுடைய வல்லமையையும் கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன.” (பகரா 2:164)**

இன்னோர் இடத்தில்,

إِنَّ فِي خَلقِ السَّماواتِ وَالأَرضِ وَاختِلافِ اللَّيلِ وَالنَّهارِ لَآياتٍ لِأُولِي الأَلبابِ - آل عمران: ١٩٠

**“நிச்சயமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.” (ஆல இம்ரான் 3:190)**

மற்றுமோர் இடத்தில்,

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ أَنزَلَ مِنَ السَّماءِ ماءً فَأَخرَجنا بِهِ ثَمَراتٍ مُختَلِفًا أَلوانُها وَمِنَ الجِبالِ جُدَدٌ بيضٌ وَحُمرٌ مُختَلِفٌ أَلوانُها وَغَرابيبُ سودٌ وَمِنَ النّاسِ وَالدَّوابِّ وَالأَنعامِ مُختَلِفٌ أَلوانُهُ كَذٰلِكَ إِنَّما يَخشَى اللَّهَ مِن عِبادِهِ العُلَماءُ إِنَّ اللَّهَ عَزيزٌ غَفورٌ - فاطر: ٢٧ - ٢٨

**"நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்குவதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும் சிவந்ததும் தன் நிறங்கள் பற்பல விதமானவையான பாதைகளும் சுத்தக் கரிய நிறமுடையவும் உள்ளன. இவ்வாறே மனிதர்களிலும் ஊர்வனவற்றிலும் கால்நடைகளிலும் பல நிறங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் ஆலிம்கள் (அறிஞர்கள்) தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன்; மிக்க மன்னிப்பவன்." (பாதிர் 35:27–28)**

எனவும் கூறுகின்றது அல்-குர்ஆன்.

கருத்து வேறுபாட்டை நியாயப்படுத்தி, அதற்கு மேல் வரும் வாசகத்தை ஆதாரமாக முன்வைத்தவர்கள் உண்மையில் தவறு இழைத்திருக்கின்றனர்:

وَلَو شاءَ رَبُّكَ لَجَعَلَ النّاسَ أُمَّةً واحِدَةً وَلا يَزالونَ مُختَلِفينَ إِلّا مَن رَحِمَ رَبُّكَ وَلِذٰلِكَ خَلَقَهُم وَتَمَّت كَلِمَةُ رَبِّكَ لَأَملَأَنَّ جَهَنَّمَ مِنَ الجِنَّةِ وَالنّاسِ أَجمَعينَ - هود: ١١٨ - ١١٩

**"உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (அவன் அப்படி ஆக்கவில்லை.) எனவே அவர்கள் எப்போதும் பேதப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர, இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான். நிச்சயமாக நான் ஜின்கள், மனிதர்கள் ஆகிய யாவரைக் கொண்டும் நரகத்தை நிரப்புவேன் என்ற உம் இறைவனுடைய வாக்கும் பூர்த்தியாகிவிடும்." (ஹூத் 11: 118–119)**

இந்த வசனத்தில் 'அதற்காகவே அவர்களைப் படைத்திருக்கின்றான்' என்ற பகுதியில் வருகின்ற 'அதற்காகவே' எனும் சொல்லின் கருத்தை, இந்த வசனத்தின் முற்பகுதியில் பேசப்பட்டுள்ள 'உம்முடைய இறைவன் அருள் புரிந்தவரைத் தவிர' என்று பொருள் கொள்வதே மிகவும் சரியானது. ஏனெனில் அறபு இலக்கணப்படி 'அதற்காகவே' எனும் இடைச் சொல் வசனத்தில் அண்மித்த கருத்துடனேயே இணைக்கப்பட வேண்டும். அந்த வகையில் 'அதற்காகவே' என்பதை கருத்து வேறுபாடு கொள்வதற்காக

என்று பொருள் கொள்ள முடியாது. ஏனெனில் வசனத்தில் அது தொலைவில் உள்ளது. மாத்திரமன்றி மார்க்கத்தில் கருத்து வேறுபாடு கொள்வதை அல்லாஹு தஆலா தடை செய்துள்ளான்.

அல்-குர்ஆன் கூறுகிறது:

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا فِطرَتَ اللَّهِ الَّتي فَطَرَ النّاسَ عَلَيها لا تَبديلَ لِخَلقِ اللَّهِ ذٰلِكَ الدّينُ القَيِّمُ وَلٰكِنَّ أَكثَرَ النّاسِ لا يَعلَمونَ، مُنيبينَ إِلَيهِ وَاتَّقوهُ وَأَقيموا الصَّلاةَ وَلا تَكونوا مِنَ المُشرِكينَ، مِنَ الَّذينَ فَرَّقوا دينَهُم وَكانوا شِيَعًا كُلُّ حِزبٍ بِما لَدَيهِم فَرِحونَ

- الروم: ٣٠ - ٣٢

**"தூய மார்க்கத்தின் மீதே உம் முகத்தை முற்றிலும் திருப்பியவராய் நிலைப்படுத்துவீராக! மனிதர்களை எ(ந்த மார்க்கத்)தின் மீது இயற்கையாகப் படைத்தானோ அத்தகைய அல்லாஹ்வின் இயற்கையை(ப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்). அல்லாஹ்வின் படைப்புக்கு எவ்வித மாற்றமுமில்லை. அதுவே நேரான மார்க்கமாகும். ஆயினும் மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிய மாட்டார்கள். அவன் பக்கமே திரும்பியவர்களாக (சத்திய மார்க்கத்தில் நிலைத்திருங்கள்). இன்னும் அவனை அஞ்சுங்கள்; தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; இணை வைப்போரில் உள்ளவர்களாக நீங்கள் ஆகி விடாதீர்கள். தங்களுடைய மார்க்கத்தை (மனம் போல்) பிரித்து வைத்து பல பிரிவினர்களாகி விட்டார்களே. அத்தகையோரில் (உள்ளவர்களாக ஆகி விடாதீர்கள்; அவ்வாறு பிரிந்தவர்கள் உண்மையைப் புறக்கணித்து) ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடமுள்ளதைக் கொண்டு மகிழ்ச்சியடைபவர்களாக இருக்கின்றனர்." (ரூம் 30:30–32)**

ஆனால் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது மனங்களில் கருத்து வேறுபாடு அடிப்படையானது. அது ஒரு பௌதீக உண்மை; தவிர்க்க முடியாத ஒரு விதி; அதனை இல்லாது செய்தல் இயலாது என்ற சிந்தனையே ஆழப்பதிந்திருக்கின்றது. அதற்கு ஆதாரமாக மேல்வரும் குர்ஆன் வாசகத்தையும் முன்வைக்கின்றனர்:

كانَ النّاسُ أُمَّةً واحِدَةً فَبَعَثَ اللَّهُ النَّبِيّينَ مُبَشِّرينَ وَمُنذِرينَ وَأَنزَلَ مَعَهُمُ الكِتابَ بِالحَقِّ لِيَحكُمَ بَينَ النّاسِ فيمَا اختَلَفوا فيهِ وَمَا اختَلَفَ فيهِ إِلَّا الَّذينَ أوتوهُ مِن بَعدِ ما جاءَتهُمُ البَيِّناتُ بَغيًا بَينَهُم فَهَدَى اللَّهُ الَّذينَ آمَنوا لِمَا اختَلَفوا فيهِ مِنَ الحَقِّ بِإِذنِهِ وَاللَّهُ يَهدي مَن يَشاءُ إِلىٰ صِراطٍ مُستَقيمٍ - البقرة: ٢١٣

**"(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும் (தீயோருக்கு) அச்சமூட்டி**

**எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான். எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள் தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்து விட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர்வழி காட்டினான். இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான். (பகரா 2: 213)**

இந்த வாசகத்துக்கு தப்ஸீர் ஆசிரியர்கள் ஆச்சரியமான விளக்கங்களை அளித்துள்ளனர். உண்மையில் மனிதன் தான் விடயங்களைக் குழப்பிக் கொள்கின்றான். ஒற்றுமைக்கான வழிகளைப் பிரிவினைக்கான வழிகளாக மாற்றிவிடுகின்றான். அத்துமீறல், பொறாமை, காழ்ப்பு, பெருமை போன்ற வழி பிறழ்ந்த பண்புகள் காரணமாகவே மனிதன் தனக்கு நேர்வழிக்காகத் தரப்பட்ட வழிமுறைகளையும் தலை கீழாய் மாற்றி, முரண்பாட்டுக்கும் மோதலுக்குமான காரணமாக ஆக்கிக் கொள்கின்றான். ஆனால் அல்லாஹு தஆலாவோ பிரிவினையைக் கண்டனம் செய்கின்றான்:

إِنَّ الَّذينَ فَرَّقوا دينَهُم وَكانوا شِيَعًا لَستَ مِنهُم في شَيءٍ إِنَّما أَمرُهُم إِلَى اللَّهِ ثُمَّ يُنَبِّئُهُم بِما كانوا يَفعَلونَ - الأنعام: ١٥٩

**“நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் (நபியே!) உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே உள்ளது. அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான்.” (அன்ஆம் 6:159)**

இங்கு பிரிவினை கண்டிக்கப்படுவதோடு அதற்கும் நபியவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. பிரிவினை என்பது ஒரு பெரிய வழி பிறழ்வு என்பதனால் தான் நபியவர்கள் அதனை விட்டும் விலக்கி வைக்கப்படுகின்றார். குர்ஆன் கூறுகின்றது:

وَأَذانٌ مِنَ اللَّهِ وَرَسولِهِ إِلَى النّاسِ يَومَ الحَجِّ الأَكبَرِ أَنَّ اللَّهَ بَريءٌ مِنَ المُشرِكينَ وَرَسولُهُ فَإِن تُبتُم فَهُوَ خَيرٌ لَكُم وَإِن تَوَلَّيتُم فَاعلَموا أَنَّكُم غَيرُ مُعجِزِي اللَّهِ وَبَشِّرِ الَّذينَ كَفَروا بِعَذابٍ أَليمٍ - التوبه: ٣

**“அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் முஷ்ரிக்குகளுடன் (செய்திருந்த உடன்படிக்கையை) விட்டும் நிச்சயமாக விலகிக் கொண்டார்கள் என்பதை**

**ஹஜ்ஜுல் அக்பர் (மாபெரும் ஹஜ்ஜுடைய) நாளில் மனிதர்களுக்கு அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் வெளிப்படையாக அறிவிக்கின்றனர். எனவே நீங்கள் (இணை வைப்பதிலிருந்து மனந்திருந்தி) விலகிக் கொண்டால் அது உங்களுக்கே நலமாகும். நீங்கள் (சத்தியத்தை) புறக்கணித்து விட்டால் நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வைத் தோற்கடிக்க முடியாதவர்கள் என்பதை (உறுதியாக) அறிந்து கொள்ளுங்கள். (நபியே!) நிராகரிப்போருக்கு நோவினை தரும் வேதனை இருக்கிறது என்று நீர் நன்மாராயம் கூறுவீராக." (துவ்பா 9:03)**

எங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப் பட்டோர், அறிவுக் குறைபாடோ சிந்தனைப் பிறழ்வோ கொண்டவர்களல்லர். என்றாலும் அவர்களிடத்தில் வழி பிறழ்வு தோற்றியமைக்குக் காரணம், தாம் பெற்றுக் கொண்ட அறிவை அவர்கள் பிறர் மீது அத்து மீறவும் தம்மைத் தாம் உயர்த்திக் கொள்ளவுமே பயன்படுத்தியமையாகும். அல்-குர்ஆன் கூறுகிறது:

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الإِسلامُ وَمَا اختَلَفَ الَّذِينَ أُوتُوا الكِتابَ إِلّا مِن بَعدِ ما جاءَهُمُ العِلمُ بَغيًا بَينَهُم وَمَن يَكفُر بِآياتِ اللَّهِ فَإِنَّ اللَّهَ سَريعُ الحِسابِ - آل عمران: ١٩

**"நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக் கொள்ளப்பட்ட) மார்க்கமாகும். வேதம் கொடுக்கப்பட்டவர்கள் (இது தான் உண்மையான மார்க்கம் என்னும்) அறிவு அவர்களுக்குக் கிடைத்த பின்னரும் தம்மிடையேயுள்ள பொறாமையின் காரணமாக (இதற்கு) மாறுபட்டனர். எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தார்களோ, நிச்சயமாக அல்லாஹ் (அவர்களுடைய) கணக்கைத் துரிதமாக முடிப்பான்." (ஆல இம்ரான் 3:19)**

வேதத்திற்குப் பதிலாக நாம் வேதம் வழங்கப் பெற்றோரின் நோய்களையும் குறைபாடுகளையும் தான் வாரிசாகப் பெற்றுக் கொண்டுள்ளோமா? அறிவுக்குப் பகரமாக அத்துமீறலைத் தான் நாம் ஈட்டிக் கொண்டுள்ளோமா?

கருத்து முரண்பாடுகளும் அத்துமீறலும் மார்க்கத்தில் பிளவுகளை ஏற்படுத்துவதும் முன்னர் வேதம் வழங்கப் பெற்றோரிடம் காணக்கிட்டிய நோய்களாகும். அவர்களது அழிவுக்கும் அவர்களது மார்க்கங்கள் செல்லுபடியற்றனவாக மாற்றமுறுவதற்கும் இவையே காரணமாக அமைந்தன. தொடர்ந்து, வேதத்தைப் பெறுகின்ற சமூகத்தினர் படிப்பினை பெற வேண்டும் என்பதற்காகவே முன்னர் வேதம் வழங்கப் பெற்றோரின் வாழ்வியல் பாடங்கள் இன்னமும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கருத்து வேறுபாடுகளென்பது குர்ஆனிய வரையறைகளைப் பேணாத விடத்து தண்டனைக்கான ஒரு காரணியாக அமைந்துவிடும் என்பதாக அல்லாஹ் அறிவுறுத்துகின்றான்.

قُل هُوَ القادِرُ عَلى أَن يَبعَثَ عَلَيكُم عَذابًا مِن فَوقِكُم أَو مِن تَحتِ أَرجُلِكُم أَو يَلبِسَكُم شِيَعًا وَيُذيقَ بَعضَكُم بَأسَ بَعضٍ انظُر كَيفَ نُصَرِّفُ الآياتِ لَعَلَّهُم يَفقَهونَ -

الأنعام: ٦٥

**“(நபியே!) நீர் கூறும்: உங்கள் (தலைக்கு) மேலிருந்தோ அல்லது உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்குத் துன்பம் ஏற்படும் படி செய்யவும் அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி உங்களில் சிலர் சிலருடைய கொடுமையை அனுபவிக்கும்படி செய்யவும் அவன் ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான். அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக (நம்) வசனங்களை எவ்வாறு (பல வகைகளில் தெளிவாக்கி) விவரிக்கின்றோம் என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக.” (அன்ஆம் 6:65)**

மக்களை பிரிவினைகளுக்குள்ளாக்குவது மிக மோசமானதொரு பாவம். இது கணவனையும் மனைவியையும் பிரித்துவிடுகின்ற சூனியக்காரர்களது பாவத்தை ஒத்தது. அல்-குர்ஆன் கூறுகிறது:

وَاتَّبَعوا ما تَتلُو الشَّياطينُ عَلى مُلكِ سُلَيمانَ وَما كَفَرَ سُلَيمانُ وَلٰكِنَّ الشَّياطينَ كَفَروا يُعَلِّمونَ النّاسَ السِّحرَ وَما أُنزِلَ عَلَى المَلَكَينِ بِبابِلَ هاروتَ وَماروتَ وَما يُعَلِّمانِ مِن أَحَدٍ حَتّى يَقولا إِنَّما نَحنُ فِتنَةٌ فَلا تَكفُر فَيَتَعَلَّمونَ مِنهُما ما يُفَرِّقونَ بِهِ بَينَ المَرءِ وَزَوجِهِ وَما هُم بِضارّينَ بِهِ مِن أَحَدٍ إِلّا بِإِذنِ اللَّهِ وَيَتَعَلَّمونَ ما يَضُرُّهُم وَلا يَنفَعُهُم وَلَقَد عَلِموا لَمَنِ اشتَراهُ ما لَهُ فِي الآخِرَةِ مِن خَلاقٍ وَلَبِئسَ ما شَرَوا بِهِ أَنفُسَهُم لَو كانوا يَعلَمونَ -

البقرة: ١٠٢

**“அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்கு எதிராக ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள். ஆனால் ஸுலைமான் ஒரு போதும் நிராகரித்தவர் அல்லர்; ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள். அவர்கள் தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்னும் பாபில் (பாபிலோன் என்னும் ஊரில்) ஹாரூத், மாரூத் என்ற இரண்டு மலக்குகளுக்கு இறக்கப்பட்டதையும் (தவறான வழியில் பிரயோகிக்கக் கற்றுக் கொடுத்தார்கள்). ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும் நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம். (இதைக் கற்று) நீங்கள் நிராகரிக்கும் கா:.பிர்கள் ஆகி விடாதீர்கள் என்று சொல்லி எச்சரிக்காத வரையில், எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் கணவன் – மனைவியிடையே பிரிவை உண்டாக்கும் செயலை அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும் எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது. தங்களுக்குத் தீங்கிழைப்பதையும் எந்த வித நன்மையும் தராததையுமே கற்றுக் கொண்டார்கள். (சூனியத்தை)**

**விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்களுக்கு மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் ஆத்மாக்களை விற்றுப் பெற்றுக் கொண்டது கெட்டதாகும். இதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?" (பகரா 2:102)**

எனவே சமூகங்களுக்கு மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவோனின் நிலை எவ்வாறு இருக்கும்? இதனால் தான் கருத்து வேறுபாடு என்பது ஒரு பிரபஞ்ச விதி எனப் பலரும் அடிக்கடி சொல்வதை மிகப் பெரும் தவறு என்கிறோம். அல்-குர்ஆன் வசனங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாமையினால் பலர் இந்தத் தவறை இழைத்துள்ளனர். அது போல், "எமது உம்மத்தின் கருத்து வேறுபாடு ஓர் அருள்" எனச் சிலர் கூறும் ஹதீஸ், நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் எந்த அடிப்படையுமில்லாது இட்டுக் கட்டப்பட்டதாகும். கருத்து வேறுபாட்டை ஒரு பிரபஞ்ச விதியாக அல்லாஹு தஆலா அமைத்திருந்தால் நிச்சயமாக அவன் ஒருமைப்பாட்டை ஏவியிருக்க மாட்டான். அவ்வாறான ஏவுதல், மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றாக மாறிவிடும். அல்லாஹ் நீதியானவன்; அவன் மனிதனை அவனது சக்திக்கப்பால் நிர்ப்பந்திப்பதில்லை. ஆக நாம் மனத்துள் பதித்துக் கொள்ள வேண்டிய உண்மை என்னவெனில், கருத்து வேறுபாடு என்பது ஒரு பிரபஞ்ச விதியல்ல என்பதாகும். என்றாலும் எமது மொழி, நிறம் முதலியன வேறுபட்டிருப்பது அல்லாஹ்வின் அத்தாட்சியாகும். அது பன்முகத் தன்மை; அதன் மூலம் அல்லாஹ்வின் அருள்களை அறிந்து கொள்ள முடிகின்றது. மக்கள் மத்தியில் பரிச்சயமாகியிருக்கும் கருத்து வேறுபாடு அல்ல இது. இதுவோ உம்மத்தின் ஒருமைப்பாட்டையும் பிணைப்பையும் சிதைக்கக் கூடியது; அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் விட்டு இந்த உம்மத்தைத் திசை திருப்பக் கூடியது.

## 2. இறை வழிகாட்டலும் அதன் படிமுறையும்

மனித இனத்திற்கான இறை வழிகாட்டல் பல கட்டங்களாக அமைந்தது. 'தூய்மையானதைத் தேர்வு செய்தல்' என்பது தான் முதலாவது கட்டம். இது, மார்க்கத்தைக் கட்டியெழுப்புதல் என்ற அடுத்த கட்டத்துடன் இணைத்துப் பேசப்பட்டிருப்பதன் மூலம் ஓர் உண்மை புலனாகிறது. அதாவது, தூய்மையானதைத் தெரிவு செய்தல் என்பது ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி அதற்கான அடித்தளத்தை அமைக்கின்றது; ஒருமைப்பாடு என்ற அடிப்படையை அது இரத்துச் செய்வதில்லை.

தூய்மையானதைத் தேர்வு செய்வதில் இறை சக்தியும் அருளும் வெளிப்படுவது போல், சமூக ஒருமைப்பாட்டிலும் இறை சக்தியும் அருளும் வெளிப்படுகின்றன. தூய்மையானவர்களைத் தேர்வு செய்தல்

என்ற இந்தக் கட்டத்தில் அல்லாஹ் தான் விரும்பியவர்களைத் தேர்வு செய்கிறான்.

اللَّهُ يَصطَفي مِنَ المَلائِكَةِ رُسُلًا وَمِنَ النّاسِ إِنَّ اللَّهَ سَميعٌ بَصيرٌ - الحج: ٧٥

**"அல்லாஹ் மலக்குகளிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் தூதர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்! நிச்சயமாக அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியேற்பவன்; பார்ப்பவன்." (ஹஜ் 22:75)**

தூய்மையானதைத் தேர்வு செய்தல் என்ற கட்டம் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப் பெற்ற முழுமையானதோர் உலகளாவிய அழைப்புடன் நிறைவு பெற்றது. இந்த உலகளாவிய அழைப்பு இரண்டு அம்சங்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஒன்று மார்க்கத்தைக் கட்டியெழுப்புதல்; மற்றையது நபியவர்களுக்கு அருளப் பெற்ற இயற்கைத் தன்மையும் தாராளத் தன்மையுமுடைய மார்க்கம். அல்-குர்ஆன் கூறுகிறது:

وَجاهِدوا فِي اللَّهِ حَقَّ جِهادِهِ هُوَ اجتَباكُم وَما جَعَلَ عَلَيكُم فِي الدّينِ مِن حَرَجٍ مِلَّةَ أَبيكُم إِبراهيمَ هُوَ سَمّاكُمُ المُسلِمينَ مِن قَبلُ وَفي هذا لِيَكونَ الرَّسولُ شَهيدًا عَلَيكُم وَتَكونوا شُهَداءَ عَلَى النّاسِ فَأَقيموا الصَّلاةَ وَآتُوا الزَّكاةَ وَاعتَصِموا بِاللَّهِ هُوَ مَولاكُم فَنِعمَ المَولى وَنِعمَ النَّصيرُ - الحج: ٧٨

**"இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள். அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். இந்த தீனில் (மார்க்கத்தில்) அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. இது தான் உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும். அவன் தான் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டான். இ(வ்வேதத்)திலும் (அவ்வாறே கூறப் பெற்றுள்ளது). இதற்கு நம்முடைய இத்தூதர் உங்களுக்குச் சாட்சியாக இருக்கிறார். இன்னும் நீங்கள் மற்ற மனிதர்களின் மீது சாட்சியாக இருக்கிறீர்கள். எனவே நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள். இன்னும் ஸகாத்தைக் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வைப் பற்றிக் கொள்ளுங்கள். அவன் தான் உங்கள் பாதுகாவலன். இன்னும் அவனே மிகச் சிறந்த பாதுகாவலன். இன்னும் மிகச் சிறந்த உதவியாளன்." (ஹஜ் 22:78)**

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது த.்.வாப் பணி முதல் நபியவர்கள் குறித்த அன்னாரின் சுபசோபனம் ஈறாக இது உலகளாவியதோர் அழைப்பாகவே இருக்கின்றது. இதனைத் தான் அல்-குர்ஆன்:

وَما أَرسَلناكَ إِلّا رَحمَةً لِلعالَمينَ - الأنبياء: ١٠٧

**"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக –ஓர் அருட் கொடையாகவே– அன்றி அனுப்பவில்லை." (அன்பியா 21:107)**

எனக் கூறியது. இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இது ஓர் அருளாக இருக்கும்; மறுத்தவர்களுக்கும் அருளாக இருக்கும். ஏற்றுக் கொண்டவர்கள் நேர்வழி பெறுவார்கள். அனைத்து ஆதாரங்களையும் மறுத்தவர்களுக்கு முன்னால் அல்லாஹு தஆலா தெளிவுபடுத்தியுள்ளான். அவர்களுக்கு அல்லாஹ் அருளியுள்ள அறிவு, பார்வை, கேள்வி முதலானவற்றைப் பிரயோகிப்பார்களாயின் அவர்களும் நேர்வழி பெறுவார்கள்.

இத்துடன் குடும்பங்களையும் சமூகங்களையும் தேர்வு செய்யும் கட்டம் நிறைவுற்று அகிலத்துவ சட்டத்திற்கான அத்திவாரம் இடப்படுகின்றது. பூகோள மற்றும் இன, மொழி, நிற அடிப்படையிலான அனைத்து வேறுபாடுகளையும் கடந்து மானுடம் முழுவதையும் உள்ளீர்க்கும் தன்மை கொண்டதாக இது அமைந்துள்ளது. அல்-குர்ஆன் கூறுகிறது:

يا أَيُّهَا النّاسُ إِنّا خَلَقناكُم مِن ذَكَرٍ وَأُنثى وَجَعَلناكُم شُعوبًا وَقَبائِلَ لِتَعارَفوا إِنَّ أَكرَمَكُم عِندَ اللَّهِ أَتقاكُم إِنَّ اللَّهَ عَليمٌ خَبيرٌ - الحجرات: ١٣

**"மனிதர்களே; நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர் தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்." (ஹுஜுராத் 49:13)**

மானுடரை நோக்கி அவர்கள் மனிதர்கள் என்ற அடிப்படையில் தான் இந்த அழைப்புவிடுக்கப்படுகிறது. விரிந்த மானுடக் குடும்பத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய ஒரு தூதையே இது அவர்களிடம் சுமந்து செல்கின்றது. உலகில் அல்லாஹ்வின் மார்க்கம் ஏனைய மார்க்கங்களிலும் சிறந்து விளங்குவது இதனூடாகவே.. மனித இனத்துக்குப் பொதுவான பெறுமானங்களும் உடன்பாட்டுக் கூறுகளும் இங்கு தான் உருவாகின்றன. இது மானுடத்தின் ஒருமைப்பாட்டுக்கு வழி கோலுகிறது. மனித இனங்களுக்கிடையிலான மோதல்களை ஊக்குவிப்பதே ஷைத்தானிய வேலைத் திட்டத்தின் முக்கிய கருப் பொருள். இதற்கு மாறாக மானுட ஒருமைப்பாடு எனும் உயர் இலக்கை அடைந்து கொள்வதற்கான அத்திவாரத்தை இட்டு வைத்துள்ளது

இஸ்லாம். அதில் முதலாவதும் பலமானதுமானது, ஏகத்துவம். அனைத்தும் கட்டியெழுப்பப்படுவது இதன் மீது தான். இது பற்றி எனது ஆய்வுகள் பலவற்றில் நான் பேசியுள்ளேன். அதில் முதன்மையானது 'ஏகத்துவமும் மனித வாழ்வில் அதன் வெளிப்பாடுகளும்' என்ற எனது ஆய்வு.

இரண்டாவது அத்திவாரம் அல்-குர்ஆன் முன்வைக்கும் 'உம்மத்' கோட்பாடு. அது தனித்துவமானது. வெறுமனே இனம் அல்லது மொழி அல்லது பௌதீக எல்லைகளை மையமாகக் கொண்ட ஒரு மனித கூட்டத்தைக் குறிப்பதல்ல அது. மேலும், இன்று அறிமுகமாகியிருக்கும் 'நாடு', 'மத்ஹப்' போன்ற அடையாளங்களைக் குறிப்பதும் அல்ல. 'ஏகத்துவம்' என்னும் பிரதான காரணியை மையப்படுத்தி ஒன்றிணையும் மக்கள் கூட்டத்தையே உம்மத் என்பது குறிக்கிறது. இந்த ஏகத்துவ சிந்தனை தான், இந்த உம்மத்துடன் இணைந்து வாழ விரும்பும் அனைத்து மக்களையும் உள்ளீர்த்து ஒன்றுபட்டு வாழ வழி செய்கிறது. அல்-குர்ஆன் கூறுகிறது:

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنّاسِ تَأمُرونَ بِالمَعروفِ وَتَنهَونَ عَنِ المُنكَرِ وَتُؤمِنونَ بِاللَّهِ وَلَو آمَنَ أَهلُ الكِتابِ لَكانَ خَيرًا لَهُم مِنهُمُ المُؤمِنونَ وَأَكثَرُهُمُ الفاسِقونَ - آل عمران: ١١٠

**"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த உம்மத்தாக (சமுதாயமாக) நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள். வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின் (அது) அவர்களுக்கு நன்மையாகும். அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர். எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்." (ஆல இம்ரான் 3:110)**

மற்றோர் இடத்தில் அது கூறுகிறது:

وَلتَكُن مِنكُم أُمَّةٌ يَدعونَ إِلَى الخَيرِ وَيَأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ عَنِ المُنكَرِ وَأُولئِكَ هُمُ المُفلِحونَ - آل عمران: ١٠٤

**மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்." (ஆல இம்ரான் 3:104)**

மூன்றாவது அத்திவாரம், அல்-குர்ஆனுக்கான இறைமையும் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுபசோபனமாக முன்வைத்த இறுதி நபித்துவமும். இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பிரார்த்தனைகளுள் ஒன்றாகக் குர்ஆன் கூறுகின்றது:

رَبَّنا وَابعَث فيهِم رَسولًا مِنهُم يَتلو عَلَيهِم آياتِكَ وَيُعَلِّمُهُمُ الكِتابَ وَالحِكمَةَ وَيُزَكّيهِم إِنَّكَ أَنتَ العَزيزُ الحَكيمُ - البقرة: ١٢٩

**“எங்கள் இறைவனே! அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுந்திடச் செய்வாயாக. நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனாகவும் பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்.” (பகரா 2:129)**

நான்காவது அத்திவாரம் மக்களுக்கு சாட்சியாக இருத்தல் என்ற பணி நபியவர்களிடமிருந்து, இந்த ஒருமைப்பட்ட உம்மத்தின் பணியாக மாற்றப்படுதல். இதன் மூலம் ஓர் அறபு மைய வாதமோ, இஸ்லாமிய மைய வாதமோ அல்லது ஏதேனும் ஒரு சமூக மைய வாதமோ அன்றி சிறந்த சாட்சி பகரும் ஒரு சமூக மைய வாதம் தோற்றம் பெறுகிறது. இது தான் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட சிறந்த சமூகம். எல்லா சமூகங்கள் மத்தியிலும் மத்திய பாத்திரத்தை வகிக்கக் கூடிய ஒரு மாதிரி சமூகமாக இது அமையும். பொது விழுமியங்களைக் கைக் கொண்டு அல்லாஹ்வைத் துதி செய்யும் பயணத்தில் இது கை கோர்த்துச் செயல் படும். அல்-குர்ஆன் குறிப்பிடுகிறது:

وَكَذلِكَ جَعَلناكُم أُمَّةً وَسَطًا لِتَكونوا شُهَداءَ عَلَى النّاسِ وَيَكونَ الرَّسولُ عَلَيكُم شَهيدًا وَما جَعَلنَا القِبلَةَ الَّتي كُنتَ عَلَيها إِلّا لِنَعلَمَ مَن يَتَّبِعُ الرَّسولَ مِمَّن يَنقَلِبُ عَلى عَقِبَيهِ وَإِن كانَت لَكَبيرَةً إِلّا عَلَى الَّذينَ هَدَى اللَّهُ وَما كانَ اللَّهُ لِيُضيعَ إيمانَكُم إِنَّ اللَّهَ بِالنّاسِ لَرَءوفٌ رَحيمٌ - البقرة: ١٤٣

**“இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம். (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும் ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும். யார் (நம்) தூதரைப் பின்பற்றுகிறார்கள்? யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதி கால்கள் மீது பின் திரும்பி செல்கிறார்கள் என்பதை அறி(வித்து விடு) வதற்காக வேண்டி கிப்லாவை நிர்ணயித்தோம். இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே**

**இருந்தது. அல்லாஹ் உங்கள் ஈமானை (நம்பிக்கையை) வீணாக்க மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப் பெரும் கருணை காட்டுபவன்; நிகரற்ற அன்புடையவன்.” (பகரா 2:143)**

இவையனைத்தும், உலக சாம்ராஜ்யங்களும் பல்வேறு அதிகார பீடங்களும் கடைப்பிடித்த, இன்றும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்ற அதிகார வழிமுறைகள் ஊடாக அமுல்படுத்தப்பட இயலாதன. அமைதியான அழைப்பு, உள்ளங்களில் திருப்தியையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தல், ஏனையோர் முன்மாதிரியாகக் கொள்ளத் தக்க ஒரு மாதிரி சமூக அமைப்பைத் தோற்றுவித்தல் முதலான வழிமுறைகள் மூலமாகவே அடைந்து கொள்ள இயலும். இஸ்லாம் கூறும் மாதிரி சமூக அமைப்புத் தான் உம்மத்தும் மில்லத்து[1]மாகும். இத்தகைய மாதிரி சமூகமாகவே நபிகளாரின் காலத்திலும் அபூ பக்ர் ரழியல்லாஹு அன்ஹு, உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரின் காலத்திலும் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது காலத்தின் சில வருடங்களிலும் இந்த சமூகம் காணப்பட்டது. பின்னர் வரலாற்றில் பிரபல்யமான, குழப்பங்கள் காரணமாக இந்த சமூகம் உள்ளக போராட்டத்துக்குள் சிக்கிக் கொண்டது; உன்னதமான அடிப்படைகளை விட்டும் வெளிச் சென்றது. விளைவாக குழுக்களாகவும் பிரிவுகளாகவும் கட்சிகளாகவும் மக்கள் பிளவுபட்டனர்.

## 3. முதல் பலவீனம்

அல்-குர்ஆன் கற்பித்த ஏகத்துவ சிந்தனை காலப் போக்கில் தனித்ததொரு கலை வடிவத்தைப் பெற்றது. தொடர்ந்து வந்த காலங்களில் அது அல்-குர்ஆனின் அணுகுமுறையை விட்டும் தடம் புரண்டு செல்லும் நிலை உருவானது. இஸ்லாமியக் கலைகள் தொகுக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் -அதாவது ஹிஜ்ரி 143 அளவில் அப்பாஸிய கிலாபத் காலத்தின் போது- நிகழ்ந்தது இது. இந்த விடயத்தை இமாம் தஹபி, தனது ‘ஸியர் அ.்.லாமின் நுபலா.்.’ எனும் நூலில் குறிப்பிட, இமாம் ஸுயூதி தனது ‘தாரீகுல் குலபா’ எனும் நூலில் உறுதிப்படுத்துகின்றார். இஸ்லாமியக் கலைகள் உத்தியோக பூர்வமாகத் தொகுக்கப்பட்ட காலமாக ஆய்வாளர்களால் கருதப்பட்ட அக்காலப் பகுதியில் ‘ஏகத்துவம்’ என்பது, ‘இல்முல் கலாம்’ எனும் கலையின் ஓர் அம்சமாக மாத்திரம் மாறி விட்டிருந்தது.

---

(1) இங்கு மில்லத் என்பது சில குறிப்பிட்ட பெறுமானங்களில் ஒன்றுபட்ட ஒரு மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது. உதாரணமாக ஏகத்துவம்.. அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் கடவுளாகக் கொள்ளப்பட மாட்டார்கள்; கொலை, விபச்சாரம் போன்ற குற்றச் செயல்கள் இங்கு பரவலாகக் காணப்பட மாட்டாது. உம்மத் என்பது பற்றி இந்த ஆய்வில் வேறு ஓர் இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

'இல்முல் கலாம்' எனும் கலையை ஆய்வாளர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தினர். 'ஆதாரங்களை முன்வைத்தல் மற்றும் சந்தேகங்களைக் களைதல் முதலான வழிமுறைகள் மூலம் மார்க்க நம்பிக்கைகளை உறுதிப்படுத்த விழையும் கலையே இல்முல் கலாம்'. அதன் ஆய்வுப் பொருள், 'மார்க்க நம்பிக்கைகளை உறுதிப்படுத்தல்' எனக் கூறினர். 'மார்க்க நம்பிக்கைகளில் உள்ள கோட்பாட்டுத் தரத்தில் அமைந்த உண்மைகள்', 'மார்க்க நம்பிக்கையொன்றை நிறுவுவதற்கு அவசியப் படும் விதிகள்' போன்றன இக்கலையின் உயர் நிலை அறிவாகக் கருதப்பட்டு அவற்றின் கீழ் பல கிளை விவகாரங்களை இணைத்துக் கொண்டனர். இந்தக் கலையுடன் மிகவும் குறைந்த தொடர்புகளே கொண்ட மேலும் பல விவகாரங்கள் இதனுடன் இணைந்து கொண்டன.

'இல்முல் கலாம்' கலையைக் கற்பதன் பயன்கள் யாவை என்பதும் குறிப்பிடப்பட்டன. இதனைக் கற்கின்ற ஒருவன் தக்லீதிலிருந்து மீண்டு திடமான நம்பிக்கைக்கு வருவான். அல்-குர்ஆன் கூறுகிறது:

يا أَيُّهَا الَّذينَ آمَنوا إِذا قيلَ لَكُمْ تَفَسَّحوا فِي المَجالِسِ فَافسَحوا يَفسَحِ اللَّهُ لَكُمْ وَإِذا قيلَ انشُزوا فَانشُزوا يَرفَعِ اللَّهُ الَّذينَ آمَنوا مِنكُمْ وَالَّذينَ أوتُوا العِلمَ دَرَجاتٍ وَاللَّهُ بِما تَعمَلونَ خَبيرٌ - المجادلة: ١١

**"ஈமான் கொண்டவர்களே! சபைகளில் நகர்ந்து இடங்கொடுங்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால் நகர்ந்து இடம் கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு இடங்கொடுப்பான். தவிர, எழுந்திருங்கள் என்று கூறப்பட்டால் உடனே எழுந்திருங்கள். அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி, ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான். அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்." (முஜாதலா 58:11)**

அது போலவே, நேர்வழியைத் தேடுவோருக்கான ஆதாரங்களைத் தெளிவுபடுத்துகிறது. விசுவாசியருக்கான ஆதாரங்களையும் முன்வைக்கின்றது. அசத்திய வாதிகளின் சந்தேகங்களில் இருந்து மார்க்கத்தின் அடிப்படைகளைப் பாதுகாக்கிறது.

இதன் ஆய்வுப் பொருள் தான் மிகவும் உயர்ந்ததும் முக்கியமானதும்; இதன் நோக்கங்கள் தான் மிகச் சிறந்தனவும் பயனுள்ளனவும்; இதனுடைய ஆதாரங்கள் தான் பகுத்தறிவூடாகவும் ஷரீஅத்தூடாகவும் நிறுவப்படக் கூடியன. ஆக இல்முல் கலாமே அனைத்துக் கலைகளுக்குமான அடிப்படை என அக்காலத்தில் அறிஞர்கள் கூறினர்.

'இமாமத்'(2) என்னும் தலைமைத்துவ அதிகாரம் பற்றிய விவகாரம் இக்கலையின் முக்கிய பேசு பொருள்களில் ஒன்றாக உருப் பெற்றது. நபிகளாருக்குப் பின்னர் அதிகாரம் யாருக்குரியது என்ற வினாவுடன் சம்பந்தப்பட்டது என்ற வகையில் அது முக்கியமான ஓர் ஆய்வுப் பரப்பாகக் கருதப்பட்டது. ஆக, இப்பரப்பின் கருத்து வேறுபாடும் பாரியதாகி முஸ்லிம் உம்மத்தின் பிளவுக்கும் பிரதான காரணியாக அது அமைந்தது.

ஆரம்பம் முதலே 'பகுத்தறிவு' ஆதாரங்களின் மீதும் தத்துவங்களின் மீதுமே இக்கலை கட்டியெழுப்பப்பட்டது. அல்-குர்ஆனும் ஸ "ன்னாவும் அந்தப் 'பகுத்தறிவை' ஆதாரப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்பட்டன. இதுவே இக்கலையில் இருந்த பெரும் அறிவியல் ஓட்டை.

இல்முல் கலாம், ஏகத்துவ சிந்தனையையும் கையாளத் தொடங்கிய போது, அப்பாஸியக் காலத்தில் இக்கலை 'அகீதா' என்ற பெயரைப் பெற்றது.(3) அதன் பின்னர் மக்கள் ஏகத்துவ சிந்தனையில்

---

(2) தலைமைத்துவ அதிகாரம் தொடர்பில் இருவகையான கருத்துக்கள் நிலவின. முதலாவது, தலைமைத்துவம் அனைவரது உடன்பாட்டின் அடிப்படையில் தேர்வு முறையில் தீர்மானிக்கப் படும். இரண்டாவது, தலைமைத்துவம் வஹியின் ஊடான நியமனத்தின் மூலம் தீர்மானிக்கப் படும். முதல் கருத்தைக் கூறியவர்கள், முழு உம்மத்தும் உடன்படுகின்ற ஒருவர் அல்லது உம்மத்தில் ஏற்றுக் கொள்ளத் தக்க ஒரு பிரிவினரில் இருந்து தலைவர் தெரிவு செய்யப் படலாம் என்றனர். இவ்வகைத் தெரிவுக்கு நிபந்தனைகள் அவசியமில்லை என்று சிலர் குறிப்பிட்டுள்ளதுடன் மற்றும் சிலரது அபிப்பிராயப்படி குறைஷிகளில் ஒருவராகத் தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கூறினர். வேறு சிலர் அதிலும் ஹாஷிமி குடும்பமாக இருக்க வேண்டும் என்றனர். இவற்றுடன் இன்னும் பல நிபந்தனைகளும் கூறப்பட்டுள்ளன. இவர்கள் முஆவியாவினதும் அவரது குடும்பத்தினரதும் பின்னர் மர்வானினதும் அவரது குடும்பத்தினரதும் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டனர். கவாரிஜ்கள் தெரிவின் அடிப்படையில் தலைமை வர வேண்டும் என்று கூறினாலும் கவாரிஜ் நம்பிக்கையைச் சேர்ந்தவராக அவர் இருக்க வேண்டும் என்றனர். அத்துடன் கவாரிஜ்களுடன் அவர் நீதியாக நடக்க வேண்டும் என்றும் கூறினர். இல்லாத போது அவரைப் பலவீனப்படுத்தினர்; அல்லது பதவியிறக்கினர்; அல்லது கொலை செய்தனர்.

(3) ஏகத்துவம் என்பது, உலூஹிய்யத், ருபூபிய்யத், அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் அனைத்திலும் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே என்று திடமாக நம்பி ஏற்றுக் கொள்வதாகும். அத்துடன், இதற்கு எதிரான மாற்றமான விடயங்கள் அல்லாஹ்வுக்குக் கிடையாது என்று நம்புவதாகும். இந்த ஏகத்துவ நம்பிக்கை, ஒரு மனிதன் உலகப்

வேறுபடவில்லையாயினும் ஏனைய கிளையம்சங்களில் வேறுபாடுகள் தலையெடுக்கத் தொடங்கின.

---

பொருட்களுக்கு அடிமையாதல், தனக்குத்தானே அடிமையாதல், பிற மனிதன் ஒருவனுக்கு அடிமையாதல் போன்றவற்றிலிருந்து விடுவித்து அவனை அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமையாக மாற்றிவிடுகிறது. நடைமுறை மனித வாழ்வொழுங்கை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அடிப்படை மீது அமைத்துவிடுகிறது. மனித வாழ்வில் எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்களுடன் அவனைப் பிணைத்துவிடுகிறது. ஏகத்துவ சிந்தனையின்றி ஒரு மனிதன் முழுமையான தூய்மையை அடைந்து கொள்வது சாத்தியமற்றது. அவ்வாறே ஏகத்துவ சிந்தனையின்றி இவ்வுலகை வளப்படுத்துவதும் சாத்தியமற்றது. ஏனெனில் ஏகத்துவ சிந்தனைக்குரிய எதிர்ப் பதம் ஷிர்க்காகும். இது மனிதர்கள் அல்லாஹ் அல்லாத வேறு கடவுள்களை பல்வேறு வடிவங்களில் வாழ்க்கையில் அமைத்துக் கொள்வதாகும். தொழுகையில் வேறு கடவுளை வணங்கினால் மாத்திரம் தான் ஷிர்க் என்பதில்லை.

ஏகத்துவம் என்பது உயர் மகாஸித்களில் ஒன்று. அது மனித உள்ளத்தின் உறுதியுடன் ஆளப்பதிவது எப்போது எனின், அது அவனது அறிவின் ஒவ்வொரு பகுதியிலும் பிரதிபலிக்க வேண்டும்; அவனது சிந்தனை, செயற்பாடு போன்ற அனைத்துப் பக்கங்களிலும் பிரதிபலிக்க வேண்டும்; பொருளாதாரம், கல்வி, சமூகவியல், அரசியல், கலைகள், உரிமைகள் போன்ற வாழ்க்கையின் ஒவ்வொரு கூறிலும் பிரதிபலிக்க வேண்டும். இதன்படி ஏகத்துவம் என்பது இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையான அளவீடாக மாறுகிறது. பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய மொத்தப் பார்வையாக அது அமைகிறது.

இஸ்லாத்தின் முதல் தலைமுறையினரைப் பார்க்கின்ற பொழுது அவர்கள் ஏகத்துவ சிந்தனையை அல்-குர்ஆன் எனும் ஒரே தூய்மையான ஊற்றிலிருந்து மாத்திரமே பெற்றுக் கொண்டனர். ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏகத்துவத்தின் தூய்மையில் எந்த அழுக்கும் கலக்காமல் அதனை வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும் என்பதை நேரடியாக நபியவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார்கள். இதனால் தான் வரலாற்றில் முதல் பரம்பரையினர்க்கு அந்த முக்கியத்துவம் இருக்கிறது. ஆனால் அதன் பின்னர் நடந்தது என்ன? ஊற்று கலங்கப்பட்டு விட்டது; வேறு ஊற்றுக்கள் அதனுடன் கலந்து விட்டன; கிரேக்கத்துவம் அதனுடன் கலந்து விட்டது; ரோம, பாரசீகப் புராணங்கள் அதனுடன் இணைந்து விட்டன. இஸ்ராஈலிய்யாத்துகளும் சிக்கல் நிறைந்த கிறிஸ்தவ நம்பிக்கைகளும் ஏனைய சமூகக் கலாச்சாரங்களின் எச்சங்களும்.. ஏன் அறபுகளின் பாரம்பர்யங்களும் கூட. இவையனைத்தும் அல்-குர்ஆன் விரிவுரைகளில் கலந்து, அல்-குர்ஆனுடனான எமது புரிதலையும் உறவாடலையும் சிதைத்து விட்டன. அதன் நீட்சியாக அகீதாக் கலையிலும் அது நுழைந்து ஏகத்துவத்தின் ஒளியைப் பறித்து விட்டது. நம்பிக்கைகளின் பிரகாசத்தை அணைத்து விட்டது. ஈமானின் செயலூக்கத்தை இல்லாது செய்துவிட்டது.

பின்னர் 'உம்மத்'திற்கான முக்கியத்துவம் குன்றி, அந்த இடத்தை 'நாடு' பெற்றுக் கொள்ளலாயிற்று. உம்மத்தைக் கட்டியெழுப்புவதும் அதனைப் பாதுகாத்தலுமே இலக்காக வேண்டியிருக்க, நாட்டைக் கட்டியெழுப்புவதும் அதிகாரத்தைப் பரவலாக்கலுமே அடிப்படை இலக்காக மாறி விட்டது.

ஆனால் 'த.்.வா' நிலை நிறுத்தப்பட வேண்டும்; முழு உம்மத்தும் த.்.வா சமூகமாக எழுந்து நிற்க வேண்டும் என்பதனையே அல்-குர்ஆன் அறிவுறுத்துகின்றது.

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنّاسِ تَأمُرونَ بِالمَعروفِ وَتَنهَونَ عَنِ المُنكَرِ وَتُؤمِنونَ بِاللَّهِ وَلَو آمَنَ أَهلُ الكِتابِ لَكانَ خَيرًا لَهُم مِنهُمُ المُؤمِنونَ وَأَكثَرُهُمُ الفاسِقونَ - آل عمران: ١١٠

**"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்; வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின் (அது) அவர்களுக்கு நன்மையாகும். அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர்; எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்." (ஆல இம்ரான் 3:110)**

இந்த த.்.வா செயற்பாட்டின் இடத்தை, நாடுகளை வெற்றி கொள்ளலும் வெற்றியின் பெறுமானங்களும் பிடித்துக் கொண்டன. சற்றே முந்திய காலங்களில் அறபுகள் மேற்கொண்ட போராட்டங்களுடன் வெற்றிப் பெறுமானங்களும் ஒன்றித்திருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். 'மனிதன் மனிதனுக்கு அடிமையாகும் நிலையில் இருந்து அவனை மீட்டு அல்லாஹ்வுக்கு மாத்திரமே அவன் அடிமையாக இருப்பதற்கும் மதங்களின் அநீதியிலிருந்து மீட்டு இஸ்லாத்தின் நீதியின் கீழ் அவனை வாழ வைக்கவும் நெருக்கடியான உலக வாழ்விலிருந்து மீட்டு விசாலமான மறுமை வாழ்வுக்கு அவனை அழைத்துச் செல்வதற்கும் தான் அல்லாஹ் எம்மை அனுப்பி இருக்கின்றான்' என ருப்ஆ இப்னு ஆமிர் கூறினாரே! அந்த வார்த்தைகளின் பொருள் மறைந்து, அந்த இடத்தை வெற்றி கொள்ளல் என்ற சிந்தனை பிடித்துக் கொண்டது.

'வெற்றி கொள்ளல்' என்ற சிந்தனையின் அடிப்படை தான் என்ன? அதிகாரத்தை நிலை நிறுத்துதல், ஆதிக்கப் பரப்பை விஸ்தரித்தல், குடிமக்களை அடிமைத்துவத்துக்கு ஆளாக்குதல், வெற்றி கொண்ட நிலங்களின் வளங்களை அனுபவித்தல் என்பனவே. இத்தகைய

எண்ணங்கள் நபிகளாரின் காலத்திலோ குலபாஉர் ராஷிதீன்கள் காலத்திலோ காணப்படவில்லை.(4) போராட்டம் பற்றிய அல்-குர்ஆனிய

---

(4) த்ஃவாவினுடைய இடத்தை 'வெற்றி' பிடித்துக் கொண்டது என்பதன் மூலம் நாம் நாடுவது என்னவெனில், முஸ்லிம்கள் பிறருடனான உறவாடலின் போது ஆரம்பத்தில் த்ஃவா அணுகுமுறையிலேயே உறவாடினர். அதாவது பிற சமூகங்களுக்கு இஸ்லாத்தை முன்வைக்கும் போக்கே காணப்பட்டது. அவர்கள் இஸ்லாத்தினை திருப்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கான உழைப்பாகவே அது இருந்தது. அவர்கள் இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டால் அவர்களும் 'உம்மதுல் இஜாபா' என்ற இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட உம்மத்தின் ஒரு பகுதியாக இணைந்து விடுவர். அவர்களும் இந்த தீனின் சகோதரர்களாக மாறி விடுவர். இப்பொழுது போர் செய்பவர்கள் இவர்களில் கவனம் செலுத்த மாட்டார்கள். ஏனெனில், அவர்களால் தற்போது எந்த அச்சமுமில்லை. அவர்களால் முஸ்லிம்களுக்கோ அல்லது இந்த உம்மத்திற்கோ எந்த அபாயமும் இல்லை. இந்த உண்மையை நபியவர்கள் ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டளவில் ரோம, பாரசீக, நஜ்ஜாஷி மற்றும் கிப்திய மன்னர் முகவ்கிஸ் போன்றோருக்கு அனுப்பி வைத்த கடிதங்களில் நாம் கண்டு கொள்ளலாம். கடிதங்கள் அனைத்தும் ஒரே வடிவில் தான் காணப்பட்டன. ஆனால் அவர்களது எதிர்வினைகள் வித்தியாசப்பட்டிருந்தன. பாரசீக மன்னர் கடிதத்தைக் கிழித்து எறிந்தான். ரோம மன்னன் எந்தப் பதிலும் தரவில்லை. நஜ்ஜாஷி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எனவே அவர் இருக்கின்ற நிலையிலேயே அவ்வாறே நபியவர்கள் இருக்க விட்டார்கள். ஆனால் முகவ்கிஸ் நபியவர்களுக்கு சில அன்பளிப்புகளை அனுப்பி வைத்தான். அவன் இஸ்லாத்தைத் தழுவவும் இல்லை; அதே நேரம் நபியவர்களுடன் தொடர்புகளைத் துண்டிக்காமல் நெருக்கமாக இருந்தான். நபியவர்கள் ஹாதிப் இப்னு அபீ புல்துஆ ஊடாக முகவ்கிஸுக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"நேர்வழியைப் பின்பற்றுவோர்க்கு சாந்தி உண்டாவதாக! நான் உங்களை இஸ்லாமிய தூதின் பால் அழைக்கிறேன். நீங்கள் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்; சாந்தியடைவீர்கள். உங்களுக்கான உதவியை அல்லாஹ் இரண்டு மடங்காகத் தருவான். நீங்கள் புறக்கணித்து விட்டால் உங்களுக்கு கிப்துகளின் நல்வழிக்குத் தடையாக இருந்த பாவம் கிட்டும். அல்லாஹ் கூறுகிறான், "நபியே! நீங்கள் கூறுங்கள்: வேதம் வழங்கப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் மத்தியில் பொது உடன்பாட்டுப் புள்ளிகளுக்கு வாருங்கள். நாம் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்கக் கூடாது; அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது; அல்லாஹ் அல்லாத ஒன்றை எங்களில் எவரும் ஒப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது; நீங்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால் நாங்கள் தான் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்." (**ஆல இம்ரான்: 64)**

முகவ்கிஸ் இந்தக் கடிதத்திற்குப் பின்வருமாறு பதில் தந்திருந்தான்: 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.. முகவ்கிஸிடம் இருந்து முஹம்மத் இப்னு

வசனங்களைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُم ظُلِمُوا - الحج: ٣٩

**"போர் தொடுக்கப் பட்டோருக்கு அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த காபிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது." (ஹஜ் 22:39)**

அறபு தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த அறபு இணை வைப்பாளர்கள் குறித்தே இந்த அல்-குர்ஆன் வாசகம் பேசுகின்றது. இவர்களது பூமி தான் இந்த மார்க்கத்தின் தொட்டிலாகவும், இந்தத் தூதினதும் த.்.வாவினதும் தளமாகவும் அமைய வேண்டும் என்பது அல்லாஹ்வின் நியமமாக இருந்திருக்கின்றது. இந்த அறபு இணை வைப்பாளர்கள் அனைவருமே ஒரே நிலையினரல்லர். பல்வேறு நிலைப்பாடுகள் கொண்டவர்களாக, தொடர்ந்தும் ஏகத்துவத்துக்கும் உம்மத் சிந்தனைக்கும் த.்.வாவுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே அவர்கள் இயங்கி வந்தார்கள். நபிகளாரின் மறைவின் பின்னர் இதனைத் தெளிவாகவே காண முடிந்தது.

---

அப்துல்லாஹ்வுக்கு சாந்தி எத்தி வைக்கப்படுகிறது. உங்களது கடிதத்தை நான் படித்தேன். அதில் நீங்கள் குறிப்பிட்டிருந்ததை விளங்கிக் கொண்டேன். உங்களது அழைப்பையும் அறிந்து கொண்டேன். எங்களது ஒரு நபி வரவிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவர் ஷாம் பகுதியில் தோன்றுவார் என்று தான் நினைத்திருந்தேன். உங்களது தூதுவரை நான் கண்ணியமாக நடாத்தியுள்ளேன். கிப்திகள் மத்தியில் அந்தஸ்த்துள்ள இரண்டு அடிமைப் பெண்களையும் ஆண்களையும் உங்களுக்கு நான் அனுப்பியுள்ளேன். நீங்கள் பயணம் செய்வதற்கு ஒரு வாகனத்தையும் பரிசளித்துள்ளேன். உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!'. முகவ்கிஸ் இஸ்லாத்தைத் தழுவவில்லை. நபியவர்களது அழைப்புக்குப் பதில் தரவுமில்லை; ஆனால் நபியவர்கள் அவனுடன் போராடவுமில்லை. போராடுமாறு கட்டளையிடவும் இல்லை; மாற்றமாக அவனது பதிலை, ஒரு சமாதான வாழ்வுக்கான எதிர்பார்ப்பாகப் பார்த்தார்கள். தொடர்ந்து நபியவர்கள் எகிப்துடனும் அதன் மக்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

நபியவர்கள் முகவ்கிஸினுடைய பரிசில்களை ஏற்றுக் கொண்டமை, அவர்களை திம்மீக்களாக, அதாவது முஸ்லிம்களது பாதுகாப்பைப் பெற்றவர்களாக ஏற்றுக் கொண்டமையைக் குறிக்கிறது. இதனால் தான் நபியவர்களது உபதேசம் இவ்வாறு அமைந்தது: "அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு எமது பாதுகாப்பும் குடும்ப உறவும் இருக்கிறது".

இந்த அறபுக் கோத்திரங்கள் ஏகத்துவம், உம்மத், த.்.வா ஆகிய மூன்று அம்சங்களுக்கும் அத்திவாரமிடக் கூடிய எந்தக் கட்டமைப்புக்கும் எதிராக முனைப்புடன் செயல்பட்டமையை அறபுத் தீபகற்பத்தின் வரலாற்றை வாசிப்பவர்கள் அறிவார்கள்.

அங்கிருந்த காபிர்கள் மக்காவிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அறபுத் தீபகற்பத்தின் போக்குவரத்து வலையமைப்பிலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்தனர். முஸ்லிம்களின் உயிர் மற்றும் உடைமைகளில் சேதம் விளைவிக்கவும் அவர்களை அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கவும் அவர்கள் பாரிய சக்தி பெற்றிருந்தனர். இந்தக் காபிர்களுடனான உறவாடல் வடிவம் வித்தியாசமானது. இதனைப் பற்றிக் கற்க விரும்புகின்றவர்கள் போராட்ட வாசகங்கள் குறித்த எமது ஆய்வை ஸூரதுல் பகரா, ஸூரதுல் ஹஜ் ஆகியவற்றுக்கான விரிவுரைகளில் சுருக்கமாகக் கண்டு கொள்ளலாம்.

இவை போன்ற அறபுக் கோத்திரங்கள் சம்பந்தப்பட்ட குறிப்பான அல்-குர்ஆன் வசனங்களை சர்வதேச ரீதியான பிரயோகத்துக்குரியன எனக் கொள்வது தகாது. அவ்வாறு செய்வது குர்அன் பேசும் பொது உண்மைகளுக்கு முரணானதாகும். உதாரணமாக, அல்-குர்ஆன் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி எவரையும் வற்புறுத்துவதில்லை. இது குறித்து இரு நூற்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் காணப்படுகின்றன. ஸூரா அத்தவ்பாவின் ஆரம்ப பதின்மூன்று வசனங்களை ஆராய்ந்து பார்த்தால் முஸ்லிம்களுக்கும் ஏனையோர்க்கும் இடையிலான ஆயுதப் போராட்டத்துக்கான காரணம் பிறரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வைப்பது அல்ல என்பதையும், அவர்களை ஒப்பந்தங்களை மதித்து வாழும்படி செய்வது தான் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

ஸூராவின் ஆரம்பத்திலேயே அல்லாஹ் விலகிக் கொண்டமை பிரகடனப்படுத்தப்படுகிறது.

بَرَاءَةٌ مِنَ اللَّهِ وَرَسولِهِ إِلَى الَّذِينَ عاهَدتُم مِنَ المُشرِكينَ - التوبه: ١

**(மு.்.மீன்களே!) முஷ்ரிக்குகளில் (இணைவைத்து வணங்குபவர்களில்) எவர்களுடன் நீங்கள் உடன்படிக்கை செய்துள்ளீர்களோ, அவர்களிடமிருந்து அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விலகிக் கொண்டனர்.” (துவ்பா 9:1)**

அதற்குக் காரணம் அவர்கள் இறையோனுக்கு இணை கற்பித்து வந்தமையல்ல; தொடர்ந்தேர்ச்சியாக அவர்கள் ஒப்பந்தங்களை முறித்து வந்தமையே என்பதைத் தொடர்ந்து வரும் வசனங்களில் வல்ல அல்லாஹ் சில விதி விலக்குகளை அளிப்பதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

إِلَّا الَّذِينَ عاهَدتُم مِنَ المُشرِكينَ ثُمَّ لَم يَنقُصوكُم شَيئًا وَلَم يُظاهِروا عَلَيكُم أَحَدًا فَأَتِمّوا إِلَيهِم عَهدَهُم إِلى مُدَّتِهِم إِنَّ اللَّهَ يُحِبُّ المُتَّقينَ - التوبة: ٤

**“ஆனால், நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்ட இந்த முஷ்ரிக்குகளில், எதையும் குறைத்து விடாமலும் உங்களுக்கு விரோதமாக எவருக்கும் உதவி செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களைத் தவிர.. அவர்களுக்கு அவர்களின் உடன்படிக்கையை அவர்களின் காலக் கெடு வரையில் பூரணமாக நிறைவேற்றுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்.” (தவ்பா 9:4)**

இந்தப் பின்புலத்தில் செய்த பகுப்பாய்வின்படி இணை வைப்பாளர்கள் என்போரை ஆறு வகையினராக வகுத்து நோக்கலாம் என்பதைக் கண்டு கொள்ள முடிந்தது.

முதல் வகையினர்: இவர்கள் முஸ்லிம்களுடன் ஒப்பந்தங்கள் செய்யவும் இல்லை; முஸ்லிம்களுக்கு எதிரான அத்துமீறல்களில் ஈடுபடவுமில்லை. இத்தகைய இணைவைப்பாளர்கள் குறித்துத் தான் மத சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தும் அல்-குர்ஆன் வசனங்கள் அருளப் பெற்றன. உதாரணமாக,

لا إِكراهَ فِي الدّينِ - البقرة: ٢٥٦

**“மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை”. (பகரா 2:256)**

أَفَأَنتَ تُكرِهُ النّاسَ حَتّى يَكونوا مُؤمِنينَ - يونس: ٩٩

**“...எனவே, மனிதர்கள் யாவரும் மு.:.மின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகி விட வேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா?” (யூனுஸ் 10:99)**

இரண்டாம் வகையினர்: இவர்கள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை முழுமையாக கடைப்பிடிப்பவர்கள். நாம் மேற்கண்ட மத சுதந்திரம் பற்றிய அல்-குர்ஆன் வாசகங்கள் இவர்களுக்கும் ஏற்புடைத்தன. மேலும் கீழ்வரும் வாசகங்களுக்குள்ளேயும் இவர்கள் அடங்குவர்.

إِلَّا الَّذِينَ عاهَدتُم مِنَ المُشرِكينَ ثُمَّ لَم يَنقُصوكُم شَيئًا وَلَم يُظاهِروا عَلَيكُم أَحَدًا فَأَتِمّوا إِلَيهِم عَهدَهُم إِلى مُدَّتِهِم إِنَّ اللَّهَ يُحِبُّ المُتَّقينَ - التوبة: ٤

**“ஆனால், நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்ட இந்த முஷ்ரிக்குகளில், எதையும் குறைத்துவிடாமலும் உங்களுக்கு விரோதமாக எவருக்கும் உதவி செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களைத் தவிர.. அவர்களுக்கு**

**அவர்களின் உடன்படிக்கையை அவர்களின் காலக் கெடு வரையில் பூரணமாக நிறைவேற்றுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்." (துவ்பா 9:4)**

إِلَّا الَّذينَ عاهَدتُم عِندَ المَسجِدِ الحَرامِ فَمَا استَقاموا لَكُم فَاستَقيموا لَهُم إِنَّ اللَّهَ يُحِبُّ المُتَّقينَ - التوبه:٧

**"...ஆனால், நீங்கள் மஸ்ஜிதுல் ஹராம் (க.:.பதுல்லாஹ்) முன் (எவர்களுடன்) உடன்படிக்கை செய்து கொண்டீர்களோ அவர்களைத் தவிர.. அவர்கள் (தம் உடன்படிக்கைப்படி) உங்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளும் வரை நீங்களும் அவர்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்." (துவ்பா 9:7)**

நபிகளாரின் காலத்தில் மஸ்ஜிதுல் ஹராமின் முன்னால் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் மாத்திரம் தான் காணப்பட்டள்ளனர் என்பது, குறித்த வசனத்தில் ஒப்பந்தங்களை மிக மோசமாக முறித்தவர்கள் மத்தியில் இவர்களை மாத்திரம் விதிவிலக்காகக் கூறியமையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. அக்கால கட்டத்தில் ஒப்பந்தங்களை முறித்த இணை வைப்பாளர்கள் ஒன்றில் பகிரங்கமாக ஒப்பந்தங்களை முறித்தனர்; அல்லது இரகசியமாக ஒப்பந்தங்களை முறித்து விட்டு முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும் வகையில் பாவனை செய்து கொண்டிருந்தனர்.

மூன்றாம் வகையினர்: இவர்கள் உடன்படிக்கைகள் ஏதும் செய்யாமல் முஸ்லிம்கள் மீதான அத்துமீறல்களில் ஈடுபடுபவர்கள். இவர்கள் குறித்துத் தான் மேல் வரும் வசனம் அருளப் பெற்றுள்ளது:

وَقاتِلوا في سَبيلِ اللَّهِ الَّذينَ يُقاتِلونَكُم وَلا تَعتَدوا إِنَّ اللَّهَ لا يُحِبُّ المُعتَدينَ وَاقتُلوهُم حَيثُ ثَقِفتُموهُم وَأَخرِجوهُم مِن حَيثُ أَخرَجوكُم وَالفِتنَةُ أَشَدُّ مِنَ القَتلِ وَلا تُقاتِلوهُم عِندَ المَسجِدِ الحَرامِ حَتّى يُقاتِلوكُم فيهِ فَإِن قاتَلوكُم فَاقتُلوهُم كَذلِكَ جَزاءُ الكافِرينَ فَإِنِ انتَهَوا فَإِنَّ اللَّهَ غَفورٌ رَحيمٌ وَقاتِلوهُم حَتّى لا تَكونَ فِتنَةٌ وَيَكونَ الدّينُ لِلَّهِ فَإِنِ انتَهَوا فَلا عُدوانَ إِلّا عَلَى الظّالِمينَ - البقرة: ١٩٠ - ١٩٣

**"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை. (உங்களை வெட்டிய) அவர்கள் எங்கே காணக் கிடைப்பினும் அவர்களைக் கொல்லுங்கள். இன்னும், அவர்கள் உங்களை எங்கிருந்து வெளியேற்றினார்களோ அங்கிருந்து அவர்களை வெளியேற்றுங்கள். ஏனெனில் .:.பித்னா (குழப்பமும் கலகமும்**

**உண்டாக்குதல்) கொலை செய்வதைவிடக் கொடியதாகும். இருப்பினும் மஸ்ஜிதுல் ஹராமில் அவர்கள் (முதலில்) உங்களிடம் சண்டையிடாத வரையில் நீங்கள் அவர்களுடன் சண்டையிடாதீர்கள். ஆனால் (அங்கும்) அவர்கள் உங்களுடன் சண்டையிட்டால் நீங்கள் அவர்களைக் கொல்லுங்கள். இது தான் நிராகரிப்போருக்கு உரிய கூலியாகும். எனினும், அவர்கள் (அவ்வாறு செய்வதில் நின்றும்) ஒதுங்கி விடுவார்களாயின் (நீங்கள் அவர்களைக் கொல்லாதீர்கள்). நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்போனாகவும் கருணையுடையோனாகவும் இருக்கின்றான். ஃபித்னா (குழப்பமும் கலகமும்) நீங்கி அல்லாஹ்வுக்கே மார்க்கம் என்பது உறுதியாகும் வரை நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள். ஆனால் அவர்கள் ஒதுங்கி விடுவார்களானால் அக்கிரமக்காரர்கள் தவிர (வேறு எவருடனும்) பகை (கொண்டு போர் செய்தல்) கூடாது." (பகரா 2:190–193)**

அல்லாஹ்வின் ஆரம்ப அறிவுறுத்தல் மன்னிக்குமாறும் பொறுமை காக்குமாறும் அமைந்திருந்தது. அடுத்த கட்டத்தின் போது அத்துமீறல்களிலிருந்து காத்துக் கொள்ளும் வகையில் தற்காப்புக்கான அனுமதி வழங்கப்பட்டது.

أُذِنَ لِلَّذِينَ يُقاتَلونَ بِأَنَّهُم ظُلِموا وَإِنَّ اللَّهَ عَلى نَصرِهِم لَقَديرٌ - الحج: ٣٩

**"போர் தொடுக்கப் பட்டோருக்கு அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த காபிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்." (ஹஜ் 22:39)**

நான்காம் வகையினர்: இவர்கள் நபிகளாருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை முறித்தவர்கள். தாம் அத்துமீறுபவர்களல்லர் என அவர்கள் வெளியரங்கில் பாவனை செய்து வந்தாலும் கூட அவர்களுக்கு மன்னிப்பளிக்கக் கூடாது. என்றாலும் தவ்பா செய்து, தொழுகையை நிலை நிறுத்தி ஸகாத்தும் கொடுத்து வருவார்களாயின் அவர்கள் விதிவிலக்களிக்கப் பெறுவர்.

فَإِذَا انسَلَخَ الأَشهُرُ الحُرُمُ فَاقتُلُوا المُشرِكينَ حَيثُ وَجَدتُموهُم وَخُذوهُم وَاحصُروهُم وَاقعُدوا لَهُم كُلَّ مَرصَدٍ فَإِن تابوا وَأَقامُوا الصَّلاةَ وَآتَوُا الزَّكاةَ فَخَلّوا سَبيلَهُم إِنَّ اللَّهَ غَفورٌ رَحيمٌ - التوبه: ٥

**"(போர் விலக்கப்பட்ட துல்கஃதா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம், ரஜபு ஆகிய நான்கு) சங்கைமிக்க மாதங்கள் கழிந்து விட்டால் முஷ்ரிக்குகளைக் கண்ட இடங்களில் வெட்டுங்கள்; அவர்களைப் பிடியுங்கள்; அவர்களை முற்றுகையிடுங்கள்; ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களைக் குறி**

**வைத்து உட்கார்ந்திருங்கள். ஆனால் அவர்கள் (மனந்திருந்தி தம் பாவங்களிலிருந்து) தவ்பா செய்து மீண்டு தொழுகையையும் கடைப்பிடித்து (ஏழை வரியாகிய) ஸகாத்தும் (முறைப்படிக்) கொடுத்து வருவார்களானால் (அவர்களை) அவர்கள் வழியில் விட்டு விடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனாகவும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்." (துவ்பா 9:5)**

ஐந்தாம் வகையினர்: இவர்கள் ஒப்பந்தம் செய்துவிட்டு அதனை முறிக்கவில்லை; அதன்படி நடக்கவுமில்லை. ஆனால் தமது உள்ளத்தின் கபடங்களை மறைத்து முஸ்லிம்களை வார்த்தைகளால் திருப்திப்படுத்த முனைந்தோர். அல்-குர்ஆன் வினவியது:

كَيفَ يَكونُ لِلمُشرِكينَ عَهدٌ عِندَ اللَّهِ وَعِندَ رَسولِهِ إِلَّا الَّذينَ عاهَدتُم عِندَ المَسجِدِ الحَرامِ فَمَا استَقاموا لَكُم فَاستَقيموا لَهُم إِنَّ اللَّهَ يُحِبُّ المُتَّقينَ كَيفَ وَإِن يَظهَروا عَلَيكُم لا يَرقُبوا فيكُم إِلًّا وَلا ذِمَّةً يُرضونَكُم بِأَفواهِهِم وَتَأبى قُلوبُهُم وَأَكثَرُهُم فاسِقونَ اشتَرَوا بِآياتِ اللَّهِ ثَمَنًا قَليلًا فَصَدّوا عَن سَبيلِهِ إِنَّهُم ساءَ ما كانوا يَعمَلونَ لا يَرقُبونَ في مُؤمِنٍ إِلًّا وَلا ذِمَّةً وَأُولئِكَ هُمُ المُعتَدونَ - التوبه: ٧ - ١٠

**"அல்லாஹ்விடத்திலும் அவனுடைய தூதரிடத்திலும் முஷ்ரிக்குகளுக்கு எப்படி உடன்படிக்கை இருக்க முடியும்? ஆனால், நீங்கள் மஸ்ஜிதுல் ஹராம் (க.:.பதுல்லாஹ்) முன் (எவர்களுடன்) உடன்படிக்கை செய்து கொண்டீர்களோ அவர்களைத் தவிர.. அவர்கள் (தம் உடன்படிக்கைப்படி) உங்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளும் வரை நீங்கள் அவர்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான். (எனினும் அவர்களுடன்) எப்படி (உடன்படிக்கை இருக்க முடியும்?) உங்கள் மேல் அவர்கள் வெற்றி கொண்டால் உங்களிடையே உள்ள உறவின் முறையையும் (உங்களிடையே இருக்கும்) உடன்படிக்கையையும் அவர்கள் பொருட்படுத்துவதேயில்லை. அவர்கள் தம் வாய்( மொழி)களைக் கொண்டு (தான்) உங்களைத் திருப்திப்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களின் உள்ளங்கள் (அதனை) மறுக்கின்றன. அவர்களில் பெரும்பாலோர் பாவிகளாக இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களைச் சொற்ப விலைக்கு விற்கின்றனர். இன்னும் அவனுடைய பாதையிலிருந்து (மக்களைத்) தடுக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்கள் மிகவும் கெட்டவை. அவர்கள் எந்த மு.:.மினின் விஷயத்திலும் உறவையும் உடன்படிக்கையையும் பொருட்படுத்த மாட்டார்கள். மேலும் அவர்களே வரம்பு மீறியவர்கள் ஆவார்கள்." (துவ்பா 9:7–10)**

وَإِمّا تَخافَنَّ مِن قَومٍ خِيانَةً فَانبِذ إِلَيهِم عَلى سَواءٍ إِنَّ اللَّهَ لا يُحِبُّ الخائِنينَ وَلا يَحسَبَنَّ الَّذينَ كَفَروا سَبَقوا إِنَّهُم لا يُعجِزونَ وَأَعِدّوا لَهُم مَا استَطَعتُم مِن قُوَّةٍ وَمِن رِباطِ الخَيلِ تُرهِبونَ بِهِ عَدُوَّ اللَّهِ وَعَدُوَّكُم وَآخَرينَ مِن دونِهِم لا تَعلَمونَهُمُ اللَّهُ يَعلَمُهُم - الأنفال: ٥٨ - ٦٠

**"(உம்முடன் உடன்படிக்கை செய்திருக்கும்) எந்தக் கூட்டத்தாரும் மோசம் செய்வார்கள் என நீர் பயந்தால், (அதற்குச்) சமமாகவே (அவ்வுடன்படிக்கையை) அவர்களிடம் எறிந்துவிடும். நிச்சயமாக அல்லாஹ் மோசம் செய்பவர்களை நேசிப்பதில்லை. நிராகரிப்பவர்கள் தாங்கள் (தண்டனையிலிருந்து) தப்பித்துக் கொண்டதாக எண்ண வேண்டாம். நிச்சயமாக அவர்கள் (இறையச்சமுடையோரைத்) தோற்கடிக்கவே முடியாது. அவர்( நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும் உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்). அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அவர்களை அறிவான்..." (அன்பால் 8:58–60)**

பலத்தைத் திரட்டுவதன் நோக்கம் எதிரிகள் மீது அத்துமீறுவதல்ல. எதிரிகளால் விளையக் கூடிய அத்துமீறலைத் தடுக்கும் வகையில் ஓர் அச்சத்தை ஏற்படுத்துவதே. அவர்கள் சமாதானத்தை நாடினால் நாமும் அதனையே நாடுவோம். மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

فَإِن تابوا وَأَقامُوا الصَّلاةَ وَآتَوُا الزَّكاةَ فَإِخوانُكُم فِي الدّينِ وَنُفَصِّلُ الآياتِ لِقَومٍ يَعلَمونَ - التوبه: ١١

**"ஆயினும் அவர்கள் தவ்பா செய்து (மனந்திருந்தி தம் தவறுகளிலிருந்து விலகி) தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தையும் (முறையாக) கொடுத்து வருவார்களானால், அவர்கள் உங்களுக்கு மார்க்கச் சகோதரர்களே. நாம் அறிவுள்ள சமூகத்தினருக்கு (நம்) வசனங்களை விளக்குகிறோம்." (தவ்பா 9:11)**

ஆறாவது வகையினர்: மு.்.மின்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்ட இவர்கள் பிறகு இலகுபடுத்தல்கள் வந்ததன் பின்னர் அவற்றை முறித்தவர்கள். இவர்கள் குறித்து அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَإِن نَكَثوا أَيمانَهُم مِن بَعدِ عَهدِهِم وَطَعَنوا في دينِكُم فَقاتِلوا أَئِمَّةَ الكُفرِ إِنَّهُم لا أَيمانَ لَهُم لَعَلَّهُم يَنتَهونَ - التوبه: ١٢

**“அவர்களுடைய உடன்படிக்கைக்குப் பின் தம் சத்தியங்களை அவர்கள் முறித்துக் கொண்டு உங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் இழித்துக் குறை சொல்லிக் கொண்டு இருப்பார்களானால் அவர்கள் (மேற்கூறிய செயல்களிலிருந்து) விலகிக் கொள்வதற்காக நிராகரிப்பவர்களின் தலைவர்களுடன் போர் புரியுங்கள். ஏனெனில் அவர்களுக்கு நிச்சயமாக ஒப்பந்தங்கள் (என்று எதுவும்) கிடையாது.” (தவ்பா 9:12)**

அதாவது அவர்கள் தவ்பா செய்யவுமில்லை. சத்தியங்களை முறிக்கவும் இல்லையெனில் உங்களது முதல் நிலைப்பாட்டிலேயே இருங்கள். அதாவது,

وَأَعِدّوا لَهُم مَا استَطَعتُم مِن قُوَّةٍ وَمِن رِباطِ الخَيلِ - الأنفال: ٦٠

**“அவர்( நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்...” (அன்பால் 8:60)**

வரலாற்றில் இஸ்லாமிய நாடுகள் என அறிமுகமானவை யுத்த வெற்றிகள், கனீமத் பொருட்கள், எல்லை விஸ்தரிப்பு முதலான விடயங்களிலேயே கவனமும் ஆர்வமும் காட்டி வந்தன. இவ்வாறான போக்கு மார்க்கத்தின் அடிப்படைப் பண்பான ‘த.்.வா’வில் ஏற்படுத்திய பாதக விளைவுகளை அவை கருத்தில் கொள்ளவில்லை. த.்.வாவின் இடத்தை யுத்த வெற்றிகள் பிடித்துக் கொண்டன. அதன் காரணமாக இஸ்லாமிய வாழ்வை வழிநடாத்தும் மையப் பொருளும் மாற்றமடைந்தது. அல்-குர்ஆனுடனான நேரடித் தொடர்பு பலவீனமடையலாயிற்று. அதனிடத்தை பல்வகை கருத்துகளும் கூற்றுகளும் பிடித்துக் கொண்டன.

இத்தகு பின்னணியிலேயே அந்நஸ்க் (இரத்துச் செய்தல்) கோட்பாடு முக்கியத்துவம் பெறத் தொடங்குகிறது. இதில் குறிப்பிடத் தக்கது ‘ஆயதுஸ் ஸைப்’ என வழங்கும் ஸூரா தவ்பாவின் இருபத்தொன்பதாம் வசனம்:

قاتِلُوا الَّذينَ لا يُؤمِنونَ بِاللَّهِ وَلا بِاليَومِ الآخِرِ وَلا يُحَرِّمونَ ما حَرَّمَ اللَّهُ وَرَسولُهُ وَلا يَدينونَ دينَ الحَقِّ مِنَ الَّذينَ أوتُوا الكِتابَ حَتّى يُعطُوا الجِزيَةَ عَن يَدٍ وَهُم صاغِرونَ - التوبه: ٢٩

**“வேதம் அருளப் பெற்றவர்களில் எவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஈமான் கொள்ளாமலும் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஹராம் ஆக்கியவற்றை ஹராம் எனக் கருதாமலும் உண்மை மார்க்கத்தை ஒப்புக் கொள்ளாமலும் இருக்கிறார்களோ அவர்கள் (தம்) கையால் கீழ்ப்**

**படிதலுடன் ஜிஸ்யா (என்னும் கப்பம்) கட்டும் வரையில் அவர்களுடன் போர் புரியுங்கள்." (தவ்பா 9:29)**

பலதரப்பட்ட விளக்கங்களுக்காளாகியது இந்த வசனம். 'சமாதானம், கருத்துப் பரிமாறல் சம்பந்தப்பட்ட அத்துனை வசனங்களையும் இந்த வாசகம் ரத்துச் செய்துவிட்டது; ஏனையோர் முன்னால் வாளேந்துவதே தவிர வேறு வழியேதுமில்லை; அவிசுவாசியர் இஸ்லாத்தை ஏற்க வேண்டும்.. அல்லது ஜிஸ்யா செலுத்த வேண்டும்.. அல்லது போராட்டத்துக்குத் தயாராக வேண்டும்.' இத்தகையதொரு நிலைப்பாட்டுக்கே விரிவுரையாளர்கள் வந்தனர்.

இதன் காரணமாக பர்பர்கள் முதலான ஏராளமான சமூகங்களுக்கு இஸ்லாம் சென்றடைவது தாமதமாகியது. அவிசுவாசிய மக்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்த்து நிற்பதற்கானதொரு நியாயமாக அது அமைந்து விட்டது. தம்மிடமிருந்த அனைத்து வளங்களையும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்த்துப் போராடப் பயன்படுத்தினர் எதிரிகள். ஆக, இஸ்லாமிய த..வா பாரிய எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று.(1) முஸ்லிம் ஆட்சியாளர்களும் தத்தம் விருப்பு

---

(1) கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களது காலம் இதற்கான சான்றாக அமைகிறது. அவர் இஸ்மாஈல் இப்னு உபைதுல்லாஹ் என்பவரை ஆபிரிக்காவுக்கு கவர்னராக நியமித்தார். இந்த சம்பவம் பற்றி இப்னுல் அதாரி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: 'அவர் சிறந்த தலைவர்; சிறந்த கவர்னர்; பர்பர்களை இஸ்லாத்தின் பால் அழைப்பதில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டார். இவர் தான் ஆபிரிக்க மக்களுக்கு ஹலாலையும் ஹராத்தையும் கற்பித்தவர். உமரவர்கள் இவருடன் அறிவும் கௌரவமும் உடைய பத்து தாபிஈன்களை அனுப்பி வைத்தார்கள். ஆபிரிக்காவில் மதுபானம் ஹலால் என்றிருந்தது. இவர்கள் சென்றதன் பின்னர் தான் அது ஹராம் என்ற தெளிவைப் பெற்றனர்.

கலீபா இப்னு கய்யாத் என்பவர் தனது தாரிக் எனும் நூலில் குறிப்பிடுகிறார்: பர்பர்களில் பெரும்பாலானவர்கள் அவரது பதவிக் காலத்தில் தான் இஸ்லாத்தை ஏற்றனர் எனின், முன்னைய காலங்களில் கவனம் எங்கே குவிந்திருக்கிறது? இவருக்கு முன்னர் பதவி வகித்த யசீத் இப்னு அபீ முஸ்லிம் என்பவர் அநியாயம் செய்யக் கூடியவர். உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் தனது பதவிக் காலத்தை இவரை பதவி நீக்குவதுடன் தான் ஆரம்பம் செய்தார்கள். யசீத் இப்னு அபீ முஸ்லிம் பற்றிக் கூறுகையில் 'இவர் சுல்தானிடமிருந்து வருகின்ற அநியாயமான, சத்தியத்திற்குப் புறம்பான, சிறிய, பெரிய அனைத்துக் கட்டளைகளையும் தெய்வீக அந்தஸ்த்துடன் நிறைவேற்றினார். இவர் அதிகமாக திக்ர்களிலும் தஸ்பீஹ்களிலும் ஈடுபடுவார். மக்களை வேதனை செய்யும் போதும் கூட சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் போன்ற திக்ர்களை சொல்லிக் கொண்டே வேதனை செய்வார். சில சந்தர்ப்பங்களில்

வெறுப்புகளுக்கியைய ஆட்சியதிகாரம் செய்யும் வாயில் திறந்துபட்டது. நபிகளார் தமது காலத்தில் அரசர்கள், ஆட்சியாளர்களுடன் மேற்கொண்ட த..வா அணுகுமுறைகள் தடம்மாறிச் செல்லலாயின. அண்ணலார் ஒரு விடயத்தில் தெளிவாக இருந்தார்கள். அரசர்கள் இஸ்லாத்தைத் தழுவினால் ஆட்சியிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள். அவர்களது பிரதேசம் இன்னொரு பிரதேசத்துடன் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஆனால் புதிய நிலைமையோ சிறிது சிறிதாய் வளர்ந்து கொண்டிருந்த உம்மத்துக்குள்ளே பாரிய நெருக்கடிகளையும் சிந்தனைச் சிக்கல்களையும் தோற்றுவித்து விட்டது. மக்கள் மத்தியில் அரசியல் சீற்றம் பெருகி வரும் நிலையில் அதனைத் தணித்து அவர்களது கவனத்தைத் திசை திருப்பிவிடும் முனைப்பில் புதுப்புது சிந்தனைகளையும் கொள்கைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு ஆதரவாக மார்க்க ரீதியான ஆதாரங்களையும் கற்பிதம் செய்யலாயினர். அவற்றுள் ஒன்று தான் 'தலைமைத்துவ அதிகாரம்' என்ற விவகாரம். இது 'இல்முல் கலாம்' எனும் கலையின் ஓர் அம்சமாகக் கொள்ளப்பட்டு அகீதா விவகாரங்களுள் ஒன்றாக மாற்றப்பட்டு விட்டது. அரசியல் சம்பந்தப்பட்ட இந்த விடயம் இதுவரை காலமும் பொது மக்கள் நலன் சார்ந்து, அவர்களது அத்தியாவசிய மற்றும் ஆடம்பர நலன்களை அல்-குர்ஆனும் ஸுன்னாவும் அனுமதித்த வழிமுறைகளில் நிறைவு செய்வதற்கான ஒரு துறையாக இருந்து வந்தது. இதுவே மாற்றமுற்று ஈமான், குப்ர், வழிகேடு, பித்அத், உம்மத்தை விட்டும் வெளிச் செல்லல் முதலான சொல்லாடல்களால் கையாளப் படும் அகீதா சம்பந்தப்பட்ட ஒரு விவகாரமாக மாறி விட்டது. இதன் விளைவாக, இஜ்திஹாதுக்குட்பட்ட நலன்களை மையப்படுத்தித் தீர்மானிப்பதற்குரிய உலக விவகாரங்களுக்கும் இஜ்திஹாதுக்குட்பட முடியாத நேரடியான வழிகாட்டல்களுக்கும் இடையில் கலப்பும் குழப்பமும் ஏற்படலானது.

சட்டவியல் அறிஞர்கள் உஸூலுல் பிக்ஹ் எனும் கலையை உருவாக்கினார்கள். புதிய சட்டப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வின் போது அவர்களை நெறிப்படுத்துவதற்கான ஒரு கலையாக அது அமைந்தது. தலைமைத்துவ மற்றும் அரசியல் அதிகாரம் பற்றிய விவகாரங்களில் ஈடுபட்டவர்கள் அவை குறித்த ஆய்வுகளுக்கு 'உஸூலுல் பிக்ஹ்' முறைமை போதுமானதல்ல எனக்கருதி, 'இல்முல் கலாம்' எனும் கலையைப் பிரயோகிக்கலாயினர். வேதம் வழங்கப் பெற்றவர்களால் இஸ்லாமிய அகீதா தொடர்பாக எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்குப் பதில் தருவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததே இல்முல் கலாம். இஸ்லாமிய

லா இலாஹ இல்லல்லாஹ் என்ற திக்ரை சொல்வார். இவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது.

தளத்தில் உருவான பல்வேறு சிந்தனைக் குழுக்களும் இல்முல் கலாமின் அனைத்து வகையான தர்க்க சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாயின. ஒவ்வொரு சிந்தனைப் பிரிவினரும் இல்முல் கலாமின் தர்க்கவியல் விதிகளைத் தத்தமது பிரிவின் நம்பிக்கைகளைச் சரியெனக் காட்டவும், அடுத்தடுத்த பிரிவினரை 'குப்ர்', 'பித்அத்' பட்டங்கள் சூட்டி இகழ்ந்துரைக்கவும், மீட்சி பெற்றோர் தாம் மாத்திரமே எனக் கற்பிதம் செய்து தம்மவரல்லாதாரை உம்மத்திலிருந்து வெளியேற்றி விடவுமே பிரயோகம் செய்தனர்.

மேலும் ஒரு தவறான சிந்தனையும் இதனுடன் இணைந்து கொண்டது. அதாவது 'அல்-குர்ஆன் பல்வேறு பார்வைகளுக்கு இடம்பாடானது'(2)

(2) இந்தக் கருத்தை அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக சொல்லப்படுகிறது. அவர் கவாரிஜ்களுடன் வாதிடுவதற்காக இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை அனுப்பிய போது 'அவர்களுடன் அல்-குர்ஆனைக் கொண்டு வாதிடாதீர்கள். ஏனெனில் அல்-குர்ஆன் பல பார்வைகளுக்கு இடம்பாடானது. நீங்கள் ஒன்று சொல்வீர்கள்; அவர்கள் வேறு ஒன்று சொல்வார்கள். மாற்றமாக அவர்களுடன் ஸுன்னாவைப் பயன்படுத்தி வாதிடுங்கள். அப்போது அவர்களுக்கு தப்பிக் கொள்ள வாய்ப்பிருக்காது.' இமாம் ஸுயூத்தி அவர்கள் இக்கூற்றை இமாம் இப்னு ஸஃத் அவர்கள் தனது தபகாத் எனும் நூலில் குறிப்பிடுவதாகச் சொல்கிறார். ஆனால் இமாம் ஸுயூத்தி அவர்கள் இந்த வார்த்தையை சார்பானதாகவே காண்கிறார். ஏனெனில், பல பார்வைகள் என்பதை அவர் பல கருத்துக்களில் பயன்படுத்தப்பட முடியுமான சொற்கள் என விளங்கப்படுத்தினார். ஆனால் உண்மை அவ்வாறல்ல! இதே கருத்தையே இமாம் முகாதில் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த, இந்தக் கூற்றின் ஏனைய அறிவிப்பாளர் வரிசைகள் அனைத்தும் விமர்சனத்திற்குட்பட்டவை. அது பேசும் உள்ளடக்கக் கருத்தைப் பொறுத்தவரையில் அதற்குப் பல விளக்கங்கள் சொல்லப்பட முடியும். ஒன்று, கவாரிஜ்கள் குர்ஆன் அல்லாத ஒன்றை ஆதாரமாகக் கருதுவதில்லை. எனவே, குர்ஆன் அல்லாத ஒன்றை வைத்து அவர்களுடன் வாதிட்டால் நாம் ஆதாரமாக ஏற்காத ஒன்றை வைத்து எம்முடன் வாதிடுகிறீர் என்று சொல்வர். எனவே அலீ ரழியல்லாஹு அன்ஹு அவ்வாறு கூறியிருக்க வாய்ப்பில்லை. அடுத்து, அல்-குர்ஆன் ஒரே விடயத்தை விளங்கப்படுத்தக் கூடியது என்பதை அல்-குர்ஆனே கூறுகிறது. எனவே, அல்-குர்ஆன் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள சிலேடைகளும் பல் பொருள்களும் உண்மையில் மனித மொழியின் விதிகள் அல்லது மொழியியலாளர்களின் பேச்சில் வெளிப் படுபவை. இவற்றை அல்-குர்ஆனுக்குப் பொதுமைப்படுத்த முடியாது. இதுபற்றி ஆரம்ப காலத்திலும் நவீன காலத்திலும் பல அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். இமாம் இப்னு தைமிய்யா அவர்கள் சிலேடையையே மறுத்திருக்கிறார்கள். இப்போது பல் பொருளை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? சில அறிஞர்கள் அல்-

என்பதாகும். ‘அல்-குர்ஆனின் வசனங்கள் மிகவும் பொதுப்படையானவை; விரிவாகத் தனித்தனி விடயங்களை அவை பேச மாட்டா’ என்பதே அவர்களது நிலைப்பாடு. எனவே இவர்கள் தத்தமது வாதங்களையும் இல்முல் கலாம் விதிகளையும் நியாயப்படுத்துவதற்கு ஸுன்னாவை மாத்திரமே பயன்படுத்திக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து எழுந்ததே ஹதீஸ்கள் இட்டுக் கட்டப் படும் அவலம். தமது பிரிவினை வாத சிந்தனைகளுக்கு ஆதரவாக ஹதீஸ்களை இட்டுக் கட்ட முனைப்புக் கொண்ட குழுக்களுக்கு இது களம் அமைத்துக் கொடுத்தது. மட்டுமன்றி உம்மத்தின் உள்ளே பல்வேறு வடிவங்களிலான குழுச் சிந்தனைகள் வலுப் பெறவும் இடம் கிட்டியது. இந்த சிந்தனைக் குழுக்கள் மத்தியில் காணப்பட்ட பொதுப் பலவீனங்கள் காரணமாக, சிற்சில விவகாரங்களில் அவை நெகிழ்வுப் போக்கினைக் கையாண்டன. ஆர்வமூட்டல், எச்சரிக்கை செய்தல் வகையிலான ஹதீஸ்களது அறிவிப்பாளர் வரிசைகளின் பரீட்சையின் போது காட்டப்பட்ட தளர்வான போக்கினை இதற்கு ஓர் உதாரணமாகக் காட்டலாம். ‘முஸ்லிம் உம்மத் பல குழுக்களாகப் பிரியும்; அதில் ஒன்று தான் வெற்றி பெறும்’ என்ற கருத்திலமைந்த ஹதீஸுக்கான(3) பரவலான ஏற்பு நிலை மற்றோர்

---

குர்ஆனில் வந்துள்ள ‘குர்உ’ என்ற சொல்லை பல் பொருள் சொல்லுக்கான உதாரணமாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் இது பல் பொருள் சொல் அல்ல. மாற்றமாக இது அறபுக் கோத்திரங்கள் மத்தியில் காணப்பட்ட வேறுபட்ட பிரயோகங்களாகும். சிலர் ‘குர்உ’ என்ற சொல்லுக்கு ‘சுத்த காலம்’ என்ற பொருளை வழங்கினர். இது பல் பொருள் என்ற வகையில் உள்ளடங்குவதில்லை.

(3) நபியவர்களது ஹதீஸ்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ‘அல்-ஜமாஆ’ என்ற பிரயோகம் உண்மையில் ‘உம்மத்’ என்ற கருத்தையே குறிக்கிறது. அந்த வகையில் நபியவர்கள் காலத்தில் ஜமாஅத்தை விட்டும் வெளிச் செல்லுதல் அல்லது, ஜமாஅத்திற்கு முரணாக செயற்படுதல் என்பதன் பொருள் உம்மத்தை விட்டும் வெளிச் செல்லுதல் அல்லது முரணாகச் செயற்படுதல் என்றே கருதப்பட்டது. ஏனெனில் உம்மத் என்பது தான் அல்லாஹ் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தும் வகையில் செய்த அருளாகும். இந்த உம்மத்துடன் தான் பயன், நடுநிலை போன்ற இன்னும் பல சிறப்புக்கள் இணைத்துக் கூறப்பட்டன. இந்த உம்மத்தை விட்டும் வெளிச் செல்வது குறித்து தான் நபியவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். இந்த உம்மத்தினரின் ஈமானிய உள்ளங்களிடையே தான் அல்லாஹ் பிணைப்பை ஏற்படுத்தி அவர்களை உம்மத்தாகக் கட்டியெழுப்பியதாகக் குறிப்பிடுகிறான். அதனால் ஜமாஅத் என்ற பிரயோகம் தனிக் குழுக்களையும் மத்ஹபுகளையும் இயக்கங்களையும் குறிக்க மாட்டாது. மாற்றமாக அவற்றின் செயற்பாடுகள் சீராக

உதாரணமாகும். இல்முல் கலாம் தர்க்கவியலாளர்கள் இந்த ஹதீஸை

---

அமையும் பட்சத்தில் அவை உம்மத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும். ஆனால் அவை மாத்திரம் உம்மத்தாகக் கருதப்பட மாட்டாது.

அடுத்து, உம்மத் பிளவு படும் என்றும் ஒரு பிரிவினர் தான் மீட்சி பெறுவர்; ஏனைய குழுக்கள் நரகத்திற்குப் போய்விடும் என்று வந்துள்ள ஹதீஸைப் பொறுத்தவரையில், இந்த ஹதீஸ் மாத்திரமன்றி இன்னும் பல பலவீனமான ஹதீஸ்கள், ஸஹீஹான ஹதீஸ்கள் போன்று சமூகத்தில் பிரபல்யப்படுத்தப் பட்டு, அவற்றின் ஊடாக சமூகத்தில் பிளவுச் சிந்தனை வலுவூட்டப்படுகிறது. இந்த ஹதீஸும் அதன் அறிவிப்பாளர் வரிசையும் உள்ளடக்கமும் அடிப்படையில் பலவீனமானது. ஆனால் பிளவுச் சிந்தனை இதன் மூலம் வலுவூட்டப்படுகிறது. ஒவ்வொரு பிரிவினரும் தாமே மீட்சி பெற்ற, சுவர்க்கத்திற்குரிய பிரிவினர் என்பதையும் ஏனையோர் வழிகேடர்கள் என்பதை நியாயப்படுத்தவும் இந்த ஹதீஸைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தக் கருத்தை சமூக மயப்படுத்துவதன் ஊடாகத் தான் உண்மையில் இந்த ஹதீஸுக்கான பிரபல்யமும் கிடைத்துள்ளது. ஹதீஸ் பிரபல்யமாகி விட்டதால் அதனுடைய ஆதாரபூர்வத் தன்மையைத் தேடும் வேலையை விட்டு விட்டார்கள். பல குறைபாடுகளையும் ஆபத்தான விளைவுகளையும் கொண்ட இந்த ஹதீஸ் மாத்திரம் இல்லை எனின் கோட்பாடுகள், சித்தாந்தங்கள், சிந்தனைக் குழுக்கள் பற்றிய இந்தக் கலையே தோன்றியிருக்க மாட்டாது. அதற்கு இந்தளவு பிரபல்யமும் முக்கியத்துவமும் ஏற்பட்டிருக்க மாட்டாது.

உம்மத் பிளவுபடும் என்ற ஹதீஸ் பின்வருமாறு அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது: "யூதர்கள் எழுபத்தி ஒன்று அல்லது எழுபத்தி இரண்டு குழுக்களாகப் பிரிந்தனர். கிறிஸ்தவர்களும் எழுபத்தி ஒன்று அல்லது எழுபத்தி இரண்டு குழுக்களாகப் பிரிந்தனர். எனது உம்மத்தினர் எழுபத்தி மூன்று குழுக்களாகப் பிரிவர்". இது பல ஸஹாபாக்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பல அறிவிப்பாளர் வரிசைகளில் அறிவிக்கப்படுவதால் இது ஸஹீஹ் என்ற தரத்தைக் கொண்டது என்றும் குறிப்பிடுவர்.

நான் கருதுகிறேன்: சிலர் இந்த ஹதீஸை வேறு சில ஹதீஸ்களைக் கொண்டு பலப்படுத்த முயன்றனர். உண்மையில் அவர்கள் அந்த ஹதீஸ்களை பிழையாகப் புரிந்து கொண்டமையினாலேயே அது நிகழ்ந்துள்ளது. உண்மையில் அவை இந்த ஹதீஸைப் பலப்படுத்தவில்லை. உதாரணமாக, "எனது உம்மத்தில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வின் வெற்றி வரும் வரை சத்தியத்தில் நிலைத்து நிற்பார்கள்" என்ற ஹதீஸ். இது புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் பதிவாகியுள்ளதாகும். இந்த ஹதீஸில் வந்துள்ள 'ஒரு பிரிவினர்' என்பதன் பொருள் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பலவீனமான ஹதீஸில் குறிப்பிடப்பட்ட மீட்சி பெறும் குழுவினர் என்பதாகும் என அவர்கள் விளக்கமளிக்க முற்பட்டனர். ஆனால் இந்த ஹதீஸ் கூறும் கருத்து என்னவெனில், உம்மத்தைப் பொறுத்தவரையில் முன்னைய சமூகங்களைப்

நாளடைவில் இல்முல் கலாமுடன் சம்பந்தப்பட்ட தனியான ஒரு கலை வடிவமாக மாற்றியமைத்தார்கள். அதுவே 'இல்முல் மிலல் வந்நிஹல்' எனும் கோட்பாட்டு சித்தாந்த சமூகங்கள் பற்றிய கலை. இதற்கு அத்திவாரமாய் அமைந்தது அபுல்-ஹஸன் அல்-அஷ்அரி (மறைவு ஹி.324) அவர்களது 'இஸலாமியர்களின் கட்டுரைகளும் தொழுகையாளிகளின் முரண்பாடுகளும்' என்ற நூல். இந்தப் பிரிவினைகள் பற்றிப் பேசிய இமாம் இப்னு ஹஸம் (மறைவு ஹி. 456) இந்த உம்மத் யூத - கிறிஸ்தவ மதங்களுடன் கொண்டிருந்த முரண்பாடுகளை மட்டுமல்லாது, உம்மத்தினருக்கு மத்தியிலேயே காணக் கிட்டிய முரண்பாடுகளையும் ஒரு சேரத் தொகுத்து 'கோட்பாட்டு, சித்தாந்த சமூகங்களுக்கு இடையிலான வேற்றுமைகள்' எனும் தலைப்பில் நூலுருப்படுத்தினார். அதாவது அன்னார் இம்முரண்பாடுகளுக்கிடையில் பாரிய வேற்றுமைகளைக் காணவில்லை. தொடர்ந்து இமாம் ராஸி (மறைவு ஹி. 606) இதே பாங்கில் 'முஸ்லிம்களதும் முஷ்ரிக்குகளதும் நம்பிக்கைகள்' என்ற தலைப்பில்

---

போலன்றி, முழு சமூகமும் மத மாற்றத்திற்கோ அல்லது வழி பிறழ்விற்கோ உட்பட மாட்டாது. ஆனால் ஏனைய சமூகங்களில் இது நிகழ்ந்தது. உதாரணமாக பனூ இஸ்ரவேலர்கள் மூஸாவையும் ஹாரூனையும் தவிர ஏனைய அனைவரும் மாட்டை வணங்கி மதமாற்றத்திற்கு உட்பட்டனர். இந்தக் கருத்தை வேறு சில ஹதீஸ்களும் வலியுறுத்துகின்றன. "எனது உம்மத் ஒரு தவறின் மீது அல்லது வழிகேட்டின் மீது ஒன்றுபட மாட்டாது" என்ற ஹதீஸை உதாரணமாகக் கூறலாம். இந்தக் கருத்தில் சுமார் பதினெட்டு ஹதீஸ்கள் காணப்படுகின்றன. அந்த ஹதீஸ்களை நாம் 'அல்-மஹ்ஸூல்' எனும் நூலிற்கான எனது குறிப்புரையின் போது இஜ்மா என்ற தலைப்பின் கீழ் திறனாய்வு செய்திருக்கிறேன்.

முஸ்லிம் உம்மத் பிளவு படும் என்ற ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் பலவீனமுள்ளது என்ற கருத்துக்கு அப்பால் சென்று அதன் உள்ளடக்கத்தை நோக்கினால் அங்கு பல பிரச்சினைக்குரிய இடங்கள் இருக்கின்றன. இந்த ஹதீஸ் படி இந்த உம்மத் யூத கிறிஸ்தவர்களை விடவும் மோசமானது; அவர்களை விடவும் அதிகமாக பிளவுபடுகிறது; நரகிற்குச் செல்லும் பிரிவுகளிலும் யூத கிறிஸ்தவர்களை விடவும் அதிகம்; ஆனால் அல்லாஹ் இந்த உம்மத்தை இதற்கு மாற்றமாக புகழ்ந்துரைத்துள்ளான். "பின்னர் நாம் தேர்ந்தெடுத்த அடியார்களுக்கு நாம் வேதத்தை வாரிசாக்கினோம். அவர்களில் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்பவர்களும் உண்டு; கடமையுடன் போதுமாக்கிக் கொண்டவர்களும் உண்டு; அல்லாஹ்வின் அனுமதியுடன் நன்மைகளை முந்திக் கொண்டு செய்பவர்களும் உண்டு; இதுவே பெரும் பாக்கியமாகும்." **(பாதிர்:32)** இங்கு எவரும் உம்மத் என்ற வட்டத்தை விட்டும் வெளியேற்றப்படுவில்லை. அது போல் இந்த ஹதீஸ், அல்-குர்ஆனின் ஒற்றுமை குறித்த வசனங்கள், பிளவுபடுக்கூடாது என்ற வசனங்கள் அனைத்திற்கும் முரணாக இருப்பதுடன் பிளவுக்கும் வித்திடுகிறது.

ஒரு நூலை வடிவமைத்தார். அது போலவே மேலும் சிலர், முஸ்லிம் உம்மத்துகள் மத்தியில் காணப் படும் பிரிவுகளை மாத்திரம் அலசினர். அவற்றுள் குறிப்பிடத் தக்கன: இமாம் அல்-இஸ்பிராயீனி (மறைவு ஹி. 471) அவர்களது 'அத்தப்ஸீர் பித்தீன்'; இமாம் அப்துல்-காதிர் அல்-பக்தாதி (மறைவு ஹி. 429) அவர்களது 'அல்பர்க் பைனல் பிரக்' என்பன.

## 4. இல்முல் கலாமும் குழு வாதம் ஆழப்படுத்தப்படலும்

இமாம் ஷாபிஈ முதலான அறிஞர்கள், இல்முல் கலாம் சார்ந்தவர்கள் குறித்துப் பேசிய மறுப்புரைகள் மிகவும் கடுமையானவையாகக் காணப்பட்டமைக்கு அவை பிரிவினைகளை நியாயப்படுத்துவனவாக விளங்கியமை முக்கிய காரணமாகும். மேலும் இந்த சிந்தனைக் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் முற்றுப் பெறாது தொடர்ந்திருந்தமைக்கு அரசியல் காரணங்களும் துணை பயந்தன. உமையாக்களும் அப்பாஸியர்களும்.. அது போலவே உமையாக்களும் ஹாஷிமீக்களும் தத்தமது அரசியல் நலன்களுக்காக இவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். மோதல்கள் ஆட்சியாளர்களது ஆதரவுடன் தொடர்ந்து நீடித்தன. ஹி. 132 இல் அப்பாஸியர்கள் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் நடந்த மோதல்கள்; அவர்கள் தமது முன்னைய நாள் நண்பர்களான அலவிய்யூன்கள், தாலிபிய்யூன்கள், ஹாஷிமிய குழுக்களுக்கு எதிராகச் செயற்பட்டமை; உஸ்மானீக்கள், ஷுஊபிக்களது தோற்றம்; ஆட்சி பீட குடும்பத்தோரின் பலவீனமான கட்டங்களில் அவர்களின் வாரிசுரிமைக்கு எதிராகச் சதி செய்த ஸல்ஜுக்கியர்கள் மற்றும் புவைஹிகள் கலந்து கொண்ட மோதல்கள்; அது போல், எகிப்தில் பாதிமிய ஆட்சியின் தோற்றம் முதல் உஸ்மானிய - ஸபவீக்களின் மோதல்கள் வரை இது நீண்டு செல்கின்றது.

முஸ்லிம் உம்மத்தின் பிளவை ஆழப்படுத்துவதில் இவையனைத்தும் பங்களிப்புச் செய்துள்ளன. பிளவுகள் முடிவுக்காளாகக் கூடிய சந்தர்ப்பங்கள் நெருங்கி வரும் வேளைகளிலெல்லாம் அல்லது, மக்கள் அவற்றை மறந்து விட விழைந்த போதெல்லாம் பிரிவினைகள் புதுப்பிக்கப்பட்டு மீள உயிரோட்டம் பெறச் செய்யப்பட்டன. காலா காலமாக அரசியல் குறுங்குழு வாதம் முஸ்லிம் உம்மத்தைப் பலவீனப்படுத்துவதில் பாரிய பங்காற்றியுள்ளது.

பிரித்தானியா, இந்தியத் துணைக் கண்டத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தி(4) அங்கு முஸ்லிம்களின் ஆட்சியதிகாரத்தை ஒரு முடிவுக்குக்

(4) கிழக்கிந்தியக் கம்பனி 1600ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. பிரித்தானிய அரசி முதலாம் எலிஸபத் அவர்கள் அந்தக் கம்பனிக்கு இந்தியா உட்பட அவர்களது ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட தென்கிழக்காசியாவின் அனைத்துப் பிரதேசங்களையும்

கொண்டு வந்து விட்டது. அத்துடன் அமைதி கண்டு விட முடியாது; 'முஸ்லிம் அபாயம்' என்ற ஒன்று இனிமேல் தலையெடுத்து விடாது இருக்க ஆவண செய்தல் அவசியம். அதற்குச் சரியான மார்க்கம், முஸ்லிம் உம்மத்தைப் பிளவுகளில் மூழ்க வைத்து விடுவதே. உம்மத்தார் மத்தியில் ஏற்கனவே இருந்து வந்த குழுவாத, இனவாத மோதல்கள் தணிந்து விடாதவாறு அவற்றுக்கு மென்மேலும் வலுவூட்டும் வகையிலேயே பிரித்தானியாவும் அதன் நேச நாடுகளும் மேற்குலகம் முழுவதுமே நடந்து வந்தன.

விளைவாக அறபுலகிலிருந்து உஸ்மானியர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்ட மேற்குலகத்தார், சிதறிய வடிவில் தேசிய அரசுகளையும் நாடுகளையும் உருவாக்கி வைத்தார்கள். அவற்றின் எல்லைகள், பிரதேசங்களுக்கிடையில் ஓயாமல் தொடரும் பிரச்சினைகளுக்கு வழியமைக்கும் வகையிலேயே வகுக்கப்பட்டன. புதிய நாடுகளதும் அரசுகளதும் பரஸ்பர முரண்பாடுகள் காரணமாக அவற்றிடையே மோதல்கள் விளைந்து, வளங்களும் செல்வங்களும் அழிந்து போகலாயின. பலமிக்க நாடுகளது தயவும் அனுசரணையுமின்றி நாடுகளை நடாத்திச் செல்ல முடியாதென்ற நிலை தோற்றம் பெற்றது. தமது அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்புடனும் கூட்டுறவுடனும் வாழும் நிலையானது எவ்வாறிருப்பினும் தத்தமக்கிடையே நல்லுறவைக் கூட பேணாத ஒரு நிலைக்கே அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். சிற்சிறு பிரச்சினைகளின் போது கூட அனைவரும் ஏகாதிபத்திய சக்திகளையே நாடும் அவல நிலைக்கே ஆளாகியுள்ளனர். சுயமான தீர்மானங்கள் மேற்கொள்ளும் திராணியற்றனவாகவே இந்த நாடுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இத்தகு பிளவுபட்ட நிலையில் முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு குறித்த பிரேரணைகள் முன்வைக்கப்படின் யார் தான் அவற்றுக்கு செவி சாய்ப்பார்? ஏனெனில் உம்மத் என்ற எண்ணக்கரு மக்கள் மத்தியில் நின்றும் அகன்று, அந்த இடத்தை பிராந்திய, கோத்திர, குழுவாத, கட்சிவாத சிந்தனைகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. புராதன சிந்தனைகளுடன் நவீன சிந்தனைகளும் கலந்து உருப்பெற்றுள்ள அதிசயமான புதிய சிந்தனையொன்று பிரிவினையையும் குறுங்குழு வாதத்தையும் மேலும் அகலப்படுத்துவதாகப் பணியாற்றி வருகின்றது. அதனால் உம்மத் கோட்பாடு எவ்வித தாக்கமும் செலுத்தவியலாத, பலமிழந்த, அந்நியமான

---

ஆளும் அதிகாரத்தை வழங்கினார். இதனால் தனித்து ஒரு வியாபாரக் கம்பனி என்ற நிலையிலிருந்து பிராந்தியத்தை ஆளும் நிறுவனமாக அது பரிணாமம் அடைந்தது. அதற்காக பிரித்தானியாவின் அரசியல் மற்றும் இராணுவ உதவிகள் வழங்கப்பட்டன. 1858களில் இந்திய மக்கள் புரட்சி ஆரம்பிக்கும் வரை இந்நிலை தொடர்ந்தது.

ஒரு கோட்பாடாக மாறி விட்டுள்ளது. ஏற்கனவே சமூகத்தை வழிநடாத்திச் சென்ற உம்மத் முறைமை விட்டுச் சென்றுள்ள தடயங்கள், அதிசயிக்கத் தக்க வகையில் இன்னமும் அழியாமல் இருக்கின்றன என்பது உண்மை தான். ஆனால் இந்தப் புதிய பிணைப்புகளின் தாக்கத்தைத் தாண்டிச் செல்லும் அளவுக்கு வலுவானவையாக அவை இல்லை.

முஸ்லிம் உம்மத்தை மீளக் கட்டியெழுப்ப முஸ்லிம்கள் விரைந்து செயல்படவில்லையாயின் இந்த உலகில் அவர்களுக்கு இடமில்லாது போய்விடும். ஆட்சியாளர்களும் சரி; பொது மக்களும் சரி; எந்தக் கொள்கையினராயினும்.. எந்த மத்ஹபைப் பின்பற்றுவோராயினும்.. நவீனத்துவ வாதிகளாயினும்.. மரபுவழி சார்போராயினும்.. முஸ்லிம் உம்மத் என்ற ஒன்று இல்லாதவிடத்து அவர்களுக்கு எஞ்சியிருக்கப் போவது, இன்றைய சூழலில் அனுமதிக்கப்பட்டிருப்பது போன்றதோர் இழிவான வாழ்வு மட்டுமே.

இந்த உம்மத்தின் ஆரம்பத்தைச் சற்றே கவனியுங்கள்! அல்லாஹ்வால் மாந்தர் தம் உள்ளங்கள் பிணைக்கப்பட்டிருந்தன; இறுதித் தூதின் ஒளி பரவியிருந்தது; அழைப்பு உலகளாவியதாயிருந்தது; இறைமை, வேத நூலை மூலமாய்க் கொண்டிருந்தது; சட்ட ஒழுங்குகள் அருள் நிறையப் பெற்றிருந்தன; அத்தனையையும் கண்ணியமிக்க தூதுவர் ஒருவர் நடைமுறை வாழ்வில் செயற்படுத்திக் காட்டினார். அன்னவரை வல்ல அல்லாஹ் அகிலத்தார் அனைவருக்குமே ஓர் எச்சரிக்கையாளராகவும் சுபசோபனம் சொல்பவராகவும் அனுப்பி வைத்தான். இன்று உம்மத் கோட்பாட்டைச் சிதைத்துள்ள அத்துணை தவறான சிந்தனைகளையும் கலைந்து அதனை மீளக் கட்டியெழுப்புவது ஆரம்பத்தில் இடப்பட்ட அத்திவாரத்தின் அதே அடிப்படைகளில் தான் சாத்தியமாகும். வேறு எந்த அடிப்படைகளும் இம்முனைவில் பயனளிப்பனவல்ல; உம்மத்தை மீளக் கட்டியெழுப்ப அவை உதவா என்பது தெளிவு.

## பகுதி மூன்று

# இல்முல் கலாமும் உம்மத்தின் பிரிவினையும்

### *1. இல்முல் கலாமின் தோற்றம்*

பிரிவினையை ஆழப்படுத்துவதில் இல்முல் கலாம் பதித்திருந்த தாக்கங்கள் குறித்து நான் ஏற்கனவே விவரித்திருக்கின்றேன். ஆதாரங்கள் முன்வைக்க வேண்டிய அவசியங்கள் இல்லாத அளவு தெளிவானதோர் உண்மை இது. முஸ்லிம் உம்மத் எதிர் கொள்ள வேண்டியிருந்த கசப்பான நிகழ்வுகளை மீள்பார்வை செய்து காணும் போது, இல்முல் கலாமின் நோக்கமே பிரிவினைக்குத் தூபமிடுவது தான் போலத் தோன்றுகின்றது. இஸ்லாமிய சிந்தனைப் பிரிவுகள், இஸ்லாமியத்துவ ஆய்வுகள் பற்றியனவான ஆக்கங்கள் கூட இல்முல் கலாம் எல்லைக்குள் மாத்திரமே தம்மை வரைந்து கொண்டுள்ளன.

ஆக, இல்முல் கலாமை மையப்படுத்திய இஸ்லாமிய வரலாற்றில் மேலும் சில கலைகள் தோற்றம் பெற்றன. சிந்தனைப் பிரிவுகள் பற்றிய 'உலூமுல் பிரக்', கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் பற்றிய 'அல்-மிலல் வந்நிஹல்', நம்பிக்கை கோட்பாடுகள் பற்றிய 'அகாயித்' முதலியன சில உதாரணங்கள். இவை யாவும் இன்று வரை முஸ்லிம்களது பிரயோகத்தில் காணப்படுவன. மட்டுமன்றி இன்றைய பல்கலைக்கழகங்களில் இவையே த.்.வா பீடம், உஸூலுத்தீன் பீடம், அகீதா கற்கை நெறி முதலான சிறப்புத் தேர்ச்சிக்குரிய நெறிகளாக இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் இல்முல் கலாமின் கிளைகளாகத் தோற்றம் பெற்றனவே.

அல்-குர்ஆனின் மொழி மிகப் பிரதானமான ஐந்து நம்பிக்கைகளைக் குறிப்பிட 'ஈமான்' என்ற சொல்லையே பயன்படுத்தியிருக்கிறது. அதற்கு எதிர் கருத்தில் பயன்பட்டிருப்பது 'குப்ர்' எனும் சொல். பின்னர்

அப்பாஸியக் காலப் பகுதியில் ‘ஈமான்’ என்ற சொல்லுக்குப் பகரமாக ‘அகீதா’(1) என்ற சொல் பிரயோகமாகியது. ‘அல்-குர்ஆன் படைக்கப்பட்டது’

---

*(1)* ஹி. *143*ம் ஆண்டு இஸ்லாமியக் கலைகள் தொகுக்கப் படும் காலம் தொடங்கியிருந்தது. இது அப்பாஸியக் காலத்தின் ஆரம்பப் பகுதியாகும். இக்காலத்தில் நம்பிக்கை சார்ந்த சட்டங்கள் பற்றிய ஆய்வுகள் தொடங்கப்பட்டிருந்தன. இவ்வாய்வுகள் இதற்கான ஒரு பெயரைப் பெற்றுக் கொள்ளும் திசையை நோக்கிப் பயணித்தன. அவற்றில் ‘இல்மு உஸூலுத்தீன், அல்-பிக்ஹுல் அக்பர், இல்முத் தௌஹீத், இல்முல் அகாயித் அல்-இஸ்லாமிய்யா, இல்முல் கலாம்’ போன்றன முக்கியமானவை. இவற்றில் மிகவும் பழமையான பெயர் ‘இல்முல் கலாம்’ என்பதாகும். அதனை முதன் முதலில் இமாம் அபூ ஹனீபா அவர்கள் பயன்படுத்தியிருந்தார்கள். இமாம் அபூ ஹனீபா அவர்கள் (வபாத் ஹி. *150*) தனது பிரபல்யமான அல்-பிக்ஹுல் அக்பர் என்ற நூலைத் தொகுத்தார்கள். அதாவது, அன்றைய நாட்களில் வணக்க வழிபாடுகள் மற்றும் ஏனைய மனித உறவுகள் பற்றிய பிக்ஹ் சட்டங்கள் தோற்றம் பெற்ற பொழுது, இரண்டு வகையான பிக்ஹுகள் வேறுபடுத்தப்பட்டன. ஒன்று பிக்ஹ் அக்பர் என்னும் நம்பிக்கை சார் அடிப்படைகள் பற்றியது; மற்றையது அதனை விடவும் சற்று தரத்தில் குறைந்த அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்ட கிளைச் சட்டங்கள் பற்றியது. இவை இரண்டும் இணைந்து தான் பிக்ஹ் பற்றிய மொத்த சிந்தனை எழுகிறது. அதனை, ‘ஒரு விடயத்தை, அதற்கு உரிமையானவை எவை? அதன் மீது கடமையானவை எவை? என்பவற்றுடன் புரிந்து கொள்வது தான் பிக்ஹ்’ என்று இமாம் அபூ ஹனீபா வரையறை செய்தார்கள். இமாம்கள் இஸ்லாமியக் கலைகளைத் தனித்தனியாகத் தொகுத்த போது நம்பிக்கைகள் சார்ந்த கலைக்கு ‘இல்முல் கலாம்’ என்ற பெயரை வழங்குவது அவர்களுக்கு தற்போது இலகுவானதாக மாறியிருந்தது. ஆனாலும் இமாம் இப்னு ருஷ்த் போன்ற சிலர் தொடர்ந்தும் ‘அல்-அகாயித், அகாயிதுல் மில்லா’ போன்ற பெயர்களை வழங்கி வந்தார்கள். அவர் எழுதிய நூல் தான் ‘தர்தீபுல் அதில்லா பீ அகாயிதில் மில்லா’ என்பதாகும். எனினும் நம்பிக்கை சார் விடயங்களைப் பேசவும் அது தொடர்பான விமர்சனங்களுக்குப் பதில் தரவும் பயன்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கு இல்முல் கலாம் அல்லது இல்முல் அகீதா போன்ற பெயர்களை வழங்குவதில் அனைத்து அறிஞர்கள் மத்தியிலும் உடன்பாடான ஒரு நிலைப்பாடு காணப்பட்டது. எவ்வாறாயினும் ஏற்கனவே நாம் குறிப்பிட்ட அனைத்துப் பெயர்களும் இந்தக் கலையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏனெனில் வரைவிலக்கணவியலாளர்கள் அறிவியல் கலைகளை வேறுபட்ட கோணங்களிலேயே பார்த்தனர். சிலர் இந்த பெயர் வேறுபாட்டை வேறுபட்ட காலங்களுக்குரியதாக நோக்கினர். அந்த வகையில் இல்முல் கலாம் என்ற பெயர் அல்லாஹ்வின் பண்புகள் மற்றும் வஹி போன்றவை பற்றிய கருத்தாடல்கள் நடைபெற்ற போது வழக்கத்தில் வந்தது என்றும் அதிலும் குறிப்பாக மு.்.தஸிலாக்களுக்கும் அஷ்அரீக்களுக்குமிடையில் அல்லாஹ்வின் வார்த்தைகள் ஆரம்பம் அற்றவையா? அல்லது இடையில் தோன்றியவையா? போன்ற வாதப் பிரதி வாதங்கள் பலமடைந்த

என்ற சர்ச்சை தொடங்கி, அதன் வாதாட்டங்கள் தொடர்ந்த நிலையில் 'இல்முல் கலாம்' என்ற சொற்பிரயோகம் புழக்கத்திற்கு வந்தது. அக்காலத்தில் இஸ்லாமியப் புலத்தில் மிக முக்கிய வாதப் பொருளாக விளங்கியது 'அல்-குர்ஆன் படைக்கப்பட்டது' பற்றிய சர்ச்சையே. அஹ்லுஸ் ஸுன்னாக்களில் சிலர் 'இல்முல் கலாம்' என்ற சொல்லின் இடத்தில் 'இல்முத் தவ்ஹீத்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும் அவற்றின் உள்ளடக்கங்களில் பாரிய வேறுபாடுகள் காணப்படவில்லை.

இவ்வாறான நிலையில் அல்-குர்ஆன் தந்துள்ள கலைச் சொற்களைப் பயன்படுத்தவதே பொருத்தமானது. அவற்றை விட்டு வேறொன்றை நாடிச் செல்வது அவசியமற்றது. ஏனெனில் அல்-குர்ஆன் முன்வைக்கும் நம்பிக்கை மிக இலகுவானது; எளிமையானது. அதனை நிறுவ, வித்தியாசமான ஆதாரங்களை அது காட்டித் தருகின்றது: 'படைப்பும் பரிபாலனமும்', 'அளவீடும் திட்டமிடலும்', 'புதுமை நோக்கு' முதலியன. இந்த ஒவ்வொன்றின் மூலமாக, குர்ஆனிய நம்பிக்கையை விளங்கி ஏற்றுக் கொள்ள முடிகின்றது; முழுமைப் பார்வையொன்றும் கிட்டுகிறது. இதன் மூலம் மனிதனால் அல்லாஹ்வுடனான தனது உடன்பாட்டை நிறைவேற்றவும் பூமியில் அவனது பிரதிநிதி என்ற பாத்திரத்தைச்

---

காலப் பகுதியில் இந்தப் பெயர் வழக்கத்தில் வந்தது என்றனர். அது போல், இல்முல் அகாயித் என்ற பெயர் நம்பிக்கை சார் விவகாரங்கள், குறிப்பாக அதனைத் தொகுத்தவர்களது பெயர்களுடன் இணைத்து வழங்கப்பட்ட போது அல்லது எந்த ஊரைச் சேர்ந்தவர்களுக்காக அந்தத் தொகுப்பு முன்வைக்கப்பட்டதோ அவர்களுடன் இணைத்து அந்தப் பெயர் வழங்கப்பட்ட போது, இல்முல் அகாயித் என்ற பெயர் அதிகம் வழங்கப்பட்டிருக்கிறது என்றனர். இந்த அடிப்படையில் வெளிவந்த நூல்களுள், இமாம் அபூ ஜஃபர் அத்தஹாவி அவர்களது (மறைவு ஹி. 331) 'அகீததுத் தஹாவிய்யா' என்ற நூலும் இமாம் இப்னு தைமிய்யா அவர்களது (மறைவு ஹி. 728) 'அகீததுல் வஸதிய்யா, அகீததுல் இஸ்பஹானிய்யா, அகீததுத் தத்மீரிய்யா' போன்ற நூல்களும் இமாம் கஸ்ஸாலி அவர்களது (மறைவு ஹி. 505) 'கவாஇதுல் அகாயித்' என்ற நூலும் இமாம் ஆமிதி மற்றும் பக்ருத்தீன் அர்ராஸி போன்றவர்களது நூல்களும் நஸீருத்தீன் அத்தூஸி அவர்களது (மறைவு ஹி. 671) 'தஜ்ரீதுல் இஃதிகாத்' என்ற நூலும் குறிப்பிடத் தக்கவைகளாகும். சிலர் 'இல்முத் தௌஹீத்' என்ற பெயரை இந்தக் கலையைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர். காரணம் தௌஹீத் என்பது ஏகத்துவத்தைக் குறிக்கிறது. ஏகத்துவம் பற்றிய ஆய்வு இந்தக் கலையின் பிரதான ஓர் ஆய்வுப் பகுதி என்றவகையில் அவ்வாறு பயன்படுத்தியுள்ளனர். இந்தப் போக்கை நவீன கால ஆய்வுகளில் அதிகம் காண முடிகிறது. இன்றைய பல்கலைக்கழக கற்கைகளில் 'இல்முல் அகீதா' என்ற சிறப்புக் கற்கைகளை உஸூலுத் தீன் பீடங்களில் காணமுடியும். இவை முதுமானி மற்றும் டாக்டர் பட்டங்களையும் கூட இக்கலையில் வழங்குகின்றன.

சரியாகக் கொண்டு நடாத்தவும் அவனது அமானிதத்தைக் காப்பாற்றவும் சோதனைகளை வெற்றி கொள்ளவும் கூலியை முழுமையாகப் பெற்றுக் கொள்ளவும் இயலுமாகிறது.

குர்ஆனிய நம்பிக்கையுடன், தனது அருள் நிறைந்த ஷரீஆத்தை வல்ல அல்லாஹ் இறக்கி வைக்கின்றான். அதன் மூலம் முழு மனித சமூகத்தினதும் சுமைகள் அகற்றப்படுகின்றன; விலங்குகளிலிருந்தும் விடுதலை கிடைக்கின்றது. இந்த நபித்துவமும் தூதுத்துவமும் இறுதியானவை(2) எனப் பிரஸ்தாபிப்பதன் மூலம், முஹம்மத்

(2) அல்லாஹுத் தஆலா தனது தூதுவர் பற்றி இவ்வாறு கூறியுள்ளான்: ”முஹம்மத் உங்களில் எவரது தந்தையாகவும் இல்லை” (அஹ்ஸாப்: 40). இந்த வசனத்திலிருந்து சிலர், நபித்துவம் நிறைவு பெற்றுள்ளது. தூதுத்துவம் இன்னும் நிறைவு பெறவில்லை என்ற கருத்தைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள் கவனிக்கத் தவறிய ஒரு விடயம் இருக்கிறது. தூதுத்துவத்திற்கான அடிப்படை நபித்துவம் தான். நபித்துவத்திலிருந்து தான் தூதுத்துவம் தோன்றுகிறது. அல்லாஹ் தஆலா ஒருவருக்கு வஹி அறிவிக்கின்றான் எனின், அந்த வஹியை பிறருக்கு எத்திவைக்கும் பொறுப்பை வழங்கினாலும் வழங்கா விட்டாலும் அவர் நபியாகவே கருதப்படுவார். தூதுத்துவம் என்பது வஹியை பிறருக்கு எத்திவைக்கும் பொறுப்பாகும். அந்த வகையில் நபித்துவத்தின் ஒரு பகுதியாகவே தூதுத்துவம் காணப்படுகிறது. ஒவ்வொரு தூதுவரும் நபித்துவக் கட்டம் ஒன்றைக் கடந்து தான் தூதுத்துவத்தை அடைந்து கொள்வார். முதலில் நபியாக இருந்து தான் பின்னர் தூதுவராக மாறுவார். ஆனாலும் ஷைத்தான் சிலரது உள்ளத்தில் பிழையான ஒரு விளக்கத்தைப் போட்டு விட்டுள்ளான். “முஹம்மத் உங்களில் எவரது தந்தையாகவும் இல்லை. மாற்றமாக அவர் அல்லாஹ்வின் தூதுவர்; நபிமார்களில் இறுதியானவர். அல்லாஹ் அனைத்து விடயங்களையும் அறிந்தவன்” (அஹ்ஸாப்: 40) என்ற அல்-குர்ஆன் வசனத்தைத் தான் பிழையாக விளக்கம் கொண்டுள்ளனர். அவர்கள் கூறுகிறார்கள்: தூதுத்துவம் இன்னும் நிறைவு பெறவில்லை. இந்த வசனம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னர் ஒரு தூதுவர் வர மாட்டார் என்ற கருத்தைக் குறிக்கவில்லை. மாற்றமாக அவருக்குப் பின்னர் ஒரு நபி வர மாட்டார் என்ற கருத்தை மாத்திரமே குறிக்கின்றது என்றனர். இப்னு அறபி அவர்கள் தனது புதூஹாத் என்னும் நூலில் இது பற்றிய நீண்ட விளக்கம் ஒன்றை முன்வைக்கிறார். இந்த விளக்கத்தால் பலர் தாக்கமுற்றுள்ளனர். அறபு மொழிக் கருத்திற்கும் அல்-குர்ஆன் நாடவந்த கருத்திற்குமிடையில் அவர்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள் என்று விளங்குகிறது. இது ஒரு தவறான நெறிபிறழ்ந்த கருத்து. அல்லாஹு தஆலா அவர் நபிமார்களில் இறுதியானவர் என்று சொல்வதன் மூலம் கண்டிப்பாக தூதுவர்களிலும் இறுதியானவர் என்பதைத் தான் சொல்கிறான். ஏனெனில் நபித்துவம் நின்று விட்டால் வஹி நின்றுவிடுகிறது. இப்பொழுது எந்த செய்தியை அந்தத் தூ துவர் மக்களுக்கு எத்திவைக்கப் போகிறார்? இப்போது அவர்கள் சொல்லலாம், அவர்

நபியவர்களுக்குப் பின்னால் இனியொரு தூதர் வர மாட்டார்; இனியொரு வேத நூல் வர மாட்டாது என வாக்களிக்கின்றான். இந்த நம்பிக்கையும் ஷரீஆத்தும் எளிமையானவை; கடைப்பிடிக்க இலகுவானவை. அல்-குர்ஆனுக்கு முன்னர் இருந்த வேதங்களில் காணப்பெற்ற சிக்கல்கள் இதில் இல்லை. இந்தப் பூமி மீது வாழ்கின்ற எந்த ஒரு மனிதனும் இந்த நம்பிக்கையினதும் ஷரீஆத்தினதும் எளிமையான உண்மைகளில் திருப்தி கண்டு கொள்ள முடிந்தது. அவனது உள்ளத்தில் அவை உறுதியாய் இருந்தன; நாவில் இலகுவாய் வெளிப்பட்டன; போலிக் கடவுளர்களதும் மதத் தரகர்களினதும் பிடியிலிருந்து அவனுக்கு விடுதலையளித்தன. என்றாலும் கூட, குர்ஆன் முன்வைத்த இந்த நம்பிக்கையும் ஷரீஆத்தும் எதிர்ப்புகளைச் சம்பாதிக்கலாயின. எதிர்த்தோர் முஷ்ரிக்குகள் மாத்திரமல்லர். வேதம் வழங்கப் பெற்றிருந்தோரும் அவர்களுக்குத் துணை போயினர். தூதுவரையும் அவர் கொண்டு வந்த சத்திய உண்மைகளையும் வேதம் வழங்கப் பெற்றிருந்தோர் நன்கே அறிந்திருந்தனர். என்றாலும் அவர்களிடத்திலிருந்த பொறாமையும் நெறி பிறழ்வுகளும் அவர்களது அறிவை மறைத்து விட்டன.

நபிகளாரின் காலத்தில் அல்-குர்ஆன் அருளப்பட்டு வந்த வேளையிலேயே அது கற்பித்த விசுவாசம், நம்பிக்கை என்பன எதிர்ப்புக்குள்ளாகி வந்தன. அதற்குப் பதில் வழங்கும் பொறுப்பை அல்-குர்ஆனே ஏற்றுக் கொண்டது; ஒவ்வொரு சந்தேகத்துக்கும் பதில் அளித்தது; நம்பிக்கைக் கோட்பாட்டின் ஒவ்வோர் அங்கம் தொடர்பிலும் விளக்கமளித்தது. அல்லாஹ் பற்றிய விசுவாசம் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன. அவற்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் அவனது பெயர்கள், பண்புகள் அவனால் ஆவன, ஆகாதன, ஆற்ற இயன்றன எனப் பல்வேறு விடயங்கள் குறித்து அல்-குர்ஆன் போதிய விளக்கமளித்துள்ளது. அன்றிருந்தோர் கொண்டிருந்த கடவுள் கோட்பாடுகள் அனைத்தும் வழிகேடானவை அல்லது வழிகேட்டுக்கு அடிகோலுபவை என்பது நிரூபனமானது. மலக்குமார்கள் குறித்து எழுப்பப்பட்ட ஐயங்களும்

---

அல்-குர்ஆனைத் தான் மக்களுக்கு எத்திவைப்பார் என்று. அவ்வாறானால் அவர் எல்லா மக்களுக்குமாக அல்லாஹ் தஆலா, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கி வைத்த தூதைத் தான் மக்களுக்கு எடுத்துச் செல்கிறார். இதே பணியைத் தான் நபியவர்கள் காலத்தில் கோத்திரங்களை நோக்கி அனுப்பப்பட்ட ஸஹாபாக்களும் செய்தார்கள். அவர்கள் யாரும் அல்லாஹ்வின் தூதுவர் என்று அழைக்கப்படவில்லை. மாற்றமாக, தூதரின் தூதுவர்கள் என்றே அழைக்கப்பட்டனர். இவை போன்ற சிந்தனைச் சறுக்கல்களில் இருந்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லாஹ் எங்களையும் உங்களையும் பித்னாக்களில் இருந்து பாதுகாப்பானாக.

ஒவ்வொன்றாய் தெளிவுபடுத்தப்பட்டது. மலக்குமார்கள் குறித்துக் கொள்ளப்பட்டிருந்த தவறான கருத்துகளினால் விளையும் கருத்தியல், செயற்பாட்டுப் பாதிப்புகள் அறிவுறுத்தப் பெற்றன.

மேலும், அனைத்து நபிமார்கள் தொடர்பிலும் மக்கள் மத்தியில் வழங்கி வந்த கற்பனைகள், தவறான கருத்துகள், கட்டுக் கதைகள் முதலியன களையப்பட்டன. வேதம் வழங்கப்பட்டவர்களது சில கருத்துகளில் தாக்கம் அல்லது மக்கள் மத்தியில் பரவியிருந்த மௌட்டீக எண்ணங்களின் காரணமாக நபிமார்கள் பற்றிய, அவர்களது கண்ணியத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாத வர்ணனைகள், கதைகள் அனைத்திலிருந்தும் அல்-குர்ஆன் அவர்களைத் தூய்மைப்படுத்தியது.

அறபு தீபகற்பத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஏராளமான பின்பற்றாளர்களைக் கொண்டிருந்த, அற்றை வரை பேசப்பட்டு வந்த நபிமார்கள் மற்றும் தூதுவர்களது உண்மை நிலையை அழகாக எடுத்துரைத்தது குர்ஆன். அன்றிருந்த மனித அறிவு மறுமைச் சிந்தனையைப் புரிந்து கொள்வதில் மிகுந்த குழப்பத்துக்குள்ளாகியிருந்தது. அது பற்றிய முரண்பட்ட கருத்துகள் ஒரு புறமிருக்க, இந்த விடயம் குறித்துப் பேசத் தாம் அருகதை கொண்டவர்களல்லர் என்றே பலரும் கருதியிருந்தனர். மறுமை குறித்த தெளிவான விளக்கங்களை முன்வைத்தது குர்ஆன்.

மானுட செயல்கள் நிகழ்வது எவ்வாறு என்பதையும் குர்ஆன் தெளிவுபடுத்தியது. அதன்மூலம் தனது உள மற்றும் உடல் செயற்பாடுகளுக்கு மனிதன் தானே பொறுப்பாகிறான் என்பதும் அவற்றை விதி செய்வதிலும் கூலி வழங்குவதிலும் அல்லாஹ்வின் நீதி நிலைபெறுவதும் உறுதி செய்யப் பெறுகின்றது. இது பற்றி விரிவாக எழுதுவதெனின் பல நூறு பக்கங்கள் தேவைப்படலாம்.

அல்-குர்ஆன் அருள் செய்யப்படுவது பூரணத்துவம் பெற்றது. நபியவர்கள் இப்பூலோக வாழ்விலிருந்தும் விடைபெற்று விட்டார்கள். இந்நிலையில், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்ளாதவர்களாய், இந்த சத்திய மார்க்கத்தைப் பின்பற்றாதவர்களாய் வாழ்ந்து வந்தோர், மீண்டும் நம்பிக்கை, ஷரீஆத் என்பன பற்றிய விவாதங்களை முடுக்கி விட்டனர். நமது முன்னோர்கள் ஈமானின் உறுப்புகள் குறித்து ஆரம்பித்து வைத்திருந்த சர்ச்சைகளை மையப்படுத்திப் பலர் அல்-குர்ஆனின் பதில்களை மீண்டும் வாதப் பொருள்களாக மாற்றினர். முஸ்லிம் உம்மத்தின் அறிஞர்கள், இவற்றிற்கு ஓரளவு பதில்கள் வழங்கி வந்தனர். என்றாலும் கூட, நாளடைவில் இந்த வாதங்கள் அதிகரித்து மக்கள் மத்தியில் முக்கிய பேசுபொருட்களாக இவை அமையலாயின. விளைவாக முஸ்லிம் சமூகத்தினுள் புதுப்புது சந்தேகங்களும் புதிய பல சர்ச்சைகளும் உருவாகின. அறிஞர்கள் தமது கால முழுவதையும் புதிதாய்

எழுப்பப்பட்ட சர்ச்சைகளுக்குப் பதில் அளிப்பதிலேயே கழித்தனர். இத்தகு சூழலில் தான் புதியதொரு கலையின் தோற்றத்துக்கான அடையாளங்கள் உருப்பெற்றன. அவ்வாறானதொரு கலையின் தேவை அன்றாடம் அதிகரித்து வந்தது. மிகவும் மெதுவான சிரமமிக்க பிரசவம் அது. அதுவே நாளடைவில் 'இல்முல் கலாம்' எனப் பெயர் பெற்றது.

முஸ்லிம் சமூகம் விஸ்தரித்துச் செல்ல, பல்வேறு சமூகங்களில் இருந்தும் மக்கள் இஸ்லாத்தினுள் நுழையவானார்கள். அவர்கள் மத்தியில், ஏற்கனவே முஸ்லிம்கள் மத்தியில் எழுப்பப்பட்டிருந்த சந்தேகங்கள் தாக்கம் செலுத்துவதற்கு நீண்ட காலம் செல்லவில்லை. ஸஹாபாக்களிடமிருந்து பாரம்பர்யமாக அறிவைப் பெற்றுக் கொண்ட தாபிஈன்கள், அவர்களைத் தொடர்ந்த தபஉத் தாபிஈன்கள், பின்னர் வந்த இமாம்கள் என அனைத்து தாஈக்களும் முஸ்லிம் ஆதிக்கப் பரம்பலோடு இணைந்த போராட்டங்களிலும் முஸ்லிம் உம்மத் எதிர் கொள்ள வேண்டியிருந்த புதிய சூழ்நிலைகளிலும் மும்முரமாய் இருந்த அக்காலப்பகுதியில், சமூகத்தின் உள்ளிருந்தே சிறைப்பட்டு வந்த சந்தேகங்கள் நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கி வந்தன.

புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பல சமூகங்கள், இதற்கு முன்னர் தூதுத்துவம் கிடைக்கப் பெற்றனவாக இல்லை. எனவே, அவற்றின் பழைய மார்க்க, கலாச்சார படிமங்கள் அவற்றில் இன்னமும் படிந்திருந்தன. அத்துடன் அல்-குர்ஆனின் அறிவுறுத்தல்களோடு நேரடியாக முரண்படாத சில நடத்தைகளும் அவர்களிடம் தொடர்ந்திருந்தன. ஆக, புதிதாக இஸ்லாத்தை ஏற்ற சமூகங்கள், முஸ்லிம்கள் மத்தியில் ஏற்கனவே இருந்து வந்த வாதங்கள், சர்ச்சைகளால் பெரும் தாக்கத்துக்குள்ளாயின. அதிலும் குறிப்பாக, மனிதன் செயற் சுதந்திரம் உள்ளவனா, இல்லையா? அவனது செயல்களுக்கு அவன் பொறுப்பானவனா, இல்லையா? போன்ற சர்ச்சைகள் இல்லாதிருந்த ஒரு காலம் இருக்கவில்லை.

இந்த நிலைமைக்கு இஸ்லாமிய கிலாபத்தைப் பலவீனப்படுத்திய அரசியல் முரண்பாடுகளும் கூட ஒரு வகையில் காரணமாக அமைந்தன. உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது கொலையுடன் குழப்பங்கள் பல தோற்றம் பெற்றன. மேலும் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களது கொலை, அதனைத் தொடர்ந்து ஸஹாபாக்கள் மத்தியில் நடைபெற்ற யுத்தங்கள் முதலியன பல்வேறு கேள்விகளை உருவாக்கி வைத்தன. ஸஹாபாக்கள் மத்தியில் நடைபெற்ற யுத்தங்களில் நியாயம் யார் பக்கம் இருக்கின்றது? கிலாபத்திற்கு மிகவும் தகுதியானவர் யார்? நிகழ்ந்த யுத்தங்களில் கொல்லப்பட்டவர்களுடைய முடிவு என்ன? பெரும் பாவம் செய்பவனுக்குரிய சட்டம் என்ன? நிகழ்ந்தன அனைத்தும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட இறை ஏற்பாடா, அதனால் இழைக்கப் பெற்ற குற்றங்களுக்கு

எவரும் பொறுப்பில்லை எனக் கொள்வதா? அல்லது அவை மானுடத் தெரிவின் அடிப்படையில் நடைபெற்றனவா? அதனடிப்படையில் ஒவ்வொருவரும் அவரவரது செயலுக்கேற்ப தண்டனை பெற வேண்டுமா? ஆக, கொலை செய்தவனும் செய்யப்பட்டவனும் நரகத்திற்குரியவர்களாக இருப்பார்களா? இவை போன்ற சிக்கலான கேள்விகள் தொடர்ந்தும் எழுந்தன. இவை மனித அறிவையும் நாட்ட சக்தியையும் செயற்திறனையும் சிதைத்து முஸ்லிம் உம்மத் பின்னைய நாட்களில் அடைந்த துயர நிலைகளுக்கான அஸ்திவாரமாக அமைந்தன.

அல்-குர்ஆன் பேசிய நம்பிக்கைக் கோட்பாட்டின் கூறுகளைப் பாதுகாக்கும் கலையாக விளங்கிய 'இல்முல் கலாம்' தனது ஆரம்ப நிலையிலிருந்து மாறி அன்றைய கால கட்டத்தில் காணப்பட்ட ஜபரிய்யா, கதரிய்யா, ஷீஆ, கவாரிஜ் போன்ற சிந்தனைக் குழுக்களும் உமையா, அப்பாஸியா, ஷுஊபிய்யா(3) போன்ற அரசியல் பிரிவுகளும் தத்தமது குழுக்களை நியாயப்படுத்தவும் ஏனைய குழுக்களை நிராகரிக்கவுமான ஒரு கருவியாகவே பயன்படலாயிற்று. ஒவ்வொரு சாராரும் தத்தமது கொள்கைகளே சரியெனக் காட்டவும் ஏனைய சாராரை 'குப்ர்', 'வழிகேடு' எனக் குற்றஞ் சுமத்திக் கண்டனம் சொல்லவுமே இல்முல் கலாமைப் பயன்படுத்தினர்.

அல்-குர்ஆன் முன்வைத்த நம்பிக்கையின் கூறுகளை இல்முல் கலாமைப் பயன்படுத்திப் பாதுகாத்துக் கொள்தல் என்பது ஒரு தெளிவான விவகாரம். ஆனால் பின்னர் வந்த இந்த சிந்தனைக் குழுக்கள் தத்தமது சாதாரண கிளை விவகாரங்களை இஸ்லாமிய நம்பிக்கையின் கூறுகளுக்குச் சமமானவையாக உயர்த்திக் காட்டுவதற்கு இல்முல் கலாமை ஒரு கருவியாகப் பயன்படுத்த விளைந்தமை நிச்சயமாக ஒரு நெறி பிறழ்வே. இதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. இவ்வாறானதொரு கட்டத்தில் தான் மூத்த அறிஞர்களும் இமாம்களும் 'இல்முல் கலாம்' எனும் கலையைக் கண்டனம் செய்யும் நிலைப்பாட்டை எடுத்தனர். மட்டுமன்றி, இக்கலையை வாதாட்டங்களுக்கெனப் பயன்படுத்தவோர்க்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிலர் கூறலாயினர். ஏனெனில், இதனால் பல்வேறு சாரார்க்கிடையிலும் பிளவுகள் பெருகின; முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் விளைந்தது. இதனைத் தொடர அனுமதிப்பது, இஸ்லாத்தின் எதிரிகளுக்கான வாயில்களைத் திறந்து விடுவதாக மாறிவிடும். இந்தப் பின்புலத்தில்

(3) அறபு அல்லாத சமூகங்களுக்கு எதிராகச் செயற்பட்ட அறபு இனவாதக் குழுக்கள் அல்லது அறபு சமூகத்திற்கு எதிராக செயற்பட்ட அறபு அல்லாத இனவாதக் குழுக்களைக் குறிக்கும்.

தான் இமாம் ஷாபிஈ அவர்கள் கூறினார்கள்: ‘இல்முல் கலாமில் ஈடுபடுவதையிட்டு எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் ஒருவர் பிக்ஹ் விடயத்தில் கேள்வி கேட்கப்பட்டு பதிலளிப்பதில் தவறிழைப்பாராயின், அல்லது பிறிதொருவரை கொலை செய்தல் தொடர்பாகக் கேட்கப் பட்டு, ‘அவர் ஒரு முட்டையை நஷ்டஈடாக வழங்கினால் போதும்’ எனப் பதிலளிப்பாராயின், மிஞ்சிப் போனால் நாமெல்லாம் அவரைப் பார்த்துக் கேலியாய்ச் சிரிப்போம், அவ்வளவு தான். ஆனால் இல்முல் கலாம் சம்பந்தப்பட்ட விடயத்தில் வினவப்பட்டு அவர் தவறிழைத்தால் உடனே அவர் பித்அத் வாதி எனப் பட்டம் சூட்டப் பெறுவார். ஆக இல்முல் கலாம் விடயத்தில் வாதாட்டங்களில் ஈடுபடாதீர்கள். வாதாட்டம் தேவையென்றால் பிக்ஹ் விவகாரங்களில் ஈடுபடுங்கள். மாறாக இல்முல் கலாமில் ஈடுபட்டால் நீங்கள் ஒருவரையொருவர் காபிராக்கிக் கொள்வீர்கள்.’

## 2. இல்முல் கலாமில் உள்ள முறையியல் பிரச்சினைகள்

இல்முல் கலாம் விவகாரங்களையும் பிக்ஹ் விவகாரங்களையும் கையாளும் போது அவற்றை வேறுபடுத்தாமல் ஒன்றாகக் கலந்து விட்ட ஒரு நிலையே ஆரம்பத்தில் காணப்பட்டிருக்கின்றது. இந்த நிலையை இமாம் அபூ ஹனீபா, தமது ‘அல்-பிக்ஹுல் அக்பர்’ என்ற நூலில் சுட்டிக்காட்டுவார். இல்முல் கலாம் தொகுக்கப்பட்ட ஆரம்ப நாட்களில், ‘இல்முல் கலாம்’ என்பது ‘பெரிய பிக்ஹ்’ என்றும் அதற்குச் சமாந்திரமாக ‘சிறிய பிக்ஹ்’ என்ற ஒன்றும் இருக்கின்றதெனக் கருதப்பட்டது. ‘பெரிய பிக்ஹ்’ (பிக்ஹ் அக்பர்) என வழங்கப்பட்டமைக்கான காரணம், அது நம்பிக்கை சார்ந்த விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தமை; ‘சிறிய பிக்ஹ்’ (பிக்ஹ் அஸ்கர்) என்பது அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய கிளை விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தமை.

இல்முல் கலாம் எனும் கலையின் பிரதான பண்புகள் அதன் தோற்றக் காலத்தைய சூழற் காரணிகளால் பெரிதும் தாக்கம் பெற்றிருந்தன. ஆரம்பம் முதல் அது கூடிய கவனம் செலுத்தியது ‘வாதாட்டம்’, ‘பதிலிறுத்தல்’ முதலிய விடயங்களிலேயே.. அறிவுபூர்வமானதோர் அடித்தளம் அப்போதிருக்கவில்லை. எதிர்தரப்பினரின் ஆதாரங்களையும் வாதங்களையும் முறியடித்தல் என்பதே அதன் முழு முதல் நோக்கமாக இருந்தது. அதனால் கிளையம்சங்களும் விளிம்பு விவகாரங்களும் தான் அதில் ஆதிக்கம் செலுத்தி வந்தன. ஒரு விரிந்த சட்டகத்தில் இந்தக் கிளைகள் அனைத்தையும் உள்ளடக்கவோ, அல்லது அவற்றை ஒரு மொத்தப் பார்வையிலிருந்து மதிப்பீடு செய்யவோ அதனால் இயலவில்லை. எதிர்தரப்பினர் ஆதாரமாகப் பயன்படுத்தகிறார்கள் என்பதில் இருந்து தான் ஒவ்வொரு கிளையம்சத்துக்குமான முக்கியத்துவம் உருப்பெற்றது. இதைப் பொறுத்தே அவை இல்முல் கலாமின் விவகாரங்களாக மாற்றம்

பெற்றன. உண்மையில் அவை பிரதானமானதொரு விவகாரத்தின் தரத்தை எட்டியனவாக இருக்கவில்லை. கிளை விவகாரங்களூடாகத் தோற்றம் பெற்ற இல்முல் கலாம், அவற்றை ஊதிப் பெருப்பித்து, அவற்றின் தகுதியைத் தாண்டிய அந்தஸ்த்தை அவற்றிற்கு வழங்கியது. இதன் காரணமாகப் பல முறையியல் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. சற்றே அவற்றைக் காண்போம்:

### அ துண்டாடுதல்

அல்-குர்ஆன் வாசகங்களை அவற்றின் வசனப் போக்கிலிருந்து பிரித்தெடுத்துத் தனித்து வாசிப்பதே துண்டாடுதல் எனப்படுகின்றது. இந்த விடயம் குறித்து அல்-குர்ஆனே எம்மை எச்சரித்திருக்கின்றது:

كَمَا أَنزَلنا عَلَى المُقتَسِمينَ الَّذينَ جَعَلُوا القُرآنَ عِضينَ فَوَرَبِّكَ لَنَسأَلَنَّهُم أَجمَعينَ عَمّا كانوا يَعمَلونَ - الحجر: ٩٠-٩٣

**“(நபியே! முன் வேதங்களை) பலவாறாகப் பிரித்தவர்கள் மீது முன்னர் நாம் (வேதனையை) இறக்கியவாறே, இந்த குர்ஆனை பலவாறாகப் பிரிப்போர் மீதும் (வேதனையை இறக்கி வைப்போம்.) உம் இறைவன் மீது ஆணையாக, நிச்சயமாக நாம் அவர்களனைவரையும் விசாரிப்போம். அவர்கள் செய்து கொண்டிருந்த (எல்லாச்) செயல்களைப் பற்றியும் (நாம் விசாரிப்போம்.) (ஹிஜ்ர் 15:90–93)**

இந்தத் துண்டாடல் அணுகுமுறை இல்முல் கலாமின் முக்கியமான பண்புகளில் ஒன்றாக இருந்தது. இப்பண்பு இல்முல் கலாம் கலைக்கு மாத்திரம் உரியதொன்றல்ல. என்றாலும் அதன் கட்டுமானக் கோளாறும் முறையியல் குறைபாடும் இதிலிருந்து தான் எழுகின்றது. இரண்டு வடிவங்களிலாயமைந்தது இந்தத் துண்டாடல் அணுகுமுறை. முதலாவது, அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா வசனங்களுடன் இல்முல் கலாமின் உறவாடல் தொடர்பானது. இரண்டாவது, அன்றைய களத்தின் பிரச்சினைகளை நேரடியாகத் தீர்க்க முற்பட்டமை தொடர்பானது. அதாவது, பிக்ஹ், உஸூலுல் பிக்ஹ் மற்றும் தப்ஸீர் போன்ற ஏனைய கலைகளூடாகப் பிரச்சினைகளை அணுகும் போது அவற்றில் இல்முல் கலாம் கொண்டிருந்த தாக்கம் தொடர்பானது.

அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா வசனங்களுடன் இல்முல் கலாமின் உறவாடல் எவ்வாறு காணப்பட்டது?

இந்த பிரச்சினையின் வேர்கள் நபியவர்கள் காலத்திலும் காணக்கிட்டின என்பதை இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானது. அம்ர் இப்னு ஸுஹைப், தமது தந்தை மற்றும் பாட்டனார்

வழியாக அறிவிக்கும் முஸ்னத் அஹ்மதில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸ் வருமாறு:

நபியவர்கள் ஸஹாபாக்களை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் விதி பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் அல்லாஹ் இவ்வாறு சொல்லவில்லையா, அவ்வாறு சொல்லவில்லையா என விவாதித்துக் கொண்டிருந்தனர். இதனைச் செவியுற்ற நபிகளார் முகம் புடைக்கும் அளவுக்குக் கோபம் கொண்டவர்களாகக் கூறினார்கள்: "இது தானா உங்களுக்கு ஏவப்பட்டிருக்கின்றது? இதனால் தான் உங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் அழிந்து போயினர். அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தின் சில பகுதிகளை மற்றும் சில பகுதிகளுக்கு எதிராகப் பிரயோகித்தனர். வேத நூலின் ஒவ்வொரு பகுதியையும் அடுத்த பகுதியை உண்மைப்படுத்தும் வகையிலேயே அல்லாஹ் அருள் செய்துள்ளான். உங்களுக்கு ஏவப்பட்டவை எவை எனப் பார்த்து அவற்றைச் செயற்படுத்துங்கள்; விலக்கப்பட்டவை எவை எனப் பார்த்து அவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள்."(4)

இந்த ஹதீஸில் நபியவர்கள் அடையாளப்படுத்தியது போல் விதி பற்றிய கேள்விகளை எழுப்புவது ஒரு பிரச்சினை அல்ல;

---

*(4) பார்க்க: இப்னு ஹன்பல், அஹ்மத். முஸ்னதுல் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், பா:11, ப:434, ஹ. இல: (6845). ஹதீஸ் வசனங்கள் 'எமக்கு அப்துல்லாஹ் சொன்னார், எனக்கு எனது தந்தை சொன்னார், அம்ர் இப்னு சுஹைப் ஊடாக அவர் தனது தந்தை மற்றும் பாட்டனார் ஊடாக அறிவிக்கின்றார்: சிலர் நபியவர்களது வீட்டு வாயிலில் அமர்ந்து, ஒவ்வொருவரும் அல்லாஹ் இவ்வாறு சொல்லியிருக்கிறான். அல்லாஹ் அவ்வாறு சொல்லியிருக்கிறான் என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர். நபியவர்கள் அதனைச் செவியுற்று, கோபத்துடன் வெளியில் வந்தார்கள். இது தானா உங்களுக்கு ஏவப்பட்டிருக்கிறது? அல்லது இதற்காகவா நீங்கள் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்? அல்-குர்ஆன் வசனங்களை ஒன்றுக்கு எதிராக மற்றொன்றைப் பயன்படுத்தகிறீர்கள்? என்று கேட்டார்கள். இது போன்ற விடயங்களில் ஈடுபட்டதனால் தான் உங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் வழிகெட்டனர். நீங்கள் அது போன்ற விடயங்களில் ஈடுபடாதீர்கள். நீங்கள் ஏவப்பட்டுள்ளவை எவை எனப் பார்த்து அவற்றைச் செயற்படுத்துங்கள். தடுக்கப்பட்டவை எவை எனப் பார்த்து அவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள் என்றார்கள்.' இதே போன்ற மற்றொரு அறிவிப்பும் காணப்படுகிறது. இந்த அறிவிப்பை நாம் ஆதாரமாகக் கொண்டமைக்குக் காரணம், இதன் கருத்து அல்-குர்ஆன் ஊடாக உறுதிப்படுத்தப்படுகிறது. 'முன்னைய வேதங்களை துண்டாடியவர்கள் மீது நாம் வேதனையை இறக்கியது போல, அல்-குர்ஆனைத் துண்டாடியவர்கள் மீதும் நாம் வேதனையை இறக்கி வைப்போம்.'* **(ஹிஜ்ர்: 90–91)**

உரையாடல் முறைமையில் தான் பிரச்சினை இருக்கின்றது. அதாவது இங்கு அல்லாஹ்வின் வேதம் ஒரு துண்டாடல் வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. இது தவறான புரிதலுக்கே இட்டுச் செல்லும். வசனங்களுக்கிடையில் முரண்பாடும் மோதலும் இருப்பது போன்றதொரு தோற்றத்தை அது ஏற்படுத்திவிடும். இந்தத் துண்டாடல் அணுகுமுறை அல்-குர்ஆனை, தொடர்பற்ற தனித்தனி வசனங்களாக மாத்திரமே நோக்குகின்றது. அதனை ஒரு மொத்தக் கட்டமைப்பாக நோக்குவதில்லை. எனவே ஒவ்வொரு வாசிப்பாளரும் சில குறிப்பிட்ட வசனங்களை எடுத்து அவற்றுக்கு வரையறுத்த ஒரு விளக்கத்தை அமைத்துக் கொள்கின்றனர். குறித்த சில வசனங்களை அவற்றின் வசனப் போக்கிலிருந்து பிரித்து வேறுபடுத்தி விளங்க முற்படுவதால் அந்த வசனங்களுக்குரிய சுயமான இயல்புகள் தவிர்க்கப்பட்டு புறவிளக்கங்களுக்கான வாயில்கள் திறக்கப்படுகின்றன. இதனால் விளைவதென்ன? நாம் ஏற்கனவே எடுத்துக் கொண்டுள்ளதொரு முடிவை உறுதி செய்து கொள்வதற்காகவே குர்ஆனை நோக்கி மீள முனைகிறோம்.

இந்தத் துண்டாடல் அணுகுமுறை ஒரு புறமிருக்க, அல்-குர்ஆனுக்குப் பல் பொருள் கோடல் இடம்பாடும் கருத்து மயக்க நிலையும் கூட இருப்பதாகக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் எதிர் தரப்பினர் தமது கருத்தை நிரூபிக்கப் பயன்படுத்தம் வசனங்களை மறுத்துரைப்பதற்காகக் குர்ஆனிய வசனங்களையே பிரயோகம் செய்வது நோக்கமாயமைந்தது. ஆக இந்த இல்முல் கலாம் துண்டாடல் வாசிப்பின் ஊடாகக் கூற வருவது என்ன? அல்லாஹு தஆலா யாவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் அருள் செய்துள்ள வாசகங்களின் அப்பண்பானது, அல்-குர்ஆனிடம் தன்னிலையில் உள்ளதல்ல; அதற்கு வெளியில் உள்ளதொரு பண்பே என்பதாகும். 'பல்வேறு பொருள் கோடல்களுக்கு இடம்பாடானது அல்-குர்ஆன்; ஆக அதனுள் குழப்பங்களும் சிக்கல்களும் காணக் கிடக்கின்றன; அவற்றைத் தெளிந்து கொள்ளவும் குழப்பங்களையும் சிக்கல்களையும் தீர்த்துக் கொள்ளவும் ஒரு புறவிளக்கக் காரணி அவசியம்'[(5)] என்றே அவர்கள் கூறினர். இதன் பொருள் தான் என்ன? ஒவ்வொரு குழுவினரும் எந்தவிதமான தெளிவான வரையறைகள்,

(5) இது பற்றி மிஸ்வத்தாவில் இவ்வாறு வந்திருக்கிறது: 'அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்களது கருத்துப்படி 'அல்-முஹ்கம்' என்பது, தன்னிலேயே தெளிவானது, விளக்கம் அவசியமற்றது. 'அல்-முதஷாபிஹ்' என்பது, விளக்கம் அவசியமான ஒன்று என்பதாகும். ஏனெனில் அவர் கிதாபுஸ் ஸுன்னாவில் இவ்வாறு கூறுகிறார்: அல்-குர்ஆனின் தெளிவற்ற வசனங்களுக்கு விளக்கம் வழங்கியதிலேயே ஸின்தீக்கள் வழிகெட்டனர்.

நெறிமுறைகள் இன்றி தத்தமது சார்பு நிலைகளுக்கு அல்-குர்ஆனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும்.

இதனடிப்படையில் அல்-குர்ஆன் எல்லா சிந்தனைப் பிரிவுகளுக்கும் சான்று பகரக் கூடியதாக மாறிவிடுகின்றது. அவற்றுக்கான மூலாதாரமாகவோ, நீதிபதியாகவோ அதன் பணி இருப்பதில்லை.(6) எந்தளவுக்கெனில், கருத்து வேறுபாட்டின் மூல விதைகளே அல்-குர்ஆனில் தான் பொதிந்திருக்கின்றன என்றும் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இமாம் பக்ருத்தீன் அர்ராஸீ இந்தக் கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அல்லாஹ் அவரையும் எம்மையும் மன்னிப்பானாக. அவர் கூறுகின்றார்: 'அல்-குர்ஆன் எப்போதும் தெளிவான (முஹ்கம்) வசனங்களாக மாத்திரம் இருந்தால் அது, ஒரு மத்ஹபுடன் தான் இயைந்து சென்றிருக்கும். அதன் தெளிவான வசனங்கள் மூலம் ஏனைய அனைத்து மத்ஹபுகளையும் செல்லுபடியற்றதாக்கியிருக்கும்; ஏனைய மத்ஹபினர் அல்-குர்ஆனை ஏற்கவும் அதனை ஆய்வு செய்யவும் அதிலிருந்து பயன் பெறவும் தடையாய் அமைந்திருக்கும். அல்-குர்ஆன் தெளிவான வசனங்களுடன் தெளிவற்ற (முதஷாபிஹ்) வசனங்களையும்

---

(6) இமாம் ராஸி அவர்கள் தப்ஸீருல் கபீரில் கூறுகிறார்: 'சிலர் சொல்கின்றனர், அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால் ஸுன்னாவைத் தான் முற்படுத்த வேண்டும். ஏனெனில் அல்-குர்ஆன் சுருக்கமான வடிவிலேயே பேசுகிறது. அல்-குர்ஆன் கூறுகிறது: "மக்களுக்கு இறக்கப்பட்டவற்றை தெளிவுபடுத்துவதற்காகவே நாம் நபியின் விளக்கத்தை இறக்கினோம்." **(நஹ்ல்: 44)** எனவே சுருக்கமான வடிவத்தை விடவும் விரிவான வடிவம் முற்படுத்தப்பட வேண்டும் என்பர்' அல்-குர்ஆனை விடவும் ஹதீஸை முற்படுத்தும் இந்தப் போக்கின் தாக்கத்தை துரதிஷ்டவசமாக எல்லா மத்ஹபுகளிலும் காணலாம். ஆலு தைமிய்யாவின் மிஸ்வத்தாவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: 'இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம், அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹான ஒரு ஹதீஸை அல்-குர்ஆனின் வெளிப்படையான கருத்தும் பலப்படுத்துகிறது, அதேவேளை இரண்டு ஸஹீஹான ஹதீஸ்கள் அதற்கு மாற்றமான கருத்தில் காணப்படுகின்றன. இவற்றில் அவருக்கு விருப்புக்குரியது எது எனக் கேட்கப்படுகிறது, அதற்கு அவர், ஹதீஸ் ஸஹீஹாக அமையும் போது அது தான் தனக்கு விருப்பத்திற்குரியது என்றார்.' நபியவர்கள் அல்லாஹ்வின் வேதத்திற்கு முரண்படுவது ஒரு போதும் சாத்தியமற்றது. இமாம் ராஸி அவர்கள் இந்த இடத்தில் தவறு விட்டிருக்கிறார்கள். பெரிய மனிதர்களின் தவறுகள் அவர்களது தரத்துடன் தான் வைத்துப் பார்க்கப்படல் வேண்டும். முன்னர் கூறப்பட்ட வசனத்தில் அவர் விட்ட தவறு "மக்களுக்கு இறக்கப்பட்டவற்றை தெளிவுபடுத்துவதற்காகவே நாம் நபியின் விளக்கத்தை இறக்கினோம்." (நஹ்ல்: 44), இந்த வசனத்தில் நபியின் விளக்கம் என்று அவர் கூறியது, அறபு மொழியில் 'திக்ர்' என்ற பிரயோகத்தையாகும். இந்த இடத்தில் திக்ர் என்பதற்கு அந்த விளக்கம் தவறானது.

உள்ளடக்கியிருப்பதால் ஒவ்வொரு மத்ஹபினரும் தத்தமது மத்ஹபை நியாயப்படுத்தக் கூடியவற்றை அதில் கண்டு கொள்ள முற்படுகின்றனர்; எல்லா மத்ஹபினரும் அதனை ஆய்வு செய்கின்றனர்.'(7)

அல்-இமாம் பக்ருத்தீன் அல்-ராஸீ அவர்களது இக்கூற்று எந்த வகையிலும் சாதகமானதொன்றல்ல. ஏனெனில் வாதாட்டக்காரர்கள் மோதிக் கொள்வதற்காக இறக்கப்பட்டதல்ல அல்-குர்ஆன். தத்தமது கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் நியாயப்படுத்திக் கொள்ளத் தன்னை நோக்கி வர வேண்டும் எனக் குர்ஆன் அழைப்பு விடுத்ததும் இல்லை. மு.்.மின்கள் அல்-குர்ஆனை நோக்கிச் செல்கின்றார்கள் என்றால் அது அல்லாஹ்வை நோக்கிச் செல்வதாகும்; எம்மை வழிநடாத்தும் மூலாதாரத்தை நோக்கிச் செல்வதாகும். அல்-குர்ஆன் கூறுகிறது:

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ أُوتوا نَصِيبًا مِنَ الكِتابِ يُدعَونَ إِلى كِتابِ اللَّهِ لِيَحكُمَ بَينَهُم ثُمَّ يَتَوَلّى فَريقٌ مِنهُم وَهُم مُعرِضونَ - آل عمران: ٢٣

**"வேதத்திலும் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்(களான யூதர்)களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களிடையே (ஏற்பட்ட விவகாரத்தைப் பற்றி) அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்க அவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களில் ஒரு பிரிவினர் (இதைப்) புறக்கணித்து விலகிக் கொண்டனர்." (ஆல இம்ரான் 3:23)**

இமாம் ராஸீயின் இந்தத் தவறான கூற்றுக்கு நாம் வலிந்து விளக்கம் கூற முனைவதும் பயனளிப்பதாயில்லை. குறுங்குழு வாதத்தில் மூழ்கிய இல்முல் கலாமினால் பாதிக்கப்பட்டதொரு சூழலையே அவரது கருத்து பிரதிபலிக்கிறது. அல்-குர்ஆனின் ஒருமைப்பாட்டுக் கட்டமைப்பையும் அதன்

---

(7) அல்ஹஸன் இப்னு அலி இப்னு கலப் அல்பர்பஹாரி அவர்கள் தனது ஷரஹுஸ் ஸுன்னா என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்: 'ஒருவர் முன்னோர்களின் கூற்றுக்களைக் குறை காண்கிறார். அவற்றை ஏற்பதில்லை. அல்லது நபியவர்களின் ஹதீஸ்களில் சிலவற்றை மறுக்கிறார் எனின், அவரது இஸ்லாத்தில் தான் குறைபாடு இருக்கிறது; அவர் மிகவும் இழிவான ஒரு சிந்தனையிலும் கருத்திலுமே இருக்கிறார். நபியவர்களையும் ஸஹாபாக்களையும் குறைகூறக் கூடாது. ஏனெனில் நாம் அல்லாஹ்வையும் ரஸுலையும் குர்ஆனையும் நன்மை தீமைகளையும் உலகம் மறுமையையும் முன்னோர்களின் கூற்றுக்கள் ஊடாகவே அறிந்து கொண்டோம். ஸுன்னாவுக்கு குர்ஆன் தேவையான அளவை விடவும் குர்ஆனுக்கு ஸுன்னா தேவை'. இது ஒரு தரக்குறைவான கருத்து. இமாம் அஹ்மத் அவர்கள் ஒரு போதும் இதனை சொல்லத் துணிய மாட்டார்கள்.

இறையாண்மையையும் அதன் மகாஸிதுகளையும் புரிந்து கொள்ளாத ஒரு சூழலின் பிரதிபலிப்பே அது.

இமாம் ராஸீயின் கருத்தை நாம் மறுதலிப்பதன் மூலம், தனது முன்னைய சிந்தனைகள், பின்புலங்கள், சார்பு நிலைகள் அனைத்தையும் துறந்து விட்டு ஒருவர் குர்ஆனை வாசித்தல் இயலும் என நான் சொல்ல வரவில்லை. மாற்றமாக இந்த சார்பு சிந்தனைகளிலிருந்து இயன்ற வரை விடுபட்டு, அல்-குர்ஆன் தனது உள்ளத்துடனும் சிந்தையுடனும் உறவாடுவதற்கான சந்தர்ப்பத்தை அவர் வழங்க வேண்டும்; அதற்கான தூய முயற்சியை அவர் மேற்கொள்ள வேண்டும். அல்-குர்ஆனைத் தான் விரும்புகின்ற முறைமையில் அல்லாது, தன்னை முழுமையாக அர்ப்பணித்து அல்-குர்ஆனுக்குரிய முறைமையில் வாசிக்கும் போது தான்அதிலிருந்து வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆக, அல்-குர்ஆன் மீதான எந்த வாசிப்பையும் நூறு வீதம் தூய்மையான வாசிப்பு எனக் கூறிவிட முடியாது. சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார, அறிவியல் தாக்கங்கள் அல்-குர்ஆனின் வாசிப்புகளின் போது இரண்டறக் கலந்திருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் உண்மையில் மாறும் காரணிகளையும் மாறாக் காரணிகளையும் வேறுபடுத்திப் புரிந்து கொள்வதற்கானதோர் ஆரம்பமாகும். புதுப்புது அம்சங்கள் பிரவகிக்கும் ஒரு மூலம் அல்-குர்ஆன். முழு மொத்தமாக மாறாத விதிகளை அது தன்னுள் பொதிந்துள்ளது. கால மாற்றத்திற்கேற்ப விளையும் புதிய சூழல்களில் அந்தப் பொது விதிகளின் பிரயோகத்திலேயே வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

### ஸுன்னாவுடன் இல்முல் கலாமின் உறவாடல்

அல்-குர்ஆனுடனான இல்முல் கலாமின் உறவாடல் எவ்வாறிருந்தது என்பதை நாம் மேலே கண்டோம். ஸுன்னாவுடனான இல்முல் கலாமின் உறவாடல் அதனை விடவும் சிக்கல் மிக்கதாகவே விளங்கியது. ஸுன்னாவை வரைவிலக்கணப்படுத்தும் போது சில இல்முல் கலாம் அறிஞர்கள் ஹதீஸ் துறையாளர்களின் கண்ணோட்டத்தையே கடைப்பிடித்தனர். ஸுன்னா என்பது நபிகளாரின் அனைத்து சொற்களும் செயல்களும் அங்கீகாரங்களும் எனக் கொண்ட அவர்களுக்கு ஸுன்னாவின் இந்த விளக்கமே பேராதாரமாக அமைந்தது. அவற்றின் ஏற்பு, மறுப்பு என்பனவற்றுக்குப் பெரிதும் ஹதீஸ் கிரந்தங்களையே அடிப்படையாகக் கொண்டனர். அதற்கு மேலாக ஹதீஸ்களின் உள்ளடக்கம் மற்றும் அறிவிப்பாளர் வரிசை ஆகியனவற்றை விமரிசன ரீதியாக ஆராய்ந்து பார்க்கும் போக்கு அவர்களிடம் இருக்கவில்லை.

ஹதீஸ் என்பது அடிப்படையில், அது வந்த வழியைப் பொருத்தும் அது முன்வைக்கும் கருத்தைப் பொருத்தும் திட்டவட்டமானதல்ல. ஆனால் இல்முல் கலாமில் மிகையாக இருப்பன திட்டவட்டமான விவகாரங்களாகும். திட்டவட்டமில்லாத ஒன்றின் மூலம் திட்டவட்டமான ஒன்றை நிரூபிக்கவும் முடியாது; மறுதலிக்கவும் முடியாது. இந்த உண்மையைத் தெரிந்து கொண்ட நிலையில் தான் அவர்கள் ஹதீஸ்களை மேலதிக ஆய்வுகளுக்குட்படுத்தாமல் கிரந்தங்களிலுள்ளான பதிவுகளுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொண்டனர். அதனால் அவர்கள் ஆதாரமாகக் கொண்ட ஹதீஸ்களில் அதிகமானவை பலவீனமானவையாகக் காணப்பட்டன. மிகச் சொற்பமானவையே ஸஹீஹானவையாக இருந்தன. இத்தகு நிலைமை சிந்தனா ரீதியாகவும் முறையியல் ரீதியாகவும் பாதகங்களை விளைப்பனவாயின.

மேலும், ஸுன்னாவுக்கான வரைவிலக்கணத்தைப் பொறுத்தவரையில், சட்டவியல் அறிஞர்களினதை[(8)] (புகஹா) விட ஹதீஸ் துறை அறிஞர்களின் (முஹத்திஸுன்) வரைபிலேயே தங்கியிருந்தனர். சில சந்தாப்பங்களில் மேலதிக வலுவூட்டலுக்காக, சட்ட அடிப்படைகள் பற்றிப் பேசிய அறிஞர்களது (உஸுலிய்யூன்) வரைவிலக்கணங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். இஸ்லாமிய சட்டங்களைப் பொறுத்து, முதல் மூலாதாரமாகக் குர்ஆனும் அடுத்து இரண்டாவது மூலாதாரமாக ஸுன்னாவும் சட்டவியல் அறிஞர்களால் வகைப்படுத்தப் பெற்றிருந்தன. இக்கட்டத்தில், இமாம் ராஸீ, தான் ஒரு சட்ட அடிப்படையாளர் என்பதை விடுத்து, தான் ஓர் இல்முல் கலாம் அறிஞர் என்ற அடிப்படையிலேயே, தனது தப்ஸீர் அல்-கபீரில் கருமமாற்றியிருப்பதைக் காணலாம். அல்-குர்ஆனுடன் ஸுன்னா முரண்படும் பொழுது -வரையறைகள் ஏதும் இன்றி- ஸுன்னாவே முற்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். இமாம் அஹ்மத் கூறுவதாகவே இக்கருத்தை முன்வைக்கும் இமாம் ராஸீ அது குறித்த விமர்சனம் எதனையும் கூறாது, அக்கூற்றுக்கு ஆதாரம் கற்பிக்கவே முற்படுகின்றார். 'அல்-குர்ஆன் சுருக்கமான வடிவிலேயே பேசுகிறது. நபியவர்களது ஸுன்னாவே விரிவான வடிவில் இருக்கின்றது. சுருக்கமான வடிவத்தை விடவும் விரிவான வடிவமே முற்படுத்தப் படும். இதற்கான ஆதாரத்தைக் குர்ஆனே வழங்குகின்றது.

(8) சட்டத்துறை அறிஞர்களிடத்தில் ஸுன்னா என்பது, ஒரு விடயத்தை செய்தால் நன்மை கிடைக்கும் அதனை செய்யா விட்டால் பாவம் கிடைக்க மாட்டாது என்பதாகும். உதாரணமாக, தொழுகையின் முன், பின் ஸுன்னத்கள், திங்கள், வியாழன் நோன்புகள் போன்றவை.

بِالبَيِّناتِ وَالزُّبُرِ وَأَنزَلنا إِلَيكَ الذِّكرَ لِتُبَيِّنَ لِلنّاسِ ما نُزِّلَ إِلَيهِم وَلَعَلَّهُم يَتَفَكَّرونَ - النحل: ٤٤

**“தெளிவான அத்தாட்சிகளையும் வேதங்களையும் (அத்தூதர்களுக்கும் கொடுத்தனுப்பினோம். நபியே!) மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் உமக்கு இவ்வேதத்தை நாம் அருளினோம்.” (நஹ்ல் 16:44)**

எனக் கூறுவார் இமாம் அல்-ராஸீ.

இந்த குர்ஆன் வாசகத்தில் அன்னார் விளங்கிக் கொள்ளத் தவறிய ஒரு விடயம் இருக்கின்றது. வசனத்தில் வருகின்ற ‘திக்ர்’ என்ற சொல்லின் விளக்கமாகவே ‘மனிதர்களுக்கு அருளப்பட்டது’ என்ற பகுதி வருகிறது. ஆக, இவை இரண்டும் ‘அல்-குர்ஆன்’ என்ற ஒரே அம்சத்தையே குறிக்கின்றன. ஆகவே இங்கு அல்-குர்ஆன் விளங்கப்படுத்துவது; நபிகளார் விளங்கப்படுத்துபவர் என்று தான் விளக்கம் கொள்ளப்பட வேண்டும். அதனை ஓதிக் காட்டுவதன் மூலமாகவும் கற்பிப்பதன் மூலமாகவும் நடைமுறைப்படுத்திக் காட்டுவதன் மூலமாகவும் நபியவர்களே அதனை விளங்கப்படுத்துகின்றார். எனவே அல்-குர்ஆனின் சுருக்க வடிவத்தையும் விரிவான வடிவத்தையும் வேறுபடுத்தி விளங்குவதில் நிறைய மயக்கங்கள் இருக்கின்றன என்ற கருதுகோள் உண்மையில் அல்-குர்ஆனுக்கே முரணானதாகும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَنَزَّلنا عَلَيكَ الكِتابَ تِبيانًا لِكُلِّ شَيءٍ وَهُدًى وَرَحمَةً وَبُشرى لِلمُسلِمينَ - النحل: ٨٩

**“...மேலும், இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும் நேர்வழி காட்டியதாகவும் ரஹ்மத்தாகவும் முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.” (நஹ்ல் 16:89)**

وَلَقَد أَنزَلنا إِلَيكَ آياتٍ بَيِّناتٍ وَما يَكفُرُ بِها إِلَّا الفاسِقونَ - البقرة: ٩٩

**“(நபியே!) நிச்சயமாக நாம் மிகத் தெளிவான வசனங்களை உம்மீது இறக்கி வைத்திருக்கிறோம்...” (பகரா 2:99)**

رَسولًا يَتلو عَلَيكُم آياتِ اللَّهِ مُبَيِّناتٍ لِيُخرِجَ الَّذينَ آمَنوا وَعَمِلُوا الصّالِحاتِ مِنَ الظُّلُماتِ إِلَى النّورِ - الطلاق: ١١

**“அன்றியும் ஒரு தூதரையும் அவன் (அனுப்பி வைத்தான்). அவர் அல்லாஹ்வுடைய தெளிவான வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார். ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்பவர்களை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக...” (துலாக் 65:11)**

இமாம் ராஸீ அவர்களை விடவும் இமாம் ஷாதிபீ (மறைவு ஹி. 790) இந்த விடயத்தில் சரியான நிலைப்பாட்டில் இருந்திருக்கின்றார். அவர் கூறுவார்: 'ஒவ்வொன்றையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவே அல்லாஹ் அல்-குர்ஆனை அருள் செய்துள்ளான். எனவே அது ஸுன்னாவையும் ஏனைய அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியது. 'ஸுன்னா அல்-குர்ஆனை ஆளும், அல்-குர்ஆன் ஸுன்னாவை ஆள மாட்டாது' என்ற தவறான கூற்றுக்கு இங்கு இடமில்லை'... 'சிலர் சொல்கின்றனர்... ஸுன்னாவுக்கு அல்-குர்ஆன் தேவையானதை விடவும் அல்-குர்ஆனுக்கு ஸுன்னா மிகவும் தேவையானது... என. இது மிகவும் தரக்குறைவான ஒரு கருத்தாகும். அல்-குர்ஆன் பற்றிப் போதிய அறிவுள்ள ஒருவரிடமிருந்து இவ்வாறான ஒரு கருத்தை எதிர்பார்க்க முடியாது.'

அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்குமிடையில் வேறுபாடு இருக்கின்றது என்ற ஒரு சிந்தனையை ஷைத்தான் சிலரது உள்ளத்தில் பதித்துள்ளான் போலத் தெரிகின்றது. எனவே அவர்களது மத்ஹபுகளில் இவையிரண்டும் முரண்படக் கூடியன என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இது உண்மையில் சாத்தியப்படாத ஒன்று. விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் கூறப்பட்ட ஒரு கருத்து இது. அல்-குர்ஆனும் ஸுன்னாவும் முரண்படலாம் என்று நாம் கூறின் அதன் கருத்துத் தான் என்ன? 'அல்லாஹ் நபியைப் பொய்ப்படுத்த முடியும்; அல்லாஹ் தனக்கு அருளியவற்றுக்கு மாற்றமாக நபியவர்கள் நடக்க முடியும்' இது சாத்தியமானதொன்றா? அறிவுள்ள ஒரு மு.ஃமின் நிச்சயமாக இவ்வாறு சொல்ல மாட்டான்.

இல்முல் கலாம் அறிஞர்கள் ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்ளும் போது பெரிதும் தங்கியிருந்தது, அறிவிப்புகளில் மாத்திரமே. அவற்றின் தராதரங்களை மதிப்பீடு செய்வதில் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. ஒரு ஹதீஸ் எந்தவித அடிப்படையும் இல்லாததாக, அறிவிப்பாளர் வரிசையே அற்றதாக இருந்தாலும் தமது மத்ஹபையும் சிந்தனையையும் பலப்படுத்தக் கூடியதாக அமையுமாயின் தயக்கமேதுமின்றி ஏற்புக்குடையதாகக் கொள்ளப்பட்டது. எல்லோராலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஹதீஸ் என்றவகையில் அறிவிப்பாளர் வரிசைகளைத் தேட வேண்டிய அவசியமில்லாது போகின்றது என்ற ஒரு நியாயத்தை அவர்கள் தமக்குத் தாம் கற்பித்துக் கொண்டனர். 'எல்லோராலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது' என்பதன் மூலம் அவர்கள் குறிப்பிடுவது, அவர்களது மத்ஹபைச் சார்ந்தவர்களையே.

இதன் காரணமாகத் தான், முஸ்லிம்கள் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிளவுபடுவர்; அதில் ஒரு கூட்டத்தார் மாத்திரமே ஈடேற்றம் அடைவர் என்ற ஹதீஸ் உட்பட, தஜ்ஜால், மஹ்தீ, ஈஸா நபியின் வருகை முதலான எத்தனையோ ஹதீஸ்கள் மக்கள் மத்தியில்

பரவலடைந்திருப்பதைக் காண முடிகின்றது. இத்தகையன, துறைசார் விற்பன்னர்களது நிபந்தனைகளுக்கு உட்படாதன; ஸஹீஹ் தரத்தினவாகக் கொள்ளப்படாதன.

பல்வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகள், மத்ஹபுகளைப் பொறுத்தவரையில் தத்தமது நிலைப்பாடுகளை நியாயப்படுத்திக் கொள்ளவும் எதிர் தரப்பினர் சவாலாக அமையும் சந்தர்ப்பங்களில் அவர்களை முறியடித்துத் தமது நிலைமைகளை உத்தரவாதப்படுத்திக் கொள்ளவும் இத்தகு அறிவிப்புகள் அவர்களுக்குத் துணையாக, அரணாக அமைந்தன. இதன் பின்னணியிலேயே வெவ்வேறு பிரிவினரையும் நகரங்களையும் கோத்திரங்களையும் தனி மனிதர்களையும் போற்றியும் புகழ்ந்தும் சிலாகித்துப் பேசும் போலி ஹதீஸ்கள் தோற்றம் பெறத் தொடங்கின. இவ்வாறு தான் தனித்தனிச் சிந்தனைப் பிரிவுகள் சார்ந்த அறிவுப் பாரம்பர்யங்கள் உருவாகின. தமது இருப்பை நியாயப்படுத்தும் ஒரு தொகை ஹதீஸ்களின் பின்னால் ஒவ்வொரு பிரிவினரும் நின்று கொண்டனர். அல்-குர்ஆனின் மகாஸிதுகளுக்கும் பெறுமானங்களுக்கும் முற்றிலும் மாறான ஒரு நிலை இது.

### மொத்த விவகாரங்கள் துண்டாடப்பட்டமையும் தனித்தனியாகக் கையாளப்பட்டமையும்

ஒவ்வொரு பிரிவாரும் தத்தமது எதிர் தரப்பினருக்குப் பதில் சொல்லும் நோக்கில் மேற்கொண்ட ஆய்வுகள், விளைவாக எழுந்த குழுக்களிடையிலான மோதல் சூழ்நிலைகளுடன் இயைந்ததாகவே இல்முல் கலாமின் வளர்ச்சி காணப்பட்டது. அதனால் அது எப்போதும் மொத்த விவகாரங்களைத் துண்டாடி, தனது இருப்பை நிலைபெறச் செய்ய பகுதி ஆதாரங்களையும் கிளை விவகாரங்களையுமே தேட முற்பட்டது. தமது நலனுக்கு ஏற்ப, பிரச்சினைகளைத் துண்டு துண்டாகத் தேர்வு செய்து எதிர்தரப்பைத் தாக்குவதற்கான சாதனமாகப் பயன்படுத்தம் போக்கே மிகைத்துக் காணப்பட்டது.

அதேவேளை எதிர்தரப்பு வாதங்களுடன் உடன்பாடுகள் எட்டப்படுவதற்கான வாயில்கள் அனைத்தும் அடைக்கப்பட்ட அமைப்பிலேயே அதன் கோட்பாடும் வடிவமைந்திருந்தது. இதனால் அனைத்துத் தரப்பினரும் முடிவேயில்லாத முரண்பாடுகளுக்காளாகி சேய்மைப்பட்டு இயங்கலாயினர். தொடர்பறாத வாதாட்டங்கள் காரணமாக ஒரு குழுவினர் தாம் ஆரம்பித்த இடத்திற்கு முற்றும் முரணான நிலைப்பாட்டுக்கே இறுதியில் சென்றடையும் நிலைமைகளும் உருவாகின. அல்லாஹ்வுக்குரிய பண்புகளை நிரூபிக்க முற்பட்டவர்கள், இறுதியில் அல்லாஹ்வுக்கு உருவம் கற்பிக்கவும் ஒப்புவமை காணவுமான நிலையை

எய்தலாயினர். அல்லாஹ்வின் விதியை நிரூபிக்க முற்பட்டவர்கள் இறுதியில் ஓர் அடியானுடைய சக்திக்குட்பட்ட ஆனால் அவனால் தவிர்ந்து கொள்ள இயலாத ஒரு செயலுக்கும் அல்லாஹு தஆலா அவனுக்குத் தண்டனை வழங்குவான் எனக் கூறுகின்ற நிலைக்கு வந்து சேர்ந்தனர்.(9)

### ஆ அல்-குர்ஆன் வாசகங்களைச் சான்றாக மாத்திரம் கொள்ளல்

அல்-குர்ஆனின் தர்க்கத்துக்கேற்றதான ஒரு சிந்தனையைக் கட்டியெழுப்புவதற்குரிய சக்தி இல்முல் கலாமுக்குக் கிட்டவில்லை. அதற்குக் காரணம் அதன் துண்டாடல் வாசிப்பு முறை. தனித்தனிச்

---

(9) இப்னு குதைபா அத்தைஸூரி அவர்கள் (மறைவு ஹி. 276) அஹ்லுல் ஹதீஸ்களுக்கும் மு.்.தஸிலாக்களுக்கும் இடையில் விதி பற்றிய விடயத்தில் ஏற்பட்ட கருத்து மோதல் பற்றிக் கூறும் போது: 'அஹ்லுல் ஹதீஸ்கள் விதி (அல்லாஹ்வின் நாட்டம் மனித நடத்தையில் தாக்கம் செலுத்துகிறது என்ற கருத்து) இருக்கிறது என்று நிரூபிக்க முற்பட்ட போது, அதற்கு மறுதலையாக தீவிரமாக அந்தக் கருத்தை மு.்.தஸிலாக்களும் கதரிய்யாக்களும் மறுத்த போது இரு தரப்பினர் மத்தியிலான கருத்து மோதல் மிகவும் தீவிரமாகக் காணப்பட்டது. ஒரு தீவிரத்தை மற்றொரு தீவிரத்தினால் எதிர்க்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். ஒரு கட்டத்தில் அஹ்லுல் ஹதீஸ்கள் மு.்.தஸிலாக்களின் 'மனிதன் முழுமையாகச் செயற் சுதந்திரம் உள்ளவன். அல்லாஹ்வின் நாட்டம் அவனில் செல்லுபடியாகாது' என்ற நிலைப்பாட்டை மறுப்பதற்காக ஜஹம் இப்னு ஸப்வானின் ஜப்ரிய்யா கருத்தைக் கொண்டு வந்தனர். அதாவது மனிதனுக்கும் செயலுக்கும் இடையில் நேரடிச் சம்பந்தம் இல்லை; மாற்றமாக சிலேடையான சம்பந்தமே இருக்கிறது என்றனர்' என்றார்கள்.

ஆனால் அஹ்லுல் ஹதீஸ்களைப் பொறுத்தவரையில் அவர்களிடத்தில் ஜஹ்மிய்யாக்கள் மிகவும் வெறுக்கத் தக்கவர்கள். இருந்தபோதிலும் இந்தக் கருத்து மோதல் அணுகுமுறை, அவர்களை அவர்கள் எதிர்பாராத இடத்திற்கு எடுத்துச் சென்றது. அது போல் இப்னு குதைபா அவர்கள் இந்தக் கருத்து மோதல் நிலைக்கு மற்றொரு உதாரணத்தையும் தருகிறார்: 'அஹ்லுஸ் ஸுன்னாக்களில் ஒரு பிரிவினர், 'ஈமான்' படைக்கப்பட்டதல்ல என்றனர். ஈமான் படைக்கப்பட்டது என்று சொன்னால் ஈமானின் தலையாய அம்சமான 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவும் படைக்கப்பட்டது என்று சொல்ல வேண்டி வந்துவிடும் என்று அவர்கள் பயந்தனர். அதன் தொடராக மனித செயல்கள் அனைத்தும் படைக்கப்படவில்லை. அவை அல்லாஹ்வின் பண்புகள் என்றனர். ஸுப்ஹானல்லாஹ்! எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது இவர்களது கருத்து. மனிதனை அப்படியே படைக்கப்படாதவனாக மாற்றி விட்டனர். எனக்கு சில சமயம் தோன்றுகிறது, யாரேனும் ஒருவர் அர்ஷ் படைக்கப்படவில்லை, குர்ஸியும் படைக்கப்படவில்லை என்று சொன்னாலும் அஹ்லுஸ் ஸுன்னாக்களில் அதற்கு ஆதரவான ஒரு குழுவைக் காண முடியும் போல் இருக்கிறது..'

சான்றுகளாக மாத்திரம் எடுத்தாளப்படுவதற்கான ஒரு மூலமாக மாத்திரமே குர்ஆன் பயன்படுத்தப்பட்டது.

இதன் கருத்து என்னவென்றால், ஒரு விடயத்தை விளங்க வைத்தல், அதனைச் சுற்றி வினாக்கள் விடுத்தல் போன்ற விடயங்களில் இல்முல் கலாம் ஓர் அறிவியல் சிக்கலுக்கு ஆட்பட்டிருந்தது. அதாவது ஒரு பிரச்சினை எழும் போது, அதனைப் பகுதி பகுதியாக வகுத்து நோக்கியதன் பின்னர், பிரச்சினையைத் தீர்க்கும் நிலையில், வகுக்கப்பட்ட பகுதிகள் மீள இணைக்கப்படல் வேண்டும். இந்தப் பணியை, இல்முல் கலாம், அல்-குர்ஆனை மையப்படுத்தி மேற்கொள்ளாமல் புறக் காரணிகளை மையப்படுத்தியே மேற்கொண்டது. ஏனென்றால், இஸ்லாம் குறித்த சந்தேகங்களுக்குப் பதில் சொல்லும் போது, முதலில் அல்-குர்ஆனுக்கு வெளியில் இருந்தே இல்முல் கலாம் தனது தர்க்கத்தைத் தொடங்குகிறது. பின்னர் தான் அல்-குர்ஆனிடம் அந்த வினாக்களை முன்வைக்கின்றது. அல்-குர்ஆனின் தர்க்கத்திற்கு மாற்றமானது இது. இங்கு நடப்பது தான் என்ன?

அந்தப் பிரச்சினையை அல்-குர்ஆனியக் கண்ணோட்டத்தில் பார்த்து, அதற்கான தீர்வை அல்-குர்ஆனின் பார்வையில் தேட முற்படாமல், வெளியில் தீர்வு தேடி விட்டு அல்-குர்ஆனை அதற்கு சாட்சியாக்க முனையும் செயற்பாடே நடைபெறுகிறது.

முஸ்லிம் அறிவு, இவ்வாறான சிந்தனைச் சிக்கல்களுக்குள்ளும் இடையறாத கேள்விகளுக்குள்ளும் நிலை தடுமாறி மூச்சடைத்து நிற்கும் நிலைக்குள்ளாகியது. எதிர்வினையாற்றும் பணியுடன் மாத்திரம் அல்-குர்ஆனின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டது. தனக்கு அப்பாற்பட்ட சிந்தனைகள், கோட்பாடுகளின் பின்னணியிலிருந்து அல்-குர்ஆன் வாசிக்கப்பட்டது. எமது அறிவுக்கும் சிந்தனைக்கும் மூலமாகவும் எமது கருமங்கள் அனைத்தினதும் ஆதாரமாகவும் அமைந்த குர்ஆன் தனது உன்னத நிலையில் மாற்றங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்காளாகியது. இவையெல்லாம் துண்டாடல் அணுகுமுறையின் கசப்பான விளைவுகளாகும்.(10)

---

(10) 'அல்-குர்ஆன் படைக்கப்பட்டது' என்ற விவகாரம் சிந்தனையுலகில் பெரும் அதிர்வையும் சமூக மட்டத்தில் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்திய ஒன்றாகக் கருதப்பட்டது. கலீபா மஃமூன் மற்றும் முஃதஸிம் கலீபா முதவக்கிலின் ஆரம்ப நாட்கள் உட்பட சுமார் பதினெட்டு வருட காலங்கள் முஸ்லிம்களை ஆட்கொண்டிருந்த ஒரு பிரச்சினையாக இது காணப்பட்டது. இக்காலப்பகுதிக்குப் பின்னரும் கூட இதன் தாக்கம் தொடர்ந்து நீடித்தமையை மறுப்பதற்கில்லை. கிறிஸ்தவர்களின் ஈஸா பற்றிய நம்பிக்கைக்கான ஆதாரம் அல்-குர்ஆன் பயன்படுத்திய 'அல்லாஹ்வின்

வார்த்தை' என்ற பிரயோகத்தில் காணப்படுவதாக ஒரு வாதம் அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. அல்-குர்ஆனில், "அல்லாஹ்வின் வார்த்தையை அவன் மர்யமில் போட்டான். அவனுடைய ஆன்மாவில் இருந்து வந்தது..." (நிஸா: 171), என்ற வசனம் அதற்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த இடத்தில் தான் மு.்.தஸிலாக்கள் அல்-குர்ஆன் படைக்கப்படவில்லை. அது அல்லாஹ்வின் வார்த்தை, அல்லாஹ்வின் வார்த்தை அவனது பண்புகளில் ஒன்று, அவனது பண்புகள் ஆரம்பமற்றது என்று சொல்வது, ஆரம்பமற்றவைகள் ஒன்றுக்கு மேற்பட்டு பல இருக்கின்றன என்ற கருத்தைத் தருகிறது. அதனால் கிறிஸ்தவர்கள் ஈஸாவைக் கடவுள் என்று கூறியது போல் அல்-குர்ஆன் கடவுள் என்று கூறப் படும் நிலை ஏற்படலாம் என்று பயந்தனர். அல்-குர்ஆனும் அல்லாஹ்வின் வார்த்தை, ஈஸாவும் மர்யமில் போடப்பட்ட அல்லாஹ்வின் வார்த்தை, எனவே ஈஸா கடவுள் என்று சொல்லப்பட்டது போல் அல்-குர்ஆனும் கடவுள் என்று சொல்லப்படலாம் என்றனர். இந்த சிக்கலில் இருந்து வெளிவருவதற்கான வழியாகவே ஈஸா படைக்கப்பட்டது போல் அல்-குர்ஆனும் படைக்கப்பட்டது என்றனர். முஸ்லிம்களது நம்பிக்கைப்படி, ஆதம் எவ்வாறு மண்ணினால் படைக்கப்பட்டாரோ அது போல் ஈஸாவும் தந்தையின்றிப் படைக்கப்பட்டவராவார். இதனால் மு.்.தஸிலாக்கள், அல்லாஹ்வின் மெய்ம்மையை விட்டும் தனியான பண்புகள் அவனுக்குக் கிடையாது என்ற கருத்துக்கு வந்தனர். இந்த சிந்தனையால் கவரப்பட்ட கலீபா ம.்.மூன், நாட்டின் அனைத்து அறிஞர்களும் இந்த சிந்தனையை ஏற்று அல்-குர்ஆன் படைக்கப்பட்டது என்றும் அது ஆரம்பமற்றது அல்ல என்றும் கருத வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் இந்த சிந்தனையின் அபாயம், அல்-குர்ஆன், குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் காலப்பகுதிக்குரியது; அந்தக் காலத்திற்குப் பின்னர் அதற்கு அமுலாக்க முக்கியத்துவம் ஒன்று இல்லை என்ற இடத்திற்கு இக்கருத்து இட்டுச் செல்லலாம் என்றனர். இந்தப் பிரச்சினையின் பாதிப்பு பல நூற்றாண்டுகள் நீடித்தன. உண்மையில் இது ஓர் இஸ்லாமிய விவகாரம் அல்ல. வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தர்க்கம், உள்ளக தர்க்கமாக மாற்றப்பட்டது. அதாவது, வெளியுலகின் ஒரு தர்க்க சட்டகம் இஸ்லாத்தினுள் கொண்டுவரப் பட்டு, அதனடிப்படையில் எமது விவகாரங்கள் பார்க்கப்படவும் அதனடிப்படையில் எமது நம்பிக்கைகளுக்குப் பதில் தரவும் முற்பட்டமையால் தான் இந்தப் பிரச்சினை விளைந்தது. அல்-குர்ஆன் ஏனைய நம்பிக்கைகளின் தர்க்கத்தில் நின்று கொண்டு வாசிக்கப்பட்டது; அவற்றிற்கு மறுப்பு சொல்ல முற்பட்ட சமயங்களிலும் கூட அவர்களது தர்க்கத்திலிருந்து நோக்கப்படவில்லை. இவையனைத்தும் துண்டாடல் அணுகுமுறையின் விளைவில் நிகழ்ந்தவையாகும். ஏற்கனவே சொல்லப்பட்ட "அல்லாஹ்வின் வார்த்தையை அவன் மர்யமில் போட்டு விட்டான்" **(நிஸா: 171)** என்ற வசனம், குறித்த வசனத்தின் போக்கிலிருந்து வேறாக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. மு.்.தஸிலாக்கள் பயப்பட்டது போல், கிறிஸ்தவர்களது நம்பிக்கைகளுடன் உடன்பாடாக இது புரியப் பட்டுவிடும் என்ற அச்சத்தினாலேயே இது விளைந்தது. கிறிஸ்தவர்கள் அல்லாஹ் உயிருள்ளவன், பேசுபவன், புனித ஆன்மா தான் அவனது உயிர், அவனது

மற்றுமொரு பாதக விளைவும் உருவானது. அது

அறிவு தான் அவனது வார்த்தைகள், அல்லாஹ்வும் அவனது வார்த்தையும் அவனது சக்தியும் ஆரம்பமற்றவை. அவனது வார்த்தை தான் மஸீஹ் என்னும் புதல்வன். அவர் தான் ஒரு உடம்பாக இந்தப் பூமியில் தோன்றியிருக்கிறார். தந்தையிடமிருந்து மகன் பிறப்பதென்பது அறிவிலிருந்து வார்த்தை பிறப்பது போல அல்லது நெருப்பிலிருந்து சூடு பிறப்பது போல அல்லது சூரியனிலிருந்து ஒளி பிறப்பது போல என்றனர். மு.ஃ.தஸிலாக்கள் தமது வாதத்தை முன்வைக்கும் போது, கிறிஸ்தவர்கள் பேசிய இந்த சிந்தனைகள் அவர்களது கவனத்தில் இருந்தன. எனவே இருபக்க வாதப்பிரதிவாதங்கள் சார்பாகவும் எதிராகவும் நடைபெறுவது சாத்தியமாயிற்று. இந்தப் பின்னணியில் தான் மு.ஃ.தஸிலாக்கள் சில அடிப்படையான கேள்விகளை எழுப்பினர். அல்-குர்ஆன் அல்லாஹ்வினது வார்த்தை தானா? அது அல்லாஹ்வின் வார்த்தை என்பதால் அது ஆதியற்றதாக இருக்குமா? இதன் மூலம் அல்லாஹ் அல்லாத ஒன்றுக்கும் ஆதியற்றது என்ற பண்பு வழங்கப்பட இடம்பாடுள்ளதா? அல்லாஹ்வின் வார்த்தை என்பதன் கருத்து, அது நேரடியாக அல்லாஹ் பேசியவையா? அல்லது லவ்ஹுல் மஹ்பூலில் பதியப்பட்டவற்றைக் குறிக்குமா? அல்லது இரண்டுக்கும் மத்தியில் ஒன்றா? தொடர்ந்து இந்தக் கேள்விகள் அல்-குர்ஆனின் எழுத்து, தாள்கள், மை போன்றவையும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையா? அல்லது மனிதனிடமிருந்து வந்தவையா? போன்ற கேள்விகள் வரை நீண்டன. (இவை குறிப்பாக அஹ்லுல் ஹதீஸ்கள் ஈடுபட்ட தவறான வாதப்பிரதிவாதங்கள்) இந்த அனைத்துக் கேள்விகளும் ஒரு பிழையான அடிப்படை மீது தான் எழுந்தன. அதனால் தான் இந்த அனைத்து சிக்கல்களும் தோன்றின. அதாவது மு.ஃ.தஸிலாக்களிடம், ஆதியற்ற நிலை பல காணப் படும் என்று சொல்வது கண்டிப்பாக இணைவைப்புக்கும் பல கடவுள் நம்பிக்கைக்கும் இட்டுச் செல்லும் என்ற அச்சத்தின் பின்புலத்தில் நின்று தான் அவர்களது வாதம் எழுந்திருக்கிறது. உண்மையில் இந்த அச்சம் வேறொரு இறையியலின் தாக்கத்தால் வந்தது. அல்-குர்ஆனுக்கு அல்லாஹ்வின் வார்த்தை என்று வந்த சொல்லை, ஈஸாவுக்கு அல்லாஹ்வின் வார்த்தை என்று வந்த சொல்லுடன் ஒப்பிட்டுப் பார்த்தமை உண்மையில் துண்டாடல் வாசிப்பு அணுகுமுறையின் தவறுகளில் ஒன்றாகும்.

இமாம் இப்னு தைமிய்யா இந்தப் பிரச்சினைக்கு அழகான ஒரு தீர்வை முன்வைக்கின்றார். உண்மையில் அவரது தீர்வு அல்-குர்ஆனை துண்டாடல் வாசிப்புக்கன்றி முழுமையான ஒரு வாசிப்புக்கு உட்படுத்தியதன் அடிப்படையிலேயே பெறப்பட்டிருக்கிறது. அவர் சொல்கிறார்: 'அல்-குர்ஆன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை மர்யமில் போடப்பட்ட ஒரு வார்த்தை என்றது. இந்த வசனத்தில் வார்த்தை என்பது அல்லாஹ்வின் பல வார்த்தைகளில் ஒன்று என்றே விளங்கப்பட முடியும். ஏனெனில், அறபு இலக்கணப்படி வார்த்தை என்ற சொல் இங்கு 'நகிரா' என்னும் அறிமுகமற்ற ஒன்றை குறிக்கும் வடிவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வார்த்தை என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையில், ஆதியற்ற, படைப்பாற்றல் உள்ள ஒரு பண்பு. அது மர்யமில் குடிகொண்டுள்ளது என்பர். ஆனால்,

சொற்களின் பொருள்கோடல் சம்பந்தப்பட்டது. சிந்தனைக் குழுக்கள் மத்தியில் இருந்த கருத்து மோதல்களின் காரணமாகப் பல சொற்கள், அவை மூலம் நாடப் படும் கருத்திலிருந்தும் பிறழ்வான கருத்துகளை முற்படுத்தலாயின. பல சொற்கள், குர்ஆனை மையப்படுத்தி வரையறை செய்யப்படாமல், பல்பொருள் தருவனவாகக் கொள்ளபபட்டன. ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் அடிப்படைக் கருத்து இருக்கவே செய்கிறது. மானுட அறிவின் குறைபாடு காரணமாகப் பல சந்தர்ப்பங்களில், மனிதன் பயன்படுத்தும் சொல், அதன் மூலம் நாடப் படும் கருத்துடன் இயைந்து செல்வதில்லை. ஆக, குறித்த சொல்லுக்கும், அதன் மூலம் நாடப் படும் கருத்துக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கின்றது.(11) அந்த

---

*அல்-குர்ஆன் அல்லாஹ் தஆலா அந்த வார்த்தையை மர்யமில் போட்டு விட்டான் என்கிறது. எனவே அல்லாஹ் தான் படைப்பாளன். அவன் போட்டு விட்ட வார்த்தை படைப்பாளன் அல்ல. ஏனெனில் படைப்பாளனை யாரும் போட்டு விட மாட்டார்கள். படைப்பாளன் தான் பிறவற்றைப் போட்டு விடுவான். அல்லாஹ்வின் வார்த்தைகள் இருவகையானவை: ஒன்று பிரபஞ்ச வார்த்தைகள்; இவை தான் அவனது 'ஆகுக' என்ற வார்த்தையில் பிரதிபலிப்பவையாகும். மற்றையது மார்க்க வார்த்தைகள்; இவை தான் நபிமார்கள் ஊடாக வந்த அவனது கட்டளைகளும் சட்டங்களும் ஆகும். அத்துடன், அவனது நாட்டம், அனுமதி, உயிர்ப்பித்தல் போன்றவையும் இந்த இரு பிரிவுகளிலும் உள்ளடங்குபவையாகும். உண்மையில் இங்கு நாம் சொல்ல வருவது என்னவெனின், பிரச்சினை கேள்வி கேட்கும் வடிவத்திலேயே இருக்கிறது. விடையைத் தேடுவதில் பிரச்சினை இல்லை.*

*(11) அல்-குர்ஆனை மூலாதாரமாகக் கொள்வதன் மூலம் தான் ஒரு சிறந்த அறிதல் முறையையும் ஆதார முறையையும் உருவாக்க முடியும் என்ற கருத்து, அல்-குர்ஆன் அதனுடைய ஒழுங்குகள் கட்டமைப்புகள் உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற கருத்தினடியாகவே பெறப்படுகிறது. அல்-குர்ஆன் கூறுகிறது: "அல்-குர்ஆனை ஒன்று திரட்டுவதும் அதனை ஓதுவதும் எம்மீது கடமையானது. நாம் அதனை ஓதினால் எமது ஓதலைப் பின்பற்றுங்கள். பின்னர் அதனை விளங்கப்படுத்துவதும் எம்மீது கடமையாகும்."* **(கியாமா: 17–19)** *இது, அல்-குர்ஆன் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட, முழுமையான, பலமான கட்டமைப்பு கொண்ட ஒரு மூலாதாரம் என்பதைக் குறிக்கின்றது. அதில் முரண்பாடுகளோ, குளறுபடிகளோ அல்லது பலம் பலவீன ஏற்றத்தாழ்வுகளோ கிடையாது. இந்த உள்ளார்ந்த ஒருங்கிணைப்பைத் தான் அல்-குர்ஆன் இவ்வாறு கூறியது: "அவர்கள் அல்-குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாத ஒருவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல முரண்பாடுகளைக் கண்டிருப்பர்."* **(நிஸா: 82)** *இது தான் ஒரு வரையறுத்த ஆதார முறைமையைக் கட்டியெழுப்ப வழியமைக்கிறது. அல்-குர்ஆன் ஒரு மூடுண்ட வடிவில் இருக்கிறது என்பது இதன் பொருளல்ல. -அல்-குர்ஆன் அள்ள அள்ளக் குறையாத ஓர் அரும் புதையல்- மாற்றமாக அல்-குர்ஆன்*

இடைவெளியின் பரப்பிலேயே ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல்வேறு பொருள் கோடல்கள் தோற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்நிலையில் சில கருத்துகளை ஏற்கவும் சிலவற்றை நீக்கவும் சிலவற்றைத் தடுக்கவும் வேண்டி வருகின்றது. அதற்கு ஒரு நீதி அளவுகோல் அவசியம். இந்த கட்டத்தில் மீண்டும் அல்-குர்ஆனிலிருந்தும் ஸுன்னாவில் இருந்தும் தனித்தனியாகச் சான்றுகைக் கொண்டுவர வேண்டியதாகின்றது. ஆதாரமாகக் கொள்ளும் முறையில் ஒழுங்கீனம் ஒன்று உருவானால் அதனைத் தொடர்ந்து முடிவேயில்லாத எத்தனையோ சிக்கல்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா வசனங்களுக்கும் அவற்றின் பொருள் கோடலுக்கும் இடையிலான சிக்கல் நிலைமையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் சில வேறுபாடுகள் பற்றிய தெளிவை அடைந்து கொள்ள வேண்டும். அதில் பிரதானமாக சொற்களின் நேரடிக் கருத்தில் மாத்திரம் தங்கியிருக்கும் வாக்கிய வாத வாசிப்புக்கும் சொல்லின் நேரடிக் கருத்துடனும் அதன் வசனப் போக்குடனும் எந்தவித சம்பந்தமும் இல்லாத, குறித்த சொல்லை ஒரு குறியீடாக மாத்திரம் கருதுகின்ற சிலேடை வாசிப்புக்கும் இடையிலான வேறுபாடு அவதானிக்க வேண்டுவது. இந்த இடத்தில் குறித்த ஒரு சொல்லுக்கும், அது குறித்து நிற்கும் கருத்துக்கும் இடையிலான இடைவெளி, எந்த விளக்கத்துக்கும் இடமளிக்கக் கூடியதாகவும் வசன ஓட்டத்தை விட்டு மிகவும் அப்பால் நகர்ந்துள்ள காரணிகளால் தீர்மானிக்கப்படக் கூடியதாகவும் மாறிவிடுகின்றது.

சிலேடைப் பொருள் கோடலைப் பொதுவாக எல்லோருமே கையாண்டிருக்கிறார்கள். சில குழுவினர்க்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக அது இருக்கவில்லை. இல்முல் கலாமின் ஒவ்வொரு பிரச்சினையிலும் அதனை ஏற்போரும் சரி; மறுப்போரும் சரி இதனைப் பயன்படுத்தவே செய்தனர். கண், கை போன்ற அல்லாஹ்வின் பண்புகள் மற்றும் கத்ர் பற்றி வந்துள்ள வசனங்களை விளக்குவதற்கு மு.ஃ.தஸிலாக்கள் சிலேடையைப் பயன்படுத்தியது போல், ஹதீஸ் துறை சார்ந்தோர் மனிதனுடன் சம்பந்தப் படும் ஒவ்வொரு செயலுக்கும் சிலேடைப் பொருள்களையே வழங்கினார்கள். உதாரணமாகக் குளிர் போய் விட்டது என்றால் குளிர் இல்லாமலாக்கப்பட்டு விட்டது என்பது தான் பொருள் என்றார்கள்.

சில சமயங்களில் சொல்லுக்கும் அதன் பொருள் கோடலுக்கும் இடையிலான தொடர்பை ஒரு நேர் கோடாகப் புரிந்து கொள்வதும்

---

தன்னில் தெளிவானது. பிறதைத் தெளிவுபடுத்தக் கூடியது. எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் அது மனிதர்களுக்கான ஆதாரமாக இருக்கும் என்பதுவே இதன் பொருளாகும்.

பிரச்சினையே. அதாவது ஒரு சொல்லுக்கான பல பொருள்கள் ஒரே நேர்கோட்டில் அமைந்திருக்கும்; அவற்றில் சில நேரடியானவையாகவும் நெருக்கமானவையாகவும் இருக்கும்; மற்றும் சில மறைமுகமான, சேய்மையான பொருள்களைக் கொண்டனவாயிருக்கும்.

உண்மையில் சொல்லுக்கும் அதன் பொருள் கோடலுக்கும் இடையிலான தொடர்பு இதனை விடவும் சிக்கல் மிகுந்தது. ஒவ்வொரு சொல்லில் இருந்தும் பொருள் கோடல் வளையங்கள் தோற்றம் பெறுகின்றன; அவை அடுத்தடுத்து விசாலமான வளையங்களாகவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளனவாகவும் ஒன்றை மற்றொன்று ஊடறுத்துச் செல்வனவாகவும் காணப்படுகின்றன.

பெயர்ச் சொற்களில் பல்பொருள் பொதிந்தவை, பல சொற்கள் ஒரே கருத்தைக் குறித்துக் காட்டும் வடிவில் அமைந்திருக்கும். என்றாலும் அவை ஒரே கண்ணோட்டத்திலன்றி வேறுபட்ட கண்ணோட்டங்களில் அமையும். உதாரணமாக ‘வாள்’, ‘கூர்மை’ என்ற இரு சொற்களை எடுத்துக் கொள்வோம். இவை இரண்டும் ஒரே கருத்தை இரு வேறு கண்ணோட்டங்களில் உணர்த்துகின்றன. எனினும் இவற்றில் வாள் என்பது பொருளாகவும் கூர்மை என்பது பண்பாகவும் இருக்கின்றது. இது இவ்வாறிருக்க, ஒரு சொல், பல்வேறு கருத்துகளைக் குறித்துக் காட்டும் வடிவிலும் இருக்க முடியும்; அந்த பல் கருத்துகளை இணைக்கும் ஒரு பொதுப்பண்பு அங்கு காணப் படும். எனவே பொருள் கோடல் வரைபை ஒரு வலையமைப்பு வடிவத்திலேயே நாம் கற்பனை செய்ய முடியும். அவ்வாறன்றி அதனை ஒரு எளிமையான நேர் கோட்டு வடிவில் காண முடியாது. அந்த வகையில் ஒன்றை நேரடியான கருத்து என்றும் மற்றையதை மறைமுகமான கருத்து என்றும் வேறுபடுத்த முடியாமலிருக்கும்.

அல்-குர்ஆன் சுருக்கமான சிந்தனைகளையும் மறைவான விடயங்களையும் பேசுகின்றது. இவை பற்றிய அல்-குர்ஆனின் வார்த்தைகளை நேரடிப் பொருளில் விளங்குவது சிரமம். மொழிக் கட்டமைப்புடன் அல்லது வசன ஓட்டத்துடன் அதிகம் அல்லது குறைவாக இயைந்து செல்லக் கூடிய கருத்து எனப் பாகுபாடு செய்வது மாத்திரம் தான் நாம் செய்யக் கூடியது. இங்கு தான் அல்-குர்ஆனிய பொருள் கோடல் முறையை அடிப்படையாகக் கொள்வது முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது, அல்-குர்ஆனின் மொழியியல் கட்டமைப்பு அதன் பிரயோக உத்திகள் என்பன அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும்.

இது தான் ஏனையவற்றை ஆளும் அடிப்படை என்றவகையிலேயே அதனுடனான உறவாடல் அமைய வேண்டும். மேலதிக விளக்கங்களுக்காக ஏனையவை பயன்படுத்தப்படலாம். என்றாலும் அவை ஒரு போதும்

அல்-குர்ஆனின் பொருள் கோடல்களை, வரலாற்று ரீதியான மானுட அனுபவங்கள் மற்றும் அறிவியல்களினால் மட்டுப்படுத்துவனவாக அமைந்துவிடக்கூடாது.

அல்-குர்ஆனின் மொழி, தனது பிரத்தியேகமான உள்ளடக்கங்களை முன்வைப்பதற்கு அறபு மொழியை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தகின்றது. அல்-குர்ஆன் அறபு மொழியின் சொல்லை எடுத்து, அதன் அடிப்படைப் பொருளை இல்லாமல் செய்து, அந்த சொல்லுக்கு இதற்கு முன்னர் எவரும் கொண்டிராத வேறொரு பொருள் கோடலை வழங்குகின்றது. அது ஒத்திசைந்து செல்வது, அல்-குர்ஆன் முன்வைக்கும் தூதுடனேயன்றி, அறபு மொழிக்குரிய பாரம்பர்ய கலாச்சாரத்துடனல்ல. இங்கு சாதாரண வழக்கிலான அறபு மொழியுடன் அல்-குர்ஆனின் மொழி சந்திக்கும் ஒரு புள்ளி உருவாகிறது. தான் முன்வைக்கும் கருத்தை மக்கள் விளங்கிக் கொள்ள முடியும் என்பதாகவே அல்-குர்ஆனின் மொழி வடிவம் அமைகின்றது. இதனை வேறொரு வகையில் கூறினால், அல்-குர்ஆன், ஒரு சொல்லுக்குரிய பொருள் கோடல் வளையங்களைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, அவற்றில் சிலவற்றைத் தக்க வைத்துக் கொண்டு, ஏனையவற்றை அப்புறப்படுத்திவிடுகின்றது. பின்னர் தனக்கேயுரிய பிரத்தியேகமான பொருள்கோடல்களை அதனுடன் இணைத்துவிடுகின்றது. விளைவாக, அந்த சொல்லுக்கு உந்து சக்தியுள்ள குர்ஆனியப் பொருள் ஒன்று கிடைக்கின்றது. அல்-குர்ஆனின் தர்க்கத்தையும் அதன் மொழியியல் பிரயோகங்களையும் விளங்கிக் கொள்வதன் மூலமே, அந்த சொல்லுக்குரிய அல்-குர்ஆனின் விரிந்த பார்வையையும் பொருள் கோடல்களையும் நாம் கிரகித்துக் கொள்ளலாம்.

இதனை விளங்கிக் கொள்ள, அல்-குர்ஆனிலிருந்து ஓர் உதாரணத்தைக் காண்போம்.

وَكُلَّ إِنسانٍ أَلزَمناهُ طائِرَهُ في عُنُقِهِ وَنُخرِجُ لَهُ يَومَ القِيامَةِ كِتابًا يَلقاهُ مَنشورًا اقرَأ كِتابَكَ
كَفى بِنَفسِكَ اليَومَ عَلَيكَ حَسيبًا - الإسراء: ١٣ - ١٤

**“ஒவ்வொரு மனிதனுடைய செயல் குறிப்பையும் அவனுடைய கழுத்தில் நாம் மாட்டி இருக்கிறோம். கியாமத் நாளில் அவனுக்காக ஓர் ஏட்டை வெளிப்படுத்துவோம். திறக்கப்பட்ட நிலையில் அதனை அவன் பெற்றுக் கொள்வான். நீ உம் புத்தகத்தைப் படித்துப் பார்! இன்று உனக்கு எதிராக உன்னுடைய ஆத்மாவே கணக்கதிகாரியாக இருக்கப் போதும் (என்று அப்போது நாம் கூறுவோம்.)” (பனீ இஸ்ராஈல் 17:13–14)**

இந்த வாசகத்தில் ‘செயல் குறிப்பு’ என மொழி பெயர்க்கப்பட்டுள்ள

அறபுப் பதம் 'தாஇர்' என்பதாகும். 'தாஇர்' என்பது பறவையைக் குறிக்கும். இந்த வசனத்தை நேரடியாக விளங்குவதானால் ஸூரா அன்ஆமின் முப்பத்தெட்டாவது வசனத்தில்,

وَلا طائِرٍ يَطيرُ بِجَناحَيهِ - الأنعام: ٣٨

"தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும்" **(அன்ஆம் 6:38)**

எனக் குறிப்பிட்டிருப்பது போல் இரண்டு இறக்கைகளைக் கொண்ட ஒரு பறவை ஒவ்வொரு மனிதனதும் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் என்று நாம் கற்பனை செய்ய வேண்டும்.

ஆனால் இந்த வசனத்தின் ஓட்டத்தை அவதானித்தால் நேரடி விளக்கத்துக்கு நாம் வர முடியாது என்பது புரியும். பறவை என்ற கருத்தைக் குறிக்கும் அடிப்படைச் சொல்லான 'தைர்' என்ற பதம் அல்-குர்ஆனில் எவ்வாறு பிரயோகமாகியுள்ளது எனக் காண்போம். நபிமார்களுக்கும் அவர்களை நிராகரித்தவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டில், மக்கள் நபிமார்களை அபசகுனமாகக் கருதியமை, அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த பதில்களை மையமாகக் கொண்டு இப்பதம் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

فَإِذا جاءَتهُمُ الحَسَنَةُ قالوا لَنا هٰذِهِ وَإِن تُصِبهُم سَيِّئَةٌ يَطَّيَّروا بِموسىٰ وَمَن مَعَهُ أَلا إِنَّما طائِرُهُم عِندَ اللَّهِ وَلٰكِنَّ أَكثَرَهُم لا يَعلَمونَ - الأعراف: ١٣١

**"அவர்களுக்கு ஒரு நன்மை வருமானால், அது நமக்கு (உரிமையாக) வர வேண்டியது தான் என்று கூறினார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு கெடுதி ஏற்படுமானால், அது மூஸாவினாலும் அவருடனிருப்பவர்களாலும் வந்த பீடையென்பார்கள். அறிந்து கொள்ளுங்கள். அவர்களுடைய இந்த துர்ப்பாக்கியமெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்துள்ளது. எனினும் அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை." (அஃராப் 7:131)**

قالُوا اطَّيَّرنا بِكَ وَبِمَن مَعَكَ قالَ طائِرُكُم عِندَ اللَّهِ بَل أَنتُم قَومٌ تُفتَنونَ - النمل: ٤٧

**"அதற்கவர்கள்: உம்மையும் உம்முடன் இருப்பவர்களையும் நாங்கள் துர்ச்சகுனமாக் காண்கிறோம் என்று சொன்னார்கள். அவர் கூறினார்: உங்கள் துர்ச்சகுனம் அல்லாஹ்விடம் இருக்கிறது. எனினும், நீங்கள் சோதனைக்குள்ளாக்கப் படும் சமூகத்தாராக இருக்கிறீர்கள்." (நம்ல் 27:47)**

قالوا طائِرُكُم مَعَكُم أَئِن ذُكِّرتُم بَل أَنتُم قَومٌ مُسرِفونَ - يس: ١٩

**"அ(தற்கு தூதனுப்பப்பட்ட)வர்கள் கூறினார்கள்: உங்கள் துர்ச்சகுனம்**

**உங்களிடத்தில் தான் இருக்கின்றது. உங்களுக்கு நற்போதனை செய்வதையா (துர்ச்சகுனமாகக் கருதுகிறீர்கள்?) அப்படியல்ல! நீங்கள் வரம்பு மீறிய சமூகத்தாராகவே இருக்கிறீர்கள்." (யாஸீன் 36:19)**

அல்-குர்ஆன் 'ததய்யுர்' என்ற பிரயோகத்தை அறபு மொழியிலிருந்து எடுத்திருக்கின்றது. அது அபசகுனத்துடன் சம்பந்தப்பட்ட அறபிகளது கலாச்சார உள்ளடக்கத்தைக் கொண்ட ஒரு பிரயோகமாகும். அராபியர் பறவையின் நகர்வை வைத்து நன்மை தீமையைக் கணிப்பிட்டனர். அது வலப்புறம் பறந்தால் நன்மை; இடப்புறம் பறந்தால் தீமை என அமைந்தது அக்கணிப்பீடு. இறுதியில் ததய்யுர் என்ற சொல் குறிப்பாக அபசகுனம் என்ற கருத்தைக் குறிக்கப் பயன்பட்டது. ஆக, இங்கு அல்-குர்ஆன், ததய்யுர் என்ற பிரயோகத்தை அறபு மொழியிலிருந்து இரவலாகப் பெற்றிருக்கிறது. இதன் மூலம் கூறப்படுவது, மனிதன் தனக்கு நேர்கின்றதோர் இன்னலுக்கான பொறுப்பை எந்தவித காரணமும் இன்றி பிறர் மீது சுமத்தி விட்டுத் தனது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறான் என்பதாகும்.

இவை, நிகழ்வுகள், படைப்புகள் பற்றிய உளவியல் கணிப்புகள் மாத்திரமே. எல்லா சமூகத்திலும் அவர்களது பௌதீக, சமூக சூழல்களுக்கு இயைய இவ்வகையான நம்பிக்கைகளைக் காண முடிந்தது. அல்-குர்ஆன் குறிப்பிடும் சில நபிமார்களது சமூகத்தார் பறவைகளை அல்லாது வேறு விடயங்களைக் கொண்டு சகுனம் பார்த்திருக்கக் கூடும். ஆனால் குறிப்பிட்ட அந்த சொல்லைப் பயன்படுத்தவதன் மூலம் குறிப்பிட்டதொரு சிந்தனையை விளக்கவே குர்ஆன் முற்படுகின்றது. அந்த சிந்தனையை அங்கீகரிப்பதல்ல குர்ஆனின் நோக்கம். அது பிழையானது; மனிதனது மகிழ்வும் துயரமும் அவனுடைய செயலுடன் சம்பந்தப்பட்டது; இவற்றைப் பிரித்துக் காண முடியாது என்பதை உணர்த்தவே குர்ஆன் முனைகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே பொறுப்பானவன் என்ற வழிகாட்டலும் இதனுள் அடங்கியுள்ளது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَكُلَّ إِنسانٍ أَلْزَمناهُ طائِرَهُ فِي عُنُقِهِ وَنُخْرِجُ لَهُ يَومَ القِيامَةِ كِتابًا يَلقاهُ مَنشورًا(١٣) اقرَأ كِتابَكَ كَفى بِنَفسِكَ اليَومَ عَلَيكَ حَسيبًا - الإسراء: ١٣ - ١٤

**"ஒவ்வொரு மனிதனுடைய செயல் குறிப்பையும் அவனுடைய கழுத்தில் நாம் மாட்டி இருக்கிறோம். கியாமத் நாளில் அவனுக்காக ஓர் ஏட்டை வெளிப்படுத்துவோம். திறக்கப்பட்ட நிலையில் அதனை அவன் பெற்றுக் கொள்வான். நீ உம் புத்தகத்தைப் படித்துப் பார்! இன்று உனக்கு எதிராக உன்னுடைய ஆத்மாவே கணக்கதிகாரியாக இருக்கப் போதும் (என்று அப்போது நாம் கூறுவோம்.)" (பனீ இஸ்ராஈல் 17:13–14)**

தான் செய்தது என்ன என ஒவ்வொருவரும் பார்க்கட்டும். தன்னைத் தவிர வேறு யாரையும் அவர் குற்றம் காணல் இயலாது.

அறபு மொழிச் சொல்லை இவ்வாறு தான் அல்-குர்ஆன் பயன்படுத்தியது. அந்தச் சொல்லின் பொருள் கோடல் உள்ளடக்கத்தைத் தனித்தனியாகப் பிரித்து, சிலவற்றைத் தக்கவைத்து, சிலவற்றை அப்புறப்படுத்தி, அந்த இடத்திற்குத் தனது பிரத்தியேகப் பொருள் கோடல் உள்ளடக்கத்தைக் கொண்டு வருகின்றது. இதன் விளைவாக சிந்தனையின் கலப்புத் தோற்றப்பாடு ஒன்று உருவாகிறது. இதில் சில பகுதிகள் புரிந்து கொள்ள இயலுவன; சில பகுதிகள் புரிந்து கொள்ள இயலாதன. அதற்குக் காரணம் அவை மனிதப் புலனுணர்வுகளால் புரிந்து கொள்ள முடியாத மறைவான விடயங்களுடன் சம்பந்தப்பட்டன. என்றாலும் அவை குறிக்கும் விடயத்தைப் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும். உலகில் உள்ள தோட்டம் குறித்து அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَاضرِب لَهُم مَثَلًا رَجُلَينِ جَعَلنا لِأَحَدِهِما جَنَّتَينِ مِن أَعنابٍ وَحَفَفناهُما بِنَخلٍ وَجَعَلنا بَينَهُما زَرعًا كِلتَا الجَنَّتَينِ آتَت أُكُلَها وَلَم تَظلِم مِنهُ شَيئًا وَفَجَّرنا خِلالَهُما نَهَرًا - الكهف: ٣٢ - ٣٣

**"(நபியே!) இரு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகவும் கூறுவீராக! அவ்விருவரில் ஒருவருக்கு நாம் திராட்சைத் தோட்டங்களில் இரண்டைக் கொடுத்தோம். இன்னும் பேரித்த மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழப் பட்டவை ஆக்கினோம். அவ்விரண்டிற்கும் இடையில் (தானிய) விவசாயத்தையும் அமைத்தோம். அவ்விரு தோட்டங்களும் அவற்றின் பலன்களை எப்பொருளையும் குறையாது கொடுத்துக் கொண்டிருந்தன. அவ்விரண்டிற்கும் நடுவே நாம் ஓர் ஆற்றையும் ஒலித்தோடச் செய்தோம்." (கஹ்ப் 18:32–33)**

இதற்கு மாற்றமாக மறுமையின் தோட்டம் குறித்துக் கூறுகின்றது:

وَعَدَ اللَّهُ المُؤمِنينَ وَالمُؤمِناتِ جَنّاتٍ تَجري مِن تَحتِهَا الأَنهارُ خالِدينَ فيها وَمَساكِنَ طَيِّبَةً في جَنّاتِ عَدنٍ وَرِضوانٌ مِنَ اللَّهِ أَكبَرُ ذلِكَ هُوَ الفَوزُ العَظيمُ - التوبه: ٧٢

**"மு.:.மினான ஆண்களுக்கும் மு.:.மினான பெண்களுக்கும் அல்லாஹ் சுவனபதிகளை வாக்களித்துள்ளான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். (அந்த) நித்திய சுவனபதிகளில் அவர்களுக்கு உன்னத மாளிகைகள் உண்டு –அல்லாஹ்வின் திருப்தி தான் மிகப் பெரியது– அது தான் மகத்தான வெற்றி." (துவ்பா 9:72)**

முதலாவது தோட்டத்தை நாம் கற்பனை செய்து அது என்ன என விளங்கிக் கொள்ள முடிகின்றது. இரண்டாவதில் எங்களுக்கு அதனூடாகக் குறித்துக் காட்டப் படும் ஒன்றை மாத்திரம் தான் கற்பனை செய்ய முடிகிறது. அதாவது இரண்டு பொருள் கோடல் வளையங்கள் ஊடறுத்துச் செல்லும் பொதுப் பொருள் கோடல் பரப்புத் தான் அது. இங்கு அல்-குர்ஆன், மனிதப் புலனுணர்வுகளால் புரிந்து கொள்ள முடியுமான ஒன்றைப் பயன்படுத்தி, புரிந்து கொள்ள முடியாத ஒன்றைக் குறித்துக் காட்டி அதன் கருத்தை விளக்க முற்படுகின்றது.

கலீலுல்லாஹ் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கடைப்பிடித்த ஆதார முறைமையும் இதுவே. புலுனுணர்வுகளால் புரிந்து கொள்ள முடியாததை அறிந்து கொள்ள, புலனுணர்வுகளால் புரிந்து கொள்ள முடியுமானதைப் பயன்படுத்தினார் அன்னார். தமக்கு வஹீ அறிவிக்கப் பெறும் முன்னரே அல்லாஹ்வை உறுதியாக நம்பி ஈமான் கொண்டிருந்தனர் அன்னார்.

பொருள் கோடல் ஒழுங்கீனத்தின் வடிவமும் காணப்படவே செய்கின்றது. அதாவது, அல்-குர்ஆனுக்கு வெளியிலிருந்து ஒரு கலைச் சொல்லை உருவாக்கி, அதனை அல்-குர்ஆனின் உள்ளடக்கங்களுடன் பொருத்தும் செயற்பாடு. இதில் இல்முல் கலாம் அறிஞர்கள் சற்று மிகையாகவே செயல்பட்டு, அல்-குர்ஆனின் உள்ளடக்கங்களுக்குச் சமானமானவை என அவர்கள் கண்டு கொண்ட பல விடயங்களை இணைத்து, அவற்றையும் அவசியம் கடைப்பிடிக்கப்பட வேண்டுவன என்ற தரத்திற்குக் கொண்டு வந்தனர். உண்மையில் அவை கட்டாயமாக்கப்படாதவை. இந்த வகையில் அமைந்தது தான் 'அகீதா' என்ற கலைச் சொல் ஈமானுக்குச் சமமாக்கப்பட்டமையும். பின்னர் அல்-குர்ஆன் குறிப்பிட்ட ஈமானின் ஐந்து அம்சங்களுக்கும் மேலாக, அவற்றுள் அடங்காத மேலும் பல கூறுகள் இணைத்துக் கொள்ளப்பட்டன. அதனால் 'அகீதா' எனும் கலைச்சொல், 'ஓரளவு உறுதியானவை' என்ற எல்லையையும் தாண்டி, 'பெரும்பாலும் உறுதியானவை', 'மிகவும் உறுதியானவை' 'குறிப்பிட்ட ஒரு மத்ஹபினரிடத்தில் மாத்திரம்' முதலான அனைத்தையும் உள்ளடக்கும் ஒன்றாக மாறியது. இவ்வாறு தான் ஈமான் கொள்ள வேண்டிய ஐந்து அம்சங்கள், சிலரிடத்தில் முன்னூற்றி என்பது (380) அம்சங்களாக மாறின. தனது 'பிரக்' எனும் நூலில் இமாம் பக்தாதி இதனை அண்மிய ஓர் எண்ணிக்கையைக் குறிப்பிடுவார். வேறு சிலரிடத்தில் வெவ்வேறுபட்ட எண்ணிக்கைகள் விதிக்கப் பெற்றுள்ளன. மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட இத்தகு அம்சங்களைப் பிரயோகித்தே, மிகத் தாராளமாகப் பிறருக்குக் 'குப்ர்' பட்டம் சூட்டும் நிலை பரவலாகியது.

**இ கட்புலனாகும் உலகம், கட்புலனாகா உலகம் என்பவற்றுக்கிடையில் உள்ள தொடர்பு குறித்து முஸ்லிம்களது புரிதலில் உள்ள குழப்ப நிலை**

ஒரு விடயத்தைக் கையாள்வதற்குத் தனக்கேயுரிய வழிமுறைகளைக் கொண்டிருக்கின்றது அல்-குர்ஆன். அனைத்தையும் சூழ்ந்த, முழுமையான அல்லாஹ்வின் அறிவினாலேயே அது விளக்கமுறுகின்றது. மனிதனது சிந்தனையையும் அவனது வாசிப்பு மற்றும் உணர்வுகளின் தாக்கப்பரப்புகளையும் கட்டுப்படுத்துகின்ற கட்புலனாகும் உலகத்தினதும் கட்புலனாகா உலகத்தினதும் வரையறைகள் அல்லாஹ்வின் அறிவைக் கட்டுப்படுத்துவதில்லை. அல்-குர்ஆனின் அணுகுமுறையை நாம் புரிந்து கொள்ள வேண்டுவது இந்த இடத்திலிருந்தே.

அல்-குர்ஆன் சில சமயம், கட்புலனாகா உலகிலிருந்து இறங்கி, கட்புலனாகும் உலகிற்கு வருகின்றது. பின்னர் மீண்டும் கட்புலனாக உலகிற்குத் திரும்பிச் செல்கின்றது. அது பல்வேறுபட்ட உலகங்களில் சுழன்று கொண்டு இருப்பது போன்றே தோன்றுகின்றது. இறை கட்டளை உலகிலிருந்தும் இறை நாட்ட உலகிலிருந்தும் இறை படைப்புலகிலிருந்தும் அல்-குர்ஆன் குறிப்பிடும் சில விடயங்களை மனிதன் சில சமயங்களில் புரிந்து கொள்கின்றான். எனினும் அந்த அனைத்து லோகங்களிலுமான அதிகமான விடயங்களை அவனால் அறிந்து கொள்ள முடியாமலேயே இருக்கும். காரணம், அவனுக்கு வரையறுக்கப்பட்ட அறிவே வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் ஏகத்துவக்கலை, அகீதாக்கலை, இல்முல் கலாம் முதலியன உட்பட மனிதனின் அனைத்து வகை அறிவுகளும், அல்-குர்ஆன் பேசும் அனைத்தையும் அறிந்து கொள்ளக் கூடிய எல்லைக்கு மனிதனை அழைத்துச் செல்ல மாட்டா. மானுட அறியாமைகளைக் கடந்து செல்லவும் அவை துணை புரிய மாட்டா.

ஆகையால் மனிதன் தனது சக்தியை மீறித் தன்னை வருத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நோக்கங்கள் நல்லன என்ற காரணத்தை முன்னிறுத்தி அவன் வலிந்து செயற்பட வேண்டிய தேவையுமில்லை. அல்-குர்ஆன் அவனுக்கென நியமம் செய்த எல்லைக்குள் நின்று கொள்வதே அவனுக்குத் தாராளமாகப் போதுமாகும்.

கட்புலனாகா உலகுடன் சம்பந்தப்பட்டனவாய் இல்முல் கலாம் துறையினர் ஈடுபாடு காட்டிய அதிகமான விவகாரங்கள், கண்டிக்கத் தக்க வலிந்த செயற்பாடுகளாகவே தோற்றுகின்றன. எவ்வகையான தூண்டுதல்கள் இருந்த போதிலும் இவ்விவகாரங்களில் அத்துணை தீவிர ஈடுபாடு காட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அவ்வாறு ஈடுபடாமல் இருப்பது, அவர்களுக்கு தீங்கேதும் விளைத்து விடப் போதுமில்லை. தத்தமது எல்லையை அறிந்து, அதனளவில் நின்று கொள்வது அவர் தம் கண்ணியத்துக்குக் குந்தகம் விளைக்கப் போவதுமில்லை. மறைவான

விடயங்கள் குறித்த அவர்களது விவாதங்களின் போது அவதானிக்க வேண்டிய ஒரு வாசகம்:

عالِمُ الغَيبِ فَلا يُظهِرُ عَلى غَيبِهِ أَحَدًا - الجن: ٢٦

**“(அவன் தான்) மறைவானவற்றை அறிந்தவன். எனவே, தான் மறைத்திருப்பவற்றை அவன் எவருக்கும் வெளியாக்க மாட்டான்.” (ஜின் 72:26)**

என்றாலும், முழுமையாக அல்லாஹ் மட்டுமே தெரிந்த மறைவானவற்றையும் காலவோட்டத்தில் வெளிப்பட முடியுமான, அதாவது ஒரு கட்டத்தில் மறைவானதாகவும் மற்றொரு கட்டத்தில் கட்புலனாகும் ஒரு பகுதியாகவும் இருக்க முடியுமான பகுதி சார் மறைவான விடயங்களையும் வேறுபடுத்திக் காண அவர்கள் தவறி விட்டனர். இதன் காரணமாகவே பிரபஞ்ச ஓட்டத்திலும் சமூக ஓட்டத்திலும் வெளிப் படும் அல்லாஹ்வின் நாட்ட உலகத்தையும் அவனது படைப்புலகையும் அவர்கள் இரண்டறக் கலந்து விட்டனர். இங்கு மனிதன் கட்டுக்கடங்காமல் எல்லை மீறி நெடுந்தூரம் சென்று விட்டான். இதனால் கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா உலகங்களுடனான மானுடத் தொடர்பு குழப்பங்களுக்குள்ளாய் விட்டது.

### ஈ விதண்டாவாத அணுகுமுறைக்கு வலுச் சேர்த்தமை

ஏற்கனவே நாம் கண்டது போல, இல்முல் கலாமின் சிந்தனா அணுகுமுறையானது வாதாட்டங்களின் மீதே கட்டமைக்கப்பட்டிருந்தது. இல்முல் கலாம் அணுகுமுறையின் நோக்கமாயிருந்தது, எதிர்தரப்பு வாதங்கள் பிழை என்பதை நிரூபிப்பதே. இதன் தாக்கத்தின் காரணமாக ஒவ்வொரு பிரிவினரும் அதே வழிமுறையையே கையாளத் தொடங்கினர். தத்தமது வாதங்களை நிரூபிக்கவும் பலப்படுத்தவும் பிறர் வாதங்களைப் பிழை என நிறுவுதலே தக்க மார்க்கம் என அனைத்துத் தரப்பினரும் கொண்டிருந்தனர். இது மென்மேலும் கிளை விவகாரங்களைப் பெருக்கிக் கொண்டே சென்றது. குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எவரும் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆக, அனைவருமே இந்த உணர்வுக்குப் பலியானவர்களாகி, அதிலிருந்தும் மீட்சி பெற இயலாதிருந்தனர்.

வாதாட்டத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டதே இல்முல் கலாம். அரிஸ்டோட்டிலிய தத்துவத்தின் ஒரு பகுதி வாதாட்டம். வார்த்தைகளிலிருந்து எழும் கோட்பாடுகளில் இருந்து உருவாவது அது. இங்கு ஒரு கருத்தை நிறுவும் நோக்கில் வாதிடுகின்றவனும் அதனை எதிர்க்கும் நோக்கில் வாதிடுகின்றவனும் களத்தில் பங்கு பெறுகின்றார்கள். மற்றவருடைய கருத்தைப் பிழை என நிரூபித்துத் தனது கருத்தே சரி என நிறுவும் நோக்கமே இருவரிடமும் இருக்கும். அதுவன்றி, குறித்த விடயத்தின்

உண்மை எது, பொய் எது என்பதை அறிந்து கொள்ளும் முனைப்பு இருவரிடமும் இருக்காது. இதனால் தொடர்ந்து செல்லும் வாதாட்டத்தின் காரணமாக, ஒன்றை நிரூபிக்கும் நிலைப்பாட்டில் இருப்பவர் எதிர்க்கும் நிலைப்பாட்டுக்கும் எதிர்க்கும் நிலைப்பாட்டில் இருப்பவர் நிரூபிக்கும் நிலைப்பாட்டுக்கும் மாறி விடுவா. அதாவது நிரூபித்தலும் எதிர்த்தலும் கூட முரண்பட்டு நிற்கும். நிரூபிக்கும் நிலைப்பாட்டில் இருப்பவர், தான் ஆரம்பத்தில் பிழை என உறுதிப்படுத்தியவற்றை, மீண்டும் சரி எனக் கூறும் நிலைக்கு மாறி விடுவார். அவரே எதிர்க்கும் நிலைப்பாட்டுக்குச் சென்று தான் சரியென நிறுவியவற்றை மீண்டும் பிழையென நிறுவுவார். இது போன்ற ஒன்றின் மீது கட்டமைக்கப்படுவது, அத்திவாரமற்ற ஒரு கட்டடத்திற்குச் சமானமானது. எந்த சந்தர்ப்பத்திலும் அது வீழ்ந்துவிடக் கூடும். இல்முல் கலாமின் மிக ஆபத்தான பலவீனம் இது.

தப்ஸீர், பிக்ஹ், உஸூலுல் பிக்ஹ் முதலான துறைகளிலும் இந்த வாதாட்ட அணுகுமுறை தாக்கம் செலுத்தியிருந்தது. உதாரணமாக, சட்டவியல் துறை சார்ந்தோர், ‘சட்டங்களுக்கான காரணம் கற்பித்தல்’ என்ற கற்கையை அணுகும் பொழுது, இல்முல் கலாம் தாக்கத்தின் காரணமாக, ‘அல்லாஹ்வின் செயல்களுக்குக் காரணம் கற்பிக்க முடியா?’ என்ற அர்த்தமற்ற கோட்பாட்டியல் வாதத்தில் ஈடுபட்டார்கள். தமது இல்முல் கலாம் மத்ஹபின் பிரகாரம், அல்லாஹ்வின் செயல்களுக்கும் சட்டங்களுக்கும் காரணம் கற்பிக்க முடியும் எனக் கொண்டவர்கள் இதனை ஏகத்துவத்துக்கு முரணான ஒன்றாகவோ, அல்லது அதற்குக் கலங்கம் கற்பிப்பதாகவோ கருதவில்லை. இங்கு காரணம் காண்பதற்குத் தமது மத்ஹபோடு உடன்பட்டு வரும் ஒரு விளக்கத்தை அவர்கள் கண்டு கொண்டனர். அல்லாஹ்வின் செயல்களுக்குக் காரணம் கற்பித்தலானது ஏகத்துவக் கோட்பாட்டுக்கு முரணானது எனக் கொண்டவர்கள், தமது மத்ஹபுக்கு இயைய, காரணம் காணுதல் அனுமதிக்கப்பட மாட்டாது என்ற நிலைப்பாட்டில் நின்றனர்.

மு.ஃதஸிலாக்களைப் பொறுத்தவரையில், அர்த்தமுள்ள ஒவ்வொரு விடயத்துக்கும் அந்த அர்த்தத்தைக் கொண்டு வரும் ஒரு காரணம் இருக்கின்றது; அது சுய தாக்கம் கொண்டது; அந்தக் காரணம் அமையும் இடத்தில் அதே போன்றதொரு செயல் தோன்றும்; அதற்கு எந்தப் புற அழுத்தமும் அவசியமில்லை. அதனால் காரணம் என்பதைச் சிலபோது ‘முஅஸ்ஸிர்’ எனும் தாக்கம் விளைவிக்கக் கூடியது என்றும் மற்றும் சிலவேளை ‘மூஜிப்’ எனும் விளைவைக் கட்டாயமாகக் கொண்டு வரக் கூடியது என்றும் விளக்கினர். இக்கருத்து அவர்களது இல்முல் கலாம் மத்ஹபைப் பிரதிபலிப்பதாகவே தோற்றுகின்றது. அதன்படி, ஒன்றை நல்லது அல்லது கெட்டது என்று தீர்மானிக்கும் ஆற்றல் பகுத்தறிவுக்கு உள்ளது எனவும் மிகவும் நல்லதை சட்டமாக்குவது அல்லாஹ்வின் கடமை எனவும்

கூறுவர். அல்லாஹ்ு தஆலா சட்டங்களுடன் நலன்களை வைத்திருப்பது அவனது கருணை, தயாளம் என்பவற்றாலாகும் என்பர் அஷ்அரிக்கள். அல்லாஹ் விரும்பினால் அதற்கு எதிரான ஒன்றிலும் நலனை வைக்க முடியும். எந்த ஒரு சட்டத்திலும் அவன் நலனை வைக்க முடியுமாயினும் அதனை ஒரு போதும் அர்த்தமில்லாததாகச் செய்ய மாட்டான். ஆக, ஷரீஆத் ரீதியான காரணங்கள் என்பது, அந்த காரணங்கள் இருப்பின் அல்லாஹ் இந்த சட்டத்தை வைத்திருப்பான் என்பதற்கான அடையாளமே என்பது அஷ்அரிக்கள் கருத்து. மேலும், மூலப்பொருள் ஒன்று, இடையில் புதிதாய்த் தோன்றும் ஒன்றினால் தாக்கமடைய மாட்டாது என்ற அவர்களது மத்ஹபின் அடிப்படைக் கருத்துடன் முரண்படாத வகையிலேயே அவர்கள் தம் கருத்தை முன்வைத்துள்ளனர். அதன்படி, சட்டம் என்பது மூலப் பொருள், காரணம் என்பது பின்னர் புதிதாகத் தோன்றியது. ஆக, புதிதாகத் தோற்றிய ஒன்றை மூலப் பொருளுக்குக் காரணமாகக் குறிப்பிட முடியாது. எனவே அல்லாஹ்வின் செயற்பாடுகளுக்கு நோக்கங்கள் கற்பிக்க இயலாது; அவனது சட்டங்களும் நலன்கள் பற்றிய தத்துவங்களின் விளைவாக எழுவன அல்ல. சில சட்டங்களின் விளைவாக நலன்கள் கிட்டக் கூடும். என்றாலும் அத்தகு விளைவுகளுக்காகத் தான் இந்த சட்டம் வந்திருக்கின்றது எனக் கூற முடியாது.

மனித நலன் என்ற காரணத்தை வைத்தே அல்லாஹ்வின் செயல்கள் எழுகின்றன எனக் கூறுவர் மாத்ருதீக்கள். நலனான ஒரு விடயத்தைச் சட்டமாக்குவது அல்லாஹ் மீது கடமையாக மாட்டாது; அவனது கருணை, தயாளம் என்பன காரணமாகவே எழுவது அது. அல்லாஹ் நோக்கத்திற்குக் கட்டுப்பட்டவனல்ல எனக் கொண்டு அவனது செயல்களுக்குக் காரணம் கற்பிப்பதை மறுப்பவர்களது ஆதாரங்களுக்கு மறுப்பு உரைப்பர் மாத்ரூதீக்கள். இவர்களது கருத்தில் நோக்கத்தின் பயன் கிட்டுவது மனிதனுக்கே; அது அவனுக்கு நலனைக் கொண்டு வரலாம், அல்லது தீமையைத் தடுக்கலாம்; எனவே நோக்கம் என்பது மனிதனை முழுமைப்படுத்தக் கூடிய ஒன்றே அன்றி அல்லாஹ்வை முழுமைப்படுத்தக் கூடியது அல்ல.

ஹன்பலீக்களைப் பொறுத்தவரையில், பன்முகப்பட்டன அவர்களது நிலைப்பாடுகள். காழி அபூ ய.்.லா கூறுவார்: ஒரு நோக்கத்திற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு தூண்டுதலின் அடிப்படையிலோ அல்லாஹ் ஒரு விடயத்தைச் செய்ய முடியாது. கதரிக்கள், பிராமணர்கள், மறுபிறப்புக் கொள்கையாளர்கள் போன்ற பித்அத் வாதிகளது நிலைப்பாட்டுக்கு மாற்றமானதாகும் இது.

நலன்கள் மற்றும் தீமைகளினால் பாதிப்புறுபவர்கள் அல்லது அவற்றின் தேவை உள்ளவர்களுக்குத் தான் நோக்கங்கள் மற்றும்

காரணங்கள் பொருந்தி வருகின்றன. தைமிய்யாக்களின் அல்மிஸ்வத்தா எனும் நூல் கூறுகின்றது: அல்-ஹலவானீ, இப்னு அகீல், அபுல் கத்தாப் முதலாக எமது மத்ஹபைச் சார்ந்த பலர், பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்: 'காரணங்களை அல்லாஹு தஆலா, சட்டங்களைக் காட்டக் கூடிய அடையாளங்களாகத் தான் அமைத்திருக்கின்றான். இவை, ஒரு விடயத்துக்குச் சூட்டப் பெற்றிருக்கும் பெயர் போன்றவை...' இந்தக் கருத்தை மொத்தமாகச் சரி என்று கூறிவிட முடியாது. ஷரீஆத் காரணங்கள் பற்றிய வாதம் உண்மையில் மிக நீளமானது. இப்னு அகீலும் இன்னும் பலரும் குறிப்பிட்டிருப்பது போல, காரணங்களானவை அடையாளங்கள் என்றிருந்தாலும் கூட அவை நலன்களைக் கொண்டு வருவனவாகவும் தீமைகளைத் தடுப்பனவாகவும் இருக்கின்றன. அவை வெறுமனே எந்த விளைவையும் கொண்டு வராத மேலோட்டமான அடையாளங்களாக மாத்திரம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.'

'கியாஸ் எனும் பகுத்தறிவு ரீதியான ஒப்பீட்டணுகுமுறையை ஓர் ஆதாரமாகப் பயன்படுத்த முடியும்; சட்ட வசனங்களில் இந்தப் பகுத்தறிவுப் பார்வையைச் செலுத்துவது கட்டாயமானது' என ஹன்பலீக்களின் சட்டவியலாளர் சிலரும் இல்முல் கலாம் துறையினர் சிலரும் குறிப்பிடுவர். ஹதீஸ் துறையாளர்கள் மற்றும் ழாஹிரி மத்ஹபினரை மேற்கோள் காட்டி இமாம் இப்னு அகீல் கூறுவார்: 'பகுத்தறிவு ரீதியான ஆதாரம் செல்லுபடியாகாது; பகுத்தறிவின் அடிப்படையில் ஆய்வு செய்வது ஹராம். தக்லீத் செய்வதே வாஜிபானது'. ஆயினும் இமாம் தைமிய்யா, ஏகத்துவத்தின் முக்கிய வெளிப்பாடுகளில் ஒன்று காரணம் காணுதல் என்பார்: 'என்றாலும் ஒரே காரணத்தை வைத்துச் சட்டவாக்கத்திற்குச் செல்லாமல், பல காரணங்கள் ஒன்றிணைவது அவசியம். இறை பண்பு மாத்திரமே ஒரு காரணத்தை மாத்திரம் வைத்துச் செயற்படுவது.'

எமது வரலாற்றில் மிக ஆரம்ப நாட்களிலேயே மகாஸித் சிந்தனை உருப்பெறுவதற்குத் தூண்டு கோலாகக் காரணம் காணுதல் எனும் செயற்பாடு அமைந்திருக்க முடியும். என்றாலும் அதற்குச் சில காரணிகள் தடையாக இருந்துள்ளன. அவற்றுள் முதன்மையானது சிந்தனைத் துறைகள் அனைத்திலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பியிருந்த இல்முல் கலாம் ஆகும்.

ஒன்றின் நோக்கம் என்ன என்ற தேடல் இஸ்லாத்தின் முக்கியத்துவம் வாய்ந்ததோர் சிறப்பம்சம். இறை படைப்பின் எந்த ஓர் அம்சத்திலும் இதனைத் தெளிவாக அவதானிக்கலாம். சிறிய, பெரிய படைப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் இருக்கின்றது. இவ்வுலகில் அவை ஒவ்வொன்றும் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. மனிதன்

அறிந்தாலும் அறியாது விட்டாலும் இது தான் உண்மை. அல்-குர்ஆன் வினவுகிறது:

أَفَحَسِبتُم أَنَّما خَلَقناكُم عَبَثًا وَأَنَّكُم إِلَينا لا تُرجَعونَ - المؤمنون: ١١٥

**"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும் நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (முஃமினூன் 23:115)**

இந்தப் பிரபஞ்சத்தில் எந்த ஒன்றும் தற்செயலாகத் தோன்றியதாகவோ அல்லது எந்த நோக்கமோ, பணியோ இன்றி இருப்பதாகவோ சொல்ல முடியாது. தற்செயல் என்பது, மனிதனின் தோற்றக் காலத்துடன் சம்பந்தப்பட்ட ஆதி புத்துயிர்ப்புச் சிந்தனையின் ஒரு வெளிப்பாடாகும்.

அந்தக் கட்டத்தின் இருளில் இருந்து இஸ்லாம் மனிதர்களை மீட்டெடுத்தது. தற்செயல் சிந்தனையிலிருந்து, தர்க்க ரீதியான காரணம் காணும் சிந்தனைக்கு அவர்களை அது நகர்த்தியுள்ளது. பொருட்களுக்கும் அவற்றின் தோற்றப்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டு கொள்ள மனிதர்களுக்கு இந்த சிந்தனை உதவுகின்றது. அவ்வாறே, மனிதன், வாழ்வு, பிரபஞ்சம் முதலிய அனைத்திலும் உள்ள அல்லாஹ்வின் பௌதீக விதிகளையும் ஒவ்வொரு விடயமும் எத்துணை நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டுள்ளன என்பதைக் கண்டு கொள்ளும் அறிவாற்றலையும் இது தருகின்றது. இந்த அறிவுத் தொழிற்பாடு பல்வேறு கலைகளையும் ஞானங்களையும் உருவாக்கி, மனித அறிவை ஒழுங்குபடுத்தி, அதன் பாதையைச் சீர் செய்கின்றது. மேலும் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலுமான தனித்தனிப் பொருள் கோடலையும் விஞ்சி, அவ்வவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஒருங்கிணைத்து, அவற்றின் வலையமைப்பையும் நோக்கத்தையும் புரிந்து கொள்ளும் ஆற்றலை இது மனிதனுக்கு வழங்குகின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَما خَلَقنَا السَّماواتِ وَالأَرضَ وَما بَينَهُما لاعِبينَ ما خَلَقناهُما إِلّا بِالحَقِّ وَلٰكِنَّ أَكثَرَهُم لا يَعلَمونَ - الدخان: ٣٨ - ٣٩

**"மேலும், வானங்களையும் பூமியையும் இவ்விரண்டிற்கும் இடையே உள்ளவற்றையும் விளையாட்டிற்காக நாம் படைக்கவில்லை. இவ்விரண்டையும் சத்தியத்தைக் கொண்டேயன்றி நாம் படைக்கவில்லை. எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்." (துகான் 44:38–39)**

மறுபுறம், இது குறித்து எதிர்தரப்பில் நின்று வாதிடுகின்றவனும் அடுத்த தரப்புக் கருத்தை ஏற்றுக் கொள்வதன் அபாயத்தை வலிந்து

உறுதிப்படுத்துவதில் கவனமாக இருக்கின்றான்; அடுத்த தரப்புக் கருத்தை ஏற்பது, ஈமானில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் இறை நிராகரிப்புக்கு இட்டுச் சென்றுவிடும் என்பதையும் நிறுவுவதற்கு எந்த வழிமுறையையும் கையாள்வதற்குத் தயாராக இருக்கின்றான்.(12) இதனால் மார்க்கத்தின் பல்வேறு கிளை விவகாரங்கள், மார்க்கத்தின் அடிப்படைகள் எனும் தரத்திற்குத் தூக்கி விடப்பட்டுள்ளன. பல்வேறு விவகாரங்கள், அவற்றுக்குச் சம்பந்தமில்லா ஆய்வுத் துறைகளுடன் இணைக்கப்பட்டு தவறான தீர்வுகளைச் சிந்தையுள் அமிழ்த்துவிடும் கைங்கர்யமும் நிகழ்ந்துள்ளது.(13)

கூட்டு மொத்தமாகக் காணுமிடத்து, இல்முல் கலாமுடனான உறவாடலில் ஏற்பட்ட தடம்பிறழ்வு முஸ்லிம் உம்மத்தை ஆழ்ந்த சிந்தனைச் சிக்கலுக்கு ஆளாக்கி விட்டுள்ளமையே தெளிவாகிறது. தீர்வே பிரச்சினையாக மாறுதல் என்பதற்குத் தக்கதோர் உதாரணமாக இது விளங்குகின்றது. நம்பிக்கை மற்றும் சிந்தனா சீர்திருத்தத்துக்கான ஒரு தீர்வாக

---

*(12)* ஒருவர் வழங்கும் விளக்கத்தினை வைத்து அவரை பாவி என்றோ அல்லது காபிர் என்றோ கூறுதல், இஸ்லாமிய சட்ட அடிப்படைகள் துறையில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து, இமாம் அஹ்மத் இப்னு முஹம்மத் இப்னு அலி அல்வஸீர் அவர்கள் விமர்சன பூர்வமாக விளங்கப்படுத்துகிறார். சட்ட அடிப்படைகள் துறையாளர்களிடம் இந்தப் பிரயோகத்திற்கான கருத்து என்ன என்பதை விளங்கப்படுத்தி விட்டு, இது பற்றிக் கருத்துரைக்கின்றார். நான் வழங்கும் விளக்கத்தின் மூலம் காபிராக மாறுபவர் யார் எனின், முஸ்லிம்களில் ஒருவர் குப்ருக்கு எடுத்துச் செல்லும் ஒரு கருத்தை முன்வைக்கிறார்; ஆனால் அதனை அவர் வேண்டுமென்றே செய்யவில்லை; உதாரணமாக முஷப்பிஹா என்னும் அல்லாஹ்வை படைப்புக்களுக்கு ஒப்பாக்கிய பிரிவினர் செய்தவற்றைக் குறிப்பிடலாம். தனது விளக்கத்தின் மூலம் பாவியாக மாறுபவர் யார் எனின், முஸ்லிம்களில் ஒருவர் பாவத்திற்கு இட்டுச் செல்லும் ஒன்றை செய்கிறார். ஆனால் அவர் அதனை வேண்டுமென்றே செய்யவில்லை. உதாரணமாக எல்லை மீறிய கவாரிஜ்களைக் குறிப்பிடலாம். இந்த விளக்கத்திற்குப் பின்னர், இமாம் அலி அல்வஸீர் அவர்கள், ஒருவரது கருத்தின் அடிப்படையில் அவரைக் காபிராக்கும் இந்த மோசமான தலைப்பு தான் முஸ்லிம் உம்மத்தை மிக மோசமான பிளவுகளிலும் பித்னாக்களிலும் வீழ்த்தி விட்டது; அறிவியல் மற்றும் சட்டத்துறைகளில் பல்வேறு முரண்பாடுகளை இது கொண்டு வந்தது என்கின்றார்.

*(13)* இதற்கு விலைக்கட்டுப்பாடு பற்றிய விவகாரத்தை உதாரணமாக முன்வைக்கலாம் .இதனை பொருளியல் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரமாக அணுகுவதைத் தவிர்த்து, இல்முல் கலாம் துறையினர் இதனை விளைவில்லாத ஒரு விவாதமாக மாற்றி விட்டுள்ளனர். இது பற்றிய விரிவான விடயங்கள் பின்னர் பேசப்படவுள்ளன.

அறிமுகமாகியதே இல்முல் கலாம். இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாத்து, அதன் அடிப்படைகளைப் பலப்படுத்தி உறுதி செய்யும் ஒரு கருவியாகவே அது அறிமுகமானது. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளை எதிர்த்துச் சவால்விடும் சிந்தனைகள் கிரேக்கத் தத்துவங்களின் வடிவிலும் சிலை வணக்கச் சிந்தனைகளின் வடிவிலும் தோற்றம் பெற்ற சமயத்தில் அவற்றை எதிர் கொள்வதற்கான முக்கிய சாதனமாக முன் நின்றது இல்முல் கலாம். ஆனால் மானுடர் தம் நெருக்கடியான மனோ நிலை இல்முல் கலாமை அதன் நோக்கத்தை விட்டும் திசை திருப்பி, அதனைத் தீர்வின் ஒரு பகுதியாகவன்றி நெருக்கடியின் ஒரு பகுதியாக மாற்றி விட்டது. இதே தவறைத் தான், ஒரு மாட்டை அறுக்குமாறு அல்லாஹ்வின் கட்டளை வந்த போது பனூ இஸ்ரவேலர்களும் செய்தார்கள். ஒரு கொலைக் குற்றத்தில் இருந்த மர்மங்களைக் களைதல் என்பதற்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட, ஒரு மாட்டை அறுத்தல் என்ற செயற்பாட்டை, தமது நெருக்கடி மனோ நிலையின் காரணமாக வேறும் பல பிரச்சினைகளாக அவர்கள் மாற்றி விட்டனர்.

இல்முல் கலாம் என்ற கலையும் முஸ்லிம் சமூகத்தின் நாகரிகத் தூதின் ஒரு பகுதியாக இருப்பதிலிருந்தும் தவிர்ந்து முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் மோதல்களை ஏற்படுத்தும் ஒரு சாதனமாக மாறி விட்டது. இஸ்லாமிய த.்.வாவின் நோக்கங்களுக்கு மாற்றமாக முஸ்லிம் அணிக்குள்ளேயே பிளவுகளைக் கூர்மைப்படுத்தும் ஒரு காரணியாக நிலைபெற்று விட்டது. சிந்தனைப் பிளவுகளையும் வெறியுணர்வுகளையும் தூபமிட்டு வளர்த்து, தமது அடிப்படைப் பணிகளில் நின்றும் முஸ்லிம்களை சேய்மைப்படுத்தி, மானுட வாழ்வில் இஸ்லாமிய அகீதாவின் பணியையும் இல்லாது செய்துவிட்டது. வெடித்துச் சிதறிப் போயுள்ள இந்த சிந்தனைச் சிக்கல்களுக்கான தீர்வு அல்-குர்ஆனை நோக்கி மீண்டு வருவதிலேயே இருக்கின்றது.

# பகுதி நான்கு

# புதியதொரு இல்முல் கலாம் உருவாக்கத்தை நோக்கி

## முதலாவது: எல்லை தாண்டியதொரு விழிப்புணர்வுக்கு அத்திவாரமிடும் ஒரு முறையியல் நுழைவாயில்

*1. அல்-குர்ஆனின் இறைமையும் அறிவிப்புகளின் அதிகாரமும்.*

மானிட சமூகம் முழுவதையும் நோக்கிப் பேசிய அல்லாஹ்வின் வார்த்தைகளே அல்-குர்ஆன். எழுத வாசிக்கத் தெரியாத ஒரு சமூகத்திலிருந்து ஆரம்பித்து, வேதம் வழங்கப்பட்ட சமூகங்களைக் கடந்து செல்வது அது. வேதம் வழங்கப் பெற்றோரின் நபிமார்களுக்கு இறக்கப்பட்டவற்றை உண்மைப்படுத்துகின்றது. அதாவது அவற்றில் பின்னைய காலங்களில் செய்யப்பட்ட மாற்றங்களிலிருந்து, அவை இறக்கப் பெற்ற சமயத்திலிருந்த உண்மை வடிவத்துக்கு அவற்றை மீட்டெடுக்கின்றது. பின்னர் அவற்றில் சொல்லப்பட்ட அடிப்படைகள், அல்லது அவற்றுள் எழுந்த முரண்பாடுகள், ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் மிகைத்து நிற்கின்றது அல்-குர்ஆன்.

இறைவேதத்தைப் பாதுகாத்தல் என்ற அமானிதத்தை அதற்குரிய நுணுக்கத்துடன் பாதுகாத்தலென்பது மானிட சக்திக்குட்பட்டதொரு கருமமல்ல. அந்தப் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றுக் கொண்டான். முன்னைய சமூகங்களுக்கு இறக்கப்பட்ட வேதங்களைப் பாதுகாக்க அவர்களது மதத் தலைவர்களே முற்பட்டனர். ஆனால், அந்தப் பணியைச் சரிவர நிறைவேற்ற அவர்களால் இயலவில்லை. அல்-குர்ஆன் கூறுகின்றது:

فَبِمَا نَقْضِهِم مِيثَاقَهُم لَعَنَّاهُمْ وَجَعَلْنَا قُلُوبَهُمْ قَاسِيَةً يُحَرِّفُونَ الْكَلِمَ عَن مَوَاضِعِهِ وَنَسُوا حَظًّا مِّمَّا ذُكِّرُوا بِهِ وَلَا تَزَالُ تَطَّلِعُ عَلَى خَائِنَةٍ مِّنْهُمْ إِلَّا قَلِيلًا مِّنْهُمْ فَاعْفُ عَنْهُمْ وَاصْفَحْ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُحْسِنِينَ - المائدة: ١٣

**"அப்பால் அவர்கள் தம் உடன்படிக்கையை முறித்து விட்டதால் நாம் அவர்களைச் சபித்தோம். அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்தோம். (இறை)வசனங்களை அதற்குரிய (சரியான) இடங்களிலிருந்து அவர்கள் மாற்றுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதனையின் (பெரும்) பகுதியை மறந்து விட்டார்கள். ஆகவே அவர்களில் சிலரைத் தவிர அவர்களில் பெரும்பாலோரின் மோசடியைப் பற்றி (நபியே!) நீர் தவறாமல் கண்டு கொண்டே இருப்பீர்; எனவே நீர் அவர்களை மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக. மெய்யாகவே நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான்." (அல் மாஇதா 5:13)**

வேதம் வழங்கப் பெற்றவர்களின் மதத் தலைவர்கள், தாமே ஏற்றுக் கொண்ட பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றவில்லை என்பது நிரூபணம். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அல்லாஹ்வின் வார்த்தைகள் ஏனையோர் வார்த்தைகளைப் போன்றவையல்ல. அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنَّا سَنُلْقِي عَلَيْكَ قَوْلًا ثَقِيلًا - المزمل: ٥

**"நிச்சயமாக, நாம் விரைவில் கனமான உறுதியான ஒரு வாக்கை உம்மீது இறக்கி வைப்போம்." (முஸ்ஸம்மில் 73:5)**

அல்லாஹ்வே ஒழுங்குபடுத்திய வார்த்தைகள் அவை. நட்சத்திரங்களின் தரிப்பிடங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தினானோ அவ்வாறே இதனையும் அவன் ஒழுங்குபடுத்தியுள்ளான். வானத்தில் நட்சத்திரம் ஒன்றின் தரிப்பிடம் மாற்றம் அடைந்தால், அதன் இருப்பிடத்திற்கு ஏற்ப, பிரபஞ்சத்தின் பார்வை மாறிவிடும். அது போலவே அல்-குர்ஆனின் வசனங்கள் மாறினால் அதன் ஒழுங்கும் பிரயோகங்களும் சிதைவடைந்துவிடும்.

எனவே தான் அல்லாஹு தஆலா அல்-குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுள்ளான்:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ - الحجر: ٩

**"நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்." (ஹிஜ்ர் 15:9)**

அவன் தனியாகவே இந்த வேதநூலை இறக்கி வைத்தான். இதனைத் தொகுப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் அதன் பிரயோகங்களை வடிவமைப்பதிலும் அவன் வேறு எவரதும் உதவியை நாடவில்லை. மறுமை வரையில் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவனே ஏற்றுள்ளான். அவனிடமிருந்து இறங்க ஆரம்பித்த இந்த வேதநூல், மறுமை நாளில் அவனே இதனைச் சுவர்க்கவாசிகளுக்கு ஓதிக் காண்பிப்பதுடன் நிறைவு பெறுகின்றது. அவனே அதனைத் தனித்து இறக்கி வைக்கும் பொறுப்பை ஏற்றது போல் தனித்து அதனைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவனே ஏற்றிருக்கின்றான். அதனைத் தனித்து ஒன்று சேர்க்கும் பொறுப்பை அவனே ஏற்றது போல், அதனைத் தனித்து விளங்கப்படுத்தும் பொறுப்பையும் அவனே ஏற்றிருக்கின்றான். அவனே தனது தூதுவருக்கு, தான் இறக்குபவற்றை அவசரப்படாமல் ஓதும்படியும் கட்டளையிட்டான்:

لا تُحَرِّك بِهِ لِسانَكَ لِتَعجَلَ بِهِ - القيامة: ١٦

**“(நபியே!) அவசரப்பட்டு அதற்காக (குர்ஆனை ஓதுவதற்காக) உம் நாவை அசைக்காதீர்.” (கியாமா 75:16)**

அது போலவே, அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கிராஅத் வடிவங்களும் கூட பாதுகாத்து விளங்கப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆயத்துகளின் ஒளியில் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியம். ஏனெனில் அதுவும் அதற்கு ஒரு பாதுகாப்பு ஆகும்.

ஒரு சொல்லுக்குப் பகரமாக மற்றொரு சொல்லைக் கொண்டு வருவதே கிராஅத்துகள் ஆகும். அறிவிப்புகள் வாயிலாகவே இவை வந்துள்ளன. ஆனால், எம்மிடம் இருக்கின்ற அல்-குர்ஆனிய வாசகங்கள், அல்லாஹ்வின் வார்த்தைகளுக்குப் பகரமாக பிறிதொன்றைக் கொண்டு வர முடியாது என்கின்றன. மீண்டும் மீண்டும் இறக்கப்பட்டதல்ல அல்-குர்ஆன். அதன் வசனங்கள் ஒவ்வொன்றும் மிகத் தெளிவானவை. அவற்றுள் எந்த ஒன்றையும் எவரும் அறியாதிருக்க வாய்ப்பில்லை; அறிஞர்கள் மாத்திரமல்ல, பொதுமக்களும் கூட. குறைகளேதுமற்ற அது பன்மொழி நூலல்ல. பல கிராஅத்துகளைக் கொண்டதுமல்ல. ஆகவே அல்-குர்ஆனை இதற்கு மாற்றமாக ஓதுவது கூடாது. இந்த வெளிப்படையான உண்மையை விட்டும் எந்தவொரு முஸ்லிமும் வழிபிறழ்ந்து விடுவார் என்பது சாத்தியமல்ல.

அல்-குர்ஆனைப் பாதுகாக்கும் விடயத்தில் அல்லாஹ்வின் அருள் விசாலமானது என்பதும் அவனது அறிவு நுணுக்கம் மிக்கது என்பதும் ஐயங்களுக்கிடமில்லாதன. அல்-குர்ஆன் அனைத்துத் தூதுத்துவங்களையும் சுமந்திருக்கின்றது. உலகில் நபிமார்களும் ரஸூல்மார்களும் வருவது நிறுத்தப்பட்ட பின்னர் அல்-குர்ஆன் தான் அவர்களது இடத்தை நிரப்புகின்றது.

என்றாலும் காலங்கள் நீண்டு செல்லும் போது உள்ளம் இறுகிவிடும் ஒரு விதியை அல்லாஹ் நியமம் செய்துள்ளான். ஒரு சமூகத்துக்கும் அதன் தூதருக்கும் இடையில் நீண்டதோர் இடைவெளி ஏற்பட்டு விட்டால் அவர்களது உள்ளங்கள் இறுகிவிடுகின்றன. விளைவாக, சீர்கேடுகளும் குழப்பங்களும் தலையெடுத்து, மக்கள் தத்தமக்கிடையிலேயே மோதிக் கொள்ளும் நிலைக்கு ஆளாய் விடுவா. இந்த உள்ளம் இறுகிய நிலையின் காரணமாக, மு.்.மின்களது சிந்தையில் அல்-குர்ஆனின் தாக்கம் வலுவிழந்து விடுகின்றது; அவர்களது உள்ளங்களும் சிந்தைகளும் தடம்புரண்டு போய், அல்-குர்ஆனும் அதன் பண்புகளும் வியப்பு மிக்கனவாகவே அவர்களுக்குத் தோற்றத் தொடங்குகின்றன.

மானுட பலவீனங்கள் காரணமாக, தான் உருவாக்கிய சிந்தனைக்கு மனிதன் தானே அடிமையாகும் நிலை ஏற்படுகின்றது. இதனால் தான், 'இடம்பாட்டுக்குரியது', 'சார்பு நிலை கொண்டது' போன்ற பண்புகளை அவன் அல்-குர்ஆனுக்கு வழங்கினான். தனது தனிப்பட்ட சிந்தனைகளை விஞ்சிச் செல்வதற்கு, அல்-குர்ஆனின் வரையறைகள் இல்லாத கூட்டு மொத்தப் பண்பின் உதவியை அவன் நாடவில்லை. இதனால் அறிவியல் தரங்களுக்கு ஒவ்வாதனவான சில கூற்றுகள் பரவலாகின. 'அல்-குர்ஆன் பல்வேறு விளக்கங்களுக்கு இடம்பாடானது', 'சட்ட வசனங்கள் முற்றுப் பெற்றன. சட்டம் அவசியப் படும் நிகழ்வுகள் முடிவுறாதன' என்பன சில உதாரணங்கள். இறுதியில் குர்ஆனை விளங்க புறக் காரணிகள் அவசியம் என்றனர்.

புறக் காரணிகளின் அவசியம் ஏன் என்றால், குர்ஆனிய வசனங்களில் பல தரத்தன காணப்படுகின்றன என்றனர். சிக்கல் மிக்கன, தெளிவற்றவை, செல்லுபடியற்றன, நேரடிப் பொருள் கொண்டன, சிலேடைப் பொருள் கொண்டன முதலான மேலும் பல வகைகள் உண்டென்றனர். இதனால் அவர்கள் ஆற்ற விளைந்தது என்ன? மனிதனால் உருவாக்கப்பட்ட மொழிகளின் இயல்புகளையும் அம்சங்களையும் அல்லாஹ்வின் வார்த்தைகளுக்குத் தீர்ப்புச் சொல்லும் தரத்தனவாக அமைத்துக் கொள்வதே. அல்-குர்ஆனின் வார்த்தைகள் பாதுகாக்கப்பட்டன என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அவற்றைப் பாதுகாப்பதும் ஒன்று திரட்டுவதும் விளக்குவதும் இறையோன் தனக்கென ஒதுக்கிக் கொண்ட பணிகள் என்பதையும் அவர்கள் பொருட்படுத்தாது விட்டார்கள்.

இதனால், அல்-குர்ஆனுக்கு முன்னால் மோசமான சில வாயில்கள் திறக்கப்பட்டு விட்டன. அல்-குர்ஆனில் மொழியியல் தவறுகள் அல்லது குறைபாடுகள் அல்லது மேலதிகங்கள் இருப்பதாகக் கூறினர். மேலும் சிலர், அல்-குர்ஆனின் சில வசனங்களும் அவற்றின் சட்டங்களும் நீக்கப்பட்டு விட்டன என்றனர். மற்றும் சிலர் வசனங்கள் நீக்கப்பட்டு

விட்டன, ஆனால் சட்டங்கள் இன்னும் இருக்கின்றன என்றனர். இந்த சட்ட விவகாரம் பகுத்தறிவு ரீதியாக எவ்வாறு ஏற்கப்படுகின்றது என்பது எமக்குப் புரியவில்லை. ஒன்றை ஆதாரமின்றி ஏற்றுக் கொள்தல் தடை செய்யப்பட்ட ஒரு சமூகமாகவே நாம் இருக்கின்றோம். மக்கள் கிராஅத்துகள் என்ற பெயரிலோ, அறிவிப்புகள் என்ற பெயரிலோ அல்லது வேறேதும் ஒரு பெயரிலோ, அல்லாஹ்வின் வார்த்தைகளுக்குப் பகரங்களைத் தேடி விட்டு,

لا مُبَدِّلَ لِكَلِمَاتِهِ - الأنعام: ١١٥

**“...அவனுடைய வார்த்தைகளை மாற்றுவோர் எவரும் இல்லை.” (அன்ஆம் 6:115)**

என்ற வாசகத்தை எவ்வாறு ஈமான் கொள்கிறார்கள் என்பது புரியவில்லை. அல்-குர்ஆனுக்குத் தாம் விரும்பியனவற்றையெல்லாம் கற்பிக்க நினைக்கும் அவர்களது இறுகிய உள நிலையைப் படம் பிடித்துக் காட்டும் மேலும் பல கூற்றுகளை நாம் கண்டு கொள்ளலாம். இவையனைத்தும் அவர்களது அறிவை அறிவிப்புகள் ஆக்கிரமித்துக் கொண்டமையால் நிகழ்ந்தன. நபிகளாரின் பின்னால் அல்-குர்ஆன் ஒரு ஞாபகமூட்டலாகவும் இந்த உலகத்தார் அனைவருக்கும் மறுமை நாள் வரையிலான ஓர் ஆதாரமாகவும் அமைய வேண்டும் என்பதற்காக அல்லாஹு தஆலா அல்-குர்ஆனைத் தானே பாதுகாத்துள்ளான்; அவனே அதன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளான்.

நாம் மேற்கண்ட அறிவியலுக்கொவ்வா கருத்துகள் சிலருக்கு ஷைத்தான் மூலம் தான் கிட்டியிருக்குமோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. அவற்றில் சிலவற்றை ஹுஸைன் இப்னு முஹம்மத் அத்திர்ரிஸீயின் பஸ்லுல் கிதாப் பீ தஹ்ரிபி கிதாபி ரப்பில் அர்பாப் எனும் நூலில் காணலாம். அது போலவே இது குறித்துப் பேசிய சட்டவியல் துறையாளர்களது நூல்களிலும் உலூமுல் குர்ஆன் எனும் அல்-குர்ஆனியக் கலைகள் பற்றிய நூல்களிலும் இவ்வாறான கருத்துகள் பலவற்றைக் காணலாம். இந்த வசனம், இந்த வசனத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனக் கூறுவார்கள். இந்த வசனம் இந்த குறிப்பிட்ட கோத்திரத்தார் குறித்து இறங்கியது என்பர். இவற்றால் அல்-குர்ஆன் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குரியவை என வரையறுப்பது போலிருக்கின்றது.

அல்-குர்ஆன் மீது சொல்லப்பட்ட அறிவியலுக்கொவ்வா கருத்துகள் பரம்பரை பரம்பரையாக நகர்த்தப்பட்டு வந்துள்ளன; இன்றும் ஷரீஆக் கலா நிலையங்கள் இவற்றைப் போதித்து வருகின்றன; ஆதாரபூர்வமான வழிகளில் நகர்த்தப்பட்ட அறிவிப்புகள் என இவை வலுவூட்டப் பெற்றுள்ளன. என்றாலும் ஓர் அறிவிப்பின் தரம் எவ்வளவு உயர்வானதாக இருந்தாலும்

அது மிகவும் வெளிப்படையான ஓர் உண்மையை அல்லது ஆதாரம் அவசியமற்ற அளவுக்குத் தெளிவான ஒரு விடயத்தை மறுப்பதற்குரிய தகுதியைப் பெற மாட்டாது என்பதை அவர்கள் அறியவில்லை. அல்-குர்ஆன் குறைகளற்றுப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற மிகவும் உறுதியான விடயத்துக்கு மாற்றமாக அறிவிப்புகள் சில வந்திருக்குமாயின் கண்டிப்பாக, இந்த வெளிப்படையான உண்மையின் அடிப்படையில் அந்த அறிவிப்புகள் மறுக்கப்பட்டிருக்க வேண்டும். என்றாலும் அவ்வாறு நடைபெறாது போனமை கவலைக்குரியதொரு விடயம்.

அறிவிப்புகள் என்பவை, தமக்கு முன்பு வாழ்ந்த பரம்பரையினரிடமிருந்து கருத்துகள் சம்பவங்கள் போன்றவற்றை நகர்த்துவதாகும். இது அடிப்படையில் ஒரு மானுட செயற்பாடு. சில சமயங்களில் இவை 'அன்அனா' வடிவில் நகர்த்தப்பட்டுள்ளன. 'அன்அனா' என்பது முன்னையவர் ஊடாக தனக்கு இந்தத் தகவல் நகர்த்தப்படுகின்றது என்பதை மாத்திரமே சொல்லும்; அவரிடமிருந்து தான் நான் பெற்றேன் என்பதை உறுதிப்படுத்திச் சொல்வதாக அது இருக்காது. இது தவிர, 'அக்பரனா' முன்னையவர் தனக்கு அறிவித்தார்; 'ஹத்தஸனா' முன்னையவர் தனக்குச் சொன்னார். 'ருவீனா' முன்னையவர் ஊடாக அறிவிக்கப்பட்டது போன்ற பல்வேறு பிரயோகங்கள், ஒருவரிடமிருந்து பிறிதொருவருக்கு தகவல்கள் நகர்த்தப்பட்டமையின் ஊர்ஜிதத் தன்மையைக் குறிக்கப் பயன்படுகின்றன. செய்தியின் உண்மைத் தன்மையை உறுதி செய்யவே இவ்வாறான வழிமுறைகள் கையாளப்படுகின்றன. ஆனால், அல்-குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்ற வகையில் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த இந்த அறிவிப்பு அல்லது நகர்த்தல் முறை பயன்படுத்தப்படுவதில்லை. ஆக, அல்-குர்ஆனின் உண்மைத் தன்மையைப் பறைசாற்றுவதற்கான சவால், அது எத்தனை பேர் ஊடாக நகர்த்தப்பட்டிருக்கின்றது என்பதில் இல்லை. அதற்கு மாற்றமாக அதனைப் போன்ற ஒன்றை அல்லது அதில் ஒரு ஸூராவையேனும் அதன் ஒழுங்குடனும் பிரயோகங்களுடனும் அதன் இலக்கண, இலக்கிய தரத்துடனும் கொண்டு வர முடியுமா என்பதில் தான் இருக்கின்றது. இந்த சவாலைத் தான் அல்லாஹு தஆலா முன்வைத்திருக்கின்றான்.

ஒரு செய்தியை எத்தனை பேர் நகர்த்தியிருக்கின்றார்கள் என்பதை வைத்து சவால்கள் முன்வைக்கப்படுவதில்லை. அல்-குர்ஆனின் ஆதாரபூர்வ திட்டவட்டத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டு நீண்ட காலத்தின் பின்னர் தோற்றம் பெற்றதே அறிவிப்புகள் அல்லது நகர்த்துதல் பற்றிய விவகாரம். அல்-குர்ஆனின் திட்டவட்டத் தன்மையும் கூட, அது பலரால் நகர்த்தப்பட்டிருக்கின்றது என்பதனால் உருவானதல்ல. அதன் இலக்கியத் தரம், ஒழுங்கு, பிரயோகங்கள் ஊடாகவே எழுந்தது அது. அல்-குர்ஆனின் திட்டவட்டத் தன்மையை உறுதிப்படுத்த எவரும், பலர்

இதனை நகர்த்தியிருக்கின்றார்கள் என்ற ஓர் ஆதாரத்தைக் கொண்டு வந்ததில்லை. ஆனால் அறிவிப்புகள் பற்றிய விவகாரம், அதிலும் முதவாதிரான வடிவில், அதாவது பெரும் தொகையானவர்களிடமிருந்து மேலும் பெரும் தொகையானவர்கள் ஒரு செய்தியைத் தொடராக நகர்த்துவதாக இருப்பின் அந்த செய்தியின் திட்டவட்டத்தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது என்பது, இஸ்லாமியக் கலைகள் தொகுக்கப்பட்டு நூலாக்கங்கள் நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்ததாகும். வேறு வகையில் கூறுவதானால் பிக்ஹ் கலையின் தோற்றத்தின் பின்னர் நிகழ்ந்ததாகும். அதிலும் குறிப்பாக, வேறு சமூகங்களின் சில அறிவியல் நூல்கள் மொழி பெயர்க்கப்பட்ட பின்னர், முஸ்லிம்களின் அறிவியல் உரையாடல்களில் 'திட்டவட்டமானவை', 'திட்டவட்டமற்றவை' முதலாய பிரயோகங்கள் புழக்கத்தில் வரத் தொடங்கின.

பிக்ஹுத் துறை மத்ஹபுகளின் தோற்றத்தின் பின்னர் சில சட்டவியலாளர்கள் ஷரீஆத் ஆதாரங்களுக்கு மத்தியில் முரண்பாடுகள் ஏற்படுவதாகக் கருதினர். அவ்வேளை, சட்டவியல் சம்பந்தப்பட்ட துறைகளில் 'ஆதாரங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றுதல்' எனும் அடிப்படையை மையப்படுத்தி பல கருத்துகள் வெளியாகின. அம்முரண்பாடுகளை நீக்கி வைக்கும் முகமாக, முதலில் 'நஸ்க்' எனும் முறையைக் கொண்டு வந்தனர். அதாவது, 'ஓர் ஆதாரத்தை செல்லுபடியற்றதாக ஆக்குதல்', 'காலத்தால் முந்திய ஓர் ஆதாரத்தைக் காலத்தால் பிந்திய ஓர் ஆதாரம் செல்லுபடியற்றதாக்கும்' என்பதே அது. அடுத்து 'தர்ஜீஹ்' எனும் முறையை அறிமுகம் செய்தனர். அதாவது ஓர் ஆதாரத்தை விடவும் வேறு ஓர் ஆதாரம் மேம்பட்டது எனக் கருதுவது. இதன் மூலம் திட்டவட்டமற்ற ஆதாரத்தை விடவும் திட்டவட்டமான ஆதாரம் முன் நிலைப்படுத்தப்பட்டது. ஓர் ஆதாரத்தின் வெளிப்படைத் தன்மை; பல ஆதாரங்கள் ஒன்றிணைதல்; மக்கள் மத்தியில் பரவலாக வழங்கி வருதல் முதலான பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த 'தர்ஜீஹ்' மேற்கொள்ளப்பட்டது.

இங்கு தான் அறிவிப்புகளின் பெறுமதியை உணர்த்த அவர்கள் முற்பட்டனர். ஆரம்பகால செய்திகள் மற்றும் தகவல்களை நகர்த்துவதற்குரிய ஓர் ஊடகமாக மாத்திரமன்றி, அல்-குர்ஆனின் திட்டவட்டத் தனமையையும் திட்டவட்டமற்ற தன்மையையும் தீர்மானிக்கும் ஒரு வழிமுறையாகவும் இது அமைந்தது. அல்-குர்ஆன் மொத்தமாக, அது நகர்த்தப்பட்ட வழியைப் பொறுத்தவரையில் திட்டவட்டமானது. ஏனெனில் அது முதவாதிரான வழியில் நகர்த்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அல்-குர்ஆனில் இருந்து புரிந்து கொள்ளப் படும் கருத்துகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலான வசனங்கள் திட்டவட்டமற்றவை என்றனர். இந்த பின்னணியிலேயே அல்-குர்ஆனுக்குப் பல கிராஅத்துகள் இருக்கின்றன என்ற ஒரு

கருத்தை அவர்கள் முன்வைத்தனர். அல்-குர்ஆனுக்கு முதவாதிரான, முதவாதிரல்லாத, ஏன் பலவீனமான கிராஅத்துகள் கூட இருக்கின்றன என்ற விளக்கம் தரப்பட்டது. உண்மையில் இந்த சிக்கலுக்குள் அவர்கள் நுழைந்திருக்கக் கூடாது. ஏனெனில் அல்லாஹு தஆலா அல்-குர்ஆனின் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வசனத்துக்கும் ஒவ்வொரு ஸூராவுக்கும் முழுக் குர்ஆனுக்குமே குறைகளற்றது என்ற பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கியிருக்கின்றான். அல்-குர்ஆனின் ஸூராக்கள், ஆயத்களின் ஒழுங்கையும் நட்சத்திரத் தரிப்பிடங்களையும் தொடர்புபடுத்திப் பேசுவான் வல்ல இறையோன்:

فَلا أُقسِمُ بِمَواقِعِ النُّجومِ - الواقعة: ٧٥

**“நட்சத்திர மண்டலங்களின் மீது நான் சத்தியம் செய்கிறேன்.” (அல்–வாகிஆ 56:75)**

பின்னர், முதவாதிரான அறிவிப்புகள் அனைத்தும் திட்டவட்டமானவை என வரையறைகள் ஏதுமின்றி ஏற்றுக் கொள்வதும் பொருந்தாது என்றனர். அவ்வாறு ஏற்றுக் கொள்வதாயின், யூத, கிறிஸ்தவ சமூகங்களது நம்பிக்கைகளையும் திட்டவட்டமானவை என ஏற்க வேண்டி வரும் என கருத்துத் தெரிவித்தனர்.

இந்த ஆதாரங்கள் முரண்படுதல் என்ற விவகாரமும் அதனைக் கையாள்வதற்கென முன்வைக்கப்பட்ட யுக்திகளும் அல்-குர்ஆனியக் கலைகள், அல்ஹதீஸ், பிக்ஹ் மற்றும் மொழி போன்ற துறைகளில் ஏராளமான எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. ஏலவே நாம் குறிப்பிட்ட இல்முல் கலாமும் இதில் இணைந்து கொண்டுள்ளது. அறிவிப்புகளைப் பயன்படுத்தி அல்-குர்ஆனை ஆளும் அவசியமோ இல்முல் கலாமின் அவசியமோ எமக்கு இல்லை. அல்-குர்ஆனை அறிவிப்புகளுடாக திட்டவட்டமானது என நிரூபிக்கும் அவசியமும் இல்லை. அல்-குர்ஆன் தொடர்புபடுத்தப்பட வேண்டுவது, அதைப் போல் பிறிதொன்றைக் கொண்டு வர முடியாது என்ற சவாலுடன் தான்.

அல்-குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் ஊடாகத் தனக்குத் தானே சான்று பகர்கின்றது:

إِنَّ عَلَينا جَمعَهُ وَقُرآنَهُ فَإِذا قَرَأناهُ فَاتَّبِع قُرآنَهُ ثُمَّ إِنَّ عَلَينا بَيانَهُ - القيامة: ١٧ - ١٩

**“நிச்சயமாக அதனை (குர்ஆனை) ஒன்று சேர்ப்பதும் (நீர்) அதை ஓதும்படிச் செய்வதும் நம் மீதே உள்ளன. எனவே (ஜிப்ரிலின் வாயிலாக), அதனை நாம் ஓதி விட்டோமாயின், அப்பால், அதன் ஓதுதலை பின் தொடர்ந்து**

**(ஓதிக்) கொள்ளுங்கள். பின்னர், அதனை விளக்குவது நிச்சயமாக நம்மீதே உள்ளது.” (கியாமா 75:17–19)**

இந்த வசனங்கள், ஒன்று திரட்டுதல், ஓதிக்காட்டுதல், விளக்குதல் என்ற மூன்று படிநிலைகளைக் குறிப்பிடுகின்றன. எனவே, அல்-குர்ஆனை ஓதுவது அல்லாஹ் ஒன்று திரட்டிய ஒழுங்கில் தான் நடைபெற வேண்டும். அப்பொழுது தான் அதனை விளங்கிக் கொள்வதும் அதனுள் பொதிந்திருக்கும் இரகசியங்களை வெளிக் கொண்டு வருவதும் சாத்தியமாக இருக்கும். இதன் அடிப்படையில் அல்-குர்ஆனின் ஆரம்பத்திற்கும் முடிவுக்கும் இடையில் அல்லாஹ்வால் ஒன்று திரட்டப் பட்டுத் தொகுக்கப்பட்டதைத் தவிர வேறு எதுவும் அல்-குர்ஆனாகக் கருதப்பட மாட்டாது. அந்த வகையில் அல்-குர்ஆன் தொகுக்கப்பட்டுள்ள முறைமை, ஸஹாபாக்களின் இஜ்திஹாத் அடிப்படையிலானது என வருகின்ற அனைத்து அறிவிப்புகளும் அறிவிப்புத் தரத்தில் அவை எத்துனை உயர்ந்தனவாக இருந்தாலும் மறுக்கப்பட வேண்டியனவாகும். ஏனெனில் அல்-குர்ஆனின் தொகுப்பு முறை அல்லாஹ்விடமிருந்து வந்தது; அதில் மானுட இஜ்திஹாதுக்கு இடமில்லை. இது போன்றதே கிராஅத்களும். அவை பிரதிபண்ணியவர்களது இஜ்திஹாதுக்கு விடப்படுவனவல்ல. இறக்கப்பட்ட மொழியில் நபியவர்கள் கூற, எழுதப்பட்டனவே அவை. இவையனைத்தும் தமது தூதுத்துவத்தை நபிகளார் பூரணமாக நிறைவேற்றி வைத்தமைக்குரிய சான்றுகளாகும். தமக்குப் பின்னால் வருகின்றவர்களுக்கு அதில் சிலவற்றை அன்னார் மீதம் வைத்துச் செல்லவில்லை.

எனவே ‘தொகுக்கப்பட்டுள்ள இந்த அல்-குர்ஆனுக்கு வெளியில் இன்னும் சில வசனங்கள் இருக்கின்றன; அவை நீக்கப்பட்டு விட்டன; ஆனால் அவற்றின் சட்டங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன’ (ஓதப்படாத ஒன்றின் கருத்து அல்லது சட்டம் எவ்வாறு விளங்கப்பட முடியும் என்பது வியப்புக்குரியதே) போன்ற அறிவிப்புகளும் ‘இந்த வசனம் இவர் குறித்து இறங்கியது; இது வேறு எவரையும் குறிக்க மாட்டாது’ என்ற குறிப்புகளும் ‘இந்த கிராஅத் பலவீனமானது’, ‘இது முதவாதிரானது’, ‘இது ஆஹாதானது’ முதலான மதிப்பீடுகளும் செய்திகளின் அறிவிப்புத் தரத்துக்கு அல்-குர்ஆனைக் கீழிறக்குவதாகும். அல்-குர்ஆன் இட்டுக் கட்டப் படும் ஒரு செய்தியல்ல. அதனைத தொகுப்பதிலும் ஓதுவதிலும் விளக்குவதிலும் பாதுகாப்பதிலும் உள்ள அல்லாஹ்வின் பொறுப்பேற்பை அறிவிப்புகளின் தரத்திற்குக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. எனவே அல்-குர்ஆனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் அதனைச் சுமந்த உம்மத், அல்லாஹ்வின் பாதுகாப்புடன் போதுமாக்கிக் கொள்வதே பொருத்தம். அல்லாஹ் எவ்வாறு பாதுகாக்கின்றான் என்பதை நாம் ஆய்வுபூர்வமாக அறிந்து கொண்டாலும் அறியாது விட்டாலும் இதுவே பொருத்தமானது. ஏனெனில் அல்-குர்ஆனுடன் சம்பந்தப்பட்ட அனைத்தும்

அதனை இறக்கியவனுடனேயே சம்பந்தப்படுகின்றன. அதில் ஒன்றைச் சேர்க்கவோ, நீக்கவோ யாருக்கும் அதிகாரமில்லை. நபியவர்களுக்குக் கூட அந்த அதிகாரம் வழங்கப்படவில்லை. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَو تَقَوَّلَ عَلَينا بَعضَ الأَقاويلِ لَأَخَذنا مِنهُ بِاليَمينِ - الحاقة: ٤٤ - ٤٥

**“அன்றியும், நம்மீது சொற்களில் சிலவற்றை இட்டுக் கட்டிக் கூறியிருப்பாரானால்.. அவருடைய வலக்கையை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டு” (அல்–ஹாக்கா 69:44–45)**

மற்றுமோர் இடத்தில்,

وَتَمَّت كَلِمَتُ رَبِّكَ صِدقًا وَعَدلًا لا مُبَدِّلَ لِكَلِماتِهِ وَهُوَ السَّميعُ العَليمُ - الأنعام: ١١٥

**“மேலும் உம்முடைய இறைவனின் வார்த்தை உண்மையாலும் நியாயத்தாலும் முழுமையாகி விட்டது. அவனுடைய வார்த்தைகளை மாற்றுவோர் எவரும் இல்லை. அவன் (எல்லாவற்றையும்) கேட்பவனாகவும் (யாவற்றையும்) அறிபவனாகவும் இருக்கின்றான்.” (அல்–அன்ஆம் 6:115)**

எனக் கூறுகின்றது. இவை தெளிவான உண்மைகள். இவற்றுடன் முரண்படுகின்ற அனைத்து அறிவிப்புகளைப் பொறுத்தவரை அவை எவ்வாறு, ஏன் சொல்லப்பட்டன என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது.

அல்-குர்ஆனைப் பாதுகாப்பதற்காக அல்லாஹ் வசப்படுத்திக் கொடுத்ததே அறிவிப்புகள் என்ற கூற்றை நாம் ஏற்க இயலாது. அல்-குர்ஆனைப் பாதுகாத்தல், ஒன்று திரட்டுதல், விளக்குதல் அனைத்தும் இறையோனின் செயற்பாடுகள். தனது குறைகளேதுமற்ற பண்பை அல்-குர்ஆன் பெற்றுக் கொள்வது இந்த இறை பாதுகாப்பிலிருந்து தான். அறிவிப்புகளோ, மானுட செயற்பாடுகளால் ஆவன. மனித செயற்பாடுகள் அனைத்துக்கும் உரிய அத்துணை பலவீனங்களும் குறைபாடுகளும் இதற்குள் இருக்கவே செய்கின்றன.

எனவே அல்-குர்ஆனைப் பாதுகாத்தல் என்ற பாரமான அமானிதத்தைச் சுமப்பதற்கு அறிவிப்புகள் தகுதி பெற மாட்டா. உயர்ந்த ஒன்றை விடவும் தாழ்ந்த ஒன்று எவ்வாறு சிறப்பிடம் பெற முடியும்? திடடவட்டமற்ற ஒன்று திட்டவட்டமான ஒன்றை எவ்வாறு பாதுகாக்க முடியும்? அது போல், ‘அல்-குர்ஆனின் சில வசனங்கள் குறித்த சில ஸஹாபாக்களிடம் அல்லது குறித்த அஹ்லுல் பைத்தினரிடம் தான் காணப்பட்டன, வேறு எவரிடமும் இருக்கவில்லை’ போன்ற சிறப்புகளைச் சிலருக்கு வழங்கும் அறிவிப்புகளை எடுத்துக் கொள்வோம். உண்மையில் இவை எதனைக் குறிக்கின்றன? குறித்த நபர் அந்த வசனத்தைப் பிறருக்கு நகர்த்துவதற்கு

முன்னர் மரணித்திருந்தால் அல்-குர்ஆனின் சில பகுதிகள் இல்லாமல் போயிருக்கும் என்பதே இங்கு உணர்த்தப்படுகின்றது. இது, 'அல்-குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்தது; அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை அவனே ஏற்றிருக்கின்றான்; அது எந்த மாற்றத்திற்கும் உட்படாதது' என்று நம்புகின்ற ஒரு மு.்.மின் சொல்ல முடியாத வார்த்தைகளாகும்.

இதனால் தான் அல்லாஹு தஆலா, அல்-குர்ஆனை ஓர் அற்புதமான சவாலாக அமைத்துள்ளான். 'மனித இனமும் ஜின் இனமும் ஒன்று சேர்ந்து, பரஸ்பரம் தங்களுக்கு மத்தியில் உதவி செய்து கொண்டாலும் இதனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வர முடியாது; அல்-குர்ஆனில் மனித வார்த்தைகள் ஒரு போதும் கலக்க மாட்டாது' என்பதை வல்ல அல்லாஹ் உறுதிப்படுத்தியுள்ளான். எந்தளவுக்கு எனின் இந்த அல்-குர்ஆனைச் சுமந்த நேர்மையாளரான நபியவர்களைக் கூட, அல்-குர்ஆனில் மேலதிகமாக ஒரு வார்த்தையையேனும் கூறுவார் எனின், அவரது வலக்கரத்தால் அவரைப் பிடித்து, அவரது நாடி நரம்புகளை வெட்டி விடுவதாகவும் அதனைத் தடுக்க எவராலும் முடியாது என்றும் அல்-குர்ஆனே எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆக, அல்-குர்ஆனியக் கலைகள் என்ற பெயரில் எழுதப்பட்டுள்ள நூல்களில் சொல்லப்பட்டுள்ளனவற்றையும் அவற்றில் அல்லாஹ்வின் வேத நூலையும் நபியவர்களது வார்த்தைகளையும் சமப்படுத்தி அல்லது அல்லாஹ்வின் வேத நூலையும் வரலாற்று நிகழ்வுகளையும் சமப்படுத்திக் கூறப்பட்டுள்ள வியப்பூட்டும் விடயங்களையும் அல்-குர்ஆனின் முன்னால் திறந்து விடப்பட்டுள்ள நெறிபிறழ்ந்த வாயில்களையும் நாம் கண்டிப்பாய் மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, அல்-குர்ஆனிய ஒளியில், மீளவும் கட்டமைக்க வேண்டும். இந்தக் கலைகளிலும் அறிவிப்புகளிலும் ஒரு நலன் இருக்கின்றது என்றால், அது, 'அல்-குர்ஆன் அல்லாஹ்வினாலேயே பாதுகாக்கப்படுகின்றது; அப்பொறுப்பு எந்த மனிதப் படைப்புக்கும் கொடுக்கப்படவில்லை' என்பதற்கு அவை பலமான ஆதாரமாக அமைந்துள்ளமை மட்டுமே. இந்தக் கலைகளும் அறிவிப்புகளும் எவ்வித கட்டுப்பாடும் இன்றி விடப்பட்டிருப்பின் நிச்சயமாக அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டிருக்கும். அல்லாஹ்வின் பாதுகாப்பு அதனைத் தடுத்து விட்டது.

*2. அல்-குர்ஆனின் பாதுகாப்பை அல்லாஹ் பொறுப்பேற்றிருக்கின்றான் என்பதுடன் முரண்படும் அறிவிப்புகளுக்கான சில உதாரணங்கள்*

'பிரதி செய்யும் எழுத்தாளர்களின் தவறுகளினால், அல்லது அறபு மொழியின் வட்டார வழக்குகளின் வேறுபாட்டால் அல்-குர்ஆனில் சில மொழிசார் தவறுகள் ஏற்பட்டுள்ளன' என்று சில அறிவிப்புகள் காணப்படுகின்றன. இந்தத் தவறுகளை இனிவரும் காலங்களில் அறபுகள்

தமது வழக்குகளின் மூலம் சீர் செய்துவிடுவார்கள் என உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு, ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா ஆகியோர் கூறியதாக இந்த அறிவிப்பு தொடர்கிறது.(1)

---

(1) அபூ உபைத் அவர்கள் தனது பழாஇல் என்ற நூலிலும் ஸஈத் இப்னு மன்ஸூர், இப்னு அபீ ஷைபா, இப்னு ஜரிர், இப்னு அபீ தாவூத், இப்னுல் முன்திர் போன்றோரும் உர்வாவின் ஊடாக அறிவித்துள்ளனர்: நான் ஆயிஷாவிடம் அல்-குர்ஆனின் மொழிசார் தவறுகள் பற்றிக் கேட்டேன். "மு.ஃ.மின்களிலும் யூதர்களிலும் ஸாபிஊன்களிலும்" (மாஇதா: 69), "தொழுகையை நிலை நாட்டுபவர்கள் ஸகாத்தைக் கொடுப்பவர்கள்" (நிஸா: 162), "நிச்சயமாக இவ்விருவரும் சூனியக்காரர்களே" (தாஹா: 63) போன்ற வசனங்களில் உள்ள மொழிசார் தவறுகள். எனது சகோதரியின் மகனே, இவை எழுத்தாளர்களின் வேலை, அவர்கள் எழுதும் பொழுது தவறு விட்டுள்ளனர் என்றார் ஆயிஷா.

இப்னு அபீ தாவூத் அவர்கள் ஸஈத் இப்னு ஜுபைர் ஊடாக அறிவிக்கிறார்கள்: அல்-குர்ஆனில் நான்கு மொழித் தவறுகள் இருக்கின்றன. அவை 'வஸ்ஸாபிஊன்' (மாஇதா: 69), 'வல்முகீமீன்' (நிஸா: 162), 'பஅஸ்ஸத்தக வஅகுன் மினஸ் ஸாலிஹீன்' (முனாபிகூன்: 10), 'இன் ஹாதானி லஸாஹிரான' (தாஹா: 63) என்பவை.

அப்துல்லாஹ் இப்னு ஆமிர் அல்குரஷி மற்றும் அப்துல் அ.ஃ.லா ஆகியோர் ஊடாக இப்னு அபீ தாவூத் அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்-குர்ஆன் பிரதிபண்ணப்பட்டு முடிந்ததுடன் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் எடுத்து வரப்பட்டது. அதனை அவர்கள் பார்த்து விட்டு, அழகாகச் செய்திருக்கிறீர்கள், சில மொழிசார் தவறுகளைக் காண்கின்றேன், அவற்றை அறபுகள் தமது வழக்குகளின் மூலம் சீர் செய்துவிடவார்கள் என்றார்கள். இப்னு அபீ தாவூத் அவர்கள் கூறுகிறார்கள்: இதன் பொருள் அறபு மொழியூடாக என்பதாக நான் கருதுகிறேன். ஏனெனில் அறபு மொழியில் அனுமதிக்கப்படாத ஒரு வழக்காக இருந்தால், உஸமான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்கள் ஓதுவதற்காக அதனை அனுப்ப அனுமதித்திருக்க மாட்டார்கள்.

இக்ரிமா ஊடாக இப்னு அபீ தாவூத் அறிவிக்கிறார்கள்: உஸ்மானிடம் அல்-குர்ஆன் பிரதிகள் கொண்டுவரப்பட்ட பொழுது, அவர் அதில் சில மொழிசார் தவறுகளைக் கண்டார். அப்பொழுது, சொல்பவர் ஹுதைல் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் எழுதுபவர் ஸகீப் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் இருந்திருந்தால் இந்தத் தவறுகள் நடந்திருக்க மாட்டாது என்றார்கள்.

இந்தக் கருத்தை மறுப்பதற்கு இமாம் இப்னு தைமிய்யா போன்ற பலர், அறபு மொழிசார்ந்த ஒரு தவறு காணப்பட்டிருப்பின் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் ஸஹாபாக்களும் இதனை ஒரு போதும் அனுமதித்திருக்க மாட்டார்கள் என்ற கருத்தையே பயன்படுத்தினர். ஆனால், நாம் அதனைப் பயன்படுத்தவில்லை. மாற்றமாக அல்-குர்ஆனை அல்லாஹ் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்ற

அது போலவே 'ஷாத்' எனும், மிகவும் நம்பத்தகுந்தவர்களது அறிவிப்புகளுக்கு முரண்பட்ட கிராஅத் வடிவங்களும் இருக்கின்றன' எனச் சில அறிவிப்புகள் உள்ளன. இமாம் ஸுயூத்தியின் அல்-இத்கான் எனும் நூலை மேற்கோள் காட்டி இமாம் பல்கீனி கூறுவார்: 'காழி ஜலாலுத்தீன் பல்கீனி கூறுகின்றார்: கிராஅத்துகள் முதவாதிர், ஆஹாத், ஷாத் என மூன்று வகைப்படுகின்றன. இவற்றுள் முதவாதிர்கள் ஏழு பிரபல்யமான கிராஅத்துகளைக் குறிக்கும்; ஆஹாதானவை மீதமுள்ள மூன்று கிராஅத்துகளையும் சில ஸஹாபாக்களின் கிராஅத்துகளையும் குறிக்கும்; ஷாத்தான கிராஅத்துகள், தாபிஈன்களான அ∴மஷ், யஹ்யா இப்னு வஸாப், இப்னு ஜுபைர் போன்றோரது கிராஅத்துகளைக் குறிக்கும்.'

மேலும், குர்ஆனில் வசன ஓட்டத்துக்குப் புறம்பான சில சொற்களும் அறபு மொழியின் சீர்மைக்குப் புறம்பான தவறுகளும் இருப்பதாகச் சில அறிவிப்புகள் உள்ளன. இவை போன்ற அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளும் விசித்திரமான ஆய்வுகளும் அல்-குர்ஆன் மீது சுமத்தியுள்ள குற்றச் சாட்டுகளிலிருந்து அதனைப் பாதுகாப்பது இன்றைய ஆய்வு நிலையங்களின் முக்கியமான கடமையாக அமைய வேண்டும். மார்க்கக் கல்வியைப் போதிக்கின்ற நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பன, அல்-குர்ஆனியக் கலைகளிலிருந்தும் அவை தம்முள் பொதிந்து கொண்டுள்ள தவறுகளிலிருந்தும் அல்-குர்ஆனைப் பாதுகாக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அவை திறந்து விட்டுள்ள வாயில்களினால் ஏற்பட்ட பாதிப்புகளின் தீங்குகளை இன்றும் நாம் அனுபவித்து வருகிறோம். அஸ்பாபுன் நுஸூல் என்ற தனது நூலில் இமாம் வாஹிதி குறிப்பிடுவதை இமாம் ஸர்கஷி பதிவு செய்துள்ளார்: 'அல்-குர்ஆனில் ஓதப்படாமல் செயற்படுத்தப்படுவதற்குரிய ஒரு சட்டம் இருக்குமாயின், அது எமக்குரிய நலன் என்னவென்பதை அல்லாஹ் அறிந்திருக்கின்றான் என்பதையே காட்டுகின்றது. எனவே இந்த வடிவில் சட்டங்கள் தோன்றுவது எமது நலனுக்காகவே என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.'

இமாம் வாஹிதி சிலவேளை கல்லெறிந்து கொலை செய்தல் தொடர்பான வசனத்தைக் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம். அந்த வசனம் ஆரம்பத்தில் குர்ஆனில் இருந்ததாகவும் பின்னர் அது நீக்கப்பட்டதாகவும் ஆனால் அதன் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும் சிலர்

---

அல்-குர்ஆனின் கருத்தையே இக்கூற்றை மறுக்க, நாம் பயன்படுத்தகின்றோம். அல்-குர்ஆன் கூறுகின்றது: "நிச்சயமாக அல்-குர்ஆனை ஒன்று சேர்ப்பதும் அதனை நீங்கள் ஓதும்படிச் செய்வதும் எங்கள் மீதே பொறுப்பானதாகும். எனவே அல்-குர்ஆனை நாம் ஓதிக் காட்டினால் அந்த ஓதலை நீங்கள் பின்பற்றுங்கள்." (**கியாமா: 17–18**)

குறிப்பிடுவர். உண்மையில் அது குர்ஆனின் வசனம் அல்ல. தௌராத்தின் ஒரு வசனமாகும். அந்த வசனம் இன்னமும் தௌராத்தின் சில பிரதிகளில் காணக்கிடக்கிறது. அது பற்றி வந்துள்ள 'அல்லாஹ் இறக்கியவற்றில் ஒன்று[2] என்ற வார்த்தையை 'அல்-குர்ஆனில் அல்லாஹ் இறக்கியவற்றுள் ஒன்று' எனச் சில அறிவிப்பாளர்கள் அர்த்தம் கொண்டனர். அது போல் வேறு சில அறிவிப்புகளில் வந்துள்ள 'அது ஓதப் பட்டுக் கொண்டிருந்தது' என்ற வார்த்தையைச் சிலர் 'அல்-குர்ஆனில் ஓதப் பட்டுக் கொண்டிருந்தது' என்றே புரிந்து கொண்டனர். உண்மையில் 'தௌராத்தில் ஓதப் பட்டுக் கொண்டிருந்தது' என்பதே அதன் கருத்தாகும்.

சில அறிவிப்புகளின்படி இந்த வசனம் ஸூரா அந்-நூரில் இருந்திருக்கின்றது. மற்றும் சில அறிவிப்புகளின்படி ஸூரா அல்-அஹ்ஸாபில் இருந்துள்ளது. அல்-குர்ஆனில் இந்த வசனம் இல்லாமல் போனமைக்கான காரணம் பற்றிப் பேசுகையில் நபியவர்கள் தான் அதனை அல்-குர்ஆனில் வைக்க வேண்டாம் எனத் தடுத்ததாகவும் சில அறிவிப்புகள் கூறுகின்றன.[3] மற்றும் சில உமர் ரழியல்லாஹு அன்ஹு

---

*(2)* இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு ஊடாக இமாம் புஹாரி அவர்கள் அறிவிக்கிறார்கள்: உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: 'நீண்ட காலம் செல்கின்ற பொழுது, சிலர் கல்லெறிதல் பற்றிய தண்டனை அல்-குர்ஆனில் இல்லையே என்று கூறிக் கொண்டு, அல்லாஹ் இறக்கிய ஒரு கடமையை விட்டு விடுவார்களோ என்று நான் அச்சப்படுகிறேன். அறிந்து கொள்ளுங்கள், கல்லெறிதல் திருமணம் செய்த பின்னர் விபச்சாரம் செய்பவருக்குரிய தண்டனையாகும். ஆதாரம் நிரூபிக்கப்பட்டால், அல்லது கர்ப்பம் வெளிப்பட்டால், அல்லது ஏற்றுக் கொண்டால் இது நிறைவேற்றப் படும்.' இவ்வாறு தான் நான் மனனமிட்டுள்ளேன் என ஸுப்யான் குறிப்பிடுகிறார்: 'அறிந்து கொள்ளுங்கள், நபியவர்கள் கல்லெறிந்து தண்டனை வழங்கியுள்ளார்கள். அவருக்குப் பின்னர் நாங்களும் வழங்கியுள்ளோம்.'

*(3)* கஸீர் இப்னுஸ் ஸல்த் ஊடாக இமாம் ஹாகிம் அறிவிக்கிறார்கள்: ஸைத் பின் ஸாபித் மற்றும் ஸஈத் இப்னுல் ஆஸ் ஆகியோர் அல்-குர்ஆனை எழுதுகையில் இந்த வசனம் வந்த பொழுது, ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், வயதான ஆணும் பெண்ணும் விபசாரத்தில் ஈடுபட்டால் அவர்களை முழுமையாக கல்லெறியுங்கள் என்று நபியவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் என்றார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: இந்த வசனம் இறங்கிய பொழுது, நான் நபியவர்களிடம் வந்து இதனை எழுதவா என்று கேட்டேன். அதனை அவர்கள் விரும்பவில்லை. தொடர்ந்தும் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: வயதான ஒருவர் திருமணம் செய்யாமல் விபச்சாரத்தில் ஈடுபட்டால் அவருக்கு கசையடி வழங்கப்பட வேண்டும்; திருமணமான இளைஞர் ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபட்டால், அவர் கல்லெறியப்படல் வேண்டும் என்பது உங்களுக்குப் புரிகிறதா?

அவர்களே தடுத்ததாக கூறுகின்றன.(4)

இமாமிய்யத் கோட்பாட்டைக் கொண்டுள்ள ஷியாக்களிடமும் இது போன்ற அறிவிப்புகள் உள்ளன. அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களது தலைமைத்துவம் பற்றியன அவற்றுள் சில. அது குறித்த வாசகங்களை சில ஸஹாபாக்கள் தலையிட்டு நீக்கி விட்டதாக அல்லது அழித்து விட்டதாகக் கூறுவர், ஷியாக்கள்.

மேலாக, அவர்களது இமாம்கள் தவிர வேறு எவரும் முழுமையான குர்ஆனை ஒன்று திரட்டியதில்லை என்றும் அவர்கள் நம்புகின்றனர். உதாரணமாக அபூ ஜ.்.பர் கூறுகிறார்: அல்-குர்ஆனை முழுமையாகத் தொகுத்ததாக யாரும் வாதிட முடியாது. வஸிய்யத் பெற்றவர்கள் மாத்திரம் தான் அதனைச் செய்ய முடியும்.

அபூ ஜ.்.பர் கூறக் கேட்டதாக ஜாபிர் அறிவிக்கிறார்: அல்லாஹ் இறக்கியதைப் போன்று அல்-குர்ஆனை முழுமையாகத் தொகுத்ததாக யாரும் கூறுவாரானால் அவர் பொய் சொல்கிறார். அல்லாஹ் இறக்கியதைப் போன்று அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களும்

---

இப்னு ஹஜர் பத்ஹுல் பாரியில் குறிப்பிடுகிறார்: இந்த வசனம் நீக்கப்பட்டமைக்கான காரணம், இந்த வசனத்தின் வெளிப்படையான கருத்துக்கு மாற்றமாக செயல் காணப்பட்டமையாகும் என்பதை இந்த ஹதீஸிலிருந்து புரியலாம்.

இந்த எல்லாக் குளறுபடிகளும் நபியவர்கள் எழுத விரும்பாத ஒரு வசனத்தை மையப்படுத்தி வந்திருக்கின்றன. நபியவர்கள் அதனை அல்-குர்ஆனில் மேலதிகமான ஒன்றைச் சேர்ப்பதாகக் கருதியிருக்கிறார் போன்று தெரிகிறது. சட்டம் அந்த வசனத்துடன் பொருந்தி வருவதும் இல்லை எனின், அந்த வசனம் எதற்காக இறக்கப்பட்டது?

(4) ய.்.லா இப்னு ஹகீம் மற்றும் ஸைத் இப்னு அஸ்லம் ஆகியோர் ஊடாக இப்னு ழரிர் தனது பழாஇலுல் குர்ஆன் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்: உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு தடவை மக்கள் மத்தியில் உரையாற்றும் பொழுது, கல்லெறியும் தண்டனை பற்றி நீங்கள் சந்தேகம் கொள்ள வேண்டாம்; அது உண்மையானது; அதனை நான் அல்-குர்ஆனில் எழுத நினைத்து உபை இப்னு க.்.பிடம் அது பற்றிக் கேட்டேன். அப்பொழுது அவர், அந்த வசனத்தை ஓதிக்காட்டும் படி நான் நபியவர்களிடம் கேட்ட போது நீங்களும் என்னுடன் இருந்தீர்கள் தானே. அப்பொழுது நீங்கள் எனது நெஞ்சைத் தள்ளி விட்டு, மக்கள் கழுதைகள் போல் உறவு கொள்கின்ற ஒரு நிலையில் கல்லெறிதல் பற்றிய வசனத்தைக் கேட்கிறாயா என்று என்னைத் தடுத்தீர்கள் என்றார்' என்று உமரவர்கள் கூறினார்கள். இமாம் இப்னு ஹஜர் அவர்கள் கூறுகிறார்கள்: இந்த அறிவிப்பின்படி, அந்த வசனம் நீக்கப்பட்டமைக்கான காரணம் அது பற்றிய கருத்து வேறுபாடு என்பது புலனாகிறது.

அவருக்குப் பின்வந்த இமாம்களும் மாத்திரமே அதனைத் தொகுத்து மனனமிட்டுள்ளனர்.

ஒரு மனிதர் அபூ ஜஃபரிடம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், வஸிய்யத் பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் அல்-குர்ஆனை முழுமையாகத் தொகுத்ததில்லை என்றார்.

ஸப்பார் என்பவர். தனது கிரந்தத்தில் முழுக் குர்ஆனையும் வைத்திருந்த இமாம்கள் எனும் தலைப்பில் குறிப்பிடும் ஒரு சம்பவம்: அபூ அப்தில்லாவிடம் ஒரு மனிதர் அல்-குர்ஆனை ஓதிக் காண்பித்துக் கொண்டிருந்தார். அதில் தற்போது மக்கள் ஓதுவதற்கு மாற்றமான சில வார்த்தைகள் இருப்பதை உணர்ந்தேன். அப்போது அபூ அப்தில்லா அவர்கள், 'போதும், போதும், ஓதுவதை நிறுத்துங்கள். இதற்குரியவர் வரும் வரையில் மக்கள் ஓதுவதையே ஓதுங்கள்' என்றார். பின்னர் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அல்-குர்ஆன் பிரதியை எடுத்து, 'அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த குர்ஆனை எழுதி முடித்த பின்னர், மக்களிடம் எடுத்துச் சென்று, 'இது தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கப்பட்ட அல்-குர்ஆனின் தொகுப்பு' என்றார். அதற்கு மக்கள் தம்மிடம் இருக்கும் குர்ஆன் பிரதியைக் காட்டி, 'இது தான் எம்மிடம் இருக்கும் அல்-குர்ஆன் பிரதி, உங்களுடையது எங்களுக்குத் தேவையில்லை' என்றனர். அப்பொழுது அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்: 'அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் மீது சத்தியமாக இன்றைய நாளின் பின்னர் நீங்கள் இதனைக் காண மாட்டீர்கள்' எனக் கூறினார்.(5)

அபூ பஸீர் ஊடாக குலைனீ (மறைவு ஹி. 329) அறிவிக்கிறார்: பின்னர்...

سَأَلَ سائِلٌ بِعَذابٍ واقِعٍ لِلكافِرينَ لَيسَ لَهُ دافِعٌ - المعارج: ١ - ٢

(5) இந்த அறிவிப்பு எந்த வகையிலும் ஸஹீஹானதாக இல்லை. ஏனெனில் இது அல்-குர்ஆனை அல்லாஹ் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றமைக்கு முரணாக இருக்கிறது. அல்-குர்ஆனை நாமே இறக்கினோம்; பின்னர் நாமே அதனை ஒன்று திரட்டினோம் போன்ற வசனங்களுக்கு இது முரண்படுகின்றது. இக்கருத்துக்களைப் பேசும் இவர்கள் அல்-குர்ஆனை எந்தளவு புறக்கணித்திருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து புரியலாம். இந்த அறிவியல் தரமற்ற கருத்துக்கள் ஊடாக இவர்கள் அல்-குர்ஆனுக்கு எதிராக ஒரு போர்ப் பிரகடனத்தைத் தான் செய்துள்ளார்கள்.

> **“(நிராகரிப்போருக்கு) சம்பவிக்கப் போகும் வேதனை பற்றி கேள்வி கேட்பவன் ஒருவன் (ஏளனமாகக்) கேட்கிறான். கா.ஃபிர்களுக்கு (அது ஏற்படும் போது) அதனைத் தடுப்பவர் எவருமில்லை.” (மஆரிஜ் 70:1,2)**

என்ற வாசகம் நபிகளாருக்கு வஹியாக இறங்கியது. அப்பொழுது நாம் இவ்வாறு ஓதுவதில்லையே என்று நான் கேட்டேன். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபிகளாருக்கு இவ்வாறு தான் இறக்கியுள்ளார். பாதிமாவின் அல்-குர்ஆன் பிரதியிலும் இவ்வாறு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்கள்.

இது போன்ற இன்னும் பல அறிவிப்புகள் இருக்கின்றன. விரிவஞ்சி அவற்றை இங்கு குறிப்பிடாதுவிடுகின்றோம். என்றாலும் நாம் இறுதியாகக் கண்ட அறிவிப்புக் குறித்து மீர்ஸா அபுல் ஹஸன் அஷ்ஷ.்.ரானீ (மறைவு ஹி. 1320) அவர்களது ஒரு கருத்தை இங்கு நாம் காண்பது பொருத்தமாயிருக்கும். இதனை அவர், ஷரஹ் உஸூலுல் காபி எனும் நூலின் பக்கக் குறிப்பில் பதிவு செய்துள்ளார். அது வருமாறு: ‘அல்-குர்ஆனின் சில வசனங்கள் இல்லாமல் போயுள்ளன என்ற வாதம் எந்த அடிப்படையும் அற்றது. இதனை மிகப் பெரும் அறிஞர்களும் ஹதீஸ் துறை வல்லுனர்களும் மறுத்துரைத்துள்ளனர். அபூ பஸீருடைய அறிவிப்பையும் மறுத்துள்ளனர். ஏனெனில் இதன் அறிவிப்பாளர் வரிசையில் ஸுலைமான் அத்-தைலமி என்பவர் இருக்கிறார். இவர் மிகப் பெரிய ஒரு பொய்யர் என்பதுடன் இவர் மூலம் அறிவித்த இவரது மகனும் ஒரு பொய்யராவார்.’

இமாமிய்யத் சிந்தனையில் இருக்கும் அறிஞர்கள் மற்றும் ஹதீஸ் துறையாளர்கள் மத்தியில் எந்த வீதத்தினர் ‘அல்-குர்ஆன் திரிபுக்குட்படுத்தப்படவில்லை’ என்ற நிலைப்பாட்டிலும் எந்த வீதத்தினர் ‘திரிபுக்கு உட்படுத்தப்பட்டது’ என்ற நிலைப்பாட்டிலும் இருக்கிறார்கள் என்று நாம் வரையறுத்துக் கூற முடியாது. ஆனால் இதில் முதல் நிலைப்பாட்டில் உள்ளவர்கள் சிறுபான்மையினர் அல்லர் என்பதை நாம் திருப்தியுடன் கூற முடியும்.

முதல் நிலைப்பாட்டில் இருக்கும் அறிஞர்கள், இமாமிய்யத் சிந்தனையாளருள் பிரதான ஸ்தானம் வகிப்போர்; அதன் கொள்கை வகுப்பாளர்கள். இமாமிய்யத் சிந்தனையைப் பல நூற்றாண்டுகளாகக் கட்டுப்படுத்தி வந்தன இவர்களது சிந்தனைப் பள்ளிகளே.

பல நூற்றாண்டுகளாக இமாமிய்யத் சிந்தனைத் தளத்தை ஆண்டு வந்தது இமாம் அத்-தூஸியுடைய பாரம்பர்யமே. பின்னர் வந்த பல பரம்பரைகள் இதனையே தக்லீத் செய்துவந்தன. அல்-ஹுல்லா எனும் சிந்தனைப் பள்ளி தோற்றம் பெறும் வரை இந்த நிலைமையே தொடர்ந்தது. ஹுல்லா சிந்தனைப் பள்ளியின் பிரதான அறிஞர் இமாம் அல்-ஹுல்லீ.

இமாமிய்யத் பாரம்பர்யத்தில் பகுத்தறிவு வாதத்தை மையப்படுத்திய ஒரு புதிய மரபு இவருடன் தோற்றம் பெற்றது.

அடுத்ததாக, பாரம்பர்ய செய்திகள், தகவல்கள் மீது தங்கி நிற்கும் மரபுவாத சிந்தனையொன்று, இரண்டு நூற்றாண்டுகளாக, ஹிஜ்ரி பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியது. இந்த மரபுக்கு அத்திவாரமிட்டவர் ஷெய்க் முஹம்மத் அமீன் இஸ்திராபாதி. அவரது அல்பவாஇத் அல்-மதனிய்யா எனும் நூல் இதில் பெரிதும் பங்காற்றியது; இமாமிய்யத் சிந்தனைக்குள் மரபு வாதிகளின் செல்வாக்கு மீண்டும் நிலைபெற்றது. அல்-குர்ஆன் திரிபுக்கு உட்படுத்தப்பட்டது என்ற கருத்துக்கு மீளவும் உயிரூட்டுவதில் இந்த சிந்தனைப் பள்ளி முக்கிய பங்காற்றியது. தனது அஸ்ஸாபி எனும் தப்ஸீரின் பதினாறாவது முன்னுரை மூலமாக மீளவும் இக்கருத்தை உறுதி செய்வதில் பெரும் பங்காற்றியவர் அல்பைழுல் காஷானீ. (மறைவு ஹி. 1091)

'அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது' என்பதற்குச் சாதகமான அறிவிப்புகள் அனைத்தையும் திரட்டி முன்வைக்கும் காஷானீ கூறுவார்: 'இந்த அனைத்து அறிவிப்புகளுக்கும் மேலாக அஹ்லுல் பைத்களூடாக எமக்குக் கிட்டியிருக்கும் இன்னும் அறிவிப்புகளில் இருந்தும் தற்போது எம்மத்தியில் இருக்கும் குர்ஆன், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கப்பட்ட குர்ஆனின் முழுமையான வடிவமல்ல; இதில் அல்லாஹ் இறக்கியவற்றுக்கு மாற்றமான விடயங்களும் இருக்கின்றன; இதில் பல விடயங்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன; இதில் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களது பெயர் போன்ற பல விடயங்கள் பல இடங்களில் நீக்கப்பட்டுள்ளன; தற்போது தொகுக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் திருப்தியானதல்ல என்ற விடயங்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது'. பின்னர், திரிபுபடுத்தப்பட்டமைக்கு ஆதரவாக அலீ இப்னு இப்றாஹீம் தனது தப்ஸீரில் முன்வைத்த சில விடயங்களைக் கொண்டு வருவார் காஷானீ. அவற்றிலொன்று, 'குன்தும் கைர அஇம்மா' (நீங்கள் சிறந்த இமாம்களாக இருக்கின்றீர்கள்) என்பது 'குன்தும் கைர உம்மா' (நீங்கள் சிறந்த சமூகமாக இருக்கின்றீர்கள்) என மாற்றப்பட்டதாக வைக்கப் படும் குற்றச்சாட்டு. இவ்வாறான கருத்துகளையே மேலும் சில மரபு வாதிகளான, நிஃமதுல்லாஹ் அல்-ஜஸாஇரி (மறைவு ஹி. 1112) ஹதீஸ் துறையாளரான ஷெய்க் யூஸுப் அல்பஹ்ரானி (மறைவு ஹி. 1186) அல் மாஸன்த்ரானீ (மறைவு ஹி. 1081) ஆகியோரும் முன்வைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் காஷானீ, அல்-குர்ஆனின் அடிப்படை மூலாதாரத் தன்மையை இல்லாது செய்ய நினைக்கவில்லை என்றே ஹைதர் ஸுப்புல்லாஹ் கூறுவார்: 'அல்-குர்ஆன் பற்றிய முக்கியமானதோர் அவதானம் அவரை நிறுத்திச் சற்று சிந்திக்க வைத்தது. அதாவது

அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டது என்று கூறுவதானால், இதன் பின்னர், அல்-குர்ஆனை மூலாதாரமாகக் கொள்ள முடியாத ஒரு நிலையே ஏற்படும். என்றாலும், நாம் அல்-குர்ஆனைப் பற்றிப் பிடிப்பதற்கு, இந்த அறிவிப்புகளைக் குர்ஆனில் உரசிப் பார்த்துப் புரிந்து கொள்வதற்குரிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.' இந்த அவதானம், ஆரம்பத்தில், மரபு வாதிகளிடம் அல்-குர்ஆனின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாமைக்கான பலமானதோர் ஆதாரமாகக் காணப்பட்டது. இதனை காஷானீ அவர்களே தனது நூல்களான அல்வாபீ, இல்முல் யகீன், அல்-மஹஜ்ஜதுல் பைழா ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

காஷானீ இங்கு அதனை 'அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது' என்ற அறிவிப்புகளை மறுதலிப்பதற்கான ஒரு பலமான ஆதாரமாகக் கொள்கின்றார். 'குறித்த அறிவிப்புகள் அல்-குர்ஆனைக் குறிக்கவில்லை, அல்-குர்ஆனுக்கான விளக்கவுரைகளையே குறிக்கின்றன; திரிபுபடுத்தல் என்பது மொழி ரீதியான திரிபுபடுத்தலன்றி கருத்து ரீதியான திரிபுபடுத்தலையே குறிக்கின்றது' என அவற்றிற்கு விளக்கமும் அளிக்கின்றார். ஆனால் அவர் அஸ்ஸாபி எனும் தனது தப்ஸீரில், அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டது என்ற சிந்தனையைத் தக்கவைக்க முற்பட்டுள்ள அதே சமயம் அல்-குர்ஆனின் கருத்துகளை அது பாதிக்காமலும் கவனமெடுத்துள்ளார். அந்த வகையில், 'அல்-குர்ஆனில் நிகழ்ந்துள்ள திரிபுகள் அதன் நோக்கத்தைப் பெரிய அளவில் பாதிக்கவில்லை. உதாரணமாக அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களதும் அஹ்லுல் பைத்தினரதும் பெயர்கள் நீக்கப்பட்டமை அல்-குர்ஆனின் பொதுமைப் பண்பில் தாக்கம் செலுத்தவில்லை; திரிபு நடைபெற்றாலும் அவை அல்-குர்ஆனின் வசனங்களைப் பாதிக்கவில்லை' எனக் கூறுவார் அவர். மேலும் 'அல்-குர்ஆனில் தவறிப் போனவற்றை இமாம்கள் பூரணப்படுத்தி விடுவார்கள். எனவே நாம் அல்-குர்ஆனை ஆதாரமாகக் கொள்வதுடன் தவறிப் போனவற்றிற்கு இமாம்களை ஆதாரமாகக் கொள்வோம்' என்கின்றார்.

அல்பைழுல் காஷானீயின் பங்களிப்பு அல்-குர்ஆனின் ஆதாரபூர்வத் தன்மையைச் சிதைத்தது என்று சொல்வதை விடவும் அவரது ஆய்வுகள் அந்த சிதைவுக்குத் துணை செய்தன என்றே கூறலாம். எனவே தான் அவருக்குப் பின்னர், அந்நபாதி அல்-பதூனீ கூறுவார்: 'விலாயத், இமாமிய்யத் போன்ற விடயங்களும் அஹ்லுல் பைத்களின் சிறப்புகளும் அவர்களுக்குக் கட்டுப்படுவதும் அதிகம் வலியுறுத்தப்பட்டமையின் பின்னாலுள்ள இரகசியத்துக்குக் காரணம் குர்ஆனில் திரிபுகள் நிகழ்ந்தமையே'.

இமாமிய்யத் சிந்தனையின் மரபுவாதப் பிரிவினரும் பகுத்தறிவு வாதப் பிரிவினரும் அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்பதை மறுதலித்துள்ளனர். என்றாலும் அவர்களது மறுதலிப்பின் அளவுகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன. குறித்த அறிவிப்புகளின் ஆதாரபூர்வத் தன்மையை மறுத்தல், அவற்றிற்கு மாற்று விளக்கங்கள் கற்பித்தல் என்ற இரண்டு வகைகளில் அவர்களது மறுப்புகள் இருந்துள்ளன. காஷிபுல் இதா என அறியப்பட்ட ஷெய்க் ஜௌபர் அல்ஜனாஹி (மறைவு ஹி. 1228) தனது கஷ்புல் கிதா எனும் நூலில் கூறுவார்: 'அல்-குர்ஆனில் ஒரு ஸூரா, ஓர் ஆயத், ஒரு வார்த்தை அல்லது ஓர் எழுத்து அது பிஸ்மிலாகவோ வேறு ஏதேனும் ஒன்றாகவோ இருந்தாலும் எந்தவொரு மேலதிக விடயத்தையும் நாம் காண முடியாது. அல்-குர்ஆனின் இரு அட்டைகளுக்கும் நடுவில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வின் வார்த்தைகள் தான் என்பது மத்ஹபிலும் மார்க்கத்திலும் உறுதியான ஒரு விடயம்; முஸ்லிம்களது இஜ்மாவான முடிவு; நபியவர்களது வார்த்தைகளிலும் இமாம்களிடத்திலும் உறுதியானது. அல்-குர்ஆனில் ஏதும் குறைபாடு இருக்கின்றதா எனில், அல்-குர்ஆனே கூறுவது போல் அது அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்டது என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. குறைபாடுகள் இருப்பதாக வந்துள்ள அறிவிப்புகளைப் பொறுத்தளவில், அந்த அறிவிப்புகளின் நேரடிக் கருத்தை நாம் ஏற்க முடியாது என்பதை மிகவும் வெளிப்படையான உண்மைகள் சொல்கின்றன. எனவே ஏதேனும் ஒரு வடிவில் அந்த அறிவிப்புகளுக்கு வேறு விளக்கங்கள் காண வேண்டியுள்ளது. ஒன்று, படைத்தவற்றில் குறைபாடுகள் உள்ளன; இறக்கியவற்றில் இல்லை. இரண்டு, முதல் வானத்தில் இறக்கப்பட்டனவற்றில் குறைபாடுகள் உள்ளன; இறுதி நபிகளாரிடம் இறங்கியவற்றில் இல்லை. மூன்று, மூலத்தில் குறைபாடுகள் இல்லை; கருத்துகளில் தான் உண்டு. நான்கு, குறைபாடுகள் பற்றிய அறிவிப்புகள், குர்ஆனைக் குறிப்பனவல்ல; ஹதீஸ் குத்ஸியையே குறிக்கின்றன. இவ்வாறு பல விளக்கங்களை நாம் கூறலாம். எனது கருத்தைப் பொறுத்தவரையில் இறக்கப்பட்டவற்றின் எழுத்து வடிவில் குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால் அதன் முழுமையான வடிவம் நபியவர்களிடம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அன்னாரின் காலம் முதல் இன்று வரை அதில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை; குறைபாடுகளும் ஏற்படவில்லை.'

அஸ்ஸெய்யித் கௌஇ, தனது அல்-பயான் எனும் தப்ஸீரில் இந்தத் தலைப்பைத் தனியாக விளக்குகின்றார். அல்-குர்ஆன் திரிபுக்கு உட்படவில்லை என்பதை உறுதி செய்வார் அவர்: 'அல்-குர்ஆனில் திரிபுகள் ஏதும் இடம்பெறவில்லை என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. இப்பொழுது எங்களது கைகளில் இருப்பது, நபியவர்களுக்கு அல்லாஹ் இறக்கி வைத்த முழுமையான குர்ஆனாகும். இக்கருத்தைப் பல அறிஞர்கள்

நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர். ஹதீஸ் துறையாளர்களின் தலைவர் என அழைக்கப் படும் அஸ்ஸதூக் முஹம்மத் இப்னு பாபவைஹி, அபூ ஜ.்.பர் அத்தூஸி, 'அல் உர்வதுல் வுஸ்கா' நூலின் ஆசிரியர் அஷ்ஷஹஷ்ஹானி முதலியோர் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும், பிரபல ஹதீஸ் துறையாளர் அல்மௌலா முஹம்மத் அல்காஸானீ, முஹம்மத் ஜவாவ் அல்-பலாகி ஆகியோரும் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.' பின்னர், 'அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது' எனக் கூறுவோரின் வாதத்துக்குப் பதில் தரும் போது கூறுவார்: 'தற்போது இருக்கின்ற அல்-குர்ஆன் பிரதிக்கு மாற்றமான ஒன்று அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் காணப்பட்டதாகவும் அதனை அவர் மக்களிடம் முன்வைத்த போது அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் கூறுவர். அல்-குர்ஆனில் ஸூராக்கள் தொகுக்கப்பட்டுள்ள ஒழுங்குக்கு மாற்றமான ஒரு பிரதி அமீருல் மு.்.மினீனிடம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அன்னாரிடமிருந்த அல்-குர்ஆனில் மேலதிகமான சில வசனங்கள் காணப்பட்டன என்பது உண்மை. அவை இப்போதுள்ள அல்-குர்ஆனில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்பது அதன் பொருளல்ல; அவை இறக்கப்பட்ட வாசகங்களுக்கான விளக்கவுரைகளாகவே காணப்பட்டன. இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களது பிரதியில் முனாபிக்குகளின் பெயர்கள் காணப்பட்டன என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.'

அஸ்ஸெய்யித் கௌஇ, தனது 'அல்இஜ்திஹாத் வத்தக்லீத்' எனும் நூலில் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்த பிரதி அல்-குர்ஆனின் ஸூராக்கள் இறக்கப்பட்ட ஒழுங்குக்கு ஏற்ப தொகுக்கப்பட்டிருந்தது என்பதை விளக்கி, நபிகளாரின் காலத்திலேயே அல்-குர்ஆன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது என்பதை உறுதி செய்கின்றார். இதற்கு ஆதாரமாக, இமாம் ஹாகிம் பதிவு செய்துள்ள, ஸைத் பின் ஸாபித்துடைய 'நாம் தோல்களில் எழுதப்பட்டிருந்த அல்-குர்ஆனை ஒன்று திரட்டினோம்' என்ற கூற்றையும் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்-குர்ஆனைத் தான் ஒன்று திரட்டி ஒவ்வோர் இரவிலும் ஓதி வந்ததாகக் குறிப்பிடுவதையும் முன்வைக்கின்றார்.

அஹ்லுல் பைத்களூடாக வந்துள்ள முதவாதிரான சில அறிவிப்புகள், அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது எனக் கூறுகின்றனவே என்ற வாதத்திற்கு அவர் பதில் தரும் போது, அத்தகு அறிவிப்புகள், பலவீனமான அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்டன எனக் கூறுவார். அவற்றுள் ஒரு தொகுதி அறிவிப்புகள் அஹ்மத் இப்னு முஹம்மத் அஸ்ஸய்யாரியின் நூலில் பதிவு செய்யப்பட்டவை. அவர் சிந்தனைப் பிறழ்வு கொண்டவர்; மறுபிறப்புச் சிந்தனையை ஆதரிப்பவர் என்பதில் அறிஞர்கள் உடன்பாடான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். மற்றும் ஒரு தொகுதி அறிவிப்புகளைப் பதிவு செய்துள்ள அலீ இப்னு அஹ்மத் அல் கூபி என்பவர் பொய்யர்

என்பதிலும் அறிஞர்கள் உடன்பாடு காண்பர். இவ்வாறான அறிவிப்புகள் அதிகமாக இருப்பதால், இவற்றுள் பல ம.்.ஸூமான இமாம்கள் ஊடாக வந்திருக்கக் கூடும். இத்தகு காரணங்களால் இவை குறித்து குறைந்த பட்ச திருப்தியே அடைய முடியும் என்கிறார் அஸ்ஸெய்யித் கௌஇ.

பின்னர், திரிபுக்கு உட்பட்டது அல்-குர்ஆன் என்று வந்துள்ள அறிவிப்புகளை பல தொகுதிகளாக வகுத்து விளக்குவார் அன்னார். முதல் தொகுதி, அஹ்லுல் பைத்களின் சிறப்பு மறுக்கப்பட்டமை பற்றிய அறிவிப்புகள். உண்மையில் அல்-குர்ஆன் அவர்களது சிறப்பை மறுதலித்ததில்லை.

இரண்டாம் தொகுதி, இறக்கப்பட்ட அல்-குர்ஆன் வசனங்களில் இமாம்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன என்பது பற்றிய அறிவிப்புகள். இத்தகு அறிவிப்புகள் அதிகமாக இருக்கின்றன. இதற்குப் பதிலளிக்கும் வகையில் அவர் கூறினார்: 'குர்ஆன் தொகுப்பில் சில வசனங்கள் அல்-குர்ஆனுக்கான விளக்கவுரைகளாக இருந்தவை, அவை குர்ஆனில் உள்ளடங்க மாட்டா. எனவே ஏலவே நாம் குறிப்பிட்டோம்... அல்லது இந்த அறிவிப்புகள் குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரண்படுகின்றன என அவை நிராகரிக்கப்பட வேண்டும்... இந்த அனைத்து அறிவிப்புகளும் 'அல்காபி' எனும் கிரந்தத்தில், அபூ புஸைர் ஊடாக வந்த ஸஹீஹான அறிவிப்புக்கு மாற்றமாக இருக்கின்றன. நான் அபூ அப்தில்லாஹ்விடம்,

يا أَيُّهَا الَّذِينَ آمَنوا أَطيعُوا اللَّهَ وَأَطيعُوا الرَّسولَ وَأُولِي الأَمرِ مِنكُم... - النساء: ٥٩

**"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும் உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்..." (நிஸா 4:59)**

என்ற வசனம் பற்றிக் கேட்டேன். அதற்கவர், இது அலீ, ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் குறித்து இறங்கியது என்றார். அல்-குர்ஆனில் அலீ மற்றும் அஹ்லுல் பைத்தினரின் பெயர்கள் ஏன் குறிப்பிடப்படவில்லை என மக்கள் கேட்கிறார்கள் என நான் அவரிடம் வினவினேன். அதற்கவர், நபியவர்களுக்கு அல்-குர்ஆன் இறங்கியது; ஆனால் அவரது பெயரும் சில தடவைகள் தான் சொல்லப்பட்டன. அத்துடன் இந்த விளக்கத்தையும் அவர்களுக்கு நபியவர்கள் தான் சொல்லித் தந்தார்கள் என்பதையும் மக்களிடம் கூறுங்கள். இந்த ஸஹீஹான அறிவிப்பு, குறித்த அனைத்து அறிவிப்புகளையும் கட்டுப்படுத்தக் கூடியது என்றார்.'

மூன்றாவது தொகுதி, அல்-குர்ஆனில் கூட்டுதல், குறைத்தல்கள் நிகழ்ந்தமை சம்பந்தமான அறிவிப்புகள். நபியவர்களின் பின்னர்,

முஸ்லிம் உம்மத், அல்-குர்ஆனில் சில வார்த்தைகளுக்குப் பதிலாக வேறு வார்த்தைகளைப் புகுத்தியதாக அவை கூறுகின்றன. இவற்றின் அறிவிப்பாளர் வரிசையில் காணப் படும் பலவீனங்களைத் தவிர்த்துப் பார்த்தாலும் இவை அல்-குர்ஆன், ஸுன்னா, இஜ்மா ஆகியவற்றுக்கு முரணாகவே இருக்கின்றன.

நான்காவது தொகுதி, அல்-குர்ஆனில் இருந்து பல விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன என வந்துள்ள அறிவிப்புகள் சம்பந்தப்பட்டவை. அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அல்-குர்ஆன் பிரதியில் இருந்ததாகச் சொல்லப்பட்ட மேலதிக விடயங்களுக்குக் கூறிய விளக்கத்தைத் தான் இங்கும் குறிப்பிட வேண்டும். அவற்றுள் சிலவற்றுக்கு அந்த விளக்கம் பொருந்தவில்லை என்றிருப்பின், அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரண்படுகின்றன என்ற வகையில் அவை மறுக்கப்படல் வேண்டும். மேலும் அவற்றுள் அதிகமானவற்றின் அறிவிப்பாளர் வரிசைகள் பலவீனமானவையாக இருக்க, சில அறிவிப்புகளின் உண்மைத் தன்மையை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இந்த அறிவிப்புகள் தொடர்பில், இவை கட்டாயமாக வேறு விளக்கம் சொல்லப்பட வேண்டும் அல்லது தூக்கியெறியப்பட வேண்டும் எனச் சில அறிஞர்கள் கூறுவர். அவர்களில் அறிஞர் அல்கல்பாஸி, அல்-பக்தாதி, அல்கிர்கி ஆகியோர் குறிப்பிடத்தக்கோர்.

அஸ்ஸெய்யித் கௌஇ கூறுவார்: அல்கிர்கி, அல்-குர்ஆனுடன் முரண்படும் அறிவிப்புகள் மறுதலிக்கப்படல் வேண்டும் என சில முதவாதிரான அறிவிப்புகள் கூறுவதாகச் சுட்டிக்காட்டுவார்.

ஷெய்க் ஸதூக் கூறுவார்: அழிவுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்வதை விடவும் சந்தேகமான இடத்துடன் நின்று கொள்வது சிறந்தது. அல்-குர்ஆனுக்கு உடன்பாடானதை எடுத்து நடவுங்கள்; முரண்பாடானதை விட்டுவிடுங்கள்.

ஷெய்க் ஸஈத் இப்னு ஹிபதுல்லாஹ் அல்-குத்ப் அல்ராவன்தி அறிவிக்கின்றார்: ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு ஹதீஸ்கள் உங்களுக்குக் கிடைத்தால் அவற்றை அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அதனுடன் உடன்பட்டு வருவதைச் செயற்படுத்துங்கள்; முரண்படுவதை நிராகரித்து விடுங்கள்.

ஸெய்யித் அத்தபாதபாஇ (மறைவு ஹி. 1412) தனது ‘அல்மீஸான்’ எனும் தப்ஸீரில் அல்லாஹு தஆலா அல்-குர்ஆனைப் பாதுகாப்பான் என்றும் தனது நபிக்கு வாக்களித்தது போல் அதனை எந்த மாற்றமும் இன்றி இறை பாதுகாப்பில் வைத்திருக்கிறான் என்றும் ஆதாரத்துடன் நிறுவுகின்றார். அவர் கூறுகிறார்: ‘அல்லாஹு தஆலா,

அல்-குர்ஆனை தனது நபிக்கு இறக்கி வைத்து, அதனைச் சில விஷேட பண்புகளினால் வர்ணித்திருக்கின்றான். இந்தப் பண்புகளுக்கு மாற்றமான கூட்டுதல், குறைத்தல்கள், மாற்றங்கள் இருந்திருந்தால், வேறு பண்புகளையே அதற்கு வழங்கியிருப்பான்.'

அல்-குர்ஆனில் திரிபுகள் நிகழவில்லை என்பதை உறுதி செய்த அறிஞர்களுள் ஸெய்யித் முஹம்மத் பாகிருஸ் ஸத்ர், முஹம்மத் மஹ்தி ஷம்ஸுத்தீன், ஸெய்யித் முஹம்மத் ஹுஸைன் பழ்லுல்லாஹ் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அல்-குர்ஆன் எந்தத் திரிபுக்கும் உட்படாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது என உறுதி செய்துள்ளதோடு, மாற்றமான அறிவிப்புகள், அவற்றின் உள்ளடக்கம், அறிவிப்பாளர் வரிசைகள் என்பன விமர்சனங்களுக்கு முன்னால் நின்று பிடிக்க முடியாதன என அவர்கள் கூறுவர்.

அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது எனும் சிந்தனைச் சார்பினர் நடைமுறையில் தமது நிலைப்பாட்டை நிறுவவில்லை. அதாவது முஸ்லிம் உலகெங்கும் பரந்து வாழ்வோர் மத்தியில் பிரயோகத்தில் உள்ள அல்-குர்ஆனைத் தவிர வேறு ஒன்றை அவர்களால் காட்ட முடியவில்லை.

ஷீயாக்களுள் அனைவருமே அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது அல்லது குறைபாடுடையது எனக் கூறுவதில்லை. 'அல்-குர்ஆன் திரிபுக்கு உட்படவில்லை' என்ற கருத்தை முன்வைப்பவர்கள் இமாமிய்யத் சிந்தனையின் ஆரம்ப மற்றும் முன்னோடி அறிஞர்களாவர். அவர்கள் இடையில் தோன்றிய ஒரு பரம்பரையினர் அல்லர்; பிற மத்ஹபினரை மறுக்கும் நோக்கில் தக்கியாக் கோட்பாட்டின் பிரசவத்தில் தோற்றியவர்களும் அல்லர்.

புழக்கத்தில் இருக்கின்ற அல்-குர்ஆனைத் தவிர ஷீயாக்களிடம் வேறு எந்தக் குர்ஆன் பிரதியும் இல்லை. அல்-குர்ஆனில் குறைபாடுகள் இருக்கின்றன எனப் பிரசிங்கப்பவர்கள் கூட, இறக்கப்பட்ட முழுமையான வடிவம் அவர்களது இமாம்களிடம் இருப்பதாகவே நம்புகின்றனர். இருக்கும் குர்ஆனைப் பின்பற்றுவதே தமக்குள்ள கடமை; வசனங்களின் குறைபாடு அல்-குர்ஆனின் ஓட்டத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை என்பதே அவர்களது நம்பிக்கை. வழக்கில் இருக்கும் அல்-குர்ஆன் அல்லாத ஏடுகளைப் பொறுத்தவரையில் அவை இமாம்களுக்குப் பிரத்தியேகமாக அனுப்பப்பட்டவை; அவர்களிடம் மாத்திரமே அவை இருக்கின்றன; எதிர்பார்க்கப் படும் பன்னிரண்டாவது இமாமான மஹ்தி தோன்றுவதுடன் தான் அவை மக்கள் பார்வைக்கு வெளிப் படும் எனக் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினையின் மையவினா என்னவெனின், அல்-குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டமை ஸஹாபாக்களது இஜ்திஹாதின் அடிப்படையில்

நிகழ்ந்ததா? அல்லாஹ்வின் ஏற்பாட்டில் நடந்ததா? என்பதாகும். இதற்கான விடையை அல்-குர்ஆனில் தான் தேடியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? குழப்பங்களும் துருவமையப்படுத்தல்களும் நிகழ்ந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட பலவீனமான அறிவிப்புகளுக்கு நாம் செவி சாய்த்து விட்டோம். சிலர் ஸஹாபாக்கள் தான் அல்-குர்ஆனைப் பாதுகாத்தனர் என்று அவர்களது தரத்தை மேம்படுத்திக் காட்ட முயற்சி செய்தனர். இதற்கு மாற்றமாக இன்னும் சிலர் ஸஹாபாக்களின் தரத்தைக் குறைத்து, அஹ்லுல் பைத்களின் தரத்தை உயர்த்த முற்பட்டனர். ஆனால் அல்லாஹு தஆலா தனது வேத நூலின் பாதுகாப்பை எந்த மனிதர் கையிலும் விட்டு வைக்கவில்லை. அல்-குர்ஆன் கூறுகிறது:

إِنَّ عَلَيۡنا جَمۡعَهُ وَقُرۡآنَهُ فَإِذا قَرَأناهُ فَاتَّبِع قُرۡآنَهُ ثُمَّ إِنَّ عَلَيۡنا بَيانَهُ - القيامة: ١٧ - ١٩

**“நிச்சயமாக அதனை (குர்ஆனை) ஒன்று சேர்ப்பதும் (நீர்) அதை ஓதும்படிச் செய்வதும் நம் மீதே உள்ளன. எனவே (ஜிப்ரிலின் வாயிலாக), அதனை நாம் ஓதி விட்டோமாயின், அப்பால், அதன் ஓதுதலை பின் தொடர்ந்து (ஓதிக்) கொள்ளுங்கள். பின்னர், அதனை விளக்குவது நிச்சயமாக நம்மீதே உள்ளது.” (கியாமா 75:17–19)**

அல்லாஹ்வின் வேத நூல் முழுமையானது; சம்பூர்ணமானது; அதன் வார்த்தைகள், எழுத்துகள் வரை பாதுகாக்கப் பெற்றுள்ளன என்ற உறுதியான நம்பிக்கை அவசியம். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَتَمَّت كَلِمَتُ رَبِّكَ صِدقًا وَعَدلًا لا مُبَدِّلَ لِكَلِماتِهِ وَهُوَ السَّميعُ العَليمُ - الأنعام: ١١٥

**“மேலும் உம்முடைய இறைவனின் வார்த்தை உண்மையாலும் நியாயத்தாலும் முழுமையாகி விட்டது –அவனுடைய வார்த்தைகளை மாற்றுவோர் எவரும் இல்லை– அவன் (எல்லாவற்றையும்) கேட்பவனாகவும் (யாவற்றையும்) அறிபவனாகவும் இருக்கின்றான்.” (அன்ஆம் 6:115)**

‘அல்-குர்ஆனின் வசனங்கள் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு சொல்லோ, ஓர் எழுத்தோ மாற்றப்பட்டாலும் அதன் முழுக் கட்டமைப்பும் சரிந்துவிடும்; சவால்விடக் கூடிய அதன் ஒழுங்கும் பிரயோகங்களும் இல்லாது போய்விடும். அல்-குர்ஆனின் ஸூரா பாத்திஹா முதல் ஸூரா அந்நாஸ் வரையில் இந்த உண்மையை நாம் காணலாம். இதில் எந்த சந்தேகமும் இல்லை. யார் இந்த உண்மையை ஏற்றுக் கொள்கின்றாரோ அவர் சரியான, ஆதாரபூர்வமான வழியில் இருக்கின்றார் என்று பொருள். யார் இந்த உண்மையை ஏற்காது அல்-குர்ஆனில் குறைகளும் தவறுகளும் இருக்கின்றன எனக் கருதுகிறாரோ அவர் தமது ஈமானை இழந்து வழிகேட்டில் விழுந்து விட்டவராவார்.’

இந்த உண்மை மக்களிடத்தில் உறுதியான ஒன்றாக அல்லாஹ் நாடிய காலம் வரையில் இருந்தது.

காலம் கடந்து செல்ல, மக்களில் சிலர், அறிவிப்புகள் சம்பந்தமாக சிக்கல் மிக்க விடயங்களில் ஈடுபடத் தொடங்கினர். மிக மோசமான, தரங்குறைந்த அறிவிப்புகள் நகர்த்தப்படுவதையும் சரி கண்டனர். 'இறை நிராகரிப்பை நகர்த்துகின்றவன் இறை நிராகரிப்பாளன் அல்லன்' என்ற தவறான கூற்றின் மீது நின்று இதனைச் செய்தனர். ஆனாலும், சாட்சி சொல்லலுக்கும் அறிவிப்புச் செய்வதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்பதை அவர்கள் பொருட்படுத்தாது விட்டனர். ஒரு மனிதன் பேசிய இறை நிராகரிப்பு வார்த்தையைத் தான் செவிமடுத்தது போலவே முன்வைப்பது ஒன்று; அதனை அறிவிப்புச் செய்வதென்பது வேறொன்று. ஆனால் அவர்கள் இந்தத் தவறான கூற்றின் மீது நின்று, ஷைத்தான் அவர்களது நாவுகளின் ஊடாக நடக்க வேண்டும் என நினைத்த அனைத்து இறை நிராகரிப்பு விடயங்களையும் நகர்த்தினார்கள்.

ஒவ்வொருவரும் தாம் யாரிடம் இருந்து ஒரு செய்தியை நகர்த்துகின்றாரோ அவரது உண்மைத் தன்மை பற்றிய பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் இந்த விதியிலிருந்தும் விலகி யார் ஒரு செய்தியை அதற்குரிய அறிவிப்பாளர் வரிசையுடன் முன்வைக்கின்றாரோ, அவர் மீது அதற்கு மேல் வேறு எந்தப் பொறுப்பும் இல்லை என மக்கள் கொண்டனர். இதனால் அறிவிப்புகள் 'அன்அனா' என்னும் உறுதிப்படுத்தப்படாத வழிகளில் நகர்த்தப்படுவதும் ஏற்புடைத்து என்ற நிலைக்குக் கொண்டு வரப்பெற்றன. விளைவாக இறை நிராகரிப்புச் செய்திகளும் மக்கள் மத்தியில் பரவுவது இலகுவானது.

இறை நிராகரிப்பாளர்கள் முன்வைக்கும் செய்திகளைக் குறிப்பிட்டு அல்-குர்ஆன் அவற்றிற்கான மறுப்புகளை முன்வைத்திருக்கின்றது என்பதைத் தமக்குச் சாதகமாகவும் ஆதாரமாகவும் சிலர் பயன்படுத்திக் கொள்கின்றனர். இறை நிராகரிப்பாளர்களின் செய்திகளை அறிவிப்புச் செய்யும் நோக்கிலோ, அவற்றை மக்கள் மத்தியில் புழக்கத்திற்கு விட வேண்டும் என்ற எண்ணத்திலோ குர்ஆன் அவ்வாறு செய்யவில்லை. அவர்களது விவகாரங்களை, இகழ்ச்சிக்குரியனவாகக் காட்டுதலே குர்ஆன் செய்தது. அதன் மொழிப்பிரயோகமும் அதற்கொத்ததாகவே அமைந்தது. இறை நிராகரிப்பாளர் தம் அறிவும் எண்ணங்களும் கண்டனத்துக்குரியன எனக் காட்டுவதே அதன் நோக்கமாகும்.

அல்லாஹ்வுக்கு பிள்ளைகள் இருக்கின்றனர் என்றும் அல்லாஹ்வின் கைகள் கட்டப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறிய வேளை அவர்களது கைகள் தான் கட்டப்பட்டுள்ளன; அவர்கள் சொல்லும் விடயங்கள் காரணமாக அவர்கள் மீது சாபம் உண்டாகட்டும் என்று குர்ஆன்

பதில் அளிக்கின்றது. பிர்அவ்ன், ஹாமான், காரூன் முதலான இறை நிராகரிப்பாளர்கள் கூறியனவற்றை முன்வைக்கும் போது, அவர்கள் அறிவீனர்கள், போலியான விடயங்களையே கூறுகின்றார்கள் எனக் காட்டும் வகையிலேயே பிரஸ்தாபிக்கின்றது குர்ஆன்.

எவ்வாறாயினும் அறிவிப்புகள் மூலமாகப் போலியான செய்திகள் பரவுவதையும் இட்டுக் கட்டுக்கள் உருவாக்கப்படுவதையும் தடுக்க இயலவில்லை. அவை தப்ஸீர், ஹதீஸ் முதலான அனைத்து இஸ்லாமிய கலைகளுக்குள்ளும் பரவி நிலைபெற்று விட்டன. இன்று முஸ்லிம்கள் இஸ்லாத்தின் இலக்குகளை விட்டும் வெகுதூரம் பின்தங்கி விட்டுள்ளமைக்குக் காரணம் தான் என்ன? வினாவெழுப்பப்படின், அறிவிப்புகளின் மூலம் உருவான பாதக எண்ணங்களும் சிந்தனைகளும் முரண்பாடுகளும் பிளவுகளும் கொண்ட நீண்ட பாரம்பரியம் தான் எனக் கூறுவதே பொருத்தமாயிருக்கும். இத்தகு அறிவிப்புகள் மக்களை அல்லாஹ்வின் வேதத்தை விட்டும் சேய்மைப்படுத்தின; ஷைத்தானின் பாதகமிகு அலங்காரங்களது கவர்ச்சியின் பாலாக்கி விட்டன.

இது அல்லாஹ்வின் வேத நூல் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனின் இதனைப் போன்ற ஒரு ஸூராவையேனும் கொண்டு வருமாறு அல்-குர்ஆன் மனிதன், ஜின் உட்பட அனைத்துப் படைப்பினங்களுக்கும் சவால்விடுகின்றது. அந்த சவாலுக்குப் பதில் சொல்ல முடியாத தமது பலவீனத்தையும் இயலாமையையும் அவர்கள் அனைவரும் வெளிப்படுத்தும் வரை இந்த சவால் தொடர்ந்திருக்கும். நிலைமை இவ்வாறு இருந்தும் எமது இல்முல் கலாம், சட்டவியல், வரலாறு முதலான பாரம்பர்யங்களுக்குள், அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது; அதில் சில வசனங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன; சில வசனங்கள் மாற்றப்பட்டுள்ளன போன்ற அறிவுக்கொவ்வா கருத்துகள் புகுந்து கொண்டுள்ளன. இவை தொடர்ந்தும் அறிஞர்கள் ஊடாக, கல்விப் போதனைகள் என்ற வடிவில், தப்ஸீர், ஹதீஸ், உஸூலுல் பிக்ஹ், இல்முல் கலாம், உஸூலுத் தீன் போன்ற கலைகள் அனைத்தினுள்ளும் நகர்த்தப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாகக் கடத்தப்பட்டு வந்த இவை, இப்போது எம்மை வந்தடைந்துள்ளன.

இவ்வாறான கருத்துகளைப் பயன்படுத்தி நாம் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டிருக்கின்றோம். இத்தகு அறிவிப்புகளை வைத்து, இன்று அனைத்து முஸ்லிம்களும் ஓதிக் கொண்டிருக்கும் அல்-குர்ஆனை ஷீயாக்கள் மறுக்கின்றார்கள் என அஹ்லுஸ் ஸுன்னாக்கள் குற்றஞ் சுமத்துகின்றார்கள். இது நபியவர்கள் திரட்டிய வேத நூல்; இதிலிருந்து தான் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது காலத்தில் அல்-குர்ஆன் பிரதி எடுக்கப்பட்டது; அந்த நாள் முதலே முழு முஸ்லிம்

உம்மத்தும் இதனைப் பயன்படுத்தி வருகிறது; ஸூரா பாத்திஹா முதல் ஸூரா அந்நாஸ் வரை அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டுள்ளது; அதன் வசனங்கள் சீராக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன; அதன் முன்னிருந்தும் பின்னிருந்தும் எந்தவிதமான வழிகேடுகளும் தோற்றம் பெற மாட்டா என்பதே அஹ்லுஸ் ஸுன்னாக்களின் விசுவாசம்.

புதைகுழிகளைத் தோண்டுவதில் தேர்ச்சி பெற்றவர்கள், இந்தப் பாரம்பர்ய மரபுப் புதைகுழிகளைத் தோண்டி, மரணித்துப் போன அறிவிப்புகளின் மீதான மண்ணைத் தட்டிச் சுத்தப்படுத்தி மீண்டும் அவற்றைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றையே ஆயுதங்களாகக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சந்தடியில் மக்கள் முக்கியமான ஒரு விடயத்தை அறியாது போயுள்ளனர் அல்லது மறந்து விட்டனர். இந்த உம்மத்தின் ஒற்றுமையை மீளக் கட்டியெழுப்புவதற்குரிய இறுதிச் சாதனமாக எமக்கு எஞ்சியிருப்பது அல்-குர்ஆன் மட்டுமே என்பது தான் அது. அல்-குர்ஆனையும் ஐயங்களுக்குரிய ஒன்றாக இவர்கள் மாற்றி விடுவார்களாயின் மீண்டும் உம்மத் எழுந்து கொள்வதற்கு எந்த வழியும் இருக்காது.

அல்லாஹ்வின் மாபெரியதோர் அருள் என்னவென்றால், முன்னம் தௌராத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை யூத மதத் தலைவர்களிடம் ஒப்படைத்தது போன்று அல்-குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை எந்த ஒரு சிந்தனைப் பிரிவாரிடமும் ஒப்படைக்காது விட்டமையாகும். அல்-குர்ஆனின் பாதுகாப்பை அல்லாஹ்வே எடுத்துக் கொண்டான். அவனது பாதுகாப்பில் அது உள்ளமையால் தான் அத்துமீறியோரின் திரிபுகளில் இருந்தும் வழிகேடர்களின் சதிகளிலிருந்தும் அறிவீனர்களின் மடமையிலிருந்தும் அல்-குர்ஆனின் கட்டமைப்பில் எவ்வாறேனும் சிதைவை ஏற்படுத்த முனைவோரிடமிருந்தும் அல்-குர்ஆனைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. அல்லாஹ்வின் அருளும் பாதுகாப்பும் காரணமாகத் தான் இன்றுவரை அல்-குர்ஆன் தூய்மை கெடாது மனித இனத்திற்கான நல் ஆதாரமாய் ஒளி பாய்ச்சிக் கொண்டிருக்கின்றது; அதன் சவால் இன்னமும் வலுவானதாக விளங்குகின்றது.

இருந்தபோதிலும் அறிவிப்புகள் ஊடாகப் பரவிய புற்றுநோய், அல்-குர்ஆன் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளையும் பீடிப்பதைத் தடுக்க முடியவில்லை. நோய் தொற்றிய அறிவிப்புகளை மக்கள் பரவலாக நகர்த்தத் தொடங்கினர். ஷரீஆக் கலைகளில் உயர் அந்தஸ்த்துகளை ஈட்டிக் கொண்டவர்களும் இவை பற்றிப் பேசவும் விவாதிக்கவும் முற்படலாயினர். சிலர் இந்த அறிவிப்புகள் தரும் செய்திகள் உண்மை எனக்கருதி ஏற்று வழிகேட்டில் வீழ்ந்தனர்.

இந்த உம்மத்தின் ஒருமைப்பாட்டை மீளக் கட்டியெழுப்புவது அவசியம் என அழைப்புகள் விடுக்கப் படும் போதெல்லாம் ஒரு தடை உருவாகிறது. சிலர் கூறுவர்: 'அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது; அதில் கூட்டுதல்கள் குறைத்தல்கள் நிகழ்ந்துள்ளன எனக் கூறும் ஒரு பிரிவினருடன் நாம் எவ்வாறு கைகோர்க்க முடியும்? அவர்கள் தமது கருத்துகளைப் பகிரங்கமாக வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் உண்மை என்னவென்றால் ஒவ்வொரு சிந்தனைப் பிரிவினரதும் பாரம்பர்யத்தில் இந்த புற்றுநோய் தடம்பதித்துள்ளது என்பதாகும். அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதில் காணப்பட்ட கவனயீனம் இதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. 'அக்பரனா', 'ஹத்தஸனா', 'அன்பஅனா' போன்ற தகவல் நகர்த்துவதில் நம்பகமான சொல் வடிவங்களுடாக வந்த அறிவிப்புகளை, விமர்சனக் கண்ணோட்டத்திலோ, அல்-குர்ஆனுடன் பொருத்தியோ, பகுத்தறிவைப் பிரயோகித்தோ காணாமல், வெறுமனே ஏற்றுக் கொள்ள விழைந்தமையின் பிரதிபலனே இது என நாம் காண முடிகின்றது. விமர்சனக் கண் கொண்டு இந்த அறிவிப்புகளை அணுகியிருந்தால் அவற்றின் குறைகள் தெளிவாகியிருக்கும்; அவற்றைப் பரப்புவது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இந்த அறிவிப்புகளில் பெரும்பாலானவற்றை அறிவிப்புச் செய்தவர்கள், யார் என அறியப்படாதவர்கள்; செய்திகளை இருட்டடிப்புச் செய்கின்றவர்கள்; பொய்யர்கள் அல்லது இட்டுக் கட்டுபவர்கள். அவர்கள் செய்திகளைச் சோடித்துப் பரப்புவதில் வல்லவர்கள். தாம் கூறுவனவற்றின் உண்மைத் தன்மை குறித்துக் கேள்விகள் ஏதும் எழுப்பாத தமது சொந்தப் பிரிவினரின் மத்தியில் இவற்றைச் சந்தைப்படுத்தி இலகுவாக வெற்றிகள் காண அவர்களால் இயன்றது. எந்தவித பரிசீலனைக்கும் உட்படுத்தப்படாத இந்த அறிவிப்புகளே அவர்களது சிந்தைகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தன.

அறிவிப்புகளை ஏற்பதற்கும் மறுப்பதற்கும் பரிசீலிப்பதற்கும் சில விதிமுறைகள் நிர்ணயமாகியுள்ளன. குறித்த அறிவிப்பு தமது நலன் சார்ந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்குச் சாதகமாக உள்ளது எனக் கண்டால் எந்த ஒரு விதிமுறையையும் அதன் மீது பிரயோகிக்க மாட்டார்கள். இந்தப் புற்றுநோய் பரவியுள்ள பாரம்பர்யங்களை நாம் மீள்பரிசீலனை செய்தல் அவசியம். அவற்றின் சரி - பிழைகளைக் குர்ஆனுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்க வேண்டும். அல்-குர்ஆனுடன் முரண்படுகின்றவற்றை நீக்கி விட வேண்டும். மொத்தத்தில் இத்தகு அறிவிப்புகளை எமது கல்விப் பாரம்பர்யத்திலிருந்தே நீக்கிவிடுவது நல்லது.

ஷீயாக்களது சில மூல நூல்களில் அல்-குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டிருந்தாலும் அஹ்லுஸ்

ஸுன்னாக்கள், அல்-குர்ஆனில் சில வசனங்களும் சட்டங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனக் கூறினாலும் இரு தரப்பாரும் வித்தியாசமின்றி இன்று புழக்கத்தில் உள்ள குர்ஆனையே பயன்படுத்தகின்றனர். மறுபுறம் நாம் மேற்கண்ட அறிவுக்கொவ்வாத அறிவிப்புகளும் இன்னமும் பேசப் பட்டே வருகின்றன. ஷீயாக்களிடம் இன்று முஸ்லிம் உலகம் முழுவதும் மக்கள் பயன்படுத்தும் குர்ஆனைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. வழங்கிவரும் குர்ஆனில் யாரும் முரண்படுவதும் இல்லை.

எமது அறிவிப்புப் பாரம்பர்யத்திலிருந்து கிட்டியன பல அல்-குர்ஆனிய உம்மத்துக்குப் பாரமாக அமைந்து விட்டன; அவர்களை அல்-குர்ஆனை விட்டும் சேய்மைப்படுத்தி விட்டன. ஆதலால் எமது முன்னோர்கள் விட்ட தவறுகளிலிருந்து நாம் மீள வேண்டியிருக்கின்றது. எந்த மத்ஹப் பின்புலத்தைக் கொண்டிருந்தாலும் அனைத்து அறிவிப்புகளுக்கும் அல்-குர்ஆன் தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவற்றின் சரி - பிழைகளையும் அல்-குர்ஆனே தீர்மானிக்க வேண்டும். இதைத் தவிர்த்து, மத்ஹப் சார்ந்த வாதப் பிரதிவாதங்களிலேயே தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருந்தோமானால், மத்ஹப் சார் வெறியுணர்வையே மேலும் வளர்ப்போம்; அல்-குர்ஆனை விட்டும் மென்மேலும் விலகிச் செல்வோம்.

## இரண்டாவது: குர்ஆனிய இல்முல் கலாம் பார்வை ஒன்றைக் கட்டியெழுப்புதல்

இல்முல் கலாம் எனும் கலை அதன் பாரம்பர்ய வடிவத்தில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால், தற்போது காலம் கடந்து விட்ட ஒரு கலையாக அது மாறி விட்டது. இன்னமும் கூட கல்வி நிலையங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் அதன் பாரம்பர்ய வடிவத்தில் தான் இதன் போதனை நடந்து வருகின்றது. எந்த வகையிலும் தொடர்ந்தும் கற்கவோ, கற்பிக்கப்படவோ தகுதியானதொரு கற்கையாக அது இல்லை. ஆதலால் சம்பந்தப்பட்ட கல்வி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் இல்முல் கலாம் தொடர்பான நூல்களையும் ஆய்வுகளையும் திரட்டி நூலகங்களின் மேல் இராக்கைகளில் அடுக்கி வைப்பதே உசிதம் எனத் தோன்றுகின்றது.

துறை சார்ந்த ஆய்வாளர்கள் மாத்திரம் தேவைகளின் போது அவற்றிலிருந்து பயன் பெறலாம். குறிப்பாக இல்முல் கலாம் துறையின் வரலாறும் வளர்ச்சியும் குறித்து ஆய்வு செய்வோர் இதிலிருந்தும் பயன் பெறலாம். இக்கலையின் சில அங்கங்கள், வழிமுறைகள் என்பன தற்போதுள்ள கலைகளுடன் சம்பந்தப் படுமிடத்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும். உதாரணமாக ‘இமாமத்’ எனும் தலைமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறிப்பிடலாம். இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களையும்

அரசியல் கற்கை நெறிகளுடன் சம்பந்தப்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

மொழியுடன் சம்பந்தப்பட்ட இலக்கிய, இலக்கண விடயங்கள் மொழித்துறையுள் ஆய்வு செய்யப்படலாம். உதாரணமாக மொழி என்பது அல்லாஹ்வால் அருளப்பட்டதா அல்லது மானிட உருவாக்கமா என்ற விவகாரம். மேலும் இல்முல் கலாமை விடவும் மொழி மற்றும் இலக்கியத் துறையுடன் சம்பந்தப்பட்ட நேரிடைப் பிரயோக, சிலேடை, பிரயோக வாசகங்கள். இது போலவே பிக்ஹுடன் இணைந்த பல விவகாரங்களும் இல்முல் கலாமில் இணைந்துள்ளன. அவை பிக்ஹுத் துறையுடன் சார்ந்து ஆய்வு செய்யப்படலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் புதியதொரு இல்முல் கலாம் சிந்தனையை நோக்கி நகர முடியும்; நாம் வாழும் காலத்திற்குப் பொருத்தமான நவீன இல்முல் கலாம் பார்வை ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும். கிழக்கும் மேற்கும் தொடர்புபட ஆரம்பித்தது முதல் நவீன நாகரிகம் தோற்றுவித்துள்ள அனைத்து சிக்கல்கள், கேள்விகளை எதிர் கொள்ளவும் விவாதிக்கவும் தகுதிவாய்ந்த ஒரு கலையாக அதனை வளர்த்தெடுக்க வேண்டும்.

மேற்கின் கீழைத்தேயவாதம் (ORIENTALISM) எழுப்பியுள்ள எத்தனையோ வினாக்கள் இன்னமும் தீர்க்கமான பதில்களை வேண்டி நிற்கின்றன. அல்-குர்ஆன், ஸுன்னா, இஸ்லாமிய வரலாறு, கிளை விவகாரங்கள் என அனைத்துத் துறைகளிலும் கீழைத்தேயவாதம் எண்ணிறந்த கேள்விகளை எழுப்பியுள்ளது. மேலும் மானுடவியல் (ANTHROPOLOGY) துறையை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். முஸ்லிம் உலகம், முஸ்லிம் சமூகங்கள் தொடர்பில் உருவாக்கப்பட்ட பிரமைகள், ‘அவர்கள் காட்டு மிராண்டிகள், நாகரிக வாழ்வுக்கு அவர்களைக் கொண்டு வருவது சிரமம்’ என எம் மீது கொண்டு வரப்பட்ட இழித்துரைகள் முதலியனவற்றின் பின்புலங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

புதியதொரு இல்முல் கலாம் சிந்தனையைக் கட்டியெழுப்புவதன் மூலம், இஸ்லாத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட, இன்றும் முன்வைக்கப்பட்ட வருகின்ற அனைத்து குற்றச் சாட்டுகளுக்குமான பதில்களைக் கண்டு கொள்ளவும் ஐயங்களைக் களையவும் துறைசார்ந்தவர்களுக்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். இஸ்லாமோபோபியா எனும் இஸ்லாம் காழ்ப்புணர்வு இன்று அகிலத்துவ ரீதியாக வியாபித்துள்ளது. முஸ்லிம்களே உலக பயங்கரவாதத்தின் ஊற்றாகவும் உலக அமைதிக்கும் சமாதான வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு எங்கும் பரவலாகியுள்ளது. இது குறித்த கற்கைகள் அவசியம். சம கால நிலைமைகளுக்குக் காலாயமைந்த வரலாற்று வேர்களைக் கண்டு

கொள்ளும் கடப்பாடு எம்முன் உள்ளது. மேற்குலகக் கீழைத்தேயவாதத்தின் வாரிசாக யூத - இஸ்ரேலிய கீழைத்தேயவாதம் தலையெடுத்துள்ள சூழலில் புதிய ஆய்வு முறைகளை அடையாளம் காண வேண்டியிருக்கின்றது.

மானுட சுதந்திரத்தின் பாதுகாப்பு எந்தளவு இஸ்லாத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது, அதன் மீது இடப் படும் தடைகளை அது எவ்வாறு அகற்றுகின்றது, நவீனத்துவம், முன்னேற்றம், தாராண்மை வாதம் முதலியன மானுட அபிவிருத்தியில் ஆற்றும் பங்கென்ன? ஏனையோர் முன்னேற்றம் கண்டிருக்க முஸ்லிம்கள் ஏன் பின் தங்கியிருக்கின்றார்கள்? முதலான விடயங்கள் அனைத்தையும் ஆய்ந்து தெளிவான வழிகாட்டலை வழங்கும் பொறுப்பு நாம் அவாவும் புதிய இல்முல் கலாம் மீதே இருக்கின்றது.

அவ்வாறன்றி, இல்முல் கலாம் ஆய்வுகள் இன்னமும் அதே பழைய சர்ச்சைகளைப் பேசிக் கொண்டிருப்பதால் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் என்ன தான் பயன் கிட்டப் போகின்றது? மு.்.தஸிலாக்கள், அஷ்அரிக்கள், முர்ஜிஆக்கள், மாத்ருதிகள் மத்தியில் நிகழ்ந்து வந்த வாதப் பிரதிவாதங்கள், ஷியா ஸுன்னி கருத்து மோதல்கள் முதலான இன்னும் பல விவகாரங்கள் காலத்தால் அழிந்துபட்டுள்ளன. அவை அனைத்தும் பொருட்படுத்தப்படாத ஒரு காலச் சூழலிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். மேலும் நாம் மேலே கூறிய சில சிந்தனைகளைப் பின்பற்றுவோர் யாரும் இந்த உலகில் இல்லை.

இன்று நாம் எதிர் கொண்டிருப்பனவோ புதுப்புது சிந்தனைகள். மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் எண்ணற்ற நவீன சிந்தனைகளும் சவால்களும் நிரம்பி வழியும் ஓர் உலகத்தையே இன்றைய முஸ்லிம் சமூகம் எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது. முஸ்லிம் உம்மா தனது இருப்பை உறுதி செய்து கொள்ள, தனது நம்பிக்கைகளுக்கும் விசுவாசத்துக்கும் முற்றும் முரண்பட்ட கோட்பாடுகளையும் சிந்தனைகளையுமே தீர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் பரிதாபகரமான ஒரு நிலையே எம் முன் நிலவுகின்றது. மானுட வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டுதல்களை வழங்கி வரும் இஸ்லாத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், அதன் மேன்மை பற்றிய உணர்வுகள் சற்றேனும் இல்லாமல், முஸ்லிம் உம்மத்தினர் காலத்துக்குக் காலம் பிரபல்யம் பெற்று வரும் வெற்றுக் கோஷங்களுக்குப் பின்னால் இழுபட்டுச் செல்கின்றார்கள். தமது சொந்த முதுசங்களின் உன்னத தகைமையைக் கிஞ்சிற்றேனும் கருத்தில் கொள்ளாதவர்களாய் மேலை உலகில் நிகழ்ந்து வரும் சிந்தனைச் சமர்களுக்குள் தம்மைத் தாம் நுழைத்துக் கொள்கின்றார்கள். அனைத்து நாடுகளிலும் முஸ்லிம் இளைஞர்கள் போலியான சுலோகங்களாலும் கோஷங்களாலும் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள்.

அல்-குர்ஆன் பற்றிய புரிதலும் இறுதித் தூதுத்துவம் பற்றிய அறிவும் குன்றியவர்களாகவே எமது வாலிபர்கள் காணப்படுகின்றனர். என்றாலும் தமது வரலாறு, நிகழ்காலம், சமூகத்தில் தாம் பிரத்தியட்சமாகக் காணும் முரண்பாடுகள் பற்றிய உணர்வுகள் என்பன காரணமாக, இஸ்லாத்தைச் சில புத்திசாலித்தனமான அல்லது முட்டாள் தனமான கேள்விகளுக்கூடாகப் புரிந்து கொள்ள முற்படும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களது கேள்விகள் எவ்வாறாயினும் பனூ இஸ்ரவேலர்கள் மாட்டைப் பற்றிக் கேட்ட கேள்விகளின் தரத்தைத் தாண்டுவதாக இல்லை. மாட்டின் நிறம், தன்மை என்பன குறித்து அவர்கள் விடுத்த வினாக்கள், தமக்குரிய கடமையின் நோக்கத்தை விட்டும் அவர்களைத் திசை திருப்பி விட்டன. அதனால் தான் அல்-குர்ஆன், அவர்களுக்கும் அவர்களுக்கு இறக்கப்பட்ட வேதத்துக்கும் இடையிலான தொடர்பை, கழுதைத் தொடர்பு என வர்ணித்தது.

مَثَلُ الَّذِينَ حُمِّلُوا التَّوراةَ ثُمَّ لَمْ يَحمِلوها كَمَثَلِ الحِمارِ يَحمِلُ أَسفارًا... - الجمعة: ٥

**“எவர்கள் தவ்ராத் (வேதம்) சுமத்தப்பெற்று பின்னர் அதன்படி நடக்கவில்லையோ, அவர்களுக்கு உதாரணமாவது ஏடுகளைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்திற்கு ஒப்பாகும்...” (ஜுமுஆ 62:5)**

கழுதை தான் சுமக்கும் ஏடுகளின் பாரத்தைத் தாண்டி வேறு எதனையும் உணரப் போவதில்லை.

புதிதாக உருவாக்கப்பட வேண்டும் என நாம் அழைப்புவிடுக்கின்ற இல்முல் கலாம் சிந்தனை அனைத்து வகைக் கேள்விகளுக்கும் பதிலளிக்கக் கூடியதாகக் காணப்பட வேண்டும். அந்தப் பதில்கள் முஸ்லிம்களது ஈமானைப் பாதுகாக்கும் உத்தரவாதத்தைத் தர வேண்டும். சந்தேகங்கள், குழறுபடிகள், இணைவைப்பு முதலான அனைத்திலிருந்தும் அவர்களுக்கு விடுதலை அளிக்க வேண்டும். தெளிவானதொரு சத்தியம், அசத்தியமாக மாற்றப்பட்டு மக்கள் அனைவரும் அது தான் சரியானது என்று நம்பும் நிலையில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அல்-குர்ஆன் கூறுகிறது:

وما يُؤْمِنُ أَكْثَرُهُمْ بِاللهِ إِلَّا وَهُمْ مُشْرِكُونَ - يوسف: ١٠٦

**“மேலும் அவர்கள் இணைவைப்பவர்களாக இருக்கிற நிலையிலில்லாமல் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதில்லை.” (யூஸுப் 12:106)**

இந்தப் புதிய இல்முல் கலாம் சிந்தனையைக் கட்டியெழுப்ப எம்மிடத்தில் இருவகையான வாசிப்புகள் அவசியமாகின்றன. ஒன்று வஹி

பற்றிய வாசிப்பு, மற்றது நடைமுறை உலகம் பற்றிய வாசிப்பு. இந்தக் கூட்டு வாசிப்பு தான் புதிய இல்முல் கலாம் சிந்தனைக்கான அத்திரவாரமாக அமைய வேண்டும். அப்போது தான் முஸ்லிம்களுடைய ஈமானைப் பலப்படுத்தி அவர்களைச் சந்தேகங்கள், குழறுபடிகள், பலவீனங்கள், நயவஞ்சகம், இணைவைப்பு போன்ற பல்வேறு தடைகளிலிருந்தும் காப்பாற்ற முடியும். சிலர், ஈமான் கொண்டவர்களாயினும் அதன் அடிப்படைகளுடன் முரண்படுகின்ற சிந்தனைகளுடனும் சந்தேகங்களுடனும் ஒரு தடுமாற்றத்தில் வாழ்கின்றனர். அதிலிருந்தும் அவர்களை விடுவிக்க இந்தப் புதிய இல்முல் கலாம் தேவை. நாம் மீண்டும் நினைவூட்டிக் கொள்கின்றோம்.

وَما يُؤمِنُ أَكثَرُهُم بِاللَّهِ إِلّا وَهُم مُشرِكونَ - يوسف: ١٠٦

**“மேலும் அவர்கள் இணைவைப்பவர்களாக இருக்கிற நிலையிலில்லாமல் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் மீத நம்பிக்கை கொள்வதில்லை.” (யூஸுப் 12:106)**

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

الَّذينَ آمَنوا وَلَم يَلبِسوا إيمانَهُم بِظُلمٍ أُولئِكَ لَهُمُ الأَمنُ وَهُم مُهتَدونَ - الأنعام: ٨٢

**“எவர் ஈமான் கொண்டு அதன் பின்னர் தம்முடைய ஈமானை (இணைவைத்தல் என்னும்) அநீதியைக் கொண்டு களங்கப்படுத்தவில்லையோ, அவர்களுக்கே அபயமுண்டு; இன்னும் அவர்களே நேர்வழியைப் பெற்றுக் கொண்டவர்கள்.” (அன்ஆம் 6:82)**

ஆக, ஈமான் கொண்டதன் பின்னர் அந்த ஈமானை இணைவைப்பின் மூலம் கலங்கப்படுத்தினால் அங்கு பாதுகாப்போ, நேர்வழியோ கிடைக்காது. அத்தகைய உள்ளங்கள் அமைதியையோ, ஆழ்ந்த உறுதியையோ ஈட்டிக் கொள்ள மாட்டா. ஈமானுடன் இணைவைப்பும் வழிகேடுகளும் கலக்காத போது மாத்திரமே உள்ளத்தில் ஆழ்ந்த நம்பிக்கை நிலைபெறும்.

இவ்வாறு நாம் புதியதொரு இல்முல் கலாம் சிந்தனையைக் கட்டியெழுப்புவோமாயின் நிச்சயமாக, நாம் நமது ஆரம்ப நிலைக்கு மீள்வதாகவும் எமது பாதையைச் சீர்படுத்திக் கொள்வதாகவும் சிதைந்து போனவற்றை புனர் நிர்மாணம் செய்வதாகவும் அமையும். எனவே தான், அல்-அஸ்ஹர், ஸைதூனா, கரவிய்யீன், மற்றுமுள்ள பல்கலைக்கழகங்களின் உஸூலுத்தீன், இஸ்லாமிய கற்கைகள், அகீதா பிரிவு முதலான பீடத்தார்களையும் அவற்றின் பெருமதிப்புக்குரிய விரிவுரையாளர்களையும் நாம் கண்ணியத்துடன் கேட்டுக் கொள்கின்றோம்: ‘உங்களுக்கு முன்னால் உள்ள இந்த கடமையை நிறைவேற்ற

முன்வாருங்கள்; இந்தப் போராட்டத்தில் முன்னின்று ஈடுபடுங்கள்.' இன்று நாம் எதிர் கொள்ள வேண்டிய முதல் தரப் போராட்டமாக இலங்குவது இதுவே.

இந்தப் புதிய இல்முல் கலாம் சிந்தனையைக் கற்கின்றவர்களிடமும் ஆய்வு செய்கின்றவர்களிடமும் இந்தப் பிரபஞ்சம் பற்றிய மொத்தப் பார்வையொன்று காணப்பட வேண்டும். அப்போது தான் இந்தப் புதிய சிந்தனை இறுதித் தூதுத்துவத்தின் அனைத்து சிறப்பியல்புகளையும் உள்ளடக்கியதாய் அமையும். அதாவது இறைமை அல்-குர்ஆனுக்குரியதாய் இருக்கும்; இஸ்லாமியத் தூது அகிலத்துவப் பண்பு கொண்டதாக அமையும்; அதன் சட்டங்கள் இலகுவானவையாகவும் அருளாகவும் மக்களது சுமைகளை இறக்கி வைப்பனவாகவும் அவர்களுக்கு நல்லவற்றை அனுமதித்து தீயவற்றைத் தடை செய்வனவாகவும் விளங்க வேண்டும். மேலும் மனித ஆற்றல்கள் வீணாகிவிடாமல் பாதுகாக்க வேண்டும். இந்தப் பூமியை அபிவிருத்தி செய்யும் பணியை மிகச் சரியாக மனிதன் நிறைவேற்றும் வகையில் அவனது ஆற்றல்களை வெளிக் கொணர வேண்டும். இல்முல் கலாம் பற்றிய புதிய பார்வை மேற்கண்ட அம்சங்களைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

## மூன்றாவது: வேதம் வழங்கப்பட்ட சிலரிடத்தில் இல்முல் கலாம்

இல்முல் கலாம் எனும் இறையியல் தொடர்பான துறையில் விளைந்த தடம்பிறழ்வுகள் முஸ்லிம்களிடம் மாத்திரம் நிகழ்ந்தனவல்ல. வேதம் வழங்கப்பட்டவர்களது இறையியல் விவகாரங்களிலும் அவை நிகழ்ந்துள்ளன என அல்-குர்ஆன் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளது. அவற்றுள் மிகவும் ஆபத்தான தடம் பிறழ்வாக அமைந்தது, 'இறை வசனங்கள் நிலையானவை; அவை மாற்றங்களுக்கு உட்பட மாட்டா' என்ற நியமத்தை விட்டும் அவர்கள் வெளிச் சென்றமையாகும். 'இறைவசனங்கள் நிலையானவை' ஆயின் அங்கு வாதாட்டங்கள், தர்க்கங்கள் எழுவது அரிது.

வேதங்கள் வழங்கப் பட்டோரது முதலாவது தடம்பிறழ்வு, இறைவசனங்கள் மாறுதலுக்குள்ளாகக் கூடியனவெனக் கொள்வதிலேயே பிறந்தது. ஏனெனில் இறை வசனங்களுக்கு நிலையான பண்பு இருக்குமெனின், மதத்தலைவர்கள் தாம் விரும்புகின்ற வடிவில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியப்படாது. அதனால் இறைவசனங்களின் நிலையான தன்மையை அவர்கள் இல்லாது செய்து, அவற்றை எந்த விளக்கத்துக்கும் இடமளிக்கக் கூடியனவாக அமைத்துக் கொண்டனர். விளக்கம் கூற முற்படும் ஒருவர், தான் விரும்பியபடி அதனைக் கையாள

முடியும்; மொழியில் இடம்பாடு இல்லாத விளக்கங்களையும் அவர் வழங்குவது இயலும்.

இறை வசனத்தின் நிலையான பண்பு இல்லாமலாக்கப் படும் போது, இறைவசனத்தின் மூலமேயே வழிபிறழ்வின் வாயில் திறக்கப் பட்டுவிடுகின்றது. இந்தப் பின்புலத்தில் தான் இறை வசனங்களுக்கு சிலேடை விளக்கம் வழங்கப்பட்டது. மதத்தலைவர்கள் மொழியை இரண்டாகப் பிரித்தார்கள். ஒரு சொல்லின் அடிப்படைக் கருத்தை 'நேரிடைப் பொருள்' என்றனர். அதற்கு மாற்றமான பிரயோகத்தை சிலேடை என்றனர். யூத மூல நூல்களை ஆய்வு செய்து காணின், ஒரு சொல்லின் அடிப்படைக் கருத்துக்கு மாற்றமான வேறு கருத்துகளில் அவை பயன்படுத்தப்பட்டமைக்கு தல்மூத், மிஷ்னா போன்றவற்றில் எண்ணிலடங்காத உதாரணங்களைக் கண்டு கொள்ளலாம். இவை அதிகமாக, இறைவன் மற்றும் தூதுவர்களது பண்புகள், சட்டவிதிகள் போன்றவற்றிலேயே நிகழ்ந்துள்ளன. ஒரு சொல் அடிப்படையில் குறிக்கும் கருத்தை வெளியில் எடுத்து விட்டால், மதத் தலைவர்களுக்கு தாம் விரும்பிய விளக்கத்தை வழங்கும் வாய்ப்பு கிட்டிவிடுகின்றது. குறிப்பிட்ட சொல்லுக்கான அடிப்படைக் கருத்தை வழங்கியது, இறைவனாயினும் மனிதனாயினும் அதற்குத் தாம் விரும்பிய விளக்கத்தை அளிக்கும் சுதந்திரத்தை மதத் தலைவர்கள் ஈட்டிக் கொள்கின்றார்கள். மொழியை மனிதன் தான் உருவாக்கினான் எனக் கொண்டாலும் கூட, ஒரு சொல்லில் மேற்கொள்ளப் படும் சிறியதொரு மாற்றமும் அதன் அடிப்படைக் கருத்தை விடுத்துத் தாம் விரும்பிய கருத்துகளைத் தேர்ந்தெடுக்கும் தகைமையை விளக்கவுரையாளர்களுக்கு வழங்கிவிடுகின்றது. அவர்கள் இறையச்சம் இல்லாதவர்களாயின் இதனால் விளையும் பாதகங்கள் அதிகமாயிருக்கும். இவ்வகை தடம்பிறழ்வு குறித்துப் பேசுகிறது அல்-குர்ஆன்:

أَفَتَطمَعونَ أَن يُؤمِنوا لَكُم وَقَد كانَ فَريقٌ مِنهُم يَسمَعونَ كَلامَ اللَّهِ ثُمَّ يُحَرِّفونَهُ مِن بَعدِ ما عَقَلوهُ وَهُم يَعلَمونَ وَإِذا لَقُوا الَّذينَ آمَنوا قالوا آمَنّا وَإِذا خَلا بَعضُهُم إِلى بَعضٍ قالوا أَتُحَدِّثونَهُم بِما فَتَحَ اللَّهُ عَلَيكُم لِيُحاجّوكُم بِهِ عِندَ رَبِّكُم أَفَلا تَعقِلونَ - البقرة: ٧٥ - ٧٦

**"(முஸ்லிம்களே!) இவர்கள் (யூதர்கள்) உங்களுக்காக நம்பிக்கை கொள்வார்கள் என்று ஆசை வைக்கின்றீர்களா? இவர்களில் ஒரு சாரார் இறைவாக்கைக் கேட்டு அதை விளங்கிக் கொண்ட பின்னர், தெரிந்து கொண்டே அதை மாற்றி விட்டார்கள். மேலும் அவர்கள் ஈமான் கொண்டவர்களை சந்திக்கும் போது, நாங்களும் ஈமான் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுள் சிலர் (அவர்களுள்) சிலருடன் தனித்திடும் போது, உங்கள் இறைவன் முன் உங்களுக்கு எதிராக அவர்கள் வாதாடுவதற்காக அல்லாஹ் உங்களுக்கு அறிவித்துத் தந்த( தவ்ராத் )தை அவர்களுக்கு**

**எடுத்துச் சொல்கிறீர்களா? (இதை) நீங்கள் உணர மாட்டீர்களா? என்று (யூதர்கள் சிலர்) கூறுகின்றனர்." (பகரா 2:75–76)**

உண்மையை மறைத்தல் என்பதும் இறைவசனத்தின் நிலையான பண்பை மாற்றுவதற்கான ஓர் உத்தியாகப் பயன்பட்டது. குர்ஆன் கூறுகின்றது:

إِنَّ الَّذينَ يَكتُمونَ ما أَنزَلنا مِنَ البَيِّناتِ وَالهُدى مِن بَعدِ ما بَيَّنّاهُ لِلنّاسِ فِي الكِتابِ
أُولئِكَ يَلعَنُهُمُ اللَّهُ وَيَلعَنُهُمُ اللّاعِنونَ - البقرة: ١٥٩

**"நாம் அருளிய தெளிவான அத்தாட்சிகளையும் நேர்வழியையும் –அதனை நாம் வேதத்தில் மனிதர்களுக்காக விளக்கிய பின்னரும்– யார் மறைக்கின்றார்களோ, நிச்சயமாக அவர்களை அல்லாஹ் சபிக்கிறான். மேலும் அவர்களை சபிப்ப(தற்கு உரிமை உடைய)வர்களும் சபிக்கிறார்கள்." (பகரா 2:159)**

மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ الَّذينَ يَكتُمونَ ما أَنزَلَ اللَّهُ مِنَ الكِتابِ وَيَشتَرونَ بِهِ ثَمَنًا قَليلًا أُولئِكَ ما يَأكُلونَ
في بُطونِهِم إِلَّا النّارَ وَلا يُكَلِّمُهُمُ اللَّهُ يَومَ القِيامَةِ وَلا يُزَكّيهِم وَلَهُم عَذابٌ أَليمٌ - البقرة:
١٧٤

**"எவர், அல்லாஹ் வேதத்தில் அருளியவற்றை மறைத்து அதற்குக் கிரயமாக சொற்பத் தொகை பெற்றுக் கொள்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர வேறெதனையும் உட்கொள்ளவில்லை. மறுமை நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும் மாட்டான்; அவர்களைப் பரிசுத்தமாக்கவும் மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையும் உண்டு." (பகரா 2:174)**

இறையச்சத்தை இழந்து, அல்லாஹ்வுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு மாற்றம் செய்து, அல்லாஹ்வைப் பொய்ப்படுத்துபவர்கள் பற்றியும் பேசுகின்றது அல்-குர்ஆன்:

وَإِذ أَخَذَ اللَّهُ ميثاقَ الَّذينَ أوتُوا الكِتابَ لَتُبَيِّنُنَّهُ لِلنّاسِ وَلا تَكتُمونَهُ فَنَبَذوهُ وَراءَ
ظُهورِهِم وَاشتَرَوا بِهِ ثَمَنًا قَليلًا فَبِئسَ ما يَشتَرونَ - آل عمران: ١٨٧

**"தவிர வேதம் கொடுக்கப் பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும், அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவுபடுத்துவீராக), அப்பால், அவர்கள் அதைத் தங்கள் முதுகுகளுக்குப்**

**பின்னால் எறிந்து விட்டு, அதற்குப் (பதிலாகச்) சொற்ப கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் (இவ்வாறு) வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும்." (ஆல இம்ரான் 3:187)**

இறை வசனத்தின் நிலையான பண்பை மாற்றுகின்றமை என்பது, சில சொற்களைத் திரிபுபடுத்தி விட்டு அதனை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள் என நினைத்துக் கொள்வதாகவும் சில போது அமைந்திருக்கின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

ثُمَّ قَسَت قُلوبُكُم مِن بَعدِ ذٰلِكَ فَهِيَ كَالحِجارَةِ أَو أَشَدُّ قَسوَةً وَإِنَّ مِنَ الحِجارَةِ لَما يَتَفَجَّرُ مِنهُ الأَنهارُ وَإِنَّ مِنها لَما يَشَّقَّقُ فَيَخرُجُ مِنهُ الماءُ وَإِنَّ مِنها لَما يَهبِطُ مِن خَشيَةِ اللَّهِ وَمَا اللَّهُ بِغافِلٍ عَمّا تَعمَلونَ أَفَتَطمَعونَ أَن يُؤمِنوا لَكُم وَقَد كانَ فَريقٌ مِنهُم يَسمَعونَ كَلامَ اللَّهِ ثُمَّ يُحَرِّفونَهُ مِن بَعدِ ما عَقَلوهُ وَهُم يَعلَمونَ وَإِذا لَقُوا الَّذينَ آمَنوا قالوا آمَنّا وَإِذا خَلا بَعضُهُم إِلىٰ بَعضٍ قالوا أَتُحَدِّثونَهُم بِما فَتَحَ اللَّهُ عَلَيكُم لِيُحاجّوكُم بِهِ عِندَ رَبِّكُم أَفَلا تَعقِلونَ - البقرة: ٧٤ - ٧٦

**"இதன் பின்னரும் உங்கள் இதயங்கள் இறுகி விட்டன; அவை கற்பாறையைப் போல் ஆயின; அல்லது, (அதை விடவும்) அதிகக் கடினமாயின; (ஏனெனில்) திடமாகக் கற்பாறைகள் சிலவற்றினின்று ஆறுகள் ஒலித்தோடுவதுண்டு. இன்னும் சில பிளவுபட்டுத் திடமாக அவற்றினின்று தண்ணீர் வெளிப்படக் கூடியதுமுண்டு. இன்னும், திடமாக அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தால் சில (கற்பாறைகள்) உருண்டு விழக் கூடியவையும் உண்டு. மேலும், அல்லாஹ் நீங்கள் செய்து வருவது பற்றி கவனிக்காமல் இல்லை. (முஸ்லிம்களே!) இவர்கள் (யூதர்கள்) உங்களுக்காக நம்பிக்கை கொள்வார்கள் என்று ஆசை வைக்கின்றீர்களா? இவர்களில் ஒரு சாரார் இறைவாக்கைக் கேட்டு அதை விளங்கிக் கொண்ட பின்னர், தெரிந்து கொண்டே அதை மாற்றி விட்டார்கள். மேலும் அவர்கள் ஈமான் கொண்டவர்களை சந்திக்கும் போது, நாங்களும் ஈமான் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுள் சிலர் (அவர்களுள்) சிலருடன் தனித்திடும் போது, உங்கள் இறைவன் முன் உங்களுக்கு எதிராக அவர்கள் வாதாடுவதற்காக அல்லாஹ் உங்களுக்கு அறிவித்துத் தந்த( தவ்ராத்)தை அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறீர்களா? (இதை) நீங்கள் உணர மாட்டீர்களா? என்று (யூதர்கள் சிலர்) கூறுகின்றனர்." (பகரா 2:74–76)**

மேலும் குர்ஆன் கூறுகின்றது:

يا أَهلَ الكِتابِ قَد جاءَكُم رَسولُنا يُبَيِّنُ لَكُم كَثيرًا مِمّا كُنتُم تُخفونَ مِنَ الكِتابِ وَيَعفو عَن كَثيرٍ قَد جاءَكُم مِنَ اللَّهِ نورٌ وَكِتابٌ مُبينٌ - المائدة: ١٥

**“வேதமுடையவர்களே! மெய்யாகவே உங்களிடம் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பவற்றில் பல விஷயங்களை அவர் உங்களுக்கு விளக்கிக் காட்டுவார். இன்னும், (இப்பொழுது தேவையில்லாத) அநேகத்தை விட்டு விடுவார். நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும் தெளிவுமுள்ள (திருக் குர்ஆன் என்னும்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது.” (மாஇதா 5:15)**

மற்றுமம் சில சமயங்களில் இறைவசனங்களைத் திரிபுபடுத்த எண்ணங் கொண்டவர் வசனங்களை மாற்றாமல் உள்ளவாறே வைத்து விட்டு வேறும் பல காரணங்கள் கற்பிப்பார். தன்னால் அதனை விளங்க முடியவில்லை; விளங்கிக் கொள்ளச் சிரமமாக இருக்கின்றது; வசனம் சுருக்கமாக இருப்பதால் கருத்து குழப்பமாக இருக்கின்றது; சுருக்கமாகவும் கருத்துத் தெளிவின்றியும் இருப்பதால் தனது அறிவு மட்டத்துக்கு அப்பால்பட்டிருக்கின்றது எனப் பல கூறுவர். இதன் மூலம் அவர்கள் தமது உள்ளங்கள் சரியான வழியை அறிந்து கொள்ள இயலாமல் திரையிடப்பட்டிருக்கின்றன என்பர். இவர்கள் குறித்துப் பேசுகின்றது, குர்ஆன்:

فَبِمَا نَقْضِهِمْ مِيثَاقَهُمْ وَكُفْرِهِمْ بِآيَاتِ اللهِ وَقَتْلِهِمُ الأَنْبِيَاءَ بِغَيْرِ حَقٍّ وَقَولِهِمْ قُلُوبُنَا غُلْفٌ بَلْ طَبَعَ اللهُ عَلَيهَا بِكُفْرِهِمْ فَلَا يُؤْمِنُونَ إِلَّا قَلِيلًا - النساء: ١٥٥

**“அவர்களுடைய வாக்குறுதியை அவர்கள் மீறியதாலும் அல்லாஹ்வின் வசனங்களை அவர்கள் நிராகரித்து விட்டதாலும் அநியாயமாக அவர்கள் நபிமார்களைக் கொலை செய்ததாலும் எங்கள் இதயங்கள் திரையிடப்பட்டுள்ளன. (எனவே எந்த உபதேசமும் அங்கே செல்லாது) என்று அவர்கள் கூறியதாலும் (அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான்.) அவர்களுடைய நிராகரிப்பின் காரணத்தால் அல்லாஹ் (அவர்களுடைய இருதயங்களின் மீது) முத்திரையிட்டு விட்டான். ஆகவே அவர்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) ஈமான் கொள்ள மாட்டார்கள்.” (அந்நிஸா 4:155)**

சில சமயங்களில் மதத் தலைவர்கள் ஹராமானவற்றை ஹலாலானவற்றிற்குத் தவறாக ஒப்பீடு செய்து, அவற்றை ஹலாலாக்க முற்படுவார்கள். அவர்கள், ‘வியாபாரம் என்பது வட்டியைப் போன்றது’ என்பார்கள். பதிலாக, ‘அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி வட்டியை ஹராமாக்கியிருக்கின்றான்’ எனக் கூறுகின்றது குர்ஆன்:

الَّذينَ يَأكُلونَ الرِّبا لا يَقومونَ إِلّا كَما يَقومُ الَّذي يَتَخَبَّطُهُ الشَّيطانُ مِنَ المَسِّ ذٰلِكَ بِأَنَّهُم قالوا إِنَّمَا البَيعُ مِثلُ الرِّبا وَأَحَلَّ اللَّهُ البَيعَ وَحَرَّمَ الرِّبا فَمَن جاءَهُ مَوعِظَةٌ مِن رَبِّهِ فَانتَهىٰ فَلَهُ ما سَلَفَ وَأَمرُهُ إِلَى اللَّهِ وَمَن عادَ فَأُولٰئِكَ أَصحابُ النّارِ هُم فيها خالِدونَ - البقرة: ٢٧٥

**“யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறு விதமாய் எழ மாட்டார்கள். இதற்குக் காரணம்) அவர்கள் நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே என்று கூறியதினாலேயாம்; அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி வட்டியை ஹராமாக்கியிருக்கின்றான். ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது. என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள். அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள்.” (பகரா 2:275)**

சில சமயங்களில் திரிபுபடுத்தலானது, சத்தியத்தை அசத்தியத்தில் மறைத்துவிடும் வடிவிலும் நடைபெறும். தெளிவான சத்தியத்தை அறிந்திருந்தாலும் அதனை அவர்கள் வெளியிட மாட்டார்கள். இவர்கள் குறித்து அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلا تَلبِسُوا الحَقَّ بِالباطِلِ وَتَكتُمُوا الحَقَّ وَأَنتُم تَعلَمونَ - البقرة: ٤٢

**“நீங்கள் அறிந்து கொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள்; உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள்.” (பகரா 2:42)**

சில சமயங்களில் மதத் தலைவர்கள் இறைவசனத்தின் வெளிப்படையான கருத்துடன் மாத்திரம் நிற்பார்கள். பின்னர் கருத்துத் திரிபைக் கொண்டு வரும் வகையில் மேலும் சில விடயங்களை இணைப்பார்கள்; அல்லது அந்த வெளிப்படையான கருத்தைச் சொல்வதன் மூலம் அறிவு ரீதியாக கருத்துத் திரிபொன்றினைக் கொண்டு வருவார்கள். உதாரணமாக ‘அல்லாஹ்வின் கைகள் கட்டப்பட்டுள்ளது’ என்பார்கள்:

وَقالَتِ اليَهودُ يَدُ اللَّهِ مَغلولَةٌ غُلَّت أَيديهِم وَلُعِنوا بِما قالوا بَل يَداهُ مَبسوطَتانِ يُنفِقُ كَيفَ يَشاءُ وَلَيَزيدَنَّ كَثيرًا مِنهُم ما أُنزِلَ إِلَيكَ مِن رَبِّكَ طُغيانًا وَكُفرًا وَأَلقَينا بَينَهُمُ العَداوَةَ وَالبَغضاءَ إِلىٰ يَومِ القِيامَةِ كُلَّما أَوقَدوا نارًا لِلحَربِ أَطفَأَهَا اللَّهُ وَيَسعَونَ فِي الأَرضِ فَسادًا وَاللَّهُ لا يُحِبُّ المُفسِدينَ - المائده: ٦٤

**“அல்லாஹ்வின் கை கட்டப்பட்டிருக்கிறது என்று யூதர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய கைகள் தாம் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதின் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டார்கள். அல்லாஹ்வின் இரு கைகளோ விரிக்கப் பட்டே இருக்கின்றன. தான் நாடியவாறு (தன் அருட்கொடைகளை) கொடுக்கின்றான். உம்மீது உம் இறைவனால் இறக்கப்பட்ட (இவ்வேதம்) அவர்கள் அநேகரில் வரம்புமீறுதலையும் கு∴ப்ரை( நிராகரிப்பை)யும் நிச்சயமாக அதிகப்படுத்துகிறது. ஆகவே அவர்களிடையே பகைமையும் வெறுப்புணர்ச்சியையும் இறுதி நாள்வரை நாம் போட்டு விட்டோம். அவர்கள் யுத்த நெருப்பை மூட்டும் போதெல்லாம் அதனை அல்லாஹ் அணைத்துவிடுகிறான். (ஆயினும்) இன்னும் அவர்கள் பூமியில் குழப்பம் செய்து கொண்டே திரிகின்றனர். அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்.” (மாஇதா 5:64)**

அதனால் தான் அல்லாஹ் எங்களிடம் கடன் கேட்கிறான் என்பார்கள்:

مَن ذَا الَّذي يُقرِضُ اللَّهَ قَرضًا حَسَنًا فَيُضاعِفَهُ لَهُ أَضعافًا كَثيرَةً وَاللَّهُ يَقبِضُ وَيَبسُطُ
وَإِلَيهِ تُرجَعونَ - البقرة: ٢٤٥

**“(கஷ்டத்திலிருப்போருக்காக) அல்லாஹ்வுக்கு அழகிய கடன் எவர் கொடுக்கின்றாரோ, அதை அவருக்கு அவன் இரு மடங்காக்கி பன்மடங்காகச் செய்வான். அல்லாஹ் தான் (உங்கள் செல்வத்தைச்) சுருக்குகிறான். (அவனே அதைப்) பெருக்கியும் தருகிறான். அன்றியும் நீங்கள் அவனிடமே மீட்டப்படுவீர்கள்.” (பகரா 2:245)**

சில சந்தர்ப்பங்களில் அறபு எழுத்துக்களை வைத்து விளையாடுவார்கள். அறபு எழுத்துகளில் புள்ளிகள் இல்லா எழுத்துகளுக்கு புள்ளிகள் வைத்து வாசிப்பார்கள்; புள்ளிகள் உள்ளவற்றை புள்ளிகள் இன்றி வாசிப்பார்கள்.

وَإِذ قُلنَا ادخُلوا هٰذِهِ القَريَةَ فَكُلوا مِنها حَيثُ شِئتُم رَغَدًا وَادخُلُوا البابَ سُجَّدًا وَقولوا
حِطَّةٌ نَغفِر لَكُم خَطاياكُم وَسَنَزيدُ المُحسِنينَ - البقرة: ٥٨

**“இன்னும் (நினைவு கூறுங்கள்) நாம் கூறினோம்: இந்த பட்டிணத்துள் நுழைந்து அங்கு நீங்கள் விரும்பிய இடத்தில் தாராளமாகப் புசியுங்கள். அதன் வாயிலில் நுழையும் போது, பணிவுடன் தலைவணங்கி ஹித்ததுன் (எங்கள் பாவச் சுமைகள் நீங்கட்டும்) என்று கூறுங்கள். நாம் உங்களுக்காக உங்கள் குற்றங்களை மன்னிப்போம். மேலும் நன்மை செய்வோருக்கு அதிகமாகக் கொடுப்போம்.” (பகரா 2:58)**

இங்கு 'ஹித்ததுன்' என்ற சொல்லை 'ஹின்ததுன்' (கோதுமை) எனக் கூறுவார்கள். இவ்விரு சொற்களுக்கிடையிலும் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. இது போன்ற திரிபுகள் வேதம் வழங்கப் பெற்றோரிடம் நிறையவே இருக்கின்றன.

இவர்களுள், குறிப்பாக யூதர்கள், இறைவசனங்களுடன் விளையாட முடியாதவிடத்து நபிமார்களைக் கொன்று போடவும் தயங்க மாட்டார்கள். ஏனெனில், இறைவசனங்கள் திரிபுபடுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுவது நபிமார்களூடாகவே. அவர்களே சிக்கல்கள் இன்றித் தெளிவாக இறை வாசகங்களை மக்களுக்குப் புரிய வைப்பவர்கள். அவர்களைக் கொலை செய்துவிட்டால், தாம் செய்ய விழையும் திரிபுகளில் இருந்து இறைவசனங்களைப் பாதுகாப்பதற்கு யாரும் இருக்க மாட்டார்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். மனித இனத்துக்குத் தொடராக அனுப்பப்பட்ட நபிமார்கள், மதத் தலைவர்கள் செய்து வந்த திரிபுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தி வந்தார்கள். நபிமார்களைக் கொன்று போடுவதன் மூலம் தமது நடவடிக்கைகளுக்கு இருக்கும் பெரும் தடையை அகற்றிக் கொள்ளலாம். அல்-குர்ஆன் கூறுகின்றது:

ضُرِبَت عَلَيهِمُ الذِّلَّةُ أَينَ ما ثُقِفوا إِلّا بِحَبلٍ مِنَ اللَّهِ وَحَبلٍ مِنَ النّاسِ وَباءوا بِغَضَبٍ مِنَ اللَّهِ وَضُرِبَت عَلَيهِمُ المَسكَنَةُ ذٰلِكَ بِأَنَّهُم كانوا يَكفُرونَ بِآياتِ اللَّهِ وَيَقتُلونَ الأَنبِياءَ بِغَيرِ حَقٍّ ذٰلِكَ بِما عَصَوا وَكانوا يَعتَدونَ - آل عمران: ١١٢

**"அவர்கள், எங்கிருப்பினும் அவர்கள் மீது இழிவு விதிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்விடமிருந்தும் மனிதர்களிடமிருந்தும் அவர்களுக்கு(ப் பாதுகாவலான) ஒப்பந்தமின்றி (அவர்கள் தப்ப முடியாது.) அல்லாஹ்வின் கோபத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள். ஏழ்மையும் அவர்கள் மீது விதிக்கப்பட்டு விட்டது. இது ஏனென்றால், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் ஆயத்களை நிராகரித்தார்கள். அநியாயமாக நபிமார்களைக் கொலை செய்தார்கள். இன்னும் அவர்கள் பாவம் செய்து கொண்டும் (இறையாணையை) மீறி நடந்து கொண்டும் இருந்தது தான் (காரணமாகும்.)" (ஆல இம்ரான் 3:112)**

தாம் வேதத்தில் மறைத்து விட்ட பல விடயங்களை நபிமார்கள் வெளிக் கொண்டு வந்தமையை மிகவும் ஆபத்தானதொரு சவாலாகக் கொண்டனர் யூதர்கள். இது குறித்துத் தான் ஸூரா மாஇதா பேசுகின்றது.

يا أَهلَ الكِتابِ قَد جاءَكُم رَسولُنا يُبَيِّنُ لَكُم كَثيرًا مِمّا كُنتُم تُخفونَ مِنَ الكِتابِ وَيَعفو عَن كَثيرٍ قَد جاءَكُم مِنَ اللَّهِ نورٌ وَكِتابٌ مُبينٌ - المائدة: ١٥

**“வேதமுடையவர்களே! மெய்யாகவே உங்களிடம் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பவற்றில் பல விஷயங்களை அவர் உங்களுக்கு விளக்கிக் காட்டுவார். இன்னும், (இப்பொழுது தேவையில்லாத) அநேகத்தை விட்டு விடுவார். நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும் தெளிவுமுள்ள (திருக் குர்ஆன் என்னும்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது.” (மாஇதா 5:15)**

தொடர்ந்தும் கூறுகின்றது:

وَكَيفَ يُحَكِّمونَكَ وَعِندَهُمُ التَّوراةُ فيها حُكمُ اللَّهِ... - المائدة: ٤٣

**“எனினும், இவர்கள் உம்மை தீர்ப்பு அளிப்பவராக எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? இவர்களிடத்திலோ தவ்ராத் வேதமுள்ளது. அதில் அல்லாஹ்வின் கட்டளையும் உள்ளது...” (மாஇதா 5:43)**

அதாவது தவ்ராத்தின் அறிவு மறைக்கப்பட்டு விட்டது; அதன் வார்த்தைகள் திரிபுபடுத்தப்பட்டு விட்டன. அதன் இறை மூலப் பிரதி சிலரிடம் மாத்திரமே பிரயோகத்தில் இருக்கின்றது. பொது மக்கள் பயன்படுத்தம் வகையிலும் அது இல்லை. மக்கள் அதனை வாசிப்பதும் தடுக்கப்பட்டு விட்டது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

يا أَيُّهَا الرَّسولُ لا يَحزُنكَ الَّذينَ يُسارِعونَ فِي الكُفرِ مِنَ الَّذينَ قالوا آمَنّا بِأَفواهِهِم وَلَم تُؤمِن قُلوبُهُم وَمِنَ الَّذينَ هادوا سَمّاعونَ لِلكَذِبِ سَمّاعونَ لِقَومٍ آخَرينَ لَم يَأتوكَ يُحَرِّفونَ الكَلِمَ مِن بَعدِ مَواضِعِهِ يَقولونَ إِن أوتيتُم هذا فَخُذوهُ وَإِن لَم تُؤتَوهُ فَاحذَروا وَمَن يُرِدِ اللَّهُ فِتنَتَهُ فَلَن تَملِكَ لَهُ مِنَ اللَّهِ شَيئًا أُولئِكَ الَّذينَ لَم يُرِدِ اللَّهُ أَن يُطَهِّرَ قُلوبَهُم لَهُم فِي الدُّنيا خِزيٌ وَلَهُم فِي الآخِرَةِ عَذابٌ عَظيمٌ سَمّاعونَ لِلكَذِبِ أَكّالونَ لِلسُّحتِ فَإِن جاءوكَ فَاحكُم بَينَهُم أَو أَعرِض عَنهُم وَإِن تُعرِض عَنهُم فَلَن يَضُرّوكَ شَيئًا وَإِن حَكَمتَ فَاحكُم بَينَهُم بِالقِسطِ إِنَّ اللَّهَ يُحِبُّ المُقسِطينَ وَكَيفَ يُحَكِّمونَكَ وَعِندَهُمُ التَّوراةُ فيها حُكمُ اللَّهِ ثُمَّ يَتَوَلَّونَ مِن بَعدِ ذلِكَ وَما أُولئِكَ بِالمُؤمِنينَ إِنّا أَنزَلنَا التَّوراةَ فيها هُدًى وَنورٌ يَحكُمُ بِهَا النَّبِيّونَ الَّذينَ أَسلَموا لِلَّذينَ هادوا وَالرَّبّانِيّونَ وَالأَحبارُ بِمَا استُحفِظوا مِن كِتابِ اللَّهِ وَكانوا عَلَيهِ شُهَداءَ فَلا تَخشَوُا النّاسَ وَاخشَونِ وَلا تَشتَروا بِآياتي ثَمَنًا قَليلًا وَمَن لَم يَحكُم بِما أَنزَلَ اللَّهُ فَأُولئِكَ هُمُ الكافِرونَ وَكَتَبنا عَلَيهِم فيها أَنَّ النَّفسَ بِالنَّفسِ وَالعَينَ بِالعَينِ وَالأَنفَ بِالأَنفِ وَالأُذُنَ بِالأُذُنِ وَالسِّنَّ بِالسِّنِّ وَالجُروحَ

قِصاصٌ فَمَن تَصَدَّقَ بِهِ فَهُوَ كَفّارَةٌ لَهُ وَمَن لَم يَحكُمُ بِما أَنزَلَ اللَّهُ فَأُولئِكَ هُمُ الظّالِمونَ -

المائده: ٤١ - ٤٥

“தூதரே! எவர்கள் தங்கள் வாய்களினால் நம்பிக்கை கொண்டோம் என்று கூறி அவர்களுடைய இருதயங்கள் ஈமான் கொள்ளவில்லையோ அவர்களைக் குறித்தும் யூதர்களைக் குறித்தும் யார் நிராகரிப்பின் (கு∴ப்ரின்) பக்கம் விரைந்து சென்று கொண்டிருக்கிறார்களோ அவர்களைப் பற்றியும் நீர் கவலை கொள்ள வேண்டாம். அவர்கள் பொய்யானவற்றையே மிகுதம் கேட்கின்றனர். உம்மிடம் (இதுவரை) வராத மற்றொரு கூட்டத்தினருக்(கு உம் பேச்சுகளை அறிவிப்பதற்)காகவும் கேட்கின்றனர். மேலும் அவர்கள் (வேத) வசனங்களை அவற்றுக்கு உரிய இடங்களிலிருந்து மாற்றி இன்ன சட்டம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்; அதை உங்களுக்கு கொடுக்கப்படா விட்டால் அதை தவிர்ந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். மேலும் அல்லாஹ் எவரைச் சோதிக்க நாடுகிறானோ, அவருக்காக அல்லாஹ்விடமிருந்து (எதையும் தடுக்க) நீர் ஒரு போதும் அதிகாரம் பெறமாட்டீர். இத்தகையோருடைய இருதயங்களைப் பரிசுத்தமாக்க அல்லாஹ் விரும்பவில்லை. இவர்களுக்கு இவ்வுலகிலே இழிவும் மறுமையில், கடுமையான வேதனையும் உண்டு. அன்றியும் இவர்கள் பொய்யையே அதிகமாகக் கேட்போராகவும் விலக்கப்பட்ட பொருட்களையே விழுங்குவோராகவும் இருக்கின்றனர். (நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால் இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும். அல்லது இவர்களைப் புறக்கணித்துவிடும். அப்படி இவர்களை விடுவீராயினும் இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது. ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக. ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான். எனினும், இவர்கள் உம்மை தீர்ப்பு அளிப்பவராக எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? இவர்களிடத்திலோ தவ்ராத் வேதமுள்ளது. அதில் அல்லாஹ்வின் கட்டளையும் உள்ளது. எனினும் அதைப் பின்னர் புறக்கணித்து விடுவார்கள். இவர்கள் மு∴மின்களே அல்லர். நிச்சயமாக நாம் தான் தவ்ராத்தையும் இறக்கி வைத்தோம்; அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்ட நபிமார்கள், யூதர்களுக்கு அதனைக் கொண்டே (மார்க்கக்) கட்டளையிட்டு வந்தார்கள். இறை பக்தி நிறைந்த மேதை( ரப்பானிய்யூன்)களும் அறிஞர்( அஹ்பார்)களும் அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தைப் பாதுகாக்க கட்டளையிடப்பட்டவர்கள் என்பதனாலும் இன்னும் அவ்வேதத்திற்குச் சாட்சிகளாக அவர்கள் இருந்தமையாலும் அவர்கள் (அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள்; (மு∴மின்களே!) நீங்கள் மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள்; எனக்கே அஞ்சுங்கள். என்னுடைய வசனங்களை அற்பக் கிரயத்திற்கு விற்று விடாதீர்கள். எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக கா∴பிர்கள் தாம்.

**அவர்களுக்கு நாம் அதில், உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண், மூக்குக்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்குப் பல் ஆகவும்; காயங்களுக்கு(ச் சமமான காயங்களாகவும்) நிச்சயமாக பழிவாங்கப் படும் என்று விதித்திருந்தோம். எனினும் ஒருவர் (பழி வாங்குவதை) தர்மமாக விட்டு விட்டால் அது அவருடைய பாவங்களுக்குப் பரிகாரமாகும். எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்த (வேதக் கட்டளைப்)படி தீர்ப்பு வழங்கவில்லையோ நிச்சயமாக அவர்கள் அநியாயக்காரர்களே!" (மாஇதா 5:41–45)**

இவர்களிடத்தில் மிக அதிகமான திரிபுபடுத்தலுக்கு உட்பட்டது சட்ட நியதிகள் குறித்த பகுதியாகும். தமக்கு விதிக்கப்பெற்ற சட்டங்களில் கடினமான ஒரு போக்கு இருக்கின்றது என்றே அவர்கள் கருதினார்கள். எனவே தமது மனோ இச்சைகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றியமைத்துக் கொள்ளலானார்கள். அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருந்த சில உணவுகளை இவ்வாறே ஆகுமானவையாக்கிக் கொண்டார்கள்.

كُلُّ الطَّعامِ كانَ حِلًّا لِبَني إِسرائيلَ إِلّا ما حَرَّمَ إِسرائيلُ عَلى نَفسِهِ مِن قَبلِ أَن تُنَزَّلَ التَّوراةُ قُل فَأتوا بِالتَّوراةِ فَاتلوها إِن كُنتُم صادِقينَ - آل عمران: ٩٣

**"இஸ்ராயீல் (என்ற ய∴கூப்) தவ்ராத் அருளப்படுவதற்கு முன்னால் தன் மீது ஹராமாக்கிக் கொண்டதைத் தவிர, இஸ்ரவேலர்களுக்கு எல்ல வகையான உணவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. (நபியே!) நீர் கூறும்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் தவ்ராத்தையும் கொண்டு வந்து அதை ஓதிக் காண்பியுங்கள் என்று." (ஆல இம்ரான் 3:93)**

எனக் கூறுகின்றது அல்-குர்ஆன். இதே போன்றதைக் குற்றவியல் சட்டங்களிலும் கண்டு கொள்ளலாம்.

பெருமை மிகக் கொண்டவர்களாகவும் பாவங்களில் மூழ்கியவர்களாகவும் சட்ட விதிகளில் நின்றும் தப்பித்துக் கொள்ளும் சாத்தியங்களைத் தேடுபவர்களாகவும் இருந்தமையாலேயே தமக்கான சட்டங்களில் இறையோன் கடினத் தன்மையை ஏற்படுத்தினான் என்பதை இஸ்ரவேலாகள் நன்கு அறிந்திருந்தனர்.

யூதர்கள் பபிலோனியாவில் நபூகத் நஸ்ரின் அடிமைகளாகச் சிறை பிடிக்கப்பட்டு வாழ்ந்து வந்த போது, நபூகத் நஸ்ர் அவர்களது வேத நூல்களை அழித்து யூதர்களின் இருப்பை முழுமையாகத் துடைத்தெறிய முற்பட்டான். அவ்வேளையிலேயே அஸ்ரா என்பான் 'அறிவிப்புகள்' எனும் வழிமுறையை உருவாக்கி, அதன் மூலம் தவ்ராத் வசனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் முனைப்பை மேற்கொண்டான். தக்காரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் அறிவிப்புகளைத் தொகுப்பதன் மூலம் தவ்ராத்தை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ளும் முயற்சியாக அது விளங்கியது. இதன்

போது, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கப்பட்டவற்றில் தாம் மனனமிட்டவை எனக் கூறித் தாம் விரும்பியனவற்றையெல்லாம் பலரும் அறிவிப்புச் செய்யலாயினர். இதன் மூலம் தான் மூஸா நபிக்கு அல்லாஹ் இறக்கியவற்றையும் யூதத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடிந்தது எனக் கொண்டனர் அஸ்ராவும் அவனுடன் இருந்தோரும். ஆனால் உண்மையில் இந்த 'அறிவிப்புகள்' மூலம் அஸ்ரா தொகுத்த தவ்ராத்தில் தாம் விரும்பியனவற்றையெல்லாம் நுழைத்துக் கொள்ள அவர்களால் இயன்றது. இதுவே அவர்கள் செய்த மிகப்பெரிய திரிபு. 'நீங்கள் மார்க்கத்தைத் திரிபுபடுத்தி விட்டீர்கள்; அதில் இல்லாதவற்றையும் உள் நுழைத்து விட்டீர்கள்' என்று யாரும் கூறினால், 'அல்லாஹ்வின் பிள்ளைகளும் அவனது அன்புக்குரியவர்களும் நாங்கள் தான்' என்பார்கள்.

இதே வகையான திரிபுகளில் கிறிஸ்தவர்களும் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆனால் இறுதி நபி பற்றிய அவர்களது நிலைப்பாடு யூதர்களதை விடச் சற்று வித்தியாசமானது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

لَتَجِدَنَّ أَشَدَّ النّاسِ عَداوَةً لِلَّذينَ آمَنُوا اليَهودَ وَالَّذينَ أَشرَكوا وَلَتَجِدَنَّ أَقرَبَهُم مَوَدَّةً لِلَّذينَ آمَنُوا الَّذينَ قالوا إِنّا نَصارى ذٰلِكَ بِأَنَّ مِنهُم قِسّيسينَ وَرُهبانًا وَأَنَّهُم لا يَستَكبِرونَ

- المائده: ٨٢

**"நிச்சயமாக யூதர்களையும் இணைவைப்பவர்களையும் மு.ஃமின்களுக்குக் கடும் பகைவர்களாகவே (நபியே!) நீர் காண்பீர். நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம் என்று சொல்பவர்களை மு.ஃமின்களுக்கு நேசத்தால் மிகவும் நெருங்கியவர்களாக (நபியே!) நீர் காண்பீர். ஏனென்றால் அவர்களில் கற்றறிந்த குருமார்களும் துறவிகளும் இருக்கின்றனர். மேலும் அவர்கள் இறுமாப்புக் கொள்வதுமில்லை." (மாஇதா 5:82)**

வேதம் வழங்கப் பெற்றவர்களின் இல்முல் கலாம் சிந்தனையானது, இறை வசனத்தின் மீதானதல்ல என்பதை அல்-குர்ஆன், யூத மதத்தலைவர் ஒருவரது உதாரணத்தின் மூலம் முன்வைக்கின்றது:

وَاتلُ عَلَيهِم نَبَأَ الَّذي آتَيناهُ آياتِنا فَانسَلَخَ مِنها فَأَتبَعَهُ الشَّيطانُ فَكانَ مِنَ الغاوينَ وَلَو شِئنا لَرَفَعناهُ بِها وَلٰكِنَّهُ أَخلَدَ إِلَى الأَرضِ وَاتَّبَعَ هَواهُ فَمَثَلُهُ كَمَثَلِ الكَلبِ إِن تَحمِل عَلَيهِ يَلهَث أَو تَترُكهُ يَلهَث ذٰلِكَ مَثَلُ القَومِ الَّذينَ كَذَّبوا بِآياتِنا فَاقصُصِ القَصَصَ لَعَلَّهُم يَتَفَكَّرونَ ساءَ مَثَلًا القَومُ الَّذينَ كَذَّبوا بِآياتِنا وَأَنفُسَهُم كانوا يَظلِمونَ - الأعراف: ١٧٥ - ١٧٧

**“(நபியே!) நீர் அவர்களுக்கு ஒரு மனிதனுடைய வரலாற்றை ஓதிக் காட்டுவீராக! அவனுக்கு நாம் நம் அத்தாட்சிகளைக் கொடுத்தோம். எனினும் அவன் அவற்றை விட்டு முற்றிலும் நழுவி விட்டான். அப்போது அவனை ஷைத்தான் பின் தொடர்ந்தான். அதனால் அவன் வழிதவறியவர்களில் ஒருவனாகி விட்டான். நாம் நாடியிருந்தால் நம் அத்தாட்சிகளைக் கொண்டு அவனை உயர்த்தியிருப்போம். எனினும் அவன் இவ்வுலக வாழ்வை(யே சதமென) மதித்து, தன்னுடைய இச்சைகளையே பின்பற்றினான். அவனுக்கு உதாரணம் நாயைப் போன்று. அதை நீர் விரட்டினாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது. அல்லது அதை நீர் விட்டு விட்டாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது. இதுவே நம் வசனங்களைப் பொய்யெனக் கூறும் கூட்டத்தாருக்கும் உதாரணமாகும். ஆகவே அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறும் பொருட்டு (இத்தகைய) வரலாறுகளைக் கூறுவீராக. நம்முடைய வசனங்களைப் பொய்யெனக் கூறிய மக்களின் உதாரணம் மிகவும் கெட்டதாகும். அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்கள்.” (அல்அஃராப் 7:175–177)**

வேதம் வழங்கப் பெற்றவர்களின் மதத்தலைவர்கள் தத்தம் தேவைகளுக்கேற்பப் பொய்ச் சத்தியங்களையும் பயன்படுத்திக் கொள்வார்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுத்து விடுவார்கள். நாம் மேற்கண்ட தந்திரோபாயங்களைக் கையாள முடியாத ஒரு நிலை ஏற்படின், இறை வசனங்களையே புறக்கணித்து விடுவர். அவற்றைத் தாம் காணாதது போலவே நடந்து கொள்வர். மொத்தத்தில் யூத, கிறிஸ்தவ இல்முல் கலாம்கள் இரண்டுமே சிதைவுறலாயின. இத்தகைய திரிபுகள் பற்றி அல்-குர்ஆன் பல இடங்களில் பேசுகின்றது:

لَقَد كَفَرَ الَّذينَ قالوا إِنَّ اللَّهَ هُوَ المَسيحُ ابنُ مَريَمَ قُل فَمَن يَملِكُ مِنَ اللَّهِ شَيئًا إِن أَرادَ أَن يُهلِكَ المَسيحَ ابنَ مَريَمَ وَأُمَّهُ وَمَن فِي الأَرضِ جَميعًا وَلِلَّهِ مُلكُ السَّماواتِ وَالأَرضِ وَما بَينَهُما يَخلُقُ ما يَشاءُ وَاللَّهُ عَلى كُلِّ شَيءٍ قَديرٌ - المائده: ١٧

**“திடமாக எவர் மர்யமுடைய குமாரர் மஸீஹ் (ஈஸா) தான் அல்லாஹ் என்று கூறுகிறாரோ, அத்தகையோர் நிச்சயமாக நிராகரிப்போர் ஆகி விட்டனர். மர்யமுடைய குமாரர் மஸீஹையும் அவருடைய தாயாரையும் இன்னும் பூமியிலுள்ள அனைவரையும் அல்லாஹ் அழித்துவிட நாடினால் (அதிலிருந்து அவர்களைக் காக்க) எவர் சிறிதளவேனும் சக்தியோ அதிகாரமோ பெற்றிருக்கிறார் என்று (நபியே!) நீர் கேளும். வானங்களிலும் பூமியிலும் அவற்றிற்கு இடையேயும் உள்ள (பொருட்கள் அனைத்)தின் மீதுமுள்ள ஆட்சி அல்லாஹ்வுக்கே சொந்தம். அவன் நாடியதைப் படைக்கிறான். இன்னும் அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் ஆற்றலுடையவனாக இருக்கின்றான்.” (மாஇதா 5:17)**

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَقالَتِ اليَهودُ عُزَيرٌ ابنُ اللَّهِ وَقالَتِ النَّصارَى المَسيحُ ابنُ اللَّهِ ذلِكَ قَولُهُم بِأَفواهِهِم يُضاهِئونَ قَولَ الَّذينَ كَفَروا مِن قَبلُ قاتَلَهُمُ اللَّهُ أَنّى يُؤفَكونَ - التوبه: ٣٠

**"யூதர்கள் (நபி) உஸைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் (ஈஸா) மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். இது அவர்கள் வாய்களால் கூறும் கூற்றேயாகும். இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு இவர்கள் ஒத்துப் போகிறார்கள். அல்லாஹ் அவர்களை அழிப்பானாக! எங்கே திருப்பப்படுகிறார்கள்?" (துவ்பா 9:30)**

இவ்வாறு தான் யூதர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் இல்முல் கலாம் எனும் அவர்களது இறையியல் சிந்தனை அவர்களாலேயே வீழ்ச்சி கண்டது. இரு தரப்பினரும் ஒருவர் ஒருவரின் வீழ்ச்சியைப் பிரஸ்தாபித்துள்ளனர். அல்-குர்ஆன் இது குறித்தும் பேசுகின்றது:

وَقالَتِ اليَهودُ لَيسَتِ النَّصارى عَلى شَيءٍ وَقالَتِ النَّصارى لَيسَتِ اليَهودُ عَلى شَيءٍ وَهُم يَتلونَ الكِتابَ كَذلِكَ قالَ الَّذينَ لا يَعلَمونَ مِثلَ قَولِهِم فَاللَّهُ يَحكُمُ بَينَهُم يَومَ القِيامَةِ فيما كانوا فيهِ يَختَلِفونَ - البقرة: ١١٣

**"யூதர்கள் கூறுகிறார்கள்: கிறிஸ்தவர்கள் எந்த நல்வழியிலும் இல்லை என்று. கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள் யூதர்கள் எந்த நல்வழியிலும் இல்லை என்று. ஆனால் இவர்கள் (தங்களுக்குரிய) வேதத்தை ஓதிக் கொண்டே (இப்படிக் கூறுகிறார்கள்.) இவர்கள் கூறும் சொற்களைப் போலவே ஒன்றும் அறியாதவர்களும் கூறுகிறார்கள். இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ் இவர்கள் தர்க்கித்து மாறுபட்டுக் கொண்டிருக்கும் விஷயத்தில் தீர்ப்பளிப்பான்." (பகரா 2:113)**

## நான்காவது: இஸ்லாமிய இல்முல் கலாமும் அதன் தாக்கங்களும்

வேதம் வழங்கப் பெற்றவர்களது இல்முல் கலாம் சிந்தனையின் தடம் பிறழ்வுகள் குறித்து நாம் நோக்கினோம். அவற்றையொத்த அல்லது அவற்றைவிடக் கடுமையான பிரச்சினைகளை நாம் இஸ்லாமிய இல்முல் கலாம் சிந்தனையிலும் காண முடிந்தது.

இஸ்லாமிய விசுவாசத்தைப் பாதுகாக்கும், அதற்கெதிராக எழுப்பப்படும் எந்த சந்தேகத்தையும் தீர்த்து வைக்கும் என்ற அடிப்படையிலேயே இஸ்லாமிய இல்முல் கலாம் உருவாக்கம் பெற்றது. நடைமுறையில் நடந்தது என்ன? இல்முல் கலாம் கோட்பாட்டில் தடம்

பிறழ்வுகள் ஏற்பட்டதன் பின்னர், இஸ்லாம் பற்றிய குற்றச்சாட்டுகள், சந்தேகங்களை மேலும் வலுவூட்டும் ஒரு சாதனமாகவே இல்முல் கலாம் மாறி விட்டது.

அல்-குர்ஆனின் சவாலை எதிர் கொள்ள முடியாதவர்கள், அதில் குறைகள் காணவும் சந்தேகங்களை எழுப்பவும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கவும் தொடங்கினர். அதாவது அல்-குர்ஆனின் சவாலைக் கோழைத்தனமான வழிமுறைகளுடாக எதிர் கொள்ளத் தொடங்கினர். அல்-குர்ஆன் வாசகங்கள் மீது வீண் சந்தேகங்களைக் கிளப்பி விடுதல், அது பற்றிய விமர்சனங்களை உருவாக்குதல், அதில் கூட்டுதல்கள், குறைத்தல்கள் நிகழ்ந்துள்ளன என்ற ஒரு புரளியை ஏற்படுத்துதல் முதலியன அவர்கள் கையாண்ட வழிமுறைகள். மேலும் அல்-குர்ஆனில் குழப்பமான, பொருள்புரியாத, மயக்கமான வாசகங்கள் பல இருக்கின்றன; உருவகப்படுத்தல்களும் சிலேடையும் ஒப்பீட்டுக்கு முரணானவையும் காணப்படுகின்றன என்றெல்லாம் கூறப்பட்டது. முன்னர் கூறப்பட்டது போல், அல்-குர்ஆனை 'அறிவிப்பு'களால் கட்டுப்படுத்த முனைந்தவர்களுடைய செயற்பாட்டை விட்டும் இது பெரிதும் வேறுபடவில்லை.

அல்-குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை, இல்முல் கலாம் துறையாளர்களுக்கோ, சட்டவியல் துறை சார்ந்தோருக்கோ, அறபுகளுக்கோ, அறபு அல்லாதவர்களுக்கோ, ஸஹாபாக்களுக்கோ, தாபிஈன்களுக்கோ, அஹ்லுல் பைத்களுக்கோ வழங்காமல், அல்லாஹு தஆலா தானே ஏற்றுக் கொண்டில்லா விட்டால், நாம் மேற்கண்ட நடவடிக்கைகளின் காரணமாக, முன்னைய வேதங்களுக்கு நேர்ந்தனவே அல்-குர்ஆனுக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும். அல்-குர்ஆனின் இருப்பையும் வெற்றியையும் உத்தரவாதம் செய்யும் தனியொரு காரணி, வல்ல அல்லாஹ்வே அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றிருப்பதாகும்.

என்றாலும் கூட, குர்ஆன் மீது காட்டப் பெற்ற குறைகள், குற்றங்கள் பற்றிய அத்துனை விவரங்களும் பல்வேறு ஆதார நூல்களிலும் ஆய்வுகளிலும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றின் இருப்பும் தொடர்ந்த பரிமாற்றமும் 'அறிவிப்பு'கள் மூலம் நிலைபெற்றுள்ளன. இன்றைய சூழலில், குர்ஆனுக்கு எதிரான ஆய்வுகளுள் பயன்படுத்தப் படும் பிரதான மூலாதாரங்களாக அவை விளங்குகின்றன. கீழைத்தேயவியல் ஆய்வாளர்களும் மாணவர்களும் இவற்றையே மேற்கோள் காட்டி அல்-குர்ஆனுக்கு எதிரான தமது தாக்குதல்களைத் தொடர்கின்றனர். அவற்றுள் பிரதானமான சிலவற்றைக் காண்போம்:

1. அல்-குர்ஆனில் அடிப்படையில் இல்லாத மேலதிக விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அல்-குர்ஆனின் இறுதி இரு ஸூராக்களான அல்-பலக், அந்நாஸ் ஆகியன மேலதிகமானவை என்பர் சிலர். ஸூரத்துல்

பாதிஹா அல்-குர்ஆனில் இல்லை என்பர் வேறும் சிலர். கவாரிஜ்களில் மைமூனிய்யாப் பிரிவினர், ஸூரா யூஸுப் மேலதிகமானது என்பர்.

*2. அல்-குர்ஆனில் முன்னம் இருந்த சில பகுதிகள் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது இட்டுக் கட்டப்பட்ட ஒரு ஹதீஸ், ஸூரதுல் அஹ்ஸாப் ஆரம்பத்தில் ஸூரதுல் பகராவுக்குச் சமானமானதாக இருந்ததாகவும் பின்னர் அது எழுபத்தி மூன்று வசனங்கள் கொண்டதாகக் குறைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில தீவிர நிலைப்பாட்டாளர்கள், அல்-குர்ஆனில் ஸூரதுல் விலாயா என்ற ஒரு ஸூரா இருந்ததாகவும் இல்லாமலாக்கப்பட்ட அது, பாத்திமாவின் அல்-குர்ஆன் பிரதியில் இருப்பதாகவும் கூறுவர்.*

*3. அல்-குர்ஆனில் 'நஸ்க்' நிகழ்ந்துள்ளது. அதாவது சட்டங்கள் அல்லது வசனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.*

*4. அல்-குர்ஆனில் தெளிவற்ற, குழப்பமான, பொருள் புரியாத பல வசனங்கள் இருக்கின்றன.*

இவை போன்றன மேலும் சில இருக்கின்றன. இவற்றுள் சில, யூத, கிறிஸ்தவ இல்முல் கலாம் சிந்தனையில் ஏற்பட்ட தடம் பிறழ்வுகளுக்கு ஒப்பானவை. 'அறிவிப்பு'கள் வாயிலாகவே இவை எம்மை வந்தடைந்துள்ளன. எமது தப்ஸீர், சட்டவியல் துறைகளைச் சார்ந்தோரும் அல்-குர்ஆனீய சட்டங்கள் குறித்து எழுதியோரும் மேலும் பலரும் இவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இது விடயம் குறித்து இமாம் அர்-ராஸீ கூறுவதைக் கவனியுங்கள்: 'விசித்திரமான கருத்துகளும் வித்தியாசமான மத்ஹபுகளும் தோற்றம் பெறுவதற்கு முன்னர், அல்-குர்ஆனின் இரண்டு அட்டைகளுக்கு உட்பட்ட பகுதிகள் அனைத்தும் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பது, மக்களது மிக உறுதியான நம்பிக்கையாகவும் அனைவரும் ஏற்றுக் கொண்ட உண்மையாகவும் காணப்பட்டது. ஆனால் அந்த விசித்திரமான கருத்துகளை ஆராய முற்பட்ட போது, மிகுந்த கருத்து வேறுபாடுகளை அவதானிக்க முடிந்தது. உதாரணமாக இப்னு மஸ்ஊத் பற்றி அறிவிக்கப் படும் ஒரு செய்தியில் அவர் ஸூரதுல் பாதிஹா, அல்-பலக், அந்நாஸ் ஆகியன அல்-குர்ஆனில் இல்லை எனக் குறிப்பிட்டதாக வந்துள்ளது.'

இந்த சந்தேகத்துக்குச் சில ஹதீஸ்களும் அத்திவாரம் அமைத்துள்ளன. இத்தகு அறிவிப்புகள், ஹதீஸ்கள் தொடர்பில் அறிஞர்கள் மத்தியில் நான்கு வகையான நிலைப்பாடுகளைக் கண்டு கொள்ளலாம். முதலாம் தரப்பினர் இந்த அறிவிப்புகள் அனைத்தையும் மறுத்துரைத்தனர். இரண்டாம் தரப்பினர் இந்த அறிவிப்புகள் ஸஹீஹானவை எனக் கொண்டு அவற்றிற்கு வேறு விளக்கங்களை முன்வைத்தனர். மூன்றாம் தரப்பினர்,

இந்த அறிவிப்புகள் ஸஹீஹானவை என ஏற்று, இப்னு மஸ்ஊத் இதனை மறுத்துள்ளார் என அவர் மீது குறை காணலாயினர். இது மற்றொரு வழிகேடாகும். நான்காவது தரப்பினர் இந்த அறிவிப்புகளை ஏற்றாலும் இவற்றிற்கு மாற்றம் கற்பித்தனர். அவர்கள், மிகவும் ஆதாரபூர்வமான வழிகள் ஊடாக நகர்த்தப்பட்ட, மேற்கண்ட ஸூராக்கள் குர்ஆனில் உள்ளவை என நிரூபிக்கும் அறிவிப்புகளை முன்வைத்தனர். இதுவே பெரும்பாலான அறிஞர்களதும் தப்ஸீர் துறையாளர்களதும் நிலைப்பாடாகக் காணப்பட்டது. இந்த விவகாரங்களைத் தனது 'அல்-இன்திஸார்' எனும் நூலில் அல்காழி அல்-பாகில்லானி தனியானதொரு தலைப்பில் ஆராய்கின்றார்:

1. இந்த சந்தேகத்துக்கு அடிப்படையாக அமைந்தது ஓர் ஆஹாத் (பத்துக்குட்பட்ட எண்ணிக்கையினர் அறிவிக்கும்) ஆன ஹதீஸாகும். இதனை இமாம் அஹ்மதின் மகனான அப்துல்லாஹ், ஸிர் இப்னு ஹுபைஸ் ஊடாகப் பதிவு செய்துள்ளார். ஸிர் இப்னு ஹுபைஸ் கூறுகிறார்: நான் உபை இப்னு கஃபிடம், இப்னு மஸ்ஊத் அவர்கள் ஸூரா பலக், ஸூரா அந்நாஸ் ஆகியவற்றைத் தனது அல்-குர்ஆன் பிரதியில் எழுதவில்லையே என்று கூறிய போது, அவர் கூறினார்: நபியவர்கள் எனக்கு அறிவித்த விடயத்துக்கு நான் சாட்சியாக இருக்கிறேன். நபியவர்களிடம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குல் அஊது பிரப்பில் பலக் என்று ஓதுங்கள் என்று கூறிய பொழுது நபியவர்கள் ஓதினார்கள்! பின்னர் குல் அஊது பிரப்பின் நாஸ் என்று ஓதுங்கள் என்று கூறிய பொழுது நபியவர்கள் ஓதினார்கள். நபியவர்கள் ஓதியதையே நாங்களும் ஓதுகிறோம்.

2. அப்துர் ரஹ்மான் இப்னு ஸைத் ஊடாக வந்துள்ள மற்றொரு ஹதீஸையும் அப்துல்லாஹ், தனது ஸவாஇதில் பதிவு செய்துள்ளார். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் தனது அல்-குர்ஆன் பிரதியில் இருந்து ஸூரா பலக், ஸூரா நாஸ் ஆகியவற்றை நீக்கி விட்டு இவை அல்-குர்ஆனில் உள்ளவை அல்ல எனக் கூறியிருந்தார்கள். இமாம் அஃமஷ் (இவரிடமிருந்து தான் இமாம் அஹ்மத் குறிப்பிட்ட ஹதீஸை தனது மகனுக்கு அறிவித்திருக்கின்றார்கள்) கூறுகிறார்: உபை இப்னு கஃபிடமிருந்து ஸிர் ஊடாக ஆஸிம் எனக்கு அறிவித்தார்: இநத இரண்டு ஸூராக்கள் பற்றியும் நான் நபியவர்களிடம் கேட்டேன். அன்னார் 'எனக்கு அவை ஓதிக்காட்டப்பட்டன, நான் அவற்றை ஓதினேன்' என்றார்கள்.

3. ஸிர் இப்னு ஹுபைஸ் அறிவிக்கிறார்: 'நான் உபையிடம், உங்களது சகோதரன் தனது அல்-குர்ஆன் பிரதியில் இந்த இரண்டு ஸூராக்களையும் நீக்கியிருக்கிறார். அதனை யாரும் மறுக்கவில்லை என்கின்றார் எனக் கூறினேன்.' இந்த ஹதீஸ் பற்றி ஸுப்யான் இப்னு உயைனாவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறினார்: 'இங்கு சகோதரன் எனக்

குறிப்பிடப்பட்டது இப்னு மஸ்ஊத் ஆவார். அத்துடன் இந்த இரண்டு ஸூராக்களும் அவரது அல்-குர்ஆன் பிரதியில் இருக்கவில்லை. இவை இரண்டையும் ஹஸன் மற்றும் ஹுஸைன் ஆகியோருக்குத் திருஷ்டி கழிப்பதற்காக நபியவர்கள் ஓதியதையே அவர் பார்த்துள்ளார். தொழுகையில் ஓதியதைப் பார்க்கவில்லை. எனவே அவையிரண்டும் துஆக்கள் என்று தான் அவர் நினைத்துள்ளார். அந்தக் கருத்தில் அவர் உறுதியாகவும் இருந்தார். ஆனால் ஏனையவர்கள், இந்த இரண்டு ஸூராக்களும் அல்-குர்ஆனில் உள்ளவை என்பதை உறுதிப்படுத்தி அவருக்கும் எத்தி வைத்தனர்.'

4. மேலே சொல்லப்பட்ட ஸுப்யான் ஊடாக அறிவிக்கப் படும் ஹதீஸின் முதல் பகுதியை அபூ ய.்.லா பதிவு செய்துள்ளார். இரண்டாம் பகுதியான நபிகளாரின் வார்த்தைகளை இமாம் புஹாரி பதிவு செய்திருக்கின்றார். ஸிர் இப்னு ஹுபைஸ் ஊடாக ஆஸிம் அறிவிக்கிறார்: 'நான் உபை இப்னு க.்.பிடம், அபூ முன்திர் அவர்களே, உங்கள் சகோதரர் இப்னு மஸ்ஊத் இப்படிச் சொல்கிறாரே என வினவிய போது உபை அவர்கள், நான் நபியவர்களிடம் இது பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள், எனக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டது, நான் ஓதினேன் என்றார்கள். நபியவர்கள் ஓதியது போலவே நாமும் ஓதுகிறோம் எனக் கூறினார். இந்த அறிவிப்பில் 'இப்படிச் சொல்கிறாரே' என்ற வார்த்தைக்கு இமாம் இப்னு ஹஜர், 'இப்படி' என்ற தெளிவற்ற சொல்லே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. யாரேனும் அறிவிப்பாளர்கள் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்காக இந்த சொல்லைப் பயன்படுத்தியிருக்க முடியும். ஸுப்யான் தான் இந்த சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். ஸுப்யான் இந்த சொல்லை சில சமயங்களில் தெளிவற்றதாகவும் சில சமயங்களில் தெளிவாகவும் கூறியிருக்கின்றார் என விளக்கமளித்தள்ளார்.

5. ஸூரதுல் பாதிஹா தொடர்பில் இமாம் குர்துபி குறிப்பிடுகிறார்... இந்த ஸூரா அல்-குர்ஆனில் உள்ளது என்பது முழு முஸ்லிம் உம்மத்தும் உடன்பட்ட ஒரு விடயமாகும். 'இது அல்-குர்ஆனில் ஒரு ஸூராவாக இருப்பின் இப்னு மஸ்ஊத் அதனைத் தனது அல்-குர்ஆன் பிரதியில் தொகுத்திருப்பார்; ஸூரா பலக், ஸூரா நாஸ் ஆகியன இரண்டும் அல்-குர்ஆனில் இல்லையென அவர் கருதியது போன்று பாதிஹாவும் அதில் இல்லை என்றே அவர் எண்ணியிருக்கின்றார்' எனக் கூறுவர் சிலர். அபூபக்ர் அல் அன்பாரி அவர்கள் கூறியது தான் இதற்கான பதிலாகும். அல்ஹஸன் இப்னு ஹப்பாப் எனக்கு அறிவிக்கின்றார்; ஸுலைமான் இப்னு அஸ்அஸ், இப்னு அபீ குதாமா, ஜரீர் ஆகியோரின் ஊடாக அ.்.மஷ் அல்லது இப்றாஹீமிடமிருந்து அறிவிக்கப்படுகின்றது: இப்னு மஸ்ஊதிடம் நீங்கள் ஏன் ஸூரதுல் பாதிஹாவை உங்கள் அல்-குர்ஆன்

பிரதியில் கொண்டு வரவில்லை எனக் கேட்ட பொழுது, அதனை நான் எழுதியிருந்தால் ஒவ்வொரு ஸூராவுடனும் எழுதியிருப்பேன் என்றார். அபூபக்ர் அல்-அன்பாரி கூறுகின்றார்: 'தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் வேறு ஒரு ஸூரா ஓதப் படும் முன்னால் ஸூரா பாதிஹா ஓதப்படல் வேண்டும்; எனவே அதனைத் தொகுக்காமல் விட்டு விட்டேன். முஸ்லிம்கள் அனைவரும் அதனைப் பாதுகாப்பார்கள் என்றே நான் நம்பினேன். தொழுகையில் ஏனைய ஸூராக்களுக்கு முன்னர் அது ஓதப்படுவதால் அதனைத் தொகுப்பது எனின், ஒவ்வொரு ஸூராவுடனும் அதனை எழுத வேண்டும். எனவே ஓரிடத்தில் மாத்திரம் அதனை எழுதுவதனை நான் தவிர்த்தேன்' என்பதே இப்னு மஸ்ஊத் அவர்களது வார்த்தைகளின் பொருளாகும்.

இவ்வாறான அறிவிப்புகளின் காரணமாகவே இந்த விடயத்தில் குழப்பங்களும் சந்தேகங்களும் நிலவி வருகின்றன. இவை குறித்துத் தாம் எடுக்க வேண்டிய நிலைப்பாடு என்ன என்பதில், இமாம்கள் மத்தியில் பல பிரிவினர் காணப்படுகின்றனர்.

முலாவது பிரிவினர், இந்த அனைத்து அறிவிப்புகளும் ஆதாரம் அற்றவை எனக் கூறி அவற்றை முழுமையாக மறுத்து விட்டனர். இதில் முதன்மையானவர், அபூ முஹம்மத் இப்னு ஹஸ்ம் ஆவார். அவர் கூறுவார்: 'ஸூரா பலக், நாஸ், பாதிஹா போன்றவை இப்னு மஸ்ஊதின் அல்-குர்ஆன் பிரதியில் காணப்படவில்லை என வருகின்ற அனைத்து அறிவிப்புகளும் பொய்யானவை, இட்டுக் கட்டப்பட்டவை, ஆதாரபூர்வமற்றவை.

ஆஸிம் என்பவர், ஸிர் இப்னு ஹுபைஸ் ஊடாக இப்னு மஸ்ஊதிடமிருந்து அறிவிக்கும் கிராஅத் பற்றிய ஆதார பூர்வமான அறிவிப்பில் இம்மூன்று ஸூராக்களும் உள்ளடங்கியுள்ளன.

இமாம் அர்ராஸி தனது தப்ஸீரில், இப்னு மஸ்ஊத் குறித்து நகர்த்தப்பட்டவை பொய்யான செய்திகள் என்று தான் பெரும்பாலும் கணிக்க முடியுமாக இருக்கின்றது. அவ்வாறு கருதுவதன் மூலமே இந்த சிக்கலில் இருந்து மீள முடியும் என்கின்றார்.

இமாம் நவவி கூறுவார்: ஸூரா பலக், நாஸ், பாதிஹா மற்றும் அல்-குர்ஆன் பிரதிகளில் காணப் படும் ஏனைய அனைத்து ஸூராக்களும் அல்-குர்ஆன் தான் என்பதில் அனைத்து முஸ்லிம்களும் ஒத்த கருத்தினரே; இதில் ஏதேனும் ஒரு பகுதியை மறுப்பவர் காபிராவார்; இப்னு மஸ்ஊத் கூறியதாக அறிவிக்கப் படும் ஸூரா பலக், நாஸ், பாதிஹா பற்றிய அறிவிப்புகள் ஆதாரமற்றவை. இப்னு மஸ்ஊத் அவற்றை அறிவித்தார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை.

அஷ்ஷிபா எனும் நூலின் விரிவுரையாளரான அல்-கபாஜி, அல்காரி

போன்ற மேலும் பலரும் இதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர் எனக் கூறுவார் இப்னு ஹஸ்ம்.

இரண்டாம் பிரிவினர், இந்த ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை என ஏற்றுக் கொண்டாலும் அவற்றின் உள்ளடக்கங்களுக்கு வேறு விளக்கங்கள் அளிக்கலாயினர். இப்பிரிவினரில் பிரதானமானவர் இமாம் இப்னு ஹஜர். ஏற்கனவே ஸஹீஹ் புஹாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நாம் குறிப்பிட்ட ஹதீஸுக்கு இவர் விளக்கம் அளிக்கையில், ஆரம்பமாக இமாம் புஹாரி, இமாம் அஹ்மத், இமாம் அப்துல்லாஹ் இப்னு அஹ்மத் ஆகியோருடன் இப்னு ஹிப்பான், தபரானி, இப்னு மர்தவைஹி ஆகியோரும் இதனைப் பதிவு செய்துள்ளனர் எனப் பட்டியலிடுவார்.

மேலும் இமாம் பஸ்ஸார் இந்த ஹதீஸைப் பதிவு செய்து, இறுதியில் நபியவர்கள், ஸூரா பலக், நாஸ் ஆகியவற்றைக் கொண்டு பாதுகாப்புத் தேடுமாறு அறிவுறுத்தியமையையும் அன்னார் தொழுகையில் இந்த ஸூராக்களை ஓதி வந்துள்ளமையையும் இந்த ஹதீஸை இப்னு மஸ்ஊதுடன் இணைந்து வேறு எந்த ஒரு ஸஹாபியும் அறிவிக்கவில்லை எனக் கூறியுள்ளமையையும் சுட்டிக் காட்டுவார் இமாம் இப்னு ஹஜர்.

அடுத்து இந்த ஹதீஸ்களுக்கு இமாம் அல்காழி பாகில்லானி வழங்கிய வேறு விளக்கங்களைக் கொண்டு வருவதுடன், அவற்றுக்கு நிகரான சில ஹதீஸ்களை காழி இயால் மற்றும் சிலர் தொகுத்தமையையும் குறிப்பிடுவார்.

பின்னர் இமாம் நவவி, இமாம் இப்னு ஹஸ்ம், இமாம் அர்ராஸி முதலியோர் இந்த ஹதீஸ்கள் ஆதாரபூர்வமற்றன என குறிப்பிட்டிருப்பது ஏற்புக்குரியதல்ல என்பார் இப்னு ஹஜர். உண்மையில் இந்த ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை. அவற்றிற்கான வேறு விளக்கங்கள் உள்ளன என்பார் அவர். தொடர்ந்து, 'முஸ்லிம்களது உடன்பாடான நிலைப்பாடு' என அவர்கள் கூறுவதைப் பொறுத்தவரையில், எல்லாக் காலத்திலும் இவ்வாறு தான் இருந்தது என அவர்கள் நாடுகின்றார்கள் எனின் அது தவறாகும்; ஒரு காலத்தில் இவ்வாறு இருந்தது எனக் கொள்வராயின் அது ஏற்புடைத்தாகும் என்பார் இப்னு ஹஜர்.

பின்னர் அன்னார் இந்த ஹதீஸ்களுக்கான வேறு விளக்கங்களை அளிப்பார், அவை குறித்து விரிவாக நாம் வேறு ஓர் இடத்தில் காண்போம்.

மூன்றாம் பிரிவினர், தாமும் வழிகெட்டுப் பிறரையும் வழி கெடுத்தவர்கள். இந்த அனைத்து அறிவிப்புகளும் ஸஹீஹானவை எனக் கூறிய அவர்களது நோக்கம் 'அல்-குர்ஆனின் சில ஸூராக்களை மறுத்திருக்கின்றார்கள்' என, இப்னு மஸ்ஊத் அவர்களையும் ஏனைய சில ஸஹாபாக்களையும் குற்றஞ்சாட்டுவதாகும். அதன் தொடர்ச்சியாக,

முழு குர்ஆனினதும் திட்டவட்டத் தன்மையையே அவர்கள் கேள்விக்குட்படுத்தினர். அல்-குர்ஆன் திட்டவட்டமானது என்பது முழு முஸ்லிம் உம்மத்தும் உடன்பட்டதொரு விடயம். இதில் எந்த ஒரு மு.்.மினும் முரண்படவில்லை. இப்பிரிவினரோ அதனையும் கேள்விக்குள்ளாக்கினர். இந்த நிலைப்பாட்டில் பிரதான பங்கு வகித்தோர் மு.்.தஸிலாக்களின் அந்நள்ளாம் பிரிவினர். இது பற்றி இவர்கள் மூலம் நகர்த்தப்பட்டுள்ள சில அறிவிப்புகளை, அறிவித்தோர் யார் எனத் தெளிவாகக் குறிப்பிடாமலேயே பதிவு செய்துள்ளார் இமாம் இப்னு குதைபா.

நான்காவது பிரிவினர் இந்த அறிவிப்புகளை ஏற்றுப் பின் மறுத்துரைத்துள்ளவர்கள். தமது நிலைப்பாட்டுக்கு மேலும் பலமான, முதவாதிரான ஆதாரங்கள் கொண்டு, குறித்த ஸூராக்கள் குர்ஆனில் அடங்கியவை எனக் கொண்டவர்கள். பெரும்பாலான அறிஞர்களும் தப்ஸீர் ஆசிரியர்களும் இப்பிரிவினராகவே காணப்பட்டனர். இவர்கள் ஆதாரமாகக் கொண்ட சில ஹதீஸ்களை நோக்குவோம்.

*1.* அப்துல்லாஹ் அவர்கள், தனது தந்தையின் முஸ்னதில் மேலதிகமாக இணைத்த பகுதியில், உக்பத் இப்னு ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு ஊடாகப் பதிவு செய்திருக்கும் ஹதீஸில் உக்பத் இப்னு ஆமிர் கூறுகின்றார்: ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் எனது கைகளைப் பிடித்துக் கொண்டு, ‘தவ்ராத், இன்ஜீல், ஸபூர், புர்கான் அனைத்திலும் இறக்கப்பட்ட, மிகவும் சிறந்த மூன்று ஸூராக்களை உனக்கு நான் கற்றுத் தரட்டுமா?’ எனக் கேட்டார்கள். அதற்கு நான் ‘அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும், நபியவர்களே!’ என்றேன். எனக்கு அன்னார், குல்ஹுவல்லாஹு அஹத், குல் அஊது பிரப்பில் பலக், குல் அஊது பிரப்பின்னாஸ் ஆகிய ஸூராக்களை ஓதிக்காட்டினார்கள். பின்னர், ‘உக்பாவே, இவற்றை ஒரு போதும் மறந்து விடாதீர்; ஒவ்வோர் இரவிலும் இவற்றைத் தவறாது ஓதிவாரும்’ என்றார்கள். அந்த நாள் முதல் இன்று வரை நான் அவற்றை மறக்கவில்லை; தினமும் அவற்றை ஓதி வருவதற்கும் நான் தவறியதில்லை.

*2.* முஆத் இப்னு அப்துல்லாஹ் இப்னு குபைப், தனது தந்தையார் ஊடாக அறிவிக்கின்றார்: ‘எங்களுக்குத் தாகமாகவும் கஷ்டமாகவும் இருந்தது. நபியவர்கள் வந்து எங்களுக்குத் தொழுவிக்கும் வரை காத்திருந்தோம். அன்னார் வந்து எனது கைகளைப் பிடித்து ‘ஓதுங்கள்’ என்றார்கள். நான் ‘என்ன ஓத வேண்டும்?’ எனக் கேட்டேன். ‘குல்ஹுவல்லாஹு அஹத், ஸூரா பலக், ஸூரா நாஸ் இவற்றைக் காலையிலும் மாலையிலும் தினமும் இரண்டு தடவைகள் ஓதி வாருங்கள்’ என்றார்கள்.

3. உக்பத் இப்னு ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு பயணத்தில் நபிகளாரின் ஒட்டகத்தை நான் நடாத்திச் சென்றேன். ஓர் ஒடுங்கிய பாதை வழியாகச் செல்லும் போது நபிகளார் 'நீங்கள் ஏறிக் கொள்கின்றீர்களா?' எனக் கேட்டார்கள். 'நீங்கள் இறங்க, நான் ஏறுவது மரியாதையாகாது' என்றேன். மீண்டும் 'நீங்கள் ஏறிக் கொள்கிறீர்களா?' எனக் கேட்டார்கள். 'அது பாவமாக மாறிவிடும் என நான் அஞ்சுகின்றேன்' எனக் கூறினேன். பின்னர் நபியவர்கள் இறங்க நான் ஏறிப் பயணித்தேன். சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் நபியவர்கள் ஏறிப் பயணித்தார்கள். அப்பொழுது அன்னார், 'மக்கள் ஓதுகின்ற ஸூராக்களில் மிகவும் சிறந்த இரு ஸூராக்களை உங்களுக்குக் கற்றுத் தரட்டுமா?' எனக் கேட்டார்கள். நான் 'ஆம். கற்றுத் தாருங்கள்' என்றேன். நபியவர்கள், குல் அஊது பிரப்பில் பலக், குல் அஊது பிரப்பின் நாஸ் ஆகிய ஸூராக்களை ஓதிக் காட்டினார்கள். பின்னர் தொழுகையை நடாத்திய போது இந்த இரு ஸூராக்களையும் ஓதினார்கள். பிறகு என்னைக் கடந்து செல்லும் போது, 'என்ன கருதுகிறீர்கள்?' என விசாரித்து 'அந்த ஸூராக்களை நீங்கள் தூங்கச் செல்லும் போதும் தூக்கத்தில் இருந்து எழும் போதும் ஓதி வாருங்கள்' என நபிகளார் கூறினார்கள்.

4. நபிகளார் கூறியதாக உக்பத் இப்னு ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு அவாகள் கூறுகின்றார்: 'எனக்கு இரண்டு ஸூராக்கள் இறக்கப்பட்டன. (மற்றோர் அறிவிப்பில் 'எனக்கு சில வசனங்கள் இறக்கப்பட்டன') அவற்றைப் போன்ற வசனங்களை நான் இதற்கு முன்னர் பார்த்ததில்லை. அவற்றைப் பயன்படுத்தி நீங்கள் பாதுகாப்புத் தேடுங்கள். பாதுகாப்புத் தேடுவதற்கு இவற்றைப் போல் வேறு ஒன்றும் இல்லை.'

5. உக்பா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஊடாக வந்திருக்கும் மற்றோர் அறிவிப்பில், பாதுகாப்பு தேடுவதற்குரிய இரண்டு ஸூராக்களையும் ஓதி வாருங்கள்; அவற்றைப் போல் ஒன்றை நீங்கள் ஓதியிருக்க மாட்டீர்கள் என்று நபிகளார் தன்னிடம் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

6. ஒரு மனிதர் அறிவிப்பதாக அபுல் அலா பதிவு செய்துள்ளார்: (ஒரு மனிதர் என்பது உக்பத் இப்னு ஆமிரைக் குறிக்கும் என இப்னு கஸீர் குறிப்பிடுகின்றார்.) நாங்கள் நபியவர்களுடன் ஒரு பிரயாணத்தில் இருந்தோம். மக்களில் பலர் பிரயாணத்தில் கலந்து கொண்டிருந்தனர். ஏறிச் செல்வதற்குரிய கால்நடைகள் குறைவு என்பதால் ஒருவர் மாறி ஒருவர் அவற்றில் ஏறிச் சென்றனர். எனது தடவைக்கு அடுத்ததாக நபியவர்களது தடவை வந்தது. அப்பொழுது எனது தோல் பட்டையில் தட்டி, குல் அஊது பிரப்பில் பலக் ஸூராவை ஓதினார்கள். தொடர்ந்து

நானும் அதை ஓதினேன். பின்னர் குல் அஊது பிரப்பின் நாஸ் ஸூராவை ஓதினார்கள். தொடர்ந்து நானும் அதை ஓதினேன். பின்னர் 'தொழுகையில் இவை இரண்டையும் ஓதுங்கள்' என்றார்கள்.

இந்த ஹதீஸை இமாம் ஹைஸமி குறிப்பிட்டு விட்டு, இமாம் அஹ்மத் இதனைப் பதிவு செய்துள்ளதாகவும் இதன் அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இமாம் இப்னு கஸீர், தனது தப்ஸீரில், இமாம் அஹ்மத் இதனைப் பதிவு செய்துள்ளதோடு, இமாம் நஸஈயும் இப்னு அலிய்யா, இப்றாஹீம், ய.்.கூப் ஊடாகப் பதிவிட்டுள்ளதாகவும் குறிப்பிடுவார். இமாம் இப்னு கஸீர், உக்பா இப்னு ஆமிர் ஊடாக வந்துள்ள அனைத்து அறவிப்புகளையும் பகுப்பாய்வு செய்து, உக்பா ஊடாக வந்திருக்கும் இந்த அறிவிப்புகள் அதிகமான ஹதீஸ் துறை வல்லுனர்களிடையே முதவாதிர் தரத்தில் திட்டவட்டமானவையாகக் கொள்ளப்பட்டன என்பார்.

7. அபூ ஸஈதினில் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்: மனிதர்கள், ஜின்களின் பார்வைகளிலிருந்தும் நபிகளார் பாதுகாப்புத் தேடி வந்துள்ளாகள். ஸூரா பலக், ஸூரா நாஸ் ஆகியவை இறங்கிய பின்னர் ஏனையவற்றை விட்டு இவை இரண்டையுமே பாதுகாப்புத் தேடப் பயன்படுத்தினார்கள். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கின்றார்: 'நபிகளார் நோய்வாய்ப்பட்டால் பாதுகாப்புக்குரிய இரண்டு ஸூராக்களையும் தானே ஓதி தன்மீது ஊதிக் கொள்வார்கள். அன்னார் அதிகமாக சிரமப் படும் வேளைகளில் நான் அவற்றை ஓதி, பரகத்துக்காக அன்னாரின் கைகளினாலேயே அவர்களைத் தடவி விடுவேன்.'

ஸூரா பலக், ஸூரா நாஸ் ஆகியன குர்ஆனில் உள்ளவை என உறுதி செய்கின்ற அநேக அறிவிப்புகள் இவை. முன்னம் நாம் கண்ட ஓர் அறிவிப்பில் இந்த இரண்டு ஸூராக்களையும் நபிகளார் தொழுகையில் ஓதினார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதில் நபிகளார் உக்பா ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து 'என்ன கருதுகிறீர்கள்?' எனக் கேட்பதிலிருந்து, 'இந்த இரண்டு ஸூராக்களும் அல்-குர்ஆனில் உள்ளவை அல்ல; பாதுகாப்புத் தேடலுக்கான துஆக்களே' என உக்பா ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் கருதியிருக்க வாய்ப்பிருக்கிறது என்பது புலனாகின்றது. சில வேளை இந்த ஐயத்தை உக்பா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரிடமே எழுப்பியிருக்கவும் கூடும். நபிகளார் தொழுகையில் அவற்றை ஓதுவதுடன் ஐயங்கள் அனைத்தும் கலைந்துவிடுகின்றன. அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே நபிகளார், உக்பாவிடம் 'என்ன கருதுகிறீர்கள்?' என வினவுகின்றார்கள்; 'நீங்கள் தூங்கும் பொழுதும் எழும் பொழுதும் இவற்றை ஓதுங்கள்' என்கின்றார்கள்.

அதன் பொருள் நான் தொழுகையில் ஓதியதைப் போன்று நீங்களும் ஓதுங்கள் என்பதாகும்.

எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு இமாம் அல்காழி அல்பாகில்லானி அவர்கள் வழங்கியுள்ள மறுப்புரைகள் தான் இந்த விடயத்தை அறிவுபூர்வமாக அணுகிய அனைவருக்கும் அடிப்படையாக அமைந்துள்ளன. தனது நூலான அல்-இன்திஸாரில், சுமார் பன்னிரண்டு பக்கங்கள் அளவிலான தனியொரு தலைப்பில் அல்-பாகில்லானி தனது மறுப்புரையை முன்வைத்துள்ளார். அல்-குர்ஆனின் திட்டவட்டத்தன்மையைக் குலைப்பதே, இத்தகு சந்தேகங்களைக் கிளப்பியவர்களின் நோக்கம் எனக் கூறி, எழுப்பப் படும் ஐயங்கள் ஒவ்வொன்றுக்கும் தனது மறுப்புகளைக் காட்டிச் செல்கின்றார் அவர்.

ஆரம்பமாக, இப்னு மஸ்ஊத் அவர்களது சமூக அந்தஸ்த்து, அறிவுப் பின்புலம், என்பனவற்றின் பின்னணியில் காணும் போது, இந்த இரண்டு ஸூராக்களையும் அவர் மறுத்திருக்க எவ்வித வாய்ப்பும் இல்லை என்பது புலனாகின்றது. அவர் மூலம் இவ்வாறான ஒரு செய்தி வெளியாகியிருந்தால் நிச்சயம் அது பிரபல்யம் வாய்ந்ததாகவும் வரலாற்றில் பாரியதொரு நிகழ்வாகவும் கணிக்கப்பட்டிருக்கும். ஏனெனில் அல்-குர்ஆனில் இரண்டு ஸூராக்களை மறுத்தல் என்பது முஸ்லிம்கள் சாதாரணமாகக் கடந்து சென்றுவிடக் கூடிய ஒரு கருத்து வேறுபாடு அல்ல; நிச்சயமாக அது ஆஹாதான அறிவிப்புகள் ஊடாக மாத்திரம் வந்திருக்க மாட்டாது. கிளைச் சட்ட விவகாரங்கள் தொடர்பிலான இப்னு மஸ்ஊதின் கருத்துக்கள் கூட மிகப் பிரபல்யம் பெற்றுள்ளன. உதாரணமாக, தொழுகையில் கைகள் இரண்டையும் சேர்த்து முழுங்கால்களுக்கு இடையில் வைத்துக் கொள்வதை அவர் தடுத்தமை, வாரிசுரிமைச் சட்டங்களில் அவர் கொண்டிருந்த வேறுபட்ட நிலைப்பாடு முதலியன மிக்க பிரபல்யம் வாய்ந்தன.

ஸஹாபாக்களது காலத்தில் இவ்விரண்டு ஸூராக்கள் குறித்த அக்கருத்து இப்னு மஸ்ஊத் ஊடாக வெளிவந்திருப்பின் நிச்சயம் ஸஹாபாக்கள் அதனை மறுத்துரைத்திருப்பர். ஏனெனில் அன்றைய ஸஹாபாக்களும் இன்று வரையான அனைத்து முஸ்லிம்களும் இந்த ஸூராக்கள் அல்-குர்ஆனில் உள்ளவை என்பதில் ஒரே கருத்தினராகவே உள்ளனர். ஆக, இவ்விரண்டையும் மறுப்பது, அல்-குர்ஆனையே மறுப்பது போலாகும். இப்னு மஸ்ஊத் மீதான இந்த அறிவிப்பு இறை நிராகரிப்புக்குச் சமமானது எனக் கொண்டு அவருக்குத் தக்க தண்டனையை ஸஹாபாக்கள் ஆட்சியாளரிடம் கோரியிருப்பர். அவரது அல்-குர்ஆன் பிரதியைத் தன்னிடம் ஒப்படைக்காமைக்காக, உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு உடன்

தர்க்கம் புரிந்துள்ளார்கள். ஆனால் இது போன்ற ஒரு சந்தேகத்திற்காக அவ்வாறான தர்க்கம் ஏதும் நிகழ்ந்ததாக ஆதாரங்கள் இல்லை.

இப்னு மஸ்ஊதிடமிருந்து இவ்வாறான ஓர் அறிவிப்பு வந்திருந்தால், நிச்சயம் அவர் வாளுக்கு இரையாகியிருப்பார். ஏனெனில் அல்-குர்ஆனில் ஒரு வசனத்தை மறுப்பதும் ஸஹாபாக்களைப் பொறுத்து, இறை நிராகரிப்பாகும் என்பதே இஜ்மாவான நிலைப்பாடாகும். இரண்டு ஸூராக்களை மறுப்பவர் எப்படி தப்பிக் கொள்ளலாம்?

மேலும் தொடர்கின்றார் இமாம் பாகில்லானி. நபியவர்கள் காலத்திலும் அதற்குப் பின்னரும் அல்-குர்ஆனை ஓதி விளக்கம் சொல்பவர்களுள் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக இருந்திருக்கிறார் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு. அல்-குர்ஆனைப் பெற்றுக் கொள்வதற்குரியவர்களில் ஒருவராக நபிகளாரே, அவரை அடையாளப்படுத்தியும் இருக்கின்றார்கள். அதனால் தான் அவரிடமிருந்து குர்ஆனைக் கற்று, பிறருக்கு நகர்த்திய மாணவர்கள் பலர் உருவானார்கள். அவர்களுள், உபைத் அஸ்ஸல்மானி, மஸ்ரூக் இப்னு அல் அஜ்தஃ, அல்கமா இப்னு கைஸ், அம்ர் இப்னு ஷர்ஹபீல், அல்ஹாரிஸ் இப்னு கைஸ், அல்-அஸ்வத் இப்னு யஸீத் முதலானோர் மிகுந்த பிரபல்யம் பெற்றவர்களானார்கள்.. இவர்களுள் எவரிடமிருந்தும் இப்னு மஸ்ஊத் இவ்வாறான ஒரு கருத்தைக் கொண்டிருக்கின்றார் என்ற ஒரு செய்தி நேரடியாகவோ மறைமுகமாகவோ வந்ததில்லை. வரலாற்றாசிரியர்களும் அனைத்து அறிஞர்களும் இப்னு மஸ்ஊதின் மாணவர்கள் மூலம் அவ்வாறான ஒரு செய்தி நகர்த்தப்படவில்லை என்பதை ஐயந்திரிபற உறுதி செய்கின்றனர். இது இப்னு மஸ்ஊத் இந்த இரு ஸூராக்களையும் மறுக்கவில்லை என்பதற்குத் திட்டவட்டமான ஓர் ஆதாரமாகும்.

இப்னு மஸ்ஊத் மீதான இந்தக் குற்றச்சாட்டு ஆதார பூர்வமான சாட்சிகளின் அடிப்படையில் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்று எனக் கூறுவார் இமாம் பாகில்லானி. ஏனெனில் இந்த விவகாரம் அவர் மதம் மாறி விட்டார் எனக் கூறுவதற்கு ஒப்பானது. அதற்கான தண்டனை மரணமாகும். ஆக, இது போன்ற பாரதூரமான ஒரு விடயத்தை ஆஹாதான வடிவில் வந்துள்ள ஓர் அறிவிப்பைச் சாட்சியமாகக் கொண்டு தீர்மானிக்க முடியாது. ஒன்றில் அவரை 'முர்தத்' எனக் கூறி அவருக்கான தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். அல்லது அவருக்கு உரிய தண்டனை நிறைவேற்றப்படாமை காரணமாக முழு உம்மத்தும் வழிகேட்டில் இருக்கின்றது எனப் பிரகடனம் செய்ய வேண்டும். இரண்டுமே ஆஹாதான அறிவிப்புகளால் ஆகக் கூடியனவல்ல.

பின்னர் இப்னு மஸ்ஊதின் சிறப்புகள் பற்றிப் பேசுவார் இமாம் பாகில்லானி. அதில் பிரதானமாகக் குறிப்பிடுவார்: 'நபியவர்கள் கூறினார்கள்

அல்-குர்ஆன் இறங்கியதைப் போன்றே ஓத வேண்டும் என உங்களில் யாரும் விரும்புவாராயின், அவர் இப்னு மஸ்ஊதின் கிராஅத்தைப் பின்பற்றட்டும்.' இந்த ஹதீஸை இமாம் அஹ்மத் தனது முஸ்னதில் பதிவு செய்துள்ளார். இமாம் ஹாகிம், இப்னு மாஜா ஆகியோரின் தொகுப்புகளிலும் இமாம் ஸுயூதியின் பத்ஹுல் கபீரிலும் கண்டு கொள்ளலாம். அபூபக்ர், உமர் ரழியல்லாஹு அன்ஹுமா மூலமாக அறிவிக்கப் பெற்றது இது.

தொடர்ந்து, ஸிர் இப்னு ஹுபைஸ் ஊடாக வந்த அறிவிப்புகளுக்கு மாற்றமான ஸஹீஹ் ஹதீஸ்களைக் கொண்டு வரும் இமாம் பாகில்லானி அவற்றின ஆதாரபூர்வத் தன்மையை நிறுவுகிறார். பினனர் இப்னு மஸ்ஊதின் மாணவர்கள், இவையிரண்டும் குர்ஆனுள் அடங்கியவை எனக் கூறும் அறிவிப்புகளைக் கொண்டு வருகின்றார். உதாரணமாக, இப்றாஹீம் குறிப்பிடுகின்றார்: 'நான் அஸ்வதிடம் இவையிரண்டும் குர்ஆனில் உள்ளவையா எனக் கேட்டேன். ஸூரா பலக், அந்நாஸ் ஆகியவையா என அவர் கேட்டார். நான் ஆம் என்றேன். அவர் ஆம், இரண்டும் அல்-குர்ஆனில் உள்ளவை என்றார்.' இதேபோன்றதோர் அறிவிப்பு இமாம் ஷஅபி ஊடாகவும் பதியப் பெற்றுள்ளது.

'நீங்கள் சொல்வது சரியென்றாலும் கூட, இந்த இரண்டு ஸூராக்களையும் பொறுத்தமட்டில் ஏதேனும் ஒரு விடயம் நடந்திருக்க வேண்டும். அதனால் தான் ஏனைய ஸூராக்களைப் போலல்லாது இவையிரண்டையும் பற்றி இவ்வளவு அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. இப்னு மஸ்ஊத்துடன் இவ்விடயம் சம்பந்தப்படுவதற்கும் அவருடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் நிகழ்ந்திருக்கவும் கூடும்' எனவும் சிலர் வினவக் கூடும்.

இந்த விடயத்தையும் எதிர் கொள்வார் இமாம் பாகில்லானி. இதில் இரண்டு விடயங்கள் பேசப்பட்டுள்ளன. முதலாவது, நபியவர்கள் ஹஸன், ஹுஸைன் ஆகியோருக்காகவும் தனக்காகவும் சில பாதுகாப்பு துஆக்களை ஓதி வந்துள்ளார்கள். இந்த இரு ஸூராக்களும் இறங்கியதும் இவற்றை மாத்திரமே பாதுகாப்பு துஆவாகப் பயன்படுத்தினார்கள். இதனால் ஸிர் இப்னு ஹுபைஸ் போன்றோர் இவையிரண்டும் பாதுகாப்பு துஆக்கள் மாத்திரமே எனக் கருதலாயினர். இப்னு மஸ்ஊத் இவற்றைத் தனது அல்-குர்ஆன் பிரதியில் பதிவு செய்யாது விட்டமை இந்த எண்ணத்துக்கு மேலும் வலுவூட்டியது. இதன் காரணமாகத் தான் ஸிர் இப்னு ஹுபைஸ் நேரடியாகவே உபை இப்னு கஃபிடம் கேட்டுள்ளார். அவர் வழங்கிய பதில் மூலம் இந்த இரண்டு ஸூராக்கள் பற்றிய ஈடுபாடு குன்றி விட்டது.

இரண்டாவது, இந்த விடயம் ஏனையவர்களைத் தவிர்த்து இப்னு மஸ்ஊதுடன் மாத்திரம் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளமை அவரது குர்ஆன் பிரதி காரணமாகவே. முஸ்லிம்கள் இந்த இரு ஸூராக்களையும்

பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் தனது அல்-குர்ஆன் பிரதியில் அவற்றை எழுதாது விட்டுள்ளார். காலையிலும் மாலையிலும் இவற்றை ஓதிவருமாறு முஸ்லிம்கள் ஏவப்பட்டிருந்தார்கள்; அதன் அடிப்படையில் அவை ஸூரா பாதிஹாவுக்கு நிகரானதென அவர் கொண்டிருந்தார்.

இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில்ிர் இப்னு ஹுபைஸ் ஊடாக வந்த அறிவிப்புகள் தவிர இவை குறித்து யாரும் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை.

தடம் புரண்டவர்களும் இறை நிராகரிப்பாளர்களும் அல்-குர்ஆனிலும் எமது முன்னோரிலும் குறை காண முனைவோரும் தான் இவை போன்ற அறிவிப்புகளில் ஈடுபாடு கொண்டு, இவற்றை எடுத்துப் பரப்பி தமது நோக்கங்களை அடைந்து கொள்ள முற்பட்டோர். ஆனால் இவை மூலம் அவர்களது நோக்கங்கள் கைகூடப் போவதில்லை. இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு கூறியதாகச் சொல்லப் படும் 'அவையிரண்டும் குர்ஆனில் இல்லை', 'அல்-குர்ஆனில் இல்லாத ஒன்றை அதனுடன் கலக்க வேண்டாம்' போன்ற கூற்றுகள் அன்னாருடன் சம்பந்தப்பட்டனவல்ல என்பது தெளிவு. என்றாலும் இந்த அறிவிப்புகள் ஸஹீஹானவை என நாம் கருதினால் வேறு ஒரு வகையிலும் இதற்கு விளக்கமளிக்கக் கூடும். அதாவது, இவற்றை அறிவித்தோர் தாமாகவே அன்னாருடன் இவற்றைத் தொடர்புபடுத்தவில்லை; அன்னாரிடம் இருந்தே இந்த வார்த்தைகளைக் கேட்டிருப்பார்கள்; ஆனால் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு இந்த வார்த்தைகள் மூலம் நாடிய கருத்தினைத் தவறாக விளங்கியிருப்பார்கள். அவர் இதன் மூலம் இந்த ஸூராக்களைக் குறிக்காதிருக்க முடியும்; இந்த ஸூராக்கள் பற்றிய ஒரு சர்ச்சை இருந்ததனால் இப்னு மஸ்ஊத் இவற்றைத் தான குறித்திருப்பார் எனக் கொண்டு இவ்வறிவிப்புகளைச் செய்தவர்கள் விளக்கம் கூறியிருக்கவும் வாய்ப்புகள் இல்லாமலில்லை.

எனவே இவை போன்ற அறிவிப்புகளை வைத்துக் கொண்டு அல்-குர்ஆனின் திட்டவட்டத் தன்மையையோ, ஸஹாபாக்களின் நேர்மையையோ ஐயத்துக்குள்ளாக்க இயலாது.

இது போலவே இமாம் அல்காழி அல்பாகில்லானி, கவாரிஜ்களின் மைமூனிய்யாப் பிரிவினர் ஸூரா யூஸுபை மறுத்தமை, ராபிழாக்களில் தீவிரமானோர், அல்-குர்ஆனில் இருந்து அஹ்லுல் பைத்கள் தொடர்பான வசனங்கள் நீக்கப்பட்டுள்ளன என்ற வாதத்தை முன்வைத்தமை என்பன குறித்த தனது மறுப்புரைகளை முன்வைத்துள்ளார். அவை பற்றி நாம் இங்கு விரிவாகப் பேசவில்லை. அல்லாஹ் நாடினால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

மேலே நாம் கண்ட அனைத்து நியாயப்படுத்தல்களையும் தவிர்த்துப் பார்த்தாலும் இந்த ஸூராக்கள் உட்பட அல்-குர்ஆனின் எல்லா ஸூராக்கள், வசனங்கள், சொற்கள், எழுத்துகள் என அனைத்தினதும் பாதுகாப்பையும் புனிதத் தன்மையையும் உறுதிப்படுத்துவது அல்-குர்ஆனின் பாதுகாப்புக்காக அல்லாஹ் அளிக்கும் உத்தரவாதமாகும்.

إِنَّا نَحنُ نَزَّلنَا الذِّكرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ - الحجر: ٩

**“நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.” (ஹிஜ்ர் 15:9)**

மற்றோர் இடத்தில் குர்ஆன் கூறுகின்றது:

لا تُحَرِّك بِهِ لِسانَكَ لِتَعجَلَ بِهِ إِنَّ عَلَينا جَمعَهُ وَقُرآنَهُ - القيامة: ١٦ - ١٧

**“(நபியே!) அவசரப்பட்டு அதற்காக (குர்ஆனை ஓதுவதற்காக) உம் நாவை அசைக்காதீர். நிச்சயமாக அதனை (குர்ஆனை) ஒன்று சேர்ப்பதும் (நீர்) அதை ஓதும்படிச் செய்வதும் நம் மீதே உள்ளன.” (கியாமா 75:16–17)**

பிறிதோரிடத்தில்,

وَلا تَعجَل بِالقُرآنِ مِن قَبلِ أَن يُقضى إِلَيكَ وَحيُهُ - طه: ١١٤

**“...இன்னும் (நபியே!) உமக்கு (குர்ஆனின்) வஹீ அறிவிக்கப்பட்டு அது முடிவதற்கு முன்னதாகவே குர்ஆனை ஓத நீர் அவசரப்படாதீர்...” (தாஹா 20:114)**

எனக் குர்ஆன் கூறுகின்றது.

இதுவரை நாம் கண்டுள்ள குழப்பமான சிந்தனைகளை நாம் மீண்டும் மீண்டும் அடுத்தடுத்த பரம்பரையினர்க்கு மீட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. எழுந்து நிற்க முடியாத அளவு ஆதாரங்களற்ற சிந்தனைகள் இவை. அவ்வவற்றின் தொட்டில்களிலேயே அவற்றை அடக்கம் செய்துவிடவது தான் சாலப் பொருந்தும். ‘குப்ரை நகர்த்துகின்றவர் காபிராக மாட்டார்’ என்ற அவர்களது எண்ணங்களும் அறிவிப்பாளர் வரிசைகள் மீது பாரிய நம்பிக்கை வைத்து செயற்படும் அணுகுமுறைகளுமே எம்மை இந்த இடத்துக்குக் கொண்டு வந்துள்ளன.

எந்த ஒரு சக்தியாலும் முறியடிக்க முடியாத சவால் ஒன்றினை அல்-குர்ஆன் விடுத்திருக்கின்றது. அற்புதமான மொழி நடையும் கட்டமைப்பும் கொண்டதாக விளங்கும் அது விடுத்திருக்கும் சவால் ஒன்று மட்டுமே ஏனைய அனைத்தையும் விட அதன் பாதுகாப்புக்குப்

போதுமானது. அல்-குர்ஆனின் ஒவ்வொரு ஸூராவிலும் வசனத்திலும் சொல்லிலும் இந்த அற்புதம் மிளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு நாம் வியப்பில் ஆழ்ந்திருக்கின்றோம்.

'நஸ்க்' எனும் ரத்துச் செய்தல் மூன்று வகையானது. வசனம் ரத்துச் செய்யப்பட்டு சட்டம் ரத்துச் செய்யப்படாமல் இருத்தல்; சட்டம் ரத்துச் செய்யப்பட்டு வசனம் ரத்துச் செய்யப்படாமல் இருத்தல்; சட்டம், வசனம் இரண்டும் ரத்துச் செய்யப்படுதல்.

நஸ்க் பற்றிய விடயத்தை நாம் நன்கு ஆராய்ந்து, அல்-குர்ஆனில் நஸ்க் ஏதும் நிகழவில்லை என்ற முடிவுக்கே வந்திருக்கின்றோம். நஸ்க் நிகழ்ந்துள்ளது என்ற கருத்தை முன்வைப்போர், ஆதாரங்களின் மத்தியில் ஒன்றை விடவும் மற்றையதைப் பலம் பொருந்தியதாக கருதும் வகையில் ஏற்றத் தாழ்வுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படுகின்றன எனக் கூறுகின்றனர். இதனால் இரண்டில் ஒன்று தவிர்க்க முடியாதது என அவர்கள் கருதுவர். முதலாவது ஒன்றை விடவும் மற்றையது பலமானது எனக் காட்டும் 'தர்ஜீஹ்'; மற்றது ரத்துச் செய்தல் எனும் 'நஸ்க்'. இதற்குப் புனித வசனங்களுள் காலத்தால் முந்தியவை, பிந்தியவை என்ற பாகுபாடு ஒரு காரணம். மற்றது குர்ஆனீய வாசகங்களுள் திட்டவட்டமான கருத்தைத் தருவன; திட்டவட்டமற்ற கருத்தைக் குறிப்பன எனப் பிரித்துக் காணுதல் மற்றொரு காரணம். 'ரத்துச் செய்யப்பட்டுள்ளது' எனக் கூறுவதில் சற்றே இலகுபடுத்தல் அணுகுமுறையும் ஒன்றியிருக்கின்றது.

ஆதாரங்களுக்கிடையில் அல்லது இரண்டு வசனங்களுக்கிடையில் இருப்பதாகக் கருதப் படும் முரண்பாட்டை நீக்கிக் காணும் வகையில் அவற்றை விளங்கிக் கொள்ள அறிஞர்களால் இயலாது போனமை; நஸ்க் பற்றிய கோட்பாட்டுண்மைகளில் ஒவ்வொரு சிந்தனைப் பள்ளியினரும் கொண்டிருந்த வேறுபட்ட நிலைப்பாடுகள் முதலியன காரணமாகவே பெரும்பாலான அறிஞர்கள், நஸ்க் என்பது உண்மையானது, சரியானது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இது பற்றி நாம் விரிவானதொரு நூலை எழுதியுள்ளோம். அதில் ஒன்றை ரத்துச் செய்யும் அளவுக்கு எந்த வசனங்கள் மத்தியிலும் அல்லது ஆதாரங்கள் மத்தியிலும் எவ்வித முரண்பாடுகளும் இல்லையென்பதை நிறுவியுள்ளோம். 'நஹ்வ மௌகிபின் குர்ஆனிய்யின் மினன் நஸ்' எனும் எமது நூலை நீங்கள் வாசிப்பது நல்லது.

முஹ்கம், முதஷாபிஹ் எனும் இருவகை வசனங்கள் தொடர்பில், அல்-குர்ஆனியக் கலைகள் பற்றி எழுதிய பலர் பேசியுள்ளனர். முஹ்கம் என்பது பொருள் புரியக் கூடிய தெளிவான வசனங்கள்; முதஷாபிஹ் என்பது தெளிவற்ற, விளக்கம் அவசியப் படும் அல்லது பொருள் புரிந்து கொள்ளப்படாத போது இடைநிறுத்தி வைக்கப்படுவதற்குரிய வசனங்கள். அல்-குர்ஆனை நாம் ஆரம்பம் முதல் கடைசி வரை படித்துப் பார்த்துள்ளோம்.

அதன் வசனங்கள் அனைத்துமே எப்பொழுதும் தெளிவாகவும் பிரகாசம் மிக்கவையாகவும் உள்ளங்களை ஆறுதல்படுத்துவனவாகவும் எவ்வித மயக்கமோ குழப்பமோ அற்றனவாகவுமே காணப்படுகின்றன. அது தன்னிலேயே தெளிவானது; முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பது; புரிந்து கொள்வதற்கு இலகுவானது. அல்-குர்ஆனியக் கலைகள் என்ற பெயரில் பொதுப்படையாகச் சொல்லப்பட்டுள்ள பல விடயங்கள் உண்மையில் மனித, ஜின் இனங்களின் ஷைத்தான்களால் உருவாக்கப்பட்டுள்ள சந்தேகங்களேயன்றி வேறில்லை. இவையெல்லாம், அல்-குர்ஆன் இறங்கிய வடிவிலேயே நாம் அதனை விளங்கிக் கொள்ளத் தடை விதிப்பனவாகவே அமைந்துள்ளன. மேலும் அதன் சில பகுதிகளைச் செயலிழக்கச் செய்யவும் சில பகுதிகள் மூலம் மற்றும் சில பகுதிகளை மறுத்துரைக்கவுமே இவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

இமாம் பாகில்லானியுடைய அல்இன்திஸார் எனும் நூல், அவரது காலம் வரையில் அல்-குர்ஆன் பற்றி எழுப்பப்பட்ட பல்வேறு சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதாக அமைந்துள்ளது. வியப்பு மேலிடச் செய்வன அவரது மறுப்புரைகள். நபியவர்களின் காலம் முதல் தான் மரணித்த ஹி. 403 வரையான காலம் ஈறாக அல்-குர்ஆன் பற்றி எழுப்பப்பெற்ற அத்துணை சந்தேகங்களையும் வேருடன் பிடுங்கி எறிந்திருக்கின்றார் அவர். எமது அடுத்த பரம்பரைகள் அவரது நூலை அல்லது அவரது நூலுக்கு இமாம் ஸைரபீ எழுதிய சுருக்கவுரையைப் படிப்பது நல்லது. இன்று அல்-குர்ஆன் பற்றி முன்வைக்கப் படும் அதிகமான சந்தேகங்களைக் கொண்டு வருபவர்கள், தாம் புதுப்புது விடயங்களைக் கொண்டு வருவதாகத் தான் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உண்மை அவ்வாறல்ல.

இல்முல் கலாம் சிந்தனை அல்-குர்ஆனை விட்டும் வெகு தூரமாகவே கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. அது அல்-குர்ஆனை நோக்கி மீண்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. உண்மையில் இல்முல் கலாமில் தான் கட்டமைத்ததொரு சிந்தனையை வலுப்படுத்திக் கொள்ளத் தேவையான ஆதாரங்களை ஈட்டிக் கெர்ள்ளவே அது மீண்டு வந்துள்ளமையைக் காணலாம். ஏனெனில் அல்-குர்ஆன் வாசிப்பில் நிகழ்ந்த மிகப்பெரும் தவறு, அதனைப் பகுதி பகுதியாக வாசித்தமையாகும். இன்று வரையில் இதே போக்குத் தான் தொடர்கின்றது. இதுவே, தாம் எடுத்துக் கொண்ட முடிவுகளுக்குச் சாதகமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரம் குர்ஆனைப் பயன்படுத்திக் கொள்ளும் கட்டத்துக்கு அவர்களை இட்டுச் சென்றது.

அல்-குர்ஆன் கூறுகின்றது:

قُل يا أَهلَ الكِتابِ تَعالَوا إِلى كَلِمَةٍ سَواءٍ بَينَنا وَبَينَكُم أَلّا نَعبُدَ إِلَّا اللَّهَ وَلا نُشرِكَ بِهِ شَيئًا وَلا يَتَّخِذَ بَعضُنا بَعضًا أَربابًا مِن دونِ اللَّهِ فَإِن تَوَلَّوا فَقولُوا اشهَدوا بِأَنّا مُسلِمونَ - آل عمران: ٦٤

“(நபியே! அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்! (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுள்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம் எனக் கூறும். (மு:ஃமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால் நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள் என்று நீங்கள் கூறிவிடுங்கள்.” **(ஆல இம்ரான் 3:64)**

மேலும் பல இடங்களில் குர்ஆன் கூறுவனவற்றை நாம் சற்றே கண்டு செல்வோம்:

قُلِ اللَّهُمَّ فاطِرَ السَّماواتِ وَالأَرضِ عالِمَ الغَيبِ وَالشَّهادَةِ أَنتَ تَحكُمُ بَينَ عِبادِكَ في ما كانوا فيهِ يَختَلِفونَ - الزمر: ٤٦

“அல்லாஹ்வே! வானங்களையும் பூமியையும் படைத்தவனே! மறைவானவற்றையும் பகிரங்கமானவற்றையும் அறிபவனே! உன் அடியார்கள் வேறுபட்டு(த் தமக்கிடையே தர்க்கித்து)க் கொண்டிருக்கும் விஷயத்தில் நீ தான் தீர்ப்புச் செய்வாய் என்று (நபியே!) நீர் கூறுவீராக!” **(ஸுமர் 39:46)**

وَمَا اختَلَفتُم فيهِ مِن شَيءٍ فَحُكمُهُ إِلَى اللَّهِ ذلِكُمُ اللَّهُ رَبّي عَلَيهِ تَوَكَّلتُ وَإِلَيهِ أُنيبُ - الشورى: ١٠

“நீங்கள் எந்த விஷயத்தில் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறீர்களோ, அதன் தீர்ப்பு அல்லாஹ்விடமே இருக்கிறது. அ(த்தகைய தீர்ப்பு வழங்குப)வன் தான் அல்லாஹ் என்னுடைய இறைவன்; அவன் மீதே நான் முற்றும் நம்பிக்கை வைக்கிறேன். அன்றியும் அவன் பக்கமே நான் திரும்புகிறேன்.” **(ஷூறா 42:10)**

إِنّا أَنزَلنا إِلَيكَ الكِتابَ بِالحَقِّ لِتَحكُمَ بَينَ النّاسِ بِما أَراكَ اللَّهُ وَلا تَكُن لِلخائِنينَ خَصيمًا - النساء: ١٠٥

“(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம்.

எனவே சதி மோசக்காரர்கள் சார்பில் வாதாடுபவராகி விடாதீர்." **(நிஸா 4:105)**

وَاتَّبِع ما يوحى إِلَيكَ وَاصبِر حَتّى يَحكُمَ اللَّهُ وَهُوَ خَيرُ الحاكِمينَ - يونس: ١٠٩

"(நபியே!) உங்களுக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதையே பின்பற்றி நடந்து கொள்வீராக! அல்லாஹ் தீர்ப்பளிக்கும் வரையில் பொறுமையாகவும் உறுதியாகவும் இருப்பீராக! அவனே தீர்ப்பளிப்பவர்களில் மிகவும் மேலானவன்." **(யூனுஸ் 10:109)**

ما تَعبُدونَ مِن دونِهِ إِلّا أَسماءً سَمَّيتُموها أَنتُم وَآباؤُكُم ما أَنزَلَ اللَّهُ بِها مِن سُلطانٍ إِنِ الحُكمُ إِلّا لِلَّهِ أَمَرَ أَلّا تَعبُدوا إِلّا إِيّاهُ ذلِكَ الدّينُ القَيِّمُ وَلكِنَّ أَكثَرَ النّاسِ لا يَعلَمونَ - يوسف: ٤٠

"அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை யாவும் நீங்கள் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை. அவற்றுக்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை. அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவர்க்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கின்றான். இதுவே நேரான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை." **(யூஸுஃப் 12:40)**

தொடர்ந்து சொல்கின்றது:

وَقالَ يا بَنِيَّ لا تَدخُلوا مِن بابٍ واحِدٍ وَادخُلوا مِن أَبوابٍ مُتَفَرِّقَةٍ وَما أُغني عَنكُم مِنَ اللَّهِ مِن شَيءٍ إِنِ الحُكمُ إِلّا لِلَّهِ عَلَيهِ تَوَكَّلتُ وَعَلَيهِ فَليَتَوَكَّلِ المُتَوَكِّلونَ - يوسف: ٦٧

"(பின்னும்) அவர், என் (அருமை) மக்களே! நீங்கள் (மிஸ்ருக்குள்) ஒரே வாசல் வழியாக நுழையாதீர்கள்; வெவ்வேறு வாசல்களின் வழியாக நுழையுங்கள். அல்லாஹ்வின் விதிகளில் யாதொன்றையும் நான் உங்களை விட்டுத் தடுத்து விட முடியாது. (ஏனென்றால்) அதிகாரமெல்லாம் அல்லாஹ்வுக்கேயன்றி (வேறு எவருக்கும்) இல்லை. அவன் மீதே நான் முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளேன். எனவே, முழுமையாக நம்பிக்கை வைப்பவர்கள் அவன் மீதே முழு நம்பிக்கை வைப்பார்களாக! என்று கூறினார்." **(யூஸுஃப் 12:67)**

அல்-குர்ஆன் மேலும் கூறுகின்றது:

قُل إِنّي عَلى بَيِّنَةٍ مِن رَبّي وَكَذَّبتُم بِهِ ما عِندي ما تَستَعجِلونَ بِهِ إِنِ الحُكمُ إِلّا لِلَّهِ يَقُصُّ الحَقَّ وَهُوَ خَيرُ الفاصِلينَ - الأنعام: ٥٧

**“பின்னும் நீர் கூறும்: நான் என்னுடைய ரப்பின் தெளிவான அத்தாட்சியின் மீதே இருக்கின்றேன். ஆனால் நீங்களோ அதைப் பொய்ப்பிக்கின்றீர்கள். நீங்கள் எதற்கு அவசரப்படுகின்றீர்களோ அ(வ்வேதனையான)து என் அதிகாரத்தில் இல்லை. அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்விடமேயன்றி வேறில்லை. சத்தியத்தையே அவன் கூறுகின்றான். தீர்ப்பு வழங்குவதில் அவனே மிகவும் மேலானவனாக இருக்கிறான்.” (அன்ஆம் 6:57)**

ثُمَّ رُدّوا إِلَى اللَّهِ مَولاهُمُ الحَقِّ أَلا لَهُ الحُكمُ وَهُوَ أَسرَعُ الحاسِبينَ - الأنعام: ٦٢

**“பின்னர் அவர்கள் தங்களின் உண்மையான பாதுகாவலனான அல்லாஹ்விடம் கொண்டு வரப்படுவார்கள். (அப்போது தீர்ப்புக் கூறும்) அதிகாரம் அவனுக்கே உண்டு என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். அவன் கணக்கு வாங்குவதில் மிகவும் விரைவானவன்.” (அன்ஆம் 6:62)**

قُل يا أَيُّهَا النّاسُ قَد جاءَكُمُ الحَقُّ مِن رَبِّكُم فَمَنِ اهتَدى فَإِنَّما يَهتَدي لِنَفسِهِ وَمَن ضَلَّ فَإِنَّما يَضِلُّ عَلَيها وَما أَنا عَلَيكُم بِوَكيلٍ - يونس: ١٠٨

**“(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களே நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு சத்திய( வேத)ம் வந்து விட்டது. எனவே யார் (அதைப் பின்பற்றி) நேரான வழியில் செல்கிறாரோ அவர் தம் நன்மைக்காகவே அந்நேர்வழியில் செல்கின்றார். எவர் (அதை ஏற்க மறுத்து) வழி தவறினாரோ, நிச்சயமாக அவர் தமக்குக் கேடான வழியிலே செல்கிறார். நான் (உங்களைக் கட்டாயப்படுத்தி) உங்கள் காரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவனல்லன்.” (யூனுஸ் 10:108)**

இந்த வசனங்கள் தான் எவ்வளவு தெளிவானவை. இல்முல் கலாம் சிந்தனையை வழிபிறழ்விலிருந்து பாதுகாக்க இவற்றால் நிச்சயம் முடிந்திருக்கும். அல்-குர்ஆனை அதன் முழுமையான கட்டமைப்பு வடிவில் வாசித்திருப்பின், இல்முல் கலாமினால் ஆன குறைபாடுகளைத் தவிர்த்திருக்க முடியும். முன்னமே நாம் குறிப்பிட்டது போல், துண்டாடல் வாசிப்பு அணுகுமுறை தான் இல்முல் கலாம் சிந்தனையைப் பாதித்துள்ள பிரதான காரணியாகும். அதன் கிளைகளாகத் தான் ஏனைய கோட்பாட்டியல் கோளாறுகள் அனைத்தும் எழுகின்றன. அல்-குர்ஆன் முழுமையானது;

ஒன்றன் மீது ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது;[(6)] ஒன்றோடொன்று இணைந்தும்

(6) அல்-குர்ஆன் ஒருமுகக் கட்டமைப்பைக் கொண்டது என்பதன் பொருள்: அல்-குர்ஆனை அல்லாஹ்வே ஒவ்வொரு சொல், சொல்லாக உருவாக்கியிருக்கின்றான்; அந்த சொற்கள் இணைந்து தான் நீதியான, உண்மையான வடிவில் அல்-குர்ஆன் முழுமை பெற்றிருக்கிறது. இதில் ஒரு வார்த்தையையும் மாற்றவோ திரிபுபடுத்தவோ எந்தப் படைப்புக்கும் முடியாது. ஏனெனில் அவ்வாறு ஒரு வார்த்தையிலேனும் செய்யப்படுகின்ற ஒரு சிறிய மாற்றமும் அல்-குர்ஆனின் ஒழுங்கமைப்பில் அதன் ஓர்முகக் கட்டமைப்பில் பாதிப்பைக் கொண்டு வரக் கூடியதாகும். அல்-குர்ஆனின் மொழி, இலக்கியம், பிரயோகங்கள் அனைத்தும் ஒரே சீராக அமைய வேண்டும் என்பதனால் தான் அதில் மாற்றங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. நட்சத்திரத் தரிப்பிடங்கள் போன்று தான் ஒவ்வொரு ஸூராவிலும் வார்த்தைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அல்-குர்ஆன் கூறுகிறது: "நட்சத்திர தரிப்பிடங்களின் மீது நான் சத்தியம் செய்கிறேன். நீங்கள் அறிவீர்களாயின் நிச்சயமாக இது மகத்தான பிரமாணமாகும். நிச்சயமாக இது கண்ணியமிக்க குர்ஆனாகும். பாதுகாக்கப்பட்ட ஏட்டில் இது இருக்கிறது; தூய்மையானவர்கள் மாத்திரமே இதனைத் தொடுவார்கள். அகிலத்தாரின் இரட்சகனால் இது இறக்கப்பட்டது." **(வாகிஆ: 75–80)** மேலும் "அவசரமாக குர்ஆனை ஓதுவதற்காக உங்கள் நாவுகளை அசைக்காதீர்கள். நிச்சயமாக அதனை ஒன்று திரட்டுவதும் ஓதுவதும் எங்கள் பொறுப்பாகும். நாங்கள் அதனை ஓதினால் அதனைப் பின்பற்றி நீங்களும் ஓதுங்கள். பின்னர் அதனை விளக்குவதும் எங்கள் மீதே பொறுப்பாகும்" **(கியாமா: 16–19)** என்கின்றது. இந்த வசனங்கள், அல்-குர்ஆன் ஒன்றுதிரட்டப்பட்ட ஒழுங்கையும் ஓதப்பட்ட ஒழுங்கையும் விளக்கப்பட்ட ஒழுங்கையும் எங்களுக்குக் கூறுகின்றன. அல்லாஹு தஆலா அல்-குர்ஆனின் வார்த்தைகள், வசனங்கள், ஸூராக்கள் என அனைத்தையும் ஒரே கட்டமைப்பில் ஒழுங்குபடுத்துவதற்குரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டான். பின்னர் அந்தக் கட்டமைப்பிற்கு ஏற்ப அதனை ஓதுவதையும் அதற்கு ஏற்ப அதனை விளங்கிக் கொள்வதை இலகுபடுத்தியும் கொடுத்தான். அல்-குர்ஆனை அல்லாஹ் எதிர்பார்த்த அதற்குரிய கட்டமைப்பிலும் ஒழுங்கிலும் நின்று தான் விளங்கிக் கொள்ள முடியும். எனவே அதே ஒழுங்கில் அதனை ஓதுகின்ற பொழுது தான், அதன் இரகசியங்களை நாம் வெளிக் கொண்டு வர முடியும். அந்த வகையில் துண்டாடல் வாசிப்பு அணுகுமுறையானது அல்-குர்ஆனின் அடிப்படைக் கட்டமைப்புக்கு முரணானது. இவ்வகை வாசிப்பு, அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரத்தை இல்லாமல் செய்துவிடும்.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில், அல்-குர்ஆனின் தற்போது இருக்கும் ஒழுங்கமைப்பு, அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும்; அது ஸஹாபாக்களின் இஜ்திஹாதின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதல்ல; அவர்களது ஞாபகத்திற்கும் புரிதலுக்கும் விடப்பட்ட ஒன்று அல்ல. அவர்களுடைய பணி, அல்-குர்ஆனை ஒரு தனிப்பிரதியாய் பதிவு செய்தமை மாத்திரமேயாகும். அந்த வகையில் அல்-குர்ஆனின் சில வசனங்களில் வரிசை தொடர்பிலும் ஸூராக்களின் ஒழுங்கமைப்பு தொடர்பிலும்

பிணைந்தும் அமைந்தது. ஒன்று மற்றொன்றை உண்மைப்படுத்துவது. அதன் முழுமையான வடிவில் தான் நாம் அதனை விளங்க வேண்டும். இல்முல் கலாம் சிந்தனை மூலம் முஸ்லிம் உம்மாவில் விளைந்த சிதைவுகளைச் சீர்செய்வதற்குரிய ஒரே வழி இது மட்டுமே.

அல்-குர்ஆன் அனைத்தையும் தெளிவுபடுத்துவது. சட்ட உருவாக்க மூலாதாரம் அதுவே. ஸுன்னா அதனை விளங்கப்படுத்தும் மூலாதாரம். அதாவது, அல்-குர்ஆனீய வழிகாட்டல்களைச் செயற்படுத்துவது எவ்வாறு எனக் காட்டும் பிரயோக ரீதியான மூலாதாரமாக ஸுன்னா அமைகின்றது. சிலர் கூறுவது போல, அல்-குர்ஆனின் மயக்கங்களையும் குழப்பங்களையும் தெளிவுபடுத்தும் மூலாதாரமல்ல. அல்-குர்ஆன் தான் ஏனைய அனைத்தையும் மிகைத்ததும் கட்டுப்படுத்துவதும். இதற்கு மறுதலையான விளைக்கங்களை நாம் அளித்தல் தகாது.

ஸுன்னா தனித்து சட்டம் இயற்றும் தகுதி கொண்டதா? என்ற ஒரு வாதம் சட்டவியலாளர் மத்தியல் இருந்து வருகின்றது. சிலர் தனித்து சட்டம் இயற்றும் என்றனர்; சிலர் இயற்றாது என்றனர். ஸுன்னா தனித்து சட்டவாக்கத்தை மேற்கொள்ளும் என்ற வாதம் ஆரம்பித்து வைக்கப் பட்டதைத் தொடர்ந்து தான் அல்-குர்ஆன், ஸுன்னாவுடன் மேலும் பல மூலாதாரங்கள் இணைக்கப்படுவதற்கான வாயில் திறக்கப்பட்டது. தொடர்ந்து அறிவியலுக்கொவ்வாத பல கூற்றுகள் இணைந்து கொண்டன. 'இறை வசனங்கள் முற்றுப் பெற்றவை; நிகழ்வுகள் முற்றுப் பெறாதவை',

---

ஸஹாபாக்களது கருத்து வேறுபாடுகள் பற்றி வந்துள்ள அறிவிப்புகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. அது போல அல்-குர்ஆனின் வசனங்களுக்கான இந்த வரிசை ஒழுங்கானது. அதில் சில வசனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்ற கருத்தையும் மறுதலிக்கின்றது. அதில் வசனம் நீக்கப்பட்டாலும் சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது என்ற நிலையையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் அல்-குர்ஆனை ஓதுவதன் பின்னர் தான் விளக்கம் வருகிறது. அல்-குர்ஆனில் அதன் கட்டமைப்பின் பிரகாரம் ஓதப்படாத ஒன்று, அதில் இல்லை என்று தான் கருதப் படும். அது போல், சட்டம் நீக்கப்பட்டு வசனம் எஞ்சியிருக்கின்றது என்ற நிலையும் ஏற்கப்பட மாட்டாது. ஏனெனில் இது அல்-குர்ஆனில் ஓதப் படும் ஒரு வசனத்தைச் செயலிழக்கச் செய்யும் செயற்பாடு. ஓதப் படும் ஒன்றுக்கு நிச்சயமாக ஒரு பொருள் இருக்க வேண்டும்; இல்லாத போது கருத்தின்றிப் பேசுவதாக அது அமைந்துவிடும். எதனையும் நோக்கத்துடன் செய்யும் அல்லாஹ்வுக்கு அது பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகும். இதற்கு மாற்றமாக வந்துள்ள அறிவிப்புகள் எதுவும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது; அவை அஹ்லுஸ் ஸுன்னாக்களின் மூல நூல்களில் இருந்தாலும் அல்லது ஷீயாக்களின் மூல நூல்களில் இருந்தாலும் அல்லது வேறு எந்த மூல நூல்களில் இருந்தாலும் ஏற்கப்பட மாட்டாது.

'அல்-குர்ஆன் பல்பொருள் இடம்பாட்டுக்குரியது' முதலான பல கருத்துகள் மேலும் பல மூலாதாரங்களுக்கான வாயிலை அகலத் திறந்து விட்டன. சுமார் ஐம்பது மூலாதாரங்கள் அளவு இதனால் தோற்றம் பெற்றன.

இவை போன்ற மேலும் பல விடயங்கள் அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மை குறித்த தாக்கத்தை முஸ்லிம்களின் சிந்தனையில் ஏற்படுத்தியுள்ளன.

## ஐந்தாவது: பல்வேறு இஸ்லாமிய சிந்தனைப் பள்ளிகள் அல்-குர்ஆனை மூலாதாரமாகக் கொண்டிருந்தமை

அல்-குர்ஆன் சட்ட உருவாக்கத்தின் மூலாதாரமாக இருக்கின்றது. சட்டத்தை முதலில் தோற்றுவிப்பது குர்ஆனாகும்; அதனை ஆள்வதும் அல்-குர்ஆனாகும்; அதனைப் பாதுகாப்பதும் குர்ஆனாகும். முஸ்லிம் உம்மத்தின் நம்பிக்கையில் மிகத் தெளிவாக அமைந்தது இது. அதிலும் குறிப்பாக அறிஞர்கள் இதில் தெளிவாக இருந்தார்கள். என்றாலும் கூட அவர்கள் கிளைச் சட்ட விவகாரங்களின் ஆய்வின் போதோ, பத்வாக்கள் வழங்கும் போதோ இந்த உண்மைக்குப் போதிய முக்கியத்துவத்தை வழங்காது விட்டார்கள். சட்ட விவகாரங்களின் அடிப்படைகளாக இருந்தாலும் கிளைகளாக இருந்தாலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த உண்மையின் அடிப்படையில் செயற்படுவதே கட்டாயமானது என்பதை உணர்த்த விரும்புகின்றோம். அவ்வாறு நடந்திருந்தால், இஸ்லாமிய பிக்ஹில், பிக்ஹுல் இப்திராழி எனும் முன்னூகித்தல் முறை, அல்ஹியல் எனும் சட்டத்தந்திரம், அதிகரித்த கிளைச் சட்ட ஈடுபாட்டுப் போக்கு முதலான பல தவறுகள் நடைபெற வாய்ப்பு இருந்திருக்காது. அல்-குர்ஆனுக்கும் சட்டவியலுக்கும் இடையிலான தொடர்பு அறுபட்டடதன் விளைவே அவை.

பல்வேறு சிந்தனைப் பிரிவுகளின் அறிஞர்களிடத்திலும் அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்க மூலாதாரம் என்ற கருத்தே அடிப்படையில் இருந்திருக்கின்றது என்பதற்கும் சில உதாரணங்களை நாம் அடுத்து முன்வைக்கவுள்ளோம். ஆனால், அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இடையிலான உறவை ஒரு படிநிலை உறவாகப் புரிந்து கொண்டமையின் காரணமாக, அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்க மூலாதாரம் என்ற சிந்தனையின் செயற்பரப்பு அவர்களிடத்தில் மிகவும் குறுகி விட்டது. அதாவது குறித்த ஒரு கிளைச் சட்டத்திற்கான ஆதாரத்தை அல்-குர்ஆனில் கண்டு கொள்ளாத போது, பகரமாக அடுத்து செல்வதற்குரிய இடம் தான் ஸுன்னா என்று புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. உண்மையில் நிகழ வேண்டியது அதுவல்ல. ஏனைய மூலாதாரங்களில் கிளைச் சட்ட ஆதாரங்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏற்படும் போது

அவை அல்-குர்ஆனிடத்திலேயே கொண்டு வரப்பட வேண்டும். அவற்றின் தர்க்கங்களை ஏற்பதா, விடுவதா என்பது அல்-குர்ஆனின் தீர்ப்பிலேயே இருக்கின்றது.

அல்-குர்ஆன் சட்டவாக்க அதிகாரம் கொண்டது என்பதன் பொருள், ஒவ்வொரு கிளை விவகாரத்திற்குமான ஓர் அடிப்படை அல்-குர்ஆனில் இருக்கிறது என்பதாகும். எனவே அல்-குர்ஆனை நோக்கிச் சென்று, அவ்வடிப்படைகளைக் கண்டுபிடித்து, அவற்றின் அடிப்படையிலேயே கிளைச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

ما فَرَّطنا فِي الكِتابِ مِن شَيءٍ - الأنعام: ٣٨

**“...(இவற்றில்) எதையும் (நம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை...” (அன்ஆம் 6:38)**

وَنَزَّلنا عَلَيكَ الكِتابَ تِبيانًا لِكُلِّ شَيءٍ وَهُدًى وَرَحمَةً وَبُشرى لِلمُسلِمينَ - النحل: ٨٩

**“...இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும் நேர்வழி காட்டியாகவும் ரஹ்மத்தாகவும் முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.” (நஹ்ல் 16:89)**

ஆதாரம் ஒன்றினைத் தேடி அல்-குர்ஆனை அணுகுவதற்கு முன்னர் வேறு ஒன்றை அணுகுகின்றோம் எனின், அல்-குர்ஆன் இது குறித்து ஏதும் குறிப்பிடவில்லை என்றோ குர்ஆன் போதுமானதல்ல என்றோ நாம் குறை காண்பதாகவே அமையும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

أَوَلَم يَكفِهِم أَنّا أَنزَلنا عَلَيكَ الكِتابَ - العنكبوت: ٥١

**“...இவ்வேதத்தை நாம் உம் மீது இறக்கியிருக்கிறோம் என்பது அவர்களுக்குப் போதாதா? ...” (அன்கபூத் 29:51)**

எனவே ஒரு சட்டவியலாளர் பிற மூலாதாரங்களிலிருந்து கண்டு கொள்ளும் ஒரு தீர்வு, அல்-குர்ஆனினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டுவதும் அதற்கான ஓர் அடிப்படை அதில் இருப்பதும் அவசியமாகும். அல்லாது போனால், அல்லாஹ் இறக்கி வைக்காதவற்றைப் பயன்படுத்திக் கூறப்பட்ட தீர்வாகவே அது அமையும். ஏனெனில் அல்-குர்ஆன் மாத்திரமே சட்ட உருவாக்கத்துக்கான மூலாதாரமாக இருக்கின்றது.

என்றாலும் கூட, ஒவ்வொரு சிந்தனைப் பிரிவிலும் மத்ஹபிலும் ஹதீஸின் சட்ட மூலாதாரத் தன்மை, சட்ட அதிகாரம் என்பன குறித்த கருத்தாடல்கள் தொடரவே செய்கின்றன. அல்-குர்ஆனைச்

செயற்படுத்துவதற்கான நபியவர்களது வாழ்க்கை முறை என்ற ரீதியில் அவற்றைக் கட்டியெழுப்புவதில் எவ்வித தவறும் இல்லை. இது விடயம் குறித்துத் தான் நாம் சற்று உரையாட உள்ளோம். மத்ஹபுகளின் எல்லாக் கருத்துக்களையும் இங்கு கொண்டு வருவதோ, கொண்டு வரும் கருத்துகளை விரிவாக அணுகுவதோ எமது நோக்கமல்ல. அவை மூலமாக நாம் மேற்கண்ட விடயத்தை வெளிக் கொண்டு வருவது மாத்திரமே எமது நோக்கம்.

### *1.* இபாழிய்யாக்கள்

அபூ உபைதா முஸ்லிம் இப்னு அபீ கரிமா (பஸ்ராவில் வாழ்ந்த, இபாழிய்யாக்களின் இரண்டாவது இமாம்) அவர்களது மஸாஇல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது: 'ஒரு முஸ்லிமை வழிநடாத்தக் கூடியது அல்-குர்ஆனாகும். அதனை அடைந்து கொள்ளும் வழியாகவே நபிகளாரின் ஸுன்னா காணப்படுகின்றது. எனவே அல்லாஹ்வும் நபியவர்களும் விரும்புவதை மாத்திரமே முஸ்லிமும் விரும்ப வேண்டும்.'

இப்னு பரகா அல் ஓமானி அல்பஹ்லவி, தனது அல்ஜாமிஃ எனும் நூலில் கூறுவார்: 'ஷரீஆத் சட்டங்கள் அனைத்தும் ஒரே வழியூடாக, ஒரே அடிப்படையில் இருந்தே பெறப்பட்டிருக்கின்றன. அது தான் அல்-குர்ஆன் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

اتَّبِعوا ما أُنزِلَ إِلَيكُم مِن رَبِّكُم وَلا تَتَّبِعوا مِن دونِهِ أَولِياءَ قَليلًا ما تَذَكَّرونَ - الأعراف: ٣

**"(மனிதர்களே!) உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு இறக்கப்பட்டதைப் பின்பற்றுங்கள். அவனையன்றி (வேறெவரையும்) பாதுகாவலர்(களாக்கிக் கொண்டு அவர்)களை பின்பற்றாதீர்கள். நீங்கள் சொற்பமாகவே நல்லுணர்வு பெறுகிறீர்கள்." (அஃராப் 7:3)**

ஸுன்னாவும் அல்-குர்ஆனில் இருந்தே பெறப்பட்டதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَأَطيعُوا اللَّهَ وَأَطيعُوا الرَّسولَ - المائده: ٩٢

**"இன்னும் அல்லாஹ்வுக்கும் வழிபடுங்கள்; (அவன்) தூதருக்கும் கட்டுப் படுங்கள்." (மாஇதா 5:92)**

ஸுன்னா அல்-குர்ஆனின் செயல் வடிவமாகும். அதனால் தான் அதனைப் பின்பற்றுவது கடமையாகின்றது. இஜ்மா என்பதும் அல்-குர்ஆனையும் அதன் செயல் வடிவமாக இருக்கும் ஸுன்னாவையும் செயற்படுத்துவதாகும். ஸுன்னா இருவகைப் படும். முதலாவது உடன்பாடான நிலைப்பாடு உள்ளவை. ஆகவே இதில், அவை

ஸஹீஹானவையா அல்லவா என்ற தேடல் அவசியமில்லை. இரண்டாவது, கருத்து வேறுபாடு உள்ளவை. திட்டவட்டத் தரத்தை அடையாதவை. இவை ஸஹீஹானவையா, அல்லவா என்ற விவாதம் மக்கள் மத்தியில் இருக்கும். அதனால் அவற்றின் ஆதாரபூர்வத் தன்மையை உறுதிப்படுத்த அறிவிப்பாளர் வரிசை பற்றிய தேடல்கள் உருவாகும். அறிவிப்பாளர் வரிசை ஆதாரபூர்வமானது என்றிருப்பினும் அவை பற்றிய விளக்கங்களில் முரண்பாடுகள் தோன்றும். இந்த முரண்பாடுகளின் போது, அவற்றைத் தீர்க்கக் குர்ஆனை நோக்கி மீள்வது அவசியமாகும்.

இபாழிய்யா மத்ஹபினுள் வாக்கிய வாதத்திற்கு மாற்றமாக பகுத்தறிவு வாதப் போக்கை ஆதரித்த அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸ், தனது மாணவரான அபூ காஸிம் அல் குராஸானியிடம், விபச்சாரத்தில் ஈடுபட்டவர் சம்பந்தப்பட்ட பெண்ணையே திருமணம் செய்வதை அனுமதித்தோரை மறுதலித்துப் பேசும் போது கூறுவார்: 'நீங்கள் மனிதர்களது அறிவிப்புகளை ஏற்றுப் பின்பற்றுகிறீர்கள். அவர்கள் இந்த விடயத்தில் அல்-குர்ஆனை விட்டு விட்டு கருத்துகளின் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அல்-குர்ஆன் விபச்சாரத்தில் ஈடுபட்டவர்களைத் திருமணம் செய்வதைத் தடுத்துள்ளது. அல்-குர்ஆனை ஒதுக்கி விட்டு 'அறிவிப்பு'களைப் பின்பற்றுகின்ற உங்களைப் போன்ற ஒரு சமூகத்தை நான் பார்த்தில்லை'.

### 2. ஸைதியாக்கள்

இமாம் முர்தழா முஹம்மத் இப்னு யஹ்யா அல்-ஹாதி (மறைவு ஹி. 310) கூறுவார்: 'ஸுன்னா என்பது அல்-குர்ஆனுக்கு உடன்பாடானவையாகும். அதனுடன் முரண்படுபவை நபியவர்கள் மீது உரைக்கப்பட்ட பொய்களாகும். ஸுன்னா, அல்-குர்ஆனின் சுருக்கமானவற்றை விளங்கப்படுத்துவது.' ஸுன்னா என்பது அல்-குர்ஆனுக்கான, நபியவர்களது செயற்பாட்டு வாழ்க்கை முறைமை என இதனை அவர் சொல்லியிருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்.

இவரிடம் விடுக்கப்பட்ட ஒரு வினாவுக்கு விடையளிக்கும் போது இமாம் முர்தழா கூறினார்: 'நாம் பதில் தந்த அனைத்து விடயங்களையும் நீங்கள் அல்-குர்ஆனில் காணலாம் அல்லது உடன்பாடான நபியவர்களது ஸுன்னாவில் காணலாம். அல்லது அல்-குர்ஆன் அத்தாட்சிப்படுத்திய பகுத்தறிவு ஆதாரத்தில் காணலாம். இந்த வழியூடாகச் சொல்லப் படும் அனைத்து செய்திகளும் மிக்க ஆதாரபூர்வமானவையாகும். உள்ளத்திற்கு ஒளியூட்டுவதாகும்.' இவர் ஆதாரபூர்வமானது எனக் கருதுவது அல்-குர்ஆனாக, ஸுன்னாவாக அல்லது குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்ட இஜ்மாவாக இருக்க வேண்டும். அன்னார் இதனைத் தனது நூல்களிலும் கட்டுரைகளிலும் பலபட வற்புறுத்தியுள்ளார்.

இது குறித்து அப்துல்லாஹ் இப்னு ஹஸனின் மஸாஇல்களிலும் சில குறிப்புகள் காணக் கிடைக்கின்றன: *'அறிந்து கொள்ளுங்கள். நபியவர்களிடமிருந்து ஸஹீஹான வழியில் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்கள் அனைத்தும் அல்-குர்ஆனுக்கு முரண்பட மாட்டா. அதாவது, அவை உண்மையானவை என்பதை அல்-குர்ஆனே உறுதிப்படுத்தும். இதனைத் தான் நபியவர்களின் மேல்வரும் ஹதீஸ் உணர்த்துகின்றது. எனக்கு முன்பு வாழ்ந்த நபிமார்கள் பற்றிப் போலியாக இட்டுக் கட்டப்பட்டது போல என்னைப் பற்றியும் இட்டுக் கட்டல்கள் வரும்; நான் சொல்வதாக வருகின்ற அனைத்தையும் நீங்கள் அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்; அல்-குர்ஆனுடன் உடன்பட்டால் அவை என்னிடமிருந்து வந்தவை; அவற்றை நான் தான் சொல்லியிருப்பேன்; முரண்பட்டால் அவை என்னிடமிருந்து வரவில்லை; அவற்றை நான் சொல்லவில்லை.'*

ஸாரிமுத்தீன் இப்றாஹீம் இப்னு முஹம்மத் அல்வஸீர் (மறைவு ஹி. 914) கூறுகின்றார்: *'அல்-குர்ஆனைப் பொறுத்தவரை, அதனைத் திரிபுகளில் இருந்தும் மாற்றங்களில் இருந்தும் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் எடுத்துக் கொண்டுள்ளான்... மார்க்கத்தில் நிராகரிப்பாளர்கள் இருப்பதில் பிரச்சினையில்லை... அல்-குர்ஆனை மாற்றியமைப்பதற்கு எந்த ஒரு வழியையும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை... அதன் பொருள் புரியக் கூடிய வசனங்கள் தெளிவாக இருக்கின்றன. பொருள் புரிவது சிரமமான வசனங்களுக்கு அறிவில் ஆழமானவர்கள் விளக்கம் சொல்வார்கள். அதனால் தான் நபியவர்கள் அல்-குர்ஆனை நோக்கியே எப்பொழுதும் மீளுமாறும் ஹதீஸின் உண்மைத் தன்மையை அறிய அல்-குர்ஆனுடன் பொருத்திப் பார்க்குமாறும் கட்டளையிட்டிருக்கின்றார்கள்!*

எவ்வாறாயினும் கருத்து வேறுபாடுள்ள, ஆஹாதான ஹதீஸ்கள் மட்டுமே அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டு விளங்கிக் கொள்ளப்பட வேண்டுவன என்பது இவர்களது நிலைப்பாடு, இவர்கள் கூறுவார்கள்: *'கருத்து வேறுபாடுள்ள ஹதீஸ்களில் அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டு விளங்குதல் என்ற விதியைப் பிரயோகியுங்கள்; அல்-குர்ஆன் தான் கருத்து வேறுபாட்டின் போது நாம் மீள்வதற்குரிய இடம்.'*

### *3. இமாமிய்யாக்கள்*

'இமாமிய்யாக்களிடம் அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மை' குறித்து நாம் சற்று விரிவாகப் பார்க்க வேண்டும். அதனைச் சுற்றிச் சில மயக்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக, ஹிஜ்ரி பதினொன்று முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் 'அறிவிப்பு'கள் சார் சிந்தனைப் பள்ளியின் ஆதிக்கமே மிகுந்திருந்ததால் அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மை பற்றிய சிந்தனைகள் செயலிழந்திருந்தன. அல்-குர்ஆனை மாத்திரமன்றி ஹதீஸ்களையும் யாரும் நேரடியாக அணுக

முடியாது இமாம்கள் ஊடாக மாத்திரமே அணுகலாம் என்றே இவர்கள் கூறினர். முஹம்மத் அமீன் அல்-இஸ்திராபாதி (மறைவு ஹி. 1036) தனது அல்-பவாயித் அல்-மதனிய்யா எனும் நூலில் கூறுவார்: 'அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் நேரடிக் கருத்தில் இருந்து நாம் சட்டங்களைப் பெற்றுக் கொள்வது சாத்தியமில்லை; அறிஞர்களான இமாம்கள் ஊடாகவே அதனைச் செய்ய வேண்டும். ஏனெனில், பொது மக்களது அறிவுக்கு எட்டாத வடிவிலேயே அல்-குர்ஆன் இறங்கியுள்ளது; அது இறக்கப்பட்டது இமாம்களது அறிவு மட்டத்திலேயே'. இவர் மூலாதாரம் என்பதை அஹ்லுல் பைத்களின் கருத்துகளுடன் மட்டுப்படுத்திக் கொண்டுள்ளார். தொடர்ந்தும் அவர் கூறுவார்: 'அல்-குர்ஆனிலும் ஹதீஸிலும் உள்ள வரையறைக்குட்பட்ட, வரையறைக்குட்படாத, இரத்துச் செய்யப்பட்ட, இரத்துச் செய்யப்படாத வசனங்கள்பற்றிய விளக்கங்களை இமாம்கள் ஊடாக மாத்திரமே அறிந்து கொள்ள முடியும். எனவே அவர்களது விளக்கங்களுடன் மட்டுப்படுத்திக் கொள்வது கட்டாயமாகின்றது'.

அறிவிப்புகள் சார் பிரிவினரும் ஒரே வகையினரல்லர். அவர்களுள் அல்-குர்ஆனின் வெளிப்படையான கருத்தை ஆதாரமாகக் கொள்வோரும் ஆஹாதான அறிவிப்புகளை ஆதாரமாகக் கொள்வோரும் இருந்தார்கள். ஆனால் நாம் தேடுகின்ற வகையினரைக் கண்டு கொள்ள முடிந்தது சட்டவியலாளர்களுக்குள்ளேயே. அவர்கள் தான் அறிவிப்புகள் சார் சிந்தனைப் பள்ளியின் ஊடாக அல்-குர்ஆனின் ஆதாரபூர்வத் தன்மை முடக்கப்படுவதை எதிர்த்தவர்கள்; ஸுன்னாவின் துணையின்றி அல்-குர்ஆன் தனித்த ஒரு மூலாதாரமாகச் செயற்படும் என்பது வெளிப்படையான ஓர் உண்மை என விளம்பியவர்கள். இதற்கு அல்-குர்ஆனே ஆதாரமாக இருக்கின்றது. மேலும் இமாம்களிடமிருந்து வந்துள்ள பல அறிவிப்புகளில், 'ஹதீஸ்களை அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டுப்புரிந்து கொள்ள வேண்டும்; அதனுடன் உடன்பாடானவை ஏற்கப் படும்; முரண்படுபவை மறுக்கப் படும்' எனக் கூறப்பட்டுள்ளதையும் தமக்குரிய ஓர் ஆதாரமாகக் கொண்டனர். இவற்றுடன் ஷெய்க் ஜஃபர் அல்-ஜனாஹி (மறைவு ஹி. 1228) கூறுவார்: 'அல்-குர்ஆனின் அற்புதத் தன்மைக்கும் அதனைத் தனித்து ஆதாரமாகக் கொள்வதற்கும் இடையில் தொடர்பிருக்கின்றது; அல்-குர்ஆனை விளங்க முடியவில்லை என்றால், அதைப் போல் ஒன்றைக் கொண்டு வரும்படி அல்-குர்ஆனே அறபுகளுக்குச் சவால் விட்டதில் அர்த்தமில்லாமல் போய்விடும்; அது வெறுமனே பொருள் புரியாத மந்திரங்கள் போன்று தான் இருந்திருக்கும்.'

இனி நாம் அல்-குர்ஆனின் மூலாதாரத்தன்மை குறித்து இமாமிய்யத் பிரிவின் மூத்த சில அறிஞர்கள், அதிலும் குறிப்பாக சட்டவியல் வல்லுனர்கள் முன்வைத்துள்ள கருத்துகள் தொடர்பில் சற்றே கவனம் செலுத்துவோம். ஆஹாதான அறிவிப்புகள் திட்டவட்டமானவையல்ல

என்ற வகையில் அவற்றின் ஆதாரபூர்வத் தன்மையை மறுக்கும் அஷ்ஷரிப் அல்முர்தழா (மறைவு ஹி. 436) கூறுவார்: 'முதலில் அல்-குர்ஆனின் ஆதாரத்தைப் பின்பற்ற வேண்டும். பின்னர் திட்டவட்டமான ஸுன்னா ஆதாரத்தைப் பின்பற்ற வேண்டும். இவையிரண்டும் இல்லாத வேளை இஜ்மாவை நாட வேண்டும். (இஜ்மா என்பதன் மூலம் முர்தழா நாடுவது குறித்த ஒரு சட்டத்தின் மீதான இமாமீக்களின் உடன்பாடாகும்.) உடன்பாடான ஒரு நிலைப்பாடு இல்லாமல், இமாமீக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன என்றால், அல்-குர்ஆனை நோக்கியே நாம் மீள வேண்டும். இல்லாவிடின் நாம் பகுத்தறிவையோ தெரிவுச் சுதந்திரத்தையோ நாட வேண்டி வரும்.'

அல்-குர்ஆனுக்குப் பகுத்தறிவு விளக்கம் சொல்லக் கூடாது என வந்துள்ள அறிவிப்புகள் அனைத்துக்கும் தனது அத்திப்யான் எனும் தப்ஸீரில் மாற்று விளக்கம் கூறுவார் அபூ ஜ·.பர் அத்தூஸி. அந்த விளக்கங்களைச் சரி கண்ட அபூ அலி அத்திப்ரிஸி (மறைவு ஹி. 548) அவற்றைத் தனது மஜ்மஉல் பயான் எனும் தப்ஸீரில் கொண்டு வருகின்றார். அவர் கூறுகின்றார்: 'அல்லாஹுٴ தஆலா, அல்-குர்ஆனில் இருந்து சிந்தனைகளை வெளிக் கொண்டு வரும் அறிவியல் தொழிற்பாட்டை நன்மையான செயலாக அமைத்துள்ளான். அதற்கான வழியையும் காட்டித் தந்துள்ளான்.' அல்-குர்ஆன் கூறுகின்றது:

لَعَلِمَهُ الَّذِينَ يَسْتَنبِطُونَهُ مِنْهُمْ - النساء: ٨٣

**"...அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக் கூடியவர்கள், அதை நன்கு விசாரித்தறிந்து (தக்க ஏற்பாடுகளைச் செய்து) கொள்வார்கள்..." (நிஸா 4:83)**

மறுபுறம் அல்-குர்ஆனை ஆராயாமல் சிந்தனையை முடக்கி வைத்திருப்பவர்களை அல்-குர்ஆன் கண்டிக்கின்றது. அல்-குர்ஆன் இறக்கப்பட்டதும் அறபு மொழியிலேயே:

إِنَّا جَعَلْنَاهُ قُرْآنًا عَرَبِيًّا لَعَلَّكُمْ تَعْقِلُونَ - الزخرف: ٣

**"நீங்கள் அறிந்து கொள்வதற்காக இதனை நாம் அறபி மொழி குர்ஆனாக நிச்சயமாக ஆக்கியிருக்கிறோம்." (ஸுக்ருப்: 43:3)**

நபியவர்கள் கூறினார்கள்: 'என்னைப் பற்றிய ஒரு செய்தி உங்களிடம் வந்தால் அதனை அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அதனுடன் உடன்படுவனவற்றை ஏற்று நடவுங்கள். முரண்படுபவற்றை வீசி எறிந்து விடுங்கள்.' அல்-குர்ஆன் தனித்து ஓர் ஆதாரமாக இருப்பது மாத்திரமன்றி ஸுன்னாவும் அதனுடன் ஒப்பு நோக்கி சரி காணப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. அல்-குர்ஆன் பொருள் புரிந்து

கொள்ளப்பட முடியாதது என்றால் ஸுன்னாவை அதனுடன் எவ்வாறு ஒப்பு நோக்குவது?

இந்த ஆதாரங்களில் இருந்து, அல்-குர்ஆனுக்குப் பகுத்தறிவு விளக்கம் சொல்ல முடியாது என்ற அறிவிப்புகளின் வெளிப்படைக் கருத்தை நாம் ஏற்க முடியாது என்பது தெளிவாகும். இந்த அறிவிப்புகள் ஸஹீஹானவை என்றே நாம் வைத்துக் கொள்வோம். அவற்றின் பொருள் ஒருவர் அல்-குர்ஆனுக்குப் பகுத்தறிவு விளக்கம் சொல்லி, அதனைச் செயற்படுத்தாத பொழுது, அவரது விளக்கம் சரியாக இருப்பினும் அவர் தவறு செய்துவிட்டதாகவே கருதப் படும் என்பதாகும்.

ஹதீஸ்களை அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டுக் காண வேண்டும் என்பதற்கு இமாமிய்யாக்களிடம் வழங்கும் சில ஆதாரபூர்வமான அறிவிப்புகளை அடுத்து நோக்குவோம். நபிகளார் கூறியதாக அபூ அப்தில்லாஹ் கூறுவார்: 'ஒவ்வொரு சத்தியத்திலும் ஓர் உண்மை இருக்கின்றது. ஒவ்வொரு சரியானவற்றிலும் ஓர் ஒளி இருக்கிறது. அல்-குர்ஆனுடன் உடன்பட்டு வருபவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்; முரண்படுபவற்றை விட்டுவிடுங்கள்.' மற்றோர் அறிவிப்பில் அபூ அப்தில்லாஹ் ஊடாக அய்யூப் இப்னு ராஷித் அறிவிக்கின்றார்: 'அல்-குர்ஆனுடன் உடன்பட்டு வராத ஹதீஸ், வெளியில் அழகையும் அகத்தில் போலியையும் வைத்திருக்கும் வெறும் வார்த்தை ஜாலமாகும்.' அய்யூப் இப்னு அல்ஹர் ஊடான மற்றோர் அறிவிப்பில், 'அபூ அப்தில்லாஹ் சொல்ல நான் கேட்டேன்: அனைத்து விடயங்களும் அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் நோக்கியே மீள வேண்டும். அல்-குர்ஆனுடன் உடன்படாத அனைத்து ஹதீஸ்களும் வெளியில் அழகையும் அகத்தில் போலியையும் வைத்திருக்கும் வெறும் வார்த்தை ஜாலமாகும்.'

மேற்கண்ட ஹதீஸ்களுக்கு மாஸன் தராணி விளக்கம் அளிப்பார். இவர் அறிவிப்புகள் சார் பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர். 'இந்த ஹதீஸ், அல்-குர்ஆன் தான் அனைத்து உண்மைகளினதும் சத்தியங்களினதும் அடிப்படை என்பதைச் சுட்டுகின்றது; அல்-குர்ஆனின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டனவற்றை ஏற்று நடக்க வேண்டும்; முரண்படுபவற்றை விட்டு விட வேண்டும்; உடன்படுகிறதா, முரண்படுகிறதா எனத் தெளிவற்றவை இடைநிறுத்தி வைக்கப்பட வேண்டும்.' அறிவிப்புகள் சார் பாரம்பர்யத்தை உடையவர்கள், தனது அடிப்படைக் கருத்தை விட்டுக் கொடுப்பவர்கள் அல்லர். மாஸன் தராணி மேலும் கூறுவார்: 'ஆனால் ஒரு ஹதீஸ் அல்-குர்ஆனுடன் உடன்படவில்லை எனும் போது, அது சிக்கலானதாக அல்லது எம்மால் இயலாததான ஒன்றாகவும் இருக்க முடியும். ஏனெனில் அல்-குர்ஆனுக்கு வெளிப்படையான விளக்கங்கள் இருப்பது போல, பாவங்கள் மன்னிக்கப்பட்ட இமாம்கள்

மாத்திரமே அறிய முடியுமான, அகமிய கருத்துகளும் இரகசியங்களும் இருக்கின்றன.'

*4. அஹ்லுஸ் ஸுன்னாக்கள்*

இமாம் ஷாபிஈ அவர்கள், தனது ரிஸாலா எனும் நூலில், அல்-குர்ஆனில் நேரடியாகச் சட்ட வசனங்கள் கிட்டாத விவகாரங்களில் நபிகளாரின் ஸுன்னாவை அணுகுவது எப்படி என்பது குறித்துப் பேசுவார்: 'நபியவர்களது எந்த ஒரு ஸுன்னாவுக்கும் அல்-குர்ஆனில் ஓர் அடிப்படை இருக்கின்றது. உதாரணமாக தொழுகையின் எண்ணிக்கை, மற்றும் வடிவத்தை ஸுன்னா விளக்கி வைத்தது. தொழுகை வாஜிபானது என்ற அல்-குர்ஆனிய அடிப்படை மீதே இது அமைந்திருக்கின்றது. அது போலவே வியாபாரம் பற்றிய ஸுன்னாவின் சட்டங்கள், அல்-குர்ஆனின்,

وَلا تَأكُلوا أَموالَكُم بَينَكُم بِالباطِلِ - البقرة: ١٨٨

**"...அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள்..." (பகரா 2:188)**

وَأَحَلَّ اللَّهُ البَيعَ وَحَرَّمَ الرِّبا - البقرة: ٢٧٥

**"...அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்..." (பகரா 2:275)**

முதலான அடிப்படைகள் மீதே அமைந்துள்ளன. ஹலாலாக்கப்பட்டவற்றிலும் ஹராமாக்கப்பட்டவற்றிலும் தொழுகையிலும் அல்லாஹ்விடமிருந்து பெற்றதை நபிகளார் விளக்கியிருக்கின்றார்கள்.'

'ஸுன்னா என்பது கருத்தளவில் அல்-குர்ஆனையே சார்ந்திருக்கின்றது; அதற்கான விளக்கமாகவே உள்ளது' என்பார் இமாம் ஷாதிபி. இது குறித்துப் பேசும் போது அவர் கூறவார்: 'ஸுன்னாவின் எந்தவொரு கட்டளையாக இருந்தாலும் அதன் கருத்தை அல்-குர்ஆனில் சுருக்கமாகவோ, விரிவாகவோ காணலாம். அல்-குர்ஆன் தான் ஷரீஆவின் மொத்தத் தத்துவம் என்றும் அதன் பிரதான ஊற்று என்றும் வருகின்ற அனைத்தும் இதற்கும் ஆதாரமாக அமைகின்றன. ஏனெனில் அல்லாஹு தஆலா, அல்-குர்ஆனை, அனைத்தையும் விளக்கக் கூடியதாக இறக்கி வைத்துள்ளான். அந்த வகையில் ஸுன்னாவும் இந்த மொத்தத் தத்துவத்தில் உள்ளடங்குவது அவசியம். இந்தக் கருத்தில் தான்,

ما فَرَّطنا فِي الكِتابِ مِن شَيءٍ - الأنعام: ٣٨

**"...(இவற்றில்) எதையும் (நம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை..." (அன்ஆம் 6:38)**

என வருகின்றது. எனவே ஸுன்னா அல்-குர்ஆனில் உள்ளடங்குவதுடன் அதற்கு விளக்கமாகவும் அமைகின்றது. ஸுன்னா அல்-குர்ஆனை நோக்கி மீள்கிறது என்பதன் பொருள் இது தான். அல்-இஸ்திக்ரா எனும் அனைத்துக் கிளைச் சட்டங்களின் மீதான வாசிப்பின் அடிப்படையில் பெறப் படும் முடிவும் இதனை உறுதிப்படுத்துகின்றது.' பின்னர் இமாம் ஷாதிபி, ஸுன்னாவை அல்-குர்ஆனுடன் ஒப்பிட்டு விளங்கிக் கொள்ள வேண்டும்; இல்லாத போது அதனை ஏற்றுக் கொள்வதை இடை நிறுத்தி வைக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை முன்வைத்து எதிர்தரப்பு வாதங்களை மறுத்துரைப்பார். இது தான் அல்முவாபகாத் எனும் அவரது நூலின் அடிப்படைச் சிந்தனையாகும்.

மேற்குறித்த கருத்துகளை நோக்கும் போது அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்க மூலாதாரம் என்ற சிந்தனை ஷரீஆக் கலைகளின் செயற்பாட்டாளர்கள் மத்தியில் கருக் கொண்டிருந்தமை புலனாகின்றது. ஆனால் முழுமையானதொரு கோட்பாடாய் அது வளர்வதற்கான பாதை திறக்கப் பெறவில்லை. 'இறை வசனங்கள் முற்றுப் பெற்றவை; நிகழ்வுகள் முற்றுப் பெறாதவை' என்ற சிந்தனை அதன் பாதையை அடைத்து விட்டது. அத்துடன் பல்வேறு மத்ஹப் முரண்பாடுகள் அத்துடன் இணைந்து கொண்டன. இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் தோன்றிய தலைமைத்துவம் பற்றிய முரண்பாடு இதில் பிரதானமானது.

அடுத்து, இல்முல் கலாம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் மற்றொரு விளைவு, முரண்பாடுகளுக்கு அகீதா வடிவம் கொடுக்கப்பட்டமையாகும். அதனால், ஈமான் அல்லது குப்ர் என்ற பிரிகோட்டைத் தீர்மானிப்பதாய் மாறிவிட்டன அந்த முரண்பாடுகள். இவற்றுக்கும் மேலாக, ஒவ்வொரு மத்ஹபுக்குள்ளேயும் வாக்கிய வாதிகளுக்கும் பகுத்தறிவு வாதிகளுக்கும் இடையில் முடிவுறாது தொடர்ந்து வந்த வாதாட்டங்களும் இணைந்து இதன் வளர்ச்சியைப் பின் தள்ளி விட்டன. அந்த இடத்தை நிரப்பின, அறிவிப்புகளும் பகுத்தறிவும். இவை அனைத்தினதும் கூட்டு இணைப்புத் தான் அல்-குர்ஆனின் சட்ட அதிகாரத்துக்குத் தடையாய் அமைந்தது. விளைவாக மத்ஹபுகளும் தக்லீதும் வெறியுணர்வுமே மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்தன.

எனவே எமது பாரம்பர்ய அறிவுக் கலைகள் அலை மோதும் இந்த கடலில் அல்-குர்ஆனின் அதிகாரத்தை உத்தரவாதப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மறுபுறம் எமது பாரம்பர்ய அறிவுக் கலைகளும் குழு சார்பு கொண்டனவாகவே இருக்கின்றன. அவை தனித்து அல்-குர்ஆனிய மூலாதாரத்தின் மீது கட்டமைக்கப்படவும் இல்லை.

எனவே அவை முழு உம்மத்தையும் பிரதிபலிப்பனவாகவும் இல்லை.

இங்கு நாம் தனித்துவங்களையும் பன்மைத்துவத்தையும் மறுத்த ஒற்றைக் கலாச்சாரப் போக்கை வலியுறுத்துவதாய் யாரும் நினைத்துவிடக் கூடாது. பன்மைத்துவத்தை மறுப்பது அல்லாஹ்வின் பிரபஞ்ச விதியை மறுப்பதாகும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

يا أَيُّهَا النَّاسُ إِنّا خَلَقناكُم مِن ذَكَرٍ وَأُنثى وَجَعَلناكُم شُعوبًا وَقَبائِلَ لِتَعارَفوا إِنَّ أَكرَمَكُم عِندَ اللَّهِ أَتقاكُم إِنَّ اللَّهَ عَليمٌ خَبيرٌ - الحجرات: ١٣

**“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ. அவர் தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன். (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.” (ஹுஜுராத் 49:13)**

எமது நோக்கம் பரஸ்பரப் புரிந்துணர்வு ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும். இதன் மூலமே ‘பூமியை அபிவிருத்தி செய்தல்’ எனும் அமானிதத்தை நிறைவேற்றுவதில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட முடியும். அல்லாஹு தஆலா மு∴மின்களது உள்ளங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தியதாகவே குறிப்பிடுகின்றான்; ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியதாகக் குறிப்பிடவில்லை. ஏனெனில் இந்த ஒருமைப்பாடு என்பது, குறிப்பிட்ட பிரிவினர் மத்தியில் வேறுபாடுகள் ஏதும் அற்ற இரண்டறக் கலத்தலையே அல்லது ஒற்றைத் தன்மையையே வலியுறுத்துகின்றது. ஒற்றைத் தன்மை வலியுறுத்தப்படுவதானது, பல்வேறு இயல்பு நிலைத் தன்மைகளை இல்லாமலாக்கிவிடும். ஆனால் புரிந்துணர்வு என்பது, உடன்பாடுகளுக்கான சாத்தியப்பாடுகளை அதிகரிக்கச் செய்யும். அதாவது, நிற, மொழி, இன வேறுபாடுகள் அனைத்தையும் பன்முகத் தன்மைகளாக நோக்கி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுக்கும். மனித நாகரிக அபிவிருத்திப் பணியை மேற்கொள்ளவும் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான உடன்பாட்டை நிறைவேற்றவும் பூமியை அபிவிருத்தி செய்தல் என்ற அமானிதப் பொறுப்பைச் சாத்தியப்படுத்தவும் இந்தப் பரஸ்பரப் புரிந்துணர்வே அவசியமானதாகும். மனித சமூகங்கள் மத்தியிலான கூட்டு இலக்குகளை அடைந்து கொள்ள இந்த தனித்தன்மைகள் சரிவரப் பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் வேறுபாடுகளை இல்லாமல் செய்யவோ, அபகரிக்கவோ கூடாது. இதனை எவ்வாறு சாத்தியமாக்கலாம்?

1. கருத்து வேறுபாடான விவகாரங்களை அல்-குர்ஆனின் உயர் இலக்குகளுடன் இணைத்து நோக்க வேண்டும். அவை, ஏகத்துவம் தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி, உம்மத், த.்.வா முதலியன.(7) இவற்றின் மீதே, பூமியை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அல்-குர்ஆனிய உம்மத் எழுச்சி பெற முடியும்.

எமது பாதையை சீர் செய்வதற்கான மிகச் சிறந்த வழி முறை, செல்ல வேண்டிய இலக்கை சரியாக வரையறை செய்து கொள்வதாகும். அப்போது தான், மகாஸிதுகளுடன் சம்பந்தமில்லாத, அர்த்தமற்ற கருத்து வேறுபாடுகளில் இருந்து நாம் விடுபட முடியும். துருவ மயப்படுத்தல், தத்தமது தரப்பை நோக்கிப் பிறரை ஈர்க்க முற்படுதல், பரஸ்பர குற்றஞ்சாட்டல்கள், வரட்டு வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுதல் முதலான எந்தவித நன்மையும் பயவா விடயங்களில் இருந்து இந்த விவகாரங்களைப் பாதுகாக்க முடியும்.

இங்கு எமது நோக்கம் என்னவென்றால், இத்தகு கருத்து வேறுபாடான விவகாரங்களை அல்-குர்ஆனின் மகாஸிதுகளுடன் ஒப்பிட்டு, அந்த மகாஸிதுகளுக்கு முன்னால் அவற்றின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்த வேண்டும். பின்னர் அவை மனித அறிவுடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத, கட்புலனாகாத உலகத்துடன் மாத்திரம் சம்பந்தப்படுவதற்கு ஏற்ப ஒவ்வொன்றையும் பொருத்தமான இடத்தில் நிரல்படுத்த வேண்டும். மறைவான விவகாரங்கள் ஒவ்வொன்றும் உளத்தூய்மையை ஏற்படுத்துவதில் எந்தளவு பங்களிக்கின்றன, எந்தளவு அல்லாஹ்வின் ஏகத்துவத்தை வலியுறுத்துகின்றன, அதனடியாகப் பிறக்கும் அச்சம், எதிர்பார்ப்பு போன்ற பண்புகளை எந்தளவு வளர்க்கின்றன என்ற அடிப்படையிலேயே பார்க்க வேண்டும். இந்த

(7) அல்-குர்ஆனின் உயர் மகாஸிதுகள், சட்டங்களின் போது கருத்தில் கொள்ளப் படும் மனித நலன் சம்பந்தப்பட்ட ஏனைய மகாஸிதுகளை விடவும் வித்தியாசமானவை. மனித நலன் சம்பந்தப்பட்ட மகாஸிதுகள் தான் அத்தியாவசிய நிலை என்றும் தேவை நிலை என்றும் அழகு நிலை என்றும் பாகுபடுத்தப்படுகின்றன. இவற்றில் அத்தியாவசிய நிலையில் மார்க்கம், உயிர், அறிவு, வம்சம், செல்வம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் நோக்கமாக இருக்கிறது. ஆனால் அல்-குர்ஆனிய மகாஸிதுகள் என்பவை, வாழ்க்கையில் மனித நடத்தையுடன் சம்பந்தப்பட்டவை. மனிதன் தன்னுடனும் தனது இரட்சகனுடனும் இந்தப் பிரபஞ்சத்துடனும் ஏனைய படைப்புகளுடனும் சம்பந்தப்பட்ட அவனது உறவுகள் சம்பந்தப்பட்டவை. அல்-குர்ஆனின் ஒவ்வொரு அங்கத்தையும் தனித்தனியாக வாசிப்புக்குட்படுத்தியதன் பின்னர் அந்த மகாஸிதுகளை பின்வருமாறு அடையாளம் காண முடிந்தது. அவை ஏகத்துவம், தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி, உம்மத், த.்.வா என்பனவாகும்.

அளவு கோல்களைப் பேணாத எந்தத் தீர்வும் எந்த முரண்பாடும் வீணான ஒன்றாகவே கருதப் படும். அது போல் அல்லாஹ்வின் பண்புகளும் இந்த அடிப்பயிலேயே அணுகப்பட வேண்டும். இல்லையேல் இவற்றின் அடிப்படையிலான ஈமானின் விளைவு இல்லாது போய்விடும். அவ்வாறே கட்புலனாகும் உலகுக்கு எந்த விளைவையும் ஏற்படுத்தாத மறைவான விடயங்களுக்கு அகீதாவின் தரத்தை வழங்குவது பொருத்தமற்றது. மறுமையில் அல்லாஹ்வைக் காணுதல் என்ற விடயத்தை இதற்கோர் உதாரணமாகக் கொள்ளலாம்.

2. கருத்து வேறுபாடான விவகாரங்கள் இரு வகை வாசிப்புகளின் ஒளியில் அணுகப்படல் வேண்டும். ஒன்று வஹி மீதான வாசிப்பு. மற்றது பிரபஞ்சம் மீதான வாசிப்பு. இந்தக் கோட்பாடு எழுவது, அல்-குர்ஆனுக்கும் பிரபஞ்ச ஒழுங்குகளுக்கும் இடையில் இலக்கு மைய ஒத்திசைவு ஒன்று இருக்கின்றது என்றதன் அடிப்படையிலேயே.(8)

---

(8) அல்-குர்ஆனுக்கும் பிரபஞ்ச ஒழுங்குகளுக்கும் இடையிலான இலக்குமைய ஒத்திசைவு என்பதன் பொருள் என்னவெனின், அல்-குர்ஆனின் வார்த்தைகள், கருத்துகளைக் குறித்துக் காட்டுவது மூன்று வடிவில் அமைகின்றன. ஒன்று ஒத்துச் செல்லும் வடிவம். இரண்டு உள்ளடக்கும் வடிவம்; மூன்று கடைப்பிடிப்பு வடிவம். அல்-குர்ஆனின் இலக்குமைய ஒத்திசைவு, இவற்றில் ஒத்துச் செல்லும் வடிவின் ஊடாகவே நடைபெறுகிறது. இங்கு குறித்த சொல்லின் மொழியியல் வடிவம் முழுமையாக அதன் சிந்தனை வடிவத்துடனும் நடைமுறை வடிவத்துடனும் ஒத்துச் செல்வதாய்க் காணப் படும். அதாவது ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று வடிவங்கள் இருக்கின்றன. முதலாவது வார்த்தையின் மொழியியல் வடிவம், அது குறித்த சொல்லின் மொழி வடிவத்தைக் குறிக்கும். பெயர்ச் சொல் வடிவம் அல்லது வினைச் சொல் வடிவம் அல்லது வேறு ஏதேனும் ஒரு வடிவமாக இருக்கும். இரண்டாவது வார்த்தையின் சிந்தனை வடிவம். அதாவது, குறித்த வார்த்தையை உச்சரிக்கும் பொழுது சிந்தனையில் தோன்றும் வடிவத்தை இது குறிக்கும். மூன்றாவது, வார்த்தையின் நடைமுறை வடிவம்; அதாவது, நடைமுறையில் அந்த வார்த்தையின் வடிவம் எவ்வாறு இருக்கின்றது என்பதை இது குறிக்கும். அந்த வகையில் அல்-குர்ஆனின் பிரபஞ்சத்துடனான ஒத்திசைவு முழுமையானது. இலக்கு மையப்பட்டது. பிரபஞ்சத்தின் மொழியியல் வடிவம், சிந்தனை வடிவம், நடைமுறை வடிவம், அனைத்தையும் ஆளக் கூடியதாக அல்-குர்ஆன் காணப்படுகிறது. எனவே தான் அல்-குர்ஆன் அனைத்தையும் தெளிவுபடுத்தும் ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. அதில் எந்த ஒன்றும் விடப்படவில்லை. அல்-குர்ஆனின் இந்த இலக்குமைய ஒத்திசைவு, அல்-குர்ஆனுக்கு அனைத்தையும் கட்டுப்படுத்தும் சக்தியையும் அனைத்தையும் அத்தாட்சிப்படுத்தும் அதிகாரத்தையும் வழங்குகிறது. இதனைத் தான் அல்-குர்ஆன் "அல்-குர்ஆனில் எதனையும் நாம் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை" (**அன்ஆம்: 38**) என்கின்றது. இது சிலர் சொல்வது போல், அல்லாஹ் பிரபஞ்சத்துடன் முரண்படாத

அல்-குர்ஆனுடைய மொத்தக் கட்டமைப்பினுள் ஒரு முழுமையான கோட்பாட்டு ஒழுங்கு இருக்கின்றது. அதனை நாம் நன்கு ஆராய்ந்து கண்டு கொள்ளலாம். அதே போல் பிரபஞ்சத்தைப் பொறுத்தவரையிலும் அதன் மொத்தக் கட்டமைப்பை ஆளுகின்ற விதிகளும் ஒழுங்குகளும் இருக்கின்றன. ஆக, மனிதனுக்கும் மறைவானவற்றிற்கும் இடையிலான தொடர்பாக இருப்பினும் பௌதீக உலகத்துக்கும் மறைவானவற்றிற்கும் இடையிலான தொடர்பாக இருப்பினும் பௌதீக சடம் சாராதவற்றுக்கும் மறைவானவற்றிற்கும் இடையிலான தொடர்பாக இருப்பினும் மொத்தத்தில் மறைவான உலகுடன் சம்பந்தப்பட்ட எந்த விவகாரமாக இருப்பினும் அவற்றைக் கையாளும் போது முக்கியமான மூன்று வரையறைகளைப் பேணிக் கொள்வது அவசியமாகும்.

முதலாவது: அல்-குர்ஆனை ஒரு தனிக் கட்டமைப்பாக நோக்குதல். அத்துடன் ஸுன்னா என்பது நபியவர்கள் அல்-குர்ஆனைச் செயற்படுத்திய வாழ்க்கை முறைமை என்ற வகையில், அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் இணைத்து ஒரு மொத்தக் கட்டமைப்பாக அணுகுதல்.

இரண்டாவது: இவற்றை அல்-குர்ஆனின் உயர் இலக்குகளான ஏகத்துவம், தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி, உம்மத், த.்.வா முதலியவற்றுடன் இணைத்துக் காணுதல்.

மூன்றாவது: இரு வகை வாசிப்புகளையும் இணைத்துக் காணுதல். எனவே பௌதீக விதிகளையும் அவற்றுடனான உறவாடல் ஒழுங்குகளையும் அறிந்து கொள்வது மிக அவசியம். அப்போது தான் அல்-குர்ஆனின் உயர் மகாஸிதுகளை அடைந்து கொள்வது சாத்தியமாகும்.

3. சிக்கலான கருத்த வேறுபாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படும் போது, அதிலும் குறிப்பாக, இன்றைய நிலையில் நடைமுறையில் உயிர்ப்புடன் இருக்கும் பிரச்சினைகள்; தொடர்ந்தும் உம்மத்தின் பிளவுகளுக்குப் பங்களித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் என அணுகும் போது, கிடையாகவன்றி, செங்குத்தாகவே அணுக வேண்டும். ஒன்றோடொன்று பிணைந்ததாகவே அவை உள்ளன; தொடர்பற்ற தொகுதிகளாக அவை இல்லை.

எனவே செங்குத்தாக அவற்றை அணுகும் போது தான்,

---

ஒரு அல்-குர்ஆனை இறக்கி வைத்துள்ளான் என்பது ஒரு சிறப்பம்சம் மாத்திரமல்ல. மாற்றமாக இது ஒரு கோட்பாட்டு ரீதியான ஒத்திசைவு. அல்-குர்ஆனுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையிலான இலக்குமைய ஒத்திசைவின் கருவிகள் மற்றும் சாதனங்களை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

அவற்றிற்கிடையிலான கருத்து வேறுபாடுகளின் படிநிலைகளைப் புரிந்து கொள்வது இலகுவாக இருக்கும்; ஒவ்வொரு மத்ஹபுடன் மாத்திரம் சம்பந்தப் படும் பிரச்சினைகள் எவை, முழு உம்மத்தும் சம்பந்தப் படும் பொது வெளிகள் எவை எனக் கண்டு கொள்வதும் இயலும். ஒவ்வொரு மத்ஹபும் தனது உள்வீட்டுக்குள்ளும் இதே செங்குத்துத் தீர்வு அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். இல்லையேல் மத்ஹபுகளுக்கிடையில் மீண்டும் அதே பழைய குற்றஞ் சுமத்தல்களும் விதண்டாவாதங்களுமே அரங்கேறும் நிலை தொடர்ந்திருக்கும்.

‘தலைமைத்துவம்’ மிகப் பெரிய கருத்து வேறுபாட்டுப் பிரச்சினையாகவே அமைந்துள்ளது. நபிகளாரின் மறைவின் பின்னர் தோற்றி, இன்று வரைக்கும் நிலைத்து நிற்கும் பிரிவினைகளுக்கும் காரணமாகி, முஸ்லிம் உம்மத்தின் சக்தியையும் ஆளுமையையும் வலுவிழக்கச் செய்துள்ள ஒரு பிரச்சினை இது. ‘ஆள்வது யார்?’ என்ற வினா தான் இப்பிரச்சினையின் மையம். இதற்கான பதில்களோ பல. பல்வேறுபட்ட மத்ஹபுகளிலும் பல தரப்பட்ட பதில்கள். எந்த ஒரு தீர்வுக்கும் வழியமைக்காத இறுகிய பதில்கள். இவை எந்தவிதமான மீள்பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டனவல்ல.

அதேவேளை எமது உம்மத்தின் சமூக, அரசியல் நிலை, பல நூற்றாண்டுகளாகத் தெளிவான நோக்கேதுமின்றி, போர்களால் மாத்திரமே நிரம்பியிருந்தது. இந்த அரசியல் இடைவெளியின் காரணமாகவும் சரியானதோர் அரசியல் சிந்தனை தோற்றம் பெறாததன் காரணமாகவும் தான், சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, சில பிரபல்யமான குடும்பங்கள் கோத்திர, குழு வாதங்களை முன்னிறுத்தி ஆதிக்கப் பரப்பில் செல்வாக்குப் பதித்து வந்துள்ளன. முஸ்லிம் உம்மத் இந்த விடயத்தை இல்முல் கலாம் விவகாரங்களில் ஒன்றாக விவாதிக்காமல், அல்-குர்ஆனின் உயர் மகாஸிதுகளுக்கு ஏற்ப, மனித இஜ்திஹாதுக்கு உட்பட்ட, உலக, அரசியல் விவகாரம் ஒன்றாக அணுகியிருந்தால் இது பாரியதொரு பிரச்சினையாக உருப்பெற்றிருக்காது.

இல்முல் கலாம் துறையினர் இந்த விவகாரத்தை அணுகும் போது அகீதாவையும் அரசியலையும் இரண்டறக் கலந்து விட்டார்கள். தலைமைத்துவம் என்பது, உம்மத்தின் நலன்களை ஒழுங்குபடுத்தவும் மக்களது விவகாரங்களைக் கவனிக்கவும் உரிய ஒரு விவகாரமாகப் பார்க்கப்படவில்லை; தலைவர் என்பவர் முஸ்லிம் உம்மத்தில் நபியவர்களது இடத்தை நிரப்புகின்றவர் என்ற, அல்லது நபியவர்களது இடத்தை நிரப்புகின்றவராகவே இருக்க வேண்டும் என்ற எண்ணமே மிகைத்திருந்தது. அல்-குர்ஆனில் வந்துள்ள ‘உங்களில் பொறுப்பு வகிப்பவர்கள்’ போன்ற வசனங்களுக்கு வழங்கப் பெற்ற பிரபல்யமான விளக்கங்களும் இதற்குத்

துணை போயின. அத்துடன் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுதல் பற்றி வந்துள்ள பல ஹதீஸ்களும் நபியவர்களுக்குக் கட்டுப்படுதல் என்ற தரத்தில் வைத்தே விளக்கப்பட்டன. இவையனைத்தும் கூட்டாக தலைமைத்துவமானது அகீதாவின் ஒரு பகுதி என்ற நிலைப்பாட்டையே வலுப்படுத்தின.

அடக்குமுறைக்கு அத்திவாரம் இடப்பட்டது இங்கு தான். ஏனெனில், முழு உம்மத்தும் இங்கு ஒரு தனிமனிதனில சுருக்கப்படுகின்றது. சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் முஸ்லிம் உம்மத் பலத்துடன் எழுந்து நின்றிருந்தாலும் கூட்டு மொத்தமாகக் காணுமிடத்து, அதன் செயற்றிறன் படிப்படியாகக் குறைந்து வீழ்ச்சிப் பாதை ஊடாகவே பயணம் தொடர்ந்துள்ளமையைக் காண முடிந்தது. முஸ்லிம் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் பலவீனமடைந்து செல்ல, மேற்கத்திய ஆதிக்கத்துக்கு முஸ்லிம் உம்மத் அடிமைப்படுவது இலகுவான கருமமாயிற்று. இந்த சந்தர்ப்பத்தில் நாம் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருந்தோம். ஒன்று, மேற்கின் அரசியல் தத்துவங்களை ஏற்று, அவை எமது சமய, பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களுடன் எவ்வளவு தான் முரண்பட்டிருந்தாலும் கூட அவற்றை அடியொற்றியே எமது அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளல்.மற்றது, அவற்றை முற்று முழுதாக மறுதலித்து, ஷரீஆத்துடன் எந்த சம்பந்தமும் இல்லாத, ஆனால் அது தான் ஷரீஅத் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற எமது சொந்த அரசியல் பாரம்பர்யங்களைக் கொண்டு நடாத்துதல்.

ஆகவே, இல்முல் கலாம் எனும் சிறையிலிருந்து, தலைமைத்துவ விவகாரத்தையும் அரசியலையும் நாம் வெளியில் எடுக்க வேண்டும். அதனை, அல்-குர்ஆன், நபியவர்களது ஸீரா ஆகியவற்றினால் வழிநடாத்தப்படுகின்ற முஸ்லிம் உம்மத்தின் கைகளில் ஒப்படைத்து, அல்-குர்ஆனின் உயர் மகாஸிதுகள் மற்றும் முஸ்லிம் உம்மத்தின் நலன்கள் தேவைகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். 'ஸஹீஹானவை', 'மிகவும் ஸஹீஹானவை' போன்ற விதிகளை மையப்படுத்தி எழும் அரசியல் கருத்து வேறுபாடுகளின் காரணமாக ஒருவரையொருவர் காபிர் என்று பரஸ்பரம் பட்டம் சூட்டும் நிலையில் இருந்தும் நாம் வெளியே வர வேண்டும்.

தலைமைத்துவ விவாகரத்தில் உள்ள கருத்து வேறுபாட்டை[(9)]

---

*(9)* இஸ்லாமிய சிந்தனைப் பிரிவுகள் மத்தியில், தலைமைத்துவம், அதன் நிபந்தனைகள் பற்றிய கருத்தாடல்கள், முரண்பாடுகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்த பின்னர், இரண்டு அம்சங்களின் மீது, முஸ்லிம் உம்மத்திற்கான தலைமைத்துவத்

நாம் பல மட்டங்களில் வேறுபடுத்தி நோக்கலாம். முதலாவது தனி மனித தகைமை மட்டம். அதாவது பிறரால் பெற்றுக் கொள்ள இயலாத தகைமைகளை ஒரு தனி மனிதர் பெற்றிருப்பதாய்க் கருதுதல். ஆனால் பிறருக்கு சான்று பகரும் உரிமங்கள், மற்றும் குர்ஆனிய உம்மத்தின் பிரதிநிதித்துவ தகைமை என்பன குர்ஆன் குறிப்பிடுவது போன்று, ஒரு தனி மனிதரில் அல்லாது, சமூகத்திற்கே இருக்கின்றன:

وَكَذٰلِكَ جَعَلناكُمْ أُمَّةً وَسَطًا لِتَكونوا شُهَداءَ عَلَى النّاسِ وَيَكونَ الرَّسولُ عَلَيكُم شَهيدًا

- البقرة: ١٤٣

**“இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம். (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்காளக இருப்பதற்காகவும் ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்...” (பகரா 2:143)**

இது தனிமனிதர் ஒருவரால் மாத்திரம் சாத்தியப்படக் கூடியதல்ல. இதற்கு இந்த உம்மத்தை அரசியல், பொருளாதார, சமூகவியல், இராணுவ தளங்களில் முழுமையாக முறைப்படுத்துவதற்குரிய ஒரு கட்டமைப்பு அவசியம். எனவே, முதல் மட்டக் கருத்து வேறுபாட்டைப் பொறுத்த மட்டில் அவை, ஒவ்வொரு மத்ஹபுக்குள்ளேயும் அதன் அங்கத்தவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப அவர்கள் மத்தியில் நிகழும் கருத்து வேறுபாடாக மாத்திரமே நோக்கப்பட முடியும்.

இரண்டாவது மட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாவது மூலாதாரம் சம்பந்தப்பட்டது; இரண்டாவது மாறும் நடைமுறை சம்பந்தப்பட்டது. அதாவது தலைமைத்துவம் தொடர்பான முரண்பாடுகள் தோன்றிய வரலாற்று ஓட்டம் சம்பந்தப்பட்டது.

---

தகைமை பூர்த்தியடைகிறது என்ற முடிவுக்கு என்னால் வர முடிந்தது. முதலில் மகாஸித்; அடுத்து அந்தந்த காலத்திற்குரிய செயற்பாட்டு முறைமை. இவையிரண்டும் தலைமைத்துவத் தகைமையை முழுமைப்படுத்துகின்றன. இங்கு சொல்லப்பட்டுள்ள இந்தத் தகைமையானது, தலைமைத்துவத்திற்குப் பொருத்தமான ஒருவருக்கான நிபந்தனைகள் என்பதை விடவும் மிகவும் பரந்த ஒன்றாகும். இது, முஸ்லிம் உம்மத்தினது செயற்திறனையும் ஆக்க சக்தியையும் மீளக் கொண்டு வருவதற்குப் போதுமான ஒரு தொலைநோக்குப் பார்வையாகும். இது முழு உம்மத்தினதும் ஆக்க சக்திகளையும் பன்முகப் பண்புகளையும் இணைத்த முழுமையான பார்வையாக அமைவது அவசியம்; பகுதி அமைப்பிலான பார்வைகள் உம்மத்தை முழுமையாக எழுச்சி பெறச் செய்வதற்குப் போதுமானவையாக இருக்க மாட்டா.

இங்கு மூலாதாரம் என்பது, ஒவ்வொரு பிரிவினரும் தமது கருத்துக்கு எதனை மூலாதாரமாகக் கொள்கிறார்கள் என்பதாகும். இந்த மூலாதாரம், ஒவ்வொரு பிரிவினருக்கும் உரியது என்ற நிலையைத் தாண்டி, அனைத்து முஸ்லிம்களுக்கும் உரிய மூலாதாரம் என்ற நிலையை எட்ட வேண்டும். ஆக, ஓர் ஆட்சியாளரின் கருத்து அல்லது ஒரு ஸஹாபியின் கருத்து, அல்லது அவர்களது அறிவிப்புகளின் நம்பகத் தன்மை என்பனவற்றை ஆதாரமாகக் கொள்வது குறித்து நாம் சற்று நிதானமாக சிந்திக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு மத்ஹபும் கருதிக் கொள்வது போல், அவ்வவற்றின் ஆதாரபூர்வத் தன்மையானது, அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரத்துக்குப் பகரமாக அமைய முடியுமா[10] என்ற கேள்வி எழுகின்றது.

*(10)* செய்யத் ஹுஸைன் பரூஜர்தி அவர்கள் (மறைவு ஹி. *1380*) ஒரு முக்கிய விடயம் குறித்து அனைவரது கவனத்தையும் திருப்பியிருந்தார்கள். முன்னால் ஷெய்குல் அஸ்ஹரான மஹ்மூத் ஷல்தூத் அவர்களது துணையுடன் மேற்கொள்ளப்பட்ட, ஷீயா, ஸுன்னா பிரிவினர் மத்தியில் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டத்திற்கு முன்னோடியாகவே இது அமைந்திருந்தது. பரூஜர்தி அவர்கள், எமது இமாம்களுக்கு அரசியல் தலைமைத்துவத்திற்குப் பதிலாக மார்க்கத் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்ற சிந்தனையை நாம் முன்வைப்பது அவசியமாகிறது; ஏனெனில் இமாம்களுக்கு அரசியல் தலைமைத்துவம் என்ற விடயம் இப்பொழுது வரலாறாக மாத்திரம் தான் இருக்கிறது. எனவே நாம் 'கதீர்கும்' ஹதீஸை விடவும் 'ஸகலைன்' ஹதீஸிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். இன்று ஷரீஆவுக்கு விளக்கவுரை வழங்குதல் தான் எமது முக்கிய பிரச்சினையாக இருக்க வேண்டும்; மாற்றமாக குறித்த ஒரு வரலாற்று நிகழ்வில் இமாம் அலியினுடைய உரிமையைப் பற்றிப் பேசுவதல்ல; ஷரீஆவை எத்திவைத்தலும் அதற்கு விளக்கவுரை வழங்குவதும் தான் இமாம்களது பணியாக இருக்க வேண்டும்; மாற்றமாக அரசியலில் நுழைவது அல்ல. அப்படியே நுழைவதாக இருந்தாலும் அது நலன் என்ற அடிப்படையில் மாத்திரமே நடைபெற வேண்டும் என்கிறார்.

செய்யத் முஹம்மத் ஹுஸைன் பழ்லுல்லாஹ் (மறைவு கி.பி *2010*) இதனை விடவும் இன்னும் தெளிவாக, நாம் ஆராய வேண்டிய பிரச்சினையை அடையாளப்படுத்துகின்றார். அவர் சொல்கின்றார்: ஷீயா, ஸுன்னா முரண்பாடு பிரதானமாக இரண்டு விடயங்களை மையப்படுத்தியிருக்கிறது. ஒன்று இமாமத்; மற்றையது கிலாபத். அனைத்து வகையான பிக்ஹ் மற்றும் இல்முல் கலாம் முரண்பாடுகளுக்கும் தாயாக இவையிரண்டையுமே கருத முடிகிறது. இந்த இரண்டு தலைப்புகளையும் மையப்படுத்தியே, ஒவ்வொன்றும் தமக்கு என இலக்குகளும் கோட்பாடுகளும் கொண்ட தனித்தனி சிந்தனைப் பள்ளிகளாக மாற்றம் பெற்றன... இந்த விவகாரம் அடிப்படையான இரண்டு விடயங்களில் மையம் கொண்டிருக்கின்றது. அவற்றில் முதலாவது, ஒருவரது கருத்தை ஆதாரமாகக் கொள்வது பற்றிய விவாதம். கிலாபத்தின் ஷரீஅத் நிலைப்பாடு தொடர்பான விவாதத்துடன் இணைந்து, கலீபாவின்

கருத்தினுடைய ஆதாரபூர்வத் தன்மை தொடர்பாகவும் ஒரு விவாதம் இருக்கிறது. அதாவது, ஷரீஅத்தில் ஒன்றின் ஆதாரபூர்வத் தன்மை குறித்த விவாதத்தின் போது, கலீபாவின் கருத்துகளும் பத்வாக்களும் இஸ்லாமிய ஷரீஆவில் ஓர் ஆதாரமாகக் கருதப் படுமா? என்றும் விவாதிக்கப்பட்டது. ஏககாலத்தில் ஸஹாபாக்களது பிக்ஹ் ரீதியான மற்றும் சிந்தனா ரீதியான முடிவுகளை அவர்களது நம்பகத் தன்மையை அடிப்படையாக வைத்து, ஆதாரமாகக் கொள்ளலாமா?: அதாவது அவர்களது கருத்துகளை மக்கள் தமது நம்பிக்கை மற்றும் நடைமுறை விவகாரங்களில் பின்பற்றலாமா? என்ற விவாதமும் கூடவே நடைபெற்றுள்ளது. சில சமயம் இவை போன்ற நடைமுறை சார்ந்த விவகாரங்களின் மீதான ஆய்வுகளில், பொது முடிவுகளுக்கு வருவது சாத்தியமாக இருக்கும். ஆனால் இமாமத், கிலாபத் போன்ற ஷீயா, ஸுன்னா இரு பிரிவுகளிலும் முஸ்லிம்களின் உள்ளத்தில் அதிபுனிதத்தன்மை கொண்ட விவகாரங்களில், பொது முடிவுகளுக்கு வருவது மிகவுமே சிரமமானது; இன்றைய நவீன இஸ்லாமிய சூழலின் இறுக்கத்திற்கு இந்த விவகாரங்கள் பெரிதும் பங்காற்றியிருக்கின்றன. இவை பற்றி உரையாடுகின்ற எவரும் இவை எமது இன்றைய நடைமுறை வரை நீண்டு வரமுடியாத வரலாறுகள் மாத்திரமே. ஏனெனில் கிலாபாவுக்குத் தகுதியானவர்கள் என்று நாம் முரண்பட்டுக் கொள்கின்ற அனைவரும் தற்போது மரணித்து விட்டுள்ளனர் என்ற எல்லையில் மாத்திரம் இந்த விவகாரத்தைப் பார்ப்பதில்லை; மாற்றமாக இந்த விவகாரம் குறித்த கலீபாவின் அல்லது இமாமின் கருத்து அல்லது பத்வாவுடன் சம்பந்தப்பட்டதாகவும் பார்க்கப்படுகிறது. எனவே ஒன்றில் அவை ஷரீஅத்துக்கான ஆதாரங்கள் என்று மக்கள் பின்பற்றுவார்கள் அல்லது ஆதாரங்கள் அல்ல என்று மறுத்து விடுவார்கள் என்ற தரத்தில் தான் இந்த விவகாரத்தை நோக்குகின்றனர். இந்த சூழலில் ஆய்வுகள் செய்யும் போது, உள்ளத்தின் எதிர்மறை நிலைகள் பலவீனமடைந்து செல்லும். ஏனெனில் ஒரு கருத்து அல்லது பத்வாவின் மீது இருக்கின்ற புனித எண்ணம், ஒரு நபரின் மீதான புனித எண்ணத்தின் தரத்திற்கு வர மாட்டாது. நாம் ஒன்றின் ஆதாரபூர்வத் தன்மையின் கூறுகளையும் நிபந்தனைகளையும் ஆராய்கின்ற பொழுது, எமது பாரம்பரிய துலக்கங்களை விடவும் விசாலமான பல புதிய துலக்கங்கள் கண்டடையப்பட முடியும். அது சில சமயம் அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் நாம் வாசிப்பதற்கான ஒரு புதிய கோட்பாட்டை எமக்குத் தரவும் முடியும். அது போல், நிகழ்வுகள், மனிதர்கள் பற்றிய வரலாற்றை வாசிப்பதற்குரிய புதிய கோட்பாடாகவும் அது அமையலாம்.

இரண்டாவது, ஹதீஸின் நம்பகத் தன்மை குறித்த முரண்பாடு: நபியவர்களிடமிருந்து வந்த ஹதீஸ்கள், ஸஹாபாக்களிடமிருந்து வந்த அல்-குர்ஆன் விளக்கவுரைகள், இமாமீக்களிடமிருந்து வந்த அல்-குர்ஆன் விளக்கவுரைகள், இவற்றின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதில் முஸ்லிம்கள் மத்தியில் பாரிய கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இதில் இமாமிய்யத் சிந்தனைப் பிரிவினர், நபியவர்களது ஹதீஸ்கள் மற்றும் ஸஹாபாக்களது அறிவிப்புகள் போன்றவற்றின்

முனைவதாயின் முதலில் நாம் அந்த பிரச்சினையை கடந்த காலத்திலிருந்து வெளியே எடுக்க வேண்டும். அத்துடன் மனிதர்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்களிலிருந்தும் அதனை வெளியில் கொண்டு வந்து, மூலாதாரம் பற்றிய கருத்தாடலுக்கு அதனை நகர்த்த வேண்டும். ஒரு பிரச்சினையை, அதன் கூறுகளிலேயே தங்கியிருந்து கொண்டு தீர்க்க முனைவது ஒரு போதும் பயனளிக்கப் போவதில்லை. அந்தப் பிரச்சினையின் சட்டகத்துக்கு வெளியில் இருக்கின்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டே அதனைத் தீர்க்க வேண்டும். இல்லையேல், பிரச்சினையைத் தீர்க்கச் சென்ற நாம், மென்மேலும் முரண்பாடுகளைப் பெருக்கி வைப்பவர்களாகவே அமைந்து விடுவோம்.

அல்-குர்ஆனைப் போன்று எதுவும் எங்களை ஒன்றிணைக்க முடியாது. அல்-குர்ஆன் இல்லாதவிடத்து, நாம் ஓர் உம்மத்தாகவே இருந்திருக்க மாட்டோம். உம்மத்தின் மத்தியிலான பிளவுகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அல்-குர்ஆனின் சட்ட அதிகாரத்தை மீளக் கொண்டு வர வேண்டும். அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்கத்திற்கான மூலாதாரம். ஏனைய அனைத்தையும் ஆளக் கூடியது அது. உடன்பாட்டின் போதும்

---

அறிவிப்பாளர் வரிசைகளின் நம்பகத் தன்மையை ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக, இஸ்லாமிய சட்டவாக்கத்திற்குரிய பல மூலாதாரங்களை இழந்து விட்டனர். ஸஹாபாக்களது நம்பகத்தன்மை குறித்து அளவுக்கதிகம் கேள்விகளை எழுப்பியதனால் இது நடைபெற்றது. மறுபுறத்தில், கிலாபத் சிந்தனைப் பள்ளியினர், ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்றனர். அஹ்லுல் பைத்தினரின் கருத்துகள், பிக்ஹ் மற்றும் அகீதா விவகாரங்களில் இறுதியானவை என்று அவர்கள் கருதவில்லை. இவர்களது கருத்துகள் ஆதாரம் அல்ல என்கின்றனர். அத்துடன் இவர்களது அறிவிப்புகளும் நேரடியாக நபியவர்கள் வரையில் தொடர் அறிவிப்பாளர் வரிசையைக் கொண்டவை அல்ல என்றும் அவை இடையில் துண்டிக்கப்பட்டவை என்றும் கருதுகின்றனர். ஆனால் இமாமிய்யத் சிந்தனைப் பள்ளியினர் தமது இமாம்களின் அனைத்து ஹதீஸ்களும் நபியவர்களது வார்த்தைகளில் இருந்து வந்தவை என்று நம்புகின்றனர். இமாம் ஜ.்.பர் ஸாதிக் அவர்கள் கூறுகிறார்கள்: 'எனது பேச்சு எனது தந்தையின் பேச்சாகும். எனது தந்தையின் பேச்சு எனது பாட்டனின் பேச்சாகும். எனது பாட்டனின் பேச்சு... நபியவர்களது பேச்சாகும்.' இதனுடன் இவர்கள் தமது இமாம்கள் பாவம் செய்யாதவர்கள், தவறுவிடாதவர்கள் என்றும் நம்புகின்றனர். அந்த வகையில் இவர்கள் ஊடாக அறிவிக்கப் படும் ஹதீஸ்கள் ஸஹீஹானவையாக அமைகின்ற பொழுது, அவை அனைத்திற்கும் இறுதியானவையாக இருக்கும் என்கின்றனர்.

இங்கு செய்யத் பழ்லுல்லாஹ் அவர்கள், ஹதீஸ்களின் நம்பகத் தன்மை பற்றிய நிபந்தனைகளில், இரு தரப்பினரும் அறிவுபூர்வமான ஆய்வில் ஈடுபடுவது அவசியமாகும் என்று காண்கின்றார்கள்.

சரி; முரண்பாட்டின் போதும் சரி அனைத்தும் அல்-குர்ஆனை நோக்கியே மீள வேண்டும்.

இங்கு அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரம் என்பதை நான் கோட்பாட்டுக் கருத்திலேயே முன்வைக்கின்றேன்; காலாகாலமாக மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லித் தேய்ந்து போன உணர்ச்சி வடிவில் அல்ல. உண்மையில் இந்த உணர்ச்சி வடிவம், அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரத்தைத் தேக்க நிலைக்குத் தள்ளி, செயற்றிறன் அற்றதாக்கி விட்டுள்ளது; அல்-குர்ஆனைத் தவிர ஏனைய அனைத்தையும் முதன்மைப்படுத்தியுள்ளது. இஸ்லாத்தை விளங்கவும் விளக்கவும் ஆன ஒரு முயற்சி தான் மத்ஹப். மாறாக மத்ஹப் தான் இஸ்லாம் என்பதல்ல.

எந்த ஒரு மத்ஹபினதும் மூலாதாரத்துடன் முரண்படுவதல்ல அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரம். ஸஹாபாக்களோ, இத்னா அஷ்அரியா, ஸைதியா, இபாழிய்யா இமாம்களோ அல்-குர்ஆன் தான் சட்டவாக்க மூலாதாரம் என்பதில் முரண்பட்டதில்லை. அது போலவே, அல்-குர்ஆனை விளங்கி, அதனை நடைமுறை வாழ்வில் பிரயோகித்த நபிகளாரின் வாழ்க்கை முறையைத் தெளிவுபடுத்தும் மூலாதாரமே ஸுன்னா என்பதிலும் எவரும் முரண்பட்டதில்லை. அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியது அல்-குர்ஆன் என்றே அல்லாஹு தஆலா வர்ணித்துள்ளான்.[(11)]

அல்-குர்ஆனின் சட்டவாக்க அதிகாரத்தை மீளக் கொண்டு வருவதன் மூலம் இஜ்திஹாத் பொறிமுறையில் மாற்றம் ஏற்படும். ஏனெனில் எந்தவொரு கிளையாதாரத்தினதும் நம்பகத் தன்மை அல்லது ஆதாரபூர்வத் தன்மையானது அதற்கான ஓர் அடிப்படை அல்-குர்ஆனில் காணப்பட வேண்டும் என்பதில் தான் தங்கியிருக்கின்றது. தமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்தை விடவும் நவீன காலத்தின் சமூக, பொருளாதார,

---

*(11)* இங்கு இமாமீக்கள் மற்றும் ஸைதீக்களின் அஹ்லுல் பைத் இமாம்களினதோ அல்லது இபாழிய்யாக்களின் இமாம்களினதோ அல்லது ஸஹாபாக்களினதோ கூற்றுகளின் ஆதாரபூர்வத் தன்மையை விவாதிப்பது எமது நோக்கமல்ல; மாற்றமாக அவர்களின் கூற்றுகள் ஆதாரபூர்வமானவை என்று சொல்வதன் மூலம், அல்-குர்ஆன் சட்ட உருவாக்க மூலாதாரம் என்பதையோ அல்லது ஸுன்னா சட்ட விளக்க மூலாதாரம் என்பதையோ அவை மறுக்க மாட்டாது என்பதையே இங்கு உறுதிப்படுத்த நினைக்கிறோம். மேலே நாம் கொண்டு வந்துள்ள மேற்கோள்கள் அனைத்தும் அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் பெரியளவு வேறுபடுத்தி நோக்கி விட்டாலும் ஏனையவற்றை விட்டும் இவையிரண்டையும் வேறுபடுத்தியுள்ளன; எமது எதிர்பார்ப்பு என்னவெனின், ஏனையவற்றை விடவும் அல்-குர்ஆனின் மூலாதாரத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். பல சிந்தனைப் பிரிவுகளின் மூல நூல்களில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியல் கட்டமைப்புகளும் நிகழ்வுகளும் முற்றிலும் வித்தியாசமானவை என்பதை எந்த ஒரு மத்ஹபும் மறந்துவிடக் கூடாது. எனவே அனைவரும் முதலாகவும் இறுதியாகவும் அல்-குர்ஆனை நோக்கித் திரும்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். எமது வினாக்களை அல்-குர்ஆன் மீது தொடுத்து, அதன் இரகசியங்களை வெளிக் கொண்டு வர வேண்டும். அல்-குர்ஆனைப் பெற்றுக் கொண்ட ஆரம்ப சமூகம், அதனைத் தனது வாழ்வில் செயற்படுத்திய வாழ்வியல் முறைமையான நபியவர்களது ஸுன்னாவை இந்த விடயத்தில் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் தான் எமது நவீன சமூக, கலாச்சார சூழலுக்கான அல்-குர்ஆனியப் பிரயோக மாதிரி கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இரண்டாவது பகுதி, எமது அரசியல் நடைமுறையுடன், அதாவது இந்த உம்மத் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றது[(12)] என்பதுடன் சம்பந்தப்பட்டது.

---

*(12)* ஷெய்க் வாஇல் ஸாத∴ அல்குராஸானி அவர்கள், தற்காலத்தில் ஷீயாவுக்கும் ஸுன்னிக்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாட்டுக்கு எந்த அடிப்படையும் இல்லை; குலபாஉர் ராஷிதூன்களது ஆட்சியை நிபந்தனைகளுடன் சட்டபூர்வமானது எனக் கருத முடியும் என்கின்றார். அதாவது, 'முற்படுத்தப்பட வேண்டிய இரண்டு விவகாரங்களை நாம் வேறுபிரித்து நோக்க வேண்டும். முதலாவது, சட்டப்படி ஆட்சி அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குரியது. இரண்டாவது, முனாபிக்குகள் மற்றும் மதம் மாறியவர்களை ஸூராவின் அடிப்படையில் தடுத்தல். -இது அச்சமயம் அறபு தீபகற்பத்திலும் அதற்கு வெளியிலும் முஸ்லிம் உம்மத்திற்கு அச்சுறுத்தலாக இருந்ததாகும்- இரண்டாவது விவகாரத்திற்கு பின்வருமாறு நியாயம் சொல்லலாம். (ஆனால் முதலாம் விவகாரத்திற்கு அதற்கு முன்னர் நியாயம் சொல்லியுள்ளார்கள்) இதற்கான ஆதாரங்கள்: 1. இமாம் அலி அவர்களே சொல்கிறார்கள் 'தலைமைக்கு ஏனையவர்களை விடவும் நான் தான் மிகவும் தகுதியானவன் என்பதை நீங்கள் அறிவீர்கள்... முஸ்லிம்களுக்கு நியாயமான ஒன்றை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஏனெனில் அதற்கான குற்றத்தை நானே தான் சுமக்க வேண்டியிருக்கும்' என்கிறார்கள். 2. அல்லாஹ் மீது சத்தியமாக எனக்கு ஆட்சிப் பொறுப்பில் எந்த விருப்பமும் இருக்கவில்லை என்ற அவரது வார்த்தைகள் முதலாவது விடயத்தில் அவருக்கு விருப்பம் இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. 3. நஹ்ஜுல் பலாகாவில் ஆறாவது உரையில் அவர் சொல்கிறார்: அபூபக்ர், உமர், உஸ்மான் ஆகியோருக்கு மக்கள் வழங்கிய பைஅத்தை எனக்கும் வழங்கினார்கள்... முஹாஜிர்களுக்கும் அன்ஸார்களுக்குமே ஷூறா உரிமை இருக்கிறது. அவர்கள் ஒரு மனிதரைத் தீர்மானித்து, அவர் தான் தலைவர் என்று சொன்னால், அது அல்லாஹ்வின் திருப்திக்குரியதாகவே இருக்கும். தொடர்ந்தும் அன்று மக்கள் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹுவைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களை விளங்கப்படுத்துகின்றார். அதில், இதனை அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எதிராக அவர்கள் உண்மையை அறிந்து கொண்டும் வேண்டும் என்றே செய்த ஒரு சதியாக அவர் எங்கும் குறிப்பிடவில்லை.

அல்-குர்ஆன் குறிப்பிடுவது போல, உம்மத்திற்குரிய மத்திம பெறுமானத்தை மீளக் கொண்டு வருவதன் மூலம் மாத்திரமே இப்பிரச்சினையை நாம் தீர்க்க முடியும். அல்-குர்ஆன் உம்மத்தை நோக்கியே பேசுகின்றது. அது ஒரு தனி மனிதனை நோக்கிப் பேசவில்லை:

وَالمُؤمِنونَ وَالمُؤمِناتُ بَعضُهُم أَولِياءُ بَعضٍ يَأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ عَنِ المُنكَرِ وَيُقيمونَ الصَّلاةَ وَيُؤتونَ الزَّكاةَ وَيُطيعونَ اللَّهَ وَرَسولَهُ أُولئِكَ سَيَرحَمُهُمُ اللَّهُ إِنَّ اللَّهَ عَزيزٌ حَكيمٌ - التوبه: ٧١

**“மு.:.மினான ஆண்களும் மு.:.மினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள்; தீயதை விட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள். (ஏழை வரியாகிய) ஸகாத்தை (முறையாகக்) கொடுத்து வருகிறார்கள். அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.” (தவ்பா *9:71*)**

இங்கு அல்-குர்ஆன் சிலரைக் குறிப்பிட்டுப் பேசவில்லை; முழு உம்மத்தின் பொறுப்பை ஒரு தனிமனிதனில் சுருக்கி விடவில்லை. மேலும் கூறுகின்றது:

يا أَيُّهَا الَّذينَ آمَنوا أَطيعُوا اللَّهَ وَأَطيعُوا الرَّسولَ وَأُولِي الأَمرِ مِنكُم فَإِن تَنازَعتُم في شَيءٍ فَرُدّوهُ إِلَى اللَّهِ وَالرَّسولِ إِن كُنتُم تُؤمِنونَ بِاللَّهِ وَاليَومِ الآخِرِ ذلِكَ خَيرٌ وَأَحسَنُ تَأويلًا - النساء: ٥٩

**“நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும் உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள். உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் அதை அல்லாஹ்விடமும் (அவன்)**

இறுதியாக ஷெய்க் ஷல்தூத் அவர்களது ஒரு கூற்றுடன் நிறைவு செய்கிறார்: ‘அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கோபத்தை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அமைதியை வெளிப்படுத்தியிருககிறார்கள்.’

மேற்குறிப்பிடப்பட்டவற்றின் சாராம்சம் என்னவெனின், அலீ ரழியல்லாஹு அன்ஹு தன்னை விடவும் உம்மத்தை முற்படுத்தினார்கள் என்பதாகும்.

**தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். இது தான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும்." (நிஸா 4:59)**

இங்கு 'உங்களில் அதிகாரம் வகிப்பவர்கள்' என்பதன் மூலம் மேட்டுக்குடி வர்க்க முறையை குர்ஆன் ஆதரிக்கவில்லை. அதனை மறுத்துரைத்து, அவர்கள் மக்களை வழிகெடுக்கும் கருமமே ஆற்றுகின்றார்கள் எனக் கூறுகின்றது:

رَبَّنا إِنّا أَطَعنا سادَتَنا وَكُبَراءَنا فَأَضَلّونَا السَّبيلا - الأحزاب: ٦٧

**"எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுககும் எங்கள் பெரியவர்களுக்கும் வழிப் பட்டோம். அவர்கள் எங்களை வழிகெடுத்து விட்டார்கள்." (அஹ்ஸாப் 33:67)**

அத்துடன் பிர்அவ்னில் பிரதிபலித்தது போன்ற சர்வாதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை:

يا قَومِ لَكُمُ المُلكُ اليَومَ ظاهِرينَ فِي الأَرضِ فَمَن يَنصُرُنا مِن بَأسِ اللَّهِ إِن جاءَنا قالَ فِرعَونُ ما أُريكُم إِلّا ما أَرى وَما أَهديكُم إِلّا سَبيلَ الرَّشادِ - غافر: ٢٩

**"என்னுடைய சமூகத்தார்களே! இன்று ஆட்சி உங்களிடம் தான் இருக்கிறது; நீங்கள் தாம் (எகிப்து) பூமியில் மிகைத்தவர்களாகவும் இருக்கின்றீர்கள்; ஆயினும் அல்லாஹ்வின் தண்டனை நமக்கு வந்து விட்டால், நமக்கு உதவி செய்பவர் யார்? என்றும் கூறினார். அதற்கு நான் (உண்மை எனக்) காண்பதையே உங்களுக்கு நான் காண்பிக்கிறேன். நேரான பாதையல்லாது (வேறு) எதையும் நான் உங்களுக்குக் காண்பிக்கவில்லை என பிர்அவன் கூறினான்." (ஹாபிர் 40:29)**

பிர்அவ்ன் குறித்து மேலும் கூறுகையில்,

فَاستَخَفَّ قَومَهُ فَأَطاعوهُ إِنَّهُم كانوا قَومًا فاسِقينَ - الزخرف: ٥٤

**"(இவ்வாறாக) அவன் தன் சமூகத்தாரை (அவர்களுடைய அறிவை) இலேசாக மதித்தான்; அவனுக்கு அவர்களும் கீழ்ப்படிந்து விட்டார்கள். நிச்சயமாக அவர்கள் வரம்பை மீறிய சமூகத்தாராகவும் ஆகி விட்டார்கள்." (ஸுக்ருப் 43:54)**

உங்களில் அதிகாரம் வகிப்பவர்கள் என்பதன் கருத்தை நாம் பின்வரும் வசனத்திலிருந்து விளங்கிக் கொள்ளலாம்:

وَإِذا جاءَهُم أَمرٌ مِنَ الأَمنِ أَوِ الخَوفِ أَذاعوا بِهِ وَلَو رَدّوهُ إِلَى الرَّسولِ وَإِلى أُولِي الأَمرِ مِنهُم لَعَلِمَهُ الَّذينَ يَستَنبِطونَهُ مِنهُم وَلَولا فَضلُ اللَّهِ عَلَيكُم وَرَحمَتُهُ لَاتَّبَعتُمُ الشَّيطانَ إِلّا قَليلًا - النساء: ٨٣

**"மேலும் பீதியோ, பாதுகாப்பைப் பற்றிய செய்தியோ அவர்களுக்கு எட்டுமானால் உடனே அவர்கள் அதை பரப்பிவிடுகிறார்கள். அவர்கள் அதை (அல்லாஹ்வின்) தூதரிடமோ, அல்லது அவர்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக் கூடியவர்கள், அதை நன்கு விசாரித்தறிந்து (தக்க ஏற்பாடுகளைச் செய்து) கொள்வார்கள். அல்லாஹ்வுடைய கிருபையும் அவனுடைய அருளும் உங்கள் மீதில்லாதிருந்தால் உங்களில் சிலரைத் தவிர மற்றவர் ஷைத்தானைப் பின்பற்றியிருப்பீர்கள்." (நிஸா 4:83)**

இங்கு அதிகாம் வகிப்பவர்கள் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருப்பது, மனிதர்கள் மத்தியில் உள்ள ஆற்றல்கள், இயலுமைகளின் வேறுபாட்டையே குறிக்கின்றது. அதன்படி, ஒவ்வொருவரையும் அவரவரது விஷேட ஆற்றலுக்குரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே பொருளாகும். அல்லாது, சிலர், ஏனைய சிலர் மீது அதிகாரம் செலுத்துவதைக் குறிப்பதல்ல இது.

அல்-குர்ஆன் உம்மத்தின் மத்திம பண்பை வலியுறுத்தியிருந்த போதிலும் பிக்ஹ் மற்றும் இல்முல் கலாம் ஆய்வுகள் இமாம் அல்லது கலீபா எனும் ஒரு தனிமனிதனை மையப்படுத்தி அமைந்ததனால் அவற்றுள் உம்மத்தின் முக்கியத்துவம் மறைந்து விட்டது. இதனால் தான்,

الَّذينَ إِن مَكَّنّاهُم فِي الأَرضِ أَقامُوا الصَّلاةَ وَآتَوُا الزَّكاةَ وَأَمَروا بِالمَعروفِ وَنَهَوا عَنِ المُنكَرِ وَلِلَّهِ عاقِبَةُ الأُمورِ - الحج: ٤١

**"அன்றியும் இவர்கள் (எத்தகையோரென்றால்) இவர்களுக்கு நாம் பூமியில் இடம்பாடாக்கிக் கொடுத்தால், இவர்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடிப்பார்கள்; ஸகாத்தும் கொடுப்பார்கள்; நன்மையான காரியங்களைச் செய்யவும் ஏவுவார்கள். தீமையை விட்டும் விலக்குவார்கள். மேலும், சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது." (ஹஜ் 22:41)**

எனும் குர்ஆனிய வாசகத்துக்கு விளக்கம் அளிக்கும் இமாம் குர்துபி, அதிகாரத்தை அடைந்து கொள்ளும் ஆட்சியாளர்களையே இது குறிக்கிறது என்றும் இதனடியாக, நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் கூட ஆட்சியாளர்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டதொரு கடமையே என்றும் விளக்கம் அளிப்பார்.

எனவே, இந்த விவகாரங்களை அணுகுவதற்கு பிக்ஹ், இல்முல் கலாம் மத்ஹபுகளின் வாதங்களில் இருந்து விடுபட வேண்டும். நேரடியாக அல்-குர்ஆனில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சிந்தனைக் கட்டமைப்பும் கோட்பாடும் எமக்கு அவசியமாய் உள்ளது. அப்போது தான் கடந்த கால வாதங்களின் பின்னால் இழுபடாமல் மேற்குலகத்தைய உற்பத்திகளின் பின்னர் ஓட வேண்டிய நிர்ப்பந்தமும் இல்லாமல் இந்த உம்மத்தின் கசப்பான யதார்த்தத்தை எதிர் கொள்ள இயலும். இதன் மூலம், இன்றைய கால கட்டத்தின் வேறுபாடுகள், சிறப்பம்சங்கள், மற்றும் அரசியல் சமூக நிலைமைகளுக்கு ஏற்ப, இந்த உம்மத்தை எழுச்சி பெறச் செய்வதற்கு மிகவும் பொருத்தமான அரசியல் கட்டமைப்பு எது என்ற சிந்தனையை நாம் செய்ய முடியும். உம்மத் என்பது ஒரே அமைப்பிலான ஒரு தொகுதியினர் அல்லர்; அதில் ஒரு பகுதியினருக்குப் பொருத்தமான ஒன்று ஏனையவர்களுக்கும் பொருந்தும் எனக் கொள்தல் இயலாது. அது போலவே ஒரு வரலாற்றுக் காலப் பகுதிக்கு உரியன, பிறிதொரு வரலாற்றுக் காலத்திலும் சாத்தியமாகும் எனக் கூறலும் பொருந்தாது.(13)

---

*(13)* ஒவ்வொரு மத்ஹபுக்குள்ளும் உம்மத்தை எழுச்சி பெறச்செய்வது பற்றிய மீள்பரிசீலனைகள் நடைபெறுவதை நான் மறுக்கவில்லை. ஆனால், அவை பிக்ஹ் சார்ந்த அல்லது இல்முல் கலாம் சார்ந்த மீள்பரிசீலனைகளாகவே மத்ஹப் எல்லைக்குள் மாத்திரம் மட்டுப்பட்டவையாக இருக்கின்றன. ஆனால் அவை எமது நடைமுறைப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டும் என்று உணர்வில் எடுத்து வைக்கப்படுகின்ற எட்டுக்கள் என்பதில் சந்தேகமில்லை.

அரசியலில் தலைமைத்தும் சம்பந்தப்பட்ட விவகாரத்தில், தலைமை வஹியின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும். தெரிவின் அடிப்படையில அவை அமைய முடியாது என்று கருதியவர்களும் கூட தமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, தற்காலத்தில் பரஸ்பர ஒத்துழைப்புடனான சுமுகமான ஓட்டத்திற்கு வழியமைத்துள்ளதைக் காணலாம். எனவே, இங்கு நாம் கட்டாயமாக விடை தேட வேண்டிய கேள்விகள் என்னவெனின், மிகவும் பொருத்தமான அரசியல் முறைமை எது? ஷூறாவுக்கான பொறிமுறை என்ன? த∴வாவையும் அதிகாரத்தையும் வேறுபிரிப்பது எவ்வாறு? நீதியான ஒரு அரசை நிறுவுவது எவ்வாறு? மிக முக்கியமாக மார்க்கத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பை முறைப்படுத்துவது எவ்வாறு? நிலையான மற்றும் மாறும் தன்மை கொண்ட இந்த உறவுகளை வரையறுப்பதற்கான முறைமை என்ன? இவற்றை அல்-குர்ஆனிய விழுமியங்களுக்கு ஏற்ப வடிவமைப்பது எவ்வாறு? இந்தக் கேள்விகளுக்கான விடையை வழங்குவதில் ஒரு சட்ட அறிஞரது வகிபாகம் என்ன? இந்த அனைத்துக் கேள்விகளும் கடந்த கால மத்ஹப் சுமைகளில் இருந்து விடுபட்ட ஒரு சிந்திப்பை வேண்டி நிற்பனவாகும்.

நாம் முன்னம் கண்டு வந்த அறிஞர்களது கருத்துகள், விளக்கவுரைகள் என்பன ஒரு வகையில் முரண்பட்ட பிரிவினர்க்கு மத்தியில் ஒரு நெருக்கத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தி அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை, முரண்பாட்டுக்கான காரணியாகவன்றி, பன்முகத் தன்மையனவாக நோக்குவதற்குரிய தளத்தை உருவாக்க முடியும். என்றாலும் இந்த முரண்பாடுகளுக்கான காரணங்களைத் தெளிவாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் தைரியமும் எமக்கு இன்றியமையாதன. நாம் அல்-குர்ஆனிலிருந்தும் நபிகளாரின் வழிகாட்டுதல்களில் இருந்தும் நெறிபிறழ்ந்தமையே இதற்கான பிரதான காரணம். அல்-குர்ஆன் கூறுகின்றது:

أَعَدَّ اللَّهُ لَهُم عَذابًا شَديدًا فَاتَّقُوا اللَّهَ يا أُولِي الأَلبابِ الَّذينَ آمَنوا قَد أَنزَلَ اللَّهُ إِلَيكُم ذِكرًا رَسولًا يَتلو عَلَيكُم آياتِ اللَّهِ مُبَيِّناتٍ لِيُخرِجَ الَّذينَ آمَنوا وَعَمِلُوا الصّالِحاتِ مِنَ الظُّلُماتِ إِلَى النّورِ وَمَن يُؤمِن بِاللَّهِ وَيَعمَل صالِحًا يُدخِلهُ جَنّاتٍ تَجري مِن تَحتِهَا الأَنهارُ خالِدينَ فيها أَبَدًا قَد أَحسَنَ اللَّهُ لَهُ رِزقًا - الطلاق: ١٠ - ١١

**“அல்லாஹ் (அவர்களுக்குக்) கடினமான வேதனையை (மறுமையில்) சித்தம் செய்திருக்கின்றான்; ஆகவே, ஈமான் கொண்டுள்ள அறிவுடையோரே! அல்லாஹ்வை நீங்கள் அஞ்சி நடந்து கொள்ளுங்கள். திட்டமாக அல்லாஹ் உங்களுக்கு நினைவுறுத்தும் இவ்வுபதேசத்தை இறக்கி வைத்திருக்கின்றான். அன்றியும், ஒரு தூதரையும் அவன் (அனுப்பி வைத்தான்.) அவர் அல்லாஹ்வுடைய தெளிவான வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார். ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்பவர்களை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக; மேலும் எவர் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல் செய்கின்றாரோ அவரை அல்லாஹ் சுவனச் சோலைகளில் பிரவேசிக்கச் செய்கிறான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடி் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். அல்லாஹ் அவர்களுக்குத் திடமாக உணவை அழகாக்கினான்.” (துலாக் 65:10–11)**

எமக்கு முன்னம் வாழ்ந்த சமூகங்கள், தம் மத்தியில் எழுந்த பிளவுகளினால் சீர்கெட்டுப் போயின. இதற்கான பிரதான காரணம், அவர்கள் தமக்கு இறக்கப்பட்டவற்றைப் புறக்கணித்து, இறையோனின் தூதர்களது ஞாபகமூட்டல்களை மறந்து போனமையாகும். அதனால் அவர்களது உள்ளங்கள் கடினமாகின. உறவுகள் பாதிக்கப் பெற்றன. வெறுப்பும் குரோதமுமே அவர்களது மனங்களை நிரப்பியிருந்தன. இதிலிருந்து மக்கள் வெளியேற வேண்டுமானால் அவர்கள் தாம் மேற்கொண்டிருந்த வேதப் புறக்கணிப்பைக் கை

விட வேண்டும்; வேத வழிகாட்டலை மீண்டும் பற்றிப் பிடிக்க வேண்டும்.

இதுகால வரை மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போதுமானவையாக இல்லை. இனிமேல் தான் மிக முக்கியமான எட்டை எடுத்து வைக்க வேண்டியிருக்கின்றது. அல்-குர்ஆனை நோக்கி மீள வந்து, அதனைப் பலமாகப் பற்றிக் கொள்வதும் அல்லாஹ்வின் வழிகாட்டல்களை மீள உயிர்ப்பிப்பதும் தான் மிகவும் முக்கியமானது.

இதனை மேற்கொள்ளப் போவது யார்? உம்மத்தின் அரசியல் தலைவர்களா, அறிஞர்களும் அவர்களோடு இணைந்தவர்களுமா, உலுல் அம்ர் எனும் துறை சார்ந்தவர்களா?

எமது உம்மத்தின் தலைமைகளினதும் அங்கத்தவர்களினதும் செயற்றிறனை மீளக் கொண்டு வர வேண்டும். இந்த மாற்றத்திற்கான எண்ணம் அவர்களில் உயிர்பெற வேண்டும். உள்ளங்களுக்கிடையில் அன்புப் பிணைப்பு ஏற்பட வேண்டும். அனைவரும் அல்லாஹ்வின் அடியார்களாகவும் முதலில் மானுட சகோதரத்துவத்தையும் அடுத்து மார்க்க சகோதரத்துவத்தையும் பேணுபவர்களாகவும் மாற வேண்டும். அத்தகு மாற்றம் நிகழாது போயின், இந்த வார்த்தைகள் யாவும் வெறுமனே களிப்பூட்டும் கற்பனையாக மாத்திரமே அமையும். கற்பனைகள் எப்போதும் நிழல்கள் மாத்திரமே. அல்லாஹு தஆலா எதிர்காலத்தில் இந்த உம்மத்தில் நல்ல விதைகளை விதைக்க வேண்டும். அவர்கள் மூலம் நல்ல சிந்தனைகள் எழுந்து, செயல் வடிவம் பெற்று, அனைவரும் நலம் பெற வேண்டும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَيَوْمَئِذٍ يَفْرَحُ الْمُؤْمِنونَ، بِنَصرِ اللَّهِ يَنصُرُ مَن يَشاءُ وَهُوَ العَزيزُ الرَّحيمُ - الروم: ٤ - ٥

**"...அந்நாளில் மு..:மின்கள் மகிழ்ச்சியடைவார்கள். அல்லாஹ்வின் உதவியினால் (வெற்றி கிடைக்கும்). அவன் தான் நாடியவர்களுக்கு உதவி புரிகிறான். மேலும் (யாவரையும்) அவன் மிகைத்தவன்; மிக்க கிருபையுடையவன்."** **(ரூம் 30:4–5)**

## பகுதி ஐந்து

# கருத்து வேறுபாடுகளை எதிர் நிலையாகவன்றி பன்முக வடிவமாக நோக்குதல்

### *1.* பன்மைத்துவம் ஒருமைப்பாட்டுடன் முரண்பட மாட்டாது

நாம் உறுதிப்படுத்த விழைவது, பன்மைத்துவம் ஒருமைப்பாட்டை மறுக்க மாட்டாது என்பதைத் தான். என்றாலும் கூட, ஒவ்வொரு சிந்தனைப் பிரிவினரும் ஏனையவர்களை பித்அத் வாதிகள், பாவிகள், இறை நிராகரிப்பாளர்கள் போன்ற சொல்லாடல்கள் ஊடாகத் தான் எதிர் கொண்டிருக்கின்றார்கள். மீட்சி பெற்றோர் தாம் மாத்திரமே, ஏனையோர் அழிவுப் பாதையில் உள்ளோர் என்றே ஒவ்வொருவரும் கருதி வந்தனர். நிலைமை இவ்வாறாயினும் இந்த ஒவ்வொரு பிரிவினரும் முஸ்லிம் உம்மத்தின் நிழலில் தான் வாழ்கின்றனர் என்பதற்கான தெளிவான குறிகாட்டிகள் இருப்பதாகவே நாம் காண்கின்றோம். முஸ்லிம் உம்மத் கோட்பாட்டை விட்டுச் சென்ற எல்லை மீறல்கள் சில அகீதா நூல்களில் இருக்கவே செய்கின்றன. மத்ஹப் ரீதியாகத் தம்முடன் முரண்படுகின்றவர்களுடன் திருமண உறவுகள் வைத்துக் கொள்ளக் கூடாது; அவர்கள் அறுத்தவற்றைச் சாப்பிடக் கூடாது என்றெல்லாம் சிலர் கூறியிருக்கின்றார்கள். அஹ்லுஸ் ஸுன்னா மத்ஹபுகளுக்கு மத்தியிலும் இவ்வாறான நிலைமைகள் காணப்படவே செய்கின்றன. இத்தகு எல்லை மீறல்கள் இற்றை வரை நிலவி வருவதை நாம் மறுக்கவில்லை. நாம் கருத்தில் கொள்ள வேண்டியது இவ்வாறான எல்லை மீறல்கள் அல்ல; நேர்மையான வாதங்கள் தான் நாம் வேண்டுவது.

அபுல் ஹஸன் அல்-அஷ்அரி தமது ‘மகாலாதுல் இஸ்லாமிய்யீன்’ எனும் நூலின் ஆரம்பத்தில் கூறுவார்: ‘முஸ்லிம்கள் தமது நபியின் மறைவுக்குப் பின்னர் பல விடயங்களில் முரண்பட்டுக் கொண்டனர்; சிலர் மற்றும் சிலரை வழிகேடர்கள் என்றனர்; இன்னும் சிலர் மற்றும் சிலருக்குத் தாம் பொறுப்பல்லர் என்றனர்; இவ்வாறு மிகவும் முரண்பட்ட சிந்தனைப் பிரிவினர்களாக மாறிக் கொண்டனர்; என்றாலும் இஸ்லாம் அவர்கள் அனைவரையும் இணைக்கக் கூடியதாக இருந்தது.’

மேற்கண்ட கருத்துக்குக் குறிப்புரை வழங்கும் போது இமாம் இப்னு தைமிய்யா கூறுவார்: ‘அவரது கருத்தும் ஹன்பலி மத்ஹபின் அதிகமானோரது கருத்தும் இதுவாகும். ஹன்பலி மத்ஹபினரில் சிலர், தம்முடன் முரண்படுகின்றவர்களை காபிர் எனக் கூறியதும் உண்டு. இவ்விடயத்தில் சட்டவியல் அறிஞர்களது கருத்தைப் பொருத்து, இமாம் ஷாபி, மனோ இச்சைகளுக்கு ஆட்பட்ட பிரிவனர்களுள் கத்தாபியப் பிரிவினர் தவிர்ந்த ஏனையோரின் சாட்சியங்களைத் தான் மறுப்பதில்லை என்று கூறுவார். தம்முடன் முரண்படுகின்றவர்களை வெற்றி கொள்ளப் பொய்யுரைக்க முடியும் எனக் கூறுவர் கத்தாபியர். இமாம் ஹாகிம், தனது ‘அல்முக்தஸர் பீ கிதாபில் முன்தகா’ எனும் நூலில், இமாம் அபூ ஹனீபா முஸ்லிம் உம்மத்தில் எவரையும் காபிர் எனக் கூறுவதில்லை என்பார். இமாம் கிர்கி முதலான சில இமாம்களிடமும் இதே நிலைப்பாடு இருந்ததாகக் குறிப்பிடுவார் இமாம் அர்ராஸி. கிப்லாவை முன்னோக்கும் எவரையும் காபிர் எனச் சொல்ல முடியாது என்பதே எமது நிலைப்பாடும் ஆகும்.’

இந்த விடயம் தொடர்பாக இமாம் ஷம்ஸுத்தீன் அத்தஹபி பேசுவார்: ‘இமாம் அஷ்அரி அவர்களது ஒரு கூற்று என்னை மிகவும் கவர்ந்தது. அது பைஹகீ எனும் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, அபூ ஹாஸிம் அப்தவி கூறினார்: ஸாஹிர் இப்னு அஹ்மத் ஸரக்ஷி கூறினார்: பக்தாதில் எனது வீட்டில், இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரி தனது மரணத் தருவாயின் போது என்னை அழைத்துக் கூறினார்: கிப்லாவை முன்னோக்கும் எவரையும் நான் காபிர் எனக் கூறியதில்லை என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்; ஏனெனில் அனைவரும் ஒரே இறைவனையே நோக்குகிறார்கள்; இந்த வேறுபாடுகள் எல்லாம் வெறும் வார்த்தை வேறுபாடுகளே.’

தொடர்ந்து கூறுவார் இமாம் தஹபி: இதே கருத்தைத் தான் நானும் கொண்டிருக்கின்றேன். எமது ஆசானான இமாம் இப்னு தைமியாவும் தனது இறுதிக் காலங்களில் கூறுவார்: ‘நான் இந்த உம்மத்தில் எவரையும் காபிர் என்று சொல்லவில்லை. நபியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்: நீங்கள் சரியானதைச் செய்யுங்கள்; சரியானதை நெருங்கி வர முயற்சி

செய்யுங்கள்; அறிந்து கொள்ளுங்கள், உங்களது மிகச் சிறந்த செயல் தொழுகையாகும். ஒரு மு'.மின் எப்போதும் வுளூவைப் பேணிக் கொள்வான்.'

நீண்டதோர் அறிவியல் பயணத்தின் பின்னர் இந்த அறிஞர்கள் கண்டு கொண்டுள்ள முடிவின் சாராம்சமாவது, முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பிக்ஹ், மற்றும் அகீதா ரீதியான கருத்து வேறுபாடுகள், அல்லாஹ்வை மாத்திரமே வணங்கும் நிலையிலிருந்து அவர்களை வெளியேற்றாத வரை பரஸ்பரம் ஒருவரை ஒருவர் காபிர் எனக் கூறிக் கொள்வதற்கான இடம்பாடு ஏதும் இல்லை என்பதாகும். இமாம் இப்னு தைமிய்யா வுளூவையும் தொழுகையையும் ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள். இவை இரண்டும் அல்லாஹ் ஒருவன் என்பதைப் பறை சாற்றும் கிரியைகள்; இஸ்லாமிய அகீதாவின் வெளிப்படையான விளைவுகள். இந்த முரண்பாடுகள் ஏற்படுத்திய அனைத்து சிக்கல்களுக்கு மத்தியிலும் மத்ஹப் மற்றும் இல்முல் கலாம் ரீதியிலான அனைத்து வாதங்களுக்கு மத்தியிலும் இஸ்லாமிய அகீதாவைக் கடைப்பிடிப்பதற்குரிய அளவு கோல்களை சுருக்கமாக வரையறை செய்வதற்கான முயற்சியாகவும் இது இருக்கலாம்.

இபாழிய்யாக்களின் அறிஞர்களில் ஒருவரான அபூ ய'.கூப் அல்வார்ஜிலானி (மறைவு ஹி. *570*) தனது 'அத்தலீல் வல்-புர்ஹான்' எனும் நூலில், இஸ்லாமிய உம்மத் என்பது, அனைத்து சிந்தனைப் பிரிவுகளையும் உள்ளடக்கியது என்கின்றார்: 'கதரிய்யாக்களது மார்க்கம், முர்ஜிஆக்களது மார்க்கம், அபூ ஹனீபாவின் மார்க்கம், மாலிக்கின் மார்க்கம், ஷாபியின் மார்க்கம் என்று சொல்லப்படுவதில்லை... முஸ்லிம் உம்மத்தின் பிரிவுகளாக இவை இருப்பதில் தவறுகளில்லை.'

இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தும் போது முஹம்மத் இப்னு இப்றாஹீம் அல்கந்தி கூறுவார்: 'முஸ்லிம்களும் (இபாழிய்யாக்கள்) கவாரிஜ்களும் அனைவரும் பெயர்களினால் தான் வித்தியாசப்படுகின்றார்கள். அல்லாஹ்வையும் மலக்குமார்களையும் தூதுவர்களையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டவர்களை எவரும் முஷ்ரிக்குகள் என்று சொல்வதில்லை. முஸ்லிம் அறிஞர்கள் (இபாழிய்யாக்கள்) இந்த விடயத்தில் சரியான, நீதியான நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர். இந்த விடயத்தில் அவர்கள் மத்தியில் முரண்பாடுகள் இல்லை. அது போல் மனிதர்களில் இரு வகையினர் இருக்கின்றனர் என்பதிலும் கருத்து வேறுபாடுகள் இல்லை. முதல் பிரிவினர் அல்லாஹ்வையும் மலக்குமார்களையும் தூதுவர்களையும் மறுமை நாளையும் மரணத்தையும் மீள் எழுவதையும் நன்மை தீமையையும் ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் ஈமான் கொண்ட ஏகத்துவ வாதிகள் எனக் கணிக்கப்படுவர். இவர்களுக்கு மறுதலையாக இருக்கின்றார்கள் ஷிர்க் வாதிகள். இவர்கள் மாற்று உம்மத்தினர்.'

பிறிதோர் இடத்தில் அல்-கந்தி கூறுவார்: 'யார் அல்-குர்ஆனை ஏற்றிருந்தாலும் அதற்குப் பிழையாக வியாக்கியானம் செய்து, கருத்துத் திரிபுகளை ஏற்படுத்துகின்றாரோ, அவர் அல்-குர்ஆனைத் தான் ஆதாரமாகக் கொள்கின்றார் எனின், அவர் ஈமான் கொண்ட ஏகத்துவ வாதிகளின் பிரிவிலேயே சேர்க்கப்படுவார். அவர் ஒரு முனாபிக், வழிகேடர், காபிர் என்று சொல்லலாம். ஆனால் ஷிர்க் செய்பவர் அல்லர். யுத்தத்தில் அவரை அடிமையாகப் பிடிக்க முடியாது; அவரது சொத்துக்கள் கனீமத்தாக மாற்றப்பட முடியாது.'

இங்கு, குப்ர் என்ற வார்த்தையின் மூலம் இபாழிய்யாக்கள் நாடுகின்ற கருத்தை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். சிலர் தம்முடன் முரண்படுகின்றவர்களைக் காபிர்கள் என்றார்கள். சிலர் உம்மத்தை விட்டு அவர்களை வெளியேற்றும் குப்ர் செயற்பாடு என்றார்கள். இபாழிய்யாக்கள் 'அருள்களை நிராகரித்தல்' என்ற கருத்திலேயே இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

அஷ்ஷெய்க் அபூ ஹப்ஸ் இப்னு அம்ரூஸ் இப்னு பத்ஹ் அந்நபூஸி, தனது 'உஸூலுத் துன்யவிய்யா அஸ்ஸாபிய்யா' எனும் நூலில், 'அல்லாஹ் ஒருவன் என்போரைக் கையாள்தல்' என்ற தலைப்பின் கீழ் பேசுவார்: 'நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அவனை எந்தப் படைப்புக்கும் ஒப்பாக்காமல், அவனுக்கு இணையெதுவும் வைக்காமல் ஏற்று, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதுவரும் ஆவார் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றவர் ஷிர்க்கிலிருந்து வெளியேறி விட்டார் என்பதாகும். பின்னர் அல்லாஹ் கடமைகளை வழங்கி அவர்களைச் சோதிக்கின்றான். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَقَد فَتَنَّا الَّذِينَ مِن قَبلِهِم فَلَيَعلَمَنَّ اللَّهُ الَّذِينَ صَدَقوا وَلَيَعلَمَنَّ الكاذِبينَ - العنكبوت:٣

**"நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே.. அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம். உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்." (அன்கபூத் 29:3)**

இங்கு தாம் ஏற்றுக் கொண்டதைச் செயற்படுத்தியவர்கள் மு.்.மின்கள்; பொய்ப்படுத்தியவர்கள் ஏமாற்றுக்காரர்கள். தாம் ஏற்றுக் கொண்டவற்றைச் செயற்படுத்தாமல் பாழ்படுத்தியவர்களை அல்லாஹு தஆலா முனாபிக்குகள் என்று அழைத்தான். ஷிர்க் வைப்பவர்கள் எவரும் இந்தப் பெயர் கொண்டு அழைக்கப்படவில்லை. இவர்கள் மு.்.மின்களுடனேயே இருந்தனர். அவர்களது திருமணம், வாரிசுச் சொத்து, சாட்சியத்தின் ஏற்பு, முஸ்லிம் அடக்கஸ்தலங்களில் அடக்கம் செய்தல்,

அவர்கள் அறுத்தவற்றைச் சாப்பிடல் முதலான எந்த உரிமையும் தடை செய்யப்படவில்லை. அவர்களது நயவஞ்சகத்தின் காரணமாக அவர்களது ஈமானையும் இஸ்லாத்தின் பாலான அவர்களது விசுவாசத்தையுமே அல்-குர்ஆன் மறுத்துரைத்தது. அல்லாஹ் அவர்களை முனாபிக்குகள் மற்றும் காபிர்கள் என்றே அழைத்தான்; முஷ்ரிக்குகள் என்று அழைக்கவில்லை. அல்லாஹு தஆலா மானுடப் படைப்பில் மூன்று நிலைகளை அவற்றின் பெயர்களுடன் குறிப்பிட்டுள்ளான். முஷ்ரிக் என்பவன் சொல்லையும் செயலையும் மறுப்பவன்; முனாபிக் என்பவன் சொல்லை ஏற்று செயலைப் பாழ்படுத்துபவன், மு∴மின் என்பவன் தான் ஏற்ற சொல்லையும் செயலையும் முழுமையாக நிறைவேற்றுபவன். முனாபிக்குகள், ஷிர்க் வைப்பவர்கள் எனக் கூறப்பட மாட்டார்கள். ஆனால் இருவரும் காபிர்கள் என அழைக்கப்படுவார்கள். அது போல் முஷ்ரிக்குகள், முனாபிக்குகள் என அழைக்கப்பட மாட்டார்கள்.'

'இறை நிராகரிப்பு, பெரும்பாவம், மாறு செய்தல் என்பனவற்றில் மக்கள் வேறுபடல்' எனும் தலைப்பில் இந்த விடயம் குறித்துப் பேசும் போது அல்-வார்ஜிலானி கூறுவார்: 'அறிந்து கொள்ளுங்கள், ஷிர்க் எனும் பிரயோகம் குப்ரைக் குறிக்கும் என்பதில் மக்களிடம் உடன்பாடு இருக்கின்றது. ஆனால் செயற்பாட்டு ரீதியான குப்ர், ஷிர்க்காகுமா என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சிலர் ஷிர்க்காகும் என்றனர்; சிலர் ஆகாது என்றனர். முதல் நிலைப்பாட்டை இபாழிய்யாக்களும் கவாரிஜ்களும் கொண்டிருந்தனர். இரண்டாம் நிலைப்பாட்டை அஹ்லுஸ் ஸுன்னாக்களும் மு∴தஸிலாக்களும் கொண்டிருந்தனர்.'

குப்ர் எனும் சொல்லின் பிரயோகத்தைப் பொறுத்தவரையில், அது அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் அனைத்து செயற்பாடுகளையும் குறிப்பதாகும். 'தௌஹீத்' எனும் தனது நூலில் அபுல் ஹஸன் அல்-பஸ்யவி கூறுவார்: 'குப்ர் இரண்டு வகைப் படும். ஒன்று, இறக்கப்பட்டவற்றை நிராகரித்தல்; மற்றையது அருள்களையும் விளக்கத்தையும் நிராகரித்தல்.'

நாம் மேற்கண்டவற்றிலிருந்து இபாழிய்யாக்கள் தம்முடன் முரண்படுகின்றவர்களை இஸ்லாத்தின் குடையை விட்டும் வெளிச் சென்றவர்களாகக் கொள்வதில்லை எனலாம். எமது சிந்தனையை நாம் கட்டியெழுப்ப வேண்டிய அடிப்படை இதுவே. இமாமீக்களிடமும் இதே உணர்வைக் கண்டு கொள்ளலாம். இமாமிய நம்பிக்கைகளுடன் முரண்படுகின்றவர்களைக் காபிர்கள் எனக் கொள்ளாத முதலாவது ஷஹீத் தனது 'அல்கவாஇத் வல்பவாஇத்' என்ற நூலில் பெரும் பாவங்கள் பற்றிப் பேசும் போது கூறுவார்: 'இந்த பெரும் பாவங்கள் குறித்து ஆழ்ந்து நோக்கினால் இவையனைத்தும் ஐந்து அத்தியாவசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டன என்பது புலனாகும். அவை, மார்க்கம்,

உயிர், அறிவு, வம்சம், செல்வம் என்பனவாகும். மார்க்கம் எனும் நலனில் நம்பிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு பகுதி இருக்கின்றது. இவற்றுள் ஒன்றில் 'குப்ர்' என்று சொல்லப்படுவன, குப்ரானவை அல்ல எனச் சொல்லப்படுவனவும் கவாரிஜ்கள், முர்ஜிஆக்கள், முஜஸ்ஸிமாக்கள் போன்ற முஸ்லிம் உம்மத்தின் பித்ஆப் பிரிவினர்களது கூற்றுகளும் அடங்கும்.'

இரண்டாம் ஷஹீத் என அறியப் படும் ஸைனுத்தீன் அல் ஜுபாஇ, தனது 'ஹகாஇகுல் ஈமான்' எனும் நூலில் குறிப்பிடுவார்: 'இஸ்லாம் என்ற பாடத்தில் ஒருவர் வெளிப்படையாக இரண்டு கலிமாக்களையும் ஏற்றுக் கொள்வது அவர் முஸ்லிம் என்பதற்குப் போதுமானது. ஆனால் ஈமானைப் பொறுத்தவரை ஐந்து அடிப்படைகளை அவர் ஏற்றுக் கொள்வதுடன் அவர் அவற்றை நம்பிக்கை கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்தவும் வேண்டும்.. அப்பொழுது தான் அவர் மு∴மின் எனப்படுவார் என நான் குறிப்பிட்டுள்ளேன். இந்தக் கருத்துக்குப் பல ஹதீஸ்கள் ஆதாரமாக இருக்கின்றன. தம்முடன் முரண்படுகின்றவர்கள் முஸ்லிம்களாவர்; ஆனால் மு∴மின்களல்லர் என இமாமிய அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளமையும் எனது கருத்தைப் பலப்படுத்துகின்றது.'

தனது நூலின் பிறிதோர் இடத்தில் இரண்டாம் ஷஹீத், இமாமிய அறிஞர்களின் நோக்கம் குறித்தும் தம்முடன் முரண்படுகின்றவர்களைக் காபிர் என்று சொல்வது குறித்து அவர்கள் மத்தியில் இருந்த அபிப்பிராய பேதங்கள் குறித்தும் பேசுவார்: 'இரண்டு கலிமாக்களையும் ஏற்றுக் கொள்கின்ற ஒருவரை, அவரது ஈமான் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி ஆராயாமல், முஸ்லிம் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர் இமாம்களின் தலைமைத்துவத்தை ஏற்றாலும் ஏற்காவிடினும் சரியே. ஆனால் ஒருவர் வெளி ஆதாரம் ஒன்றின் அடிப்படையில் இதனை விட்டும் வெளிச் சென்றால் அவரை முஸ்லிம் என்பதில்லை. அதேவேளை இமாம்களின் தலைமைத்துவத்தை உண்மைப்படுத்துவது அவர்களது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும். இது, அவர்களது மத்ஹபின்படி ஆதாரம் காட்டி நிறுவும் அவசியம் இல்லாத அளவுக்குத் தெளிவானதோர் உண்மையாகும்... இங்கு வெளிப்படையான அவரது இஸ்லாத்தை அங்கீகரித்தல் என்பதன் பொருள், அதிகமான இஸ்லாமிய சட்டங்கள் அவரில் செல்லுபடியாகும் என்பதென்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் ஒருவர் இரண்டு கலிமாக்களையும் ஏற்றுக் கொள்வதன் காரணமாகவே அவர் மீது பல சட்டங்கள் செல்லுபடியாகும். உதாரணமாக, அவரைத் திருமணம் செய்ய முடியும், அவர் சுத்தமானவர், அவரது உயிரும் உடைமையும் பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற, சட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல சட்டங்கள் செல்லுபடியாகும் என அல்லாஹு தஆலாவே குறிப்பிட்டுள்ளான்... அறிந்து கொள்ளுங்கள் கணிசமான

இமாமிய்ய அறிஞர்கள் தம்முடன் முரண்படுகின்றவர்களைக் காபிர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பெரும்பாலானவர்கள் அவர்களை முஸ்லிம்கள் என்றே கருதுகின்றனர். இது வெறுமனே மொழி ரீதியான ஒரு கருத்து வேறுபாடு மாத்திரமேயாகும். ஏனெனில், அவர்களை முஸ்லிம்கள் தான் என்று சொன்னவர்கள், உண்மையில், அவர்களில் அதிகமான இஸ்லாமிய சட்டங்கள் செல்லுபடியாகும் என்பதையே நாடியிருக்கின்றார்கள். அல்லாது அடிப்படையில் அவர்கள் முஸ்லிம்கள் எனக் கருதவில்லை.’[1]

தலைமைத்துவம் என்பது ஷைதிய்யாக்களைப் பொறுத்தமட்டில் மிகப் பிரதானமானதாகும். ஷைதிய்யாவைச் சார்ந்திருக்க வேண்டுமெனில் அவர்களது நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதும் அவசியம். அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தலைமைக்குரியவர்கள் என்பதைக் குறிக்கும் சட்ட வசனம், திட்டவட்டமாக அந்தக் கருத்தைக் குறிக்கவில்லை என்ற அடிப்படையில் இருந்தே ஷைதீக்களின் பிறர் பற்றிய பார்வை எழுகிறது. அந்த வசனம் குறிக்கும் திட்டவட்டத்தன்மை[2] குறித்த

---

*(1)* இங்கு வெளி ஆதாரத்தின் மூலம் வெளியேறியவர் என்பது, எதிர்ப்புடன் வெளியேறியுள்ளார் என்பதையே குறிக்கிறது. ஏனெனில் செயற்பாட்டளவில் எதிர்ப்பு வெளிப்படுத்தப்படுகிறது என்ற கருத்தைத் தான் வசனப் போக்கிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இந்த விடயங்கள் குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்துடன் முடிந்து விட்டன. ஸஹாபாக்களது காலம் முடிந்து விட்டது. அதே போல் எமது காலத்தில் பாவங்கள் மன்னிக்கப்பட்ட ஓர் இமாமை வெளிப்படையாக நாம் காண முடியாதுள்ளது. எனவே இமாமுக்கு எதிராக செயற்படுகிறார் என்று சொல்லி நாம் யாரையும் காபிர் என்று சொல்ல முடியாது.

*(2)* அஸ்ஸெய்யத் ஸாரிமுத்தீன் இப்றாஹீம் இப்னு முஹம்மத் அல்வஸீர் (மறைவு ஹி. *914*) அவர்கள், தனது ‘அல்புஸூல் அல்லு.'.லுஇய்யா’ என்னும் நூலில், சட்ட வசனத்தை இரண்டாகப் பாகுபடுத்தி நோக்குகின்றாகள். ஒன்று வெளிப்படையானது; மற்றையது மறைமுகமானது. வெளிப்படையானது என்பது, குறித்ததொரு சொல் அதன் அடிப்படை மொழிப் பிரயோகத்தின் அடிப்படையில், வேறு ஒரு கருத்துக்கு இடம்பாடு இல்லாமல், குறித்த ஒரு கருத்தை மாத்திரம் குறிக்கக் கூடியதாக இருப்பதாகும். மறைமுகமானது என்பது, குறித்ததொரு சொல் வேறு கருத்துக்கு இடம்பாடு இல்லாமல் குறித்த ஒரு கருத்தை மாத்திரம் குறிக்கும். ஆனால் அது அடிப்படை மொழிப் பிரயோகத்தின் அடிப்படையில் அன்றி, மாற்று விளக்கத்தின் அடிப்படையிலாகும். அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் வஸிய்யத்துக்குரியவர் என்ற சட்ட வசனத்தைப் பொறுத்தவரை இவற்றில் இரண்டாம் வகையைச் சேர்ந்தது என்பது எமது பெரும்பாலான இமாம்களின் கருத்தாகும். ஆனால் ஜாரூதிய்யாக்களும் இமாமிய்யாக்களும் இது முதலாம் வகையைச் சார்ந்தது

அவர்களது வேறுபட்ட நிலைப்பாடு காரணமாக, அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வஸிய்யத்துக்குரியவர்கள் என்பதை மறுப்பதானது, திட்டவட்டமான ஒரு சட்ட வசனத்தை மறுப்பதாகக் கொள்ளப்பட மாட்டாது. ஆக, அம்மறுப்பாளர் காபிராகவோ, பாவியாகவோ கருதப்பட மாட்டார்.

அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வஸிய்யத்துக்குரியவர்கள் என்ற சட்ட வசனம் மிகவும் தெளிவானது என்ற நிலைப்பாட்டைக் கொண்ட ஜாருதீப் பிரிவினரின் இமாம் மன்ஸூர் பில்லாஹி அப்துல்லாஹ் இப்னு ஹம்ஸா, தனது அஷ்ஷாபிஃ பில் இமாமா எனும் நூலில் கூறுவார்: 'எமது உஸூல்களின்படி தலைமைத்துவ விவகாரத்தில் எம்முடன் முரண்படுபவர்களது தவறு, தலைமைத்துவம் தமக்கு மாத்திரமே உரியது என்று சொல்கின்றவர்களது தவறை ஒத்ததாகும். தலைமைத்துவம் தமக்கு மாத்திரமே உரியது என்பவர்களை நாம் பாவிகள் எனக் கூறுவதில்லை. அவ்வாறு நம்புகின்ற ஒருவர், சட்டவியல் அறிஞராகவோ, மு.்.தஸிலாக்களில் ஒருவராகவோ அல்லது ஒரு சாதாரண மனிதராகவோ இருந்தாலும் அவரைப் பாவி என்று சொல்ல முடியாது. ஏனெனில் ஒருவரை பாவி என்றோ காபிர் என்றோ சொல்வது அல்-குர்ஆன், ஸுன்னா அல்லது பகுத்தறிவின் அடிப்படையிலான தெளிவான ஆதாரத்துடன் மாத்திரமே நடைபெற முடியும். ஆனால் இவ்வாறான எந்த ஆதாரமும் இந்த விடயத்தில் இல்லை... இவர்கள் சட்ட வசனத்தை மீறிச் சென்றமை தவறு தான். ஆனால் அவர்கள் பாவிகள் எனக் கூறிவிட முடியாது.'

ஜாருதீக்களின் நிலைப்பாடு இதுவெனின் ஏனைய ஸைதீக்களின் நிலைப்பாடும் இதுவாகவே இருக்கும் என்பதில் ஐயங்கள் இல்லை. இமாம் யஹ்யா இப்னு ஹம்ஸா தனது 'மிஷ்காதுல் அன்வார் லிஸ்ஸாலிஹீன் மஸாலிகில் அப்ரார்' எனும் நூலில் குறிப்பிடுவதாக அஸ்ஸெய்யித் அல்இமாம் அல்ஹாதி இப்னு இப்றாஹீம் அல்-வஸீர் கூறுவார்: 'இமாம் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமைத்துவம் தொடர்பில் வந்துள்ள சட்ட வசனங்கள் திட்டவட்டமானவை(3) என்று நாம்

---

என்கின்றனர். அது போல் ஸைதிய்யாக்கள் தலைமைத்துவம் சட்ட வசனத்தின் மூலமாக மாத்திரமே நியமிக்கப் படும் என்ற கருத்தைச் சொல்வதில்லை.

இஸ்னா அஷரிய்யா இமாமீக்களுக்கு மாற்றமாக ஒருவர் தோன்றி, அவர் ஹஸன் மற்றும் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் பரம்பரையில் வந்தவர் என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும் என்கின்றனர்.

(3) இங்கு திட்டவட்டமானது என்பதன் பொருள், குறித்த செய்தி வந்த அறிவிப்பாளர் வரிசை திட்டவட்டமானது என்பதாகும். மாற்றமாக அது குறிக்கும்

சொன்னாலும், அதனைப் புரிந்து கொள்வதில் விடுகின்ற தவறு ஒரு போதும் குப்ருக்கோ, பாவத்திற்கோ இட்டுச் செல்ல மாட்டாது.'

நாம் இதுவரை கண்டவற்றின் சாராம்சமாவது, வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகளுக்கிடையிலான முரண்பாடுகள், முஸ்லிம் உம்மத்தை விட்டும் அவர்களை ஒரு போதும் வெளியேற்றிவிட மாட்டாது; ஏனெனில் இந்த சிந்தனைப் பிரிவுகளுக்கு மத்தியிலான உடன்பாடுகள், முரண்பாடுகளை விடவும் அதிகமானவையாகும். இந்த அடிப்படையின் மீது தான் எம் அனைவரதும் கவனம் குவிய வேண்டும். இதனைத் தகர்த்து விடவோ, மீறிச் செல்லவோ நாம் முற்படக் கூடாது. அது போலவே தம்முடன் முரண்படுகின்றவர்களை நரகத்துக்குரியவர்கள் என்றும் உடன்படுகின்றவர்களை சுவர்க்கத்துக்குரியவர்கள் என்றும் தீர்ப்புச் சொல்வதையும் நாம் ஏற்க மாட்டோம். மனிதர்களை சுவர்க்கத்துக்குரியவர்கள் என்றும் நரகத்துக்குரியவர்கள் என்றும் தீர்மானிப்பது அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரிய உரிமையாகும். எந்த ஒரு மனிதனும் அதில் தலையிட முடியாது. அல்லாஹ்வின் கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்து, ஒருவரையொருவர் புரிந்து கொண்டும் பரஸ்பர ஒத்துழைப்புடனும் மானுடப் படைப்பின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அகிலத்தை அபிவிருத்தி செய்ய உழைப்பதுவே எமது கடமையாகும். அவ்வாறன்றி சுவனத்திலும் நரகத்திலுமான மனிதர்களின் அந்தஸ்த்துகளைப் பற்றி விவாதிப்பதல்ல நாம் செய்ய வேண்டுவது. ஒரே உம்மத் என்ற குடையின் கீழ், முரண்பட்டவர்களுடனும் சகவாழ்வைப் பேணுவதற்காக உழைப்பதுவே எமக்குரிய கடமை.

## 2. முஸ்லிம்கள் மத்தியில் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்குமான அடிப்படைகள்

மு.்.மின்கள் அனைவரும் சமாதானத்தை நிலைநாட்டுகின்ற போதே, இவ்வுலகில் பூமியை அபிவிருத்தி செய்து, இறை அமானிதத்தை நிறைவேற்றும் பணி சாத்தியப்படுகின்றது எனலாம். அல்-குர்ஆன் கூறுகின்றது:

يا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ادخُلوا فِي السِّلمِ كافَّةً - البقرة:٢٠٨

---

கருத்து திட்டவட்டமானது என்பதல்ல. இதனை அஸ்ஸெய்யத் ஸாரிமுத்தீன் இப்றாஹீம் இப்னு முஹம்மத் அல்வஸீர் அவர்கள் 'அல்புஸூல் அல்லு.்.லுஇய்யா'வில் விளங்கப்படுத்தியுள்ளார். தலைமைத்துவத்தைக் குறிக்கும் சடடவசனங்கள் மறைமுகமானவை என்ற இமாம் யஹ்யா இப்னு ஹம்ஸா அவர்களுடைய கருத்தையே இவரும் தெரிவு செய்துள்ளார்.

**'நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் சமாதானத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள்."** **(பகரா 2:208)**

சமாதானத்தை நிலைநாட்டல் என்ற கட்டளைக்கு மாற்றாக இருப்பவை யாவை? ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றல், முரண்பாடுகள், மோதல்கள், அமைதியும் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாக்கப்படுதல் முதலியன. இவை ஒரு போதும் அல்-குர்ஆனின் மகாஸிதுகளான ஏகத்துவம், தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி, உம்மத், த.்.வா போன்றவற்றை அடைந்து கொள்ளத் துணை பயக்கப் போவதில்லை.

முதலாவது நல்லாட்சி அரசு தோற்றம் பெற்ற அதே சூழல் மீண்டும் வரப்போவதில்லை. அவ்வேளையில் மதீன சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் உம்மத்தின் மத்தியில் ஆழமான கருத்து வேறுபாடுகளோ, கூர்மையான பிளவுகளோ காணப்படவில்லை. அதனால் அச்சமூகம் அல்-குர்ஆன் வரையறை செய்து கொடுத்த அரசியல் அடிப்படையை முரணுதல்கள் இன்றி ஏற்றுக் கொண்டது. அல்-குர்ஆன் விதி செய்திருந்தது:

وَأَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسولَ - المائده: ٩٢

**"அல்லாஹ்வுக்கும் வழிபடுங்கள்; (அவன்) தூதருக்கும் கட்டுப் படுங்கள்..."** **(மாஇதா 5:92)**

அங்கு கருத்து வேறுபாடுகள் பிளவுகளை உண்டு பண்ணுவனவாக அல்லது மோதல்களாக வளர்ச்சியடையவில்லை. அனைவரும் மார்க்கத்தினதும் உம்மத்தினதும் நலனில் ஆழ்ந்த கரிசனை கொண்டிருந்தனர். ஒரு குழு தான் இருந்தது. அனைவரும் அக்குழுவில் கரைந்திருந்தனர். அல்-குர்ஆன் கூறியது:

وَأَلَّفَ بَينَ قُلوبِهِم لَو أَنفَقتَ ما فِي الأَرضِ جَميعًا ما أَلَّفتَ بَينَ قُلوبِهِم وَلكِنَّ اللَّهَ أَلَّفَ بَينَهُم إِنَّهُ عَزيزٌ حَكيمٌ - الأنفال: ٦٣

**"மேலும், (மு.்.மின்களாகிய) அவர்கள் உள்ளங்களுக்கிடையில் (அன்பின்) பிணைப்பை உண்டாக்கினான். பூமியிலுள்ள (செல்வங்கள்) அனைத்தையும் நீர் செலவு செய்த போதிலும் அவர்கள் உள்ளங்களுக்கிடையே அத்தகைய (அன்பின்) பிணைப்பை உண்டாக்கியிருக்க முடியாது. ஆனால் நிச்சயமாக அல்லாஹ் அவர்களிடையே அப்பிணைப்பை ஏற்படுத்தியுள்ளான். மெய்யாகவே அவன் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான்."** **(அன்பால் 8:63)**

நபியவர்கள் ஸஹாபாக்களைப் பிரியும் போது தெளிவான அத்தாட்சியை அவர்களிடம் விட்டுச் சென்றார்கள். அதன் இரவும் பகலின் பிரகாசத்தைக் கொண்டிருந்தது. ஓர் உம்மத்தைக் கட்டியெழுப்பிச் சென்றார்கள் நபிகளார். கிலாபா ராஸிதா எனும் நல்லாட்சி நுபுவ்வத்தின் வழியில் தான் தோற்றம் பெற்றது. அதன் பணி நடைபெற்றது நுபுவ்வத்தின் தொடர்ச்சியாகவே. என்றாலும் காலம் கடந்து செல்ல உள்ளங்கள் இறுகலாயின. தொடர்ந்து நடைபெற்ற குழப்பங்கள் நல்லாட்சியை அநியாயங்கள் நிரம்பிய முடியாட்சியாக மாற்றுவதற்குரிய வழியைத் திறந்து விட்டன.

பெரும் குழப்பங்களும் ஸஹாபாக்கள் மத்தியிலான யுத்தங்களும் நடைபெற்றதன் பின்னர் புதுப்புது சிக்கல்களும், கேள்விகளும் எழுந்தன. பெரும்பாவம் செய்பவரது நிலை; ஜமாஅத்தைப் பிரிந்து செல்பவரது நிலை; கருத்து வேறுபாடுகளின் போது, குர்ஆன் குறிக்கும்,

وَإِن طائِفَتانِ مِنَ المُؤمِنينَ اقتَتَلوا فَأَصلِحوا بَينَهُما فَإِن بَغَت إِحداهُما عَلَى الأُخرى فَقاتِلُوا الَّتي تَبغي حَتّى تَفيءَ إِلى أَمرِ اللَّهِ فَإِن فاءَت فَأَصلِحوا بَينَهُما بِالعَدلِ وَأَقسِطوا إِنَّ اللَّهَ يُحِبُّ المُقسِطينَ - الحجرات: ٩

**'மு.:.மின்களில் இரு சாரார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால், அவ்விருசாராருக்கிடையில் சமாதானம் உண்டாக்குங்கள். பின்னர் அவர்களில் ஒரு சாரார் மற்றவர் மீது அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்வோர் அல்லாஹ்வுடைய கட்டளையின் பால் திரும்பும் வரையில், (அவர்களுடன்) போர் செய்யுங்கள். அவ்வாறு அவர்கள் (அல்லாஹ்வின் பால்) திரும்பி விட்டால் நிச்சயமாக அவ்விரு சாராரிடையே சமாதானம் உண்டாக்குங்கள். (இதில்) நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்.' (ஹுஜுராத் 49:9)**

'அக்கிரமம் செய்வோர்' உம்மத்தில் யாரைக் குறிக்கின்றது; நிகழ்வுகள் மனித நாட்டத்தினாலேயே நடைபெறுவன, அல்லாஹ்வின் நாட்டத்தினால் அல்ல; மனிதனுக்குத் தெரிவுச் சுதந்திரம் இல்லை, அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நடைபெறும்; பாவம் செய்பவனது தீர்ப்பு அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியது முதலான பல. இவற்றுக்குப் பதில் சொல்ல முற்படுகையில் பற்பல சிந்தனைப் பிரிவுகள் உருவாகின. அது போலவே தலைமைத்துவம் சட்ட வசனங்களின் மூலம் நியமிக்கப் படுமா அல்லது மக்கள் தெரிவின் மூலம் நடைபெறுமா என்ற விவகாரமும் இல்முல் கலாம் கலையினுள் நுழைந்து கொண்டது.

அடுத்து, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பித்அத் வாதிகள் என்றும் பாவிகள் என்றும் குற்றம் சாட்டிக் கொள்ளப் புதிய சிந்தனைப் பிரிவுகள்

துணை பயக்கவே பிளவுகள் ஆழமாயின. மக்களும் பிளவுற்று ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடம் இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி காணலாயினர். இவை மேலோட்டமான முரண்பாடுகளாக அல்லாது, மார்க்கத்தைப் பின்பற்றல், தலைமைத்தும் போன்றவற்றின் ஆழமான பகுதிகளிலும் வேர் விட்டிருந்தன.

முரண்பாடுகள் என்பன, ஸஹாபாக்கள் காலத்தில், குறிப்பாக அபூபக்ர், உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரின் காலங்களில் ஜாஹிலிய்யத்திலிருந்து இஸ்லாத்தை நோக்கி மீள்வதைக் கையாள்வதில் உள்ள முரண்பாடுகளாகவும் கோத்திர, குழு முறைகள் மங்கிப் போவது தொடர்பான முரண்பாட்டு வடிவங்களாகவுமே காணப்பட்டன; பித்னாவுடைய காலத்தைப் போன்று ஆழப்பதிந்த முரண்பாடுகளாக அல்ல. நல்லாட்சியின் தொடராகக் கருதப்படும் உமர் இப்னு அப்துல் அஸீஸின் ஆட்சி ஆரம்பித்த வேளை பிளவுகள் உச்சத்தில் இருந்தன. இந்நிலையில் தான் ஓர் ஒருமைப்பாட்டு வேலைத் திட்டத்தின் அவசியம் ஏற்பட்டது. உமர் இப்னு அப்துல் அஸீஸினது ஆட்சி அனுபவத்தின் மையப்புள்ளி இதுவே. அவர் இல்லையேல் நீதி நிலைபெற்றிருக்காது. எதிரணியினரும் நீதி கிடைக்கப்பெற்று அனைவரும் சமமான முறையில் வாழ முடிந்தது. நீதியான ஓர் அரசு, எப்போதும் அனைவரையும் அரவணைத்துக் கொள்ளும். குறிப்பிட்ட சிலருக்கான ஓர் அரசாக அது இருக்காது. உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களது ஒருமைப்பாட்டு வேலைத் திட்ட அனுபவம் குறித்து பிறிதோர் இடத்தில் நாம் கலந்துரையாடுவோம்.

அனைவரையும் அணைத்துக் கொண்டு இந்த உம்மத் எழுந்து நிற்பதற்கு ஒருமைப்பாடு மிகவும் அவசியம். எதிரிகளை எதிர் கொள்வதற்கு மாத்திரமன்றி இந்த பூமியை வளப்படுத்தும் பணிக்காகவும் ஒருமைப்பாடு அவசியம். ஒரே உம்மத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமாயின் முதலில் அனைவர் மத்தியிலும் சமாதானம் உருவாக வேண்டும். சமூக, சகவாழ்வு மட்டுமன்றி முரண்பட்டவர்களையும் அங்கீகரிப்பதன் ஊடாகவே சமாதானம் சாத்தியமாகின்றது. வேறுபாடு என்பது மனித சமூகவியல் விதிகளில் ஒன்று. இடையில் தோன்றிய ஒன்றல்ல அது. முஸ்லிம்களுக்கு மத்தியிலான சமாதானத்துக்கும் சகவாழ்வுக்கும் ஆன அடிப்படை, ஒரு முஸ்லிம், தனது சகோதரனது உயிர், செல்வம், மானம் என்பவற்றைப் பாதுகாப்பதும் நீதியாக நடத்தலும் உரிமை கடமைகளில் சமநிலை பேணுவதுமாகும்.

இவை தான் இஸ்லாமிய உம்மத்தில் சமாதானத்துக்கும் சகவாழ்வுக்குமான தூண்கள். முஸ்லிம்கள் மத்தியில் சமாதானம் நிலைபெறுவதற்கு இவை தவிர வேறு எதுவும் அவசியமில்லை. ஒருவருக்கு ஈமான் இருக்கிறது அல்லது இல்லை என்றோ, சிலரது

இறுதி முடிவு சுவர்க்கம் அல்லது நரகம் என்றோ தீர்ப்புகள் வழங்குவதும் அவசியப்பட மாட்டா. இந்த உலகில் நாம் அனைவரும் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே எம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது. ஒருவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்வதும் நரகத்துக்காளாக்குவதும் அல்ல எமக்குரிய பணி. சகவாழ்வுக்கான அடிப்படைகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டனவல்ல. மக்களிடையான பிளவுகளின் போதும் மத்ஹப் சண்டைகளின் போதும் கூட, இவையே சமாதானத்தின் அடிப்படைகளாக இருந்து வந்துள்ளன. அல்-குர்ஆனிய புரிதலின் மீது கட்டியெழுப்பப்பட்டவை இவை. 'உம்மத்' என்ற நாமத்தின் இறுதி அர்த்தம் எஞ்சியிருந்த வரை இவை பாதுகாக்கப் பட்டே வந்துள்ளன. குறுங்குழுவாத சண்டைகளுக்கு மத்தியிலும் அவ்வப்போது இது சுடர் விட்டுப் பிரகாசித்துள்ளது.

இமாம் ஷாபிஈ குறிப்பிடுவார்: 'ஒரு கூட்டத்தினர் கவாரிஜ்களுடைய சிந்தனையை ஏற்று, தம்மைத் தவிர்த்து ஏனைய அனைவரும் காபிர்கள் என்று கூறும் நிலையிலும் அவர்களுடன் யுத்தம் செய்வது அனுமதிக்கப்பட மாட்டாது. ஏனெனில் அவர்களிடம் ஈமான் எனும் பாதுகாப்பு இருக்கின்றது. அல்லாஹ், யுத்தம் செய்வதற்குக் கட்டளை இட்டுள்ள நிலையை அவர்கள் அடையவில்லை. அலீ ரழியல்லாஹு அன்ஹு குத்பா மேடையில் இருக்கின்ற வேளை பள்ளிவாயலின் ஒரு மூலையில் இருந்து 'சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உள்ளது' எனச் சிலர் கூச்சலிட்டனர் அதற்கு அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், 'இது சத்தியமான வார்த்தை தான். ஆனால் இதன் மூலம் அவர்கள் நாடுவது அசத்தியத்தையே. உங்களுக்கு மூன்று உரிமைகளை வழங்குவது எனது கடமை. அல்லாஹ்வின் நாமத்தை நினைவூட்டும் பள்ளிவாயில்களுக்கு நீங்கள் வருவதை நாம் தடுக்க மாட்டோம்; நீங்கள் எங்களுடன் சேர்ந்து போரிட்டால் அதன் வெகுமதிகளை உங்களுக்குத் தடுக்க மாட்டோம்; உங்களுடன் நாம் போரைத் துவங்க மாட்டோம்.' எனக் கூறினார்கள்.'

தொடர்ந்து பேசுவார் இமாம் ஷாபி: 'அப்துர் ரஹ்மான் இப்னு ஹஸன் இப்னு அல்காஸிம் அல்அஸ்ரகி அல்கஸானி தனது தந்தையார் ஊடாக அறிவிக்கின்றார்: அதீ என்பவர் உமர் இப்னு அப்துல் அஸீஸுக்குக் கடிதம் எழுதினார். அதில், இங்கு கவாரிஜ்கள் உங்களுக்கு ஏசுகின்றார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். அதற்குப்பதில் எழுதிய உமர் இப்னு அப்துல் அஸீஸ் கூறினார்: அவர்கள் என்னை ஏசினால் நீங்களும் ஏசுங்கள் அல்லது மன்னித்துவிடுங்கள். அவர்கள் வாளேந்தினால் நீங்களும் ஏந்துங்கள். அடித்தால் நீங்களும் அடியுங்கள்.'

'இவற்றை அடிப்படையாக வைத்துத் தான் நாம் சொல்கிறோம்' எனத் தொடரும் இமாம் ஷாபிஈ கூறுவார்: 'அவர்களது உயிர்கள் முஸ்லிம்களுக்கு ஹலாலாக மாட்டாது. அவர்கள் மீது இஸ்லாமிய

சட்டங்கள் செல்லுபடியாகும் போது, அவர்கள் எமது எதிரிகளுக்கு எதிராகப் போரிடும் போது, அவர்களுக்கு யுத்த வெகுமதிகள் தடுக்கப்படக் கூடாது. அவர்கள் பள்ளிவாசல்களுக்கும் சந்தைகளுக்கும் வருவதைத் தடுத்தல் தகாது. அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வந்தால், சாட்சியத்துடன் சம்பந்தப்பட்ட அந்த நிகழ்வில், சாட்சி, கவாரிஜ் கொள்கையை ஏற்கும் முன்னர் சம்பந்தப்பட்டிருந்தாலும் பின்னர் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவரது ஒழுக்கம், அறிவு என்பன சீராக இருந்தாலும் சாட்சியின் நிலைப்பாடு குறித்து நீதிபதி தீர விசாரிக்க வேண்டும். அவர்களது மத்ஹபின்படி, தன்மைச் சார்ந்திருக்கின்றவர்களை எப்போதும் உண்மைப்படுத்தி, குறித்த நிகழ்வைத் தான் காணா விட்டாலும் அதனைச் செவியுறா விட்டாலும் தம் பிரிவார்க்குச் சார்பாக சாட்சியம் வழங்குவதை ஆகுமானது என அவர் கருதுகின்றாரா? தம்முடன் முரண்படுபவர்களது உயிர், உடைமைகளுக்குச் சேதம் விளைக்க சாட்சியத்தைத் தவறாகப் பயன்படுத்தவதை அவர் அனுமதிக்கின்றாரா? என்பவற்றைச் சரிவர விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். இவற்றை அவர் அனுமதிப்பார் எனின் அவரது சாட்சியம் ஏற்கப்பட மாட்டாது. அனுமதிக்க மாட்டார் எனின் சாட்சியம் ஏற்கப் படும். அவர்களுக்குரிய உரிமைகளிலும் கடமைகளிலும் அவர்களையும் ஏனையோரையும் வேறுபடுத்தக் கூடாது.'

இபாழிய்யாக்களின் கருத்து வேறுபாட்டுக்குரிய விடயங்களைத் தவிர்த்துப் பார்த்தால் அவர்களிடமும் இதே வகையான சமநிலைப் பார்வையொன்றினை நாம் காணலாம். தமது மத்ஹபுடன் முரண்படுகின்றவர்களைப் புரிந்து கொள்வதிலும் அவர்களுடன் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்வதிலும் ஆரம்ப முன்மாதிரியாகக் கருதப்படக் கூடியவர் ஸாலிம் இப்னு தக்வான் அல்ஹிலாலி. இபாழிய்ய பதிவுகளின்படி, உமர் இப்னு அப்துல் அஸீஸைச் சந்திக்கச் சென்ற தூதுக்குழுவில் இவரும் ஓர் அங்கத்தவர். தம்முடன் முரண்படுகின்றவர்களை 'எமது சமூகத்தார்' என்றே அவர் அழைப்பார். அல்ஹிலாலி கூறுகின்றார்: 'எமது சமூகத்தவர்களைத் திருமணம் செய்வதையும் அவர்கள் எமக்கு வாரிசுகளாக அமைவதையும் நாம் அனுமதிக்கிறோம். எமது கிப்லாவையே அவர்களும் முன்னோக்கும் வரை அவர்கள் எங்களுக்கு ஹராமாக மாட்டார்கள்... அதிகமான கவாரிஜ்கள், நிரபராதி எனத் தெரிந்து கொண்டே ஒருவர் மீது விபச்சாரக் குற்றம் சுமத்துவதை அனுமதிக்கின்றனர்... அந்த நபருடன் ஒரு முறையேனும் பேசியும் இருக்க மாட்டார்கள். அவரது உண்மை நிலை என்பதையும் அறியமாட்டார்கள். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَى أَلَّا تَعْدِلُوا - المائده: ٨

**'...எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம்..." (மாஇதா 5:8)**

எமது சமூகத்தார் இருக்கும் பிரதேசத்திலிருந்து நபியவர்களும் ஸஹாபாக்களும் செய்தது போன்று நாமும் ஹிஜ்ரத் செய்வதற்கு அவசியமில்லை... எமது சமூகத்தின் ஆட்சியாளர்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்வதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அவர்கள் தமது மனோ இச்சைகளைப் பின்பற்றாதிருக்கட்டும்; தெரிந்து கொண்டே ஒரு பாவத்தைச் செய்யாதிருக்கட்டும்; ஸதகாக்களையும் யுத்த வெகுமதிகளையும் அல்லாஹ்வின் கட்டளைப்படி கையாளட்டும்... கவாரிஜ்கள் அல்லாஹ்வைப் பயந்து மார்க்கத்தில் எல்லை மீறாதிருக்கட்டும். அல்லாஹ், அவர்களுக்கு முன்னர் நேர்வழிகாட்டியவர்களுடைய பாதையை வெறுக்காதிருக்கட்டும்... முர்ஜிஆக்கள், அல்லாஹ்வைப் பயந்து, தாம் இது வரை காணாதவர்கள் மீதும் மு:.மீன்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளட்டும்... குழப்பம் விளைவிப்பவர்கள், அல்லாஹ்வைப் பயந்து, அல்-குர்ஆனின் தீர்ப்பை ஏற்று, அதன் வாக்குறுதியை நம்பட்டும். எல்லை மீறியோர், அநியாயமிழைப்போருடன் அவர்கள் தௌபா செய்து மீளும் வரை போர் புரிய, அல்லாஹ் அனுமதித்துள்ளதையும் ஏற்றுக் கொள்ளட்டும்... பித்அத் வாதிகள், அல்லாஹ்வைப் பயந்து, நபியவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றி, பலவீனமான நிலையிலும் அதன்படியே செயல் படட்டும்... எமது சமூகத்தாருடன் சேர்ந்து வாழ்பவர்கள், அல்லாஹ்வைப் பயந்து, தத்தமது மத்ஹபின்படி தீர்ப்புகள் வழங்காதிருக்கட்டும். மாறு செய்யும் கூட்டத்தாருடன் உடன்படிக்கைகள் செய்யாதிருக்கட்டும். தனது கட்டளைகளுக்கு மாறு செய்கின்றவர்களுடன் உடன்படிக்கைகள் செய்ய அல்லாஹ் எவரையும் அனுமதிக்கவில்லை.'

பேரறிஞர் அபூ ய:.கூப் இப்னு யூஸுப் இப்னு இப்றாஹீம் அல் வர்ஜலானி, தனது அத்தலீல் வல் புர்ஹான் எனும் நூலில் 'முரண்படுபவர்களுடன் ஆட்சித் தலைவர் நடந்து கொள்ள வேண்டிய முறை', அதாவது, இபாழிய்யாக்கள் ஆட்சி அமைத்தால் ஏனையவர்களுடன் நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்துப் பேசுவார்: 'ஆட்சித் தலைவர், தம்முடன் முரண்படுகின்றவர்களை, அவர்களது வழிகேட்டை விட்டுவிடுமாறு கோர வேண்டும். அவர்கள் அதற்குச் சாதகமாகப் பதில் தந்தால் அவர்கள் நேர்வழி பெற்று விட்டார்கள்; அவர்களும் எமது சகோதரர்களாக மாறி விடுவா; எங்களுக்குரிய அதே உரிமைகளும் கடமைகளும் அவர்களுக்கும் உரியனவாகிவிடும்.'

ஹழரமௌத்தில் நடந்த போராட்டத்தின் போது, மக்காவாசிகளை நோக்கிப் பேசுவார் அபூ ஹம்ஸா அல்முக்தார் இப்னு அவ்ப்: 'மக்களே! நாங்கள் மக்களுடன் இருக்கிறோம். மக்கள் எங்களுடன் இருக்கின்றனர்.

சிலை வணங்கும் ஒருவர், ஒரு சர்வாதிகாரி, ஒரு பித்அத் வாதி(4) முதலியோருடன் நாங்கள் இல்லை. இஸ்லாத்தின் உரிமைகள், கடமைகளை அவர்களுள் செயற்படுத்துமாறு நாம் அவர்களைக் கேட்போம். அதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களது கொள்கைகளில் அவர்களை விட்டு விடுவோம். எங்களுக்கு உள்ள அதே உரிமைகள் கடமைகளை அவர்களும் பெறுவார்கள். ஆனால் அவர்கள் வழிகேட்டில் தொடர்ந்து இருக்கும் காலமெல்லாம், பாவமன்னிப்புப் பெறும் உரிமையைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். நாங்கள் அவர்களுடன் நீதியாகவே நடப்போம். அவர்களும் யுத்த வெகுமதிகள், ஸதகாக்களுக்கு உரித்துடையவர்கள். ஏனைய முஸ்லிம்களுக்கு (இபாழிய்யாக்களுக்கு) அநியாயம் நடைபெறாமல் நாம் பாதுகாப்பது போல், அவர்களுக்கும் அநியாயம் நடைபெறாமல் பாதுகாப்போம். அவர்களில் எவரேனும் தனக்கான கடமையை நிறைவேற்றத் தவறினால் அவரை நாம் கண்டித்து சரியான வழிக்குக் கொண்டுவர முயற்சிப்போம். அதனை மீறி அவர் செல்லக் கூடுமாயின் அவருடன் போரிடுவதும் அவரைக் கொல்வதும் எமக்கு அனுமதியாகும். அவர்கள் எமக்குக் கட்டுப் பட்டு, தமது பிரதேசங்களில் அவர்களுக்குரிய சட்டங்களைச் செயற்படுத்தி வாழ்வார்களாயின் அவர்களை நாம் விட்டு விடுவோம். ஆனால் ஒரு தெளிவான அல்-குர்ஆன் வசனத்தையோ நடைமுறையில் உள்ள ஒரு ஸுன்னாவையோ மறுப்பதாக அது அமைந்துவிடக் கூடாது. அவர்களது உரிமைகள், கடமைகள் விடயத்தில் அவர்களையும் நீதி விசாரணை செய்வோம். தெளிவான ஒரு தீமையைப் பகிரங்கமாகச் செய்வதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். எமது நடைமுறையில், புதிதாக ஒன்றை அவர்கள் புகுத்த இடமளியோம். ஆனால் அவை தீங்கான விடயங்கள் அல்ல என்றிருப்பின், அவற்றை ஏற்பதில் எமக்குத் தெரிவுச் சுதந்திரம் இருக்கின்றது. எம்மில் ஒருவரைக் கொலை செய்கின்றவரை நாம் கொல்வோம். அவர்களைக் கிளர்ச்சிக் காரர்களாக நோக்க மாட்டோம். கிளர்ச்சிக் காரர்களில் தலைவர்களை மாத்திரமே கொல்வோம்; பொதுமக்களை விட்டு விடுவோம். பொதுமக்களில் மார்க்கத்தைக் குறை சொல்பவர், முஸ்லிம்களைக் கொலை செய்தவர், முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்தோரை நாம் கைது செய்தால், அவர்கள்

---

(4) கலீபா இப்னு கய்யாத் என்பவர் (மறைவு ஹி. 240) இந்த உரிமைப் போராட்டம் பற்றி குறிப்பிடும் பொழுது அபூ ஹம்ஸாவின் உரை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த உரையில் இருந்து நாம் விளங்கிக் கொள்வது, இபாழிய்யாக்களைப் பொறுத்தவரை, சமூக எழுச்சிகளை சமூகத்துடன் மோதலை ஏற்படுத்திக் கொண்டு செய்வதில்லை. ஆனால் கவாரிஜ்கள் போன்ற ஆதிக்கக் குழுக்கள் சமூகத்துடன் மோதலை ஏற்படுத்துகின்றன. இபாழிய்யாக்கள் ஆட்சியாளர்களுடன் மாத்திரமே மோதிக் கொள்வர்.

தௌபா செய்தாலும் அவர்களைக் கொன்று போடுவோம். நாம் கைது செய்ய முன்னர் தௌபா செய்தால் அவர்கள் கொல்லப்பட மாட்டார்கள். கொல்லப் படுபவர்களைத் தொழுவித்து அடக்கம் செய்வோம். எமக்கும் அவர்களுக்கும் இடையில் வாரிசுரிமை மற்றும் ஏனைய உரிமைகள் அனைத்தும் செயற்படுத்தப் படும்...'

'முரண்படுபவர்களது ஆட்சியின் கீழ் இருப்பவர்களுக்கான சட்ட விவகாரங்கள்' எனும் தலைப்பிலும் கருத்துரைப்பார் இமாம் வார்ஜலானி: 'முஸ்லிம்கள் (இபாழிய்யாக்கள்) தரப்பிடம் திட்டவட்டமான முடிவேதும் இல்லாத ஒரு விவகாரத்தில் அல்லது சாட்சியுடனும் சத்தியத்துடனும் நிறுவப் படும் ஒரு விவகாரத்தில் எமக்குச் சார்பாகவோ, எதிராகவோ தீர்ப்பு வந்தாலும் அவை செல்லுபடியாகும். அவற்றை ஏற்று நாம் செயற்பட வேண்டும். ஆனால் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளில் இஜ்மாவுக்கு மாற்றமாகச் செல்ல முடியாது,'

ஸைதிய்யாக்களில் சிலர், தம்முடன் முரண்படுகின்றவர்களைக் காபிர்கள் என்றும் பாவிகள் என்றும் கூறியுள்ளனர். ஆனாலும் அவர்களது அடிப்படை நேர்மையில் குறை காணவில்லை. இதனை இமாம் யஹ்யா இப்னு ஹம்ஸா, 'ஒரு நியாயத்தின் அடிப்படையில் ஒருவரைக் காபிராக்குதல்' என வகைப்படுத்துவார். அதான் சொல்பவருக்குரிய நிபந்தனைகளைப் பேசும் போது, அதில் ஒன்று இஸ்லாம் எனக் குறிப்பிடும் இமாம் யஹ்யா தனது கருத்தை விளக்குவார்: 'ஒரு நியாயத்தின் அடிப்படையில் காபிராகக் கருதப்படக் கூடியவர்களாக, ஜபரிய்யாக்கள், முஷப்பிஹாக்கள், ராபிழீக்கள், கவாரிஜ்கள் ஆகியோரை அடையாளம் காணலாம். இவர்களைக் காபிர்கள் என்று சொல்வதில் முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. சிலர் இவர்களைக் காபிர்கள் என்பர். மற்றும் சிலர் முஸ்லிம்கள் என்பர். அஹ்லுல் பைத் அறிஞர்கள் மற்றும் மு.:.தஸிலாக்கள் இவர்களைக் காபிர்கள் என்றனர். 'ஒரு நியாயத்தின் அடிப்படையில் காபிராகக் கருதப்படக் கூடியவர்கள்' எனும் போது, குறிக்கப் பட்டோர் அல்லாஹ்வையும் அவனது பண்புகளையும் தூதுத்துவத்தையும் ஷரீஅத்தையும் ஏற்றுக் கொண்டிருப்பர்; கிப்லாவை நோக்கித் தொழுவர்; ஸுன்னாவின் பிரகாரம் திருமணம் செய்வர்; நபியவர்களும் குர்ஆனும் உண்மை என நம்புவர். என்றாலும் இவர்களைக் காபிர் என்று தீர்ப்புச் சொல்லத் தக்க ஒரு தவறான நம்பிக்கை அவர்களுள் இருக்கும். உண்மையில் இவர்களைக் காபிர்கள் எனக் கருதுவது தகாது. ஏனெனில் அவர்களைக் காபிர்கள் எனக் கூறுவதற்கான ஆதாரங்களே பல்வேறு இடம்பாடுகளுக்கு உரியனவாயுள்ளன. எனினும் மெதுவாக நோக்கும் போது, இவர்களைக் காபிர்கள் என்றோரும் முஸ்லிம்கள் எனச் சொன்னோரும் இரு தரப்பினருமே அவர்களது அதானை அங்கீகரித்தனர். அவர்கள் மூலமான செய்திகளையும் சாட்சியங்களையும் ஏற்றுக்

கொண்டனர். அவர்களுடைய ஐபரிய சிந்தனை அல்லது அல்லாஹ்வுக்கு ஒன்றை ஒப்பாக்கும் சிந்தனை என்பன அவர்களது இஸ்லாத்தையும் ஈமானையும் பாதித்து விட மாட்டா.'

பிறிதோர் இடத்தில், 'ஒரு நியாயத்தின் அடிப்படையில் ஒருவரைக் காபிராகக் கருத முடியாது' என்பது குறித்துப் பேசும் இமாம் யஹ்யா கூறுவார்: 'அவர்கள், குறித்த ஒரு விடயம் தொடர்பாக இஜ்திஹாத் செய்து, இஜ்திஹாதின் போதாமை காரணமாக அவர்களால் சரியான முடிவுக்குகு வர இயலவில்லை. இஜ்திஹாதில் விட்ட தவறு காரணமாக அவர்களால் சரியான முடிவுக்கு வர இயலவிலலை. இஜ்திஹாதில் விட்ட தவறு காரணமாக அவர்களைக் காபிர்கள் எனச் சொல்ல முடியாது. மட்டுமல்ல, அவர்களது அடிப்படை நேர்மையிலும் அது பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது...'

இமாம் யஹ்யா இப்னுல் முஹ்ஸின், தனது 'அர்ரிஸாலா அல்முகர்ரிஸா லிஅஹ்லில் மத்ரஸா' எனும் ஆக்கத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்தை, இமாம் இப்னு வஸீர் தனது 'ஈஸாருல் ஹக்' எனும் நூலில் மேற்கோள் காட்டிப் பேசுவார். இது, 'அநியாயக்காரர்களை ஆதரித்தல் அனுமதிக்கப்படமாட்டாது' விடயம் குறித்துப் பேசும் போதானது: 'ஒரு நியாயத்துக்காக ஒருவரை ஆதரித்தல் கூடாது எனக் கூற முடியாது. ஏனெனில் அதிகமான அஹ்லுல் பைத்கள், அநியாயக்காரர்களையும் கட்டாயமான ஒரு காரணத்துக்காக ஆதரித்திருக்கின்றார்கள்; நாஸிர் அவர்களில் பலரை ஆதரித்திருக்கின்றார்; அவர்களுக்கு ஜ்.பர் ஸாதிக் ஜும்ஆ தொழுவித்திருக்கிறார்; அல்ஹஸன் அஸ்ஸப்த் அவர்களது ஜனாஸாக்களைத் தொழுவித்திருக்கின்றார்.' இமாம் அல் மஹ்தி முஹம்மத் இப்னுல் முதஹ்ஹிர் அவர்களின் ஒரு கூற்றையும் இப்னுல் வஸீர் முன்வைப்பார்: 'ஒரு காபிரை அவனது குப்ருக்காக விரும்புதல், ஒரு பாவியை அவனது பாவத்துக்காக விரும்புதல் போன்ற ஆதரிப்பு வகைகள் இஜ்மாவின் அடிப்படையில் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால் ஒரு நலனைக் கொண்டு வரும் நோக்கில் அல்லது தீமை ஒன்றைத் தடுக்கும் நோக்கில் அல்லது அவனிடம் உள்ள ஒரு நல்ல பண்புக்காக அவனை ஆதரிப்பது தவறல்ல.'

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது பொல், இமாமிய்யாக்களிடத்தில், ஒருவர் இரண்டு கலிமாக்களை மொழிந்தால் அவரை முஸ்லிம் எனலாம்; அவர் மீது இஸ்லாத்தின் சட்டங்களும் செல்லுபடியாகும். குறிப்பாகத் திருமண சட்டங்கள். ஆனால் முரண்பாடுகள் கடுமையாக இருந்த காலங்களில் இரண்டு வேறுபட்ட மத்ஹபினர் திருமணம் செய்வது ஹராமாக்கப்பட்டிருந்தது. இந்நிலைமையை அஹ்லுஸ் ஸுன்னா மத்ஹபினர் இடையிலும் காண முடிந்தது. இமாம் ஜ்.பர் ஸாதிக்குடைய

சில அறிவிப்புகள் இக்கருத்தை உறுதி செய்கின்றன. அப்துல்லாஹ் இப்னு ஸினான் கூறுவார்: 'நான் அபூ அப்தில்லாஹ்விடம், ஒருவரைத் திருமணம் செய்யும் வகையிலும் அவர் வாரிசாகும் வகையிலும் முஸ்லிமாகக் கருதப்படுவது எப்போது? அவனது உயிர் எமக்கு ஹராமாக்கப்படுவது எப்போது? எனக் கேட்டேன். அதற்கு அவர், வெளிப்படையாக அவர் முஸ்லிமாக இருந்தால் அவரது உயிர் ஹராமாகும்; அவரைத் திருமணம் செய்யவும் வாரிசாக இருக்கவும் அனுமதியுள்ளது எனக் கூறினார்.' அப்துல்லாஹ் இப்னு ஸினானின் மற்றுமோர் அறிவிப்பு வருமாறு: 'அபூ அப்துல்லாஹ் சொல்வதை நான் கேட்டேன்: அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுமாறு உங்களுக்கு உபதேசிக்கின்றேன். மக்களைப் பற்றிய தவறான விடயங்களை உங்களது தோள்களில் சுமந்து கொண்டு இருக்காதீர்கள்; நீங்கள் இழிவுற்றுப் போவீர்கள். அவர்களில் நோயாளிகளைத் தரிசியுங்கள், ஜனாஸாக்களில் கலந்து கொள்ளுங்கள், அவர்களுக்கு சார்பாகவும் எதிராகவும் சாட்சி சொல்லுங்கள். அவர்களுடன் பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபடுங்கள்.'

## 3. தொழுகை ஒன்றிணைக்கக் கூடியது

இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்துவது தான் கூட்டுத் தொழுகையின் பிரதான நோக்கம். குறித்த ஒரு பிரதேசத்தவர்கள் ஒன்று சேர்ந்து தொழுவது எனக் கூறுவதுடன் மட்டுப்படுவதல்ல இது. ஒற்றுமை, இணக்கப்பாடு, பரஸ்பர ஒத்துழைப்பு, சமாதானம் முதலியவற்றைப் பிரதிபலிக்கும் கூட்டுச் செயற்பாடு தான் தொழுகையாக இருக்கின்றது. கூட்டுத் தொழுகை குறிக்கின்ற அரசியல் கருத்து இங்கு நாடப்படவில்லை. அநியாயக்கார ஆட்சியாளனுக்குக் கட்டுப்படுதல் அல்லது ஒருவருக்கு ஆதரவாகவோ எதிராகவோ அணி திரளுதல் போன்றவற்றை நான் நாடவில்லை. இன்று கூட்டுத் தொழுகை முஸ்லிம்களை ஒன்றுபடுத்தும் பணியை இழந்துள்ளது; மக்கள் மத்தியில் பிரிவினைக்குரிய ஓர் அடையாளமாக அது மாறியுள்ளது. இதனால் தான் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ், மின்பர் மீது நின்று முஸ்லிம்களுக்காக துஆச் செய்யும் நடைமுறையைக் கொண்டு வந்தார்கள்.

தான் இணையும் ஜமாஅத்துடன் அல்லது தான் பின்பற்றும் இமாமுடன் முழுமையான உடன்பாட்டுடன் ஜமாஅத் தொழுகை அமைய வேண்டும் என்ற கருத்தையும் நாம் இங்கு நாடவில்லை. ஏனெனில் அது மீண்டும் கூட்டுத் தொழுகையை, நாம் விரும்பாத, பிரிவினையின் அடையாளமாக மாற்றிவிடும். கூட்டுத் தொழுகை என்பது, முரண்பாடுகளின் போது எமது உள்ளங்களின் வெறுப்புகளைத் தணிப்பதற்காக நாம் செல்லும் இடமாக இருக்க வேண்டும் என்பதையே நாம் குறிப்பிடுகின்றோம். உள்ளத்தில் வெறுப்புக்குப் பதிலாக ஆன்மீகத் தூய்மையும் அதன் வெதுவெதுப்பும்

இடம்பிடிக்க வேண்டும்; அன்பின் அனைத்துப் பெறுமானங்களும் அங்கு ஒன்று குவிய வேண்டும். அதனடிப்படையில் தான் பரஸ்பர இணக்கப்பாட்டுக்கான வழி ஏற்பட முடியும். ஒரே இறைவனின் முன்னால் நிற்கின்றோம், ஒரே கிப்லாவை முன்நோக்குகின்றோம், ஒரே குர்ஆனை ஓதுகின்றோம் என்ற உணர்வு அங்கு மேலோங்கியிருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த ஒன்றுகூடலால் நாம் பெறக் கூடிய பயன் தான் என்ன? எமது விவகாரங்களைச் சீர் செய்வதாகவே எமது கூட்டுத் தொழுகைகள் அமைய வேண்டும். எமது உள்ளங்களை மீள்பரிசீலித்து, மென்மைப்படுத்தி, முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவவில்லையாயின், குறைந்த பட்சம் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தனது சகோதரன் மீதுள்ள உரிமைகள் கடமைகளை அது எவ்வாறு நினைவுறுத்த முடியும்? அவர்கள் மத்தியிலான பரஸ்பர வெறுப்பு, பிரிவினைகளுக்கு எடுத்துச் செல்லாமல் தடுப்பது எவ்வாறு? அல்லாஹ்வின் வரையறைகளை மக்கள் மறந்துவிடாமல் காப்பது எப்படி? கூட்டுத் தொழுகை ஊடாக இத்தகு விழுமியங்கள் நிறைவேறாதுவிடின் அது நிச்சயமாகப் பிரிவினைக்கே இட்டுச் செல்லும். இது தான் உண்மையான பித்அத் ஆகும்.[(5)]

கூட்டுத் தொழுகையைப் பொறுத்தவரையில் இந்த கருத்தில் தான் எமது கவனம் குவிய வேண்டும். மனதில் இதை நிறுத்தி செயற்பட்டால் நாம் ஒருவரைப் பின்பற்றித் தொழுவதாலும் அல்லது ஒருவருடன் இணைந்து

---

*(5) அந்த வகையில் கூட்டுத் தொழுகை பற்றிய எமது பார்வை, கூட்டுத் தொழுகை பற்றிய கீழ்வரும் கருத்தை அங்கீகரிக்கவில்லை. அதாவது, ஹஜ் செய்ய வந்த ஒரு கூட்டத்தினர், கஃபாவை ஆக்கிரமித்தால், தொழுகை நேரம் வரும் பொழுது, அவர்கள் கஃபாவின் இமாமைப் பின்பற்றியே தொழ வேண்டும். பின்னர் தமது போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஏனெனில் இது மார்க்கம். அது உலக அரசியல் என்று இந்தக் கருத்துக்கு நியாயம் சொல்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனின், இது தீனுமல்ல, அது துன்யாவுமல்ல. மார்க்கத்தில், யுத்தம் செய்ய தடை செய்யப்பட்ட மாதம் ஒன்றில் கஃபாவை ஆக்கிரமிப்பதற்கு அனுமதியிருக்கிறதா? அங்கு ஹஜ் செய்பவர்களின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்க அனுமதியிருக்கிறதா? -இந்த வரையறைகளை அக்கால முஷ்ரிக்குகள் கூட மீறவில்லை- முஸ்லிம்கள் ஒரே வரிசையில் இருந்து தொழுது விட்டு, பின்னர் சண்டையிட்டுக் கொள்வது மார்க்கத்தில் உள்ள ஒரு விடயமா? அவர்கள் தொழுகையில் ஒன்று சேர்ந்தமையானது, அவர்கள் எவருக்கும் தனது மற்ற சகோதரன் மீதான கடமையைச் சிறிதும் நினைவுபடுத்தவில்லை என்பது போல் இருக்கிறது. அது போல், இந்த எல்லை வரை செல்லும் அதிகாரச் சண்டைகள் துன்யாவும் அல்ல. அத்துடன் நாம் இன்றுவரை அரசியலுக்கும் மார்க்கத்திற்கும் இடையிலான உறவை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான ஒரு கோட்பாட்டை அமைத்துக் கொள்ளவில்லை என்றும் தோன்றுகிறது.*

தொழுவதாலும் பித்அத் செய்கின்ற ஒருவருக்கு அவரது பித்அத்தைப் பரப்ப உதவுகின்றோம் என்ற மனப்பயத்திலிருந்து வெளிவர முடியும். ஏனெனில் கூட்டுத் தொழுகை என்பது உம்மத்தை மையப்படுத்தியே அமைக்கப்பட்டிருக்கின்றது; ஒரு மத்ஹபை அல்லது குழுவினரை மையப்படுத்தி அமைக்கப்படவில்லை. அதுவோலவே, கூட்டுத் தொழுகை என்பதை ஒரு குறித்த ஆட்சியாளனுக்கு அல்லது கட்சிக்கு அல்லது ஜமாஅத்துக்கு ஆதரவளித்தல் என்ற அரசியல் கருத்திலிருந்தும் வெளியில் எடுக்க வேண்டும். தொழுகையின் அங்கீகாரமானது உள்ளங்களை அறிந்த அல்லாஹ்வின் கைகளிலேயே இருக்கின்றது; ஒவ்வொரு அடியானினதும் தூய்மை, இறையச்சம் என்பவற்றிலேயே அது தங்கியிருக்கின்றது.

ஜமாஅத் தொழுகை பற்றிய இந்தப் பார்வை, பல்வேறு மத்ஹபுகளிலும் ஏதோ ஒரு வடிவில் காணப்பட்டிருக்கின்றது. தம்முடன் முரண்படுகின்றவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவது பற்றிய கருத்து வேறுபாடுகள் குறித்துப் பேசுவார் இமாம் நைஸாபூரி: 'மனோ இச்சையைப் பின்பற்றுகின்றவர்களின் பின்னால் அல்லது நாம் திருப்தி கொள்ள முடியாதவர்களின் பின்னால் நின்று தொழுவதில் இமாம்கள் பல கருத்துகள் தெரிவிப்பர். சிலர் அதனை அனுமதிப்பர்... பித்அத் செய்பவர் பற்றிக் குறிப்பிடும் போது இமாம் ஹஸனுல் பஸரி கூறுவார்: 'அவர் பின்னால் நின்று தொழுங்கள்; அவருடைய பித்அத் அவருடையது' என்றார்கள். 'முஸ்லிமான, பருவ வயதையடைந்த ஒருவரது மார்க்க நிலை குறித்துத் திருப்தி காணாவிடினும் அவர் பின்னின்று தொழுதால் தொழுகை நிறைவேறும்; ஆட்சியாளர்கள் மற்றும் ஏனையோருக்குப் பின்னால் அவர்களது மார்க்க நிலை பற்றித் தெளிவற்ற நிலையிலும் ஸஹாபாக்கள் தொழுதிருக்கின்றார்கள்' எனக் கூறுவார் இமாம் ஷாபிஈ.'

மேற்குறித்த கருத்தை உறுதிப்படுத்தும் வகையில், தமது சிந்தனைக்கு முரணான இமாம்களின் பின்னின்று ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றலாம் என இபாழிய்யா அறிஞர்களும் கருதியிருக்கின்றார்கள். இபாழிய்யப் பிரிவுகளில் ஒன்றான ஷ.்.பிய்யாக்களைச் சேர்ந்த ஹாரூன் இப்ன் அல் யமான் என்பாரின் கருத்துகளை மறுத்துப் பேசுவார் இமாம் மஹ்பூப் இப்னு ரஹீல்: 'ஹாரூன் இப்னு அல்யமான், எமது சிந்தனைக்கு முரண்பட்ட அறிஞர்களின் பின்னால் நின்று தொழுவது அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அதனைத் தவிர்ந்து கொள்வது மிகச் சிறந்தது எனக் கூறுகின்றார். இவருக்கு முற்பட்ட முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்கு இது முரணாக இருக்கின்றது. ஆரம்ப முஸ்லிம்கள் (இபாழிய்யாக்கள்) அனைவரும் பின்பற்றி வந்த நம்பிக்கையான அறிஞர்களது கருத்தை இவர் தவற விட்டிருக்கின்றார். அவர்களுக்குப் பின்னால் நின்று ஜும்ஆ தொழுவதையும் அதற்காக விரைந்து செல்வதையும் குறித்து, நல்லாடைகள் அணிந்து மணம் பூசிக் கொள்வதையும் அவர்கள் சிறப்பாகக் கருதினார்கள்; அதில்

அவர்களிடத்தில் எவ்வித கருத்து வேறுபாடும் இருக்கவில்லை.' பின்னர், இபாழிய்ய அறிஞர்கள், தமது சிந்தனையுடன் முரண்படும் அறிஞர்களின் பின்னால் நின்று ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றிய பல்வேறு நிகழ்வுகளை முன்கொண்டு வருவார் இமாம் மஹ்பூப் இப்னு ரஹீல்.

இங்கு மற்றுமோர் அவதானத்தையும் நாம் குறிப்பிடலாம். அதாவது ஷ.ஃபிய்யாப் பிரிவினர் தமது சிந்தனையுடன் முரண்படுபவர்கள் பின்னால் நின்று தொழுவதை ஹராமாக்கவில்லை. என்றாலும் அநியாயமிழைக்கும் ஆட்சியாளர்கள் பின்னால் தொழாமல் இருப்பதே உகந்தது; அவ்வாறே தொழுதாலும் தொழுகை செல்லுபடியாகும் எனக் கொண்டார்கள்.

'அல்-பயான்' எனும் தனது நூலில் ஷஹீதுல் அவ்வல் கூறுவார்: 'தமது சிந்தனையுடன் முரண்படுபவர்களது ஜமாஅத்தில் கலந்து கொள்வது மிகவும் விரும்பத் தக்க ஒரு கருமமாகும்..' அஸ்ஸாதிக் அலைஹிஸ் ஸலாம் குறிப்பிடுகின்றார்: 'ஒருவர் தனது பள்ளிவாயலில் தொழுது விட்டு, பின்னர் அவர்களது பள்ளிவாயலுக்கு வந்து அவர்களுடன் தொழுதால், அவர்களது நன்மைகளையும் சேர்த்துப் பெற்றுக் கொள்வார். நீங்கள் அவர்களுடன் இணைந்து தொழுவதன் மூலம், முரண்பட்டவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப உங்களது பாவங்கள் மன்னிக்கப் படும்.'

ஷெய்க் அஹ்மத் ஆபிதீனி, முரண்பட்ட சிந்தனை கொண்டோருடன் ஜமாஅத்தாகத் தொழுவது பற்றி வந்துள்ள ஹதீஸ்களைத் தொகுத்து வழங்கியுள்ளார். அவற்றுள் ஒன்று அபூ அப்தில்லாவிடமிருந்து, ஹம்மாத் இப்னு உஸ்மான் அறிவிப்பது: 'அவர்களுடன் முதல் வரிசையில் நின்று யார் தொழுகின்றாரோ அவர் நபியவர்களுடன் முதல் வரிசையில் தொழுதவர் போலாவார்.' இந்த அறிவிப்பு ஸஹீஹானது என்றும் இதனை முஹம்மத் இப்னு அல் ஹுஸைன் அஸ்ஸதூக், அபூ ய.ஃகூப் அல்குலைனி, அஷ்ஷெய்க் அத்தூஸி முதலானோர் தத்தமது நூல்களில் ஸஹீஹான அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாகப் பதிவு செய்துள்ளதாகவும் கூறுவார் ஆபிதீனி. பின்னர் இதே கருத்தில் அமைந்த மேலும் சில அறிவிப்புகளையும் குறிப்பிட்டுக் கூறுவார்: 'இந்த தலைப்பில் பல அறிவிப்புகள் காணப்படுகின்றன. இவை கருத்தளவில் முதவாதிரானவையாகும். அவர்களுடன் இணைந்து தொழுவதனால் ஏன் இந்தளவு நன்மைகள் கிட்டுகின்றன? அவ்வாறு செய்வது நபியவர்களுடன் இணைந்து தொழுவதற்கு சமனாகக் கருதப்படுவது ஏன்? அவ்வாறு தொழுபவர் அல்லாஹ்வின் பாதையில் வாளேந்தி நிற்பவர் போலாவார் என்றெல்லாம் ஏன் சொல்லப்பட்டிருக்கின்றது? இஸ்லாமிய ஒற்றுமையைப் பாதுகாப்பதே இதன் பிரதான நோக்கம். அதன்மூலமே நபியவர்கள் கொண்டு வந்து, கட்டி வளர்த்த இஸ்லாத்தைப் பாதுகாக்க இயலுமாயிருந்தது.'

இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட பல்வேறு கருத்துகளையும் ஆராய்ந்த பின்னர், இமாம் யஹ்யா இப்னு ஹம்ஸா கூறுவார்: 'ஒருவர் பெரும்பாவங்கள் போன்ற (உடல் ரீதியான பெரும்பாவங்கள், கருத்தியல் ரீதியானவை அல்ல) மார்க்கத்தைப் பாதிக்கும் விடயங்களில் இருந்து தூரமாகவும் நேர்மையில் குறைபாடுகள் இன்றியும் காணப்பட்டால் அவருக்குப் பின்னால் நின்று தொழுவது அனுமதிக்கப்படுகின்றது. இது முரண்படுபவர்களை நியாயத்தின் அடிப்படையில் காபிர்கள் எனக் கருதுவோரும் அவ்வாறு கருதாதோரும் ஆக இரு சாராருமே கண்டுள்ள முடிவாகும்.'

எவ்வளவு தான் மத்ஹப் முரண்பாடுகள், குழு மோதல்கள் இருந்த போதிலும் மத்ஹப் எல்லைகளைத் தாண்டிய சிந்தனைக்கான ஏராளமான உதாரணங்களை நாம் எமது வரலாற்றில் கண்டு கொள்ளலாம். சிலர் நினைப்பது போல் உறவுகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கவில்லை. சந்திப்புக்கான புள்ளிகளும் களங்களும் காணப்படவே செய்தன. இங்கு நாம் கூற விழைவது, நவீனகாலத்தின் ஒற்றுமையை நோக்கிய அழைப்பு ஒரு புதிய விடயம் அல்ல என்பதையே. ஒற்றுமையின் வேர்கள் இப்பூமியில் எப்போதும் இருந்து வந்துள்ளன; இன்னமும் இருக்கின்றன. அவற்றின் மீது படிந்திருக்கும் கடந்தகால எதிர்ப்புணர்வுகளைத் தூசு தட்டிச் சுத்திகரிப்பதற்கான ஆட்களே தற்போதைய தேவை.

## 4. பல்வேறு சிந்தனைப் பள்ளிகளின் இமாம்கள், அறிஞர்கள் மத்தியிலான சிந்தனை உறவாடல்

இந்த விடயத்தில் கால அடிப்படையில் முதன் முதலில் எமது கவனத்தை ஈர்க்கும் ஆளுமை, தாபிஈன்களில் ஒருவரான ஜாபிர் இப்னு ஸைத், அன்னாரின் ஆசிரியரான இமாம் இப்னு அப்பாஸ் கூறுவார்: 'பஸரா வாழ் மக்கள் அனைவரும் ஜாபிர் இப்னு ஸைதின் கருத்துகளை மாத்திரம் கற்றுக் கொண்டாலே போதும்; அல்-குர்ஆனின் அனைத்து அறிவுகளையும் அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.' பல்வேறு சிந்தனைப் பிரிவுகளின் மத்தியில் ஒரு பாலமாகச் செயற்படுவதில் வெற்றி கண்டவர் அவர். பிக்ஹ் துறையில் இபாழிய்யாக்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம்கள் அனைவருக்குமான ஓர் இமாமாக அவர் மதிக்கப்பட்டார். அன்னவருக்குப் பின்னர் இபாழிய்யாக்களின் இரண்டாவது இமாமாக அமைந்த அபூ உபைதா முஸ்லிம் இப்னு அபீ கரிமா கூறுவார்: 'ஹதீஸ் துறைப் புலமையாளர் ஒருவருக்கு, பிக்ஹுத் துறை இமாம் ஒருவர் கிட்டாது விடின் அவர் வழிதவறியவராகவே கருதப்படுவார். அல்லாஹு தஆலா எங்களுக்கு இமாம் ஜாபிர் இப்னு ஸைத் அவர்களை அருளாது விட்டிருந்தால் நாம் வழி தவறியிருப்போம்.'

இமாம் ஹஸனுல் பஸரி அவர்கள் இமாம் ஜாபிர் இப்னு ஸைத் அவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு இதற்குத் தக்கதொரு சான்று. இமாம் ஜாபிர் தமது மரணத்தருவாயில் இமாம் ஹஸனுல் பஸரி அவர்களைக் காண விரும்பினார். அவ்வேளை ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுஃபை அஞ்சியவர்களாக இமாம் அல்-பஸரி தலைமறைவாக வாழ்ந்து வந்திருந்தார். என்றாலும் இறுதித் தருவாயில் இருவரும் சந்தித்துக் கொண்டனர். இக்கட்டான நிலைகளிலும் கூட, மாற்றுக் கருத்தாளர்களுடனான உறவாடல் வாயில்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்ற படிப்பினையை இதிலிருந்து இபாழிய்யாக்கள் பெற்றுக் கொண்டார்கள்.

### இமாம் அபூ ஹனீபாவும் இமாம் மாலிக்கும்

அஸ்ஸமீரி தமது 'அக்பாரு அபீ ஹனீபா வஅஸ்ஹாபிஹி' எனும் நூலில் இமாம் அபூ ஹனீபாவுக்கும் இமாம் மாலிக் இப்னு அனஸுக்கும் இடையிலான உறவை விளக்குவார். இமாம் மாலிக்கிடம் ஒரு விடயம் முன்வைக்கப்பட்டது. அதற்குரிய பத்வாவை அவர் வழங்கினார். அதே விடயத்தில் இமாம் அபூ ஹனீபாவின் பத்வா அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. உடன் இமாம் மாலிக் தனது பத்வாவை விலக்கிக் கொண்டு இமாம் அபூ ஹனீபாவின் பத்வாவையே தாமும் உறுதி செய்தார். தராவர்த்தி ஊடாக வந்திருக்கும் ஓர் அறிவிப்பு: 'இமாம் அபூ ஹனீபாவும் இமாம் மாலிக்கும் நபியவர்களது பள்ளிவாயலில் இஷாத் தொழுகையின் பின்னர் பல்வேறு கருத்துகளையும் பரிமாறிக் கொள்வார்கள். அவ்வேளை ஒருவரின் கருத்தை மற்றவர் விமர்சிக்கவோ, பிழை சொல்லவோ மாட்டார். மறுநாள் இருவரும் பள்ளிவாயலின் அதே இடத்தில் ஒன்றாக இணைந்து தொழுவார்கள்.

### இமாம் அபூ ஹனீபாவும் அஹ்லுல் பைத் இமாம்களும்

இமாம் அபூ ஹனீபா, அஹ்லுல் பைத் இமாம்களுடனும் நல்லுறவு பேணியுள்ளமையைக் காணலாம். இமாம் ஸைத் இப்னு அலி குறித்து இமாம் அபூ ஹனீபா கூறுவார்: 'இமாம் ஸைத் இப்னு அலியின் அளவு தெளிவான பதிலை முன்வைக்கும் ஒருவரை நான் பார்த்ததில்லை.' இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு கல்வி சம்பந்தப்பட்டதாக மாத்திரம் இருக்கவில்லை. இமாம் ஸைத் இப்னு அலி, கலீபாவாக இருந்த ஹிஷாம் இப்ன் அப்துல் மலிக்குக்கு எதிராக மேற்கொண்ட புரட்சிக்கு சார்பாக இமாம் அபூ ஹனீபா பத்வா வழங்கியதோடு நிதியுதவிகளும் செய்துள்ளார்.

இமாம் அல்பாகிர் முஹம்மத் இப்னு அலி, அவரது மகனான இமாம் ஜஃபர் அஸ்ஸாதிக் ஆகியோருடனும் நல்ல உறவுகளைக்

கொண்டிருந்த இமாம் அபூ ஹனீபா, இமாம் ஜஃபர் ஸாதிகிடமிருந்து பல அறிவிப்புகளையும் செய்துள்ளார். இமாம் அபூ ஹனீபாவின் மாணவர்களான இமாம் அபூ யூஸுப், இமாம் முஹம்மத் இப்னு அல்-ஹஸன் அஷ்ஷைபானி ஆகிய இருவரும் குறித்த அறிவிப்புகளை 'அல்-ஆஸார்' எனும் பெயரில் உள்ள இருவரது நூல்களிலும் பதிவு செய்துள்ளனர். இமாம் அபூ ஹனீபா முன்வைத்த பிரபலமான கியாஸ் பற்றிய சிந்தனையுடன் அவர்கள் இருவரும் முரண்பட்டிருந்தும் இந்த நல்லுறவு பேணப்பட்டு வந்தது. இமாம் அபூ ஹனீபாவுக்கும் இமாம் முஹம்மத் அல்பாகிருக்கும் இடையில் நடைபெற்ற ஒரு வாதாட்டம் என்று ஹனபி மத்ஹபின் மூலாதாரங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள இந்த விவகாரம், இது நிகழ்ந்தது இமாம் ஜஃபர் ஸாதிக்குடன் என இமாமிய மூலாதாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.(6)

---

(6) இங்கு குறிப்பிட்ட முரண்பாடு பற்றிய அறிவிப்பு தொடர்பில், ஹனபி மத்ஹப் மூலாதாரங்களிலும் இமாமீய மூலாதாரங்களிலும் -குறிப்பாக குலைனியின் அல்காபீ- வந்துள்ள பொது உடன்பாட்டுப் புள்ளியை மாத்திரமே நாம் குறித்துக் காட்டியிருக்கிறோம். அதாவது இமாம் அபூ ஹனீபாவுடன் முஹம்மத் பாகிர் மற்றும் அவரது மகன் ஜஃபர் ஸாதிக்குடைய சிந்தனைப் பள்ளியினர் கியாஸ் என்ற சட்ட மூலாதாரம் குறித்து கருத்து வேறுபட்டனர். இவர்கள், கியாஸ் மார்க்கத்தை அழித்துவிடும் என்றும் இப்லீஸ் தான் முதலாவது கியாஸைப் பிரயோகித்தவர் என்றும் குறிப்பிடுகின்றனர். இரு தரப்பு மூலாதாரங்களிலும் வந்துள்ள இந்த அறிவிப்புகளின் உள்ளடக்க முரண்பாடு குறித்தும் நாம் பெரிய கவனம் செலுத்தவில்லை. ஹனபி மத்ஹப் தரப்பு அறிவிப்புகளில், இமாம் அபூ ஹனீபா அவர்கள் தான், தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் உதாரணங்களைக் கொண்டு வந்து, தான் நபியவர்களுக்கு எதிராகப் பொய் சொல்வதில்லை என்றும் தான் சட்ட வசனத்தை நீக்குவதில்லை என்றும் நேரடியாக சட்ட வசனம் ஒன்று வராத விவகாரங்களிலேயே தான் கியாஸைப் பயன்படுத்தவதாகவும் தனது நிலைப்பாட்டை முன்வைத்து அவரை இணங்க வைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கியாஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதை ஏற்கச் செய்ய முடியவில்லை. இமாமீய மூலாதாரங்களில் இதற்கு மறுதலையாக, இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்கள் தான் உதாரணங்களை முன்வைத்து, இமாம் அபூ ஹனீபாவின் கியாஸ் கோட்பாடு பிழையானது என்றும் சட்ட வசனங்கள் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டுள்ள விவகாரங்களை புதிய விவகாரங்களுக்கு கியாஸ் பிடிக்கின்ற பொழுது, அவை அந்த ஆதாரங்களுடன் முரண்படுகின்றன என்றும் சொன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்ஹபுகளுக்கிடையில் நடைபெற்ற வாதாட்டங்கள் தொடர்பில், இவை போன்ற அறிவிப்புகள் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளமைக்கு இன்னும் பல உதாரணங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு தரப்பும் தமது இமாமிடம் தான் ஆதாரபூர்வமான பலமான வாதம் இருந்ததாகவும் எதிர்தரப்பிடம் பலவீனமான வாதமே காணப்பட்டதாகவும்

இமாம் ஜஃபர் ஸாதிக்கிடமிருந்து இமாம் மாலிக், இமாம் ஸுப்யான் இப்னு உயைனா ஆகியோரும் அறிவித்துள்ளனர். ஈராக்கின் ஹதீஸ் துறை அறிஞரான இமாம் ஸுப்யானுஸ் ஸௌரி, இமாம் ஜஃபர் ஸாதிக்கிடம் கற்ற சிறப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவரது கல்வி அமர்வுகளில் கலந்து கொள்வார். இமாம் ஸுப்யானுஸ் ஸௌரி கூறுவார்: 'ஸாதிக் இப்னு ஸாதிக் ஜஃபர் இப்னு முஹம்மதை நான் சந்திக்கும் வேளைகளில் 'அல்லாஹ்வின் தூதரின் மகனே, எனக்கு உபதேசியுங்கள்' எனக் கூறுவேன்.

**வாக்கியவாத, பகுத்தறிவு வாத சிந்தனைப் பள்ளிகள் மத்தியில்**

வாக்கியவாத, பகுத்தறிவு வாத சிந்தனைப் பள்ளிகள் மத்தியிலான மோதல்கள், முரண்பாடுகள் கடுமையாக இருந்தபோதிலும் ஒவ்வொரு தரப்பும் அடுத்த தரப்பினைக் கௌரவப்படுத்தி பரஸ்பர அங்கீகாரம் வழங்கியுள்ள சந்தர்ப்பங்களையும் காண முடிகின்றது. அப்துல்லாஹ் இப்னு அஹ்மத் இப்னு ஹன்பல் தனது "அஸ்ஸுன்னா' என்ற நூலில், 'இமாம் அபூ ஹனீபா குறித்து எனது தந்தையிடமிருந்தும் ஏனைய அறிஞர்களிடமிருந்தும் நான் சேகரித்தவை' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடுவார்: 'அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தி ஊடாக எனது தந்தை சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன்: 'இமாம் அபூ ஹனீபாவின் கருத்துகளைக் கற்பது ஒரு மனிதனின் மிகச் சிறந்த அறிவுத் தேட்டமாகும்.'

வாக்கியவாத, பகுத்தறிவுவாதப் பள்ளிகள் மத்தியில் இருந்த இடைவெளியை இமாம் ஷாபிஈ அவர்கள் இல்லாமல் செய்ததாக இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் கருதுகிறார். இமாம் ஷாபி, ஹதீஸ்களின் தராதரங்களை அறிந்து அவற்றில் எவற்றை ஏற்பது எவற்றை மறுப்பது என இமாம் அஹ்மதிடமே தெளிவு பெறுவார். இது குறித்துப் பேசுவார் இஸ்ஹாக் இப்னு ஹன்பல்: 'இமாம் ஷாபிஈ அவர்கள், அபூ அப்தில்லாவிடம் வந்து பகல் முழுவதும் அவரது பிக்ஹ் பற்றியும் அதில் அபூ அப்தில்லா ஊடாக அறிவிக்கப்பெற்றுள்ள ஹதீஸ்கள் பற்றியும் கலந்துரையாடுவார்கள்.'

---

குறிப்பிட்டுள்ளனர். இதனால் இவை போன்ற அறிவிப்புகளின் வரலாற்று ரீதியான ஆதாரபூர்வத் தன்மையை உறுதிப்படுத்துவது போல் இவற்றை சமூகவியல் கண்ணோட்டத்தில் அணுக வேண்டிய தேவையும் இருக்கிறது. இவற்றில் இமாம் அபூ ஸஹ்ரா அவர்கள் ஹனபி மத்ஹபினரின் அறிவிப்புகளையே ஆதாரபூர்வமானவை என்கின்றார்கள்.

**ஸைதிய்யாக்களும் ஹனபியாக்கலும்**

ஸைதிய்யாக்களின் அறிஞர்களில் ஒருவரான இமாம் இப்னுத் தாஇ முஹம்மத் இப்னு அல் ஹஸன் அல்காஸிம் (ஹி. 304-360) அவர்களுக்கும் ஹனபி மத்ஹபின் இமாம்களில் ஒருவரான ஷெய்க் அபுல் ஹஸன் அல்-கிர்கீ அவர்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு காணப்பட்டது. இமாம் இப்னுத் தாஇ ஹனபி மத்ஹபின் பிக்ஹை பக்தாதில் இமாம் கிர்கீயிடம் கற்றிருக்கின்றார். இமாம் இப்னுத் தாஇ தனது சகபாடிகளிடடம் தன்னை ஹனபி பிக்ஹில் பரிட்சிக்குமாறு வேண்டி, சிக்கலான விவகாரங்களிலும் தக்க பதில்களை முன்வைப்பார். இருவரும் பரஸ்பரம் மிக்க மரியாதை வைத்திருந்தனர்.

இப்னுல் அக்பானி என்ற பெயரில் பிரபலமான காழி அபூ முஹம்மத் அப்துல்லாஹ் இப்னு முஹம்மத் அல்அஸதி குறிப்பிடுவார்: ஒரு சமயம் நாம் அபுல் ஹஸன் அல்கிர்கீயின் சபையில் இருந்தோம். வழமை போல அபூ அப்தில்லாஹ் முஹம்மத் இப்னுத் தாஇயும் வந்திருந்தார். தனது பாடம் முடிய அல்கிர்கீ பள்ளிவாயிலை விட்டும் வெளியே வந்தார். திரும்பிப் பார்த்த வேளை இப்னுத் தாஇயைக் கண்டு அவர் கூறினார்: 'கண்ணியத்துக்குரியவரே, பள்ளிவாயிலில் இருந்து வெளியே வருவதற்கான தேவை இல்லாதிருந்தால் நான் உங்களை முந்திக் கொண்டு வெளியே வந்திருக்க மாட்டேன்.' அல்கிர்கீயின் ஜனாஸாவிலும் தொழுகையிலும் இப்னுத் தாஇ கலந்து கொண்டதாக அஸ்ஸமீரி தனது 'அக்பார் பீ அபீ ஹனீபா வஅஸ்ஹாபிஹி' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[7]

---

(7) அஸ்ஸமீரி அவர்கள் பதிவு செய்துள்ள அபுல் ஹஸன் அல்கிர்கி அவர்களது ஜனாஸாத் தொழுகை பற்றிய மற்றொரு அறிவிப்பில், இப்னுத் தாஇ அவர்கள் அவருக்குத் தொழுகை நடாத்த முடியாமல் போன நிகழ்வு உண்மையில் இருவருக்கும் இடையிலான உறவில் குறையை ஏற்படுத்துவதில்லை. இப்னுத் தாஇ அவர்கள் இமாம் கிர்கியின் ஜனாஸாவுக்கு தொழுகை நடாத்த விரும்பிய பொழுது, இமாம் கிர்கியின் மாணவர்கள், இவர் ஹனபி மத்ஹபின் மிக முக்கியமான இமாம்; நீங்கள் அவரது மத்ஹப்படிக்கு தக்பீர் சொல்வதாக இருப்பின் அவருக்குத் தொழுவிக்கலாம் என்றனர். அதற்கு அவர் கோபப் பட்டு, நான் எனது முன்னோர்களது மத்ஹபை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்றார்கள். பின்னர் காழி அபூ தமீம் அஸ்ஸைனபி அவர்களை முற்படுத்தி தொழுவித்தனர்... ஆனால் ஸைதீக்களின் மூல நூல்களில், இமாம் இப்னுத் தாஇயின் சகபாடிகளுள் ஒருவரான காழி அல்-குபாத்திடமிருந்து கேட்டதாக அஸ்ஸெய்யத் அபூ தாலிப் அவர்கள் இந்த சம்பவத்தை இன்னும் சற்று விரிவாகக் குறிப்பிடுகின்றார்கள். இமாம் கிர்கியின் முன்னணி மாணவர்களில் ஒருவரான அபூபக்ர் இப்னு அத்தாமகானி அவர்கள், இமாம் இப்னுத்தாஇயிடம் வந்து, நீங்கள் தொழுவிப்பது தான் மிகவும் பொருத்தமானது; நீங்கள் இருக்கும் பொழுது வேறு ஒருவர் தொழுவிப்பது நன்றாக

அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களது தலைமைத்துவம் சட்ட வசனத்தின் ஊடாக நிறுவப்பெற்றது என்ற நிலைப்பாட்டிலிருந்த இப்னுத்தாஇ அவர்களுக்கும் அதனை மறுத்துரைத்த இமாம் அபூ அப்தில்லாஹ் அல்ஹுஸைன் இப்னு அலி அல் பஸரி அல் முஃதஸிலி அவர்களுக்கும் இடையில் மிக்க நல்லுறவு காணப்பட்டது. இருவரும் நீண்ட நேரங்கள் அறிவு ரீதியான கருத்தாடல்களில் ஈடுபடுவார்கள். அவ்வேளைகளில் தலைமைத்துவம் தொடர்பான விவகாரங்கள் எழுந்தால் இருவரும் தத்தமது கருத்துக்கான நியாயத்தை முன்வைப்பார்கள். அதில் ஆணவமோ, பெருமையோ இருக்காது. இது முரண்பாடு எதனையும் கொண்டு வந்துவிடக் கூடாது என்பதில் இருவருமே கவனமாக இருப்பார்கள். அல்-பஸரி தனது மாணவர்களுக்குக் கூறுவார்: ‘இப்னுத் தாஇயின் முன்னால் இரண்டு விவகாரங்கள் குறித்துப் பேசாதீர்கள். ஒன்று தலைமைத்துவம் சட்ட வசனம் ஊடாக நியமிக்கப்படுவது என்ற விடயம். மற்றது, உறவினர்களுக்கான பங்கு என்ற விவகாரம். இவையிரண்டு குறித்தும் பேசுவதை அவர் தாங்கிக் கொள்ள மாட்டார்.’

இமாம் இப்னு அஸாகிர் (மறைவு ஹி. 571) அனைத்து மத்ஹபுகளினதும் தலைமைகள் ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டு ஈராக்கில் ஒன்று கூடிய நிகழ்வைக் குறிப்பிடுகின்றார். ‘அஷ்ஷரிப் அபூ அலி முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு மூஸா அல் ஹாஷிமீ அறிவிக்கின்றார்: எமது ஆசிரியரான அபுல் ஹஸன் அப்துல் அஸீஸ் இப்னு ஹாரிஸ் அத்தமீமி ஹி. 370 இல் தமது மாணவர்களுக்கென ஏற்பாடு செய்திருந்த ஓர் ஒன்றுகூடலில் நான் கலந்து கொண்டிருந்தேன். அதில் மாலிகிய்யாவின் தலைமை ஷெய்க் அபூபக்ர் அல் அப்ஹரி, ஷாபிஇய்யாக்களின் தலைமை ஷெய்க் அபுல் காஸிம் அத்தாரகி, ஹதீஸ் துறையாளர்களின் ஷெய்க் அபுல் ஹஸன் தாஹிர் இப்னு அல்ஹஸன், பற்றற்றவர்களின் ஷெய்க் அபுல் ஹஸன் இப்னு ஸம்ஊன், இல்முல் கலாம் ஷெய்க் அபூ அப்தில்லாஹ் இப்னு முஜாஹித், அவரது மாணவர் அபூபக்ர் அல்பாகில்லானி, ஹன்பலீக்களின் ஷெய்க் ஆன எமது ஷெய்க் அபுல் ஹஸன் அத்தமீமி அவர்களும் கலந்து

---

இருக்காது; ஆனாலும் உங்களுக்குத் தெரியும் இவர் போன்ற ஓர் இமாமை அவரது மத்ஹபின் அடிப்படையில் தொழுவிப்பதே சிறந்தது; ஜனாஸாத் தொழுகையின் தக்பீர்கள் இவரிடத்தில் நான்கு என்பது உங்களுக்குத் தெரியும். நான்கு தக்பீர்கள் சொல்வீர்கள் எனின், நீங்களே தொழுவியுங்கள் என்றார்கள். அதனைக் கண்டித்த இப்னுத் தாஇ அவர்கள் நான் ஐந்து தக்பீர்கள் தான் சொல்வேன். எனவே விரும்பிய வேறு எவரேனும் தொழுவிக்கட்டும் என்றார்கள். அப்பொழுது அபூ தமாம் அஸ்ஸைனபி அவர்கள் முன்னின்று தொழுவித்தார்கள். தாமிகானி செய்ததைப் பற்றிக் காபி அல்குபாத் குறிப்பிடும் பொழுது, அவர் அபூதமாமை விரும்பக் கூடியவராக இருந்தார். அதனால் அவர் தொழுவிக்க வேண்டும் என்றே அவர் எதிர்பார்த்தார் என்கின்றார்கள்.

கொண்டிருந்தனர். உபசாரங்கள் எமது ஷெய்க் அத்தமீமி அவர்களது இல்லத்திலேயே நிகழ்ந்தன. அபூ அலி கூறுவார்: அன்று வீட்டின் கூரை உடைந்து விழுந்திருந்தால் ஈராக்கில் எந்த ஒரு விவகாரத்துக்கும் பத்வா அளிக்க ஒருவரும் இருந்திருக்க மாட்டார்கள்.

### ஸைதிய்யாக்களும் இமாமிய்யாக்களும்

ஸைதீக்களுக்கும் இமாமீக்களுக்கும் இடையில் தலைமைத்துவம் தொடர்பில் மாற்றுக் கருத்துகள் இருந்தன. என்றாலும் அவர்கள் மத்தியில் கருத்து வேறுபாட்டு ஒழுக்கம் பேணப்பட்டது. தைலம் பிரதேசத்தில் ஸைதிய்யாக்களின் முக்கியமான இமாமாக இருந்தவர் அல்இமாம் அந்நாஸிருல் கபீர். அவருடைய பேரன் அஷ்ஷரிப் முர்தழா (மறைவு ஹி. 436) இமாமீக்களின் பிரசித்தம் வாய்ந்த அறிஞர்களுள் ஒருவர். தனது தாய் வழிப்பாட்டனாரான அந்நாஸிருக்கு முர்தழா பதிலளிக்கும் வகையில் தனது 'அந்நாஸிரிய்யாத்' எனும் நூலில் கூறுவார்: 'அந்நாஸிர் அவர்களது பிக்ஹை நான் ஆழமாகக் கற்றுள்ளேன். அது தொடர்பில் கேட்கப் படும் கேள்விகளுக்கும் நான் பதில் அளித்துள்ளேன். அத்துடன் உடன்படுவோரும் உள்ளனர்; முரண்படுவோரும் உள்ளனர். ஆற்றல் மிக்க இந்த மனிதரின் அறிவினை மீளக் கட்டியெழுப்புவது, அவர் எனது தாய் வழிப்பாட்டனார் என்றவகையில் என் மீதான ஒரு கடமையாக இருக்கின்றது. அந்நாஸிர் அஸ்ஸகீர் என வழங்கப்பெற்ற அபூ முஹம்மத் அல்ஹஸன் இப்னு அல் ஹுஸைன் அஹ்மத் அவர்களும் எனது பாட்டனாராவார். இவர் அந்நாஸிருல் கபீரின் மாணவர். இவரை நான் நேரடியாகச் சந்தித்திருக்கின்றேன். ஹிஜ்ரி 368இல் பக்தாதில் இவர் மரணித்தார். அவர் தூய உள்ளம் கொண்டவர். நல்ல எண்ணங்களும் பண்பாடுகளும் கொண்டவர். ஹிஜ்ரி 362இல், பக்தாதில் அலவிய்யூன்களது தலைமையை ஏற்றிருந்தார்... அந்நாஸிர் அல் கபீரைப் பொறுத்தவரையில், அறிவிலும் ஆன்மீகத்திலும சிறந்து விளங்கிய இவர் தான் தைலம் பிரதேசத்தில் இஸ்லாத்தைப் பரப்பி, மக்களை வழிகேட்டிலிருந்தும் அறியாமையிலிருந்தும் மீட்டெடுத்தவர். இவரது அரிய சாதனைகளுக்கு எண்ணிலடங்காத உதாரணங்கள் இருக்கின்றன. அபூ ஜ.்.பர் அல்-பாகிரிடம் உங்களது சகோதரர்களில் உங்களது விருப்பத்திற்கும் கண்ணியத்திற்கும் உரியவர் யார்? என வினவப்பட்ட போது, 'இமாம் ஸைத் அவர்கள் நான் பேசுகின்ற நாவாக இருக்கிறார்' என்றார்கள்.'

முஹம்மத் வாஇல் ஸாதா அல்குராஸானீ, 'அந்நாஸிரிய்யாத்' எனும் நூலில் அஷ்ஷரிப் அல்-முர்தழா கையாண்ட வழிமுறையை, தனது கட்டுரையொன்றில் விளக்குவார்: 'இந்த நூலின் ஆசிரியர், தனது பாட்டனாருக்கான நல்லுபகாரமாகவே இதனைத் தொகுத்திருக்கின்றார். அவர்கள் இருவர் மத்தியிலும் கருத்து வேறுபாடுகள் பல இருந்த போதும்

இந்த நூலில் இமாமீ, ஸைதீ பிரிவுகளைச் சேர்ந்த இரு இமாம்களின் மத்தியில் நல்ல புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் பிரதிபலிப்பதைக் காணலாம்... இதில் ஸைதி, இமாமி பிரிவுகளில் மாத்திரமன்றி பொதுவாக மத்ஹப் மட்டத்தில் உள்ள அனைத்து பிக்ஹ் கருத்து வேறுபாடுகளும் தொகுக்கப்பட்டுள்ளன... ஸைதிய்யாக்களுடன் என்பத்தொரு விவகாரங்களில் உடன்பாடும் தொன்னூற்றாறு விவகாரங்களில் முரண்பாடும் இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது... இந்த நூலில ஏனைய பிரிவினருடன் சிறந்த ஒழுக்கம் பேணப்படுகின்றது. பிறர் கருத்துகளை பித்அத் என விமர்சிப்பதோ, சங்கடங்களை ஏற்படுத்தும் வகையில் எதிர்வாதங்களை முன்வைப்பதோ இல்லை. என்றாலும் அவரது ஏனைய நூல்களில், குறிப்பாக 'அல்ஷாபிஈ பில்இமாமா' எனும் நூலில் சில விமர்சனங்கள் உள்ளன...

'இமாம் அந்நாஸிர் அறுபத்தொன்பதாம் விவகாரத்தில் ஸுப்ஹு தொழுகையில் சப்தமிட்டு ஓதுவது பித்அத்தாகும் என்பார். இது பற்றி அல்-முர்தழா குறிப்பிடும் போது, 'இது தான் சரியான அபிப்பிராயமாகும். எமது அறிஞர்களிடம் இது இஜ்மாவான நிலைப்பாடு' என்றார். அத்துடன் ஒருவர் சப்தமிட்டு ஓதாமல் விட்டால் அவருக்கு எந்தவித குற்றமும் இல்லை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஏனெனில் சிலரது கருத்தில் சப்தமிட்டு ஓதுவது ஸுன்னத்து; சிலரது கருத்தில் ஸுன்னத்தல்ல. இரு நிலைகளிலும் அதனை விட்டு விடுவதில் எந்தக் குற்றமும் இல்லை. விட்டு விடுவதால் குற்றமில்லை எனக் கருதப்படக் கூடிய ஒரு விடயத்தைச் செய்வது பித்அத் ஆகிவிடும் எனப் பயந்தால் அதனைச் செய்வது குற்றமாகும். ஷரீஆவில் அதனை விட்டுவிடுதலே பேணுதலாகும்...' என்கின்றார். அது போல் 'கால்களில் மஸ்ஹ் செய்தலைப் பொறுத்தவரையில் எமது கருத்துப்படி அதுவே கட்டாயமானதாகும்; கழுவினால் அது செல்லுபடியாக மாட்டாது' எனக் கூறுகின்றார். இந்த விடயத்தில் ஏனையோரின் கருத்தை பித்அத் என அவர் மறுத்துரைக்கவில்லை. இமாமிய்யாக்களுக்கும் அஹ்லுஸ் ஸுன்னாக்களுக்கும் இடையிலான இவை போன்ற பல விவகாரங்களில் அவர் பிறரைக் குறை சொல்லாத போக்கையே கடைப்பிடித்துள்ளார்.

'இமாம் முர்தழா, பிக்ஹ் விவகாரங்களில் கையாண்ட அதே மிருதுவான போக்கைத் தான் தலைமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயத்திலும் கையாள்கின்றார். இமாமிய்யாக்களிடம் இது அடிப்படை சார்ந்த, அதாவது நம்பிக்கை சார்ந்த ஒரு விவகாரமாகும். தொன்னூற்றி எட்டாவது விவகாரமான 'பாவம் செய்கின்ற ஒருவரது தலைமைத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது' என்பதில் இமாம் முர்தழா, 'இது சரியானது; அஹ்லுல் பைத்தினர், அவர்கள் மத்தியில் இதில் முரண்பாடுகள் இருந்தாலும் உடன்பாடு காண்கிறார்கள். அவர்களிடம் முரண்பாடுகள் இருந்தபோதிலும் உடன்பாடான நிலைப்பாடு உள்ள சில விவகாரங்களில்

இதுவும் ஒன்றாகும்' என்கின்றார். இவர் இங்கு அஹ்லுல் பைத்தினர் மத்தியில் முரண்பாடுகள் இருப்பதையும் குறிப்பாக இமாமத் விவகாரத்தில் முரண்பாடுகள் இருப்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் எந்த தரப்பினரது கண்ணியத்தையும் அவர் குறைத்து நோக்கவில்லை.

'இருநூற்றி ஏழாவது விவகாரத்தில், 'பின்னால் வரும் இமாம் முன் சென்ற இமாமுடன் முரண்படக் கூடாது' என்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வேளை, 'இந்த விவகாரம் எமது அடிப்படையின் மீது எழவில்லை. ஏனெனில் எமது அடிப்படையின் பிரகாரம், இமாம் என்பவர் தவறுகள் செய்யாதவர்; அவர் இஜ்திஹாதின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பதில்லை; இஜ்திஹாதின் அடிப்படையில் செயற்படுகின்ற போது தான் கருத்து வேறுபாடுகள் தோன்றும்' என்கிறார்.

'இருநூற்றி ஐந்தாவது விவகாரத்தில், 'இமாம் சில சட்டங்களில் தவறு இழைத்தாலோ, மறந்து போனாலோ அவரது தலைமைத்துவம் பாதிக்கப்பட மாட்டாது' எனக் கூறுவார் இமாம் அந்நாஸிர். இதனை மறுத்துரைக்கும் அல்முர்தழா, 'இந்த விவகாரம் எமது மத்ஹபுக்கு உட்பட்டதல்ல. ஏனெனில் எமது மத்ஹபின்படி இமாம் என்பவர் நபிமார்களைப் போன்று தவறு செய்யாதவர்... இது போன்ற நிலைப்பாடு இஸ்மத் எனும் தவறு செய்யாமையை இமாம்களுக்கு நிபந்தனையாகக் கூறாதவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கக் கூடும். இது எமது அடிப்படைகளுக்கு உட்பட்டதல்ல என்றவகையில் நாம் இதில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை' எனக் கூறுவார். இமாம் முர்தழா, கருத்து வேறுபாடான விவகாரங்களை எவ்வளவு நளினமாகக் கையாண்டிருக்கின்றார் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

'இருநூற்றி ஆறாவது விவகாரத்தில், இமாம் அந்நாஸிர் கொண்டுள்ள நிலைப்பாடு இமாமீக்களதும் ஏனைய மத்ஹபினரது கருத்துக்கும் முரணானது என்பதைத் தெளிவாகவே குறிப்பிடுகின்றார் அல்முர்தழா. 'கலகம் செய்பவர்களது சொத்துக்கள் கனீமத்தாகப் பெற்றுக் கொள்ளப் படும் என்ற இமாம் அந்நாஸிரின் கருத்து தவறானது. எதிரிகளுடனான யுத்தத்தின் போது அவர்களது சொத்துக்களைக் கையாள்வது போல் இவர்களது சொத்துகளைக் கையாள முடியாது. இமாம்களுக்கு மத்தியில் இந்த விவகாரத்தில் கருத்து வேறுபாடுகள் இல்லை. பஸராவில் கலகம் செய்தவர்களுக்கு அமீருல் மு∴மினீன் வழங்கிய தீர்ப்பு தான் இதில் அனைவருக்கும் ஆதாரம்... கலகக்காரர்களது ஆயுதங்கள், கால்நடைகளை யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது பயன்படுத்திக் கொள்ளலாமா? என்பதில் மாத்திரம் இமாம்கள் கருத்து வேறுபாடு கொண்டார்கள். இது கூடாது என்றார் இமாம் ஷாபிஈ. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மாத்திரம் அனுமதிக்கலாம் என்றார் இமாம் அபூ

ஹனீபா. எனது கருத்தில் அவர்களது ஆயுதங்களைப் பயன்படுத்தி யுத்தம் செய்வதில் தடையில்லை; ஆனால் அவற்றைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.' இங்கு அல்-முர்தழா ஒரு பிரச்சினையை அணுகும் முறையை அவதானியுங்கள். ஒரு கருத்தை மறுக்கும் அவர், வேறொரு கருத்தை ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைத்து, தேவையான இடங்களில் ஏனைய மத்ஹப் இமாம்களின் கருத்துகளையும் கொண்டு வருகின்றார். மிகவும் சரியான, பொருத்தமான தீர்வைக் கண்டு கொள்வது தான் இவரது முழு நோக்கமுமாக இருக்கின்றது. வழமையான மத்ஹப் ரீதியான கடுமையான தொனி இவரது கூற்றுகளில் வெளிப்படவில்லை. அல்முர்தழா தனது பாட்டனார் மீது கொண்டிருந்த அன்பு அனைத்தையும் மீறியதாக இங்கு பதிவாகியுள்ளது.

## இப்னு தைமிய்யாவும் இமாமிய சட்டவியலாளரும்

ஷியாப் பிரிவின் இமாம் ஜமாலுத்தீன் இப்னு அல் ஹஸ்ஸாம்[(8)] அவர்களுக்கும் மத்ஹப் ரீதியாக அவருடன் முரண்படும் சில இமாம்களுக்கும் குறிப்பாக இப்னு தைமிய்யாவுக்கும் இடையிலான நல்லுறவு கருத்து வேறுபாட்டு ஒழுக்கத்திற்கான மற்றோர் ஆதாரமாக அமைந்துள்ளது. இவர்களுக்கு மத்தியிலான கருத்து வேறுபாடுகள் பாரிய இடைவெளி கொண்டன.

இமாம் இப்னு அல்ஹஸ்ஸாம், 'மின்ஹாஜுல் கராமா' என்ற நூலின் ஆசிரியரான இப்னுல் முதஹ்ஹிர் அல் ஹுலிய் என்பாரின் மாணவர். அந்த நூலுக்கான மறுப்புரை தான் இமாம் இப்னு தைமிய்யாவின்

(8) இவர் ஜபல் ஆமில் என்ற பகுதியைச் சேர்ந்த அறிஞர்களில் ஒருவர். இமாம் அல்ஹுலிய்யின் மாணவர். இவரைப் பற்றி ஷெய்க் ஜ.்பர் அல்முஹாஜிர் எழுதிய 'ஜபல் ஆமில் பைனஷ் ஷஹீதைன்' என்ற நூலில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு ஷீயாக்களின் வேறு நூல்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இமாம் அஸ்ஸபதி அவர்கள் தனது 'அல்வாபி பில்வபயாத்' என்ற நூலில் இவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பைத் தந்துள்ளார்கள்: 'இவர் இப்றாஹீம் இப்னு அபில் கைஸ் ஜமாலுத்தீன் இப்னுல் ஹஸ்ஸாம் அல்புகாரி என்னும் ஷாபி சட்ட அறிஞராவார். அந்நபதிய்யா மற்றும் அஷ்ஷகீப் பிரதேசத்தில் ஸபத் என்னும் ஊரில் மஜ்தல் ஸலம் என்பது இவரது கிராமமாகும். இவரும் இவரது தந்தையும் ஷீயாப் பிரிவின் இமாம்களாக இருந்தனர். இப்னுல் ஊத் மற்றும் இப்னு முக்பில் அல்ஹிம்ஸி ஆகியோரிடம் கல்வியைப் பெற்றுள்ளார்கள். ஈராக்குக்குச் சென்று இப்னுல் முதஹ்ஹிர் அல்ஹுலிய்யிடமும் கற்றிருக்கிறார். இமாம் அல்ஹுலிய்யிற்கு இரண்டு சபைகள் இருந்துள்ளன. ஒன்று விருந்தினர்களுக்கு உரியது; மற்றையது மாணவர்களுக்கு உரியது. இவர் பகலிலும் இரவிலும் இரண்டு சபைகளிலும் கலந்து கொள்வார்கள்.'

'மின்ஹாஜுஸ் ஸுன்னா'. இமாம் ஸபதி கூறுவார்: 'ஹிஜ்ரி 722இல் மஜ்தல் ஸலம் கிராமத்தில் நானும் இமாம் இப்னுல் ஹஸ்ஸாமுடன் இருந்தேன். மறுமையில் அல்லாஹ்வைக் காண முடியுமா? முடியாதா? என்பது தொடர்பில் எனக்கும் அவருக்கும் இடையில் உரையாடல்கள் நிகழ்ந்தன. ஆதாரங்களை வைத்து நீண்ட நேரம் விவாதித்தோம். அழகிய தோற்றமும் நற்குணங்களும் நிரம்பப்பெற்றவர் அவர். அப்பிரதேச மக்கள் அவரை மிகவும் கண்ணியப்படுத்தினர். இமாம் இப்னு தைமிய்யாவின் கல்விச் சபைக்கு அவர் தொடர்ந்து வருவார். இடையில் நீண்ட காலம் அவர் வராமல் இருந்த போது நான் அது குறித்து அவருக்குக் கடிதம் எழுதினேன். இப்னு தைமிய்யாவின் சபைகளில் கலந்து கொள்ளும் போது அவர் தனது அறிவையும் கௌரவத்தையும் மறைத்துக் கொள்வார். இமாம் இப்னு தைமிய்யா இருக்கும் போதே எமக்கும் அவருக்கும் இடையில் விவாதங்கள் நடந்துள்ளன.'

இமாம் ஸபதி பின்னர், இமாம் ஷிஹாபுத்தீன், இமாம் இப்னு அல் ஹஸ்ஸாமுக்கு எழுதிய கவிதைகள் பற்றிக் குறிப்பிடுவார். இப்னு அல் ஹஸ்ஸாமின் பதில் கவிதைகள் குறித்தும் பேசும் இமாம் ஸபதி, அவை, அவ்விருவர் மத்தியிலும் இருந்த நட்புக்கும் கண்ணியத்திற்கும் எடுத்துக் காட்டாக இருந்தமையை விதந்து பேசுவார். தனது மத்ஹப் சிந்தனையின் காரணமாகத் தனது வீடு சோதனையிடப் பட்டு, நூல்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்ட வேளை அல்ஹஸ்ஸாம் கவலந்து எழுதியதோர் கவிதையையும் குறிப்பிடுவார் இமாம் ஸபதி:

*அறிவைச் சுமப்பது குற்றம் என்றிருப்பின்..*

*அதற்காகச் சிறை செல்வதில் எனக்கு அச்சமில்லை..*

*அறிஞன் உங்களுக்கு என்ன தவறு இழைத்தான்..*

*ஏச்சுகளையும் கண்டனங்களையுமே அவன் எதிர் கொள்வதற்கு..*

*மக்களை விட்டு ஒதுங்கி நான் தனியே வீட்டில் இருந்தால்..*

*எனது மறுப்பும் தீங்கும் மக்களை எட்ட மாட்டா..*

*உண்மையாகவும் தூய்மையாகவும் நான் அல்லாஹ்வின் தூதரை நேசிக்கின்றேன்..*

*அவரது இரு பேரர்களையும் அறபுகளின் தலைவி ஸஹ்ராவையும் நேசிக்கின்றேன்..*

*என்றாலும் எனது உள்ளத்தை அல்லாஹ்வே அறிவான்..*

*அது நபியின் தோழர்கள் மீதான அன்பினால் நிறைந்திருக்கின்றது...*

மேற்கண்டவை, நாம் குறிப்பிட வரும் விடயத்திற்கான சில உதாரணங்கள் மாத்திரமே. அதாவது, ஆதாரத்தின் அடிப்படையிலான கருத்துப் பரிமாற்றமும் கருத்து வேறுபாட்டுப் புள்ளிகளை நேர்மையாக அடையாளம் காண்பதுமே தீவிர நிலையைத் தவிர்ப்பதற்கான வழி என்பதாகும். மாறாக, தமக்குள் மாத்திரமே மூடி வைத்துக் கொள்வது, தீவிரத்தையும் வெறியுணர்வையுமே பெருக்கி வைக்கும்.

மாற்றுக் கருத்தாளர்களை மதித்து, அவர்களுடன் சுமுக உறவு பேணுவது குறித்துப் பேசுவார் இமாம் ஷம்ஸுத்தீன் அத்தஹபி: 'மு.்.தஸிலா, ஷீயா, ஹன்பலீ, அஷ்அரி, முர்ஜிஆ, ஜஹ்மிய்யா, கராமிய்யா முதலான பிரிவினர்களுள் தீவிர உணர்வு கொண்டவர்களால் உலகில் பெரும் குழப்பங்களும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. இவர்களுள் திறமையாளர்கள், வணக்கவாளிகள், அறிஞர்கள் இருக்கின்றார்கள். ஏகத்துவத்தைப் பின்பற்றுவோர்க்கு அல்லாஹ் மன்னிப்பை வழங்குவானாக! மனோ இச்சை, பித்அத்களிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றோம். ஸுன்னாவையும் அதனைக் கடைப்பிடிப்போரையும் நாம் நேசிக்கின்றோம். ஓர் அறிஞரை, அவரது இஸ்லாத்துக்காகவும் அவர் கொண்டுள்ள நல்ல பண்புகளுக்காகவும் விரும்புகின்றோம். நியாயங்கள் சொல்லிக் கொண்டு தோற்றுவிக்கப் படும் பித்அத்துகளை நாம் ஏற்பதில்லை. நல்ல பண்புகள் பெருக வேண்டும் என்பதே எமது விருப்பு.'

## உறவாடல் ஏன் அவசியம்?

### ஆதாரபூர்வமான ஒன்றையே ஆதரிக்க வேண்டும்; தக்லீதை அல்ல

மத்ஹப் செயற்பாட்டாளர்கள் மத்தியில் அவசியப்படுகின்ற இந்த உறவாடலுக்கான பிரதான காரணம் இஸ்லாமிய உம்மத்தின் ஒற்றுமையே எனச் சிலர் கூறுவர். இது மிகவும் முக்கியமானது தான் என்றாலும் இது மாத்திரம் தான் காரணம் என்றோ, அல்லது இது தான் முக்கியமான காரணம் என்றோ நாம் கூறிவிட முடியாது. இதனை விடவும் முக்கியமான ஒரு காரணம் இதன் பின்னால் இருக்கின்றது. அது தான் உண்மையை, சத்தியத்தைத் தேடுதல், இதனை நாம் ஆதாரங்களைத் தேடுவதன் மூலமே அடையலாம்.

சத்தியம் ஒன்று தான். அதனை அடைந்து கொள்ளும் பாதைகள் தான் பன்முகப்பட்டன. ஒவ்வொரு பாதையிலும் சத்தியத்துக்கு மிகவும் நெருக்கமான அம்சங்களும் தூரமான அம்சங்களும் இருக்க முடியும். அந்த வகையில் சத்தியத்தை அடைந்து கொள்ளும் தனித்ததொரு பாதையோ, தனித்து சத்தியத்துடன் முழுமையாக உடன்பட்டுச் செல்லும் ஒரு பாதையோ கிடையாது. நாம் சத்தியத்தை நெருங்கி வர முயற்சிக்கிறோம்;

சரியானதைக் கண்டு கொள்ள முனைகிறோம். அவ்வளவு தான். தான் சத்தியத்தை அடைந்து கொண்டு விட்டதாக எவரும் வாதிட முடியாது.

ஒருவர் சத்தியத்தை அடைந்து கொண்டார் என்ற முடிவுக்கு வருவது, அதனை நெருங்கி வருவதற்கான அவரது முயற்சிகளின் பின்னர் ஆக வேண்டிய ஒன்றாகும். அதாவது அத்தகு முடிவை அடைவது, பிந்தி வருவதொன்றாகும்; முந்தி வருவதல்ல. செயற்பாட்டிற்கான காலம் முடிந்த பின்னர் அல்லது செயற்பாட்டுப் பரப்பிலிருந்து மாறிய பின்னர் வருவது தான் முடிவு. இம்முடிவை அங்கீகரிக்கவோ, உறுதிப்படுத்தவோ, அனைத்துத் தரப்பினரையும் மேலாதிக்கம் செய்யும், எல்லோரது உள்ரங்கங்களையும் அறிந்த ஒருவராலேயே இயலும். அது அல்லாஹு ஸுபுஹானஹு வதஆலா மாத்திரமே. அவன் மட்டுமே இவ்வுலகில் நாம் கருத்து வேறுபாடு பட்டுக் கொள்ளும் விவகாரங்கள் அனைத்துக்கும் மறுமையில் முடிவு சொல்பவன்; தீர்ப்பு அளிப்பவன். இது தான் மத்ஹபுகளின் கதை. ஒவ்வொன்றிலும் சரியும் இருக்கிறது; பிழையும் இருக்கிறது.

மத்ஹபுகளின் இமாம்கள் அடுத்த தரப்புகளுடன் உறவுகளைப் பேண நினைத்தமையானது, உண்மையில் பிறரைத் தவிர்ந்திருப்பது சாத்தியமற்றது என்ற அவர்களது நம்பிக்கையையே காட்டுகின்றது. அடுத்தவர்களின் ஆதாரங்களையும் கண்டிப்பாக ஆராய வேண்டும். ஏனெனில் அவை சில சமயம் பலமானவையாக இருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. சத்தியத்தைத் தேடுதல் என்பது ஆதாரங்களைத் தேடுவதன் மூலமே நடைபெற முடியும்; தக்லீத் செய்வதன் மூலமாக அல்ல.

கருத்து வேறுபாட்டின் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதன் அடிப்படையிலேயே இமாம் அபூ ஹனீபாவின் மேல் வரும் கூற்று அமைந்திருக்கின்றது: 'நாம் கொண்டிருக்கும் இந்த பகுத்தறிவுப் பார்வையை நாம் யாரிடமும் திணிப்பதில்லை; யாரும் இதனை அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என நாம் வற்புறுத்துவதுமில்லை. இதனை விட நல்லதொரு பார்வை யாரிடமும் இருந்தால் அவர்கள் அதனை முன்வைப்பார்களாக'. அதனால் இமாம் அபூ ஹனீபா, சத்தியம் என்பது சார்புத் தன்மை கொண்டதோ, திரவதத் தன்மை கொண்டதோ எனக் கூற வரவில்லை. சத்தியத்தை அடைந்து கொள்ளும் வழிகளில் உள்ள வேறுபாட்டையே அன்னார் குறிப்பிட விழைந்தார்கள்.

சுத்தம் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தில் இமாம் மாலிக் ஒரு மனிதருக்கு பத்வா ஒன்றை வழங்கினார். அவரது மாணவர்களில் ஒருவர் முன்வைத்த ஒரு கருத்தினை ஏற்று, தான் வழங்கிய பத்வாவை வாபஸ் பெற்று, அந்த விடயம் குறித்து இமாம் அபூ ஹனீபா வழங்கியிருந்த பத்வாவையே அந்த மனிதருக்குக் கொடுத்தார் இமாம் மாலிக். கருத்து

வேறுபாட்டின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதன் அடிப்படையிலேயே இது நிகழ்ந்தது.[(9)]

ஆதாரபூர்வமானதைத் தேட வேண்டும் என்ற இதே ஆர்வத்தை அபூ காஸிம் பிஷ்ர் இப்னு கானிம் அல்குராஸானி அல்இபாழி, தனது ஆசிரியர் பற்றிக் குறிப்பிடும் ஒரு சம்பவத்திலும் காணலாம். ஒப்பீட்டு அணுகுமுறையைக் கடைப்பிடித்து அவர் ஆக்கிய 'அல்முதவ்வனா அல்குப்ரா' என்ற தனது நூலில் தனக்கும் தனது ஆசிரியரான அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸீஸுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல்கள் பற்றிக் குறிப்பிடுவார். அவரது ஆசிரியர் அவரது மத்ஹபையே சேர்ந்த ஜாபிர் இப்னு ஸைத், அபூ உபைதா முஸ்லிம் இப்னு அபீ கரிமா முதலிய இமாம்களின் கருத்தை விட்டு, மாற்று மத்ஹபினரான இப்றாஹீம் அந்நகஇயின் கருத்தை எடுத்த ஒரு சந்தர்ப்பத்தில் அல்கானிம் தனது ஆச்சர்யத்தை வெளிப்படுத்திய வேளை ஆசிரியர் அப்துல்லாஹ் கூறினார்: 'நீங்கள் முகல்லிதாகவே இருக்கிறீர்கள். நீதியான கருத்து என நான் கருதும் ஒருவருடைய கருத்தை நான் ஏன் ஏற்கக் கூடாது? அக்கருத்து எனது மனதில் உள்ள சந்தேகத்தைப் போக்குகிறது; தவறில் இருந்து பாதுகாக்கிறது. இப்றாஹீமுடைய கருத்தை எடுப்பது நம்பிக்கையான ஒரு கருத்தை எடுப்பதாகும். ஆகவே தான் அக்கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.'

தனது 'அல் மஸாஇல் அந்நாஸிரிய்யாத்' நூலின் மூலம் அஷ்ஷரிப் அல்-முர்தழா மாற்றுக் கருத்துகளை ஆராயவும் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பது புரிகின்றது. கிளைச் சட்ட விவகாரம் ஒன்றில் தனது மத்ஹபைச் சார்ந்தவர்களிடம் தெளிவான ஓர் அபிப்பிராயம் இல்லாத போது இமாம் ஷாபியின் கருத்து பொருத்தமாகத் தெரியுமிடத்து அதனை ஏற்றுக் கொள்வதில் எந்தத் தவறும் இருப்பதாக அவர்

---

(9) இதன் முழுமையான அறிவிப்பைப் பொறுத்தவரை, காதிஹ் இப்னு ஸஹ்மா ஊடாக அஸ்ஸமீரி அறிவிக்கிறார்: ஒருவர் இமாம் மாலிக்கிடம் வந்து, ஒரு மனிதரிடம் இரண்டு ஆடைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சுத்தமானது, மற்றையது அசுத்தமானது. ஆனால் எது சுத்தமானது; எது அசுத்தமானது என்பது தெரியாது. இப்போது தொழுகை நேரம் வந்து விட்டால் என்ன செய்வது? என்று கேட்டார். அதற்கு இமாம் மாலிக் அவர்கள், சுத்தமானதை முயற்சி செய்து கண்டுபிடிக்க வேண்டும் என்றார்கள். அப்பொழுது, காதிஹ் என்பவர், இமாம் அபூ ஹனீபா அவர்கள் இரண்டு ஆடைகளுடனும் ஒவ்வொரு தடவை தொழ வேண்டும் என்று பத்வாக் கொடுத்துள்ளார்கள் என்று நான் இமாம் மாலிக்கிடம் சொன்னேன். இதற்கு அவர் குறித்த மனிதரை மீளவும் வரவழைத்து, இமாம் அபூ ஹனீபாவின் பத்வாவை அவருக்கு வழங்கினார்கள்.

கருதவில்லை. தனது நூலில், அசுத்தம் தண்ணீரை நோக்கி வருவதற்கும் தண்ணீர் அசுத்தத்தை நோக்கிச் செல்வதற்கும் இடையில் வேறுபாடு இல்லை என்ற விவகாரம் குறித்துப் பேசுகின்ற பொழுது கூறுவார்: 'இந்த விவகாரத்தில் எமது மத்ஹப் அறிஞர்களிடத்தில் தெளிவான ஒரு கருத்தைக் காண முடியவில்லை. இமாம் ஷாபி, அசுத்தம் தண்ணீரை நோக்கி வருவதையும் தண்ணீர் அசுத்தத்தை நோக்கிச் செல்வதையும் வேறுபடுத்தி நோக்கியிருக்கின்றார். அசுத்தம் தண்ணீரை நோக்கி வந்தால் தண்ணீர் குல்லதைன் அளவு இருந்தால் மாசுபடாது என்றும் குறைவாக இருந்தால் மாசுபடும் என்றும் அவர் கூறுவார். ஆனால் தண்ணீர் அசுத்தத்தை நோக்கிப் போனால் அங்கு குல்லதைனை வைத்துத் தீர்ப்புச் சொல்லப்படுவதில்லை என்பதும் அவரது கருத்து. இந்த விவகாரத்தில் ஏனைய இமாம்கள், இமாம் ஷாபியுடன் முரண்படுகின்றனர். இதனை இன்னும் ஆழ்ந்து பார்க்க வேண்டும். இமாம் ஷாபியின் நிலைப்பாடு சரியானது என்றே நான் கருதுகின்றேன்.'

ஆதாரபூர்வமானதைத் தேடுதல் பல சந்தர்ப்பங்களில், தமக்கு மத்தியில் உடன்பாடுகள் இல்லை என நினைப்பவர்களையும் உடன்பட வைக்கின்றது. உதாரணமாக, 'அத்தலாகுல் பிதஈ' எனும் தலாக்கின் செயல்முறை ஒழுங்கை மீறி நடைபெறும் தலாக் வகை பற்றிய விவகாரத்தில் இமாம் இப்னு தைமிய்யா, இமாமிய்யாக்களின் நிலைப்பாட்டுடன் ஒத்துச் செல்வதைக் காணலாம். அதாவது ஒரு கணவர், தனது மனைவியை, அவளது சுத்தமான காலத்தில் ஒரே தடவையில் மூன்று தலாக்கையும் ஒரே வார்த்தையிலோ அல்லது வெவ்வேறு வார்த்தைகளிலோ மொழிகின்றார். இது பற்றிய சட்ட நிலைப்பாடு என்ன? இமாம் இப்னு தைமிய்யா இது பற்றிய ஆரம்பகால, பிற்பட்ட கால அறிஞர்களது கருத்துகளைத் தொகுத்து அவற்றை மூன்று வகையினராகச் சாராம்சப்படுத்தினார். அவற்றுள் மூன்றாவதான, 'இவ்வகை தலாக் ஹராமானதாகும்; ஆனால் சொல்லப்பட்ட தலாக் ஒரு தடவை சொன்னதாகக் கொள்ளப் படும்' என்பது பல ஆரம்பகால, பிந்தியகால அறிஞர்களது கருத்தாகும் என்பார் அவர். ஸஹாபாக்களுள் ஸுபைர் இப்னு அல்அவ்வாம், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், அலீ, இப்னு மஸ்ஊத், இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹும் போன்றோரதும்; பல தாபிஈன்களதும்; அவர்களுக்குப் பின்வந்த தாவூஸ் போன்றோரதும்; அபூ ஜ஼்பர் முஹம்மத் இப்னு அலீ இப்னு அல் ஹுஸைன், அவரது மகன் ஜ஼்பர் இப்னு முஹம்மத் போன்றோரதும்; இமாம் அபூ ஹனீபா, இமாம் மாலிக், இமாம் அஹ்மத் ஆகியோரது மாணவர்கள் சிலரதும் கருத்தாக இது இருக்கின்றது எனக் கூறும் இப்னு தைமிய்யா, இம்மூன்றாம் கருத்துத் தான் அல்-குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் பலமானதாகும் என மேலும் விளக்கங்கள் அளிப்பார்.

இந்த விவகாரத்தில் இப்னு தைமிய்யா, பெரும்பாலான ஹன்பலீ மத்ஹபினரின் கருத்தான 'இவ்வகை தலாக் ஹராமானது என்றிருப்பினும் மூன்று தலாக்கும் நிறைவேறும்' என்ற நிலைப்பாட்டுக்கு மாற்றமாகச் சென்று, இமாமீய ஷியாக்களின் கருத்தை ஒத்துச் செல்கின்றார். இது, ஆதாரபூர்வமானது எது என்ற தேடலின் அடிப்படையில் விளைந்த உடன்பாடாகும். இதன் காரணமாகவே இமாம் இப்னு தைமிய்யா சிறை செல்ல வேண்டி ஏற்பட்டது. அவரின் எதிரிகள் சிலர், இக்கருத்து ராபிழீக்களின் நிலைப்பாடு எனக் குற்றம் சாட்டியதின் பேரிலேயே அவர் தண்டனைக்குள்ளானார்.

இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பார் இப்னு தைமிய்யா: 'தொழுகையில் பிஸ்மில் சத்தமாக ஓதுதல்; பிரயாணம் மற்றும் ஊரில் இருத்தல் அல்லது ஊரில் இருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் காலுறை மீது நீரைத் தடவுதல்; ஸுப்ஹு தொழுகையில் குனூத் ஓதுதல்; ஏக காலத்தில் உம்ராவையும் ஹஜ்ஜையும் வெவ்வேறாக நிறைவேற்றுதல்; செயன்முறை ஒழுங்கை மீறி நடைபெறும் தலாக் நிறைவேற மாட்டாது எனக் கருதுதல்; அடக்கஸ்தலங்களை மேடாக உயர்த்தாமல் தட்டையாக அமைத்தல்; தொழுகையில் கைகள் இரண்டையும் கீழே தொங்கவிடுதல் போன்ற செயற்பாடுகள் ஷீயாக்களின் பித்அத்துகள் என்று மக்களில் சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இவை அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகளுக்குட்பட்ட பிரச்சினைகளாகும். சில சமயம் அவர்களுடன் உடன்படும் கருத்து சரியாக அமையும்; அது போல் அவர்களுடன் முரண்படும் கருத்து சரியாக அமையவும் வாய்ப்பு இருக்கின்றது. இந்த விவகாரங்கள் இஜ்திஹாதுக்கு உட்பட முடியுமான பரப்புகளாகும். எனவே இவற்றை மறுதலிக்க முடியாது. ஆனால் இவை அனுமதிக்கப்பட முடியாத ஒன்றை பரப்பக் கூடுமாயின், இஜ்திஹாதுக்கு உட்பட்டவையாக இருப்பினும், அவை மறுக்கப்பட வேண்டும். இதற்கான உதாரணமாக கப்ரின் மீது ஈச்ச மரக் குற்றியை நடுதலைக் குறிப்பிடலாம். இந்த நடைமுறை சில ஸஹாபாக்கள் ஊடாக நகர்த்தப்பட்டுள்ளது. இவை போன்ற மேலும் பல உதாரணங்கள் இருக்கின்றன.

இமாம் இப்னு தைமிய்யா, ஷீயாக்களது கருத்தை சரி அல்லது பிழை எனக் கூறவதைத் தவிர்த்து 'அவர்களுடன் உடன்படுபவர்களது கருத்து' என்ற வார்த்தையையே பயன்படுத்தியுள்ளார்கள். இது இமாமீய ஷியாக்கள் பற்றிய இப்னு தைமிய்யாவின் நிலைப்பாட்டை வெளிக்காட்டக் கூடியதாக இருக்கிறது. இந்த நியாயத்திற்காகவே மேற்கண்ட உதாரணத்தை நாம் கொண்டு வந்தோம். ஆதாரபூர்வமானதைத் தேடிச் செல்கின்றோம் எனின் நாம் சந்திப்பதற்கான வாய்ப்புக் கிட்டும் என்பதைக் காட்டவே நாம் நினைத்தோம். எப்போதும் சொல்பவரை விடவும் சொல்லப் படும் விடயம் தான் முக்கியமானது. மனிதர்களை வைத்து சத்தியத்தை அறிந்து

கொள்ள முடியாது; சத்தியத்தை வைத்துத் தான் மனிதர்களை அறிந்து கொள்ள முடியும்.

இமாம் ஷம்ஸுத்தீன் அத்தஹபி, இமாம் இஸ்ஹாக் இப்னு முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு அபான் அந்நகஇ பற்றிக் குறிப்பிடும் போது அவருடன் நீதமாக நடந்து கொண்டுள்ளமையைப் பின்வரும் கூற்றில் காணலாம்: 'ஷீயாக்களில் தீவிரமான ஒரு பிரிவினர் இஸ்ஹாகிய்யா என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் அலீ ரழியல்லாஹு அன்ஹு தான் அல்லாஹ் என்கின்றனர். அவர்கள் சொல்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகவும் உயர்ந்தவன்... ஷீயாக்களின் பிரசித்தம் வாய்ந்த ஓர் அறிஞரான அல்ஹஸன் இப்னு யஹ்யா அந்நபூகதி, ஷீயாக்களின் இந்தத் தீவிரப்பிரிவினருக்குப் பதிலளிக்கும் போது 'எமது காலத்தில் தீவிரத்தில் பித்துப் பிடித்தவர் தான் அல்-அஹ்மர் எனப் பிரபல்யமான இஸ்ஹாக் இப்னு முஹம்மத். அவர், அலீ ரழியல்லாஹு அன்ஹு தான் அல்லாஹ் என்றும் அவர் எந்நேரத்திலும் எவ்விடத்திலும் தோன்றுவார் என்றும் அவர் தான் முஹம்மதைத் தூதுவராக அனுப்பினார் என்றும் உளறியிருக்கிறார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.' மாற்றுக் கருத்தாளர்களின் நூல்களையும் நாம் நுணுக்கமாகக் கற்க வேண்டும்; அப்போது தான் அவர்களது நேர்மையைப் புரிந்து கொள்ள முடியும்; ஆழமற்ற பொதுமைப்படுத்தலின் கீழ் அனைத்தையும் அடக்கிவிடக் கூடாது என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஷீயாக்களின் அகீதா பற்றிய நபூகதியின் நூல் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றது.

இமாம் ஸைனுத்தீன் இப்னு அலீ அல்-ஜுபாஇ (ஹி. 911-966) ஷெய்க் அபுல் ஹஸன் அலி இப்னு முஹம்மத் அல்பக்ரி அஷ்ஷாபிஇ (மறைவு ஹி. 952) ஆகியோருக்கிடையில் நடந்த கலந்தரையாடல் ஒன்றில் 'ஆதாரபூர்வமானதையே தேட வேண்டும்; ஆதாரமற்ற குருட்டுத் தனமான தக்லீதைக் கடைப்பிடிக்கக் கூடாது' என்ற சிந்தனையின் பிரதிபலிப்பைக் காணலாம். இருவரும் ஒரு முறை ஹஜ்ஜுக்கு ஒன்றாய்ச் சென்றார்கள். அல்ஜுபாஇ, அல்பக்ரியிடம் சில நூல்களைக் கற்றார். அவற்றின் உள்ளடக்கங்கள் குறித்து இவர்களிடையே பல உரையாடல்கள் இடம்பெற்றன.

இருவரிடையிலுமான ஓர் உரையாடலைப் பதிவு செய்வார் அல்ஜுபாஇயின் மாணவர் இப்னு அல்-அவ்தி:

**அல்ஜுபாஇ:** இந்த சாதாரண ஜனங்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? அவர்கள் தம்மை அழிவிலிருந்து காத்துக் கொள்வதற்கான வழிகளை அறியாதிருக்கிறார்கள். அல்லாஹ்விடத்தில் இவர்கள் பற்றிய தீர்ப்பு என்ன? இவர்களது குறைபாடுகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானா? ஏன் இந்த அறிஞர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். கண்ணியத்துக்குரிய

இந்த அறிஞர்களும் ஏதேனும் ஒரு மத்ஹபுடன் மாத்திரம் தம்மைச் சுருக்கிக் கொண்டிருக்கின்றனர். தான் தெரிவு செய்த மத்ஹபுக்கு வெளியில் அவர்களுக்கு எதுவும் தெரிவதில்லை. பிறவற்றை ஆராய்ந்து அறிவதற்குரிய ஆற்றல் இருந்தாலும் முன்னையவர்களைத் தக்லீத் செய்வதுடன் திருப்திப் பட்டுக் கொள்கின்றார்கள். முன்னையவர்கள் போதுமான அளவு அறிவைக் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாகவே அவர்கள் நம்புகின்றனர். சத்தியம் ஏதோ ஒரு தரப்பில் தான் இருக்க முடியும். ஒரு பிரிவினர் சத்தியத்தை தமது அறிஞர்களை மேற்கோள் காட்டி முன்வைக்கின்றனர். மற்றொரு பிரிவாரும் அவர்களது அறிஞர்களை மேற்கோள் காட்டி சத்தியம் இது தான் என்கின்றனர். ஒவ்வொரு பிரிவினரும் மேற்கோள் காட்ட அறிஞர்கள் பலர் இருக்கின்றனர்... நாம் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இல்லாத அளவுக்கு அவர்கள் நிறையவே உழைத்துச் சேர்த்து வைத்திருக்கிறார்கள்... எமது நிலைப்பாடு தொடர்பில் நாம் தெளிவாகத் தான் இருக்கின்றோம்... சத்தியம் எல்லோருடனும் இருக்க முடியுமா? முடியாது. அல்லது சிலருடன் இருக்க முடியுமா? இதில் ஒன்றை விடவும் மற்றொன்றை மேம்பட்டது எனக் கருதுவதற்கு ஆதாரம் இல்லையே!

**அபுல் ஹஸன்:** பொதுமக்களைப் பொறுத்தவரை, அல்லாஹ் அவர்களை மன்னிக்கட்டும்; அவர்களது குறைபாடுகள் காரணமாக அவர்கள் தண்டிக்கப்படாதிருக்கப் பிரார்த்திப்போம். அறிஞர்களைப் பொறுத்தவரையில் வெளிப்படையில் ஒவ்வொருவரும் சத்தியத்தில் தான் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குப் போதுமானது.

**அல்–ஜுபாஇ:** அவர்கள் ஒரு விடயத்தை முறையாக ஆராய்வதில் குறைகள் விட்டிருக்கும் போது அது எப்படிப் போதுமாகும்?

**அபுல் ஹஸன்:** ஷெய்க் அவர்களே! உங்களுக்கான பதில் மிகவும் இலகுவானது. ஒரு குழந்தை விருத்த சேதனம் செய்யப்பட்ட நிலையில் பிறந்தால், விருத்த சேதனம் செய்ய வேண்டிய கடமை அந்தக் குழந்தையைப் பொறுத்தவரை அவசியமில்லை. பிறக்கும் போதே நிகழ்ந்தது போதுமானது.

**அல்ஜுபாஇ:** இந்த விருத்த சேதனம் ஒரு படைப்பு. இதனால் கடமையான விருத்த சேதனம் இல்லாமல் போக மாட்டாது. துறை சார்ந்தவர்கள் இதனை ஆராய்ந்து இங்கு நிகழ்ந்திருப்பதும் கடமையான விருத்த சேதனம் தான் என்பதை உறுதிப்படுத்தினாலே ஒழிய.

**அபுல் ஹஸன்:** ஷெய்க் அவர்களே! இது தான் இஸ்லாத்தில் உடைக்கப்பட்ட முதலாவது கண்ணாடிக் குவளை அல்ல.

மேற்கண்டவற்றிலிருந்து முரண்பட்டவர்கள் இடையே உறவாடலுக்கான

காரணிகள், மட்டுமன்றி பரஸ்பரத் தாக்குதல்களுக்குமான காரணிகளும் இல்லாமல் போய்விடவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். எவ்வளவு தான் முரண்பாடுகள் இருந்தாலும் மூலாதார ஒருமைப்பாடு இதில் தாக்கம் செலுத்தியிருக்கின்றது. இந்த உறவாடலின் காரணமாக ஒவ்வொரு பிரிவினரும் தமது அறிவுப் பாரம்பர்யங்களை மீள்பரிசீலனை செய்யவும் சுய விசாரணைக்குட்படுத்தவும் அதற்கும் மேலாக அடுத்த தரப்பின் சரியையும் நியாயத்தையும் கண்டு கொள்ளவும் இயலுமானது. ஒவ்வொரு மத்ஹபிலும் சரியும் உள்ளது; பிழையும் உள்ளது. எந்த ஒரு மத்ஹபும் மார்க்கத்தின் சத்தியத்தை நாம் மாத்திரமே வைத்திருக்கின்றோம் என உரிமை கோர முடியாது.

மத்ஹப்களின் அறிவுப் பாரம்பர்யங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கூறுவது, வெறுமனே அவற்றிற்கிடையில் சந்திப்புகளுக்கான பரப்புகளை இனம் காண்பதற்காக மாத்திரமல்ல. இந்த முரண்பாடுகளுக்கும் பன்முகத் தன்மைக்கும் ஒவ்வொரு மத்ஹபின் தனித் தன்மைக்கும் பின்னால் இருக்கும் பொதுக் கோட்பாட்டுக் காரணிகள் யாவை என அடையாளம் காண்பதும் ஆகும். மத்ஹப் முரண்பாடுகளுக்குள் இருந்து கொண்டோ, ஏதேனும் ஒரு மத்ஹபை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஏனையவற்றை அதனுடன் ஒப்பீடு செய்வதன் மூலமோ இதனை மேற்கொள்ள நாம் நினைக்கவில்லை. அல்-குர்ஆனை மையமாகக் கொண்டனவாகவே எமது ஆய்வுகள் அமைய வேண்டும்.

## 5. சிந்தனைப் பள்ளிகளின் அறிவு முதுசங்களது மூலாதார ஒருமைப்பாடும் அதன் தாக்கமும்

குறுங்குழு வாதங்கள் எத்துணை தான் இருந்த போதும் மூலாதார ஒருமைப்பாடு -அதனை அணுகும் முறைகள் வேறுபட்டாலும்- எமது அறிவுப் பாரம்பர்யத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் விளக்கங்கள் கொடுப்பதில் முரண்பாடுகள் இருந்தாலும் குர்ஆன் இறக்கப்பட்டமையில் எம்மிடம் முரண்பாடுகள் இல்லை. அல்லாஹ்வே அதனைப் பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்துள்ளான்.

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ - الحجر: ٩

**“நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.” (ஹிஜ்ர் 15:9)**

நாம் ஏற்றாலும் மறுத்தாலும் மூலாதார ஒருமைப்பாடு, எமது உம்மத்தின் அறிவுப் பாரம்பர்யத்திலும் அது நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற அதன் ஒருமைப்பாட்டிலும் தனித்துவ அடையாளத்திலும்

ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது உண்மை. நாம் உணர்ந்தோ உணராமலோ, அறிந்தோ அறியாமலோ இது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த மத்ஹப் வேறுபாடுகள், பன்முகத் தன்மைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் மூலாதார ஒருமைப்பாடு, அதன் தாக்கங்கள் என்பன குறித்த சில உதாரணங்களை நாம் காண விழைகிறோம். இதன் நோக்கம் மத்ஹபுகளுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது அல்ல. மாறாக, இவற்றுக்கிடையில் உறவாடலுக்கான அல்லது சந்திப்புக்கான பரப்புகள் காணப்படுகின்றன என்பது வலிந்து சொல்லப்படுகின்ற ஒரு செய்தியல்ல. இயல்பான, தர்க்க ரீதியான ஒரு விடயமாகவே அது அமைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் முன்வைப்பதே எமது நோக்கம்.

இமாமிய ஷீயா சிந்தனைப் பள்ளியினுள், சட்ட அடிப்படைகள் மரபில் தோன்றிய பகுத்தறிவுவாதப் போக்கின் தோற்றமே ஏனைய சிந்தனைப் பள்ளிகளுடன் திறந்த மனப்போக்குடன் நடந்து கொள்ள ஏதுவாயமைந்தது என நாம் கூறலாம். இது, ஒவ்வோர் அறிஞர்க்கிடையிலும் பரம்பரைக்கிடையிலும் வெவ்வேறுபட்ட அளவுகளில் காணப்பட்டிருக்கின்றது. இத்தகு அணுகுமுறையை இல்முல் கலாம் துறை அறிஞர்களே ஆரம்பத்தில் கடைப்பிடித்தார்கள்.[10]

---

*(10)* இமாம் அபூ ஸஹ்ரா, இமாமிய்யாக்கள் தமது உஸூலுல் பிக்ஹ் பற்றிய சிந்தனையில் ஷாபிஇய்யாக்களுடன் பெரிய அளவு உடன்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தை அவர் விளங்கப்படுத்தும் பொழுது, 'உஸூலுல் பிக்ஹில் ஷாபிஇய்யாக்கள் மற்றும் முதகல்லிமூன் என்னும் இல்முல் கலாம் துறையினர் ஆகியோரது அணுகுமுறையானது, ஒரு குறித்த மத்ஹபுக்குள் தம்மை வரையறுத்துக் கொள்ளாமல், பொதுவாக விதிகளை விளங்கப்படுத்துவதாகக் காணப்பட்டது. இந்த அணுகுமுறை ஷாபிஇய்ய அணுகுமுறை என்று அழைக்கப்பட்டது. காரணம் இவ்வகை ஆய்வில் அதிகம் ஈடுபட்டவர்கள் ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களாவர். உதாரணமாக இமாம் கஸ்ஸாலி, பக்ருத்தீன் அர்ராஸி, அல்ஆமிதி, அல்பைழாவி போன்ற பலரைக் குறிப்பிடலாம். அதே சமயம் இது முதகல்லிமூன்களது அணுகுமுறை என்றும் அழைக்கப்பட்டது. காரணம் இதே அணுகுமுறையில் முஃதஸிலாப் பிரிவைச் சேர்ந்த பலரும் உஸூல் பிக்ஹ் ஆய்வில் ஈடுபட்டனர். இவர்கள் தான் இல்முல் கலாம் துறை அறிஞர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதனால் இதனை முதகல்லிமூன்களது அணுகுமுறை என்றும் அழைப்பர்' என்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், 'அந்த வகையில் இமாமீய மத்ஹபில் உஸூலுல் பிக்ஹ் பற்றிய ஆரம்ப நூலாக்கங்கள், மொத்த வடிவில், மேற்கண்ட பொது ஒழுங்குக்கு உட்பட்டே நடைபெற்றுள்ளன. ஆனால் விரிவான வடிவங்களில்

இல்முல் கலாம் துறையாளருக்கு, மாற்றுக் கருத்தாளர்களின் கருத்துகளையும் அவற்றிற்கான ஆதாரங்களையும் ஆழ்ந்து பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது தெளிவு. இதற்கு ஒரு பகுத்தறிவுவாத, விமர்சனப்பார்வை அவசியப்படுகின்றது. ஒவ்வொரு சிந்தனைப் பள்ளிக்குள்ளேயும் இத்தகு பார்வை கொண்டவர்கள் தான் மாற்றுக் கருத்தாளர்களுடன் உறவுகளைப் பேணவும் தமது சொந்த சிந்தனைப் பள்ளிக்குள்ளேயே புனர் நிர்மாணங்கள் செய்யவும் சக்தி பெற்றவர்களாக இருந்துள்ளார்கள். இல்முல் கலாம் கலையின் நேர்மையப் பக்கம் இதுவென்றே கூறலாம். மு.ஃ.தஸிலாக்களின் கருத்துகளை முழுமையாக சுவீகரித்துக் கொண்டவர்களல்ல இவர்கள். என்றாலும் ஆரம்பமாக அவர்களது கருத்துகளை உரையாடல்களுக்கு உட்படுத்தியவர்கள் இவர்களே.

இவர்களுக்கு மறுதலையாகக் காணப் பட்டோர் வாக்கியவாத அணுகுமுறையினர். ஒவ்வொரு சிந்தனைப் பள்ளியிலும் இத்தகையோர் மாற்றுக் கருத்தாளர்களை விட்டும் ஒதுங்கி, தத்தமது சிறப்பம்சங்களைப் பேணிப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டுவோராக விளங்கினர். இமாமிய ஷீயா சிந்தனைப் பள்ளியினுள் இந்த வேறுபாட்டை வெளியில் இருந்து அவதானித்தவர் இமாம் ஷஹ்ருஸ்தானி. தனது ‘அல்மிலல் வந்நிஹல்’ நூலில் அவர் கூறுவார்: ‘இமாமிய்யாக்களில் மு.ஃ.தஸிலா சிந்தனை கொண்டவர்களும் இருந்தனர். அவர்கள் ஒன்றில் வஈதிய்யா எனும் ‘அல்லாஹ்வின் எச்சரிக்கைகளை அவன் கட்டாயம் நிறைவேற்றியே ஆக வேண்டும்’ எனக் கூறும் பிரிவினராக அல்லது தப்ழீலிய்யாப் பிரிவினராக இருந்தனர். மற்றும் சிலர் அக்பாரிய்யா எனும் வாக்கிய வாதிகளாக இருந்தனர். அவர்கள் ஒன்றில் முஷப்பிஹா எனும் அல்லாஹ்வை படைப்புகளுக்கு ஒப்பாக்கும் பிரிவினராக அல்லது ஸலபிய்யாவாக இருந்தனர்.’

---

வித்தியாசங்கள் உள்ளன... பின்னர் இதே அணுகுமுறையை முதகல்லிமூன்கள் என்போர் தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். இந்த அணுகுமுறை தனித்து விதிகளை மாத்திரமே ஆராய்கின்றது. அவை கிளை விவகாரங்களுடன் பொருந்தி வருகின்றனவா என்பதைப் பார்க்க மாட்டாது. அது போல் கிளை விவகாரங்களை நுணுக்கமான அளவுகோள்கள் மூலம் அளவீடு செய்யவும் வரையறை செய்யவும் இவை பயன்படுத்தப்பட்டன. ஆனால் விதிகளை எந்த மாற்றமும் இல்லாமல், அவை பெரும்பான்மை முஸ்லிம்களுடன் உடன்படுகின்றனவா அல்லது முரண்படுகின்றனவா என்பதையும் பார்க்காமல், அவ்வாறே பேணி வந்தனர். அணுகுமுறை ஒன்றுபடுவதால் சிந்தனைப் பாங்கு ஒன்றுபடும் என்று சொல்ல முடியாது. அளவுகோள்களும் வரையறைகளும் ஒன்றுபடுவதாலும் அவற்றைப் பிரயோகிக்கும் அனைத்துக் கிளை விவகாரங்களும் ஒன்றுபடும் என்றும் சொல்ல முடியாது’ என்கின்றார்.

இந்த இரு பிரிவினர் மத்தியில் இருந்த வேறுபாட்டை வெளிப்படுத்தும் சில கருத்துகளை இமாமீகளுக்குள்ளேயும் காண முடிகிறது. ஷெய்க் அல்முபீத், தனது 'அல்மஸாயில் அஸ்ஸருவிய்யா'வில் கூறுவார்: 'ஹதீஸ் துறையாளர்கள் பிரபல்யமானவற்றை மாத்திரமன்றி நல்லது, கெட்டது அனைத்தையும் அறிவிக்கின்றனர். அவர்கள் ஒரு ஹதீஸின் நம்பகத் தன்மையை ஆராய்வதற்கான திறன் கொண்டவர்கள் அல்லர். தாம் அறிவிப்பவற்றை வேறுபடுத்தும் அறிவு அவர்களிடம் இல்லை. அடிப்படைகள் பற்றிய ஆய்வின் மூலமே இவற்றை வேறுபடுத்தி அவற்றின் நம்பகத் தன்மையை உறுதி செய்ய முடியும்.'

பகுத்தறிவு ஆதார முறையை அல்லது கியாஸைக் கையாண்ட இமாம்களிடம் இந்த அணுகுமுறைக்கான வேர்களை நாம் காணலாம். இவர்களுள் அல்பழ்ல் இப்னு ஸாதான் (மறைவு ஹி. 260), யூனுஸ் இப்னு அப்துர் ரஹ்மான் போன்றோர் இமாமிய சிந்தனைப் பள்ளியில் முக்கியமானவர்கள். என்றாலும் கூட அறிவிப்புகளை மையப்படுத்திய பழைய வாக்கியவாத சிந்தனைப் பிரிவினர் இவர்களை விமரிசிக்கின்றனர். அஷ்ஷெய்க் அஸ்ஸதுக் தமது 'மன் லா யஹ்ழுருஹுல் பகீஹ்' எனும் நூலில், 'பேரப்பிள்ளைகளுடன் பெற்றோரின் வாரிசுச் சொத்து' குறித்துப் பேசும் போது கூறுவார்: 'இந்த விவகாரத்தில் எமது கருத்துக்கு முரணாக அல்பழ்ல் இப்னு ஸாதான் பேசியுள்ளார். இது நேர்வழியை விட்டும் அவரது பாதங்கள் சறுகிய ஒரு சந்தர்ப்பமாகும். கியாஸைப் பயன்படுத்தகின்றவர்கள் வழி இது தான்...'

ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டில் இமாம் இப்னு ஜுனைத் அல் இஸ்காபி, இமாம் அல்ஹஸன் இப்னு அபீ உகைல் அல்ஓமானீ ஆகியோரின் பிரசன்னத்துடன் அதிக பகுத்தறிவுப் போக்குக் கொண்ட சட்டப் பார்வை ஒன்றின் தோற்றம் நிகழ்ந்தது. மேலும் ஏனைய இஸ்லாமிய சிந்தனைப் பிரிவினர்களுடன் இவ்விருவரும் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார்கள் என்பதும் தெரிகின்றது. அந்த வகையில் இவர்கள் இருவரிடமும் ஷீயா சிந்தனை, அணுகுமுறை என்பவற்றுக்கு மாற்றமான கருத்துகள் பதிந்திருந்தன. எந்த அளவு எனின், இமாம் இப்னு ஜுனைத் கியாஸ் மீது கொண்டிருந்த ஈடுபாடு, அஹ்லுஸ் ஸுன்னாக்களின் சிந்தனைத் தாக்கத்தால் விளைந்தது எனச் சிலர் கருதினர்.

அடுத்து மத்ஹபுகளுக்கிடையில் பாலமாக அமைந்தவர்களுள் ஒருவர் அபூ ஜ..பர் அத்தூஸி (மறைவு ஹி. 460). தனது பணியில் நீண்ட தூரம் பயணித்தவர் இவர். மத்ஹப்களுடனான தனது திறந்த மனப்பாங்கின் அனுபவத்தின் விளைவாக, இமாமீய ஷீயா மத்ஹபில் ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த பிக்ஹ் முறைமை ஒன்றுக்கு அத்திவாரம் அமைக்க இமாம் அத்தூஸி அவர்களால் இயன்றது. ஷாபிஈ

அறிஞர்களின் பரம்பரை அடுக்குத் தொடரில் அத்தூஸியையும் இணைத்துக் கொண்டுள்ளார் இமாம் அஸ்ஸுப்கி. அவர் கூறுவார்: 'இமாம் அத்தூஸி ஷீயாக்களின் சட்ட அறிஞர். பல நூல்களை எழுதியுள்ளார். இவர் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்திருந்தார்; ஷாபிஈ மத்ஹபை நன்கு கற்றார். மேலும், இமாமிய சட்ட அறிஞரான அல்முபீத் எனப் பெயர் பெற்ற இமாம் அபூ அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு நு.்.மான் அவர்களிடத்தில் உஸூலுல் பிக்ஹையும் இல்முல் கலாமையும் கற்றிருக்கின்றார்.'

தனது 'அல்மப்ஸூத்' எனும் நூலின் முன்னுரையில் இமாம் அத்தூஸி கூறுவார்: 'எம்முடன் முரண்படுகின்ற சட்ட அறிஞர்களுள் பலர் எமது இமாமிய்ய அறிஞர்களின் பிக்ஹை குறைத்து மதிப்பிடுவதை நான் அவதானித்து வருகின்றேன்... எமது அறிஞர்கள் கிளைச் சட்ட விவகாரங்கள் குறித்துப் பேசவில்லை என்றும் ஆதாரமற்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளை முன்வைப்பவர்கள் என்றும் சொல்கின்றனர்... இது, எமது மத்ஹப்களைப் பற்றிய அவர்களது அறிவீனத்தைக் காட்டுகின்றது. அவர்கள் எமது பிக்ஹை ஆராய்ந்து பார்த்தால் அதிலுள்ள பெரும்பாலான கருத்துகள், எமது இமாம்கள் மூலம் அறிவிக்கப்பட்டவை கொண்டு ஆதாரபூர்வமாக நிறுவப் பெற்றவை என்பதை அறிந்து கொள்வார்கள். எமது இமாம்களது கருத்துகள் பொதுப்படையாகவோ குறிப்பாகவோ, அல்லது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ நபிகளாரின் வார்த்தைகளது தரத்தில் வைத்து நோக்கப்படுவனவாகும்... எமது பிக்ஹின் ஆதாரபூர்வத் தன்மை கியாஸின் அடிப்படையிலன்றி திட்டவட்டமான வழியில் நிறுவப்பட்டதாகும்... சட்ட அறிஞர்களால் விரிவாக எழுதப்பட்டுள்ள அனைத்து சட்ட நூல்களையும் உள்ளடக்கிய ஒரு நூலை எழுத வேண்டும் என நான் கருதியுள்ளேன்... அதனைச் சட்டப் பரப்புடன் மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளவே எண்ணுகின்றேன். அதில் மாற்றுக் கருத்தாளர்கள் குறிப்பிட்டுள்ள அதிகமான கிளைச் சட்டங்களையும் கொண்டு வருவேன். அவற்றிற்கு எமது மத்ஹபின் அடிப்படையிலான பதில்களையும் இணைப்பேன். அவற்றில் அந்நியமான, சிக்கலான விவகாரங்கள் இருந்தால் அதற்கான காரணத்தையும் தருவேன். அதனைக் கற்பவர் வெறுமனே கண்மூடித்தனமாக அதைப் பின்பற்றக் கூடாது என்பதற்காகவும் சரியான காரணத்தைக் கண்டறியாமல் எதிர்தரப்பாளர்களின் கருத்துகளில் மாத்திரம் தங்கியிருக்கக் கூடாது என்பதற்காகவுமே இந்த ஏற்பாடு. இந்த நூலை முழுமையாக்குவதற்கு அல்லாஹ் உதவி செய்தால், எமது மத்ஹப் நூல்களில் மாத்திரமன்றி எதிர் தரப்பாளர்களின் நூல்களிலும் கூட இதற்கு இணையான ஒரு நூல் இருக்க மாட்டாது. எமது மத்ஹபின் சட்ட அடிப்படைகள், கிளையம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நூலை எந்த சட்ட அறிஞரும் இதுகால வரை தொகுத்திருப்பதாக நான் அறியவில்லை. எமது அறிஞர்களிடம்

இந்த முறையில் குறிப்பிடத்தக்கன எதுவும் இல்லை, சில சுருக்கவுரைகள் தவிர...'

இந்த விடயம் குறித்துப் பேசுவார் ஹைதர் ஹுப்புல்லாஹ்: 'இமாம் அத்தூஸியின் இரு நூல்களான 'அல்மப்ஸூத்', 'அல்கிலாப்' ஆகியவை வெளிவந்தவுடன் நிலைமை நிறையவே மாறி விட்டது. அவர் தனது முதலாவது நூலில் ஷீயாக்களின் சட்டப் பாரம்பர்யத்தில் இஸ்லாமிய பிக்ஹின் சகல பரப்புகளும் விவாதிக்கப்பட்டுள்ளன என்பதை நிறுவ முயற்சித்துள்ளார். இமாமிய பிக்ஹ் முழுமையானதாக இல்லை என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் தான் 'அல்மப்ஸூத்' வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. என்றாலும் அத்தூஸி அதனைத் தொகுக்கும் போது அனைத்து சட்டப் பரப்புகள் பற்றிய விவாதங்களும் ஷீயாப் பாரம்பர்யத்தில் பேசப்பட்டிருக்கவில்லை. அதனால் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் தமது நூல்களில் பேசிய விவகாரங்களை எடுத்து அவற்றிற்கு ஷீயாக்களின் விளக்கங்களை அளிக்க முற்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கருத்துகளும் முன் ஊகிப்புச் சட்டங்களும் கருத்து வேறுபாடுகளும் கூட ஷீயா சட்டப் பாரம்பர்யத்துள் நுழைந்தமையைக் காண முடிந்தது.

ஒப்பீட்டு பிக்ஹின் அடிப்படையில் இமாம் அத் தூஸி 'அல்கிலாப்' நூலைத் தொகுக்க முற்பட்ட வேளை, முன்னைய நூலைத் தொகுத்த அனுபவம் அவருக்குப் பெருந்துணையாக இருந்தது. அது போலவே தனது 'அல்உத்தா' என்ற நூலில் ஏதேனும் ஒரு விவகாரம் குறித்து ஷீயாக்கள் ஊடாக வந்துள்ள ஓர் அறிவிப்பு இல்லாதவிடத்து, அல்லது அந்த விவகாரம் குறித்து ஷீயாக்கள் கருத்தேதும் தெரிவிக்காதவிடத்து, மாற்றுக் கருத்தாளர்கள் ஊடாக அறிவிக்கப் பெற்றவற்றை ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

சுமார் ஒரு நூற்றாண்டு காலம் ஷீயாக்களின் மத்தியில் செல்வாக்குப் பதித்தனவாயிருந்தன இமாம் அத்தூஸியின் சிந்தனைகள். ஷீயாக்களின் அறிஞர்கள் அனைவரும் அக்கால கட்டத்தில் அத்தூஸியைத் தக்லீத் செய்தார்கள் என்றே கூற வேண்டும். அதன் பின்னர் அத்தூஸி, அஹ்லுஸ் ஸுன்னாக்களுடன் கொண்டிருந்த திறந்த மனப்பாங்கை விமர்சிக்கின்றவர்கள் தோன்றினார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர், 'அஸ்ஸராஇர்' நூலின் ஆசிரியரான முஹம்மத் இப்னு இத்ரிஸ் அல்ஹுலிய் (மறைவு ஹி. 598) என்றாலும் பின்னர் வந்த அல்-முஹக்கிக் அல்ஹுலிய் (மறைவு ஹி. 676) பேரறிஞர் அல்ஹுலிய் (மறைவு ஹி. 726) ஆகியோர் அத்தூஸியின் சிந்தனையை முன்னெடுத்துச் சென்றார்கள். இவ்விருவரது முனைப்புகள் ஊடாக, களத்தை விட்டும்

சேய்மைப்பட்டிருந்த இமாம் இப்னு அல்ஜுனைதின் சிந்தனைகள் மீளவும் உயிர்ப்பிக்கப் பெற்றன.

இமாம் அல்முஹக்கிக் அல்ஹுலிய் யாத்த 'மஆரிஜுல் உஸூல்' ஓரளவு சட்ட அடிப்படைகளை ஒப்பீட்டு அடிப்படையில் பேசிய ஒரு நூலாகும். அதில் சட்ட அடிப்படைகள் தொடர்பில் ஷீயா சார்ந்த தனது தெரிவுகளுக்கும் மேலாக இமாம் அபூ ஹனீபா, இமாம் ஷாபிஈ, ஜுபாஇய்யா, அபூபக்ர் அத்தக்காக், இமாம் அபுல் ஹுஸைன் அல்பஸரி முதலான மாற்றுச் சிந்தனையாளர்களது கருத்துகளையும் முன்வைத்து அவை குறித்தும் அந்நூல் விவாதிக்கின்றது.

இதே வழியில் தான் சென்றிருக்கின்றார் பேரறிஞர் அல்-ஹுலிய். அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் பலரிடம் கற்றவர் இவர். தன்னுடன் மத்ஹப் ரீதியாக முரண்படுவோருடன் எந்தளவு கண்ணியமாகவும் மரியாதையாகவும் இவர் நடந்துள்ளார் என்பதை விதந்து பேசுவார் அல்-மஜ்லிஸி.(11)

பேரறிஞர் அல்-ஹுலிய்யி, தனது திறந்த மனப்பாங்கின் காரணமாக அஹ்லுஸ்ஸுன்னாக்களுடனான உறவாடல்களில் வெகுதூரம் பயணித்திருக்கின்றார். இதனால் வாக்கியவாதப் பிரிவினரின் கடுமையான விமரிசனங்களுக்கும் கண்டனங்களுக்கும் ஆளாகியுள்ளார். சட்ட ஒப்பீட்டு நூல்களை இவர் யாத்துள்ளார். அவற்றுள் 'தஹ்தீபின் நப்ஸ் பீ மஃரிபதி மதாஹிபில் கம்ஸ்' (ஐந்து மத்ஹபுகளை அறிந்து கொள்வதில் மனதை ஒழுங்குபடுத்தல்) முக்கியமானது. அவர் தொகுத்த சட்டக் கலைக்களஞ்சியங்களில் ஷீயாவோடு அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களது கருத்துகளையும் திரட்டியிருக்கின்றார். இவற்றுள் 'தத்கிரதுல் புகஹா' (சட்ட அறிஞர்களின் குறிப்புகள்) 'முன்தஹத் தலப்' (தேடலின் முடிவு) முதலியன குறிப்பிடத்தக்கன. ஒப்பீட்டு முறையில் அமைந்த பிக்ஹ் இவரது காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தது.

---

(11) அஷ்ஷெய்க் ஸம்ஸுத்தீன் முஹம்மத் இப்னு முஹம்மத் இப்னு அஹ்மத் அல்கைஷி பக்தாதில் நிழாமிய்யாவில் ஆசிரியராக இருந்தார். இவர் ஷாபி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர். இவரைப் பற்றி அல்லாமா அல்ஹுலிய் அவர்கள் சொல்லும் பொழுது, 'இவர் ஷாபிஇய்யாக்கள் மத்தியில் ஒரு சிறந்த அறிஞர். தனது ஆய்வுகளில் மிகவும் நேர்மையாக நடந்து கொள்பவர் என்கின்றார். அது போல் அஷ்ஷெய்க் நஜ்முத்தீன் அலி இப்னு உமர் அல்காதிப் அல்கஸ்வீனி பற்றிக் கூறும் பொழுது, 'அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சட்ட அறிஞர்களில் ஸாலிஹான ஒரு மனிதர் இவர்' என்கின்றார். அஷ்ஷெய்க் தகிய்யுத்தீன் அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் இப்னு அலி அஸ்ஸப்பாக் அல்கூபி பற்றிக் கூறும் பொழுது, 'இவர் கூபாவில் இருந்த ஹனபி சட்ட அறிஞர்களுள் ஒருவர்' என்று கூறியுள்ளார்.

பேரறிஞர் அல்-ஹுலிய், ஹதீஸ் துறையிலும் ஸுன்னீக்களிடமிருந்து பயன்பெற்றிருக்கின்றார். அவர் ஹதீஸ்களை ஸஹீஹ், ஹஸன், முவஸ்ஸக், ழயீப் என நான்கு பிரிவில் வகைப்படுத்தியுள்ளார். இந்த வகைப்பாட்டை 'அத்துர்ரு வல்மர்ஜான் பில் அஹாதீஸில்ஸ ஸிஹாஹ் வல்ஹிஸான்' (ஸஹீஹான மற்றும் ஹஸனான ஹதீஸ்களில் முத்தும் பவளமும்) 'அந்நஹ்ஜுல் வழ்ழாஹ் பில் அஹாதீஸிஸ் ஸிஹாஹ்' (ஸஹீஹான ஹதீஸ்களில் தெளிவூட்டும் வழிமுறை) முதலான தனது நூல்களில் பிரயோகம் செய்துள்ளார். ஏனைய மத்ஹபுகளின் சிந்தனைகளாக இருப்பினும் அவற்றிற்கு மதிப்பளித்து, திருப்தி கண்டு, அவற்றை ஏற்றுச் செயற்படுத்தும் அவரது நேர்மையையும் பரந்த மனப்பாங்கையும் இவற்றுள் நாம் காணலாம்.

ஷீயா அறிஞர்களில் பலர், அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சட்ட அடிப்படைகள் பற்றிய நூல்களுக்கு விளக்கவுரைகள் எழுதியுள்ளனர். இமாம் அல்அழ்தி, இப்னுல் ஹாஜிப் ஆகியோரது நூல்கள் இவற்றுள் முக்கியமானவை. சிலர் எழுதப்பட்ட விளக்கவுரைகளுக்குக் குறிப்புரைகளையும் பக்கக் குறிப்புரைகளையும் எழுதியுள்ளனர். அவை அஹ்லுஸ்ஸுன்னா நூல்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இமாம் இப்னுல் ஹாஜிப் எழுதிய 'ஷரஹு காயதில் வுஸுல் பில் உஸுல்' எனும் நூல் இமாம் கஸ்ஸாலியின் ஒரு நூலுக்கான விளக்கவுரையாகும்.

அஹ்லுஸ்ஸுன்னாக்களுடனான பரந்த உறவில் பேரறிஞர் அல்-ஹுலிய்யின் அனுபவம் அதனையொத்த மேலும் பல படிவங்களைத் தோற்றுவித்துள்ளன. முக்கியமாக ஜபல் ஆமில் சிந்தனைப் பள்ளியினர் மத்தியில் அதிலும் சிறப்பாக முதலாம், இரண்டாம் ஷஹீத்களின் சிந்தனைகளில் இப்போக்கைக் காணலாம். இரண்டாம் ஷஹீத் (ஸைனுத்தீன் இப்னு அலீ இப்னு அஹ்மத் அல்ஜபஈ அல்ஆமிலி – மறைவு ஹி. 966) ஹதீஸ் கலையை முழுமையாக ஸுன்னீக்களிடமிருந்தே பெற்றிருக்கின்றார். அவரது இத்தகு போக்கு இதன் முன்னர் ஷீயாக்கள் மத்தியில் காணப்பெற்றிருக்கவில்லை.

அது போலவே ஷீயா சட்ட மரபில் முதன் முதல் சட்ட விதிகள் பற்றிய கலையை அறிமுகம் செய்தவராகக் கருதப்படுகின்றார் முதலாம் ஷஹீத். ஹிஜ்ரி ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளின் ஸுன்னீக்களது சட்ட விதிகள் பற்றிய கலையின் தாக்கத்தினாலேயே அவர் இவ்வாறான ஒரு முனைவை மேற்கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் ஷீயா - ஸுன்னீக்களிடையே எந்தளவு உறவும் ஈடுபாடும் இருந்திருக்கின்றன என்பதற்கான சான்றுகளாக இவை காணப்படுகின்றன.

ஹிஜ்ரி 952இல் இமாம் ஸைனுத்தீன் அஸ்தானா நகருக்குச் சென்று திரும்பிய வேளை ப.்.லபக்கின் அந்நூரிய்யா சிந்தனைப் பள்ளியினரின் அனைத்து அறிஞர்களதும் ஆதரவைப் பெற்றிருந்தார். அச்சமயம் ப.்.லபக் பல சிந்தனைப் பள்ளிகளின் கூட்டுக் கலவையாக விளங்கியது. அங்கு ஹன்பலீக்களின் மத்திய தலங்கள் இருக்க, அவற்றைச் சூழ ஷீயாக்களின் மக்கள் குழுமங்களும் வாழ்ந்து வந்தன. இவற்றுடன் இணைந்தாற் போல் ஷாபி, ஹனபி, மாலிகி சிந்தனைப் பள்ளிகளும் காணப்பட்டன. இமாம் ஸைனுத்தீனின் மாணவர் இப்னு அல்அவ்தி, தனது 'அத்துர்ருல் மன்ஸூர்' எனும் நூலில் தனது ஆசிரியர் அங்கு கழித்த நாட்கள் பற்றி விவரிப்பார்: 'பின்னர் நாங்கள் ப.்.லபக்கில் தங்கியிருந்தோம். அங்கு ஐந்து மத்ஹபுகளையும் மேலும் பல கலைகளையும் கற்பித்தோம். அந்த மக்களின் பல்வேறுபட்ட கருத்துகளின் மத்தியில் அவர்களுடன் சிறந்த உறவைப் பேணினோம். அவை சந்தோசமான, பரகத் பொருந்திய பொழுதுகளாக இருந்தன. எமது அறிஞர்கள் இவை போன்ற நாட்களை தமது காலத்தில் கண்டதில்லை என்றார்கள். இந்நாட்களில் நான் எனது ஆசானுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தேன். அவர் மக்கள் மத்தியில் உயர்ந்த அந்தஸ்த்துடன் காணப்பட்டதை நான் மறக்க மாட்டேன். ஒவ்வொருவருக்கும் அவரவர் மத்ஹபுக்கு ஏற்ப அவர் பத்வா வழங்குவார். அனைத்து மத்ஹபுகளையும் கற்பிப்பார். பெரிய பள்ளிவாசலில் அவரது ஒரு வகுப்பு இருந்தது. மக்கள் அனைவரும் அவரை கௌரவித்தனர்; அவரது விருப்புக்கேற்பவே நடந்தனர்.'

இரண்டாம் ஷஹீதுடைய சிந்தனை அவரது மாணவர்கள் ஊடாகத் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. அவரது மகன் அஷ்ஷெய்க் அல்ஹஸன், "முன்தகா அல்ஜிமான்' என்ற நூலைத் தொகுத்து, அதில் அல்குத்புல் அர்பஆ எனும் நான்கு கிரந்தங்களில் உள்ள ஹதீஸ்களில் ஸஹீஹானதும் ஹஸனானதும் ஆன ஹதீஸ்களை ஏனையவற்றை விட்டும் வேறுபடுத்தியுள்ளார். அதன் முன்னுரையில் அவர் கூறுவார்: 'ஆரம்ப காலத்தவர்கள் அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதில் மிகவும் தாராளப் போக்கைக் கடைப்பிடித்துள்ளார்கள். அதில் எல்லை மீறிச் சென்ற அவர்கள், 'நம்பத் தகுந்தவர்கள் அல்லர்' எனக் கருதப்படக் கூடியவர்களிடமிருந்தும் அறிவிப்புகளை ஏற்றிருக்கின்றார்கள். இதற்கு அந்த அறிவிப்புகள் ஸஹீஹானவை எனக் காட்டக் கூடிய சில மேலதிகக் காரணிகளை முன்வைப்பதோடு அவை ம.்.ஸூம்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன போன்ற நியாயங்களைக் கற்பிப்பர். ஆனால் பிற்பட்ட காலங்களில் இந்த நியாயங்கள் வலுவிழந்து போயுள்ளன. எனவே அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதில் அந்த நியாயங்களில் தங்கியிருக்க முடியாதுள்ளது.'

தப்ஸீர் துறையைப் பொறுத்தவரையில், பிற மத்ஹபினரை இணைத்துக் கொண்டு பயணிக்கும் போக்கின் காரணமாக, அல்-

குர்ஆனின் வெளிப்படைக் கருத்தை ஆதாரமாகக் கொள்ளும் தப்ஸீர் முறைமை ஒன்று தோற்றம் பெற்றது. அதாவது மொழி ரீதியாக சரி காணப் படும் ஒரு விளக்கம் ஏற்றுக் கொள்ளப் படும் நிலை தோன்றியது. இவ்வகை தப்ஸீர்களாக அஷ்ஷரிப் அர்ரிழாவின் 'ஹகாஇகுத் த்.:.வீல் பீ முதஷாபிஹாத் தன்ஸீல்', அஷ்ஷெய்க் அத்தூஸியின் 'அத்திப்யான்', அத்திப்ரிஸியின் 'மஜ்மஉல் பயான்' முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றில் முதலாவது தப்ஸீர் பத்துப் பாகங்களைக் கொண்டது. என்றாலும் அதில் ஐந்தாம் பாகம் மாத்திரமே தற்போது கிடைக்கின்றது. இது தெளிவற்றன; குழப்பமானவை எனக் கருதப்பட்ட வசனங்களுக்கு விளக்கமளிப்பதில் கவனம் செலுத்தியிருக்கின்றது. சந்தேகத்தை நீக்குவது, தெளிவின்மையைப் போக்குவது, மறுப்பாளர்களுக்குப் பதில் தருவது என்ற ஓர் அணுகுமுறை இதில் பின்பற்றப்பட்டிருக்கின்றது... இதற்கு அல்-குர்ஆனின் வசன ஓட்டம் ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது... இதற்கு நபியவர்களும் ஸஹாபாக்கள், தாபிஈன்கள், சில சமயங்களில் இமாம்களின் அறிவிப்புகளும் துணையாகக் கொள்ளப்பட்டுள்ளன. அது போல் அறபு மொழியும் ஆதாரமாகப் பயன்பட்டுள்ளது. பல்வேறுபட்ட மத்ஹபுகளைச் சேர்ந்த சட்ட அறிஞர்கள், இல்முல் கலாம் துறையாளர்கள், மொழியியலாளர்கள், தப்ஸீர் ஆசிரியர்கள் போன்றோரின் கருத்துகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.(12)

---

*(12)* இங்கு அஷ்ஷரிப் அர்ரிழாவின் தப்ஸீர் வழிமுறைக்கான உதாரணம், அவரது இமாமிய்யத் போக்கை விளங்கப்படுத்துவதாக இருக்கிறது. சிலர் அவரை ஸைதி மத்ஹபைச் சேர்ந்தவர் என்கின்றனர். இமாம் அப்துல்லாஹ் இப்னு ஹம்ஸா அவர்கள் தனது அஷ்ஷாபி பில் இமாமா என்னும் நூலில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அல்-குர்ஆனில் "அதற்குரிய விளக்கத்தை அல்லாஹ்வும் அறிவில் ஆழம் கண்டவர்களும் அறிவார்கள்" (ஆல இம்ரான்: 7) என்ற வசனத்தில் அறிவில் ஆழம் கண்டவர்கள் என்பதற்கு அவர் விளக்கமளிக்கும் போது, பல அறிஞர்கள் இதற்களித்துள்ள விளக்கங்களுடன் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் இமாம் முஜாஹித் போன்றவர்களது கருத்துகளையும் குறிப்பிட்டு விட்டு, 'இங்கு அறிஞர்கள் ஒரு மத்திமமான போக்கில் உடன்படுகின்றனர் அதாவது, முதஷாபிஹ் என்னும் சிக்கலான வசனங்களை அறிஞர்கள் மொத்தமாக விளங்காமல் இருக்கவும் மாட்டார்கள். அனைத்தையும் விளங்கிக் கொள்ளவும் மாட்டார்கள்... சிக்கலான வசனங்களில் அறிஞர்களால் புரிந்து கொள்ள முடியுமானவையும் இருக்கின்றன. அல்லாஹ்வினால் மாத்திரமே புரிந்து கொள்ளக் கூடியவைகளும் இருக்கின்றன. இக்கருத்தைத் தான் ஆரம்ப கால அறிஞர்கள் பலர் முன்வைத்துள்ளனர். உதாரணமாக இமாம் அல்ஹஸனுல் பஸரி போன்றவர்கள் மற்றும் அபூ அலீ அல்ஜுபாஇ அவர்களும் அக்கருத்தையே கொண்டிருக்கிறார்கள்... சிக்கலான வசனங்களை, தெளிவான வசனங்களை அடிப்படையாக வைத்து விளங்குகின்ற

'அத்திப்யான்' என்ற தப்ஸீரைப் பொறுத்தவரை, இமாம் அத்தூஸி அதனை பகுத்தறிவு, மற்றும் அறிவிப்புகள் ஆகிய இரண்டினதும் கலவையாக அமைத்துள்ளார். அறிவிப்புகள் நபிகளாரதும் இமாம்கள் மூலமானவையாகவும் விளங்குகின்றன. அல்-குர்ஆனின் விளக்கத்தை அவர் நான்கு வகையாக வகுத்துக் காண்பார்: 'முதலாவது வகை, அல்லாஹ் மாத்திரம் அறியக் கூடியவை. இவற்றில் எவரும் வலிந்து விளக்கம் சொல்ல முற்படக் கூடாது. உதாரணமாக மறுமை நாள் பற்றிய அறிவு; இரண்டாவது வெளிப்படையான கருத்தைத் தரக் கூடியவை. மூன்றாவது வகை, சுருக்கமாகச் சொல்லப்பட்டவை. அவற்றின் வெளிப்படையான கருத்திலிருந்து அவற்றிற்குரிய விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும். உதாரணமாக தொழுகையின் எண்ணிக்கை, ரக்அத்களின் எண்ணிக்கை, ஹஜ்ஜின் கிரியைகள். இவை பற்றிய விளக்கங்களை நபிகளாரின் விளக்கங்கள் மூலம் அல்லது அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரும் வஹியின் மூலமாகவே அறிந்து கொள்ள முடியும். நான்காவது வகை, ஒரு சொல் ஏக காலத்தில் இரு கருத்துகளைக் குறிக்கக் கூடியனவாக இருத்தல். இவற்றில் இரண்டுமே அவ்வசனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இருத்தல் கூடும்... இந்த சந்தர்ப்பத்தில் நபியவர்களது ஒரு விளக்கத்தின் அடிப்படையில் அல்லது மஃஸூமான இமாமின் விளக்கத்தின் அடிப்படையில் அன்றி எவரேனும் அதில் ஏதேனும் ஒரு விளக்கத்தை முன்வைத்தல் கூடாது. பிரதியாக, இதன் வெளிப்படையான கருத்தில் பல பொருள்கள் தொனிக்கின்றன என்றவகையில், அவை அனைத்துக் கருத்துகளையும் அது குறிப்பதாக இருக்கு முடியும் என்றே அவர் விளக்கமளிக்க வேண்டும். நாம் இந்த வகைப்பாடுகளை முன்வைக்கும் போது, எமக்கு முன்னால், அல்-குர்ஆனுக்கான விளக்கமானது நபியவர்களது அல்லது மஃஸூமான ஓர் இமாமின் கருத்தின் அடிப்படையில் மாத்திரமே வழங்கப்பட

---

பொழுது, அறிவில் ஆழம் கண்டவர்களால் அவற்றை விளங்கிக் கொள்ள முடியும். அறிவில் ஆழம் கண்டவர்களால் அல்-குர்ஆனின் சிக்கலான வசனங்களுக்குரிய விளக்கங்களை அறிந்து கொள்ள முடியாது என்றிருப்பின், நபியவர்கள், அமீருல் முஃமினீனுக்கு தப்ஸீரைக் கற்றுக் கொடுத்தார் என்பதற்குப் பொருளற்றுப் போய்விடும். ஏனெனில் தஃவீல் மற்றும் தப்ஸீர் என்பவற்றின் கருத்து, வெளிப்படையாக விளங்கிக் கொள்ள முடியாத, நுணுக்கமானவற்றிற்குரிய விளக்கம் என்பதாகும். தெளிவான வசனங்களை யாரும் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் மொழி தெரிந்தவர்கள் அனைவரும் இதனை சம அளவில் விளங்கிக் கொள்வர். இல்லையெனின் நபியவர்கள் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்-குர்ஆனில் ஆழ்ந்த விளக்கத்தை வழங்குமாறு கேட்ட துஆவுக்கு பொருள் இல்லாமல் போய்விடும்...' என்றார்.

வேண்டும் எனக் கூறும் சில அறிவிப்புகளும் இருக்கின்றன. அவற்றை அறிவிப்பவர்கள், அவற்றைக் கைக் கொள்பவர்களை விமர்சிக்கும் வகையில் அவ்விவகாரங்களை இங்கே கொண்டு வருவதை நாம் தவிர்த்துக் கொள்கின்றோம். அல்-குர்ஆனுக்கு விளக்கம் சொல்வதை விட்டும் இவை எம்மைத் தடுக்கவும் மாட்டாது. ஒருவர் வெளிப்படையான கருத்தில் இருந்து மாத்திரம் விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு குர்ஆன் வசனத்துக்குரிய தெளிவைப் பெற்றுக் கொள்ள முற்படும் போது அல்லது அவர் யாரேனும் ஒரு தப்ஸீர் ஆசிரியரை தக்லீது செய்து விளக்கத்தைப் பெற்றுக் கொள்பவர் எனின் அவர் இஜ்மாவான ஒரு விளக்கத்தைப் பின்பற்றுவதே பொருத்தமாகும். ஏனெனில் தப்ஸீர் ஆசிரியர்களுள் இப்னு அப்பாஸ், அல்ஹஸன், கதாதா, முஜாஹித் போன்று அனைவராலும் புகழப்பட்டு எற்றுக் கொள்ளப்பட்டவர்கள் இருப்பது போல், பலரதும் விமர்சனங்களுக்குள்ளான அபூ ஸாலிஹ், அஸ்ஸுத்தி, அல்கல்பி போன்றோரும் இருக்கிறார்கள். இது முதல் பரம்பரையினரைப் பொறுத்த நிலைப்பாடு. பிற்பட்ட காலத்தோரைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் தத்தமது சிந்தனையை நிலைநாட்ட முற்பட்டதையும் தத்தமது சிந்தனைக்கு ஏற்ப விளக்கமளிக்க முற்பட்டமையையும் காண்கிறோம். அதனால் இவர்களைத் தக்லீத் செய்ய எவரும் முனையக் கூடாது. பிரதியாக, ஸஹீஹான ஆதாரங்களைத் தேடிப் பின்பற்றுவதே உசிதம். ஆதாரங்கள் பகுத்தறிவு ரீதியானவையாக, ஷரீஆத் ரீதியான இஜ்மா ஒன்றாக, அல்லது முதவாதிரான வழியில் நகர்த்தப்பட்ட பின்பற்றத் தகுந்த ஒருவரது கூற்றாக அமையலாம். இதில் ஆஹாதான வழியில் அறிவிக்கப் பெற்றவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஏனெனில் அவற்றின் அறிவிப்பு வழி திட்டவட்டமானதாக இல்லை. அல்-குர்ஆனுக்கு மொழி ரீதியிலான ஒரு விளக்கம் அவசியப்படின், மொழியியலாளர்கள் மத்தியில் பிரபலமான பரவலான பிரயோகங்களை மாத்திரமே ஆதாரமாகக் கொள்ள முடியும்.(13)

இமாம் அபூ அலி அத்திப்ரிஸி, தனது ‘மஜ்மஉல் பயான்’ எனும் தப்ஸீரின் முன்னுரையில் கூறினார்: ‘அறிந்து கொள்ளுங்கள்! அல்-குர்ஆனுக்கான விளக்கம் ஆதாரபூர்வமான, தெளிவான அறிவிப்புகள்

(13) அஷ்ஷரீப் அர்ரிழா அவர்களது விளக்கத்தை, ஏனைய இமாமீய தப்ஸீர்களான புராத் அல்கூபி, தப்ஸீருல் அயாஷி போன்றவற்றில் சொல்லப்பட்டுள்ள, அல்-குர்ஆனின் சொற்களைக் குறியீட்டுப் பிரயோகங்களாகக் கருதி, அறிவில் ஆழம் கண்டவர்கள் என்பது மஃஸூமான இமாம்களையே குறிக்கும் என்று வழங்கப்பட்டள்ள விளக்கங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இமாம் ரிழா அவர்கள் எந்தளவு தூரம் பகுத்தறிவுப் பார்வையுடனும் திறந்த போக்குடனும் காணப்பட்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

மூலம் மாத்திரமே நடைபெற வேண்டும் என நபியவர்கள் ஊடாகவும் அவரது தரத்தில் வைத்து நோக்கப் படும் இமாம்கள் ஊடாகவும் வந்துள்ள ஸஹீஹான அறிவிப்புகளில் காணப்படுகின்றது. 'யார் அல்-குர்ஆனுக்குத் தனது பகுத்தறிவின் மூலம் விளக்கம் அளித்து அது சரியாக அமைந்தாலும் அவர் தவறு செய்தவர் ஆவார்' என்று நபியவர்கள் கூறியதாகப் பலர் அறிவித்துள்ளார்கள்... ஆனால் அல்லாஹு தஆலா பகுத்தறிவுப் பிரயோகத்தை அனுமதித்து அதற்கான வழியையும் தெளிவுபடுத்தி அதனை மேற்கொள்வோரைப் புகழ்ந்தும் இருக்கின்றான்.

وَإِذا جاءَهُم أَمرٌ مِنَ الأَمنِ أَوِ الخَوفِ أَذاعوا بِهِ وَلَو رَدّوهُ إِلَى الرَّسولِ وَإِلى أُولِي الأَمرِ مِنهُم لَعَلِمَهُ الَّذينَ يَستَنبِطونَهُ مِنهُم وَلَولا فَضلُ اللَّهِ عَلَيكُم وَرَحمَتُهُ لَاتَّبَعتُمُ الشَّيطانَ إِلّا قَليلًا - النساء: ٨٣

**"மேலும் பீதியோ, பாதுகாப்பைப் பற்றிய செய்தியோ அவர்களுக்கு எட்டுமானால், உடனே அவர்கள் அதை பரப்பிவிடுகிறார்கள். அவர்கள் அதை (அல்லாஹ்வின்) தூதரிடமோ, அல்லது அவர்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால் அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக் கூடியவர்கள், அதை நன்கு விசாரித்து (தக்க ஏற்பாடுகளைச் செய்து) கொள்வார்கள். அல்லாஹ்வுடைய கிருபையும் அவனுடைய அருளும் உங்கள் மீதில்லாதிருந்தால், உங்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் ஷைத்தானையே பின்பற்றியிருப்பார்கள்." (நிஸா 4:83)**

மேலும் அல்-குர்ஆனை ஆராயாதவர்களைக் குர்ஆன் கண்டனம் செய்கின்றது. அது இறக்கப்பட்டது அறபு மொழியிலேயே என்றும் கூறுகின்றது:

إِنّا جَعَلناهُ قُرآنًا عَرَبِيًّا لَعَلَّكُم تَعقِلونَ - الزخرف: ٣

**"நீங்கள் அறிந்து கொள்வதற்காக இதனை நாங்கள் அறபிமொழி குர்ஆனாக நிச்சயமாக ஆக்கியிருக்கிறோம்." (ஸுக்ருப் 43–3)**

நபியவர்கள் கூறியுள்ளார்கள்: 'நான் கூறியதாக உங்களிடம் ஒரு செய்தி வந்தால் அதனை அல்-குர்ஆனுடன் பொருத்திப் பாருங்கள். அதனுடன் உடன்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்; முரண்பட்டால் அதனை நிராகரித்து விடுங்கள்.' இங்கு அல்-குர்ஆன் தனித்து ஓர் ஆதாரமாக இருப்பதோடு, ஏனையவற்றின் உரைகல்லாகவும் இருக்கின்றமையை விளக்கியுள்ளார்கள். அல்-குர்ஆனின் பொருளை விளங்க முடியாது என்றால் அது எவ்வாறு ஓர் உரைகல்லாக இருக்க முடியும்? இது குறிப்பிட்ட அந்த ஹதீஸை நாம் நேரடிக் கருத்தில் விளங்க முடியாது என்பதைக் காட்டுகின்றது. இந்த ஹதீஸ் ஸஹீஹானது என்றால்

இதன் விளக்கமானது, ஒருவர் அறபு மொழியியல் பிரயோகங்களின் அடிப்படையில் அல்-குர்ஆனை விளக்க முற்படாமல் தனது பகுத்தறிவினால் மாத்திரம் விளங்குகிறார் எனின் அவரது விளக்கம் சரியாக அமைந்தாலும் அந்த ஆதாரம் தவறானது என்பதாகும்... இப்னு அப்பாஸ் ஊடாக வரும் ஓர் அறிவிப்பின்படி அவர் அல்-குர்ஆனுக்கான விளக்கத்தை நான்காக வகைப்படுத்தியுள்ளார்: முதலாவது, யாரும் தனக்குத் தெரியாது என்று சொல்ல முடியாத பகுதி; இரண்டாவது, அறபு மொழியை அறிந்தவர்கள் விளங்கிக் கொள்ளும் பகுதி; மூன்றாவது, அறிஞர்களால் மாத்திரம் விளங்கிக் கொள்ள முடியுமான பகுதி; நான்காவது, அல்லாஹ் மாத்திரம் அறியும் பகுதி... அல்-குர்ஆன் அதன் வெளிப்படையான கருத்தில் அமையும் போது அறபு மொழியை அறிந்த அனைவரும் அதன் மூலம் நாடப் படும் கருத்தை அறிந்து கொள்வர்... ஆனால் நேரடி வசனத்தின் மூலம் அதன் விளக்கத்தை அறிந்து கொள்ள முடியாத வகையில் சுருக்கமாகச் சொல்லப்பட்டவற்றைப் பொருத்தமட்டில்... அவற்றை வஹியின் மூலம் நபியவர்கள் விளக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தொழுகையின் வடிவங்கள் தொடர்பான விளக்கத்தை இதற்கு ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம். நேரடியாக ஓர் ஆதாரம் இன்றி இவ்வகை வசனங்களுக்கு விளக்கம் அளிக்க முற்படுவது கூடாது... அது போல் பல்வேறு கருத்துகளுக்கு அல்லது இரு கருத்துகளுக்கு இடம்பாடானவற்றைப் பொறுத்தவரையில் அவற்றுள் ஆதாரபூர்வமான கருத்தையே ஏற்க வேண்டும்... மொழி ரீதியாகவே இரண்டு அல்லது பல கருத்துகள் காணப் படும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு கருத்தும் சரியாக அமையும் வாய்ப்பு இருக்கின்றது. அதனால் நபியவர்களது அல்லது இமாம்களுள் ஒருவரது திட்டவட்டமான கருத்தினை ஆதாரமாகக் கொண்டேயன்றி அதில் ஏதேனும் ஒரு கருத்தை மாத்திரம் தெரிவு செய்தல் தகாது...'

இமாமிய ஷீயாக்களுக்கும் அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கும் இடையில் இஸ்லாமியக் கலைகளில் காணக் கிடைக்கும் ஒற்றுமைப் படும் பரப்புகள் பற்றி நாம் சற்று அதிகளவாகவே பேசி விட்டோம் போல் தெரிகின்றது. நீண்ட பல நூற்றாண்டுகளாக இரு தரப்பினரும் ஒருவரை விட்டு ஒருவர் சேய்மைப்பட்டு இருந்தமையினாலும் பரஸ்பர உறவுகள் இல்லாது போனமையினாலும் உருவாகியுள்ள சந்தேகங்களைக் களைவதே இதன் நோக்கமாகும்.

இந்த மூலாதார ஒருமைப்பாடு தான் தாபிஈன்களில் சட்டத்துறை நிபுணரான இமாம் ஜாபிர் இப்னு ஸைத் அல்அஸ்தி அல்பஸரி அபிஸ் ஸ.்.ஸா.். அவர்களை, அஹ்லுஸ் ஸுன்னாக்கள், இபாழிய்யாக்கள், ஸுப்ரிய்யாக்கள் என அனைவருக்கும் பொதுவான ஓர் இமாமாக

உருப்படுத்தியது எனலாம்.[14] இவரது அறிவிப்புகளில் அதிகமானவை இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து பெறப்பட்டன.[15] அது

---

*(14)* இமாம் ஜாபிர் இப்னு ஸைத் அவர்கள் எந்த மத்ஹப் பின்புலத்தைக் கொண்டவர் என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. இபாழீக்களும் அஹ்லுஸ் ஸுன்னாக்களும் ஒருவர் அடுத்தவருக்கு எதிராக சதி செய்கிறார்கள் எனற பரஸ்பரக் குற்றச் சாட்டுகளைத் தாண்டி, அஹ்லுஸ்ஸுன்னாக்கள் இபாழீக்களுக்குரிய எல்லா சிறப்புகளையும் கண்ணியங்களையும் தம் பக்கம் பறித்துக் கொள்ள நினைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இபாழீக்கள் முன்வைக்கும் அதேவேளை, அஹ்லுஸ் ஸுன்னாக்கள், இபாழீக்கள் ஜாபிர் இப்னு ஸைதை தமது மத்ஹபைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டு, அவரது கருத்துக்களையும் சிந்தனைகளையும் தமது மத்ஹபுக்குரியவை என்று பரப்பிக் கொண்டிருக்கின்றனர் என்கின்றனர். ஜாபிர் இப்னு ஸைத் அவர்களை நோக்கினால் அவர் பிரிந்து நின்ற அனைவருக்கும் மத்தியில் இணைப்புப் பாலமாக இருந்திருக்கிறார்கள் என்பதுவே மிகவும் பொருத்தமானதாகும். அவரது மத்ஹப் சிந்தனை இந்த அடிப்படையிலேயே சம்பூரணமடைகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், இபாழீய அறிவிப்புகளே குறிப்பிடுவது போல், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்வின் இபாழீக்களுக்கான தலைமைத்துவம், கட்டமைப்பு சார்ந்ததாகவன்றி, சிந்தனை சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. அவர் பஸராவில் இபாழீக்களின் எவ்வகை அரசியல் செயற்பாடுகளிலும் பங்கு கொள்ளவில்லை. அஹ்லுஸ் ஸுன்னாக்களின் சில அறிவிப்புகள் இமாம் ஜாபிர் இப்னு ஸைத் அவர்கள் இபாழீக்கள் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறுகின்றன. அதே போல் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் மற்றும் சில அறிவிப்புகள், அவர் ஹஜ்ஜாஜ் அஸ்ஸகபியுடன் தொடர்புகளைப் பேணிய பொழுதிலும் உமையாக்கால அன்றைய அரசியல் நிலை குறித்து மிகுந்த அதிருப்தியுடன் காணப்பட்டார் என்றும் குறிப்பிடுகின்றன. இது இபாழீக்கள் அவர் பற்றிக் குறிப்பிடும், அவர் அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில் மிகவும் கவனமாக இருந்திருக்கிறார் என்ற கருத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. இவ்விடயத்தை ஆளும் தரப்பு குறித்த ஓர் அரசியல் நிலைப்பாடாகவே கருதமுடிகிறது.

*(15)* இமாம் தஹபியின் தத்கிரதுல் ஹுப்பாழ் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது: ‘அபுல் ஸ.ஃ.ஸா.ஃ. ஜாபிர் இப்னு ஸைத் அல்அஸ்தி அல்பஸரி, முக்கிய அறிஞர்களில் ஒருவர்; இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மாணவர். இவரிடம் கதாதா, அய்யூப், அம்ர் இப்னு தீனார் போன்ற பலர் கற்றுள்ளனர். இப்னு அப்பாஸ் ஊடாக அதா.ஃ. அறிவிக்கிறார்: பஸரா மக்கள் அனைவரும் ஜாபிர் இப்னு ஸைத் அவர்களுடைய கருத்துகளை மாத்திரம் எடுத்தாலும் அல்-குர்ஆனில் உள்ள அனைத்து அறிவுகளையும் அவர்கள் பெற்றுக் கொண்டது போலிருக்கும். இப்னு அப்பாஸ் அவர்கள் ஊடாக, உங்களுக்கு மத்தியில் ஜாபிர் இப்னு ஸைத் இருக்கின்ற பொழுது, நீங்கள் என்னிடம் கேள்விகளைக் கேட்காதீர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அம்ர் இப்னு தீனார், ஜாபிர் இப்னு ஸைதை விடவும் பத்வாவுக்கு மிகவும் பொருத்தமான

போலவே வேறும் பல ஸஹாபாக்களது அறிவிப்புகளும் காணப்படுகின்றன. இதனாலேயே இபாழீக்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்ப முதல் ஓர் ஒருமைப்பாட்டுத் தளத்திலேயே நடைபெற்றிருக்கின்றன.

இமாம் அர்ர.்.பீ இப்னு ஹபீப் அல் இபாழி, தனது கிரந்தத்தின் முதலாம், இரண்டாம் பாகங்களில் அவர் நிராகரிக்கின்ற ஸஹாபாக்கள் பலருடைய அறிவிப்புகளைப் பதிவு செய்துள்ளார். தல்ஹா இப்னு உபைதுல்லாஹ், அம்ர் இப்னு அல்ஆஸ், அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், அலீ இப்னு அபீ தாலிப் ஆகியோரது அறிவிப்புகளும் அதில் அடக்கம். இந்த அறிவிப்புகள், முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமைப்படக் கூடிய பல கிளை விவகாரங்களுடன் தொடர்புடையன. அது போலவே, அலீ ரழியல்லாஹு அன்ஹு, கலகக்காரர்களுடனான யுத்தத்தில் அவர்களது கைதிகளை அடிமைகளாக்க முடியாது, அவர்களது சொத்துகளை கனீமத்தாகப் பெற முடியாது எனக் கூறிய விடயங்களையும் இவர் ஆதாரமாக ஏற்றுக் கொள்கின்றார். இவை பற்றிய அறிவிப்புகள் இபாழிய்யாக்களின் நூல்களில் தாராளமாகக் காணக் கிடைக்கின்றன. ஹழரமௌத் மக்கள் எழுப்பிய ஒரு வினாவுக்கு அபுல் ஹவாரி அளித்த பதிலில் கூறுவார்: 'ஜமல் யுத்த சமயத்தில் அலீ ரழியல்லாஹு அன்ஹு கூறியதாக எமக்குக் கிடைத்த செய்தியில், 'காயப்பட்ட ஒருவரை அவசரமாகக் கொலை செய்துவிடாதீர்கள்; அடிமையைப் பின் தொடர்ந்து செல்லாதீர்கள்; ஒரே கிப்லாவை முன்னோக்கும் மக்களின் சொத்துகள் கனீமத்தாக மாட்டாது; அவர்களது வம்சத்தினர் அடிமைகளாக்கப்பட மாட்டார்கள்' என்றே கூறப்பட்டுள்ளது. எனவே அவர்களது சொத்தில் சிறு பகுதியையேனும் யாரும் எடுத்திருந்தால் அதனைத் திருப்பிக் கொடுத்து

ஒருவரை நான் கண்டதில்லை என்கிறார். ழுஹ்ஹாக் அழ்ழுப்பி கூறுகிறார்: தவாப் செய்து கொண்டிருக்கும் பொழுது, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜாபிர் இப்னு ஸைதிடம், ஜாபிர்; நீங்கள் பஸராவின் சட்ட அறிஞர்; உங்களிடம் பலர் பத்வா கேட்டு வருவார்கள். ஓதப்படுகின்ற அல்-குர்ஆன் அல்லது கடந்து விட்ட ஒரு ஸுன்னாவைக் கொண்டு மாத்திரமே நீங்கள் பத்வா வழங்குங்கள். இல்லாத பொழுது, நீங்களும் அழிந்து பிறரையும் அழித்து விடுவீர்கள் என்றார். இயாஸ் இப்னு முஆவியாவின் ஊடாக, அபுல் ஹபாப் முஹம்மத் இப்னு ஸவா.்., நான் பஸராவாசிகளையும் அவர்களது முப்தியான ஜாபிர் இப்னு ஸைதையும் சந்தித்து அவர்களிடம் கற்றுள்ளேன் என்றார். ஹம்மாத் இப்னு ஸைத் கூறுகிறார்: ஜாபிர் இப்னு ஸைதை சந்தித்துள்ளீர்களா என்று அய்யூபியிடம் கேட்கப்பட்ட பொழுது, ஆம் அவர் மிகவும் சிறந்த அறிவாளி, அவரது சட்ட அறிவு மிகவும் கவர்ச்சிகரமானது என்றார். இமாம்களான அஹ்மத், பல்லாஸ், புஹாரி ஆகியோர், அவர் ஹி. 93இல் மரணித்ததாகக் குறிப்பிடுகின்றனர். இமாம் வாகிதி மற்றும் இமாம் இப்னு ஸ.்.த் ஆகியோர் அவர் ஹி. 103இல் மரணித்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

விடுங்கள். இதனை உறுதிப்படுத்தும் ஆதாரங்களே வந்துள்ளன. முஸ்லிம்கள் -இபாழீக்கள்- இந்தக் கருத்திலேயே இருக்கின்றார்கள்.'

இந்த மூலாதார ஒருமைப்பாட்டின் காரணமாகவே ஸைதிய்யாக்களைப் பொறுத்தவரையில் ஷாபிஇய்யாக்கள், ஹனபிய்யாக்களுடன் உடன்பாடுகளுக்கு வருவதிலும் சில கருத்துகளில் அவர்களது கருத்துகளையே ஏற்றுப் பின்பற்றுவதிலும் அவர்களுக்கு எவ்வித சங்கடமும் ஏற்படவில்லை. இமாம் அஹ்மத் யஹ்யா அல்முர்தழா தனது 'அல்மனிய்யா வல் அமல்' என்ற நூலில் அல்ஹாகிம் அல்ஜஷமியை (மறைவு ஹி. 423) மேற்கோள் காட்டுவார்: 'ஸைதிய்யாக்கள் தமது அனைத்துக் கருத்துகளிலும் இமாம் ஸைத் இப்னு அலீ அவர்களை இமாமாக ஏற்றிருப்பதன் அடிப்படையில் அவர்களுடனேயே சம்பந்தப்படுகின்றனர். இந்த மத்ஹப், ஷாபி, ஹனபி மத்ஹபுகளின் அடிப்படைகளுக்கு மாற்றமான நிலைப்பாட்டைக் கொண்டது. ஆனால் கிளையம்சங்களில் அந்த மத்ஹபுகளைப் பின்பற்றுவதன் காரணமாக இமாம் ஷாபி, இமாம் ஹனபி ஆகியோருடனும் இந்த மத்ஹப் சம்பந்தப்படுகின்றது.'(16) இந்த விடயத்தில் யஹ்யா இப்னு அல்ஹுஸைன் அபூ தாலிப், குறிப்பிட்ட ஒரு விவகாரத்திற்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்குரிய அடிப்படை ஒன்று இமாமின் மத்ஹபில் காணப்படாத போது ஹனபி மத்ஹபின் அடிப்படையில் செயலாற்ற முடியும் எனக் கருதுகின்றார்.(17)

---

*(16)* இமாம்களது அடிப்படைகள் மற்றும் கருத்துகள் மீது நின்று கிளைச் சட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் தக்ரிஜ் என்னும் செற்பாட்டின் மூலம், அந்த குறிப்பிட்ட அடிப்படைகளை அல்-குர்ஆனுக்குப் போட்டியான மூலாதாரங்களாகக் கருதுவார்கள் எனின், அது ஏற்கப்பட முடியாததாகும். உண்மையில் இந்த தக்ரிஜ் என்னும் செயற்பாடு, எல்லா மத்ஹபுகளும் வீழ்ந்துள்ள ஒரு அபாயமான தக்லீத் வகையாகும். அல்லாஹ்வின் அருளைப் பெற்ற சிலர் தான் இதிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர். இவையனைத்தும் அவர்களது மானங்களில் ஏற்கனவே வேர் விட்டிருக்கும் சில தவறான சிந்தனைகளின் விளைவாகும். உதாரணமாக, 'இறை வசனங்கள் முற்றுப் பெற்றவை; நிகழ்வுகள் முற்றுப் பெறாதவை', 'அல்-குர்ஆன் பல்வேறு கருத்துக்களுக்கு இடம்பாடானது' போன்ற சில தவறான சிந்தனைகள் முஸ்லிம்களது சிந்தனையில் அல்-குர்ஆனை விட்டும் அவர்கள் தூரமாகியிருந்த ஒரு காலத்தில் நிலைகொண்டிருந்தன.

*(17)* நாம் கூறிய கருத்துக்கான ஆதாரத்தை ஸைதிய்யாக்களின் நூலான ஷரஹுத் தஜ்ரித் என்ற நூலில் காணலாம். இது ஸைதிய்யாக்களின் ஹாதவி பிரிவின் நூலாகும். அதில் இந்த நூலின் ஆசிரியரான அல்முஅய்யித் பில்லாஹி அஹமத் இப்னுல் ஹுஸைன் அல்ஹாரூனி அல்ஹஸனீ அவர்கள், ஷுப்ஆ என்னும் ஒருவர் விற்க நினைக்கும் தனது சொத்தில் அதன் பக்கத்து வீட்டுக் காரருக்கு இருக்கும்

இமாம் ஸைத் அவர்களிடமிருந்து ஹதீஸ் மற்றும் பிக்ஹ் கலையை நகர்த்தியவர்களுள் ஹனபி மத்ஹப் அறிஞர்களும் காணப்படுகின்றனர். அவர்களுள் ஹனபீக்களின் ஷெய்காக இருந்த இமாம் அபுல் காஸிம் அலி இப்னு முஹம்மத் இப்னு காஸ் அந்நகஇ அல்காழி அல்கூபி (மறைவு ஹி. 324), இமாம் அல்ஹாபிழ் உபைதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் இப்னு அஹ்மத் அல்ஹஸ்கானி அல்குரஷி, 'ஸவாஹிதுத் தன்ஸீல்' நூலின் ஆசிரியரும் இப்னுல் ஹிதா என அறிமுகமானவருமான அபுல் காஸிம் அல் ஹனபி அல்ஹாகிம் ஆகியோர் முக்கியமானவர்கள். மேலும் பிற்பட்ட கால ஸைதிய்ய அறிஞர்கள் பலர் அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களின் ஹதீஸ் நூல்களிலிருந்து கற்றுள்ளமையைக் கண்டு கொள்ள முடிகின்றது.

மேற்கண்ட ஒற்றுமைப்பட்ட அறிவுப் பாரம்பர்யத்தை மூலாதாரமாகக் கொண்டு நாம் இயங்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதல்ல எமது நோக்கம். மாறாக, அல்-குர்ஆன் தான் மூலாதாரமாக விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே எமது எண்ணம். அது போலவே, அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ சிந்தனையின் மையத்துவத்தைச் சுற்றித் தான் நாம் சுழல வேண்டும் எனவும் நாம் கூறவில்லை. நம் மத்தியில் எவ்வளவு முரண்பாடுகள் இருந்தாலும் வெளித் தெரியாமல் ஒரு மூலாதார ஒருமைப்பாடு எம்முள் மறைந்திருக்கிறது என்பதற்கு இந்த ஒற்றுமைப்பட்ட பரப்பானது ஆதாரமாக இருக்கின்றது என்பதைச் சுட்டுவதே எமது நோக்கம்.

**சாராம்சம்**

எமது பிக்ஹ், இல்முல் கலாம் பாரம்பர்யங்களிலும் உஸூலுத்தீன், உஸூலுல் பிக்ஹ் கலைகளிலும் பல்வேறு சிந்தனைப் பிரிவுகள் மத்தியில் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. இவை சம்பந்தப்பட்ட விவரங்களைத் தான் நாம் ஏலவே குறிப்பிட்டுள்ளோம். இத்தனைக்கும் மத்தியில் சட்ட உருவாக்க மூலாதாரம் அல்-குர்ஆனே என்பதில் அனைவரும் ஒத்த கருத்தினரே என்பது தெளிவு. நபியவர்களின் ஸுன்னாவை அல்-குர்ஆனின் விளக்கமாக ஏற்றுக் கொண்டாலும் செயற்பாட்டுக் கட்டத்துக்கு வரும் போது இரண்டும் வேறுபடுத்தியே நோக்கப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியான சுயாதீனமான மூலாதாரங்கள் என்றே கொள்ளப்படுகின்றது. ஒரு விளக்கவுரை அதன் மூலத்துடன் நெருக்கமாகப் பிணைந்து காணப்பட வேண்டும். அவ்வாறில்லாத வேளை, அது

உரிமை தொடர்பான விவகாரம் ஒன்றில் இமாம் அபூ ஹனீபாவின் மத்ஹப் கருத்தை மாத்திரம் குறிப்பிட்டிருப்பதானது, அவர் இந்த விடயத்தில் அபூ ஹனீபாவின் கருத்தை மாத்திரம் சரிகாண்கிறார் என்பதைக் காட்டுகிறது.

விளக்கவுரையாக இருக்க முடியாது என்ற அடிப்படைத் தர்க்கத்தையும் அவர்கள் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர்.

அடிப்படையில் சட்ட உருவாக்கப் பண்பு அல்-குர்ஆனுக்கே வழங்கப்பட வேண்டும். குர்ஆன் கூறுகின்றது:

إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ - الأنعام: ٥٧

**“...அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்விடமேயன்றி வேறில்லை...” (அன்ஆம் 6:57)**

ஆக, ஸுன்னா அல்-குர்ஆனைத் தொடர்ந்த ஒன்று. அல்-குர்ஆன் சுழலும் திசையிலேயே சுழலுவது தான் ஸுன்னா. மனித சமுதாயத்துக்கு அல்-குர்ஆனைச் செயற்படுத்தும் வழிமுறையையும் அதனது அறிவுறுத்தல்களை நடைமுறை வாழ்வில் பிரயோகிக்கும் உத்திகளையும் கற்பிக்கும் பணியையே ஸுன்னா செய்கின்றது. ஆனால், அரசியல், இல்முல் கலாம், பிக்ஹ் முரண்பாட்டுக் காலங்களில் மக்களது மனங்களில் அறிவியலுக்கொவ்வாத பல சிந்தனைகள் வேரூன்றத் தொடங்கின. ‘இறை வசனங்கள் முடிவுற்றவை; நிகழ்வுகள் முடிவுறாதவை’ என்பது ஓர் உதாரணம். அத்தகு சிந்தனைகள், ஸுன்னாவை ஒரு தனித்த மூலாதாரமாகக் கொள்ளும் தலத்திற்கு அவர்களைத் தள்ளி விட்டன. பின்னர் இது தொடர் கதையானது. அதாவது அல்-குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஆதாரம் கிடைக்காத கிளையம்சம் ஒன்றை அவர்கள் எதிர் கொள்ள வேண்டி வந்த வேளை வேறு மூலாதாரங்களைத் தேடத் தொடங்கினார்கள். விளைவாக, இஜ்மா, கியாஸ், இஸ்திஹ்ஸான் போன்ற சட்ட மூலாதார முறைமை ஒன்று தோற்றம் பெற்றது. இது கிளைகள் பரப்பி இன்று சுமார் ஐம்பது மூலாதாரங்கள் வரை காணப்படுகின்றன.

இந்த மூலாதார சிக்கலில் இருந்து வெளியே வருவது ஒருமைப்பாட்டுக்கான ஓர் அத்தியாவசியத் தேவையாக உள்ளது. அதுவே இஸ்லாத்தை நாம் வாழும் காலத்துக்கு மாத்திரமன்றி எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் ஒரு வாழ்க்கை முறையாக விளங்கிக் கொள்வதற்குத் துணை பயக்கும். இல்லாது விடின், நாம் தற்போது அனுபவித்து வருவது போல, கடந்த காலத்துக்கும் நவீனத்துவத்துக்கும் மத்தியில் சிக்கிக் கொண்டு, நடைமுறை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத ஓர் இக்கட்டான நிலையையே எதிர் கொள்வோம். ஒருபுறம் இஸ்லாத்தைப் பாதுகாக்கப் போராடும் ஒருவர் மேற்கில் தங்கியிருக்கும் நிலையில் இருந்து வெளியில் வந்து கொள்ள முடியாதிருப்பார்; மற்றொரு புறம் மேற்கின் பின்னால் செல்லும் ஒருவர் இஸ்லாத்தின் பாரம்பர்யங்களில் இருந்து விடுபட்டுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பார்.

உதாரணத்திற்கு ஜனநாயக முறைமை சம்பந்தப்பட்ட புதிய நடைமுறைகளை எடுத்துக் கொள்வோம். இன்றைய வாழ்வமைப்பின் ஆதாரங்களாக உள்ள சர்வஜன வாக்கெடுப்பு, பாராளுமன்ற சட்டதிட்டங்களின் ஏற்பு, மேலவையினரின் அல்லது ஷூரா சபையினரின் அறிவுறுத்தல்கள் முதலியனவற்றை நாம் எதிர் கொண்டுள்ள மூலாதாரச் சிக்கலின் பின்புலத்தில் நின்று எவ்வாறு புரிந்து கொள்வது? மென்மேலும் மூலாதாரங்களின் எண்ணிக்கை அறுபது, எழுபது என்று அதிகரித்துச் செல்லும் நிலை தான் தோன்றும். இவையனைத்தும் அல்-குர்ஆனுக்குச் சமானமாக இருந்து, புதிய சட்டங்களைத் தோற்றுவித்து, மக்களை ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக மேலும் மேலும் பிரிவினைகளை வளர்ப்பனவாகவே அமையும். இதனால் மக்களுக்குக் கிட்டுவது சுபீட்சமும் மகிழ்ச்சியும் அல்ல; கஷ்டங்களும் துயரங்களுமே. நாம் அனைவரும் இருளில் இருந்து ஒளியை நோக்கிச் செல்வதற்காகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என எமக்குக் கூறப்பட்டது நேர்வழியும் பலமான கயிறுமான அல்-குர்ஆன் மட்டுமே என்பதை நாம் மறந்து விட்டோம்.

# பகுதி ஆறு

# இஸ்லாமிய இயக்கங்களுக்கான சாசன சிந்தனைகள்

## சமூக மாற்றப் பொறிமுறை

பிரபஞ்சம், மனிதன், வாழ்வு என்பன பற்றிய முழுமையான ஒரு பார்வையை இஸ்லாம் முன்வைக்கின்றது என நம்புகின்றவர்கள் அல்லது இஸ்லாமிய வாதிகள், தமது உம்மத்தின் வாழ்வு முறையை மாற்றியமைக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள் ஆயின் அவர்கள் மாற்றத்திற்கான அல்-குர்ஆனின் கோட்பாட்டை அறிந்து கொள்வது அவசியம். அதற்கு மாறாக எமது பாரம்பர்யத்தில் அல்லது நவீன நடைமுறையில் உள்ள அந்நியமான வார்ப்புகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளைப் பிரயோகம் செய்வது தகாது. கீழ் வருபவை அல்-குர்ஆனியக் கோட்பாட்டின் பிரதான கூறுகளாகும். இவற்றை மையப்படுத்தித் தான் ஏனைய கிளையம்சங்கள் தோற்றம் பெற வேண்டும்.

### 1. ஹாகிமிய்யா என்பது மனிதப் புரிதலின் அடிப்படையில் அமைந்த வேதநூலின் ஹாகிமிய்யத்தாகும் அல்லாது இறை ஹாகிமிய்யத் அல்ல

இறை ஹாகிமிய்யத்[1] என்பது, சிந்தனா ரீதியான, கலாச்சார

---

(1) ஹாகிமிய்யா என்பது மொழி ரீதியில், ஹாகிம் என்ற பெயர்ச் சொல்லை மையப்படுத்தி வருகின்ற 'மஸ்தர் ஸினாஇ' என்னும் அடிப்படை வகைச் சொல்லாகும். ஹாகிம் என்பது ஹுக்ம் என்ற அடிப்படைச் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றது. தடுத்தல் என்பது இதன் கருத்தாகும். ஹுக்ம் என்ற சொல் அல்-குர்ஆனில் இருநூறு

ரீதியிலான, தத்துவ வேர்களைக் கொண்ட, பல கிளைகள், நோக்குகளை உள்ளடக்கிய ஓர் எண்ணக்கருவாகும். அதன் கிளைகளும் அவற்றுக்கிடையிலான பல்வேறுபட்ட தொடர்புகளும் விரிந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட கலாச்சார, தத்துவப் பார்வைகளைத் தோற்றுவிக்கக் கூடியன. எந்த நிலையிலும் இறை ஹாகிமிய்யத் இஸ்லாமிய அறிவியல் கட்டமைப்புடன் இறுக்கமான பிணைப்பைக் கொண்டதாகவே இருக்கின்றது. இந்த எண்ணக் கருவானது, இஸ்லாமிய அறிவியல் கட்டமைப்பின் மூலாதாரங்கள், அதன் அறிதல் தத்துவம், முறைமைகள், மகாஸிதுகள், அதன் வரலாற்றுப் பாத்திரம் போன்றவற்றுடன் நேரடி சம்பந்தத்தைக் கொண்டிருக்கின்றது. ஓர் எண்ணக் கருவைப் பொறுத்தவரையில், அதன் யதார்த்த வடிவம், அதன் பொருள், அது முன்வைக்கும் செய்தி, அதன் வரலாற்றுப் பாத்திரம் என்பன இல்லாமல் ஓர் எண்ணக்கருவாக அது பரிணமிப்பது சாத்தியமில்லை. அது போலவே கலாச்சார, சிந்தனா வாழ்வோட்டத்தில் அது ஏற்படுத்திய தாக்கங்கள், அவற்றைத் தோற்றுவித்த மூலங்கள் குறித்து அறிவதும் அவசியம்.

நவீன கல்வியியல் நடைமுறையில் நுணுக்கமான சிறப்புத் துறைகளாக அடையாளப்படுத்தக் கூடியனவாகச் சில இஸ்லாமிய எண்ணக்கருக்கள் அமைந்துள்ளன. குறிப்பிட்ட மட்டத்தில் அவற்றைக் கற்பிப்பதாயின் விரிவுரைகளுக்கென பல நூறு மணித்தியாலங்கள் தேவைப் படும். அதிலும் குறிப்பாக 'இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இறை ஹாகிமிய்யத்' போன்ற எண்ணக் கருவாக இருப்பின் அதன் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகும்.

'இறை ஹாகிமிய்யத்' எனும் எண்ணக் கருவை விளங்கிக் கொள்ள அல்லது பகுப்பாய்வு செய்ய விழையும் போது நாம் புரிந்து வைத்திருக்க வேண்டிய கிளை எண்ணக் கருத்துகள் யாவை என்பதை முதலில் குறித்துக்காட்ட விரும்புகின்றோம். இந்த கிளை எண்ணக் கருக்களின் இணைப்பிலேயே இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கரு தோற்றம் பெற்றுள்ளது. இந்த வலைப்பின்னலை விளங்கிக் கொள்ளாமல்

---

அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் வந்துள்ளன. அது போல் பல ஹதீஸ்களிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஹுக்ம் என்பது உஸூலுல் பிக்ஹ் கலையில் மிக முக்கியமான ஓர் ஆய்வுப் பரப்பாகும். மாத்திரமன்றி சட்ட அறிஞர்கள் தமது சட்ட ஆய்வின் முடிவில் பெற்றுக் கொள்கின்ற ஆய்வு முடிவுக்கும் ஹுக்ம் என்பர். தர்க்கவியலிலும் ஹுக்ம் என்பது ஒரு ஆய்வுப் பரப்பாகும். ஹாகிமிய்யா என்ற மஸ்தர் ஸினாஇ வகை அடிப்படைச் சொற்பிரயோகம் மேற்குறிப்பிடப்பட்ட எந்தப் பரப்பிலும் பிரயோகிக்கப்படவில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் அதிகாரம் என்ற கருத்தில் இச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவை விளங்கிக் கொள்தல் சாத்தியமில்லை. உதாரணமாக, தீன் எனும் மதம் பற்றிய எண்ணக்கரு; இபாதா எனும் வழிபாடு பற்றிய எண்ணக்கரு; ஹுக்ம் எனும் சட்டம் பற்றிய எண்ணக்கரு; (இதனை ஷரீஆக் கண்ணோட்டத்திலும் சட்டவாக்கக் கண்ணோட்டத்திலும் மரபுக் கண்ணோட்டத்திலும் அணுக வேண்டும்.) உலூஹிய்யா எனும் இறைதத்துவம் பற்றிய எண்ணக்கரு; உபூதிய்யா எனும் அடிமைத்துவம் பற்றிய எண்ணக்கரு; மேலும், படைப்பு, உலகமும் மறுமையும் இறைவார்த்தைகள், ஹராம் - ஹலால், சார்புத் தன்மையும் சார்பற்ற தன்மையும் பொதுவானவையும் குறிப்பானவையும் சட்ட மரபுகள், மத ஒற்றுமை, பூமி போன்ற பல எண்ணக்கருக்களைக் குறிப்பிடலாம். இத்தகு எண்ணக் கருக்களின் இயல்பு, தர வேறுபாடு என்பன எவ்வாறிருந்த போதிலும் இவை பற்றிய பரிச்சயமும் புரிதலும் இன்றி 'இறை ஹாகிமிய்யத்' எனும் எண்ணக் கருவின் எந்த மட்டத்தையும் நாம் புரிந்து கொள்தல் இயலாது.(2)

---

(2) இந்த எண்ணக்கருக்கள் ஒவ்வொன்றிற்கும் மொழி மற்றும் பரிபாஷை ரீதியாக வரைவிலக்கணங்கள் வழங்குவது அவ்வளவு இலகுவான ஒரு காரியமல்ல. அதற்குத் தனியான ஒரு ஆய்வு தேவைப் படும். அதனால் குறித்த வரைவிலக்கணங்களைக் கண்டு கொள்ளக் கூடிய மூல நூல்களை அடையாளம் காட்டுவதுடன் இங்கு நாம் போதுமாக்கிக் கொள்கின்றோம். தீன் என்ற எண்ணக்கருவை இமாம் மௌதூதி அவர்கள் தனது 'அல்முஸ்தலஹாத் அல்அர்பஆ' என்ற நூலில் இபாதா, இலாஹ், ரப் போன்ற சொற்களுடன் இணைத்து விளங்கப்படுத்துகிறார்கள். அது போல் முஹம்மத் பத்ர் என்பவர் தனது 'தாரிகுன் நுழும் அல்கானூனிய்யா வல்இஜ்திமாஇய்யா' என்ற தனது நூலில் இதனை சிறப்பாக வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். அல்ஹுக்ம் என்பதை அதன் வேறுபட்ட வகைகளுடன் இமாம் பக்ருத்தீன் அர்ராஸி அவர்கள் மொழி மற்றும் பரிபாஷை அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். அதில் இந்த வரைவிலக்கணம் தொடர்பில் இமாம்களுக்கு மத்தியில் உள்ள கருத்து வேற்றுமைகளையும் குறித்துக் காட்டுவார்கள். அவரது அல்மஹ்ஸூல் என்ற நூலின் பக்கக் குறிப்புக்களில் இமாமவர்கள் தவறிய இடங்களை நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அதே போன்று அல்ஹலால் வல்ஹராம், பொதுவானவைகளும் குறிப்பானவைகளும் போன்றவற்றிற்கான வரைவிலக்கணங்களையும் இதில் காணலாம். அது போல் இறைத்துவம், அடிமைத்துவம், உலகமும் மறுமையும், மத ஒற்றுமை, பூமி போன்றவற்றுக்குரிய வரைவிலக்கணங்களை எமது ஆய்வான 'அல்மகாஸித் வல்கியம் அல்-குர்ஆனிய்யா அல்உல்யா அல்ஹாகிமா' என்ற நூலில் கண்டு கொள்ளலாம். தீன் முழுவதும் அல்லாஹ்வுக்குரியது; இஸ்லாத்தில் தீன் ஓர்முகமானது; அல்லாஹ்விடத்தில் தீன் என்பது இஸ்லாமாகும்; தீனில் மக்கள் எவ்வளவு வேறுபட்டாலும் அல்லாஹ்விடத்தில் அது ஒன்று தான். அது தான் இஸ்லாம்.

ஓர் எண்ணக்கருவை கையாளும் போது, வெறுமனே அதன் மொழி ரீதியான கருத்தையும் அதன் சில பிரயோகங்களையும் மாத்திரம் தொடர்புபடுத்தி அதனை விளங்கிக் கொள்ள முற்படுவது, பெரும்பாலானோர் விடும் தவறு. இதனால் போலியான சில விளக்கங்கள் பரவலாகின்றன. இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவும் கடந்த சில தசாப்தங்களாக சில சிந்தனைப் பள்ளியினரால் பிழையாகக் கையாளப் படும் நிலையில் இருந்து வந்துள்ளது. சிலர் அதனைக் கவிதைகளைப் போல கையாண்டுள்ளனர். அதாவது, முதலில் அதனைப் பகுத்து நோக்கி, பின் மீண்டும் அதனைப் பொறுத்தி, அதன் இஸ்லாமியப் பார்வையைப் பெற்றுக் கொள்ள முற்பட்டனர். மற்றும் சிலர் இஸ்லாமிய ஷரீஆவின் மிக முக்கியமானதொரு மகாஸிதாக அதனைக் கருதி அதனடிப்படையில் கிளைச் சட்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கண்டனர். இவற்றுள் அதன் பொருள் தெளிவற்ற, குறுகிய, குழப்பமான ஒரு நிலையை அடைந்தது. இத்தகைய குறுகிய கருதுகோள்களில் இருந்து இந்த எண்ணக்கருவை வெளியில் கொண்டு வரவே நாம் முனைகிறோம்.

பல்வேறு சிந்தனைப் பள்ளியினர் மத்தியில் அவர்களது முரண்பாட்டுக் களத்தின் ஓர் அங்கமாக அமைந்தமையினால் இந்த எண்ணக்கருவைச் சூழவுள்ள விளக்கங்களில் ஒரு குழப்பநிலை தொடர்ந்து இருந்து வந்துள்ளது. முக்கியத்துவம் மிக்க இந்த எண்ணக்கருவுக்கு முடிந்த முடிவான ஒரு விளக்கத்தைக் கண்டு கொள்தல் எனும் மாயையில் நாம் விழுந்துவிடாமல் இருப்பதற்காக, இதனைப் புரிந்து கொள்ள அவசியமான, குறைந்த பட்சம் இதனைப் புரிந்து கொள்வதில் நாம் நுணுக்கமாக இருப்பதற்கான சில வரையறைகளை அடையாளம் கண்டு கொள்வோம்.

**அ நபிமார்களின் தந்தையான இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பணியின் பொது அல்லாஹு தஆலா அவருடன் பேசிய ஒரு நிகழ்வைக் காண்போம்:**

---

அதனைத் தான் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவருக்குப் பின்னர் ஏனைய நபிமார்களும் கொண்டு வந்தார்கள். இறுதியாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனைப் பூரணப்படுத்தினார்கள்; நம்பிக்கைக் கோட்பாடும் ஒன்று தான்; நோக்கங்களும் ஒன்று தான்; அவற்றினுடைய சட்டங்கள் போன்ற சில விரிவான பகுதிகளில் வித்தியாசங்கள் இருந்தாலும் அனைத்தும் ஒன்று தான். அது போல், சார்புத் தன்மையும் சார்பற்ற தன்மையும் என்பது தத்துவ எண்ணக்கருக்களாகும். இவற்றிற்கான வரைவிலக்கணங்களை தத்துவ நூல்களில் தாராளமாகக் கண்டு கொள்ளலாம்.

وَإِذِ ابتَلى إِبراهيمَ رَبُّهُ بِكَلِماتٍ فَأَتَمَّهُنَّ قالَ إِنّي جاعِلُكَ لِلنّاسِ إِمامًا قالَ وَمِن ذُرِّيَّتي قالَ لا يَنالُ عَهدِي الظّالِمينَ - البقرة: ١٢٤

**"...நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக(த் தலைவராக) ஆக்குகிறேன் என்று அவன் கூறினான். அதற்கு இப்றாஹீம் என் சந்ததியினரிலும் (இமாம்களை ஆக்குவாயா?) எனக் கேட்டார். என் வாக்குறுதி (உம் சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களுக்கு சேராது என்று கூறினான்." (பகரா 2:124)**

ஆக, அல்லாஹ்வின் மூலம் வழங்கப் படும் ஒரு தலைமைத்துவம் இருக்கின்றது. அது போலவே நீதி, அநீதி என்ற பெறுமானங்களும் இருக்கின்றன. இவை குறித்து நாம் தெளிவு பெற வேண்டும். மனிதர்களில் தமக்குத் தாமே அநியாயம் இழைத்துக் கொள்பவர்கள், சட்டத்தை எப்போதும் சரிவரப் பேணி நடப்பவர்கள், நல்ல விடயங்களைப் போட்டி போட்டுக் கொண்டு செய்பவர்கள் எனப் பலதரப் பட்டோர் இருக்கின்றார்கள். இந்த வசனத்தில் தலைமைத்துவம் என்பது அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் இறை ஒப்பந்தம் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்டள்ளது; அநியாயக்காரர்கள் அந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்ளவோ அதனை நெருங்கவோ மாட்டார்கள்.

ஏகத்துவத்துக்கு அடுத்தபடியாக, நபிமார்களதும் அன்னவர்களின் நிலையில் இருந்து சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்பவர்களதும் முக்கிய இலக்காக அமைந்துள்ளது அநீதிக்கு முன்னால் நீதி என்ற பெறுமானம். அதன் அடிப்படையில் இன்னும் சில கிளை எண்ணக்கருக்கள் தோன்றுகின்றன. இறை ஏற்பாட்டில் வழங்கப் படும் தலைமைத்துவம், இறை ஒப்பந்தம், அநீதியும் அநியாயக்காரர்களும் நீதியும் நீதியாளர்களும் முதலியன குறிப்பிடத் தக்கன.

நபிமார்களின் தந்தையான இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி அல்லாஹு தஆலா பேசிய இந்த வார்த்தைகள், அல்லாஹ்வின் கட்டளைப்படி நேர்வழி காட்டக் கூடிய தலைவர்களான நபிமார்கள், தூதுவர்களையே குறித்து நிற்கின்றன. அவர்களை ஈமான் கொள்ள வேண்டும்; அவர்களது வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் என்றே நாம் ஏவப்பட்டிருக்கின்றோம். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَجَعَلنا مِنهُم أَئِمَّةً يَهدونَ بِأَمرِنا لَمّا صَبَروا وَكانوا بِآياتِنا يوقِنونَ - السجده: ٢٤

**"இன்னும் அவர்கள் பொறுமையுடனிருந்து, நம் வசனங்களை உறுதியாக நம்பி ஏற்றுக் கொண்ட போது, நம்முடைய கட்டளைப்படி நேர்வழி காட்டும் தலைவர்களை –இமாம்களை– அவர்களில் நின்றும் உண்டாக்கினோம்." (ஸஜ்தா 32:24)**

மற்றோர் இடத்தில்:

أُولئِكَ الَّذينَ هَدَى اللَّهُ فَبِهُداهُمُ اقتَدِه قُل لا أَسأَلُكُم عَلَيهِ أَجرًا إِن هُوَ إِلّا ذِكرى لِلعالَمينَ - الأنعام: ٩٠

**“இவர்கள் யாவரையும் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தினான். ஆதலால், இவர்களுடைய நேர்வழியையே நீரும் பின்பற்றுவீராக! இதற்காக நாம் உங்களிடம் எவ்வித பிரதிபலனையும் கேட்கவில்லை; இது (இக்குர்ஆன்) உலக மக்கள் யாவருக்கும் நல்லுபதேசமேயன்றி வேறில்லை என்று கூறுவீராக.” (அன்ஆம் 6:90)**

எனக் கூறுகின்றது.

**ஆ தலைமைத்துவத்தை அல்லாஹ் வழங்குகின்றான் என்ற செயற்பாட்டில் இருந்து ‘தூய இறை தெரிவு’ எனும் சிந்தனையைப் புரிந்து கொள்ளலாம். ‘அல்லாஹ் தலைமைத்துவத்தை வழங்குகின்றான்’ என்ற செயற்பாட்டுடனும் ‘அல்லாஹ் தனிமனிதர்களைத் தூய தெரிவுக்கு உட்படுத்துகிறான்’ என்ற செயற்பாட்டுடனும் இணைத்தே இந்த சிந்தனையை விளங்கிக் கொள்ள வேண்டும். அல்-குர்ஆன் கூறுகின்றது:**

اللَّهُ يَصطَفي مِنَ المَلائِكَةِ رُسُلًا وَمِنَ النّاسِ إِنَّ اللَّهَ سَميعٌ بَصيرٌ - الحج: ٧٥

**“அல்லாஹ் மலக்குமார்களிலும் மனிதர்களிலும் சில தூதுவர்களை தூய தெரிவுக்கு உட்படுத்துகின்றான். நிச்சயமாகஅவன் நன்கு பார்ப்பவனும் செவியேற்பவனும் ஆவான்.” (ஹஜ் 22:75)**

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள தூய தெரிவு என்பது சில வரையறுக்கப்பட்ட பண்புகளுடன் சம்பந்தப்பட்டது. இதிலிருந்து தான் சில சமூகங்கள் தூய தெரிவுக்கு உட்படுகின்றன என்ற கருத்தை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது:

إِنَّ اللَّهَ اصطَفى آدَمَ وَنوحًا وَآلَ إِبراهيمَ وَآلَ عِمرانَ عَلَى العالَمينَ - آل عمران: ٣٣

**“ஆதமையும் நூஹையும் இப்றாஹீமின் சந்ததியரையும் இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாகத் தேர்ந்தெடுத்தான்.” (ஆல இம்ரான் 3:33)**

‘தனிமனிதர்களின் தூய இறை தெரிவு’ என்பது, நபிமார்களையும் தூதுவர்களையும் குறிக்கின்றது போல, ‘சமூகங்களின் தூய இறை தெரிவு’ என்பது நபிமார்கள் செயற்படவும் தலைமை வழங்கவும் வழிகாட்டலும் உரிய களமாக அமைகின்ற சமூகங்களைக் குறிக்கின்றது. அதாவது இது வரையறுக்கப்பட்ட பிரதிநிதித்துவப் பணி ஒன்றை மேற்கொள்வதற்கான

தூய இறை தெரிவாகும். ‘இறை ஹாகிமிய்யத்’ என்ற சிந்தனை குறித்துப் பேசகின்ற பொழுது இந்தப் புரிதல் எமது கவனத்தில் இருப்பது அவசியம்.

**இ மானுட சமூகம் அதன் வரலாற்றின் பல்வேறு காலங்களில் அறிந்து வைத்திருந்த சமூக, சட்ட ஒழுங்குகளின் வரலாற்றைக் காண நாம் சற்றே பின் நோக்கிச் செல்ல வேண்டியிருக்கின்றது. அங்கே, ஏதேனும் ஒரு வடிவில் இறை சட்டத்தின் மீது அல்லது இறை ஹாகிமிய்யத்தின் மீது கட்டப்பட்ட ஒழுங்குகள் குறித்து நாம் அறிந்து கொள்ளலாம். ஸுமேரியர்கள், அக்காடியர்களிடம் இத்தகு ஒழுங்குகள் பல காணப்பட்டிருக்கின்றன. இது போலவே பபிலோனியர், பாரோக்கள் முதலான புராதன சமூகங்களிடமும் இவற்றை நாம் காணலாம்.**

அவ்வாறே ஒரு சமூகத்தின் பெயரிலான சட்ட ஒழுங்குகளும் இருந்துள்ளன. ஒரு நகரத்து அல்லது கோத்திரத்து ஒழுங்குகள் எனப் பல வடிவங்களைக் காண முடிந்தது. இவை, இறை சட்டவியல் சிந்தனையின் இயல்பை விளங்கிக் கொள்ளத் துணை செய்வன. புராதன சட்டங்களுள் அதிகமானவை ஏதோ ஒரு வகையில் மதத்துடன் தொடர்புபட்டிருந்தன.

சில புராதன நாகரிகங்களின் ஒழுங்குகள் மதத் தலைவர்களால் உருவாக்கப்பெற்றன; மற்றும் சில மன்னர்களாலும் தலைவர்களாலும் உருவாக்கப்பட்டன. மதத் தலைவர்களால் உருவாக்கப் பெற்றவை, ‘கடவுளின் சித்தம்’ அல்லது ‘பூமியில் கடவுளின் நிழல்’ எனக் கருதப்பட்டன. இவ்வகை சட்டங்கள் அல்லது கட்டளைகள் கடவுளின் அதிகாரம் எனும் அந்தஸ்த்தில் வைக்கப்பட்டன. இதற்கு மாற்றமாக வேறும் சில புராதன சமூகங்களில், குறிப்பாக ரோம சமூகத்தில் சட்டவாக்கம் மனித செயற்பாடாகவே கொள்ளப்பட்டது. அங்கு, மனிதனே சட்ட ஒழுங்கைத் தோற்றுவிப்பவன்; கடவுள் அல்ல என்ற எண்ணமே நிலைபெற்றிருந்தது. இதன் மூலம் அத்தகு சமூகத்தோர், சட்டத்தையும் மதத்தையும் வேறுபடுத்தி நோக்கும் தமது விருப்பையே வெளிப்படுத்தியிருந்தனர். இதனையே, புராதன சட்ட ஒழுங்குகளையும் ரோம சட்ட ஒழுங்குகளையும் வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாக சட்டத்துறை அறிஞர்கள் கருதினர்.

சமூகவியல், சட்ட மரபுகள் என்பன குறித்த ஆய்வாளர்களில் சிலர், புராதன மொஸப்பத்தேமிய நாகரிக அதிகார மரபில் மதத்திற்கு முதல் இடம் காணப்பட்டமையை மறுக்கின்றனர். ஸுமேரிய நகரங்களில், அடிப்படையில் மதத்தின் ஆட்சி காணப்பட்டாலும் சிவில் ஆட்சியாளரும் காணப்பட்டனர். அவர் பூமியில் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார்; அவர் தான் நாட்டின் பிரதான மதத் தலைவராகவும் விளங்கினார். அதாவது, மத அதிகாரமும் சிவில் அதிகாரமும் கலந்ததொரு வடிவம் இருந்துள்ளது. இந்தப் புராதன நாகரிகங்களில் கடவுளின் பெயரால் தான் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அத்துடன் மன்னரின் தெரிவையும் கடவுளுடனேயே

சம்பந்தப்படுத்தினர். மன்னரை ஏதேனும் ஒரு வகையில் கடவுளே தெரிவு செய்கின்றார் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது.

அக்காடிய மன்னர்களின் காலத்தில் உலக அரசு என்ற சிந்தனை தோற்றம் பெற்றது. பெரிய மன்னர் என்ற பிரயோகமும் அவர் தான் உலகின் நான்கு முனைகளையும் ஆள்பவர் என்ற எண்ணமும் உருவானது. பின்னர், மன்னர் தன்னை ஒரு கடவுளாகக் கருதுவார். உலகின் ஏனைய கடவுளர்களின் விருப்பங்களை அமுல் செய்ய இவர் தான் பொறுப்பாவார் என்றும் இவரே கடவுளர்களின் சித்தத்தைப் பிரதிபலிப்பவர் என்றும் கடவுளர்களின் விருப்பப்படியே இவர் செயல்படுகின்றார் என்றும் நம்பப்பட்டது. மக்களின் தவறுகள், குற்றங்கள் முதலியனவற்றுக்குக் கடவுளர்களின் முன்னால் இவரே பொறுப்புக் கூறுவார்.

மொஸப்பத்தேமியாவில் ஹிட்டியர்களது ஆட்சியைப் பொறுத்தவரையில், எகிப்து, பாபிலோனியா போன்ற பெரிய ராஜ்யங்களில் அமுலில் இருந்த இறைசட்டம் போலல்லாது, பலத்தை மையப்படுத்தியே ஆட்சி நிறுவப்பெற்றது. ஒரு மன்னனின் சட்டபூர்வத் தன்மையும் அவனுக்கான மக்களின் கட்டுப்பாடும் அவன் எந்தளவு பலசாலியாக இருக்கின்றான் என்பதிலும் பிறரை வெற்றி கொள்ளும் ஆற்றலை எந்தளவு பெற்றிருக்கின்றான் என்பதிலுமே தங்கியிருந்தது. மார்க்க விவகாரத்தைப் பொறுத்த அளவில், மன்னன் கடவுளாகவோ, கடவுளின் ஸ்தானத்தில் உள்ள ஒருவராகவோ கருதப்படவில்லை. அவர் பிறரை வெற்றிகொள்ளும் ஆற்றல் உள்ளவராக இருந்தால் கடவுளின் உதவியைப் பெற்றுக் கொள்வார். மரணத்தின் பின்னர் கடவுளர்களில் ஒருவராகவும் கருதப்படுவார். மன்னர், கடவுளுக்கும் மனிதர்களுக்கும் மத்தியிலான ஓர் இடைத்தரகராகவும் விளங்கினார். அவரது கனவுகள், நம்பிக்கைகள், நம்பிக்கையின்மைகள் எல்லாம் அவருக்கும் கடவுளுக்கும் இடையிலான தொடர்பின் அடையாளங்களாகக் கொள்ளப்பட்டன.

'இறை ஹாகிமிய்யத்' எனும் தலைப்பில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய சமூகங்களாக எபிரேயர்களையும் அடுத்து பனூ இஸ்ரவேலர்களையும் குறிப்பிடலாம். பனூ இஸ்ரவேலர்கள் என்ற பிரயோகத்தை விடவும் எபிரேயர்கள் என்ற பிரயோகம் மிக விரிவானது. வரலாற்றாசிரியர்களின் பலமான அபிப்பிராயத்தின்படி இவர்கள் யூப்ரடீஸ் நதியைக் கடந்து பலஸ்தீனையும் அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கி வந்தவர்கள். இவர்களுள் சிலர் பலஸ்தீனில் தங்கி, செமித்தியர்களுடன் கலந்து அவர்களது நம்பிக்கைகளை ஏற்றுக் கொண்டனர். மற்றும் சிலர் எகிப்தில் குடியேறினர். எபிரேயர்களில் எகிப்தியரும் உள்ளனர்; செமித்தியர்களும் உள்ளனர்.

எபிரேயர்கள் நீண்ட காலமாக இடம் விட்டு இடம் நகர்ந்து கொண்டே இருந்தார்கள். விவசாய நிலங்களைத் தேடிச் செல்லும் நாடோடி வாழ்க்கையாகவே அது அமைந்தது. நீரும் ஏனைய வசதிகளும் அமைகின்ற பொழுது மாத்திரமே அவர்கள் நிலையான வாழ்வமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அச்சமயம் அவர்கள் பல கோத்திரத்தோராகக் காணப்பட்டனர். பல குடும்பங்களின் இணைப்பால் தோற்றம் பெற்றன கோத்திரங்கள். ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாகக் கோத்திரத்துள் அங்கம் வகித்தன.

கோத்திர ஒழுங்குகளின் ஆரம்ப நிலையில், இரத்த உறவே பிரதான பிணைப்பாகக் காணப்பட்டது. காலப்போக்கில் குடும்ப உறவைத் தாண்டிய வேறு அலகுகளும் சேர்ந்து கோத்திரக் கட்டமைப்பு மாற்றம் பெறலாயிற்று. அறபு மரபிலும் சரி; ஏனைய மரபுகளிலும் சரி நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவர்களிடம் கோத்திரத்தின் அதிகாரம் அவர்கள் தேர்ந்தெடுக்கும் கோத்திரத் தலைவரிடமே இருந்தது. அவர் தான் ஆட்சியாளராக விளங்குவார்; மக்கள் அவருக்கே கட்டுப்பட்டு நடப்பர். எபிரேயர்களது கோத்திர ஒழுங்கிலும் தலைவர்கள் இருந்தனர். அவர்கள் 'நஸ்' என வழங்கப்பெற்றனர். தலைவர் என்பது அதன் பொருளாகும். இவர்கள் கோத்திரப் பிரதானிகள் ஊடாக அல்லது அந்த சமூகத்தின் கண்ணியத்தை ஈட்டிக் கொண்டோர் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

எபிரேயர்கள் கனான்களின் தேசமான பலஸ்தீனத்தில் தங்கி, தெற்குவாசிகளான செமித்தியர்களுடன் கலந்து அவர்களது நம்பிக்கைகளை ஏற்று வாழ்ந்து வந்தனர். பின்னர் இஸ்ராயீலும் அவரது சந்ததியினரும் எகிப்துக்குச் சென்றனர். அவர்களுக்கு முன்னரே யூஸுப் அலைஹிஸ் ஸலாம், சகோதரர்கள் செய்த சதியின் காரணமாக எகிப்து சென்று அங்கு பிர்அவ்னின் ஓர் அமைச்சராக விளங்கினார். அவர்கள் எகிப்துக்கு இடம்பெயர்ந்த காலம் குறித்து பல்வேறு கருத்துகள் உள. சிலர், இது நிகழ்ந்தது கி.மு. பதினெட்டாம் நூற்றாண்டு என்பர்.

இஸ்ராயீலின் சந்ததியினர் ஆரம்பத்தில் எகிப்தின் கிழக்கு டெல்டா பகுதியில் தங்கி, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் பல நூற்றாண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டு நிலையான வாழ்வொழுங்கு ஒன்றினை அமைத்துக் கொண்டனர். இந்த விடயத்தில் அனுமானங்களின் அடிப்படையில் அமைந்த அவதானங்களைத் தவிர்த்து நம்பத்தகுந்த மூலாதாரம் ஒன்றினை நாம் தேடிய போது பழைய ஏற்பாட்டின் உரைகள் சில எமக்குக் கிடைத்தன. அவற்றில் இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது வருகைக்கும் இஸ்ராயீலின் சந்ததிகளது இடம் பெயர்வுக்கும் இடையில் இரண்டு நூற்றாண்டுகளை விடவும் சற்று அதிகமான ஒரு காலம் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இப்றாஹீம்

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹர்ரானில் இருந்து பலஸ்தீனுக்கு வந்தபொழுது அவரது வயது எழுபத்தைந்து. அதற்கு இருபத்தி ஐந்து வருடங்களின் பின்னர் இஸ்ஹாக் பிறந்தார். இஸ்ஹாக் அலைஹிஸ் ஸலாம் அறுபது வயதை அடைந்தபோது அவருக்கு யஃகூப் பிறந்தார். யஃகூப் அலைஹிஸ்ஸலாம் எகிப்துக்கு இடம்பெயர்ந்த போது அவருக்கு வயது நூற்றி முப்பது. இஸ்ராயீலின் சந்திகளை அல்லாஹுஂ தஆலா தூய தெரிவுக்கு உட்படுத்தி, அவர்களைச் சிதறிய வாழ்க்கை முறையிலிருந்து மாற்றி, தவ்றாத் எனும் வேதத்தைச் சுமந்த ஒரு சமூகமாக வாழச் செய்ய நினைத்த போது தான் அவர்கள் எகிப்திலிருந்து வெளியேற அனுமதி அளித்தான். இந்தப் பணியை மேற்கொள்ள அல்லாஹுஂ தஆலா, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தேர்ந்து கொள்கின்றான். அவர், அம்மக்களை ஒற்றுமைப்படுத்தி ஓர் அகீதாவின் அடிப்படையில் ஒன்றினையும் சமூகமாக அவர்களை மாற்றியமைக்கும் பணியைத் தொடங்கினார்கள்.

இஸ்ரேலியக் கோத்திரங்களை ஒன்றுபடுத்தி அவர்களை ஒரே சமூகமாக மாற்றியமைக்க மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவரது சகோதரர் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் மிகுந்த பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சுற்றி ஒன்றுதிரண்டு அவரது தூதுத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் மக்கள் அல்லாஹ்வின் மக்களாகக் கருதப்பட்டார்கள். அவர்கள் அழைத்துச் செல்லப் படும் பரகத் செய்யப்பட்ட புண்ணிய பூமி அல்லாஹ்வின் ராஜ்யமாகக் கருதப்பட்டது. இஸ்ராயீலின் சந்ததியினரில் அல்லாஹ்வின் மக்களாக மாறி அவனது ராஜ்யத்தில் இணைய விரும்புகின்றவர்கள் அல்லாஹ்வின் ஹாகிமிய்யத்தை அதாவது சட்டவாக்க அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், மூஸாவும் ஹாரூனும் அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்பட்ட தூதுவர்கள் என்பதையும் புனித பூமிக்குச் சென்று வாழ்வதையும் தவ்ராத்திலும் மூஸா நபி கொண்டு வந்த ஏடுகளில் உள்ளவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதன் பயனாக அந்த சமூகம் கேட்ட அனைத்தும் அல்லாஹ்வால் வழங்கப்பட்டன. அவர்கள் தண்ணீர் கேட்டவேளை நிலத்தைப் பிளந்து நீரை வழங்கினான். உணவு கேட்டார்கள். மன்னு ஸல்வா என்ற உணவை வழங்கினான். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَإِذِ استَسقى موسى لِقَومِهِ فَقُلنَا اضرِب بِعَصاكَ الحَجَرَ فَانفَجَرَت مِنهُ اثنَتا عَشرَةَ عَينًا قَد عَلِمَ كُلُّ أُناسٍ مَشرَبَهُم كُلوا وَاشرَبوا مِن رِزقِ اللَّهِ وَلا تَعثَوا فِي الأَرضِ مُفسِدينَ -

البقرة: ٦٠

**“மூஸா தம் சமூகத்தாருக்காகத் தண்ணீர் வேண்டிப் பிரார்த்தித்த போது, உமது கைத்தடியால் அப்பாறையில் அடிப்பீராக! என நாம் கூறினோம். அதிலிருந்து பன்னிரண்டு நீர் ஊற்றுக்கள் பொங்கியெழுந்தன. ஒவ்வொரு கூட்டத்தினரும் அவரவர் குடி நீர்த்துறையை நன்கு அறிந்து கொண்டனர். அல்லாஹ் அருளிய ஆகாரத்திலிருந்து உண்ணுங்கள்; பருகுங்கள்; பூமியில் குழப்பஞ் செய்து கொண்டு திரியாதீர்கள் (என நாம் கூறினோம்) என்பதையும் நினைவு கூறுங்கள்.” (பகரா 2:60)**

இந்த சமூகத்துக்குக் கேட்பதெல்லாம் அற்புதமாக வழங்கப்பட்டது போலவே அவர்கள் கட்டுப்பட மறுக்கின்ற போது கடுமையான தண்டனைகளும் வழங்கப் பெற்றன:

وَإِذ نَتَقنَا الجَبَلَ فَوقَهُم كَأَنَّهُ ظُلَّةٌ وَظَنّوا أَنَّهُ واقِعٌ بِهِم خُذوا ما آتَيناكُم بِقُوَّةٍ وَاذكُروا ما فيهِ لَعَلَّكُم تَتَّقونَ - الأعراف: ١٧١

**“நாம் (ஸினாய்) மலையை அவர்களுக்கு மேல் முகட்டைப் போல் உயர்த்தினோம். அப்போது அவர்கள் அது தங்கள் மீது விழுந்து விடுமோ என்று எண்ணிய போது நாம் அவர்களை நோக்கி, நாம் உங்களுக்கு கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதிலுள்ளவற்றைச் சிந்தியுங்கள்; நீங்கள் பயபக்தியுடையோர் ஆகலாம் (என்று கூறினோம்).” (அஃராப் 7:171)**

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முன்னால் அடிபணிவதைத் தவிர அவர்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. என்றாலும் பனூ இஸ்ரவேலர்கள் பெரிதும் சட்டங்களுக்குக் கட்டுப்படாதவர்களாகவும் அல்லாஹ்வின் நேரடியான ஹாகிமிய்யத்தை விட்டும் வெளிச் செல்பவர்களாகவுமே இருந்தனர். அவர்களது கூட்டு இறை மறுப்புச் சம்பவம் இதற்கு நல்லதோர் உதாரணம். அவர்களை விட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் வெளிச் சென்ற வேளை, அவர்கள் மத்தியில் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் இருந்த நிலையிலும் அவர்கள் மதம் மாறி காளையொன்றினை வழிப்படத் தொடங்கினர். இது, தேர்ந்து கொள்ளப்பட்டதாயிருந்த இந்த சமூகம், அல்லாஹ்வின் ஹாகிமிய்யத்தை விட்டும் வெளிச் சென்று, அவனது இறைத்துவத்தை மறுத்த கூட்டு மதமாற்றமாகும். மட்டுமல்ல, மூஸா அலைஹிஸ்ஸலாம் தம்மை எகிப்திலிருந்தும் வெளியேற்றி, எகிப்திய உணவுகளைத் தமக்கு இல்லாமல் செய்துவிட்டார் என எப்போதும் அவருடன் பிரச்சினை பட்டுக் கொண்டும் அவரைக் குறை சொல்லிக் கொண்டும் இருந்தார்கள். யாத்திராகமத்தின் முப்பத்தியிரண்டாம் அத்தியாயத்தில் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம், மூஸா நபியைப் பார்த்துக் கூறுவார்: ‘இந்த சமூகம் ஒரு தீங்கில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.”

பின்னர் பல சம்பங்கள் நடந்தேறின. குறிப்பாக மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரதும் மறைவின் பின்னர் அம்மக்கள் மீண்டும் பிளவுபட்டார்கள். அவர்கள் மத்தியில் இருந்த ஒழுங்குகள் சீர்குலைந்தன; பிணைப்புகள் அறுந்தன. சிலர் அண்டை சமூகங்களுடன் கலந்து கரைந்து போயினர்; சிலர் அண்மைச் சமூகங்களினால் கவரப்பட்டு அவர்களோடு இணைந்து சிலை வணக்கத்துக்குள்ளாகினர். இது குறித்து பழைய ஏற்பாட்டு நூலான 'நீதிபதிகள்' எனும் அங்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் அவர்கள் மத்தியில் குழப்பங்களும் தீங்குகளும் பரவலாயின. அவர்களை ஒற்றுமைப்படுத்தவெனத் தோற்றிய நபிமார்களை அம்மக்கள் கடுமையாகத் துன்புறுத்தினார்கள்; பலரைக் கொலையும் செய்தார்கள். தமது மோசமான வாழ்க்கையையே இயல்பானதாக்கிக் கொண்டார்கள். தாம் செய்திருந்த உடன்படிக்கைகள் பலவற்றையும் மீறிச் சென்றனர். அவற்றுள் 'நீதிபதிகளின் தீர்ப்பு', 'மன்னர்களின் ஒப்பந்தம்' என்பன முக்கியத்துவம் வாய்ந்தன.

மற்றொரு கட்டமாக அல்லாஹ் தாவூத் அலைஹிஸ்ஸலாம், ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரையும் தனது பிரதிநிதிகளாக அந்த சமூகத்துக்கு அனுப்பி வைத்தான். இது குறித்து குர்ஆன் பேசியது:

يا داوودُ إِنّا جَعَلناكَ خَليفَةً فِي الأَرضِ فَاحكُم بَينَ النّاسِ بِالحَقِّ وَلا تَتَّبِعِ الهَوى فَيُضِلَّكَ عَن سَبيلِ اللَّهِ إِنَّ الَّذينَ يَضِلّونَ عَن سَبيلِ اللَّهِ لَهُم عَذابٌ شَديدٌ بِما نَسوا يَومَ الحِسابِ - ص: ٢٦

**"(நாம் அவரிடம் கூறினோம்:) தாவூதே! நிச்சயமாக நாம் உம்மை பூமியில் பின்தோன்றலாக ஆக்கினோம். ஆகவே மனிதர்களிடையே சத்தியத்தைக் கொண்டு (நீதமாக)த் தீர்ப்புச் செய்யும். அன்றியும் மனோ இச்சையைப் பின்பற்றாதீர். (ஏனெனில் அது) உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி கெடுத்துவிடும். நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுக்கிறாரோ, அவர்களுக்குக் கேள்வி கணக்குக் கேட்கப் படும் நாளை மறந்து விட்டமைக்காக மிகக் கொடிய வேதனையுண்டு." (ஸாத் 38:26)**

இதனுடன் அல்லாஹ்வின் நேரடி 'இறை ஹாகிமிய்யத்' எனும் கட்டத்தில் இருந்து நபிமார்களதும் தூதுவர்களதும் 'பிரதிநிதித்துவ ஹாகிமிய்யத்' எனும் கட்டம் வந்தது. இதில் அவர்கள் அல்லாஹ்வின் ஷரீஆவைக் கொண்டு மக்களை ஆட்சி செய்தார்கள். தவ்ராத்திலும் அவர்கள் தூதுவர்கள், அல்லாஹ்வின் பிரதிநிதிகள் என்றே காட்டப்பட்டுள்ளனர். என்றாலும் அம்மக்களது சட்டமீறல்களும் நெறிபிறழ்வுகளும் முற்றுப்பெற்று விடவில்லை. ஏனைய மக்களுக்கு இருந்தது போல தமக்கும் மன்னர்கள்

வேண்டுமெனக் கேட்டனர். அண்மைச் சமூகங்களின் கவர்ச்சியினால் கவரப் பட்டு, நீண்ட பல நூற்றாண்டுகளாக அவர்களுடன் கலந்து சிலை வணக்கத்திலும் ஈடுபட்டிருந்த இந்த மக்கள் அம்மக்களுக்கு உள்ளது போன்ற ஓர் ஒழுங்கு தமக்கும் வேண்டுமெனக் கோரினர். குர்ஆன் கூறியது:

أَلَم تَرَ إِلَى المَلَإِ مِن بَني إِسرائيلَ مِن بَعدِ موسى إِذ قالوا لِنَبِيٍّ لَهُمُ ابعَث لَنا مَلِكًا نُقاتِل في سَبيلِ اللَّهِ قالَ هَل عَسَيتُم إِن كُتِبَ عَلَيكُمُ القِتالُ أَلّا تُقاتِلوا قالوا وَما لَنا أَلّا نُقاتِلَ في سَبيلِ اللَّهِ وَقَد أُخرِجنا مِن دِيارِنا وَأَبنائِنا فَلَمّا كُتِبَ عَلَيهِمُ القِتالُ تَوَلَّوا إِلّا قَليلًا مِنهُم وَاللَّهُ عَليمٌ بِالظّالِمينَ - البقرة: ٢٤٦

**"(நபியே!) மூஸாவுக்குப் பின் இஸ்ரவேல் மக்களின் தலைவர்களை நீர் கவனித்தீரா? அவர்கள் நம் நபியிடம் நாங்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதற்காக ஓர் அரசனை ஏற்படுத்துங்கள் என்று கூறிய பொழுது அவர், போர் செய்தல் உங்கள் மீது கடமையாக்கப்பட்டால், நீங்கள் போரிடாமல் இருந்து விடுவீர்களா? என்று கேட்டார். அதற்கவர்கள்: எங்கள் மக்களையும் எங்கள் வீடுகளையும் விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்ட பின் அல்லாஹ்வின் பாதையில் நாங்கள் போரிடாமல் இருக்க எங்களுக்கு என்ன வந்தது? எனக் கூறினார்கள். எனினும் போரிடுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட பொழுதோ அவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றெல்லோரும் புறமுதுகுக் காட்டித் திரும்பி விட்டனர். (இவ்வாறு) அக்கிரமம் செய்வோரை அல்லாஹ் நன்கறிவான்." (பகரா 2:246)**

பின்னர் தாலூத்தை அவர்களுக்கு மன்னராக ஆக்கினான்:

وَقالَ لَهُم نَبِيُّهُم إِنَّ اللَّهَ قَد بَعَثَ لَكُم طالوتَ مَلِكًا قالوا أَنّى يَكونُ لَهُ المُلكُ عَلَينا وَنَحنُ أَحَقُّ بِالمُلكِ مِنهُ وَلَم يُؤتَ سَعَةً مِنَ المالِ قالَ إِنَّ اللَّهَ اصطَفاهُ عَلَيكُم وَزادَهُ بَسطَةً فِي العِلمِ وَالجِسمِ وَاللَّهُ يُؤتي مُلكَهُ مَن يَشاءُ وَاللَّهُ واسِعٌ عَليمٌ - البقرة: ٢٤٧

**"அவர்களுடைய நபி அவர்களிடம் நிச்சயமாக அல்லாஹ் தாலூத்தை உங்களுக்கு அரசனாக அனுப்பியிருக்கிறான் என்று கூறினார். (அதற்கு) அவர்கள், எங்கள் மீது அவர் எப்படி அதிகாரம் செலுத்த முடியும்? அதிகாரம் செலுத்த அவரை விட நாங்கள் தாம் தகுதியுடையவர்கள். மேலும், அவருக்குத் திரண்ட செல்வமும் கொடுக்கப்படவில்லையே! என்று கூறினார்கள். அதற்கவர், நிச்சயமாக அல்லாஹ் உங்களை விட (மேலாக) அவரையே தேர்ந்தெடுத்திருக்கின்றான். இன்னும் அறிவாற்றலிலும் உடல் வலிமையிலும் அவருக்கு அதிகமாக வழங்கியுள்ளான். அல்லாஹ் தான் நாடியோருக்குத் தன் (அரச) அதிகாரத்தை வழங்குகிறான். இன்னும்**

**அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; (யாவற்றையும்) நன்கறிபவன் என்று கூறினார்.”** (பகரா 2:247)

எனக் குர்ஆன் கூறியது.

பனூ இஸ்ரவேலர்கள் மிக்க வரையறைகளுடன் கூடிய ஓர் ஒழுங்கில் தான் இறை ஹாகிமிய்யத்தை அறிந்து கொண்டனர் எனக் கூறலாம். அவர்களிடம் விண்ணகத்திலிருந்து இறக்கப்பட்ட ஒரு வேத நூல் இருந்தது. அல்லாஹ் தனது விரல்களால் எழுதினான் என அவர்கள் கூறிக் கொண்ட இறை வசனங்கள் எழுதப்பட்ட ஏடுகளும் அவர்களிடம் இருந்தன. அல்லாஹ்வுக்கும் அவர்களுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தவும் அவர்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ளவும் நபிமார்களும் தூதுவர்களும் அனுப்பப் பெற்றார்கள். ஆனாலும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அற்புதமான வெகுமதிகளைப் பொருட்படுத்த அவர்கள் தவறி விட்டார்கள். அத்துடன் தவ்ராத்தையும் ஷரீஆத்தையும் கடைப்பிடிக்கத் தவறியதன் காரணமாக அவர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளையும் அவர்கள் அனைவரும் இணைந்தே பெற்றுக் கொண்டனர். மன்னர் காலம் மற்றும் பிரதிநிதித்துவக் காலம் வந்தபோது குறிப்பாக தாவூத் அலைஹிஸ் ஸலாம், ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் ஆகியோரின் காலத்தின் போது அம்மக்களது நிலை ஓரளவு சீரடைந்தது. என்றாலும் அவர்களது மறைவின் பின்னர் அந்த சமூகத்தார் மேற்கொண்ட நெறிபிறழ்வுகளின் காரணமாக, அல்லாஹ் அவர்களை எச்சரித்திருந்த அழிவு அவர்களை விரைவாகவே வந்தடைந்தது. கி.மு 721இல், அசீரியர்கள் இவர்களது இரண்டு ராஜ்யங்களில் ஒன்றான இஸ்ராயீலின் தலைநகரை ஆக்கிரமித்துத் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டனர். கி.மு. 587இல் நபூகத் நஸ்ர், யஹூதா ராஜ்யத்தை ஆக்கிரமித்து, அங்கிருந்த வணக்கஸ்தலத்தைத் தகர்த்து மக்கள் அனைவரையும் அடிமைகளாக பபிலோனியாவுக்கு எடுத்துச் சென்றான்.

அடுத்து வந்த நூற்றாண்டுகளில் பனூ இஸ்ரவேலர்களது வாழ்வில் ஒரு புதிய கட்டம் ஆரம்பித்தது. அவர்கள் பூமியில் இருந்த அனைத்து சமூகங்களுடனும் கலக்கத் தொடங்கினார்கள். இணைவைப்பு, ஏகத்துவம் என எல்லா வகையான மதங்களுள்ளும் நுழைந்தார்கள். எல்லாக் கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறாகத் தமது தனித்தன்மைகளையும் சிறப்பம்சங்களையும் இழந்து திக்கற்றுத் திரிந்த அவர்கள், இப்போது வந்து தமக்கு வாக்களிக்கப்பட்ட பூமியைப் பற்றியும் இஸ்ரேல் ராஜ்யத்தை உருவாக்குவது பற்றியும் தமது வணக்கஸ்தலத்தை நிறுவுவது பற்றியும் பேசுகின்றார்கள். அது தமக்கு வாக்களிக்கப்பட்ட பூமி; அதன் வாரிசுகள் நாம் தான் எனக் கோரிக்கை விடுத்து வருகின்றார்கள்.

## 2. இஸ்ரவேலிய, கிறிஸ்தவ சிந்தனைகளில் இறை ஹாகிமிய்யத்

### அ இஸ்ரவேலிய சிந்தனையில் இறை ஹாகிமிய்யத்

பனூ இஸ்ரவேலர்களதான இறை ஹாகிமிய்யத் என்ற சிந்தனைக்குரிய அடிப்படையான கோட்பாடுகளை நாம் மேல்வருமாறு கருதலாம்.

முதலாவது: அல்லாஹ் பனூ இஸ்ரவேலர்களில் இருந்தே தனது சமூகத்தைத் தெரிவு செய்துள்ளான்; அந்த சமூகத்துக்குரிய நேரடியான ஆட்சியாளராகத் தானே இருப்பதற்கும் அவன் தீர்மானித்துள்ளான்; இந்த சமூகத்தில் இருந்து தான் அல்லாஹ்வுடன் நேரடி தொடர்பு கொள்ளக் கூடிய நபிமார்களும் தூதுவர்களும் வருவார்கள்; அவர்கள் அல்லாஹ்விடமிருந்து போதனைகளைப் பெற்று தமது சமூகத்துக்குப் போதிப்பார்கள்.

இந்தப் போதனைகள் தான் பழைய ஏற்பாட்டின் ஆரம்ப வேத நூல்களில் குறிப்பாக யாத்திராகமம், உபாகமம் ஆகிய இரண்டிலும் காணப்படுகின்றன. இவை இந்த சமூகத்திற்கான அல்லாஹ்வின் நேரடி வார்த்தைகளாகும். உபாகமத்தில் தவ்ராத்தின் சில உரைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் அல்லாஹு தஆலா இரண்டு ஏடுகளில், தனது விரல்களினால் தானே எழுதி தனது தூதுவரான மூஸாவிடம் ஒப்படைத்தான். தேர்ந்து கொள்ளப்பட்ட தனது சமூகம் அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்பது இறைவனின் நோக்கமாக இருந்தது.

மூஸா நபி கொண்டு வந்த சட்டம் தான் இறைவனின் சட்டம்; அவனது வார்த்தைகள். இதனை மாற்றவோ இதில் எதனையும் இணைக்கவோ அல்லது இல்லாமல் செய்யவோ, அல்லது விளக்கம் சொல்லவோ எவருக்கும் முடியாது. அல்லாஹ்விடமிருந்து தூது சுமந்து வந்த நபிமார்களாக இருந்தாலும் தூதர்களாக இருந்தாலும் கூட. அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் தவ்ராத்தின் எந்தவொரு விடயத்தையும் மாற்றவோ அதனோடு எதனையும் இணைக்கவோ அதிகாரம் படைத்தவர்களல்லர்.

இரண்டாவது: இந்த சமூகத்தின் மீதான அல்லாஹ்வின் ஹாகிமிய்யத் அல்லது அல்லாஹ் அவர்களைத் தெரிவு செய்தமையானது, பனூ இஸ்ரவேலர்களை அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமான சமூகமாக மாற்றுகிறது. அவர்கள் தான் அல்லாஹ்வின் பிள்ளைகள்; அல்லாஹ்வின் விருப்பத்துக்குரியவர்கள். இவர்களுக்குரிய இந்த அந்தஸ்த்து உலகில் வேறு எருக்கும் கிடையாது. இது அவர்களுக்கு 'அல்லாஹ்வின் சமூகம்' என்ற விஷேட தகைமையை வழங்குகின்றது; அவர்களது பூமி, 'புனித பூமி' என்ற அந்தஸ்த்தைப் பெற்றுக் கொள்கின்றது.

ஹாகிமிய்யத் பற்றிய இந்த விளக்கமானது, பனு இஸ்ரவேலர்கள் தமது வாழ்வின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்வதற்கு முன்னரான இந்த ஆரம்ப கட்டத்தில் மிகவும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. இதன் அடுத்தடுத்த படிகளாக அவர்களது வாழ்க்கை 'நீதிபதிகள்' என்ற கட்டத்திற்கும் பின்னர் 'பிரதிநிதிகள்' என்ற கட்டத்திற்கும் பின்னர் 'நபிமார்களான மன்னர்கள்' அல்லது ஸுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் போல 'மன்னர்களான பிரதிநிதிகள்' என்ற கட்டத்திற்கும் நகர்ந்து சென்றதைக் காணலாம். நாம் சுட்டிக் காட்டியது போல இந்த எண்ணக் கருவானது இஸ்ரவேலர்களுடைய வரலாற்றில் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது. அதாவது இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவானது யூத மதத்தினைப் பொறுத்தவரையில், பனூ இஸ்ரவேலர்கள் என்ற சமூகத்தை இறைவன் நேரடியாகக் கையாளுகின்ற ஒரு முறைமையாகவே கொள்ளப்பட்டிருக்கின்றது.

அவர்கள் விரும்பிய அனைத்தையும் அற்புதமான வடிவில் நேரடியாகவே அல்லாஹ் வழங்கினான். அவர்கள் பாவங்கள் செய்த வேளைகளில் அதற்கான தண்டனைகளையும் அவன் நேரடியாகவே வழங்கினான். அல்லாஹ்வுக்கும் அவன் தேர்ந்து கொண்ட சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு, ஒரு நேரடி ஏற்பாடாக இருந்திருக்கின்றது. இதனால் தான் தவ்ராத்தை 'ஏற்பாடு' அல்லது 'உடன்பாடு' என அழைக்கின்றார்கள். பழைய ஏற்பாடோ, புதிய ஏற்பாடோ, அவை அல்லாஹ்வுக்கும் அவர்களுக்கும் இடையிலான உடன்பாடாகும்.

இந்த விடயங்களைத் தொடர்ந்து அவதானித்து வரும் போது மற்றுமோர் உண்மையும் தெரிய வருகின்றது. அதாவது எல்லாக் கட்டங்களிலும் யூதர்கள், அல்லாஹு தஆலா தமக்கு சட்டங்களை இலகுபடுத்தித் தர வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனையுடன் இருந்திருக்கின்றார்கள் என்பது. அவர்கள் கட்டம் கட்டமாக நேரடி இறை ஹாகிமிய்யத்தில் இருந்து நபிமார்களின் பிரதிநிதித்துவ ஹாகிமிய்யத்துக்கும் அடுத்து நபிமார்களின் மன்னர் ஹாகிமிய்யத்துக்கும் அடுத்து சாதாரண மன்னர் ஹாகிமிய்யத்துக்கும் மாறிச் சென்றதன் பின்னரும் தமது சட்டங்கள் இலகுபடுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்களது நெறிபிறழ்வுகள் அனைத்தையும் அல்லாஹ் மென்மேலும் இறுக்கமான சட்டங்களை வழங்குவதன் மூலமே எதிர் கொண்டிருக்கின்றான். அதனால் தமக்கான சட்டங்களை இலகுபடுத்தி, தண்டனைகளைத் தவிர்த்து, கடமைகளை நியமம் செய்யும் முறையையே மாற்றியமைக்கும்படி அம்மக்கள் வேண்டினார்கள். இது போன்றதொரு சமூகத்தைக் கட்டுப்படுத்த அத்தகு கடுமையான சட்டங்களே அவசியம் என்ற நிலையே காணப்பட்டது.

பனூ இஸ்ரவேலர்களால் நிகழ்ந்த கூட்டு இறை மறுப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான்:

وَاختارَ موسى قَومَهُ سَبعينَ رَجُلًا لِميقاتِنا فَلَمّا أَخَذَتهُمُ الرَّجفَةُ قالَ رَبِّ لَو شِئتَ أَهلَكتَهُم مِن قَبلُ وَإِيّايَ أَتُهلِكُنا بِما فَعَلَ السُّفَهاءُ مِنّا إِن هِيَ إِلّا فِتنَتُكَ تُضِلُّ بِها مَن تَشاءُ وَتَهدي مَن تَشاءُ أَنتَ وَلِيُّنا فَاغفِر لَنا وَارحَمنا وَأَنتَ خَيرُ الغافِرينَ وَاكتُب لَنا في هذِهِ الدُّنيا حَسَنَةً وَفِي الآخِرَةِ إِنّا هُدنا إِلَيكَ قالَ عَذابي أُصيبُ بِهِ مَن أَشاءُ وَرَحمَتي وَسِعَت كُلَّ شَيءٍ فَسَأَكتُبُها لِلَّذينَ يَتَّقونَ وَيُؤتونَ الزَّكاةَ وَالَّذينَ هُم بِآياتِنا يُؤمِنونَ الَّذينَ يَتَّبِعونَ الرَّسولَ النَّبِيَّ الأُمِّيَّ الَّذي يَجِدونَهُ مَكتوبًا عِندَهُم فِي التَّوراةِ وَالإِنجيلِ يَأمُرُهُم بِالمَعروفِ وَيَنهاهُم عَنِ المُنكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّباتِ وَيُحَرِّمُ عَلَيهِمُ الخَبائِثَ وَيَضَعُ عَنهُم إِصرَهُم وَالأَغلالَ الَّتي كانَت عَلَيهِم فَالَّذينَ آمَنوا بِهِ وَعَزَّروهُ وَنَصَروهُ وَاتَّبَعُوا النّورَ الَّذي أُنزِلَ مَعَهُ أُولئِكَ هُمُ المُفلِحونَ -الأعراف: ١٥٥ - ١٥٧-

“இன்னும் மூஸா நாம் குறிப்பிட்ட நேரத்தில் (தூர் மலையில்) நம்மைச் சந்திப்பதற்காக, தம் சமூகத்தாரிலிருந்து எழுபது ஆண்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களைப் பூகம்பம் பற்றிக் கொண்ட போது, அவர், என் இறைவனே! நீ கருதியிருந்தால், இதற்கு முன்னரே அவர்களையும் என்னையும் நீ அழித்திருக்கலாமே! எங்களிலுள்ள அறிவிலிகள் செய்த (குற்றத்)திற்காக, எங்கள் யாவரையும் நீ அழித்துவிடுகிறாயா? இது உன்னுடைய சோதனையேயன்றி வேறில்லை. இதைக் கொண்டு நீ நாடியவர்களை வழி தவறவிடுகிறாய். இன்னும் நீ நாடியவர்களை நேர்வழியில் நடத்துகிறாய். நீ தான் எங்களுடைய பாதுகாவலன். ஆகவே எங்களுக்கு மன்னிப்பு அளிப்பாயாக! எங்களுக்கு கிருபை செய்வாயாக. மன்னிப்பவர்களிலெல்லாம் நீ தான் மிக்க மேன்மையானவன் என்று பிரார்த்தித்தார். இன்னும் இவ்வுலகத்திலும் மறுமையிலும் எங்களுக்கு (அழகிய) நன்மைகளையே விதித்தருள்வாயாக! நிச்சயமாக நாங்கள் உன்னையே முன்னோக்குகிறோம் (என்றும் பிரார்த்தித்தார்). அதற்கு இறைவன், என்னுடைய வேதனையைக் கொண்டு நான் நாடியவரை பிடிப்பேன். ஆனால் என்னுடைய அருளானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கிறது. எனினும் அதனை பயபக்தியுடன் (பேணி) நடப்போருக்கும் (முறையாக) ஸகாத்து கொடுத்து வருவோருக்கும் நம்முடைய வசனங்களை நம்புகிறவர்களுக்கும் நான் விதித்தருள் செய்வேன் என்று கூறினான். எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். அவர், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார்; பாவமான காரியங்களிலிருந்து

**விலக்குவார்; தூய்மையான ஆதாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். அவர்களுடைய பளுவான சுமைகளையும் அவர்கள் மீது இருந்த விலங்குகளையும் (கடினமான கட்டளைகளையும்) இறக்கி விடுவார்; எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தாம் வெற்றி பெறுவார்கள்." (அஃராப் 7:155–157)**

தொடர்ந்து வரும் வசனங்களின் மூலம் அந்த சமூகத்தார், சட்டங்கள் தம்மால் தாங்கிக் கொள்ளவும் பின்பற்றவும் இலகுவாக அமையும் வண்ணம் இலேசாக்கித் தரப்பட வேண்டும் என்பதை எந்தளவு எதிர்பார்த்தார்கள் எனக் காண முடிகின்றது. என்றாலும் இந்த இலகு தன்மை இறுதி சர்வதேச தூதின் பண்பாக இருக்க வேண்டும் என்பது தான் அல்லாஹ்வின் ஏற்பாடாக இருந்திருக்கின்றது. தமக்கு இறக்கப்பட்ட ஷரீஆத்தை முறையாகப் பின்பற்றாமல், சட்ட மீறல்களையும் நெறிபிறழ்வுகளையும் கொண்ட ஒரு சமூகத்துக்கு இலகு தன்மை என்ற பண்பு எவ்வாறு வழங்கப்படலாம்? அவர்கள் பொருட்படுத்தாது விட்ட இந்த ஷரீஆத் தான் சிதறிப் போயிருந்த அவர்களை ஒன்று சேர்த்து, அவர்களை அடிமைத்தளையில் இருந்து மீட்டு எடுத்தது. அந்த சமூகமோ அல்லாஹ்வின் இந்த அருள்கொடைகளைக் கண்டு கொள்ளவில்லை; அதற்கான தமது கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை.

நாம் மேற்கண்டவற்றிலிருந்து யூத சிந்தனையில் இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கரு விளைத்திருந்த தாக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். இந்த சிந்தனையே அவர்களது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தடம் பதித்திருந்தது. அவர்களது மொத்தப் பார்வையிலும் மனிதன் ஷரீஆத், பிரபஞ்சம், வாழ்வு, வழிபாடு, இறைத்துவம், பொது ஒழுங்கு என அனைத்துத் துறையிலும் இறை ஹாகிமிய்யத் குறித்து அவர்கள் கொண்டிருந்த எண்ணப் பதிவுகளே ஆதிக்கம் செலுத்தின.

### ஆ கிறிஸ்தவர்களிடத்தில் இறை ஹாகிமிய்யத்

பின்னர் யூதர்களால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர் செய்வதற்காக, வேறு ஒரு தூதுவரும் வேறு ஒரு தூதுத்துவமும் வர வேண்டிய நிலை ஏற்பட்டது. யூத சிந்தனைப் பாங்கின் காரணமாக உறவுகள் அனைத்தும் எல்லா எண்ணக்கருக்களும் குழப்ப நிலைக்கு உட்பட்டிருந்தன. அல்லாஹ்வுடனான உறவு, பிரபஞ்சத்துடனான உறவு, நபியவர்களுடனான உறவு, தன்னுடனான உறவு, அயலவர்களுடனான உறவு என அனைத்து உறவுகளும் குழம்பியிருந்தன. இத்தகு சூழலில் தான் அல்லாஹு தஆலா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அனுப்பி வைக்கின்றான். அன்னவரே கூறியது போல, 'பனூ இஸ்ரவேலர்களில் வழி தவறிய

ஆட்டு மந்தைகளை நல்வழிப்படுத்துவதற்காக’. தனக்கு முன்னால் வந்த வேதத்தை உண்மைப்படுத்தி அதில் உள்ள தவறுகளை சீர் செய்வதே அவரது பணியாக இருந்தது. மர்யமின் மகன் தவ்ராத்தை உண்மைப்படுத்தவும் பனூ இஸ்ரவேலர்களுக்கு ஹராமாக்கப்பட்டிருந்த சில விடயங்களை ஹலாலாக்கவும் முழு மனித சமூகத்திற்கும் இலகு மார்க்கத்தைச் சுமந்து வரவிருக்கும் இறுதி நபியைப் பற்றிய சுபசோபன செய்தியைச் சொல்வதற்குமே அனுப்பப்பட்டார். ஈஸா அலைஹிஸ்ஸலாம் தவ்ராத்தில் வந்துள்ள விடயங்களைத் தமது வார்த்தைகள் மூலமே ஏற்றுக் கொண்டுள்ளார்: ‘சட்டத்தையோ, நபிமார்களையோ ரத்துச் செய்வதற்காக நான் வரவில்லை; அவற்றைப் பூரணப்படுத்தவே வந்துள்ளேன். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கின்றேன். இந்த வானங்களும் பூமியும் இருக்கும் காலம் எல்லாம் இந்த சட்டத்தில் ஓர் எழுத்தோ, புள்ளியோ மாற்றமடையாது; அது முழுமையடைவது தான் நடைபெறும்.’

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது கூற்றுகள், அன்னவர் தவ்ராத்தின் மீதான மக்கள் கருத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே வந்தனர் என உறுதிப்படுத்துகின்றன. மக்கள் தவ்ராத்தை எவ்வாறு உண்மையாகவும் சரியாகவும் செயற்படுத்துவது என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவே அவர் அனுப்பப்பட்டார் என்பதனை இன்ஜீலின் பல இடங்களில் கண்டு கொள்ளலாம். தமது போதனைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் பல தடைகளை எதிர் கொண்ட போதும் அன்னவரின் முயற்சி அதனை நோக்கியே இருந்தது. தவ்ராத்தில் ஆன்மாவை விட்டு விட்டு அதன் வசனங்களை மாத்திரமே மக்கள் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை அவர்களுக்கு உணர்த்தி, அவ்விரண்டையும் ஒன்றிணைத்து அவர்கள் செயல்பட வேண்டும் என வழிகாட்டிச் செல்வதே அன்னவரது நோக்கமாக அமைந்தது. இன்ஜீலின் மத்தா, லூகா என்பனவற்றில் ஈஸா நபிகளார் கூறுவார்: ‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் எனப் பழி வாங்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவதாக நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கின்றேன். தீமையைத் தீமையால் எதிர்க்காதீர்கள். மாறாக, உனது வலது கன்னத்தில் ஒருவர் அறைந்தால் அவருக்கு மறு கன்னத்தையும் காட்டு’.

தவ்ராத்தில் இந்த சட்டம் வலியுறுத்தப்பட்டாலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் தமது சமூகத்தில் தண்டனை நீக்கத்தைச் செய்ய முயன்றிருக்கின்றார் என விளக்கம் பெற வாய்ப்பிருக்கிறது. ஆனால் உண்மை அவ்வாறல்ல; சூழ்நிலையை மாற்றியமைக்கவே அவர் முயன்றிருக்கிறார். அவர் தனது சமூகத்தைப் பார்த்து, ‘ஷரீஆத்தின் வெளி வார்த்தைகளை மாத்திரம் பிடித்துக் கொண்டிருக்காதீர்கள்; அதன் ஆன்மாவை விளங்கிக் கொள்ள முற்படுங்கள். அதனை இவ்வாறு பகுதி பகுதியாக விளங்காதீர்கள்;

முழுமையான வடிவில் அதன் இலக்குகளோடு சேர்த்து விளங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்வதற்கு எடுத்த முயற்சியாகவே அன்னாரின் வார்த்தைகள் புரியப்பட வேண்டும்.

அவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் நாட்டின் பொது ஒழுங்கையும் ஷரீஆத் அதிகாரத்தையும் வேறுபடுத்திக் காட்ட நினைத்தார். அது போலவே தனிமனித உரிமைகள், தனிப்பட்ட விவகாரங்கள் என்பன சகோதரத்துவம், விட்டுக் கொடுப்பு ஆகிய பெறுமானங்களின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த முனைந்துள்ளார். அவரது வார்த்தைகள் சூழமைவுடன் சேர்த்துப் புரியப்பட வேண்டும். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அனுப்பப் பெற்ற சூழல், அவ்வேளையின் ரோம சாம்ராச்சியத்து அதிகாரமும் சட்டங்களும் பனூ இஸ்ரவேலர்கள் சிதறிக் காணப்பட்டமை, அவர்கள் உலக முழுவதும் அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் அவர்களது ஷரீஆத் சட்டங்கள் செயலிழந்து போயிருந்தமை முதலியவற்றை விளங்கிக் கொண்டால், தவறாக புரிந்த கொள்ளப்பட்ட ஈஸா நபியின் எத்தனையோ வார்த்தைகளுக்கான சரியான கருத்துகளைத் தேர்ந்து கொள்ளலாம். ஈஸா அலைஹிஸ்ஸலாம் சட்டங்களுடன் சம்பந்தப்பட்ட எதனையும் கொண்டு வரவில்லை; நம்பிக்கையுடன் தொடர்பான சில விடயங்களையும் ஒழுக்கப் பண்பாடுகளைச் சீர் செய்வதற்கான சில வழிகாட்டல்களையுமே கொண்டு வந்தார் போன்ற தவறான அபிப்பிராயங்களை நாம் தெளிந்து கொள்ளலாம்.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. ஈஸா அலைஹிஸ்ஸலாம் தவ்ராத்தின் அதிகாரத்தை வலியுறுத்தியதுடன் அதன் போதனைகளில் எந்த மாற்றமும் செய்ய முடியாது என்பதையும் உறுதி செய்திருந்தார். மேலும் தவ்ராத்தைச் சரியான வடிவில் செயற்படுத்துவதற்கான ஒரு பார்வையையும் முன்வைத்த அன்னார், ரோம ஆட்சியாளர்களின் அதிகாரத்தை ஏற்று அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட யூத மதத் தலைவர்களின் மார்க்கத் திரிபு முயற்சிகளுக்குத் தடையாகவும் அமைந்தார். ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஷரீஆவை வளைத்தமைக்க முயற்சித்து வந்தனர் யூத மதத்தலைவர்கள். ஈஸா நபியோ, தவ்ராத்தின் வசனங்களுக்குச் சரியான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வாயில்களைத் திறந்து விட்டனர்.

யூத மதத் தலைவர்கள், ஈஸா நபியவர்கள் குறித்து, ரோம ஆட்சியாளர்களிடம் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். மக்களை அவர் ஆட்சியாளர்க்கு எதிராகத் தூண்டி விடுவதாகவும் மக்கள் கைஸருக்கு வரி செலுத்தக் கூடாது எனக் கூறுவதாகவும் தன்னையே மன்னர் என அவர் கூறிக் கொள்வதாகவும் குற்றங்கள் சுமத்தினர்.

பிளாடிஸ் மன்னர், 'நீங்கள் யூதர்களின் மன்னரா?' என ஈஸாவைக் கேட்டார். 'நீங்கள் தான் அவ்வாறு சொல்கிறீர்கள்' என்றார் ஈஸா. இதற்குச் சற்று வித்தியாசமாக லூகாவின் அறிவிப்பில் வருகின்றது: 'பின்னர் ரோம ஆட்சியாளர் யூத மதத்தலைவர்களிடம் நேரடியாகவே, 'இவரிடம் எந்தக் குற்றத்தையும் நான் காணவில்லையே' என்று சொல்ல, அவர்கள் தொடர்ந்தும் பிடிவாதமாக 'இல்லை, அவர் ஜலீலில் யூத மக்களுக்குப் போதனை நடாத்தி மக்களைத் தூண்டிக் கொண்டிருக்கின்றார்; இப்போது இங்கேயும் ஆரம்பித்து விட்டார்' என்றார்கள்.(3)

பிளாடிஸ் மன்னன் ஈஸாவில் எந்தக் குற்றத்தையும் காணாததால் அவரை ஜலீல் பிரதேச மன்னரிடம் அனுப்பி வைத்தார். அவரை விசாரணை செய்யும் வேலையை ஜலீல் மன்னரே செய்யட்டும்; தான் அதில் தலையிட வேண்டியதில்லை எனக் கருதினார் பிளாடிஸ். ரோம் ஆட்சியாளருக்கும் ஈஸா நபிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலின் போது அன்னார் அளித்த பதில்களில் ஒன்றிலேயே இந்த ஹாகிமிய்யத் சிந்தனை வெளிப்படுகின்றது. 'உங்களை விடுதலை செய்யவும்

*(3) இன்ஜீல் லூகா: இருபத்தி மூன்றாவது அத்தியாயம்... 1. மக்களனைவரும் அவரை பிளாடிஸிடம் எடுத்து வந்தனர். 2. இவர் மக்களை வழிகெடுக்கிறார் என்றும் கைஸருக்கு வரி வழங்குவதைத் தடுக்கிறார் என்றும் இவர் மஸீஹ் மன்னர் என்கிறார் என்றும் அவரைப் பற்றி மன்னரிடம் முறைப்பாடுகளை முன்வைத்தனர். 3. பிளாடிஸ் அவரிடம் நீங்கள் யூதர்களின் மன்னரா? என்று வினவிய பொழுது, அவர் அவ்வாறு நீங்கள் தான் சொல்கிறீர்கள் என்று பதிலளித்தார். 4. பிளாடிஸ் மதத் தலைவர்களிடமும் மக்களிடமும் இந்த மனிதனிடம் நான் எந்தக் குறையையும் காணவில்லை என்றார். 5. இவர் மக்களைத் தூண்டிவிடுகிறார். ஜலீல் முதல் இங்கு வரை எல்லா யூத மக்களுக்கும் கற்பித்து வருகிறார் என்று தொடர்ந்தும் கடுமையாக முறைப்பாடுகளை முன்வைத்தனர். 6. பிளாடிஸ் ஜலீல் என்ற இடத்தின் பெயரைக் கேட்டவுடன் இவர் ஜலீல்வாசியா என்று விசாரித்தார். 7. அவர் ஏரோது மன்னனின் ராஜ்யத்தைச் சேர்ந்தவர் என்று அறிந்தவுடன் அவரை ஏரோதிடம் அனுப்பி வைத்தார். அந்நாட்களில் அவரும் ஏரோஸலமிலேயே இருந்தார். 8. ஏரோது மன்னர் ஈஸாவைக் கண்டவுடன் சந்தோஷப்பட்டார். அவர் நீண்ட நாட்களாக அவரைக் காண வேண்டும் என்று விரும்பியிருந்தார். அவரிடம் இருந்து பல விடயங்களைக் கேட்கவும் அவர் காட்டும் அற்புதத்தைப் பார்க்கவும் விருப்பப்பட்டார். 9. அவரிடம் பல விடயங்களைக் கேட்டும் அவர் எதற்கும் பதில் அளிக்கவில்லை. 10. மதத் தலைவர்கள் அவரைப் பற்றி கடுமையாகக் குற்றச் சாட்டுகளை முன்வைத்தனர். 11. ஏரோது தனது படையினரைப் பயன்படுத்தி அவரை இழிவுபடுத்தி, பரிகாசம் செய்தார். மின்னக் கூடிய ஓர் ஆடையை அவருக்கு அணிவித்து மீண்டும் பிளாடிஸிடம் அனுப்பி வைத்தார். 12. ஏரோதும் பிளாடிஸும் அன்று முதல் நண்பர்களாக மாறினர். இதற்கு முன்னர் இருவரும் எதிரிகளாக இருந்தனர்.*

சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா?' என ரோம் ஆட்சியாளர் வினவ, 'மேலே இருந்து உங்களுக்கு அதிகாரம் வழங்கப்படா விட்டால் உங்களுக்கு என்மீது எந்த அதிகாரமும் இல்லை' எனப் பதிலளித்தார் ஈஸா. அன்னவரின் இந்த வார்த்தைகள் ஹாகிமிய்யத் அல்லாஹ்வுக்குரியது; அதனை அவன், தான் விரும்புகின்றவர்களுக்குப் பொறுப்பளிக்கின்றான் அல்லது அவர்களைத் தனது பிரதிநிதியாக்குகின்றான் என்ற தவ்ராத்தின் கோட்பாட்டை உறுதிப்படுத்துகின்றன. புனித போல் அவர்களும் ரோம வாசிகளுக்கான தனது தூதில் *(1∴13)* இதனை உறுதி செய்கின்றார்: 'உயர்ந்த ஆட்சியாளர்க்கு ஒவ்வொருவரும் கட்டுப்படட்டும்; ஏனெனில் அதிகாரம் அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே வருகிறது. தற்போது உள்ள ஆட்சியாளர்கள் அல்லாஹ்வின் ஏற்பாட்டில் வந்தவர்கள். ஆட்சியாளரை எதிர்ப்பவர் அல்லாஹ்வின் ஏற்பாட்டை எதிர்ப்பவர் ஆவார். எதிர்ப்பவர்கள் தமக்கான தீர்ப்பைத் தாமே பெற்றுக் கொள்வார்கள்.'

கிறிஸ்தவர்களிடத்திலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடத்திலும் இறை ஹாகிமிய்யத் என்னும் எண்ணக்கரு பற்றி நாம் கூற முடியுமானது இது தான். அன்னார் இது குறித்துத் தவ்ராத்தில் வந்துள்ள கருத்தையே மீளவும் வலியுறுத்தியுள்ளார். தமது காலத்திய ரோமர்களின் அதிகாரத்துக்குப் பிரதியாக தவ்ராத்தின் அதிகாரத்தை முன்னிறுத்தியுள்ளார். ரோமர்கள் தமக்குரிய சட்டங்களைத் தாமே உருவாக்கி வந்தார்கள். அது அல்லாது தவ்ராத்தாக இருந்தாலும் வேறு எந்த சட்டமாக இருநதாலும் அவற்றைச் செயற்படுத்தவோ, ரோம சட்டத்திற்கும் சவாலாக இருக்கவோ அனுமதிப்பவர்களல்லர் அவர்கள். இத்தகு பின்னணியிலேயே ஈஸா அலைஹிஸ்ஸலாம், ஷரீஆவுக்குரிய முக்கியத்துவத்தை அதன் அடிப்படைகளுடனும் மகாஸிதுகளுடனும் மீளக் கொண்டு வர முற்பட்டார். ரோமர்களின் எதிர்ப்புக்கும் அழுத்தத்திற்கும் மத்தியிலேயே இதனைச் செய்ய வேண்டியிருந்தது. சுதந்திரமாகச் செயலாற்றும் சூழல் அவருக்கு இருக்கவில்லை. பின்னர் அவர் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அல்லாஹ் அவரைக் காப்பாற்றியிரா விட்டால் அவர் சிலுவையில் அறையப் பெற்றிருப்பார். ஆகவே தான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முனைவுகளை அவற்றின் பின்புலங்களோடு வைத்து நாம் காண வேண்டும். அப்போது தான் இந்த எண்ணக்கரு உருப்பெறும் அடிப்படைகளையும் விதிகளையும் நாம் புரிந்து கொள்ளலாகும்.

பனூ இஸ்ரவேலர்களிடம் இறை ஹாகிமிய்யத் எனும் இந்தக் கருத்தை நாம் நிறைவு செய்யும் முன்னர், இப்னு மைமூன், தவ்ராத்துக்கு விளக்கம் சொல்லும் போது முன்வைத்த சில கருத்துகளை இங்கு

பரிமாறிக் கொள்வது பயனளிக்கும் என நினைக்கின்றோம். இது நாம் கூறியனவற்றை இன்னும் தெளிவுபடுத்துவதாய் அமையும். இப்னு மைமூன் கூறுகின்றார்: ‘இந்த விடயத்தில் நான் எப்போதும் கூறும் ஒரு கருத்தை முன்வைக்கிறேன். அதாவது மூஸா அலைஹிஸ்ஸலாம் தவிர்ந்த ஏனைய நபிமார்களுக்கு ஒரு மலக்கின் ஊடாகத் தான் வஹி கிடைக்கப் பெற்றது. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது நுபுவ்வத் அவருக்கு முன்னர் வந்த அனைவரதையும் விட வித்தியாசமானது. அல்லாஹ் இப்றாஹீமுக்கு முன்னால் தோன்றியது போல், மூஸாவுக்கு முன்னாலும் தோன்றினான். மூஸா தூர் ஸீனா மலை மீது நின்றமையானது, இறையோன் அன்னாரோடு மாத்திரம் தொடர்புபடுவதற்காக அல்ல. முழு பனூ இஸ்ரவேலர்களுடனும் தொடர்புபடுவதற்கேயாகும். என்றாலும் மூஸாவை மட்டும் நோக்கியே பேசப்பட்டது. அதனால் தான் பத்துக் கட்டளைகளின் வாசகங்கள் எல்லாம் ஒற்றைப்படையில் ஒருவரை ஒருவர் நோக்கிப் பேசும் வடிவில் அமைந்துள்ளன. மூஸா மலையின் கீழ்ப் பகுதிக்கு வந்து தான் கேட்ட தவ்ராத் வசனங்களை மக்களுக்குக் கூறுவார். இது பற்றி மூஸா அலைஹிஸ்ஸலாம் கூறும் போது, ‘நான் இந்த சமயத்தில் இரட்சகனின் வார்த்தைகளை உங்களுக்கு எத்திவைப்பதற்காக உங்களுக்கும் இரட்சகனுக்கும் மத்தியில் நின்று கொண்டிருக்கின்றேன்’ என்றார். மக்கள் கேட்க வேண்டும் என்பதற்காக மூஸா பேசும் பொழுது அல்லாஹ்வும் சத்தமாகவே பதில் சொல்கின்றான். இப்னு மைமூன் சொல்வது போல் மூஸாவை நோக்கி மாத்திரம் தான் பேசப்பட்டது; மக்கள் சத்தத்தை மாத்திரமே கேட்டனர் எனத் தெரிகின்றது.

இப்னு மைமூன் இங்கு அல்லாஹ்வுக்கும் அவனது பனூ இஸ்ரவேல் சமூகத்துக்கும் அவர்கள் வசிக்கும் புனித பூமிக்கும் இடையிலான தொடர்பை விளக்க முனைகின்றார். இவரதும் பனூ இஸ்ரவேல் அறிஞர்களதும் பார்வையில் இந்தப் புனித பூமி அல்லாஹ்வின் ராஜ்யமாகும். இங்கு ஒரு பூமியுள்ளது; மக்கள் இருக்கின்றனர்; ஓர் ஆட்சியாளன் இருக்கின்றான். ஆட்சியாளன் இங்கு அல்லாஹ்வாகும். மூஸாவின் காலத்தில் நபிமார்களது பணி எத்திவைப்பதுடன் மட்டுப்பட்டிருந்தது. முழுமையான அதிகாரம் அல்லாஹ்விடம் மாத்திரமே இருந்தது. அல்லாஹ்வின் தீர்மானங்கள் அடங்கிய குரலை மக்கள் கேட்கச் செய்யும் வேலையை நபிமார்கள் செய்தனர். இந்த நிலை தான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் காணப்பட்டது.

தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் ஒரு பிரதிநிதியாகவும் நபியாகவும் இருந்தார். அல்-குர்ஆன் இதனைக் கூறும் போது,

يا داوودُ إِنّا جَعَلناكَ خَليفَةً فِي الأَرضِ فَاحكُم بَينَ النّاسِ بِالحَقِّ وَلا تَتَّبِعِ الهَوى - ص: ٢٦

**"(நாம் அவரிடம் கூறினோம்:) தாவூதே! நிச்சமயாக நாம் உம்மை பூமியில் பின்தோன்றலாக ஆக்கினோம். ஆகவே மனிதர்களிடையே சத்தியத்தைக் கொண்டு (நீதமாக)த் தீர்ப்புச் செய்யும்; அன்றியும், மனோ இச்சையைப் பின்பற்றாதீர்..." (ஸாத் 38:26)**

எனக் குறிப்பிட்டது. இங்கு ஹாகிமிய்யத் என்பது பிரதிநிதித்துவ முறையில் அமுலாகிறது. நபி தான் பிரதிநிதியாக இருக்கிறார். அவர் தனது ஆட்சியில் தவறு விட்டால் உடன் திருத்தப்படுவார். வணக்கஸ்தலத்தின் சுவர் ஏறி, இருவர் பிரச்சினைக்குள்ளாகி தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் வந்தமையை நாம் காணலாம். குர்ஆனில் போலவே தவ்ராத்திலும் இது குறிக்கப்பட்டுள்ளது. மேலும்,

فَفَهَّمناها سُلَيمانَ - الأنبياء: ٧٩

**"அப்போது நாம் ஸுலைமானுக்கு அதை விளங்க வைத்தோம்..." (அன்பியா 21:79)**

எனக் கூறப்பட்டது கொண்டு, அல்லாஹ் தனது நபிமார்களை நேரடியாகவே வழிநடாத்துகின்றான் என்ற கருத்தை நாம் புரிந்து கொள்ளலாம். பின்னர் பனூ இஸ்ரவேலர்கள் நபிமார்களுக்கு இருந்த ஆட்சியைப் போலும் மக்களுக்கு இருந்த ஆட்சியைப் போலும் தமக்கும் வேண்டும் எனக் கேட்டார்கள். இது ஆரம்பத்தில் மக்கள் சிலைகளை வணங்குவதைப் பார்த்து,

اجعَل لَنا إِلٰهًا كَما لَهُم آلِهَةٌ - الأعراف: ١٣٨

**"...அவர்களிடமிருக்கும் கடவுள்களைப் போல் நமக்கும் நீங்கள் ஒரு கடவுளை ஆக்கித் தருவீர்களாக!..." (அஃராப் 7:138)**

எனக் கோரியதை நினைவுறுத்துகின்றது. இவற்றால் பனூ இஸ்ரவேலர் சமூகம் எந்தளவு பிறரைப் பிரதி பண்ணுவதிலும் தக்லீத் செய்வதிலும் விருப்புக் கொண்டிருந்தனர் எனக் கண்டு கொள்ளலாம். அவர்கள் ஆட்சியதிகாரத்தைக் கேட்டமையும் கூட, சத்தியம், அசத்தியம் என்ற வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாது பிறரைப் பிரதி பண்ணுவதன் ஒரு வெளிப்பாடாகவே அமைந்தது.

### இ இறை ஹாகிமிய்யத்தும் இறுதித் தூதும்

இறுதித் தூதில் அவதானிக்க முடியுமான முக்கிய அம்சம் மனிதனை

நோக்கிய அதன் சாதகமான பார்வையாகும். ஆதமுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் அமானிதத்தைப் பாதுகாக்கவும் பொறுப்பைச் சுமக்கவும் மனிதன் தகைமை பெற்றவன் என்பதை இறுதித் தூது உறுதிப்படுத்துகின்றது. அது போலவே, இந்தப் பிரபஞ்சத்தில் மனிதனின் முதன்மையான பணியான, பிரதிநிதித்துவ அமானிதத்துக்கும் பூமியை அபிவிருத்தி செய்வதற்கும் அவன் தகுதி பெறுகின்றான். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறித்துப் பேசும் போது அல்லாஹ், தமக்கு முன்னர் இறக்கப்பட்ட அனைத்துத் தூதுகளையும் உள்ளடக்கி அவற்றை உண்மைப்படுத்தும் தூதைப் பெற்றவர் அவர் எனக் கூறுகின்றான்; அந்தத் தூதுகள் தொடர்பில் முன்வைக்கப் படும் குற்றச் சாட்டுகள், திரிபுகள், பிழையான விளக்கங்கள் அனைத்தையும் மறுத்துரைப்பவர் என்றும் காட்டித் தருகின்றான்.

இனி ஆட்சியதிகாரம், ஹாகிமிய்யத் என்பன தொடர்பாக வந்துள்ள சில குர்ஆன் வசனங்களைப் பார்ப்போம்:

إِنِ الحُكمُ إِلّا لِلَّهِ يَقُصُّ الحَقَّ وَهُوَ خَيرُ الفاصِلينَ - الأنعام: ٥٧

**“...அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்விடமேயன்றி வேறில்லை; சத்தியத்தையே அவன் கூறுகின்றான். தீர்ப்பு வழங்குவோரில் அவனே மிகவும் மேலானவனாக இருக்கின்றான்.” (அன்ஆம் 6:57)**

وَمَن لَم يَحكُم بِما أَنزَلَ اللَّهُ فَأُولئِكَ هُمُ الفاسِقونَ - المائده: ٤٧

**“...அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு யார் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் தான் பாவிகளாவார்கள்.” (மாஇதா 5:47)**

وَمَا اختَلَفتُم فيهِ مِن شَيءٍ فَحُكمُهُ إِلَى اللَّهِ - الشورى: ١٠

**“நீங்கள் எந்த விஷயத்தில் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறீர்களோ, அதன் தீர்ப்பு அல்லாஹ்விடமே இருக்கிறது...” (ஷூரா 42:10)**

وَمَن لَم يَحكُم بِما أَنزَلَ اللَّهُ فَأُولئِكَ هُمُ الكافِرونَ - المائده: ٤٤

**“...எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக காபிர்கள் தாம்.” (மாஇதா 5:44)**

فَلا وَرَبِّكَ لا يُؤمِنونَ حَتّى يُحَكِّموكَ فيما شَجَرَ بَينَهُم ثُمَّ لا يَجِدوا في أَنفُسِهِم حَرَجًا مِمّا قَضَيتَ وَيُسَلِّموا تَسليمًا - النساء: ٦٥

**“உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த**

**சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றிய எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆக மாட்டார்கள்." (நிஸா 4:65)**

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ أُوتوا نَصِيبًا مِنَ الكِتابِ - آل عمران: ٢٣

**"வேதத்திலும் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்களை நீர் கவனிக்கவில்லையா? ..." (ஆல இம்ரான் 3:23)**

இறுதி நபியவர்களது தூதுத்துவத்தின் மூலக்கரு, அன்னவரது அடிப்படைப் பணி என்பன இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மேற்காணும் வார்த்தைகளில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன:

رَبَّنا وَابعَث فيهِم رَسولًا مِنهُم يَتلو عَلَيهِم آياتِكَ وَيُعَلِّمُهُمُ الكِتابَ وَالحِكمَةَ وَيُزَكّيهِم إِنَّكَ أَنتَ العَزيزُ الحَكيمُ - البقرة: ١٢٩

**"எங்கள் இறைவனே! அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து; அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிடமிருந்தே எழுந்திடச் செய்வாயாக. நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனுமாகவும் பெரும் ஞானமுடையோனுமாகவும் இருக்கின்றாய்." (பகரா 2:129)**

பின்னர் இந்த விடயம் மானுடர்க்கு வழங்கப்பட்டதோர் அருள் என அல்லாஹ் கூறுகின்றான்:

لَقَد مَنَّ اللَّهُ عَلَى المُؤمِنينَ إِذ بَعَثَ فيهِم رَسولًا مِن أَنفُسِهِم يَتلو عَلَيهِم آياتِهِ وَيُزَكّيهِم وَيُعَلِّمُهُمُ الكِتابَ وَالحِكمَةَ وَإِن كانوا مِن قَبلُ لَفي ضَلالٍ مُبينٍ - آل عمران: ١٦٤

**"நிச்சயமாக அல்லாஹ் மு.:.மின்களுக்கு அருள் புரிந்திருக்கின்றான். அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்து ஒரு ரஸூலை (தூதரை) அனுப்பி வைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார். இன்னும் அவர்களைப் (பாவத்தை விட்டும்) பரிசுத்தமாக்குகிறார். மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். அவர்களோ நிச்சயமாக இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்." (ஆல இம்ரான் 3:164)**

தனது பணியைச் சுருக்கமாக விளக்குமாறும் தனது தூதுவருக்கு அல்லாஹ் கட்டளையிடுகின்றான்:

إِنَّمَا أُمِرتُ أَن أَعبُدَ رَبَّ هذِهِ البَلدَةِ الَّذي حَرَّمَها وَلَهُ كُلُّ شَيءٍ وَأُمِرتُ أَن أَكونَ مِنَ المُسلِمينَ وَأَن أَتلُوَ القُرآنَ فَمَنِ اهتَدى فَإِنَّما يَهتَدي لِنَفسِهِ وَمَن ضَلَّ فَقُل إِنَّما أَنا مِنَ المُنذِرينَ - النمل: ٩١-٩٢

**“இந்த ஊரை எவன் கண்ணியப்படுத்தியுள்ளானோ அந்த இறைவனை வணங்குமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். எல்லாப் பொருட்களும் அவனுக்கே உரியன. அன்றியும் அவனுக்கே முற்றிலும் வழிப்பட்டவனாக இருக்கும்படியும் நான் ஏவப்பட்டுள்ளேன் (என்று நபியே! நீர் கூறுவீராக) இன்னும் குர்ஆனை ஓதி வரவும் (நான் ஏவப்பட்டுள்ளேன்). ஆகவே எவர் நேர்வழியை அடைகிறாரோ அவர் நேர்வழியடைவது அவர் நன்மைக்கேயாகும். அன்றியும் எவர் வழிகெடுகிறாரோ (அவருக்குக்) கூறுவீராக: நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன் தான்.” (நம்ல் 27:91–92)**

இந்த வசனங்கள் அல்லாஹ்வின் தூதருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு குறித்துப் பேசுகின்றன. இவற்றில் எதிலும் பின்னைய நாட்களில் பிரயோகத்துக்கு வந்த ஆட்சி, ஹாகிமிய்யத் என்பன குறித்த கருத்துகளைக் காண முடியவில்லை. அண்மைக் காலங்களில் பரவலடைந்திருக்கின்ற ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவுக்கு மாற்றமான கருத்துகளையே அவை பேசுகின்றன. நபியவர்களது வரலாற்றைக் கற்கும் ஒருவர், அன்னார் ஏக காலத்தில் தலைமைத்துவம், அரசியல், நீதி, பத்வா வழங்குதல், கற்பித்தல் போன்ற பல பணிகளை மேற்கொண்டிருந்தமையைக் கண்டு கொள்வார். அவையனைத்தும் மேற்கொள்ளப்பட்டமை நபித்துவத்தின் அடிப்படையிலேயே அன்றி அதிகாரத்தின் அடிப்படையில் அல்ல. அன்னாரது தூதுத்துவம் கற்பிக்கும் தூதுத்துவமாகவும் பயிற்றுவிக்கும் தூதுத்துவமாகவும் தூய்மைப்படுத்தும் தூதுத்துவமும் ஆகவே இருந்திருக்கின்றது. அன்றி, அதிகாரம் செலுத்தும் தூதுத்துவமாக இருக்கவில்லை.

நபியவர்கள் மக்காவை வெற்றி கொள்ளவென வந்திருந்தார்கள். அடுத்த நாள் மக்காவினுள் நுழைவதாக ஏற்பாடு. மக்காவைச் சுற்றியுள்ள மலைகளில் குவியல்கள் அமைத்துத் தீ மூட்டுமாறு தம் தோழர்களை வேண்டினர் நபிகளார். பத்தாயிரம் குவியல்கள் அளவு, மலைகள் மீது எரிந்து கொண்டிருந்தன. மாபெரும் படையொன்று வந்துள்ளதெனக் கொண்டு குறைஷியர் எதிர்ப்புகள் காட்டாது, மானசீகத் தோல்விக்குள்ளாவர் என எதிர்பார்க்கப்பட்டது. குறைஷியரின் தலைவர் அபூ ஸுப்யான், நபிகளார் மக்காவுள் நுழைய முன்னர் அன்னாருடன் பேச்சுவார்த்தை நடாத்தவென அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் வந்திருந்தார். நபிகளார் மாபெரும் படையொன்றுடன் வந்திருப்பதாக உணர்ந்த அவர், அப்பாஸிடம் ‘உமது சகோதரனது மகனின் ராஜ்யம் நன்கு விசாலமாகி

விட்டது' என்றார். அப்பாஸ் கூறினார்: 'இது ராஜ்யமல்ல அபூ ஸுப்யானே! நபித்துவம்.'

இந்த உரையாடலில் இருந்து அபூ ஸுப்யான் நபித்துவத்தையும் ஆட்சியதிகாரத்தையும் பிரித்துக் காண இயலாதிருந்தார் என்பது புலனாகின்றது. அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இது நபித்துவம் என்பதில் தெளிவாக இருந்தார்கள். நபித்துவமும் ஆட்சியதிகாரமும் வித்தியாசப்பட்டன என்ற தெளிவு அவருள் இருந்தது. நபியவர்களும் இக்கருத்தை உறுதிப்படுத்தியுள்ளமையை பல ஹதீஸ்களில் கண்டு கொள்ளலாம். தமக்கு முன்னால் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து நபிகளார் கூறினார்கள்: 'பயப்படாதீர், நான் ஓர் அரசனல்ல; காய வைத்த இறைச்சியைச் சாப்பிடுகின்ற குறைஷி வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் மகனே நான்.' மற்றொரு சமயம், 'என்னை ஏழையாகவே வாழச் செய்து, ஏழையாகவே மரணிக்கச் செய்வாயாக!' எனப் பிரார்த்தனை செய்தார்கள். இவ்வாறான ஹதீஸ்கள் அனைத்தும் அதிகாரம் செலுத்துதலை மறுதலித்து, நுபுவ்வத்தின் கண்ணோட்டத்தை உறுதிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளமையைக் காணலாம். நுபுவ்வத் என்பது, அல்-குர்ஆனை ஓதி, அதனைக் கற்பித்து மக்களை அதன் மீது பயிற்றுவித்து, அவர்களது நடத்தைகளைச் சீர் செய்தல் என்ற பணியின் மீதே எழுந்து நிற்கின்றது. அரசியல் எனக் கருதப்படக் கூடிய நடவடிக்கைகள் கூட, கல்வி, பயிற்றுவித்தல் என்பனவற்றின் பின்புலத்தில் இருந்து நடைபெறுமே அன்றி அதிகாரத்தின் பின்புலத்தில் இருந்து நடைபெற மாட்டா. நுபுவ்வத்தின் ஆட்சிக்கும் ஏனைய ஆட்சிக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு இது தான். இதன் காரணமாகத் தான் ஒரு ஹதீஸில் 'எனக்குப் பின்னர் கிலாபத் முப்பது வருடங்கள் இருக்கும்' என வந்திருக்கின்றது.

நுஃமான் இப்னு பஷீர், தனது தந்தையாரான பஷீர் இப்னு ஸஃதுடன் பள்ளிவாசலில் அமர்ந்திருந்த வேளை, அவ்விடம் வந்த அபூ ஸஃலபா அல்குஷனீ, 'பஷீரே, கலீபாக்கள் பற்றிய நபியவர்களது உரையை ஞாபகத்தில் வைத்திருக்கின்றீரா?' எனக் கேட்டார். அவர் இல்லை எனக் கூறினார். பக்கத்தில் அமர்ந்திருந்த ஹுதைபதுல் யமானி, 'எனக்கு ஞாபகம் இருக்கிறது' என்றார். அபூ ஸஃலபா அவரை நோக்கி அமர்ந்து கொண்டார்.

ஹுதைபா கூறினார்: 'அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்: 'அல்லாஹ் நாடுகின்ற அளவு காலம் நுபுவ்வத் உங்களிடம் இருக்கும். பின்னர் அல்லாஹ் நாடுகின்ற பொழுது அதனை எடுத்து விடுவான். பின்னர் நுபுவ்வத்தின் வழியில் அமைந்த கிலாபத் அல்லாஹ் நாடுகின்ற காலம் அளவு இருக்கும். அவன் நாடுகின்ற பொழுது அதனை எடுத்து விடுவான்.

பின்னர் அல்லாஹ் நாடுகின்ற காலம் வரை அநியாயக்கார ஆட்சி இருக்கும். பின்னர் அவன் நாடுகின்ற பொழுது அதனை இல்லாமல் செய்துவிடவான். அடுத்து அடக்குமுறை ஆட்சி வரும். பின்னர் நுபுவ்வத்தின் வழியில் அமைந்த கிலாபத் ஆட்சி வரும்.' அத்துடன் மௌனமானார் ஹுதைபா.

ஹபீப் கூறுகின்றார்: உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களது ஆட்சிக்காலம் வந்த போது இப்னு பஷீர், 'அது உமர் இப்னு அப்துல் அஸீஸின் காலமாக இருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்' என்றார். ஹபீப், உமர் இப்னு அப்துல் அஸீஸின் சபைக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு இந்த ஹதீஸ் கூறப்பட்ட வேளை உமர் மகிழ்வடைந்தார். இந்த ஹதீஸை ஹுதைபாவிடமிருந்து நு.்.மான் அறிவித்ததாக இப்றாஹீம் இப்னு தாவூதைத் தவிர வேறு யாரும் சொல்லவில்லை.

இந்த ஹதீஸின்படி, மக்களுக்கு அல்-குர்ஆனை ஓதிக்காட்டி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிப்பது கலீபாவின் அடிப்படையான பணியாக அமைகின்றது. தூய்மைப்படுத்தல் என்பது நன்மை செய்வோருக்கு வெகுமதிகள் வழங்குதல், தீங்கிழைப்போரைத் தண்டித்தல் எனும் அடிப்படை மீது எழுந்த ஓர் அணுகுமுறையாகும். இந்தவகையில் கலீபாவின் பணி, அதிகாரம், அடக்குமுறை என்ற பரப்புகளில் அன்றி, தூய்மைப்படுத்தல், கற்பித்தல், பயிற்றுவித்தல் போன்ற பரப்புகளிலேயே அமைய வேண்டும். இவை அனைத்தையும் காணும் போது, இஸ்லாத்தில் அதிகாரத்தின் மீது அமைந்த ஒரு ஹாகிமிய்யத் இருக்கின்றது எனக் கூறுவது சிரமமானது. அதாவது அல்லாஹ்வுக்கான முழுமையான அதிகாரத்தில்; அல்லது அவனது பெயரில் அவனது தூதருக்கான அதிகாரத்தில்; அல்லது தூதரின் பெயரில் அவரது கலீபாக்களுக்கான அதிகாரத்தில்; அல்லது அல்லாஹ்வின் பெயரில் அவனது ஷரீஆத்துக்கான அதிகாரத்தில் அமைந்த ஒரு ஹாகிமிய்யத் இஸ்லாத்தில் காணப்படுவதில்லை. பிரதியாக இஸ்லாத்தில் இருக்க வேண்டுவது ஓதிக்காட்டலும், கற்பித்தலும் பயிற்றுவித்தலும் தூய்மைப்படுத்தலும் ஆகும்.

இந்தக் கருத்தை அடியாகக் கொண்டே ஏனைய நிகழ்வுகள், சம்பவங்கள் அனைத்தையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். முன்னம் குறிப்பிட்ட ஹதீஸில் 'முதலில் கிலாபத் இருக்கும். பின்னர் அநியாயக்கார ஆட்சி இருக்கும்; பின்னர் அடக்குமுறை ஆட்சியிருக்கும்' என வந்துள்ளது. இது எதிர்காலத்தில் நடைபெறவுள்ள விடயங்கள் தொடர்பிலான நபியவர்களின் ஒரு முன்னோக்கிய பார்வை அல்லது எதிர்கால வாசிப்பாகும். இதனால் தான் அன்னவர்கள் நுபுவ்வத்தின் வழியில் அமைந்த கிலாபத்தையும் ஆதிக்கப் பண்புடன் அமையும் ஹாகிமிய்யத்தையும் தெளிவுற வேறுபடுத்திக் காட்டினார்கள். ஆகவே

இஸ்லாத்தில் நுபுவ்வத்தும் அதன் வழியில் அமைந்த கிலாபத்தும் தான் இருக்கின்றன.

ஹாகிமிய்யத்தைப் பொறுத்தளவில் அது அல்லாஹ்வின் வேதத்துக்கு இருக்கின்றது. முன்னைய வேதங்களுக்கு அளிக்கப்படாத சிறப்பம்சங்கள் பல இந்த வேதத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் உத்தரவாதத்துடன் இதனுடைய புனித வசனங்கள் பாதுகாக்கப் பெற்றுள்ளன. மானுட வரலாறு நெடுகிலும் மறுமை வரையிலும் இது பாதுகாக்கப் படும். முன்னைய வேதங்களை உண்மைப்படுத்துவதாகவும் அவற்றைக் கண்ணியப்படுத்தி ஆள்வதாகவும் அமைந்துள்ளது அல்-குர்ஆன். அதன் சட்டங்கள் அருளாகவும் இலகுவானவையாகவும் மக்களின் சுமைகளை இறக்கி வைப்பனவாகவும் இருக்கின்றன. இத்தகு சிறப்பம்சங்களின் அடிப்படையில் தான் அல்-குர்ஆனுக்கான ஹாகிமிய்யத் வருகின்றது. அது மனித வாசிப்பின் அடிப்படையில் அமைந்த ஹாகிமிய்யத்தாகும். மனிதனே என்றும் அல்-குர்ஆனை வாசிப்பவன். இந்த இடத்தில் தான் ‘வாசிப்பு’ என்பதன் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. அதிலும் குறிப்பாக இருவகை வாசிப்புகளுக்கும் ஹாகிமிய்யத்துக்கும் இடையிலான தொடர்பு மிகவும் முக்கியமானது. இறை ஹாகிமிய்யத் பனூ இஸ்ரவேலர்களுடன் முடிந்து விட்டது.

இறுதித்தூதானது, ஓதிக்காட்டுதல், கற்பித்தல், பயிற்றுவித்தல், தூய்மைப்படுத்தல் முதலியவற்றை மையப்படுத்திய ஒரு நுபுவ்வத்துடன் ஆரம்பமாகியது. அதில் நுபுவ்வத் மற்றும் கிலாபத்தின் பின்புலத்திலிருந்து அபிவிருத்தி, நாகரிகம் என்பனவற்றைத் தோற்றுவிக்கும் காரணிகள் பிரயோகமாயின; ஹாகிமிய்யத் எனும் இறைமை அல்லாஹ்வின் வேத நூலுக்கே காணப்பட்டது. இந்த வேதநூல் தான் சட்டவாக்கத்தின் தனி மூலமாகக் கருதப்படுகின்றது. இது அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியது. மானுடர்க்கு ஏற்படும் எந்த ஒரு பிரச்சினைக்கும் அல்-குர்ஆன் வழிகாட்டல்களைக் கொண்டுள்ளது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

الر كِتابٌ أَنزَلناهُ إِلَيكَ لِتُخرِجَ النّاسَ مِنَ الظُّلُماتِ إِلَى النّورِ بِإِذنِ رَبِّهِم - إبراهيم: ١

**“அலி:ப், லாம், றா. (நபியே! இது) வேதமாகும். மனிதர்களை அவர்களுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு இருள்களிலிருந்து வெளியேற்றிப் பிரகாசத்தின் பால் நீர் கொண்டுவருவதற்காக இ(வ்வேதத்)தை நாமே உம்மீது இறக்கியிருக்கின்றோம்...” (இப்றாஹீம் 14:1)**

பிறிதோர் இடத்தில்,

لِتُبَيِّنَ لِلنّاسِ ما نُزِّلَ إِلَيهِم وَلَعَلَّهُم يَتَفَكَّرونَ - النحل: ٤٤

**“...மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் உமக்கு இவ்வேதத்தை நாம் அருளினோம்.” (நஹ்ல் 16:44)**

எனக் கூறுகின்றது. மேலும்,

وَنَزَّلنا عَلَيكَ الكِتابَ تِبيانًا لِكُلِّ شَيءٍ وَهُدًى وَرَحمَةً وَبُشرى لِلمُسلِمينَ - النحل: ٨٩

**“...இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும் நேர்வழி காட்டியாகவும் ரஹ்மத்தாகவும் நன்மாராயகமாகவும் உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.” (நஹ்ல் 16:89)**

எனவும்,

وَكَذلِكَ أَوحَينا إِلَيكَ روحًا مِن أَمرِنا ما كُنتَ تَدري مَا الكِتابُ وَلَا الإيمانُ وَلكِن جَعَلناهُ نورًا نَهدي بِهِ مَن نَشاءُ مِن عِبادِنا وَإِنَّكَ لَتَهدي إِلى صِراطٍ مُستَقيمٍ - الشورى: ٥٢

**“(நபியே!) இவ்வாறே நாம் நம்முடைய கட்டளையில் ஆன்மாவானதை (குர்ஆனை) வஹீ மூலமாக உமக்கு அறிவித்திருக்கின்றோம். (அதற்கு முன்னர்) வேதம் என்பதோ ஈமான் என்பதோ என்னவென்று நீர் அறிபவராக இருக்கவில்லை. எனினும் நாம் அதை ஒளியாக ஆக்கி, நம் அடியார்களில் நாம் விரும்புவோருக்கு இதைக் கொண்டு நேர்வழி காட்டுகிறோம். நிச்சயமாக நீர் (மக்களை) நேரான பாதையில் வழி காண்பிக்கின்றீர்.” (ஷூரா 42:52)**

என்றும் கூறுகின்றது.

ஆக, இது ஒரு வேத நூலின் ஹாகிமிய்யத்தாகும். மானுட நாகரிகக் கட்டமைப்பும் கலாச்சார மாதிரியும் அறிவுத் துறையும் எவ்வாறிருப்பினும் மனிதன் நேர்வழியை நிலைநாட்டும் வகையிலும் சத்தியத்தை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தும் வகையிலும் அதிலுள்ள வழிகாட்டல்களைச் செயற்படுத்துவதற்காக அல்லாஹ் அல்-குர்ஆனை இறக்கி வைத்துள்ளான்.

ஹாகிமிய்யத்தை அல்லாஹ்வின் வேத நூலுக்கு வழங்குவதன் மூலம் நீதி, அமானிதம், நேர்வழி போன்ற மனித இனத்திற்குப் பொதுவான விழுமியங்களுக்குப் பொறுப்பானவனாக மனிதன் மாறுகின்றான். மனிதன் அல்-குர்ஆனைக் கோட்பாட்டு ரீதியானதொரு வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும். அல்-குர்ஆன் வசனங்களை வாசித்தல், பிரபஞ்சத்தை வாசித்தல் என்ற இரண்டையும் இணைத்த வாசிப்பு முறையாக அது அமைய வேண்டும். அல்-குர்ஆனின் வசனங்களை ஓதி, ஆழ்ந்து நோக்கி, அவற்றின் கருத்துகளுடன் ஒன்றித்து உறவாடும் அதேவேளை பிரபஞ்சத்தின்

விதிகளையும் ஆழமாக ஆராய்வது அவசியம். வஹி, பிரபஞ்சம் என்ற இவ்விரண்டு மூலங்களில் இருந்தும் கிட்டுகின்றனவற்றை இணைத்து, சாராம்சப்படுத்தி, ஒரு முறைமையின் கீழ் அதன் விளைவுகளை மனித அறிவானது பெற்றெடுக்க வேண்டும். அவற்றிலிருந்து மனிதவாழ்வை ஒழுங்குபடுத்தும் சட்டங்களையும் மனிதன் நேர்வழி பெறுவதற்குரிய முறையியல் விதிகளையும் அவன் பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமே ஒற்றை வாசிப்பினால் அல்லது முதிர்ச்சியற்ற வாசிப்பினால் விளையும் முரண்பட்ட இருமைப் போக்குகள் அல்லது பல் முரண்பாட்டுச் சூழலில் இருந்து அவன் வெளியில் வர முடியும்.

இத்தகு இருவகை வாசிப்புகளையும் மேற்கொள்ளாமையினால் தான் முழு மானுடமும் பல முரண்பட்ட சிந்தனைகளுக்கு மத்தியில் தனது ஆயுளில் பெரும்பகுதியை அநியாயமாக வீணாக்க வேண்டி ஏற்பட்டது. பல உதாரணங்களை நாம் கண்டு கொள்ளலாம். கதரிய்யாக்களின் சிந்தனைகள் போக, மனித செயலையும் இறை செயலையும் கலந்து குழப்பியடித்துக் கொண்ட பல்வேறு சிந்தனைகளை நாம் தாண்டி வந்துள்ளோம்.

இந்த வேத நூலின் ஹாகிமிய்யத்தை ஷரீஆவின் பொதுமைப் பண்பும் முழுமைப் பண்பும் உறுதி செய்கின்றன. இது தோற்றம் பெற்றிருப்பதோ பாதுகாக்கப் பெற்ற இறை வசனங்களிலிருந்து. அவ்விறை வசனங்கள் முழு மனித இனத்துக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ள, அனைவரும் தொடர்புகொள்ள முடியுமான வசனங்களாகும். சிலரது அறிவுக்கு மாத்திரம் தான் எட்டக் கூடியதென எவரும் ஏகபோக உரிமை கொண்டாட முடியாத தெளிவான வசனங்களாகும். இங்கு எந்த ஒரு இடைத்தரகர் குழுவுக்கும் இடமில்லை. கடவுளின் பெயரால் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும் சாத்தியமில்லை.

இந்த வேதநூலின் ஹாகிமிய்யத் மனித இனத்துக்கு விடுதலை அளிக்கின்றது. அதிகமான பழைய நாகரிகங்களில் காணப்பட்டது போல இறையுரிமை என்ற நாமத்தின் கீழ்வரும் பலதரப்பட்ட ஆதிக்கங்களிலிருந்தும் இது மனித இனத்தைக் காப்பாற்றுகின்றது. எத்துனை பரம்பரைகள் வழிவழி வந்தாலும் தொடர்பறாது அல்-குர்ஆனைத் தொடர்ந்து வாசிப்பதால் அவை தமது சட்டங்களைப் புனரமைத்துக் கொள்ள முடிகின்றது. எந்த சூழலையும் அரவணைத்துக் கொள்ளும் அல்-குர்ஆனின் விழுமியங்களுக்கு ஏற்பத் தனது வாழ்வை விசாலமாகவும் நெகிழ்வானதாகவும் அமைத்துக் கொள்வதற்குரிய ஆற்றலை அது மனிதனுக்கு வழங்குகிறது. இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் வேறுபட்ட அர்த்தங்களைக் கொடுக்கக் கூடிய மனிதப் புரிதலின் ஊடாக இது இடம்பெறுகின்றது. மானுட அனுபவங்களும் அல்-குர்ஆனை

விளங்கிக் கொள்ள நபியவர்கள் காட்டிச் சென்ற வழிமுறைகளும் துணை பயக்கின்றன. விழுமியங்களையும் நடைமுறையையும் இணைத்தே நாம் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அனைத்து அருள்களையும் சிறப்பம்சங்களையும் குர்ஆன் குறிக்கின்றது: "எமக்கு இந்த உலகத்திலும் மறுமையிலும் நல்லதையே விதியாக்குவாயாக! நிச்சயமாக நாம் உனது நேர்வழியையே பின்பற்றுகிறோம்" (அ:ஃராப் 7:156). அதற்கு அல்லாஹ் கூறுகின்றான்.

عَذابي أُصيبُ بِهِ مَن أَشاءُ وَرَحمَتي وَسِعَت كُلَّ شَيءٍ فَسَأَكتُبُها لِلَّذينَ يَتَّقونَ وَيُؤتونَ الزَّكاةَ وَالَّذينَ هُم بِآياتِنا يُؤمِنونَ الَّذينَ يَتَّبِعونَ الرَّسولَ النَّبِيَّ الأُمِّيَّ الَّذي يَجِدونَهُ مَكتوبًا عِندَهُم فِي التَّوراةِ وَالإِنجيلِ يَأمُرُهُم بِالمَعروفِ وَيَنهاهُم عَنِ المُنكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّباتِ وَيُحَرِّمُ عَلَيهِمُ الخَبائِثَ وَيَضَعُ عَنهُم إِصرَهُم وَالأَغلالَ الَّتي كانَت عَلَيهِم فَالَّذينَ آمَنوا بِهِ وَعَزَّروهُ وَنَصَروهُ وَاتَّبَعُوا النّورَ الَّذي أُنزِلَ مَعَهُ أُولئِكَ هُمُ المُفلِحونَ - الأعراف: ١٥٦ - ١٥٧

**"...என்னுடைய வேதனையை கொண்டு நான் நாடியவரை பிடிப்பேன்; ஆனால் என்னுடைய அருளானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கிறது. எனினும் அதனை பயபக்தியுடன் (பேணி) நடப்போருக்கும் (முறையாக) ஸகாத்து கொடுத்து வருவோருக்கும் நம்முடைய வசனங்களை நம்புகிறவர்களுக்கும் நான் விதித்தருள் செய்வேன்... எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். அவர், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார்; பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார்; தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார்; அவர்களுடைய பளுவான சுமைகளையும் அவர்கள் மீது இருந்த விலங்குகளையும் (கடினமான கட்டளைகளையும்) இறக்கி விடுவார். எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின்பற்றுகிறார்களோ, அவர்கள் தான் வெற்றி பெறுவார்கள்." (அஃராப் 7:156–157)**

மத்திம சமூகமாக அமைய வேண்டும் என அல்லாஹ் விதித்த இந்த உம்மத்தை ஆள்வது அல்-குர்ஆனாகும். உலகத் தூதாக விதியான இதன் இறைமை அல்-குர்ஆனிடமே இருக்கின்றது. மானுட சமூகம் முழுவதும் இதற்குத் தான் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். இமாம் ஷாதிபி கூறுவார்: 'வரையறைகள் இன்றி அனைத்தையும் ஆளக் கூடியது ஷரீஆத்தாகும்.

அதாவது நபியவர்கள் உட்பட அனைத்து மானுடரையும் அது கட்டுப்படுத்தும். அல்-குர்ஆன் தான் நேர்வழி காட்டக் கூடியது. நபியவர்கள் மீது இறக்கப்பட்ட வஹீயானது இந்த நேர்வழியை விளக்குவது. மக்கள் அனைத்தையும் கொண்டு நேர்வழி பெறுவர். நபியவர்களது உள்ளமும் உறுப்புகளும் உள்ளும் புறமும் சத்திய அறிவொளியால் பிரகாசமடைந்த பொழுது, இந்த உம்மத்தின் முதல் வழிகாட்டியாக நபியவர்கள் மாறிவிடுகின்றார்கள். தனது ஏனைய படைப்பினங்கள் அனைத்தை விடவும் அண்ணலாருக்கு விஷேடமாக இந்த ஒளியைக் கொடுத்து அன்னவரைத் தனது தூய தெரிவுக்கு வல்ல அல்லாஹ் உட்படுத்தியிருக்கின்றான். அன்னவர்க்கு அருளப் பெற்ற வஹியின் மூலம் அவர்களது நடத்தைகள் அனைத்துமே அல்-குர்ஆனாக ஆகிவிடுகின்றன. அவர்களது வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதனை விளக்குவதற்காக, நன்மைகளைத் தெளிவுபடுத்துவதற்காக, தண்டனைகளை நியமம் செய்வதற்காக என வஹி இறங்கிக் கொண்டே இருந்தது. நபியவர்கள் அந்த அழைப்புக்குப் பதிலிறுத்தார்கள்; அதன் சட்டங்களை ஏற்று நடந்தார்கள். இது ஷரீஆத் நபிகளாரை ஆளக் கூடியதாக இருந்திருக்கின்றது அல்லது அல்-குர்ஆன் நபியவர்களை ஆள்கிறது என்ற பொருளைத் தருகின்றது. எனவே அனைத்துப் படைப்பினங்களும் அல்-குர்ஆனைத் தம்மை ஆளும் சட்டமாகக் கொள்வது கட்டாயமாகிறது.' ஷரீஆத் என்ற பிரயோகத்தை இமாம் ஷாதிபி அல்-குர்ஆனைக் குறிக்கவே பயன்படுத்தியுள்ளார். இதே கருத்தில் தான் தவ்ராத்திற்கும் ஷரீஆத் என்ற சொல்லைப் பிரயோகித்துள்ளார்.

அல்-குர்ஆனின் இந்த ஹாகிமிய்யத்தானது, மனித சமூகத்தை இஸ்ரவேலர்களின் கண்ணோட்டத்தில் அமைந்த இறை ஹாகிமிய்யத்திலிருந்து காப்பாற்றியிருக்கின்றது. இறை ஹாகிமிய்யத்தில் அற்புதங்கள் பல முன்வைக்கப்பட்டன; மனிதன் தன்னால் புரிந்து கொள்ள முடிந்த, முடியாத விடயங்களுக்கெல்லாம் ஏற்க வேண்டியிருந்தது; அவன் தன்னால் இயலுமான, இயலாத விடயங்களுக்கெல்லாம் கட்டுப்பட வேண்டி ஏற்பட்டது. அல்-குர்ஆனின் ஹாகிமிய்யத்தோ மனிதனை அல்-குர்ஆனினால் ஆளப் படுபவனாக மாற்றியிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு மனிதனும் தான் அல்-குர்ஆனை விளங்கிக் கொள்வதற்கு ஏற்ப செயல்படும் பொறுப்பையே அவனுக்கு வழங்குகின்றது.

பனூ இஸ்ரவேலர்களின் இறை ஹாகிமிய்யத்தானது மனிதனுக்கு வழங்கப் படும் கட்டளைகள், இறை வல்லமைக்குக் கட்டுப் பட்டு, அவ்வவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. இதனைத் தான் அல்-குர்ஆன்,

وَإِذ نَتَقنَا الجَبَلَ فَوقَهُم كَأَنَّهُ ظُلَّةٌ وَظَنّوا أَنَّهُ واقِعٌ بِهِم خُذوا ما آتَيناكُم بِقُوَّةٍ وَاذكُروا ما فيهِ لَعَلَّكُم تَتَّقونَ - الأعراف: ١٧١

**“நாம் (ஸினாய்) மலையை அவர்களுக்கு மேல் முகட்டைப் போல் உயர்த்தினோம்; அப்போது அவர்கள் அது தங்கள் மீது விழுந்துவிடுமோ என்று எண்ணிய போது, நாம் அவர்களை நோக்கி, நாம் உங்களுக்குக் கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதிலுள்ளவற்றைச் சிந்தியுங்கள். நீங்கள் பயபக்தியுடையோர் ஆகலாம் (என்று கூறினோம்).” (அஃராப் 7:171)**

எனக் கூறுகின்றது. அல்-குர்ஆனின் ஹாகிமிய்யத்தானது, மனித இஜ்திஹாத், வாசிப்பு என்பனவற்றின் மீது கட்டமைக்கப்பட்டதாகும். அந்த வகையில் அல்-குர்ஆனிய வசனங்களை மனிதன் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றானோ அதன் அடிப்படையில் தான் அவனது பொறுப்பு அமைகின்றது.

ஆக, முதலில் அல்-குர்ஆனின் மூலாதாரப் பண்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதுவே சட்ட உருவாக்கத்துக்கான மூலாதாரமாகக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு எதிராகச் செல்வதோ, அதன் வாசகங்களைத் திரிபுபடுத்துவதோ, சத்தியத்தை விட்டும் வெளிச் சென்று மார்க்கத்தைக் குற்றப்படுத்தும் வடிவிலான வாசிப்புக்கு அதனை உட்படுத்துவதோ கூடாது. மொழி மற்றும் மரபுகளின் ஒளியில் மனிதப் புரிதலின் அடிப்படையிலான வாசிப்பாக அது அமைதல் வேண்டும். அந்த வாசிப்பானது உலகில் கூலியையோ தண்டனையையோ அவசரப்பட்டு எதிர்பார்ப்பதாக இருக்கக் கூடாது. உலகம் என்பது செயற்பாட்டுக்கான களம். கூலி வழங்கப்படுவதற்கான களம் அல்ல. இங்கு தலைக்கு மேலால் மலைகள் உயர்த்தப்பட மாட்டா. குரங்காகவோ, பன்றியாகவோ அல்லது வேறேதும் ஒன்றாகவோ மனிதன் உருமாற்றப்பட மாட்டான். இங்கு தான் பனூ இஸ்ரவேலர்களின் ஷரீஆத்தை விடவும் இந்த இறுதி ஷரீஆத் பாரியளவு வேறுபட்டு நிற்கின்றது. இஸ்ரேலிய கட்டமைப்பும் இஸ்லாமியக் கட்டமைப்பும் முற்றும் வித்தியாசமானவை.

இஸ்லாமியக் கட்டமைப்பில் மனிதன் குறித்த சட்டங்களை வாசித்து, விளங்கிச் செயற்படுத்துவதன் மூலம் ஒரு வணக்கத்தை நிறைவேற்றிய உணர்வோடு தானும் அந்த சட்டங்களில் பங்கு கொண்ட திருப்தியையும் காண்கிறான். அந்த சட்டங்களை வெறுமனே கடமைகளாகப் பெற்றுக் கொண்டமையால் மாத்திரமன்றி அவற்றின் ஆக்கத்தில் பங்கு கொள்கின்றமையாலும் அவன் திருப்தி கண்டவனாகின்றான். இந்தக் கருத்தில் தான் அல்-குர்ஆன், ‘அல்லாஹ்வுக்குக் கட்டுப் படுங்கள்; தூதுவருக்குக் கட்டுப் படுங்கள்; உங்களில் துறை சார்ந்தவர்களுக்குக்

கட்டுப் படுங்கள்' எனக் கூறியது. இந்த சட்டமானது தனித்து உங்கள் மீது விதியாக்கப் படும் ஒன்றல்ல; உங்களது அறிவின் ஊடாக நீங்களும் பங்கு கொண்டு உருப்பெறும் ஒன்றாகும் என்பதை உணர்த்துவதே 'உங்களில்' என்ற சொற்பிரயோகம்.

### ஈ மக்களைத் திரட்டும் சிந்தனையாக ஹாகிமிய்யத்

உலகின் பல பகுதிகளில் இயங்கி வந்த இஸ்லாமிய செயற்பாட்டுக் குழுக்கள் பல, இறை ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவை முன்வைத்து அதன் பெயரில் அதிகாரத்தை அடைந்து கொள்ள முற்பட்டன. இந்த சிந்தனையின் அடிப்படையில் எழுந்ததே இஸ்லாம், அல்லது இந்த சிந்தனைப் போக்கைத் தான் இஸ்லாம் கடைப்பிடிக்கின்றது என அவை வாதிட்டன.

நவீன இஸ்லாமிய இயக்கங்கள், கடந்த கால சுதந்திரப் போராட்ட இயக்கங்களின் நீட்சியே. அவை, அன்று முஸ்லிம் உம்மத்தின் பல்வேறு பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த சக்திகளுக்கு எதிராக செயற்பட்ட இயக்கங்கள். முஸ்லிம் உம்மத்தில் காணப்பட்ட ஆற்றல்களையும் அறிவையும் சுதந்திரப் போராட்டத்திற்கென ஒன்று திரட்டியெடுப்பதில் அவை பெரும் பங்காற்றின. ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டி, முஸ்லிம் நிலங்களை விடுவித்து, உம்மத்தின் கண்ணியத்தையும் அந்தஸ்த்தையும் மீள நிலை நிறுத்துவதில் அவை திறம்படவே செயற்பட்டன.

ஏகாதிபத்தியக் காபிர்களை வெளியேற்றுவதில் முஸ்லிம் உம்மத் வெற்றி கண்டது. தேசிய அரசுகள் என்ற பெயரில் அரசுகள் தோற்றம் பெற்றன. பின்னர் நிகழ்ந்தன உம்மத்தின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் வீணடிப்பனவாகவே அமைந்தன. ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்டிருந்த பெரும்பாலான அல்லது அனைத்து நாடுகளுமே சுதந்திரம் பெற்றுக் கொண்டிருந்தன. பல்வேறு வடிவங்களில் அமைந்திருந்தது சுதந்திரம். புதிய அரசுகள் தத்தமக்கு இடையிலான தொடர்புகளிலும் மாற்றங்களைக் காணலாயின. சுதந்திரத்தை ஈட்டிக் கொள்வதற்காகப் பல தியாகங்களைச் செய்திருந்த, தேசிய இயக்கங்களின் நீட்சியாகக் கருதப்பட்ட இஸ்லாமிய செயற்பாட்டு இயக்கங்கள் சுதந்திரத்தின் பின் பேரதிர்ச்சிகளையே எதிர் கொண்டன. இந்த சுதந்திரத்தை மையப்படுத்தி, முஸ்லிம் உம்மத்தை விழிப்பூட்டி, மக்களை ஒன்று திரட்டிய நோக்கங்கள் அனைத்தும் விரயமாகி விட்டதை அல்லது தாம் எதிர்பார்த்த வடிவில் அவை அமையவில்லை என்பதையே இந்த இயக்கங்கள் கண்டன.

எதிர்பார்ப்புகள் அனைத்தும் வீணாகிப் போய் விட்ட நிலையில், இந்த இஸ்லாமிய இயக்கங்கள் வேறு வடிவங்களில் தமது போராட்டத்தை

முன்னெடுக்க விழைந்தனர். இதற்குப் பல காரணங்களும் சூழ்நிலைகளும் பின்புலமாய் அமைந்தன. அவற்றுள் சில வரலாற்று ரீதியானவை. அதாவது எமது அரசியல், அதிகாரப் பாரம்பர்யங்களுடன் சம்பந்தப்பட்டவை. மற்றும் சில காரணங்கள் நவீன சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டன. அதாவது, ஏகாதிபத்தியக் காலப்பகுதியுடனும் அதனோடு இணைந்து வந்த அதிகாரம், பலம், அரசு, நாடு போன்ற மேற்கத்திய எண்ணக்கருக்களுடனும் சம்பந்தப்பட்டன. அப்போது செல்வாக்குச் செலுத்திவந்தன, தேசிய அரசுகள் மற்றும் அதிகாரம் பற்றிய மேற்குலகின் எண்ணக்கருக்களே. அவை அனைத்தும் கட்டமைக்கப்பட்டிருந்தது, இஸ்லாமிய சிந்தனை, அதன் விழுமியங்கள், சிறப்பம்சங்கள் என்பனவற்றுக்கு வெகு தொலைவாகவே.

இத்தகு பின்னணியில் நவீன இஸ்லாமிய இயக்கங்கள், தமது முன்னோர்கள் தியாகம் மேற்கொண்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் முகமாக உள்ளிருந்தே தமது போராட்டத்தைக் கொண்டு நடாத்த முனைந்தன. இந்நிலையை அல்ஜீரியா, எகிப்து, ஈராக் முதலான எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் காண முடிந்தது. இந்தியாவிலும் கூட. சுதந்திரத்தின் பின்னர், முஸ்லிம் உம்மத்தின் இலக்குகள் தமது மண்ணின் மைந்தர்களால் வீணடிக்கப்பட்டிருக்கின்றன என்று கருதின இந்த இயக்கங்கள். அதனால் முஸ்லிம் உம்மத்தை மீண்டும் எழுச்சி பெறச் செய்து, ஒன்று கூட்டி, உம்மத்தின் அடிப்படை இலக்குகளை அடைந்து கொள்ளும் போராட்டத்தில் அதனை ஈடுபடச் செய்வதே தக்க மார்க்கம் என அவை கொண்டன.

உம்மத்தை ஒன்றுபடுத்தி அதன் நிலங்களை விடுவித்து, அதனை கலாச்சார, சட்ட ஏகாதிபத்தியத்திலிருந்தும் விடுதலை பெறச் செய்யும் வகையிலேயே அதன் இலக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. சுதந்திரப் போராட்ட காலத்தில் பயன்படுத்திய அறிவு, சிந்தனைப் பாரம்பர்யங்களையே நவீன இஸ்லாமிய இயக்கங்களும் பயன்படுத்திக் கொண்டன. அவற்றுள் சில, முஸ்லிம் உம்மத்தை விழிப்பூட்டி எழுச்சி பெறச் செய்வதை; மற்றும் சில, மக்களை செயற்பாட்டை நோக்கி உந்தித் தள்ளுவதை; மேலும் சில, குறித்த உயர் இலக்குகளை அடையும் வண்ணம் செயற்படக் கூடிய ஆளுமைகளைத் தயார் செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஏகாதிபத்தியத்துக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த தேசிய அரசுகள், சுதேச மொழியைப் பேசினாலும் சுதேச மண்ணைச் சார்ந்தோராகவே இருந்தாலும் அவற்றின் இலக்குகள் நவீனத்துவம் சார்ந்தனவாகவே விளங்கின. அதாவது முன்னைய பரம்பரையினர் தாம் யாரிடமிருந்து விடுதலை அடைந்து கொள்ள வேண்டும் எனப் போராடினார்களோ அவர்களைச் சார்ந்தனவாக அமைந்தன அந்த இலக்குகள். பொருளாதாரம் அவர்களைச் சார்ந்திருந்தது; அறிவு அவர்களைச் சார்ந்திருந்தது;

சிந்தனை, நிர்வாகம், ஒழுங்குகள் என அனைத்துமே அவர்களைச் சார்ந்திருந்தன.

இந்த சூழலில் தான் நவீன இஸ்லாமிய இயக்கங்கள் மக்களை ஒன்று திரட்டுவதற்கும் அவர்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் தேவையான ஆயுதங்கள் அனைத்தையும் பிரயோகிக்கத் தொடங்கின. இந்தப் பின்னணியிலேயே அவற்றின், 'ஏகாதிபத்தியத்துக்குப் பகரமாக ஆட்சியில் அமர்ந்திருக்கும் இந்த அரசுகள் இஸ்லாமியப் பெயர்களைப் பெற்றிருந்தாலும் வெளிப்படையில் முஸ்லிம் நிலங்களைச் சார்ந்திருந்தாலும் இவையெல்லாம் ஜாஹிலிய்யத்தான அமைப்புகள்; தமக்கு உரிமையில்லாத அதிகாரத்தை இவர்கள் சூறையாடிப் பெற்றிருக்கின்றார்கள்; அதிகாரம் அடிப்படையில் அல்லாஹ்வுக்கே உரியது' முதலான வாதங்களை நோக்க வேண்டும். என்றாலும் தமக்கு உரிமையான அதிகாரத்தைத் தான் இப்புதிய அரசுகள் கொள்ளையடித்துள்ளன என்றோ, ஆட்சிக்கு நாம் தான் தகுதியானவர்கள் என்றோ இந்த இயக்கங்களால் கூற முடியவில்லை. இந்நிலையில் அவை ஓர் உயர் பெறுமானத்தை, மக்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தக் கூடிய ஒன்றை, மக்களின் ஈமானையும் அறிவு மட்டத்தையும் தொடக் கூடிய ஓர் இலக்கைத் தேடின. அத்தேட்டத்தின் முடிவு தான் ஜாஹிலிய்யா (இஸ்லாமிய மூலங்களைக் கொண்டு அமையாதன) ஹாகிமிய்யா முதலிய சிந்தனைகளின் பிரயோகம்.

இந்த சூழ்நிலையைத் தெளிவாகப் பாகிஸ்தானில் அவதானிக்க முடிந்தது. இந்தத் தலைப்பு தொடர்பில் ஆய்வு செய்ய பாகிஸ்தான் ஒரு நல்ல உதாரணம். ஜாஹிலிய்யா, ஹாகிமிய்யா முதலான சிந்தனைகள் அங்கிருந்த அபுல் அ.்.லா மௌதூதி போன்ற இஸ்லாமிய அறிஞர்களிடமிருந்து வெளிவரலாயின. அகன்ற இந்தியாவின் ஒரு பாகமாக இருந்தது பாகிஸ்தான். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம்கள் தான் அதன் ஆட்சியாளர்களாகவும் தலைவர்களாகவும் இருந்தார்கள். பிரித்தானிய ஏகாதிபத்தியம் வரையில் இது தொடர்ந்தது. பிரிட்டிஷார் முஸ்லிம்களை வெறுமனே ஒரு சிறுபான்மை சமூகம் என்ற நிலைக்கு ஆளாக்கி விட்டனர். இந்நிலையில் முஸ்லிம் தலைவர்கள் இந்தியாவில் இருந்து வேறான ஒரு தனி நாட்டைக் கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் பிரதிபலனாகத் தோன்றியதே பாகிஸ்தான்.

முன்னம் முஸ்லிம்கள் ஏனைய இந்தியருடன் இணைந்து இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் போது பாரிய தியாகங்களைச் செய்திருந்தனர். சுதந்திரத்தின் பின்னர் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவது சாத்தியமில்லை எனக் கண்ட நிலையிலேயே தமக்கான ஒரு தனி நாட்டை அவர்கள் அவாவினர். முஸ்லிம்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் அரசு வேண்டும்; சுதந்திரமான ஒரு வாழ்வு

வேண்டும். பாதுகாப்பான தனித்த ஓர் இஸ்லாமிய நாடாக அது இருக்க வேண்டும். நாடு உருவானது; ஆனால் ஏனைய நாடுகளில் நின்றும் அது பெரிதாக வித்தியாசப்படவில்லை. மேற்கின் நவீன சித்தாந்தங்களின் மீது அமைந்த தேசிய அணுகுமுறை ஒன்றையே அந்த நாடும் கடைப்பிடிக்கத் தொடங்கியது. முஸ்லிம் உம்மத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மறக்கப் பெற்றன. இந்நிலையில் கிட்டத்தட்ட தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே இஸ்லாமியத் தலைவர்கள் உணர்ந்தனர். எனவே அவர்கள் மூன்றாவது போராட்டத்தை ஆரம்பித்தனர். நமது கடந்த கால போராட்டங்களின் போது தாம் உருவாக்க நினைத்திருந்த நாட்டைக் கொண்டு வரும் முனைப்பே போராட்டத்தை உந்துவதாயமைந்தது. இந்த சூழலில் தான் 'ஜாஹிலிய்யா', 'இறை ஹாகிமிய்யத்' முதலான சிந்தனைகள் இஸ்லாமியப் புலத்தில் முன்வைக்கப்பட்டன.

ஹாகிமிய்யா என்ற எண்ணக்கருவையும் அதனோடு சம்பந்தப்பட்ட சிந்தனைகளையும் கையாண்டவர்களுள் குறிப்பிடத்தக்க மற்றுமொருவர் ஸெய்யத் குதுப். இத்தகு சிந்தனையை வலுப்படுத்தியெடுப்பதில் அவருக்கேயுரிய எழுத்தாற்றலும் சிந்தனைத் திறனும் பெரும் பங்களித்தன. அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு ஆட்சி செய்யாமல் மாற்று முறைமைகளைக் கடைப்பிடிக்கும் அனைவரைப் பொறுத்தும் ஜாஹிலிய்யத் எனும் பதம் பிரயோகமாகியது. தனது அதிகமான எழுத்தாக்கங்களில் ஜாஹிலிய்யா, ஹாகிமிய்யா எனும் இரு சிந்தனைகளையும் விரிவாகப் பேசியிருந்தார் ஸெய்யித் குத்ப். அன்னாரின் சிறைவாசத்துக்குப் பின்னரான எழுத்துகளில் ஹாகிமிய்யச் சிந்தனை முக்கிய இடம்பெற்றிருந்தது. 'இஸ்லாமிய உலகெங்கும் சுதந்திரப் போராட்டங்களின் பின்னர் அதிகார பீடத்தில் அமர்ந்த ஆட்சியாளர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய ஹாகிமிய்ய உரிமையைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்கள்; எவரும் இறை ஹாகிமிய்யத்தின் அடிப்படையில் அன்றி தமது ஆட்சியை அமைத்துக் கொள்ள முடியாது' என்பதே அவரது வாதமாக இருந்தது. அவரது இறுதிக் கால எழுத்துகளில் குறிப்பாக 'மஆலிம் பித்தரிக்', 'முகவ்வமாதுல் முஜ்தம.். அல்இஸ்லாமி' முதலிய நூல்களில் ஹாகிமிய்யத் பற்றிய கவனம் உச்சத்தைத் தொட்டிருந்தது. எந்த ஓர் அரசினதும் சட்ட பூர்வத் தன்மையானது அது இறை ஹாகிமிய்யத்தைக் கடைப்பிடிக்கின்ற அளவிலேயே தங்கியுள்ளது என்பதே அவரது நிலைப்பாடு. என்றாலும் ஹாகிமிய்ய சிந்தனையின் விரிவான அம்சங்களை விளக்க அவர் முற்படவில்லை. முஸ்லிம் உம்மத்தை விழிப்புறச் செய்வதே அன்னவரின் நோக்கம். உம்மத்தின் நோக்கங்கள் இந்தத் தேசியத் தலைவர்களால் நிறைவேற்றப்படவில்லை; சுதந்திரம் அடைந்த பின்னரும் இஸ்லாமிய அகீதாவுக்கும் அதன் சிந்தனைகளுக்கும் முரணான முறைகளினாலேயே நாம் ஆளப்பட்டு

வருகின்றோம் என்பதை மக்களுக்கு உணர்த்துவதிலேயே அவரது கவனம் குவிந்திருந்தது.

ஸெய்யித் குத்ப் தனது அரசியல் சிந்தனையில் ஹாகிமிய்யத் என்ற எண்ணக்கருவை பெரியளவில் விரிவுபடுத்தினார். 'லா இலாஹ இல்லல்லாஹ்' எனும் கலிமாவுக்கான பொருளை விளக்கும் போது ஆட்சியும் அதிகாரமும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியன என்ற கருத்தே வழங்கப்பட்டது. இதில், அரசியல் அதிகாரத்தில் 'அல்லாஹ்வின் ஹாகிமிய்யத்' என்ற கருத்தையும் பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் அதிகாரத்தையும் அல்லது நீதித்துறையில் அல்லாஹ்வின் அதிகாரத்தையும் அவர் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அதற்கு மாற்றமாக மௌதூதி செய்தது போன்று அல்லாஹ்வின் அதிகாரத்தை மனித அதிகாரத்திற்கு எதிர் நிலையில் வைத்து அதனை, அல்லாஹ்வின் இறைத்துவம், வழிபாடு போன்றவற்றிற்கு முரணான ஒன்றாக மாத்திரமே நோக்கினார்.

ஹாகிமிய்யத்தில் அல்லாஹ் மாத்திரமே அதிகாரம் உள்ளவன் என்றவகையில் அல்லாஹ்விடமிருந்து பெற்று அமுல் நடத்துவதைத் தவிர வேறு எந்தப் பணியும் தனிமனிதனுக்கோ சமூகத்துக்கோ கிடையாது என மௌதூதி கருதியது போலவே ஸெய்யித் குத்பும் கருதினார். இதன் காரணமாக ஹாகிமிய்யத் எனும் எண்ணக்கருவை, மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்தில் காணப்பட்டது போன்ற இறை ஹாகிமிய்யத் வடிவிலேயே மக்கள் புரிந்த கொள்ளலாயினர். அதாவது, 'அல்லாஹ் தனியான ஒரு ராஜ்யத்தைத் தோற்றுவித்துள்ளான்; அதன் சட்டங்களை அவனே தயாரித்துள்ளான்; இந்த சட்டங்களும் கொள்கைகளும் மார்க்கத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதி; அவை அதன் அகீதாவுடன் தொடர்பானவை; இதில் உலகம் சம்பந்தப்பட்டன; மறுமை சம்பந்தப்பட்டன என்ற வேறுபாடு இல்லை; அல்லது சிவில், அரசியல் என்ற வேறுபாடு இல்லை' என்ற வகைகளிலேயே மக்கள் விளங்கிக் கொண்டனர்.

இந்த விடயத்தில் மௌதூதியும் ஸெய்யித் குத்பும் சொல்ல வந்த விடயத்துக்குப் பல இஸ்லாமிய வாதிகள் வெவ்வேறுபட்ட விளக்கங்களை அளிக்க முற்பட்டனர். அதிலும் குறிப்பாக, இறை வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்வதிலும் அவற்றைப் புரிந்து கொள்வதிலும் மனித அறிவின் வகிபங்கை அவர்கள் விளக்க முனைந்தார்கள். என்றாலும் நாம் முந்தைய பத்தியில் கூறியவாறே மக்கள் பெற்றிருந்த விளக்கம் அமைந்திருந்தது. முன்னைய நாகரிகங்களில், அதிலும் குறிப்பாக யூத பாரம்பர்யத்தில் இறை ஹாகிமிய்யத் சிந்தனை எவ்வாறு முன்வைக்கப்பட்டள்ளதோ, அதனைத் தான் மௌதூதியும் ஸெய்யித் குத்பும் பேசுகின்றார்கள் என்றே பலரும் கருதினர். இதற்கும் அதற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன என்ற எந்த விளக்கவுரையும் பெரியளவு பயனளிக்கவில்லை. குறிப்பாக

மேற்கின் மானுட அறிவு அதனை ஒத்துக் கொள்ளவில்லை. இன்னமும் தவ்ராத் மற்றும் இன்ஜீலின் பாரம்பரிய சிந்தனைகளுடன் அவர்களுக்குத் தொடர்பு இருந்து வந்தது. இறையியலின் நலனுக்காக மனித குலத்தைப் பலியாக்குதல் என்ற சிந்தனையாகவே அவர்கள் அதனை நோக்கினர். அந்த சிந்தனையிலிருந்து நீண்ட கால போராட்டத்தின் பின்னர் தாம் விடுதலையை ஈட்டிக் கொண்டுள்ள உணர்வே அவர்களுள் இருந்தது. இதுவே அவர்களது புரிதலின் பின்னணி.

இதே சமயம் சில இஸ்லாமிய வாதிகள், அதிகாரம், ஆட்சி, நாடு என்பன பற்றிய நவீனகால சித்தாந்தங்களைப் படித்து அவற்றுடன் அல்-குர்ஆனையும் ஹதீஸையும் நபிகளாரின் நடைமுறைகளையும் கற்று இரண்டு துறைகளையும் ஒன்றுடன் ஒன்று பொறுத்திப் பார்க்க விழைந்தனர். இவர்களுள் மௌதூதி, ஸெய்யித் குத்ப் ஆகியோரின் சிந்தனைகளுக்கு விளக்கம் சொல்ல முற்பட்டவர்களும் இருந்தனர்; தனித்து அரசியல் சிந்தனைகளைப் பேச முற்பட்டோரும் இருந்தனர். இவர்களது விளக்கங்களும் முனைவுகளும் மென்மேலும் குழப்ப நிலையையே வளர்த்தன. எனவே இந்த விவகாரத்தை முழுமையாகப் பகுப்பாய்வு செய்து, மீள் இணைப்புச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலமே இத்தகு சிந்தனையின் காரணமாக இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

சில இஸ்லாமிய இயக்க எழுத்தாளர்களின் அதீத எழுத்துகளின் காரணமாக, இறை ஹாகிமிய்யத் எனும் இந்த சிந்தனை, ஏகத்துவத்துக்குச் சமானமான ஓர் அம்சமாக மாற்றமடைந்துள்ளது. ஏகத்துவத்துக்குரிய அனைத்துக் கூறுகளும் அல்லது ‘அல்வலா வல்பரா’ எனும் விசுவாச நிலை போன்ற அகீதாவின் பெறுமானங்களும் இதற்கு வழங்கப்பட்ட அதனுடன் நெருங்கிய பிணைப்பு கொண்டதாக நோக்கப்படுகிறது. இதன் காரணமாக இஸ்லாமிய சமூகத்தின் மத்தியில் சில தவறான புரிதல்களும் சிந்தனைக் குழப்பங்களும் மேலோங்கி நிற்கின்றன. நவீனத்துவ சிந்தனைகள் முஸ்லிம் சமூகத்தில் தோற்றுவித்த பிளவுகள், மோதல்களோடு புதிய சில கருத்துகளினாலான பிரிவினைகளும் இணைந்து கொண்டுள்ளன. எனவே, இந்தத் துறை சார்ந்த ஆவணங்களை மீள் ஒழுங்கு செய்வது அவசியம். இந்த சிந்தனையை அதற்குரிய இடத்தில் மீள் ஸ்தானப்படுத்துவதற்குச் சில வேளைகளில் நாம் மிகவும் தெளிவானது எனக் கொண்டுள்ள சில விடயங்களையும் மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பான எல்லாப் பக்கங்களையும் பேச வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். அப்போது தான், இந்த எண்ணக்கரு பற்றிய எமது புரிதல், இறுதித் தூதுத்துவப் பணியின் அம்சங்களுடன் எவ்வாறு முரண்படுகின்றது என்பது தெளிவாகும். அதில் முதன்மையாக,

தூதுத்துவத்தின் உலகளாவிய பண்பு, மேற்குறித்த புரிதலின் அடிப்படையில் 'உலக அரசு' என மாற்றமடைகின்றது. இது பற்றி இன்னும் பல உதாரணங்களையும் முன்வைக்கலாம். இறை ஹாகிமிய்யத் எனும் சிந்தனையை இமாம் ஷாதிபி அவர்கள் விளக்கியது போல் ஷரீஆத்தின் ஹாகிமிய்யத் எனப் பொருள் கொள்ளும் போது எந்த முரண்பாடும் தோற்ற மாட்டாது.

அதிகாரம் என்ற கருத்தைப் பொறுத்தவரையில் அதிலும் மத அதிகாரம் என்பது அதன் நுணுக்கமான கருத்தில் இஸ்லாத்தில் நபியவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். நபிகளாரின் வாழ்வில் அன்னாருக்கு இரு வகையான அதிகாரங்கள் காணப்பட்டன. முதலாவது அவர் ஒரு நபி, தூதுவர் என்றவகையில் அவருக்கிருந்த மத அதிகாரம்; இரண்டாவது, மதீனத்து மக்களில் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவரும் சேர்ந்து தெரிவு செய்த ஓர் ஆட்சித் தலைவர் என்ற வகையில் அவருக்கிருந்த அரசியல் அதிகாரம். எமது இஸ்லாமிய வாதிகள், அதிகாரம் பற்றிய நவீன சிந்தனைகளை நபிகளாரின் செயற்பாடுகளுக்குப் பிரயோகிக்கக் கூடாது என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் அன்னார் ஒரு நபியாகவும் தூதுவராகவும் மாத்திரமே இருந்துள்ளனர். அல்-குர்ஆன் கூறுகின்றது:

قُل إِنَّمَا أَنَا بَشَرٌ مِثْلُكُمْ يوحى إِلَيَّ أَنَّمَا إِلٰهُكُمْ إِلٰهٌ واحِدٌ - الكهف: ١١٠

**"நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன் தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது..." (கஹ்ப் 18:110)**

இங்கு அன்னார் தம்மை மத அதிகாரமோ, உலக அதிகாரமோ கொண்டவராகக் குறிப்பிடவில்லை. இரண்டையும் வேறுபடுத்தவும் இல்லை. எனவே அதிகாரம் பற்றிய நவீன கருத்தியல் அன்னாரின் வாழ்க்கை நடவடிக்கைகளை விளக்க எந்தளவு பொருத்தமாக அமைய முடியும் என்ற வினா எழுகின்றது. நபிகளாருக்கு மத அதிகாரம் என்ற ஒன்று இருந்திருந்தால் அது நபித்துவம் என்ற கருத்தில் மாத்திரம் தான் அமைந்திருக்கும்; அதுவும் அன்னவரின் மறைவுடன் முற்றுப் பெற்று விட்டது. அதன் பின்னர் யாருக்கும் அது நகர்த்தப்படவில்லை என்பது தான் இஜ்மாவான முடிவாகும். இது தான் நுபுவ்வத்தின் நிறைவு. அதிகாரம் என்ற கலைச் சொல்லை நுபுவ்வத்திற்கும் அதன் நிறைவுக்கும் இந்த வடிவில் பயன்படுத்தவது அத்துணை பொருத்தமானதாகத் தெரியவில்லை. சிலவேளை, விலாயத் எனும் பொறுப்பு வகித்தல் என்ற கலைச் சொல் ஓரளவு பொருத்தமானதாக இருக்க முடியும். இஸ்லாத்தின் சிந்தனையுடனும் நெருக்கமானதாக அது இருக்கின்றது.

நபிகளாரின் மறைவின் பின்னர் அன்னாரிடமிருந்து, அன்னவரின் கலீபாக்களுக்கு, நபியின் தலைமைத்துவம் என்ற பண்பு அல்லது ஒரு சிவில் அரசின் தலைவர் என்ற பாத்திரம் தான் நகர்ந்திருக்கின்றனது. இந்த விடயம் குறித்தும் நவீன ஆய்வாளர்கள் அதிகம் விவாதித்திருக்கின்றார்கள். அதன் போது, நவீன சிந்தனைகளை, நவீன கண்ணோட்டங்களின் அடிப்படையில் நபிகளாரின் கால இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளின் மீது பொறுத்திப் பார்க்க முனைந்திருக்கின்றார்கள். அம்முனைவுகளிலும் மிகக் கவனயீனமான போக்கே அவர்களிடம் இருந்திருக்கின்றது. இமாம் கராபி போன்றோர் இத்தகைய ஆய்வுகளுக்கான வாயில்களைத் திறந்து விட்டிருந்தாலும் கோட்பாட்டு ரீதியில் இது அவதானத்துக்குள்ளாகும் ஒரு விடயமாகும்.

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தாம் நபி, தூதுவர் என்ற வகையில் தமது நபித்துவ மற்றும் தூதுத்துவ எல்லையிலேயே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். அன்னவர் ஒரு நபியாகவும் தூதுவராகவும் இருக்கின்றனர் என்ற அடிப்படையிலேயே அவர்களுக்குக் கட்டுப்படுவதும் கட்டாயமானதாக அமைகின்றது.

وَما أَرسَلنا مِن رَسولٍ إِلّا لِيُطاعَ بِإِذنِ اللَّهِ - النساء: ٦٤-

**“அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்ப்படிவதற்காகவேயன்றி (மனிதர்களிடம்) நாம் தூதர்கள் எவரையும் அனுப்பவில்லை...” (நிஸா 4:64)**

நபியவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது மாத்திரம் அவரை ஓர் ஆட்சியாளராக ஆக்க மாட்டாது. அவ்வாறிருப்பின் அல்லாஹு தஆலா அதனையும் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பான். அன்னவருக்கு முன்னைய பல நபிமார்கள், தூதுவர்களைப் பற்றி அல்-குர்ஆன் கூறும் பொழுது, அவர்களுக்கு நுபுவ்வத்தையும் ஆட்சியையும் வழங்கியதாகக் குறிப்பிடுகின்றது. நபியவர்களுக்கும் இந்தப் பண்பு வழங்கப்பட்டிருந்தால் அன்னவரின் பணிகளான ஓதிக் காட்டுதல், கற்பித்தல், பயிற்றுவித்தல் முதலானவற்றோடு இதுவும் ஒன்றாகக் குறிப்பிடப் பெற்றிருக்கும். அது போலவே நபிகளாருக்கு இந்தப் பண்பு இருந்தால், ஆட்சிப் பொறுப்பு அல்லாஹ்வுக்குரியது என்று அல்-குர்ஆன் சொல்லியிருக்கவும் மாட்டாது.

أَلَم تَرَ إِلَى الَّذينَ أوتوا نَصيبًا مِنَ الكِتابِ يُدعَونَ إِلى كِتابِ اللَّهِ لِيَحكُمَ بَينَهُم - آل عمران: ٢٣

**‘வேதத்திலும் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களிடையே (ஏற்பட்ட விவகாரத்தைப் பற்றி) அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்க அவர்கள் அழைக்கப்பட்டார்கள்...” (ஆல இம்ரான் 3:23)**

நபியவர்களுக்குப் பின்னர் வந்த குலபாஉர் ராஷிதீன்கள், நுபுவ்வத்தின் வழியில் வந்த கலீபாக்களாகவே செயற்பட்டனர். அதாவது நுபுவ்வத்தின் வழியில் அமைந்த கிலாபத் என்ற வகையிலேயே அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. அதிலும் குறிப்பாக அபூபக்ர், உமர் ஆகியோரின் காலத்திலும் உஸ்மான் அவர்களது முதல் ஆறு வருட காலத்திலும் இது தெளிவாகப் பிரதிபலித்தது. அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களும் தத்தமது காலங்களில் மீளக் கொண்டு வர முனைந்ததும் இந்த நுபுவ்வத் வழி வந்த கிலாபத்தையேயாகும். நுபுவ்வத்தின் வழியை வரையறை செய்தது அல்-குர்ஆன் தான். அதில் எமது அரசியல் செயற்பாடுகளுக்குச் சாதகமாக எந்தவொரு மாற்றத்தையும் செய்ய எம்மால் இயலாது.

இந்த விவகாரத்தில் தெளிவினைத் தருகின்றது முஸ்லிம் உட்படச் சில ஹதீஸ் கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு ஹதீஸ். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தமது தளபதிகள் சிலரை விளித்துப் பேசுகின்றார்கள்: "ஒரு கோட்டையை நீர் முற்றுகையிடும் போது அல்லாஹ்வின் பொறுப்பையும் அவனுடைய தூதரின் பொறுப்பையும் நீங்கள் தர வேண்டுமென அவர்கள் விரும்பினால் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பொறுப்பை அவர்களுக்குத் தந்துவிடாதீர். மாறாக, அவர்களுக்கு உமது பொறுப்பையும் உம்முடைய தோழர்களின் பொறுப்பையும் தருவீராக. ஏனெனில், நீங்கள் உங்களது பொறுப்பையும் உங்களுடைய தோழர்களின் பொறுப்பையும் முறித்துக் கொள்வதானது அல்லாஹ்வின் பொறுப்பையும் அவனது தூதரின் பொறுப்பையும் முறித்துக் கொள்வதை விட எளிதானதாகும். நீங்கள ் ஒரு கோட்டைவாசிகளை முற்றுகையிடும் போது, அல்லாஹ்வின் தீர்ப்பின் மீது இறங்கி வருவதற்கு அவர்கள் விரும்பினால் அல்லாஹ்வின் தீர்ப்புக்கு அவர்கள் இறங்கி வர உடனே அவர்களுக்கு அனுமதி அளிக்காதீர். மாறாக உம்முடைய தீர்ப்புக்கு இணங்கி வர அவர்களுக்கு அனுமதி அளிப்பீராக. ஏனெனில் அவர்களது விஷயத்தில் அல்லாஹ்வின் தீர்ப்பைச் சரியாக நீர் நிறைவேற்றுவீரா என்பது உமக்குத் தெரியாது."

இதே வழிமுறையைத் தான் அன்னாரது கலீபாக்களும் பின்பற்றினார்கள். அபூபக்ர், உமர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் தமது கடிதங்களில் பெரிதும் 'இது அல்லாஹ்வின் தூதரது பிரதிநிதியான அபூபக்ரின் கருத்து', 'இது அமீருல் மு.்.மினீன் உமரின் கருத்து', அல்லது 'இது அல்லாஹ்வின் தூதரது பிரதிநிதிக்கு அல்லாஹ் காட்டியது' முதலான வார்த்தைப் பிரயோகங்களையே பயன்படுத்தினார்கள். அல்லாஹ்வுடன் அதனைச் சம்பந்தப்படுத்த மாட்டார்கள். இதில் குழப்பமோ தெளிவின்மையோ ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அச்சமும் மக்களுக்கு இந்த விடயம் பிரச்சினைகளை உண்டாக்கிவிடக் கூடாது என்ற ஆதங்கமுமே இதற்குக் காரணம்.

**உ பிரிவினை மாதிரிக்கும் அதிகார மாதிரிக்கும் பகரமாக உம்மத் எனும் மாதிரி**

நன்மையை ஏவி தீமையைத் தடுத்தலைக் கடமையாக்கிய போதான தனது வார்த்தைப் பிரயோகத்தை அல்-குர்ஆன், மு.்.மின்கள் அனைவரையும் நோக்கியதாகவே அமைத்துள்ளது. அது முஸ்லிம் சமூகத்துக்குள்ளே நடப்பதாக இருந்தாலும் சரி:

وَالمُؤمِنونَ وَالمُؤمِناتُ بَعضُهُم أَولِياءُ بَعضٍ يَأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ عَنِ المُنكَرِ وَيُقيمونَ الصَّلاةَ وَيُؤتونَ الزَّكاةَ وَيُطيعونَ اللَّهَ وَرَسولَهُ أُولئِكَ سَيَرحَمُهُمُ اللَّهُ إِنَّ اللَّهَ عَزيزٌ حَكيمٌ - التوبه: ٧١

**"மு.்.மினான ஆண்களும் மு.்.மினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்யத் தூண்டுகிறார்கள்; தீயதை விட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள்; (ஏழை வரியாகிய) ஸகாத்தை (முறையாகக்) கொடுத்து வருகிறார்கள்; அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்." (துவ்பா 9:71)**

முஸ்லிம் சமூகத்துக்கு வெளியில் நடப்பதாக இருந்தாலும் சரி:

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنّاسِ تَأمُرونَ بِالمَعروفِ وَتَنهَونَ عَنِ المُنكَرِ وَتُؤمِنونَ بِاللَّهِ - آل عمران: ١١٠

**"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்..." (ஆல இம்ரான் 3:110)**

அதில் சிலரைக் குறிப்பாகச் சொல்ல விழையும் வேளையில் ஓர் உம்மத்தைக் குறிப்பாகச் சொன்னது:

يا أَيُّهَا الَّذينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقاتِهِ وَلا تَموتُنَّ إِلّا وَأَنتُم مُسلِمونَ وَاعتَصِموا بِحَبلِ اللَّهِ جَميعًا وَلا تَفَرَّقوا وَاذكُروا نِعمَتَ اللَّهِ عَلَيكُم إِذ كُنتُم أَعداءً فَأَلَّفَ بَينَ قُلوبِكُم فَأَصبَحتُم بِنِعمَتِهِ إِخوانًا وَكُنتُم عَلى شَفا حُفرَةٍ مِنَ النّارِ فَأَنقَذَكُم مِنها كَذلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُم آياتِهِ لَعَلَّكُم تَهتَدونَ وَلتَكُن مِنكُم أُمَّةٌ يَدعونَ إِلَى الخَيرِ وَيَأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ

عَنِ المُنكَرِ وَأُولئِكَ هُمُ المُفلِحونَ وَلا تَكونوا كَالَّذينَ تَفَرَّقوا وَاختَلَفوا مِن بَعدِ ما جاءَهُمُ البَيِّناتُ وَأُولئِكَ لَهُم عَذابٌ عَظيمٌ - آل عمران: ١٠٢ - ١٠٥

**“நம்பிக்கை கொண்டோரே; நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள். இன்னும் நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நி.:.மத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாக இருந்தீகள்; உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து, அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகி விட்டீர்கள். இன்னும் நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள்; அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை (வசனங்களை) உங்களுக்குத் தெளிவாக்குகிறான். மேலும் (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர். (இறைவனின்) தெளிவாக ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும் யார் தங்களுக்குள் பிரிவையுண்டு பண்ணிக் கொண்டு, மாறுபாடாகி விட்டார்களோ, அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். அத்தகையோருக்குக் கடுமையான வேதனையுண்டு.” (ஆல இம்ரான் 3:102–105)**

இங்கு மு.்.மின், உம்மத்தினரில் ஓர் உம்மத் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனாலேயே வசனங்களின் ஆரம்பத்தில் ‘ஈமான் கொண்டவர்களே’ என விளிக்கப்பட்டுள்ளது. இங்கு அல்லாஹு தஆலா, குழுவினர் அல்லது பிரிவினர் எனக் கூறாமல், ‘உம்மத்’ என்று தான் சொல்லியிருக்கின்றான். அதாவது ஓர் உம்மத்தில் இரண்டறக் கலந்த உம்மத்; அந்த உம்மத்திலிருந்தே பரிணமித்த உம்மத். அதற்குப் புறம்பாக உருவானதோர் உம்மத் அல்ல. இங்கு மேற்குடி வாதங்களுக்கோ, மற்றமையை மறுக்கும் குறுங்குழு வாதங்களுக்கோ இடமில்லை.

அல்-குர்ஆன், முரண்பாடு மற்றும் பிரிவினைகளில் இருந்து எச்சரிக்கை விடுக்கும் முகமாகவே உம்மத்தினரில் உம்மத் என்ற கோட்பாட்டை முன்வைக்கின்றது. உம்மத்தினரில் ஓர் உம்மத் என்பது உம்மத்தின் ஒரு பகுதி என்பதைக் குறிப்பதல்ல; உம்மத்தில் இரண்டறக் கலந்த ஒன்றையே குறிக்கின்றது என எமக்கு விளக்குகின்றது. ஆக உம்மத்துக்குள்ளேயே பல்வேறு சார்பு நிலைகளுடன் செயற்படுவதற்கான வழிகாட்டல் அல்ல அது. உம்மத்தின் ஊடாகத் தொழிற்படுவதே குறிக்கப்படுவது. உம்மத்தின் இருப்பினை மாத்திரமன்றி, அதன் ஒற்றுமையைப் பாதிக்கின்ற எந்த

சிந்தனையாக இருப்பினும் அது பிரிவினைக்கு வழியமைக்கும் ஒன்றாகவே கருதப் படும். அவை எத்தகு சிந்தனையாயிருப்பினும் மாற்றத்திற்கும் புனர் நிர்மாணத்திற்கும் பொருத்தமானவையாக மாட்டா. ஏனெனில் அவை மென்மேலும் பிரிவினையையே வளர்க்கின்றன. தமது பங்குக்கு அவர்கள் மார்க்கத்தையும் கூறு போட்டு விடுவார்கள். ஒவ்வொரு பிரிவினரும் மார்க்கத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அது தான் முழுமையான மார்க்கம் எனக் கருதிக் கொள்வர். ஒவ்வொரு பிரிவினரும் தாம் தாம் கொண்டிருப்பதைக் கொண்டு மகிழ்வடைவர்.

மாற்றம் என்பது அல்-குர்ஆன் கூறுவது போல் மார்க்கத்தைக் கூறுபோடும் இந்த சிந்தனைகளைக் கடந்து சென்றால் மாத்திரமே சாத்தியப் படும். நடைமுறையில் 'உம்மத்' என்ற எடுகோளை மையப்படுத்தியே மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது கூட்டு மொத்த ஒருமைப்பாட்டுப் பார்வை ஒன்று அவசியம்; துண்டாடும் பகுதிப் பார்வைகள் அல்ல.

உம்மத் என்ற கோட்பாட்டை மொழி, பரிபாஷை மற்றும் சீர்திருத்தக் கோணங்களில் நோக்கின் அதனை எவ்வாறு புரிந்து கொள்ளலாம் என்பதை அடுத்து நோக்குவோம்.

## அல்-உம்மத்

மொழியில் ஹம்ஸா, மீம் ஆகிய எழுத்துக்கள் இணைந்து ஒரே மொழி அடிப்படையாகக் கருதப்படுகின்றது. அதிலிருந்து நான்கு கருத்துகள் பெறப்படுகின்றன. அவை அடிப்படை, மூலம், கூட்டம், மார்க்கம் ஆகியன. இவை நான்கும் நெருக்கமான கருத்தைக் கொண்டன. இவற்றை மையப்படுத்தி மற்றும் மூன்று கருத்துகள் தோற்றம் பெறுகின்றன. அவை உயரம், பொழுது, நோக்கம் என்பன. அல்-கலீல் குறிப்பிடுகின்றார்: 'எந்த விடயத்துடன் அது தவிர்ந்து ஏனையவையும் அதற்கடுத்த நிலையில் உள்ள அனைத்தும் சேர்க்கப்படுகின்றதோ அந்தப் பொருளை அறபுகள் 'அல்-உம்' என்று அழைப்பர். அதனால் தான் மனித மூளையை 'உம்முர் ர.்.ஸ்', தலையின் தாய் என்று அழைத்தனர். அல் உம்மா என்பது மார்க்கத்தைக் குறிக்கும்... ஏதேனும் ஒரு விடயத்துடன் சம்பந்தப்படுத்தப் படும் ஒரு சமூகம் உம்மத் என்று அழைக்கப் படும். மனிதர்களில் ஒவ்வொரு பரம்பரையும் தனித்தனியாக ஓர் உம்மத்தாகக் கருதப்படும். 'அல்-அமம்' என்பது நோக்கத்தைக் குறிக்கும்.' யூனுஸ் குறிப்பிடுகின்றார்: இது ம.்.மூமான விடயம் என்பது, மக்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒன்றைக் குறிக்கும்.

ஹம்ஸா, மீம் ஆகிய எழுத்துக்களின் இணைப்பு, அல்-குர்ஆனில் ஒரு விடயத்துடன் ஏனையவை சேர்க்கப்படுதல் என்னும் பொருளைத் தரும் அடிப்படை என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது:

وَوَصَّينَا الإنسانَ بِوالِدَيهِ حَمَلَتهُ أُمُّهُ وَهنًا عَلى وَهنٍ وَفِصالُهُ في عامَينِ أَنِ اشكُر لي وَلِوالِدَيكَ إِلَيَّ المَصيرُ - لقمان: ١٤

“நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம். அவனுடைய தாய் (உம்) பலஹீனத்தின் மேல் பலஹீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள். இன்னும் அவனுக்குப் பால்குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகவே நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது.” **(லுக்மான் 31:14)**

மற்றோர் இடத்தில்:

وَما كانَ رَبُّكَ مُهلِكَ القُرى حَتّى يَبعَثَ في أُمِّها رَسولًا يَتلو عَلَيهِم آياتِنا وَما كُنّا مُهلِكِي القُرى إِلّا وَأَهلُها ظالِمونَ - القصص: ٥٩

“(நபியே!) நம் வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கும் தூதர் ஒருவரை அவர்களுடைய தலைநகருக்கு (உம்) அனுப்பி வைக்காத வரையில் எந்த ஊர்களையும் உம்முடைய இறைவன் அழிப்பவனாக இல்லை. மேலும், எந்த ஊரையும் அதன் மக்கள் அக்கிரமக்காரர்களாக இல்லாதவரையில் நாம் அழிப்போராகவும் இல்லை.” **(கஸஸ் 28:59)**

மேலும் குர்ஆன் கூறுகின்றது:

وَكَذلِكَ أَوحَينا إِلَيكَ قُرآنًا عَرَبِيًّا لِتُنذِرَ أُمَّ القُرى وَمَن حَولَها وَتُنذِرَ يَومَ الجَمعِ لا رَيبَ فيهِ فَريقٌ فِي الجَنَّةِ وَفَريقٌ فِي السَّعيرِ - الشورى: ٧

‘அவ்வாறே நகரங்களின் தாய்க்கும் (உம்முல் குரா: மக்காவுக்கும்) அதனைச் சுற்றியுள்ளவற்றுக்கும் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் எவ்வித சந்தேகமுமின்றி (யாவரும்) ஒன்று சேர்க்கப் படும் நாளைப்பற்றி அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் அறபி மொழியிலான இந்த குர்ஆனை நாம் உமக்கு வஹீ அறிவிக்கிறோம். ஒரு கூட்டம் சுவர்க்கத்திலும் ஒரு கூட்டம் நரகத்திலும் இருக்கும்.” **(ஷூரா 42:7)**

பின்பற்றப்படுபவர்கள் என்ற கருத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது:

وَإِن نَكَثوا أَيمانَهُم مِن بَعدِ عَهدِهِم وَطَعَنوا في دينِكُم فَقاتِلوا أَئِمَّةَ الكُفرِ إِنَّهُم لا أَيمانَ لَهُم لَعَلَّهُم يَنتَهونَ - التوبه: ١٢

“அவர்களுடைய உடன்படிக்கைக்குப் பின், தம் சத்தியங்களை அவர்கள் முறித்துக் கொண்டு, உங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் இழித்துக் குறை சொல்லிக் கொண்டு இருப்பார்களானால் அவர்கள் (மேற்கூறிய செயல்களிலிருந்து) விலகிக் கொள்வதற்காக நிராகரிப்பவர்களின் தலைவர்களுடன் (அஇம்மா) போர் புரியுங்கள். ஏனெனில் அவர்களுக்கு நிச்சயமாக ஒப்பந்தங்கள் (என்று எதுவும்) இல்லை.” **(தவ்பா 9:12)**

நோக்கம் என்ற கருத்தும் பயன்பட்டுள்ளது:

يا أَيُّهَا الَّذينَ آمَنوا لا تُحِلّوا شَعائِرَ اللَّهِ وَلَا الشَّهرَ الحَرامَ وَلَا الهَديَ وَلَا القَلائِدَ وَلا آمّينَ البَيتَ الحَرامَ يَبتَغونَ فَضلًا مِن رَبِّهِم وَرِضوانًا وَإِذا حَلَلتُم فَاصطادوا وَلا يَجرِمَنَّكُم شَنَآنُ قَومٍ أَن صَدّوكُم عَنِ المَسجِدِ الحَرامِ أَن تَعتَدوا وَتَعاوَنوا عَلَى البِرِّ وَالتَّقوى وَلا تَعاوَنوا عَلَى الإِثمِ وَالعُدوانِ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ شَديدُ العِقابِ - المائده: ٢

“மு.:.மின்களே! (நீங்கள் இஹ்ராம் கட்டியிருக்கும் சமயத்தில் உங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட) அல்லாஹ்வின் மார்க்க அடையாளங்களையும் சிறப்பான மாதங்களையும் குர்பானிகளையும் குர்பானிக்காக அடையாளம் கட்டப்பெற்றவற்றையும் தங்களுடைய இறைவனின் அருளையும் திருப்பொருத்தத்தையும் நாடி கண்ணியமான (அவனுடைய) ஆலயத்தை நாடிச் செல்வோரையும் (ஆம்மீன) (தாக்குவதையோ, அவமதிப்பதையோ) நீங்கள் ஆகுமாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் இஹ்ராமைக் களைந்து விட்டால் (அனுமதிக்கப்பட்டவற்றை) நீங்கள் வேட்டையாடலாம். மேலும் புனித மஸ்ஜிதை (க.:.பதுல்லாஹ்வை) விட்டும் உங்களைத் தடுத்த கூட்டத்தினர் மீதுள்ள வெறுப்பானது, நீங்கள் வரம்பு மீறுமாறு உங்களைத் தூண்டி விட வேண்டாம். இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். அல்லாஹ்வுக்கே பயப் படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பான்.” **(மாஇதா 5:2)**

மூலம் என்ற கருத்திலும் கூறப் பெற்றுள்ளது:

فَأُمُّهُ هاوِيَةٌ وَما أَدراكَ ما هِيَه نارٌ حامِيَةٌ - القارعة: ٩ - ١١

“அவன் தங்குமிடம் (உம்முஹூ) ஹாவியா தான். இன்னும் (ஹாவியா) என்ன என்று உமக்கு அறிவித்தது எது? அது சுட்டெரிக்கும் (நரகத்தின்) தீக்கிடங்காகும்.” **(அல்காரிஆ 101:9–11)**

இக்கருத்துகள் அனைத்தும் இரண்டு தூண்களின் மீது எழுந்துள்ளன. ஒன்று அடிப்படை; மற்றது அடிப்படையைச் சுற்றி ஒன்று திரளுதல்.

உம்மத் என்ற சொல் அதன் ஒருமை வடிவில், அல்-குர்ஆனில் அறுபது தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. சட்டவியலாளர்களின் பாஷையில், அதனை 'முத்லக்' எனும் வரையறுக்கப்படாத மொத்த வடிவில் அமைந்த பிரயோகம் எனலாம். மொழியியலாளர்களின் பாஷையிலாயின் 'நகிரா' எனும் அறிமுகமற்ற வடிவில் அமைந்த பிரயோகம் எனலாம்.

எல்லா இடங்களிலும் இந்த சொல், அடிப்படை என்ற கருத்திலேயே பிரயோகமாகியுள்ளது. அதாவது நோக்கமாகக் கொள்ளப் படும் ஓர் அடிப்படை, மீண்டு வரும் ஓர் அடிப்படை; நோக்கிச் செல்லும் ஓர் அடிப்படை. ஏனைய அனைத்தும் ஒன்று குவியும் அடிப்படை போன்ற கருத்துகளை இச்சொல் தருகின்றது. ஆக, அல்-குர்ஆனில் 'உம்மத்' என்ற எண்ணக்கரு அடிப்படை மற்றும் அதனை நோக்கி ஒன்று திரளுதல் என்ற கருத்தை எமக்குத் தருகின்றது எனலாம். இதனைக் குறிக்கும் வகையில் தான்,

إِنَّا وَجَدنا آباءَنا عَلى أُمَّةٍ وَإِنّا عَلى آثارِهِم مُقتَدونَ - الزخرف: ٢٣

**"...நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதாதையரை ஒரு மார்க்கத்தில் கண்டோம். நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச்சுவடுகளையே பின்பற்றுகின்றோம்" (ஸுக்ருப் 43:23)**

எனக் கூறுகின்றது அல்-குர்ஆன். அதாவது, அவர்கள் ஒரு மார்க்கத்தில் அல்லது வழிமுறையில் ஒன்றுபட்டிருக்கின்றார்கள் என்பதாகும்.

உம்மத் என்ற பிரயோகம் 'நகிரா' எனும் அறிமுகமற்ற வடிவிலும் வரையறுக்கப்படாத மொத்த வடிவிலும் பயன்பட்டிருப்பதானது அது எந்த அடிப்படையுடன் இணைகிறதோ அதன் எல்லையில் இயங்கும் தன்மை கொண்ட ஓர் எண்ணக்கரு என்பதைக் காட்டுகின்றது. அது இணையும் அடிப்படைக்கு ஏற்ப விரிந்து கொடுக்கும் அல்லது சுருங்கும். அந்த வகையில் உம்மத் என்பது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டதல்ல. தனிமனிதர் ஒருவரையும் அது குறிக்கும்; மக்கள் அனைவரையும் கூடக் குறிக்கும்.

இந்தக் கருத்தில் தான் அல்-குர்ஆன் இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஓர் உம்மத் என வர்ணித்தது.

إِنَّ إِبراهيمَ كانَ أُمَّةً قانِتًا لِلَّهِ حَنيفًا وَلَم يَكُ مِنَ المُشرِكينَ - النحل: ١٢٠

**"நிச்சயமாக இப்றாஹீம் ஒரு வழிகாட்டியாகவும் அல்லாஹ்வுக்கு**

**அடிபணிந்தவராகவும் (நேரான பாதையில்) சார்ந்தவராகவும் இருந்தார். மேலும், அவர் முஷ்ரிக்குகளில் (இணை வைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை.” (நஹ்ல் 16:120)**

அன்னவருக்குப் பின்னர் வந்த அனைவரும் அவருடனேயே தொடர்புபடுத்தப்பட்டனர். அன்னாரின் பரம்பரையில் தான் பின்னைய காலத்திய தூதுவர்கள் அனைவரும் வந்தனர். இப்றாஹீமுடைய மார்க்கத்தைப் பின்பற்றுமாறு தான் அல்-குர்ஆன் எம்மை அறிவுறுத்துகின்றது:

وَمَن أَحسَنُ دينًا مِمَّن أَسلَمَ وَجهَهُ لِلَّهِ وَهُوَ مُحسِنٌ وَاتَّبَعَ مِلَّةَ إِبراهيمَ حَنيفًا وَاتَّخَذَ اللَّهُ إِبراهيمَ خَليلًا - النساء: ١٢٥

**“மேலும், எவர் நன்மை செய்யக் கூடிய நிலையில் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்டு, இப்றாஹீமுடைய தூய மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ அவரை விட அழகிய மார்க்கத்தை உடையவர் யார்? இன்னும் அல்லாஹ் இப்றாஹீமை தன் மெய்யன்பராக எடுத்துக் கொண்டான்.” (நிஸா 4:125)**

மற்றுமோர் இடத்தில் குர்ஆன் கூறுகின்றது:

وَجاهِدوا فِي اللَّهِ حَقَّ جِهادِهِ هُوَ اجتَباكُم وَما جَعَلَ عَلَيكُم فِي الدّينِ مِن حَرَجٍ مِلَّةَ أَبيكُم إِبراهيمَ هُوَ سَمّاكُمُ المُسلِمينَ مِن قَبلُ - الحج: ٧٨

**“இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள். அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். இந்த தீனில் (மார்க்கத்தில்) அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. இது தான் உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும். அவர் தான் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டார்...” (ஹஜ் :78)**

மக்கள் அனைவரும் ஒரே உம்மத்தாக இருந்ததாகவே அல்-குர்ஆன் கூறுகின்றது. அதே போன்று அல்லாஹ்வுக்கான அடிமைத்துவத்திலும் அவர்கள் அனைவரும் ஆதமின் சந்ததிகள் என்ற வகையிலும் சம தரத்திலும் ஏக இறைவனின் அடிமைகளாக இருந்தனர். பின்னர் தமக்கு மத்தியில் முரண்பட்டுக் கொண்டனர்.

وَما كانَ النّاسُ إِلّا أُمَّةً واحِدَةً فَاختَلَفوا وَلَولا كَلِمَةٌ سَبَقَت مِن رَبِّكَ لَقُضِيَ بَينَهُم فيما فيهِ يَختَلِفونَ - يونس: ١٩

**“மனிதர்கள் யாவரும் (ஆதியில்) ஒரே இனத்தவராகவே அன்றி வேறில்லை. பின்னர் அவர்கள் மாறுபட்டுக் கொண்டனர். உமது இறைவனிடமிருந்து**

**(இம்மையின் கூலி மறுமையில் பூரணமாகக் கொடுக்கப் படும் என்ற) ஒரு வார்த்தை முந்தி ஏற்பட்டிருக்கா விட்டால் அவர்கள் எந்த விஷயத்தில் மாறுபட்டிருக்கின்றனரோ, அதைப்பற்றி அவர்களிடையே (இதற்குள்) முடிவு செய்யப்பட்டிருக்கும்." (யூனுஸ் 10:19)**

அல்லாஹு தஆலா நபிமார்களை எச்சரிக்கையாளர்களாகவும் நன்மாராயம் சொல்பவர்களாகவும் அனுப்பி வைத்தான். மக்கள் முரண்பட்டுக் கொண்டிருந்த விடயங்களில் தீர்ப்புச் சொல்வதற்காக அவர்கள் மூலம் வேதங்களையும் கொடுத்தனுப்பினான். அல்-குர்ஆன் கூறுகின்றது:

كانَ النّاسُ أُمَّةً واحِدَةً فَبَعَثَ اللَّهُ النَّبِيّينَ مُبَشِّرينَ وَمُنذِرينَ وَأَنزَلَ مَعَهُمُ الكِتابَ بِالحَقِّ لِيَحكُمَ بَينَ النّاسِ فيمَا اختَلَفوا فيهِ وَمَا اختَلَفَ فيهِ إِلَّا الَّذينَ أوتوهُ مِن بَعدِ ما جاءَتهُمُ البَيِّناتُ بَغيًا بَينَهُم فَهَدَى اللَّهُ الَّذينَ آمَنوا لِمَا اختَلَفوا فيهِ مِنَ الحَقِّ بِإِذنِهِ وَاللَّهُ يَهدي مَن يَشاءُ إِلى صِراطٍ مُستَقيمٍ - البقرة: ٢١٣

**"(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும் (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான். எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள், தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்து விட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர்வழி காட்டினான். இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்." (பகரா 2:213)**

மக்களால் தொடர்ந்தும் ஒரே உம்மத்தாக இருக்க முடியவில்லை. தமக்குள் முரண்பட்ட அவர்கள் பல உம்மத்துகளாக மாறி விட்டனர். ஒவ்வொரு மக்கள் கூட்டமும் ஏதேனும் ஓர் அடிப்படை மீது அல்லது தாம் அடிப்படை எனக் கருதக் கூடிய ஒன்றின் மீது ஒன்றிணைந்து தனித்தனி உம்மத்துகளாக மாறிக் கொண்டனர். அவ்வேளை அல்லாஹு தஆலா மக்களது முரண்பாடுகளைத் தெளிவுபடுத்துவதற்காகத் தூதுவர்களை அனுப்பி வைத்தான்.

وَلَقَد بَعَثنا في كُلِّ أُمَّةٍ رَسولًا أَنِ اعبُدُوا اللَّهَ وَاجتَنِبُوا الطّاغوتَ فَمِنهُم مَن هَدَى اللَّهُ وَمِنهُم مَن حَقَّت عَلَيهِ الضَّلالَةُ فَسيروا فِي الأَرضِ فَانظُروا كَيفَ كانَ عاقِبَةُ المُكَذِّبينَ - النحل: ٣٦

**“மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும் அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள் என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம். எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப் பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள்.” (நஹ்ல் 16:36)**

அல்லாஹு தஆலா நாடியிருந்தால் மக்களது விருப்பு வெறுப்பைத் தாண்டி, அவர்களது முரண்பாடுகளின் பின்னரும் அவர்களை ஒரே உம்மத்தாக அமைத்திருக்க முடியும் என அல்-குர்ஆன் கூறுகின்றது. ஆனாலும் அல்லாஹு தஆலா எங்களுக்குத் தூதுவர்களையும் வேதங்களையும் ஆதாரங்களையும் அனுப்பி எமது முரண்பாடுகளின் போது நாமே அவற்றில் தீர்வை எதிர்பார்க்க வேண்டும் என்ற ஏற்பாட்டை ஒரு சோதனையாகவே எமக்குத் தந்துள்ளான். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَو شاءَ رَبُّكَ لَجَعَلَ النّاسَ أُمَّةً واحِدَةً وَلا يَزالونَ مُختَلِفينَ إِلّا مَن رَحِمَ رَبُّكَ وَلِذلِكَ خَلَقَهُم وَتَمَّت كَلِمَةُ رَبِّكَ لَأَملَأَنَّ جَهَنَّمَ مِنَ الجِنَّةِ وَالنّاسِ أَجمَعينَ - هود: ١١٨ - ١١٩

**“உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (அவன் அப்படி ஆக்கவில்லை.) எனவே, அவர்கள் எப்போதும் பேதப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர, இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான். நிச்சயமாக நான் ஜின்கள், மனிதர்கள் ஆகிய யாவரைக் கொண்டும் நரகத்தை நிரப்புவேன் என்ற உம் இறைவனுடைய வாக்குப் பூர்த்தியாகிவிடும்.” (ஹூத் 11:118–119)**

இதன் அடிப்படையில் ஒவ்வொரு உம்மத்திற்கும் ஒரு சட்ட முறையும் வாழ்வு முறையும் இருக்கின்றது. இவை இரண்டின் அடிப்படையில் தான் ஏனைய உம்மத்துகளை விட்டும் ஓர் உம்மத் வேறுபடுகின்றது. தவ்ராத், இன்ஜீல் என்பனவற்றைக் குறிப்பிட்டு விட்டு அல்லாஹ் தனது தூதுவரை நோக்கிக் கூறுகின்றான்:

وَأَنزَلنا إِلَيكَ الكِتابَ بِالحَقِّ مُصَدِّقًا لِما بَينَ يَدَيهِ مِنَ الكِتابِ وَمُهَيمِنًا عَلَيهِ فَاحكُم بَينَهُم بِما أَنزَلَ اللَّهُ وَلا تَتَّبِع أَهواءَهُم عَمّا جاءَكَ مِنَ الحَقِّ لِكُلٍّ جَعَلنا مِنكُم شِرعَةً وَمِنهاجًا وَلَو شاءَ اللَّهُ لَجَعَلَكُم أُمَّةً واحِدَةً وَلكِن لِيَبلُوَكُم في ما آتاكُم فَاستَبِقُوا الخَيراتِ إِلَى اللَّهِ مَرجِعُكُم جَميعًا فَيُنَبِّئُكُم بِما كُنتُم فيهِ تَختَلِفونَ - المائدة: ٤٨

**“மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம். இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே அல்லாஹ் அருள் செய்த( சட்ட திட்டத்) தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக. உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி.) அவர்களுடைய மன இச்சைகளை நீா பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும் வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம். ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களை சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கின்றான்). எனவே நன்மையானவற்றின் பால் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் யாவரும் அல்லாஹ்வின் பக்கமே மீள வேண்டியிருக்கின்றது. நீங்கள் எதில் மாறுபட்டுக் கொண்டிருந்தீர்களோ அத(ன் உண்மையி)னை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான்.” (மாஇதா 5:48)**

உம்மத் என்பது அடிப்படை, நோக்கம், மூலம் ஆகிய ஒன்றைச் சூழ ஒரு மக்கள் கூட்டம் திரள்வதைக் குறிக்கும். அந்த மக்கள் கூட்டத்தினதான தனிப் பண்புகள் அவ்வந்த அடிப்படைக்கு ஏற்ப காணப் படும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

قيلَ يا نوحُ اهبِط بِسَلامٍ مِنّا وَبَرَكاتٍ عَلَيكَ وَعَلى أُمَمٍ مِمَّن مَعَكَ وَأُمَمٌ سَنُمَتِّعُهُم ثُمَّ يَمَسُّهُم مِنّا عَذابٌ أَليمٌ - هود: ٤٨

**“நூஹே! உம் மீதும் உம்மோடு இருக்கின்ற உம்மத்துகள் மீதும் நமது பாதுகாப்புடனும் அபிவிருத்திகளுடனும் நீர் இறங்குவீராக! இன்னும் சில உம்மத்துகளுக்கு நாம் சுகம் அனுபவிக்கச் செய்து, பின்னர் நம்மிடமிருந்து நோவினை தரும் வேதனை அவர்களைத் தீண்டும் என்று கூறப்பட்டது.” (ஹூத் 11:48)**

மற்றுமோர் இடத்தில் காணலாம்:

وَما مِن دابَّةٍ فِي الأَرضِ وَلا طائِرٍ يَطيرُ بِجَناحَيهِ إِلّا أُمَمٌ أَمثالُكُم ما فَرَّطنا فِي الكِتابِ مِن شَيءٍ ثُمَّ إِلى رَبِّهِم يُحشَرونَ - الأنعام: ٣٨

**“பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும் தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற உம்மத்துகள் அன்றி வேறில்லை. (இவற்றில்) எதையும் (தம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை. இன்னும் அவை யாவும் அவற்றின் இறைவனிடம் ஒன்று சேர்க்கப் படும்.” (அன்ஆம் 6:38)**

மேலும் உம்மத் என்பது காலத்ததை மையமாக வைத்து ஓர் அடிப்படை மீது அல்லது ஒரு நோக்கத்தின் மீது ஒன்றுபட்ட ஒரு பரம்பரையை அல்லது பல பரம்பரைகளைக் குறிக்கவும் பயன்படுகின்றது. ஒரு விடயத்தை அதனுடன் இணைந்த ஒன்றின் மூலம், உதாரணமாக நூற்றாண்டு எனக் குறிப்பிடுவது போல குறித்ததொரு காலப்பகுதியையும் 'உம்மத்' எனும் பிரயோகம் குறிக்கின்றது.

وَلَئِن أَخَّرنا عَنهُمُ العَذابَ إِلى أُمَّةٍ مَعدودَةٍ لَيَقولُنَّ ما يَحبِسُهُ أَلا يَومَ يَأتيهِم لَيسَ مَصروفًا عَنهُم وَحاقَ بِهِم ما كانوا بِهِ يَستَهزِئونَ - هود: ٨

**"(குப்ரின் காரணமாக அவர்களுக்கு விதிக்கப்பட வேண்டிய) வேதனையை ஒரு குறித்த காலம் வரை (உம்மத்) நாம் பிற்படுத்தினால் அதைத் தடுத்தது யாது? என்று அவர்கள் நிச்சயமாக (ஏளனமாகக்) கேட்பார்கள். அவர்களுக்கு வேதனை வரும் நாளில் அவர்களை விட்டும் (அது) தடுக்கப்படாது என்பதையும் எதை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழந்து கொள்ளும் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?" (ஹூத் 11:8)**

மற்றோரிடத்தில்,

وَقالَ الَّذي نَجا مِنهُما وَادَّكَرَ بَعدَ أُمَّةٍ أَنا أُنَبِّئُكُم بِتَأويلِهِ فَأَرسِلونِ - يوسف: ٤٥

**"அவ்விருவரில் (சிறையிலிருந்து) விடுதலையடைந்திருந்தவர், நீண்ட காலத்திற்குப் (உம்மத்) பின்னர், (யூஸுபை) நினைவு கூர்ந்து இக்கனவின் விளக்கத்தை நான் உங்களுக்கு அறிவிப்பேன். என்னை (யூஸுபிடம்) அனுப்பி வையுங்கள் என்று சொன்னார்." (யூஸுப் 12:45)**

மேற்சொன்னவற்றை வைத்து நோக்கும் போது, உம்மத் என்ற எண்ணக்கரு, இரண்டு பிரதான தூண்களின் மீது எழுந்து நிற்கின்றது. ஒன்று பிறவற்றைப் பிணைக்கக் கூடிய ஓர் அடிப்படை; இரண்டு அந்த அடிப்படையைச் சூழ ஒன்று திரளுதல். எனவே அல்-குர்ஆன் முன்வைக்கும் ஏனைய எண்ணக் கருக்களைப் போல் 'உம்மத்' என்ற எண்ணக் கருவும் பலவற்றை இணைத்த இயங்கு தன்மை கொண்ட ஒரு புலக்காட்சியையே எமக்குத் தருகின்றது. அந்த வகையில் உம்மத் என்பது ஓர் அடிப்படையின் கிளையுமல்ல; மொத்தக் காரணி ஒன்றின் பிரிவுமல்ல. இந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் கீழ்வரும் அல்-குர்ஆன் வாசகங்களை நாம் விளங்கிக் கொள்வது எவ்வாறு என்ற வினா எழுகின்றது.

وَمِن قَومِ موسى أُمَّةٌ يَهدونَ بِالحَقِّ وَبِهِ يَعدِلونَ - الأعراف: ١٥٩

**"உண்மையைக் கொண்டு நேர்வழி பெற்று அதன் மூலம் நீதியும் செலுத்துகின்றவர்களும் (உம்மத்தினர்) மூஸாவின் சமுதாயத்தில் உள்ளனர்." (அஃராப் 7:159)**

மேலும் ஒரு வாசகம்:

لَيسوا سَواءً مِن أَهلِ الكِتابِ أُمَّةٌ قائِمَةٌ يَتلونَ آياتِ اللَّهِ آناءَ اللَّيلِ وَهُم يَسجُدونَ - آل عمران: ١١٣

**"(எனினும் வேதத்தையுடையோராகிய) அவர்கள் (எல்லோரும்) சமமல்லர். வேதத்தையுடையோரில் ஒரு சமுதாயத்தினர் (உம்மத்) (நேர்மைக்காக) நிற்கிறார்கள். இரவு நேரங்களில் அல்லாஹ்வின் வசனங்களை ஓதுகிறார்கள். இன்னும் (இறைவனுக்கு சிரம்பணிந்து) ஸஜ்தா செய்கிறார்கள்." (ஆல இம்ரான் 3:113)**

மற்றுமோர் இடத்தில்,

وَلَو أَنَّهُم أَقاموا التَّوراةَ وَالإِنجيلَ وَما أُنزِلَ إِلَيهِم مِن رَبِّهِم لَأَكَلوا مِن فَوقِهِم وَمِن تَحتِ أَرجُلِهِم مِنهُم أُمَّةٌ مُقتَصِدَةٌ وَكَثيرٌ مِنهُم ساءَ ما يَعمَلونَ - المائده: ٦٦

**"இன்னும் அவர்கள் தவ்ராத்தையும் இன்ஜீலையும் இன்னும் தம் இறைவனிடத்திலிருந்து தங்களுக்கு இறக்கப்பட்டதையும் நிலைநாட்டியிருந்தால் அவர்கள் மேலே (வானத்தில்) இருந்தும் தம் பாதங்களுக்கு அடியில் (பூமியில்) இருந்தும் (இன்பத்தைப்) புசித்திருப்பார்கள். அவர்களில் சிலர் (தாம்) நேர்வழியுள்ள உம்மத்தினராய் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் செய்யும் காரியங்கள் மிகக் கெட்டவையாகும்." (மாஇதா 5:66)**

அஹ்லுல் கிதாபுகள், மற்றும் ஏனைய முன்னைய சமூகங்களின் வரலாறுகளை மானுட சமூகத்துக்குக் கூறுவதன் மூலம், அவற்றிலிருந்து படிப்பினைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றே அல்-குர்ஆன் எதிர்பார்க்கின்றது. மக்கள் தமக்குள் பிளவுபட்டுப் பல குழுக்களாக மாறி, ஒவ்வொரு குழுவும் தமது நிலைப்பாட்டை மாத்திரம் சரிகண்டு வந்துள்ளமை போன்ற தவறுகளை மானுடம் விடக்கூடாது என்பதற்காகவே இவற்றைக் கூறியிருக்கின்றது. முன்னைய சமூகங்கள் அவர்களது வேதங்களில் இறக்கப்பட்ட மிகவும் தெளிவான, உறுதியான விடயங்களிலும் முரண்பட்டார்கள். அல்லாஹ்வே அவற்றை நேர்வழி என்றும் ஒளி என்றும் குறிப்பிட்டுள்ளான்.

إِنّا أَنزَلنَا التَّوراةَ فيها هُدًى وَنورٌ - المائده: ٤٤

**“நிச்சயமாக நாம் தான் தவ்ராத்தையும் இறக்கி வைத்தோம். அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன...” (மாஇதா 5:44)**

அவர்களுக்கு இறக்கப்பட்டவற்றிலும் அவர்கள் முரண்பட்டார்கள்; இறக்கப்பட்டவற்றுக்குக் கூறப்பட்ட விளக்கங்களிலும் முரண்பட்டார்கள். இந்த இரண்டினதும் அடிப்படையில் தான் அவர்களுள் பிளவுகள் தோன்றின. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்தின் முரண்பாடுகள் இறக்கப்பட்டவற்றுக்குச் சொல்லப்பட்ட விளக்கங்களில் மாத்திரமே ஏற்பட்டிருக்கின்றன.

ஆக, உம்மத் என்ற எண்ணக்கரு பல எண்ணக்கருக்களின் வலையமைப்புடன் சம்பந்தப்பட்டிருப்பதைக் கண்டு கொள்ளலாம். அதாவது, முரண்பாடு, பிரிவினை, குழுக்கள் போன்ற எண்ணக்கருக்களுடன். எனவே அல்-குர்ஆனில் ‘உம்மத்’ என்ற எண்ணக்கருவை மிகச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு அதனுடன் தொடர்புபட்ட ஏனைய எண்ணக் கருக்கள் தொடர்பிலும் விளக்கம் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது.

அல்-குர்ஆன் உம்மத் என்னும் எண்ணக்கருவை பிரிவினை, முரண்பாடு முதலியவற்றிற்கு எதிர்நிலையில் பயன்படுத்தியுள்ளமையை அவதானிக்கலாம்.

وَما كانَ النّاسُ إِلّا أُمَّةً واحِدَةً فَاختَلَفوا وَلَولا كَلِمَةٌ سَبَقَت مِن رَبِّكَ لَقُضِيَ بَينَهُم فيما فيهِ يَختَلِفونَ - يونس: ١٩

**“மனிதர்கள் யாவரும் (ஆதியில்) ஒரே உம்மத்தாகவே அன்றி வேறில்லை; பின்னர் அவர்கள் மாறுபட்டுக் கொண்டனர். உமது இறைவனிடமிருந்து (இம்மையின் கூலி மறுமையில் பூரணமாகக் கொடுக்கப் படும் என்ற) ஒரு வார்த்தை முந்தி ஏற்பட்டிருக்கா விட்டால் அவர்கள் எந்த விஷயத்தில் மாறுபட்டிருக்கின்றனரோ, அதைப்பற்றி அவர்களிடையே (இதற்குள்) முடிவு செய்யப்பட்டிருக்கும்.” (யூனுஸ் 10:19)**

மற்றோர் இடத்தில் அல்-குர்ஆன் கூறுகின்றது:

يا أَيُّهَا الرُّسُلُ كُلوا مِنَ الطَّيِّباتِ وَاعمَلوا صالِحًا إِنّي بِما تَعمَلونَ عَليمٌ وَإِنَّ هٰذِهِ أُمَّتُكُم أُمَّةً واحِدَةً وَأَنا رَبُّكُم فَاتَّقونِ فَتَقَطَّعوا أَمرَهُم بَينَهُم زُبُرًا كُلُّ حِزبٍ بِما لَدَيهِم فَرِحونَ - المؤمنون: ٥١ - ٥٣

**“(நம் தூதர்கள் ஒவ்வொருவரிடத்திலும்) தூதர்களே! நல்ல பொருள்களிலிருந்தே நீங்கள் உண்ணுங்கள்; (ஸாலிஹான) நல்லமல்களை செய்யுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன் (என்றும்)**

**இன்னும், நிச்சயமாக (சன்மார்க்கமான) உங்கள் உம்மத் (முழுவதும்) ஒரே உம்மத் தான். மேலும், நானே உங்களுடைய இறைவனாக இருக்கின்றேன். எனவே நீங்கள் எனக்கே அஞ்சுங்கள் (என்றும் கூறினோம்). ஆனால், அ(ச்சமுதாயத்த)வர்களோ தம் மார்க்க காரியத்தில் சிதறுண்டு, தமக்கிடையே பல பிரிவுகளாய் பிரிந்து, ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடம் இருப்பதைக் கொண்டே மகிழ்ச்சியடைபவர்களாக இருக்கின்றனர்." (முஃமினூன் 23:51–53)**

மேலும் அல்-குர்ஆனின் வாசகங்களைக் கவனியுங்கள்:

وَلتَكُن مِنكُمْ أُمَّةٌ يَدعونَ إِلَى الخَيرِ وَيَأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ عَنِ المُنكَرِ وَأُولئِكَ هُمُ المُفلِحونَ وَلا تَكونوا كَالَّذينَ تَفَرَّقوا وَاختَلَفوا مِن بَعدِ ما جاءَهُمُ البَيِّناتُ وَأُولئِكَ لَهُم عَذابٌ عَظيمٌ - آل عمران: ١٠٤ - ١٠٥

**"மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு உம்மத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர். (இறைவனின்) தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும் யார் தங்களுக்குள் பிரிவையுண்டு பண்ணிக் கொண்டு, முரண்பட்டு விட்டார்களோ. அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். அத்தகையோருக்குக் கடுமையான வேதனை உண்டு." (ஆல இம்ரான் 3:104–105)**

இவ்வாசகங்களில் வரும் 'பிரிதல்', 'முரண்படுதல்' என்பதன் கருத்து என்ன?

அல்-குர்ஆனின் கூற்றுப்படி முதலில் வருவது பிரிதல்; பின்னர் வருவது முரண்படுதல். நாமும் பிரிவினை என்ற கருத்தை முதலில் காண்போம். முஸ்லிம் சிந்தையில் மாற்றத்திற்கான மாதிரியாகக் காணப்படுவது பிரிவினை மாதிரியாகும்.

பிரிவினை என்ற கருத்தைத் தரும் 'பரக' (ف ر ق) எனும் அடிப்படைச் சொல் அல்-குர்ஆனில் எழுபது தடவை வந்துள்ளது. அவையனைத்தும் ஒன்றை விட்டு மற்றொன்று வேறுபடுதல் என்ற கருத்திலேயே அமைந்துள்ளன. சில இடங்களில் இந்தக் கருத்துக்குச் சற்றே மாறுபட்ட வகையில், பல பகுதிகளாகப் பிரித்தல், அதாவது மொத்தக் காரணி ஒன்றின் ஒரு பகுதி என்ற கருத்திலும் வந்துள்ளது. உதாரணமாக,

وَلا تَأكُلوا أَموالَكُم بَينَكُم بِالباطِلِ وَتُدلوا بِها إِلَى الحُكّامِ لِتَأكُلوا فَريقًا مِن أَموالِ النّاسِ بِالإِثمِ وَأَنتُم تَعلَمونَ - البقرة: ١٨٨

**“அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து (எந்த) ஒரு பகுதியையும் (பரிக்) அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்.” (பகரா 2:188)**

மற்றொரு வசனம்:

فَأَوحَينا إِلى موسى أَنِ اضرِب بِعَصاكَ البَحرَ فَانفَلَقَ فَكانَ كُلُّ فِرقٍ كَالطَّودِ العَظيمِ - الشعراء: ٦٣

**“உம் கைத்தடியினால் இந்தக் கடலை நீர் அடியும் என்று மூஸாவுக்கு வஹீ அறிவித்தோம். (அவ்வாறு அடித்ததும் கடல்) பிளந்தது. (பிளவுண்ட) ஒவ்வொரு பகுதியும் (பிர்க்) பெரும் மலை போன்று ஆகி விட்டது.” (ஷுஃஅரா 26:63)**

இன்னும் சில இடங்களில் சில அம்சங்களுக்கு மத்தியில் வேறுபடுத்தல், அதாவது ஒவ்வோர் அம்சமும் தனித்தனவாகக் காணப் படும் என்ற கருத்தில் வருகின்றது. இங்கு ஒன்று சேர்த்தல் என்பதற்கு எதிர்கருத்து தோற்றுகின்றது. உதாரணமாக:

وَقالَ يا بَنِيَّ لا تَدخُلوا مِن بابٍ واحِدٍ وَادخُلوا مِن أَبوابٍ مُتَفَرِّقَةٍ - يوسف: ٦٧

**“என் (அருமை) மக்களே! நீங்கள் ஒரே வாசல் வழியாக நுழையாதீர்கள்; வெவ்வேறு (முதபர்ரிகா) வாசல்களின் வழியாக நுழையுங்கள்...” (யூஸுஃப் 12:67)**

மேலும் ஒரு வசனத்தில் அல்-குர்ஆன் கூறுகின்றது:

قالَ هذا فِراقُ بَيني وَبَينِكَ سَأُنَبِّئُكَ بِتَأويلِ ما لَم تَستَطِع عَلَيهِ صَبرًا - الكهف: ٧٨

**“இது தான் எனக்கும் உமக்குமிடையே பிரிவு(க்குரிய நேரம்: பிராக்) ஆகும். எதைப் பற்றி நீர் பொறுமையாக இருக்க முடியவில்லையோ, அதன் விளக்கத்தையும் (இப்பொழுதே) உமக்குத் திட்டமாக அறிவித்துவிடுகிறேன் என்று அவர் கூறினார்.” (கஹ்ஃப் 18:78)**

எல்லா இடங்களிலும் எதிர்மறையான கருத்தில் மாத்திரம் இச்சொல் பயன்படுத்தப்பட்டது எனக் கூறுவதற்கில்லை. சில இடங்களில் சத்தியத்தில் இருப்பவர்களையும் அசத்தியத்தில் இருப்பவர்களையும் வேறுபடுத்திக் காட்டவும் இது பயன்பட்டுள்ளது.

قالَ رَبِّ إِنّي لا أَملِكُ إِلّا نَفسي وَأَخي فَافرُق بَينَنا وَبَينَ القَومِ الفاسِقينَ - المائده: ٢٥

**"என் இறைவனே! என்னையும் என் சகோதரரையும் தவிர (வேறெவரையும்) நான் கட்டுப்படுத்த முடியாது. எனவே எங்களுக்கும் குற்றம் புரிந்த இந்த சமுதாயத்திற்கும் மத்தியில் நீ தீர்ப்பளிப்பாயாக என்று மூஸா கூறினார்." (மாஇதா 5:25)**

மற்றோர் இடத்தில்,

وَكَذلِكَ أَوحَينا إِلَيكَ قُرآنًا عَرَبِيًّا لِتُنذِرَ أُمَّ القُرى وَمَن حَولَها وَتُنذِرَ يَومَ الجَمعِ لا رَيبَ فيهِ فَريقٌ فِي الجَنَّةِ وَفَريقٌ فِي السَّعيرِ وَلَو شاءَ اللَّهُ لَجَعَلَهُم أُمَّةً واحِدَةً وَلٰكِن يُدخِلُ مَن يَشاءُ في رَحمَتِهِ وَالظّالِمونَ ما لَهُم مِن وَلِيٍّ وَلا نَصيرٍ - الشورى: ٧ - ٨

**"அவ்வாறே நகரங்களின் தாய்க்கும் (மக்காவுக்கும்) அதனைச் சுற்றியுள்ளவற்றுக்கும் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் எவ்வித சந்தேகமுமின்றி (யாவரும்) ஒன்று சேர்க்கப் படும் நாளைப் பற்றி அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் அறபி மொழியிலான இந்த குர்ஆனை நாம் உமக்கு வஹீ அறிவிக்கிறோம். ஒரு கூட்டம் சுவர்க்கத்திலும் ஒரு கூட்டம் நரகத்திலும் இருக்கும். அல்லாஹ் நாடியிருந்தால் நிச்சயமாக அவர்கள் (யாவரையும்) அவன் ஒரே உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியிருப்பான். எனினும் அவன் தான் நாடியவர்களைத் தன்னுடைய ரஹ்மத்தில் (கிருபையில்) நுழைவிப்பான். அநியாயக்காரர்களுக்குப் பாதுகாவலர்களோ, உதவி புரிபவர்களோ இல்லை." (ஷூரா 42:7–8)**

மேலும் அல்-குர்ஆன் கூறுகின்றது:

قُل أَمَرَ رَبّي بِالقِسطِ وَأَقيموا وُجوهَكُم عِندَ كُلِّ مَسجِدٍ وَادعوهُ مُخلِصينَ لَهُ الدّينَ كَما بَدَأَكُم تَعودونَ فَريقًا هَدى وَفَريقًا حَقَّ عَلَيهِمُ الضَّلالَةُ إِنَّهُمُ اتَّخَذُوا الشَّياطينَ أَولِياءَ مِن دونِ اللَّهِ وَيَحسَبونَ أَنَّهُم مُهتَدونَ - الأعراف: ٢٩ - ٣٠

**"என் இறைவன் நீதத்தைக் கொண்டே ஏவியுள்ளான். ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்கள் முகங்களை அவன் பக்கமே நிலைப்படுத்திக் கொள்ளுங்கள். வணக்கத்தை அவனுக்கே தூய்மையாக்கியவர்களாக அவனை அழையுங்கள். உங்களை அவன் துவக்கியது போலவே (அவனிடம்) நீங்கள் மீளுவீர்கள் என்று நீர் கூறும். ஒரு கூட்டத்தாரை அவன் நேர் வழியிலாக்கினான்; இன்னொரு கூட்டத்தாருக்கு வழிகேடு உறுதியாகி விட்டது. ஏனெனில் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வை விட்டு ஷைத்தான்களை பாதுகாவலர்களாக்கிக் கொண்டார்கள். எனினும் தாங்கள் நேர்வழி பெற்றவர்கள் என்று எண்ணுகிறார்கள்." (அஃராப் 7:29–30)**

அல்லாஹ் நாடியிருந்தால் பூமியில் உள்ள அனைவரும் ஈமான் கொண்டிருப்பார்கள். ஆனால் அவ்வாறு நிகழ்ந்ததில்லை. மனிதர்கள் அனைவரும் ஒரே வழியைப் பின்பற்ற மாட்டார்கள் என அல்-குர்ஆன் அடிக்கடி உணர்த்துவதை இது உறுதிப்படுத்துகின்றது. ஏனெனில் உலகம் சோதனைக்குரிய களம். மனிதர்கள் வேறுபட்ட தெரிவுகளை மேற்கொள்வார்கள். தேர்வு செய்து கொள்வதை அல்லாஹ் எமக்கு விட்டு வைத்துள்ளான்.

'பரக' என்ற அடிப்படைச் சொல் சத்தியத்தையும் அசத்தியத்தையும் வேறுபடுத்தவும் பயன்பட்டுள்ளது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

تَبَارَكَ الَّذي نَزَّلَ الفُرقانَ عَلى عَبدِهِ لِيَكونَ لِلعالَمينَ نَذيرًا - الفرقان: ١

**"உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்." (புர்கான் 25:1)**

மற்றோர் இடத்தில் கூறுகின்றது:

وَلَقَد آتَينا موسى وَهارونَ الفُرقانَ وَضِياءً وَذِكرًا لِلمُتَّقينَ - الأنبياء: ٤٨

**"இன்னும், நாம் மூஸாவுக்கும் ஹாரூனுக்கும் (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிக்கும் வேதத்தை நிச்சயமாக நாம் கொடுத்தோம். (அது) பயபக்தியுடையவர்களுக்கு ஓர் ஒளியாகவும் நினைவூட்டும் நற்போதனையாகவும் இருந்தது." (அன்பியா 21:48)**

மேலும் ஓர் இடத்தில் காணலாம்:

إِن كُنتُم آمَنتُم بِاللَّهِ وَما أَنزَلنا عَلى عَبدِنا يَومَ الفُرقانِ يَومَ التَقَى الجَمعانِ وَاللَّهُ عَلى كُلِّ شَيءٍ قَديرٌ - الأنفال: ٤١

**"...இரு படைகள் சந்தித்துத் தீர்ப்பளித்த (பத்ரு நாளில்) நாம் நம் அடியார் மீது இறக்கி வைத்த உதவியை (அல்லாஹ்வே அளித்தான் என்பதை) யும் நீங்கள் நம்புவீர்களானால் (மேல்கூறியது பற்றி) உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன்." (அன்பால் 8:41)**

இச்சொல்லின் எதிர்மறையான பிரயோகம் மார்க்கத்தில் ஏற்படுத்தப் படும் பிரிவினையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

إِنَّ الَّذينَ فَرَّقوا دينَهُم وَكانوا شِيَعًا لَستَ مِنهُم في شَيءٍ إِنَّما أَمرُهُم إِلَى اللَّهِ ثُمَّ يُنَبِّئُهُم بِما كانوا يَفعَلونَ - الأنعام: ١٥٩

**"நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் (நபியே!) உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே உள்ளது. அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான்." (அன்ஆம் 6:159)**

மேலும்,

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا فِطرَتَ اللَّهِ الَّتي فَطَرَ النّاسَ عَلَيها لا تَبديلَ لِخَلقِ اللَّهِ ذٰلِكَ الدّينُ القَيِّمُ وَلٰكِنَّ أَكثَرَ النّاسِ لا يَعلَمونَ مُنيبينَ إِلَيهِ وَاتَّقوهُ وَأَقيموا الصَّلاةَ وَلا تَكونوا مِنَ المُشرِكينَ - الروم: ٣٠ - ٣١

**"ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும். அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை. அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள். நீங்கள் அவன் பக்கமே திரும்பியவர்களாக இருங்கள்; அவனிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள்; தொழுகையையும் நிலை நிறுத்துங்கள்; இன்னும் இணைவைப்போரில் நீங்களும் ஆகிவிடாதீர்கள்." (ரூம் 30:30–31)**

மேலும் சில இடங்களைக் காண்போம்:

شَرَعَ لَكُم مِنَ الدّينِ ما وَصّى بِهِ نوحًا وَالَّذي أَوحَينا إِلَيكَ وَما وَصَّينا بِهِ إِبراهيمَ وَموسى وَعيسى أَن أَقيموا الدّينَ وَلا تَتَفَرَّقوا فيهِ كَبُرَ عَلَى المُشرِكينَ ما تَدعوهُم إِلَيهِ - الشورى: ١٣

**"நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்றாஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால் நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் என்பதே. இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது." (ஷூரா 42:13)**

وَالَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ وَلَمْ يُفَرِّقُوا بَيْنَ أَحَدٍ مِنْهُمْ أُولَئِكَ سَوْفَ يُؤْتِيهِمْ أُجُورَهُمْ وَكَانَ اللَّهُ غَفُورًا رَحِيمًا - النساء: ١٥٢

**“யார் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொண்டு, அத்தூதர்களில் எவரையும் பிரித்துப் பாகுபாடு செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களுடைய நற்கூலியை (அல்லாஹ்) அவர்களுக்குக் கொடுப்பான். அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையோனாகவும் இருக்கின்றான்.” (நிஸா 4:152)**

وَأَنَّ هَذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ - الأنعام: ١٥٣

**“நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும். ஆகவே இதனையே பின்பற்றுங்கள். இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை அவனுடைய வழியை விட்டுப் பிரித்துவிடும். நீங்கள் (நேர்வழியைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்கு போதிக்கிறான்.” (அன்ஆம் 6:153)**

இந்த வசனங்கள் முரண்பாட்டுக்கும் குழுவாதத்திற்கும் இட்டுச் செல்லுகின்ற பிரிவினையின் தோற்றுவாயைப் பற்றிப் பேசுகின்றன. அது தான் மார்க்கத்தைப் பிளவுபடுத்தித் துண்டாடுதல் ஆகும். வேறோர் இடத்தில் அல்-குர்ஆன், பிரிவினையைத் தோற்றுவிப்பவர்கள், அல்-குர்ஆனைத் துண்டு துண்டாக மாற்றுகின்ற பிரிவினை வாதிகள் எனக் குறிப்பிடுகின்றது.

இந்த உம்மத் தோற்றம் பெற்றுள்ளது, மார்க்கம் எனும் அடிப்படை மீதே. இந்த மார்க்கத்தில் ஏற்படுத்தப் படும் பிளவானது, முன்னைய சமூகங்களில் நிகழ்ந்தது போல இறக்கப்பட்டவற்றைத் திரிபுபடுத்தியதால் நடந்தாலும் அல்லது எமது சமூகத்தில் நிகழ்ந்தது போல இறக்கப்பட்டவற்றிற்குச் சொல்லப்பட்ட விளக்கங்களினால் நடந்தாலும் மார்க்கத்தின் மூலாதாரத் தன்மையில் குளறுபடியை ஏற்படுத்தி விடும். மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் அதனை உடன் உணர்வார்கள். இது முரண்பாட்டுக்கும் தொடர்ந்து மோதல்களுக்கும் இட்டுச் சென்றுவிடும்.

மார்க்கம் பிளவுபடுத்தப்படுவதன் மூலம், மார்க்கத்தின் மூலாதாரத் தன்மைக்கும் எமக்கும் இடையில் ஒரு தடை ஏற்பட்டு விடுகின்றது. அதன் அதிகாரமும் வினைத்திறனும் எமது வாழ்க்கையை விட்டும் விலகிவிடுகிறது. எம்மில் ஒருவர் மீது ஒருவர் அத்துமீறும் நிலையும் ஒருவருக்கொருவர் அநியாயம் இழைக்கும் நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. வெறுமனே அபிப்பிராயங்கள் என்ற இடத்துடன் மாத்திரம் இந்த விடயம்

நின்றுவிடுவதில்லை. அது மேற்சென்று அதன் மீது சமூகக் கட்டமைப்பு ஒன்று தோற்றம் பெறுகின்றது. இந்த முரண்பாடுகள் ஆழமானவை. முஸ்லிம் சமூகத்தில் கூட்டுணர்வை ஏற்படுத்த முடியாத அளவுக்கு அவை பிளவுகளை ஆழப்படுத்துகின்றன. மேலும் அல்லாஹ்வின் வேத நூலைக் கூடக் கட்டுப்படுத்தக் கூடிய சில அறிவுப் பாரம்பர்யங்களையும் உருவாக்கிவிடுகின்றன.

இஸ்லாமிய உம்மத்தை ஏனையவற்றிலிருந்தும் வேறுபடுத்துகின்ற முக்கிய காரணி, அதன் வேதநூல் அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பதாகும். எனவே, அனைத்தையும் ஒன்றிணைக்கும் அதன் அடிப்படை என்றும் நிலையாக, பாதுகாப்பாக இருக்கின்றது. மறுமை நாள் வரையும் மக்களுக்கான அல்லாஹ்வின் சான்றாக அது இருக்கும்.

நாம் மேற்கண்டவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது உம்மத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடிய ஒரு பிரிவினரால் மார்க்கத்தை நிலை நாட்ட முடியாது எனக் காணலாம். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, அதன் சிந்தனா உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்டது. அதாவது, மார்க்கத்தைப் பகுதியளவில் புரிந்து கொண்டுள்ளமை; இரண்டாவது, செயற்பாட்டில் தனது குறுகிய வட்டத்தைத் தாண்டிச் செல்ல அதனால் இயலாதுள்ளமை. அதன் பயணம், ஒன்றுபடுத்தலுக்கு எதிர்த் திசையை நோக்கியே அமைந்திருக்கின்றது. மார்க்கத்தை நிலைநாட்டுதல் என்பது பிரிவினையுடன் ஆற்றக் கூடிய ஒரு கருமமல்ல.

இந்தப் பின்னணியில் 'தாஇபா' எனும் ஒரு சிறு பிரிவினர் இந்தப் பணிக்குப் பொருத்தமானவர்களாக அமையக் கூடுமா?

சிறு பிரிவினர் என்ற கருத்தைக் குறிக்கும் தாஇபா என்ற சொல் அடிப்படையில் ஒன்று பிறிதொன்றைச் சுற்றிச் சூழ்ந்து கொள்வதையும் பின்னர் அதனைச் சார்ந்திருப்பதையும் குறிக்கின்றது. தாஇபா என்பதை மனிதர்களுடன் சம்பந்தப்படுத்தி நோக்கும் போது, யாரேனும் ஒருவரை அல்லது ஏதேனும் ஒன்றைச் சுற்றிச் சுழலும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்றது. மேலும் பல கருத்துகளும் உள. ஆடையின் ஒரு பகுதி என்ற கருத்திலும் தாஇபா வழங்கப்படுகின்றது. அது போலவே மனிதர்களுள் ஒரு தாஇபா என்பது அவர்களில் ஒரு பகுதியினரைக் குறிக்கும்.

அல்-குர்ஆனில் தாஇபா என்ற சொல், ஒரு பெரிய மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினரைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது:

وَإِذا كُنتَ فيهِم فَأَقَمتَ لَهُمُ الصَّلاةَ فَلتَقُم طائِفَةٌ مِنهُم مَعَكَ وَليَأخُذوا أَسلِحَتَهُم فَإِذا سَجَدوا فَليَكونوا مِن وَرائِكُم وَلتَأتِ طائِفَةٌ أُخرى لَم يُصَلّوا فَليُصَلّوا مَعَكَ وَليَأخُذوا حِذرَهُم وَأَسلِحَتَهُم - النساء: ١٠٢

**"(நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து அவர்களுக்கு தொழவைக்க நீர் (இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும். அவர்கள் உம்முடன் ஸஜ்தா செய்து (தொழுகையை முடித்ததும்) அவர்கள் (விலகிச் சென்று) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து நிற்கட்டும்). அப்பொழுது தொழாமலிருந்த மற்றொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழட்டும். ஆயினும் அவர்களும் தங்கள் ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம், தங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கட்டும்..." (நிஸா 4:102)**

*மற்றுமோர் இடத்தில் குர்ஆன் கூறுகின்றது:*

وَإِذ قالَت طائِفَةٌ مِنهُم يا أَهلَ يَثرِبَ لا مُقامَ لَكُم فَارجِعوا وَيَستَأذِنُ فَريقٌ مِنهُمُ النَّبِيَّ يَقولونَ إِنَّ بُيوتَنا عَورَةٌ وَما هِيَ بِعَورَةٍ إِن يُريدونَ إِلّا فِرارًا - الأحزاب: ١٢ - ١٣

**"மேலும், அவர்களில் ஒரு கூட்டத்தார் (மதீனாவாசிகளை நோக்கி) யஸ்ரிப் வாசிகளே! (பகைவர்களை எதிர்த்து) உங்களால் உறுதியாக நிற்க முடியாது. ஆதலால் நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறிய போது, அவர்களில் (மற்றும்) ஒரு பிரிவினர்: நிச்சயமாக எங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன என்று –அவை பாதுகாப்பற்றதாக இல்லாத நிலையிலும்– கூறி, (போர்க்களத்திலிருந்து சென்றுவிட) நபியிடம் அனுமதி கோரினார்கள். இவர்கள் (போர்க்களத்திலிருந்து தப்பி) ஓடுவதைத் தவிர (வேறெதையும்) நாடவில்லை." (அஹ்ஸாப் 33:12–13)**

தாஇபா என்பது, பெரியதொரு சமூகத்தின் ஒரு பகுதியினரைக் குறிக்கின்றது. என்றாலும் அந்தப் பெரிய சமூகத்தின் அடிப்படையைச் சுற்றிச் சுழல்வதாகவே இதுவும் இருக்கும். அறபு மொழியில் 'பிர்கா' எனும் பிரிவினர் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பெரிய சமூகத்தை விட்டும் பிரிந்து விட்ட மக்கள் கூட்டத்தினர். தாஇபா, பிர்கா எனும் இரு மக்கள் கூட்டத்தினரதும் செயற்பாடுகள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானவையாகும்.

தாஇபா என்பது பெரிய சமூகத்தை விட்டும் பிரியாமல், அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மக்கள் கூட்டம். எனவே பெரிய சமூகம் எனும் அடிப்படையைச் சுற்றியே இதுவும் சுழலும். மற்றொரு வகையில் கூறினால் பெரிய விசுவாச வட்டத்திற்குள் செயலபடும் சிறிய விசுவாச வட்டமாக இது காணப் படும். அந்த வகையில் சமூக மாற்றத்திற்கான ஒரு மாதிரியாக இருக்கவும் நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கவும்

இந்த வடிவம் பொருத்தமானது எனச் சிலர் கருதக் கூடும். ஆனால் அல்-குர்ஆன் தாஇபாவுக்கு அந்தப் பொறுப்பை வழங்கவில்லை. மட்டுமல்ல, இது பொருத்தமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். முஸ்லிம் உம்மத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்டுப் பல தாஇபாக்கள் இருந்து அவற்றுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றும் பட்சத்தில், அவற்றைத் தீர்த்து வைத்தல் என்ற முனைப்பில் உம்மத்தின் பணியை அல்-குர்ஆன் காட்டியுள்ளது.

وَإِن طائِفَتانِ مِنَ المُؤمِنينَ اقتَتَلوا فَأَصلِحوا بَينَهُما فَإِن بَغَت إِحداهُما عَلَى الأُخرى فَقاتِلُوا الَّتي تَبغي حَتّى تَفيءَ إِلى أَمرِ اللَّهِ فَإِن فاءَت فَأَصلِحوا بَينَهُما بِالعَدلِ وَأَقسِطوا إِنَّ اللَّهَ يُحِبُّ المُقسِطينَ - الحجرات: ٩

**“மு.ஃமின்களில் இரு சாரார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால், அவ்விரு சாராருக்கிடையில் சமாதானம் உண்டாக்குங்கள். பின்னர் அவர்களில் ஒரு சாரார் மற்றவர் மீது அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்வோர் அல்லாஹ்வுடைய கட்டளையின் பால் திரும்பும் வரையில், (அவர்களுடன்) போர் செய்யுங்கள். அவ்வாறு, அவர்கள் (அல்லாஹ்வின் பால்) திரும்பி விட்டால் நியாயமாக அவ்விரு சாராரிடையே சமாதானம் உண்டாக்குங்கள். (இதில்) நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்.” (ஹுஜுராத் 49:9)**

இங்கு அல்-குர்ஆன் மூன்றாவது ஒரு சாராரை நோக்கிக் பேசவில்லை; மு.ஃமின்களை நோக்கித் தான் பேசுகின்றது. அதாவது உம்மத்தை நோக்கிப் பேசுகின்றது. சண்டையிட்டுக் கொள்பவர்கள் மத்தியில் சமாதானம் செய்து வைப்பது உம்மத்தின் மீதான பொறுப்பாகவே இருக்கின்றது. சமாதானத்தின் பின்னர் ஒரு குழுவினர் மற்ற குழுவினர் மீது அத்துமீறினால், அத்துமீறிய குழுவினருடன் போராடுவதும் உம்மத்தின் மீதான பொறுப்பாகும். அந்த வகையில் உம்மத்தின் போராட்டம் அத்துமீறலை இல்லாமல் செய்யும் வகையில் அமைய வேண்டுமேயன்றி போராட்டத்தை இன்னமும் விரிவுபடுத்துவதாக அமையக் கூடாது. பின்னர் நீதியின் அடிப்படையிலேயே சமாதானம் செய்து வைக்கப்படவும் வேண்டும். ஏனெனில் இவர்கள் இந்தப் பிரச்சினையின் ஒரு தரப்பினர் அல்லர். அவர்கள் நீதி செலுத்த வேண்டுபவர்கள். எனவே அங்கு யாரையும் சேய்மைப்படுத்தாமல், யாரையும் இல்லாது செய்துவிடாமல் நீதி வழங்கல் நடைபெற வேண்டும்.

எனவே “உங்களில் ஓர் உம்மத்தினர் இருக்கட்டும்” (**ஆல இம்ரான் 3:104**) என்ற அல்-குர்ஆன் வசனத்தில் வரும் ‘உம்மத்’ என்ற சொல்லிலிருந்து, அது பெரிய சமூகத்தின் ஒரு பகுதியினர் என்ற கருத்தையோ அல்லது

பெரிய விசுவாச வட்டத்தினுள் செயல்படும் சிறிய விசுவாச வட்டம் என்ற கருத்தையோ நாம் வரைந்து கொள்ள இயலாது. உம்மத்தினரில் ஓர் உம்மத் என்பது உம்மத்தின் செயற்றிறன் பலவீனப் படும் பொழுது அதனை மீளப் புதுப்பித்தல் என்ற கருத்தையே தருகின்றது. உம்மத்தின் தடுமாற்றத்தின் போது மீள எழுந்து நிற்றலையும் அது பலவீனப் படும் போது மீள ஊதப் படும் கூட்டு உயிரோட்டத்தையுமே அது குறிக்கின்றது. ஒவ்வோர் அஸ்தமனத்தின் பின்னரும் எழும் புதிய உதயம், இரவிலிருந்து மீண்டு வரும் பகல் போல இருக்கிறது அது.

எனவே நாம் உம்மத்தை நிலைநாட்டுவதற்கே ஏவப்பட்டிருக்கின்றோம். ஏனெனில் அது தான் தீனை நிலைநாட்டுவதற்குத் தகுதியானதும் அங்கீகாரம் உள்ளதுமாகும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلتَكُن مِنكُمْ أُمَّةٌ يَدعونَ إِلَى الخَيرِ وَيأمُرونَ بِالمَعروفِ وَيَنهَونَ عَنِ المُنكَرِ وَأُولئِكَ هُمُ المُفلِحونَ وَلا تَكونوا كَالَّذينَ تَفَرَّقوا وَاختَلَفوا مِن بَعدِ ما جاءَهُمُ البَيِّناتُ وَأُولئِكَ لَهُم عَذابٌ عَظيمٌ - آل عمران: ١٠٤ - ١٠٥

**“மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர். (இறைவனின்) தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும் யார் தங்களுக்குள் பிரிவையுண்டு பண்ணிக் கொண்டு, மாறுபாடாகி விட்டார்களோ அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். அத்தகையோருக்குக் கடுமையான வேதனை உண்டு.” (ஆல இம்ரான் 3:104–105)**

மார்க்கத்தை நிலை நாட்ட வேண்டும் என அல்லாஹ் கட்டளையிட்ட வேளையிலும் அதனை மு.'.மின்கள் அனைவரையும் நோக்கி அதாவது உம்மத்தை நோக்கியே விளித்துள்ளதைக் காணலாம்:

شَرَعَ لَكُم مِنَ الدّينِ ما وَصّى بِهِ نوحًا وَالَّذي أَوحَينا إِلَيكَ وَما وَصَّينا بِهِ إِبراهيمَ وَموسى وَعيسى أَن أَقيموا الدّينَ وَلا تَتَفَرَّقوا فيهِ كَبُرَ عَلَى المُشرِكينَ ما تَدعوهُم إِلَيهِ اللَّهُ يَجتَبي إِلَيهِ مَن يَشاءُ وَيَهدي إِلَيهِ مَن يُنيبُ - الشورى: ١٣

**“நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்றாஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்**

**என்பதே. இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது. தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்.” (ஷூரா 42:13)**

எனவே நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதற்கான அடிப்படைப் பொறுப்பு உம்மத்துக்கே இருக்கின்றது. அது ஆட்சியாளருக்கோ, நாட்டுக்கோ, ‘பிர்கா’ எனும் ஒரு பிரிவுக்கோ, ‘தாஇபா’ எனும் சிறு பிரிவுக்கோ மட்டுப்பட்டதல்ல. ஆக, மேல் குடிச் சிந்தனைகளுக்கும் குழுவாத சிந்தனைகளுக்கும் அதிகாரச் சிந்தனைகளுக்கும் இங்கு இடமில்லை. எனவே சமூக மாற்ற சிந்தனை என்பது உம்மத்தை உள்ளடக்கிய வகையிலேயே கட்டியெழுப்பப்பட வேண்டும். என்றாலும் நிகழ்ந்திருப்பன தான் என்ன? அரசியல் பற்றிய எமது ஆரம்ப கால எழுத்துகளில் ஆட்சியாளர் முதன்மைப்படுத்தப்பட்டு உம்மத்தின் பெறுமானம் மறைந்து போய் விட்டது; நவீனகாலத்தில் நாடு முற்படுத்தப்பட்டு உம்மத் பிற்படுத்தப்பட்டுள்ளது; அது போலவே, மீட்சி பெற்ற பிரிவினர் என்ற சிந்தனை உம்மத் என்ற சிந்தனையை மழுங்கடித்துள்ளது.

‘உம்மத்’ என்ற மாதிரி தோற்றுவிக்கும் சமூக மாற்ற சிந்தனைக்கும் மீட்சி பெற்ற பிரிவினர் என்ற மாதிரி தோற்றுவிக்கும் சமூக மாற்ற சிந்தனைக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கின்றது. இந்த வேறுபாடு எதிர்ப்பு என்ற எல்லை வரை செல்லக் கூடியது. ஏனெனில் ஒவ்வொரு பிரிவும் மற்றையதன் எதிர்த்திசையிலேயே பயணிக்கின்றன. ‘உம்மத்’ என்ற மாதிரி அனைத்து வேறுபாடுகளையும் பன்மைத்துவங்களையும் அரவணைக்கின்ற, ஒருமுகப்பட்டதொரு பொதுப்பார்வையைத் தருகின்றது. மீட்சி பெற்ற பிரிவினர் என்ற மாதிரியோ, துண்டாடப்பட்ட பகுதியளவான சிந்தனை ஒன்றையே தருகின்றது.

### *1.* உம்மத்தை உயிர்ப்பித்தல்(4)

---

(4) மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காக உம்மத்தை நிலைநாட்டுதல் என்ற சிந்தனையை நாம் பல்வேறு அல்-குர்ஆன் வசனங்களை ஒன்றிணைத்து விளங்கிக் கொள்கின்றோம். அல்-குர்ஆன் கூறுகிறது: ”வேதம் வழங்கப்பட்ட அவர்கள் அனைவரும் சமமல்ல. அவர்களில் நேர்மையின் பக்கம் நிற்கும் ஒரு உம்மத் இருக்கின்றது. இரவு நேரங்களில் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறார்கள். அவர்கள் அவனுக்கு ஸுஜூது செய்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டு நன்மையை ஏவி தீமையைத் தடுக்கிறார்கள். அவர்கள் நன்மையான விடயங்களை விரைந்து செய்கிறார்கள். அவர்கள் ஸாலிஹானவர்களாவர்.” (**ஆல இம்ரான்:113–114**)

உம்மத்தை உயிர்ப்பித்தல் என்பதையும் அதனை மீள் உருவாக்குதல் என்பதையும் நாம் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். நபியவர்கள் தான் அல்லாஹ்வின் தூதர் என்றவகையில் அதனை உருவாக்கியவர். அந்த உருவாக்கத் தருணம் மீட்டப்பட முடியாதது; அல்-குர்ஆன் படிப்படியாக நபியவர்கள் மீது இறக்கப்பட்டமையுடன் அது நெருங்கிய சம்பந்தம் உடையது. இந்த உம்மத் இப்றாஹீமிய மார்க்கத்தின் அடிப்படைகள் மீது கட்டப்பட்டது. சான்று பகரும் உம்மத்தாகவும் சிறந்த மத்திம உம்மத்தாகவும் அமைந்த இது மறுமை நாள் வரை இந்தத் தூதைச் சுமக்கும் தகுதி கொண்டதாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஏனைய உம்மத்துகளைத் தன்னைச் சூழ இணைக்கும் முன்னுதாரண உம்மத்தாகவே வல்ல அல்லாஹ் இதனை அமைத்துள்ளான். நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம், ஐரோப்பிய மையவாத சிந்தனையை ஒத்த ஒரு மையவாத உம்மத் அல்ல இது என்பது.(5)

---

என்கின்றது. அதே போன்று தீனை நிலைநாட்ட வேண்டும் என்பதையும் அதில் பிரிவினை கூடாது என்பதையும் இணைத்துக் கூறியதில் இருந்தும் இதனை நாம் விளங்கிக் கொள்கின்றோம். ”நூஹுக்கு உபதேசித்த விடயத்தைத் தான் உங்களுக்கு மார்க்கமாக ஆக்கியிருக்கின்றான். உங்களுக்கு வஹியாக அறிவித்ததும் இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு உபதேசித்துள்ள விடயமும் என்னவெனின் மார்க்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதும் அதில் பிரிந்துவிடக் கூடாது என்பதுமாகும்” **(ஷூரா 13)** என்கின்றது.

*(5)* மையவாத சமூகங்கள், தம்மை ஏனைய சமூகங்களின் மையம் என்று கருதிக் கொண்டு மையம் உயர்வானது; ஓரங்களை ஆளக் கூடியது; மையத்தைச் சுற்றி ஓரங்கள் அனைத்தும் சுழல வேண்டும்; மையத்தின் ஏவல்கள் விலக்கல்களை அவை பின்பற்ற வேண்டும் என்று கருதுகின்றன. ஆனால் இஸ்லாம் சொல்லும் முன்னுதாரண உம்மத் என்பது தன்னை மையப்படுத்தி சிந்திப்பதில்லை. மாற்றமாக எல்லா உம்மத்தினரும் பெற்றுக் கொள்ள முடியுமான சில முன்னுதாரணமான பண்புகளுடன் காணப் படும் ஒரு உம்மத்தாகும். எந்த உம்மத்தினர் வேண்டுமானாலும் அதே பண்புகளைப் பெற்று இந்த உம்மத்தைப் போன்று மாற முடியும். முன்னுதாரண உம்மத் ஏனைய உம்மத்துகளின் அந்த மாற்றத்திற்கு வழி விட்டு, அதனை அடைந்து கொள்ள உதவியும் செய்யும். வேறு எந்த சமூகமும் தனக்குப் பக்கத்தில் நிற்கவும் தனது முன்னுதாரணப் பண்பில் பங்கு கொள்ளவும் முயற்சிக்கின்றது என்பதால் பொறாமைப்படவோ சங்கடப்படவோ மாட்டாது. முன்னுதாரண உம்மத் தன்னைப் பூமியில் உயர்ந்தது என்று கருதுவதோ அல்லது பூமியில் நாசங்கள் செய்வதையோ விரும்பமாட்டாது. மாற்றமாக அதன் மத்திம பண்பிலும் சிறந்த பண்பிலும் பிறருக்கு முன்னுதாரணமாக இருக்கும். அதனால் தான் அதனை மக்களுக்காக அனுப்பப்பட்ட உம்மத் என்கின்றோம். இதனை ஒரு முன்மாதிரி உம்மத்தாக அனுப்பியிருக்கின்றமையானது, எப்பொழுதும் பிற உம்மத்துகள் தன்னுடன் போட்டி போட்டு, உம்மத்துக்குரிய முன்மாதிரிப் பண்புகளைப்

உயிர்ப்பித்தல் என்பது ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அத்திவாரத்தின் மீது மேற்கொள்ளப் படும் ஒரு புனர் நிர்மாணமாகும். எனவே இந்த உயிர்ப்பித்தல் பணி, முன்னைய மாதிரியையும் அதன் விரிவான அம்சங்களையும் நுணுக்கமாக அறிந்து வைத்திருப்பது அவசியம். இல்லாது போயின் புனர் நிர்மாணப் பணி அதன் எல்லைகளையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளாதுவிடும். பனூ இஸ்ரவேலர்களிலும் அவர்களது தூதுத்துவத்திலும் நடைபெற்ற ஒரு புனர் நிர்மாணச் செயற்பாட்டை அல்லாஹு தஆலா எமக்கு ஓர் உதாரணமாக முன்வைத்துள்ளான். காலம் நீண்டு சென்றதன் காரணமாக அவர்களது உள்ளங்கள் கடுமையாகி விட்டன; கழுதைகள் புத்தகம் சுமப்பது போன்றே அவர்கள் தமது வேதத்தைச் சுமந்து கொண்டிருந்தனர். வேத வசனங்கள் தத்தம் இடங்களிலிருந்து திரிபுபடுத்தப்பட்டு விட்டன.

மூஸாவும் ஹாரூனும் தாவூதும் ஸுலைமானும் அவர்களுக்கு வழங்கிச் சென்ற போதனைகளை அவர்கள் மறந்து போயினர். அப்பொழுது அல்லாஹ் அம்மக்களுக்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் புனர் நிர்மாணம் செய்யும் ஒரு தூதுவராகவே அனுப்பி வைத்தான். அவர்களது உள்ளத்தில் மென்மையை மீட்டெடுத்து, அதன் விரக்திகளைப் போக்கி அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை மீள உறுதிப்படுத்தவே அன்னார் அனுப்பப் பெற்றனர். அவர்களது வாழ்வில் பசுமையையும் அவர்களது ஈமானிலும் ஷரீஆத்திலும் வினைத் திறனையும் கொண்டு வருதலே அன்னவரின் பணியாக இருந்தது. அதனால் தான், ‘ஷரீஆத்தை மாற்றுவதற்குத் தான் நீங்கள் வந்திருக்கின்றீர்களா?’ என வினவப்பட்ட வேளை அன்னார் கூறினார்கள்: ‘அதன் ஓர் எழுத்தின் கருத்தைக் கூட மாற்ற நான் வரவில்லை; பனூ இஸ்ரவேலர்கள் தூய மார்க்கத்திலும் ஷரீஆத்திலும் தடம் மாறியவற்றை விளக்கவே நான் வந்துள்ளேன்’. அதனால் தான் அல்-குர்ஆன் ஈஸா நபியைப் பற்றிக் கூறும் போது அவர் தனக்கு முன்னால் வந்த தவ்ராத்தை உண்மைப்படுத்த வந்தவர் எனச் சொல்கின்றது.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது வார்த்தைகளாக அல்-குர்ஆன் கூறுகின்றது:

---

பெற்றுக் கொள்வதற்கு அவற்றிற்கு உதவி செய்வது தனது கடமை என்பதை இந்த உம்மத் அறிந்து வைத்திருக்கும். மக்களை நேர்வழிப்படுத்தி அவர்களை இருளில் இருந்து ஒளியை நோக்கி எடுத்து வந்து, அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதை எடுத்துச் சொல்லி அவர்களை மானுட சகோதரத்துவத்துடன் நோக்குவது, மேற்கு மையவாதப் பார்வையை விடவும் மிகவும் வித்தியாசமானதாகும்.

وَمُصَدِّقًا لِما بَينَ يَدَيَّ مِنَ التَّوراةِ وَلِأُحِلَّ لَكُم بَعضَ الَّذي حُرِّمَ عَلَيكُم وَجِئتُكُم بِآيَةٍ مِن رَبِّكُم فَاتَّقُوا اللَّهَ وَأَطيعونِ - آل عمران: ٥٠

**“எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்ப்பிக்கவும் உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; என்னைப் பின்பற்றுங்கள்.” (ஆல இம்ரான் 3:50)**

பனூ இஸ்ரவேலர்கள் கடின உள்ளம் கொண்டோராய் இருந்தனர். புறத் தோற்றங்களே அவர்களுக்கு முக்கியமாக இருந்தன. நோக்கங்கள், மகாஸிதுகளைப் பொருட்படுத்தாது விட்டார்கள். கவனயீனம், மிதமிஞ்சிய பயன்பாடு ஆகிய இரு தீவிர நிலைகளும் இணைந்த புறத் தோற்ற மாயையில் அவர்கள் வீழ்ந்திருந்தனர். அவர்கள் தமது சட்டங்களில் கடைப்பிடித்த இந்தப் புறத் தோற்ற அமுலாக்கம் மக்களைப் பெரும் சிரமங்களுக்குள்ளாக்கியது. அருளாகவும் இலகுவாகவும் இருந்தன, சுமையாகவும் விலங்காகவும் மாறி விட்டன. இந்த சட்டங்கள் பற்றிய மானுடப் புரிதலைப் புனர் நிர்மாணம் செய்வதே ஈஸா நபியின் பணியாக இருந்தது.

மார்க்கத்தைப் புனர் நிர்மாணம் செய்வதில் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது வகிபங்கைத் தான் முஸ்லிம் உம்மத்தும் எடுக்க வேண்டியுள்ளது. இஸ்லாமிய ஷரீஆ பற்றிய புரிதலைப் புனர் நிர்மாணம் செய்து அதன் சுமைகளையும் விலங்குகளையும் அகற்றுவதாயின் அல்-குர்ஆனை முழு அலகாகக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. காலம் நீண்டு செல்லச் செல்ல ஷரீஆத்தைப் பொறுத்து எம் உள்ளம் இறுகிப் போய்விடக் கூடும்; அதன் சிறப்புகளையும் பரகத்துகளையும் இழந்து நாம் கைசேதப் படும் நிலை உருவாகவும் கூடும். இவற்றிலிருந்து நாம் மீட்சி பெற்றுக் கொள்ள ஒரு புனர் நிர்மாணச் செயற்பாடு எமக்கு அவசியமாக இருக்கின்றது.

காலம் நிலையானது; மாற்றமடைய மாட்டாது. எனவே குறிப்பிட்ட கடந்த காலப்பகுதி ஒன்றைப் பிற்பட்ட காலத்தில் மீள் உற்பத்தி செய்துவிடலாம் எனச் சிலர் கருதி வருகின்றனர். இது மிகத் தவறானது. காலம் பற்றிய அல்லாஹ்வின் விதிகளை அறிந்து கொள்ளாத நிலை இது. அல்லாஹ் வரையறை செய்துள்ள மறுமை எனும் எல்லையை அல்லது இலக்கை நோக்கி இந்தக் காலம் எம்மையெல்லாம் வழி நடாத்திச் சென்று கொண்டிருக்கின்றது. காலத்தின் இந்த ஓட்டத்தை நிறுத்தவோ, அல்லாஹ் விதித்தனவற்றில் மாற்றங்கள் செய்யவோ அவனைத் தவிர வேறு எவராலும் இயலாது. கடந்து செல்லும் எந்த

ஒரு நொடியையும் படைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்தாலும் மீள உற்பத்தி செய்ய முடியாது. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியின் நிகழ்வுகளை மீளக் கொண்டு வருவதோ அல்லது அதனைப் போன்ற ஒன்றை அதே வடிவில் கொண்டு வருவதோ இயலாத கருமம். அதனால் தான் அல்-குர்ஆனில் சொல்லப்பட்ட வரலாற்றுக் கதைகளை அவ்வவ்வாறே மீட்டிச் செயற்படுத்த வேண்டும் என அல்லாஹ் எம்மை அறிவுறுத்தவில்லை. எம்மிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டன இரண்டு விடயங்களே. ஒன்று, அந்தக் கதைகளின் மாந்தர்கள் செய்த நலன்களை அறிந்து கொள்வது. இரண்டு, இத்தகு செயற்பாடுகளில் அவர்களை எவ்வாறு முன்மாதிரியாகக் கொள்வது; அவர்கள் தவிர்ந்து கொண்ட தீங்குகள் என்ன? அவற்றை எவ்வாறு தவிர்ந்து கொண்டார்கள் என்பனவற்றையும் அறிந்து கொள்வது. சுருங்கக் கூறின் அந்த நிகழ்வுகளிலிருந்து படிப்பினைகள் பெறுவதைத் தவிர எம்மிடமிருந்து வேறு எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. அல்லாஹு தஆலா தனது நபிமார்கள், தூதுவர்களைக் கூட விதிகளனைத்துக்கும் கட்டுப்படவே செய்திருக்கின்றான். அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ - الزمر: ٣٠

**“நிச்சயமாக நீரும் மரிப்பவர்; நிச்சயமாக அவர்களும் மரிப்பவர்களே.” (ஸுமர் 39:30)**

நபியவர்கள் காலத்து நிகழ்வுகளையும் மீள் உற்பத்தி செய்தல் இயலாது. சிலர், அல்-குர்ஆன் இறங்கியதைப் போன்று அதனை மீள் வாசிப்பு செய்து, அல்-குர்ஆன் இறங்கிய காலத்திற்குரிய பரம்பரையினரே தாமும் எனக் கற்பனை செய்து கொண்டு, தம்மில் சிறந்த ஒருவரை நபியவர்களுக்குச் சமானமான பணியைச் செய்வதற்குத் தெரிவு செய்து கொண்டால் அல்-குர்ஆனை நேரடியாகப் பெற்றுக் கொண்ட ஒரு பரம்பரையை எமது காலத்தில் அல்லது வருகின்ற ஏதேனும் ஒரு காலத்தில் மீள் உற்பத்தி செய்துவிடலாம் என எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது எண்ணம் தவறானது. தனது வேதநூலுக்கும் அது இறங்கிய காலத்துக்கும் இடையிலான தொடர்பை அல்லாஹு தஆலா இல்லாமல் செய்துவிட்டதில் உள்ள நியாயத்தை அவர்கள் அறியாமல் இருக்கின்றனர். இறை வசனங்கள் இறங்கியமைக்கான காரணங்கள் அல்லது சந்தர்ப்பங்கள் என அழைக்கப்படுகின்ற விடயங்களை இல்லாது செய்வதன் மூலமே அவன் இதனைச் செய்திருக்கின்றான். அதாவது, அல்-குர்ஆன் குறித்த அந்தக் காலத்துடன் மாத்திரம் சம்பந்தப்பட்டதல்ல என்பதனை உணர்த்தியிருக்கின்றான்.

நபியவர்கள் தமது வாழ்வின் இறுதி வருடத்தில் ஜிப்ரில் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடன் இணைந்து அல்-குர்ஆனைச் சரிபார்த்தார்கள். இறை

கட்டளையின் பிரகாரம் இருவரும் அல்-குர்ஆனின் கட்டமைப்பை மீள் ஒழுங்குபடுத்தினார்கள். இன்றிருப்பது போன்ற நீண்ட, சிறிய, விரிவான நூற்றுப் பதினான்கு ஸூராக்களைக் கொண்ட வடிவத்தை அது பெற்றது. மானுட சமூகத்திடம் எதிர்பார்க்கப்படுவது அல்-குர்ஆனின் பூரணமான, மொத்த வடிவில் உறவாட வேண்டும் என்பதே. அல்லாது, அதனை மீள இறங்கச் செய்வதற்கான அவசியம் தற்போது இல்லை.

அல்-குர்ஆன் அதன் முழுமையான வடிவில் மக்கள் மத்தியில் இருக்கின்றது. அதனை அல்லாஹ்வே ஒன்றுதிரட்டி, பாதுகாத்து, ஒழுங்குபடுத்தி, விளங்கப்படுத்தியதன் பின்னர், இன்னும் அதனைப் புதுப்பிப்பதற்கான எந்தத் தேவையும் இல்லை. நபியவர்களது வஸிய்யத்தாக, மறுமை நாள் வரையில், மக்கள் மத்தியில் தூதுவரின் ஸ்தானத்தில் இருக்கப் போவது அல்-குர்ஆனாகும். அது தான் அவர்களது நேர்வழியின் மூலாதாரம். வரையறைகள் அற்ற, எல்லைகளுக்குள் கட்டுப்படாத, எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் அனைத்து மாற்றங்களையும் உள்வாங்கும் சக்தியுடைய கட்டமைப்பைக் கொண்டது அது. அறபு தீபகற்பத்தையும் தாண்டி ஏனைய சமூகங்களையும் ஒரே உம்மத்தாக இணைத்தது போல அதே அரவணைக்கும் சக்தியை அல்-குர்ஆன் தொடர்ந்தும் பெற்றிருக்கின்றது. அந்தப் பணி, மறுமை என்ற ஒன்றின் மூலம் மாத்திரமே இடைநிறுத்தப்பட முடியும். ஏனெனில் இந்தப் பூமியில் வாழும் அனைவரையும் நோக்கிப் பேசப்பட்ட வார்த்தைகளே அல்-குர்ஆன்.(6) அதன் அழைப்புக்கு அவர்கள் பதில் அளிப்பார்களாயின்

---

(6) இஸ்லாமிய தூதின் சிறப்பம்சங்களில் ஒன்று அது உலகப் பொது மறை என்பதாகும். இங்கு பொதுவானது என்பது, அனைத்து மனிதர்களுக்கும் உரியது என்ற கருத்தையும் தரும்; எல்லாக் காலங்கள் மற்றும் இடங்களுக்கும் உரியது என்ற கருத்தையும் தரும். இந்தத் தூது குறிப்பிட்ட ஒரு காலத்தின் குறிப்பிட்ட சமூகத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டதல்ல. கடந்த கால தூதுகளில் காணப்பட்டது போல், குறிப்பிட்ட ஒரு நகரத்துடனும் குறிப்பிட்ட ஒரு சமூகத்துடனும் அது மட்டுப்படவில்லை. மாற்றமாக இது முழு மனித இனத்துக்குமான அழைப்பாகும். இஸ்லாமிய சிந்தனையில் மனித இன ஒருமைப்பாடு என்பது தான் பன்மைத்துவ வாழ்வின் யதார்த்தமாகும். சமூகங்கள், கோத்திரங்கள், வாழிடங்கள் எவ்வளவு வேறுபட்டாலும் மனித இனத்தின் ஒருமைப்பாடு தான் மனித வாழ்வின் யதார்த்தம். மார்க்க ஒருமைப்பாடு இந்தத் தூதின் பண்புகளில் ஒன்று . தூதுவர்களினதும் தூதுத்துவங்களினதும் ஒருமைப்பாடு. இந்தத் தூது கொண்டு வந்த நம்பிக்கைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகும். மனித இனத்தை அல்லாஹ் ஒரே ஆன்மாவில் இருந்தே படைத்தான்; பின்னர் அதே ஆன்மாவில் இருந்து அதற்குரிய சோடியையும் படைத்து, இருவரில் இருந்தும் அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான்; பின்னர் மக்கள் சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் மாறினார்கள்.

முரண்பாட்டுக்கு முன்னர் ஒரே உம்மத்தாக இருந்தது போன்ற நிலைக்கு

அவர்கள் பரஸ்பரப் புரிந்துணர்வின் பின்னர் தமக்கு மத்தியில் உறவுப் பாலங்களை அமைத்துக் கொள்வார்கள். பின்னர் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து கொள்வார்கள். இமாம் ஷாபி அவர்கள் தனது ரிஸாலா என்னும் நூலில் இறுதி நபித்துவம் கடந்து வந்த கட்டங்களை விளங்கப்படுத்துகிறார்கள். அது நபியவர்களின் குடும்பத்தை நோக்கிப் பேசுவதில் இருந்து எவ்வாறு முழு மனித சமூகத்தை நோக்கிப் பேசும் வகையில் நகர்ந்து வந்தது என்பதை விளங்கப்படுத்துகிறார்கள். “அல்லாஹ் இந்தத் தூதுத்துவத்திற்காக நபியவர்களைத் தெரிவு செய்தான். தனது அருளினாலும் அவரது தூதை இறுதித் தூதாக அமைத்ததன் மூலமும் ஏனைய படைப்புகளை விடவும் அவரை சிறப்புக்குரியவராக மாற்றியது போல் அவரது தூதையும் முன்னைய தூதுகளை விடவும் பொது மறையாகவும் அமைத்துள்ளான். ஆரம்பத்தில் அவருக்கு ”உங்கள் நெருக்கமான குடும்பத்தினரை எச்சரியுங்கள்” **(ஷுஅரா:214)** என்று அல்-குர்ஆன் இறங்கியது. அவர் குறைஷிகளை அழைக்கத் தொடங்கினார். அவர்களைப் பார்த்து, ‘உங்களை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்விடத்தில் உங்களுக்கு நான் எதுவும் செய்துவிட முடியாது’ என்றார்கள். பின்னர் குறைஷிகளின் கிளைகளை அழைக்கத் தொடங்கினார்கள். ‘அப்துல் மனாப் குடும்பத்தினரே! அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக நான் எதுவும் செய்துவிட முடியாது’ என்றார்கள். அடுத்து, நகரங்களின் தாயான மக்காவாசிகளையும் அதனைச் சூழ இருப்பவர்களையும் நோக்கி அழைப்பு விடுக்குமாறு அவருக்குக் கட்டளை வந்தது. ”நகரங்களின் தாயையும் அதனைச் சூழ இருப்பவர்களையும் எச்சரிப்பதற்காக..” **(ஷூரா:7)** என்று அல்-குர்ஆன் கூறியது. பின்னர் தனது முழு சமூகத்தையும் அழைக்குமாறு கட்டளை வந்தது. ”இது உங்களுக்கும் உங்களது சமூகத்திற்குமான ஞாபகமூட்டலாகும். நீங்கள் இது பற்றி விசாரிக்கப்படுவீர்கள்” (ஸுக்ருப்:44) என்று அல்-குர்ஆன் கூறியது. ஒரு மனிதரின் சமூகம் என்பது பொதுவாக அவர் சார்ந்திருக்கும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். இங்கு அது அறபுகளைக் குறிக்கின்றது. பின்னர் இந்த்த தூது முழு படைப்பினங்களையும் நோக்கிப் பேசத் தொடங்கியது என்கின்றார்கள்.

இமாம் ஷாபிஈ அவர்கள் கூறியவற்றுக்கு நாம் சில விடயங்களை இணைக்க விரும்புகிறோம். அதாவது இந்தத் தூது அறபுகளை நோக்கி பேசியதன் பின்னர் அடுத்து இதுவரை தூதுத்துவம் கிடைக்காத சமூகங்களை நோக்கியே பேசியது. அவர்கள் அல்-குர்ஆனுக்கு முன்னர் ஒரு வேதத்தை ஓதியதில்லை. நபியவர்களுக்கு முன்னர் ஒரு தூதுவரை அறிந்ததில்லை. இதன்மூலம் இந்த சமூகங்கள் வேதம் வழங்கப்படாத சமூகங்கள் என்ற நிலையில் இருந்து வேதம் வழங்கப்பட்ட சமூகங்களாக மாற்றம் அடைகின்றன. பின்னர் முழு மனித சமூகத்தையும் நோக்கி அவர்களது மார்க்கத்தை சீர் செய்யுமாறும் அதனுடைய மூலாதாரத்தை ஒருமைப்படுத்துமாறும் இந்தத் தூது வழிகாட்டியது. அனைத்து சிந்தனைகளை விடவும் மார்க்கத்தின் சிந்தனையை உயர்ந்ததாகக் கருதுமாறும் கூறியது. தூதுத்துவம் இதனுடன் தான் முற்றுப் பெற்றது. அல்-குர்ஆன் கூறுகிறது: ”நாம் உங்களை அனைத்து மனிதர்களுக்கும்

அவர்கள் மாறிவிடலாம். மனித சமூகத்தை ஏகத்துவத்தில் ஒன்றிணைக்கும் அல்-குர்ஆனின் இலக்கு என்றும் நிலையானது. தனது அழைப்பை முன்வைக்கின்றது அல்-குர்ஆன்:

يا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ادخُلوا فِي السِّلمِ كافَّةً وَلا تَتَّبِعوا خُطُواتِ الشَّيطانِ إِنَّهُ لَكُم عَدُوٌّ مُبينٌ - البقرة: ٢٠٨

**"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தீனுல் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள். தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்." (பகரா 2:208)**

இது மறுமை நாள் வரையில் உலகத்தார் அனைவருக்கும் உரிய ஆதாரமாகும். சிலரைத் தவிர்த்து மற்றும் சிலருக்கான ஆதாரமல்ல.

இதன் அடிப்படையில் உம்மத்தை உயிர்ப்பித்தல் என்பது இரண்டு பரிமாணங்களில் நடைபெற வேண்டும். முதலாவது, குர்ஆனிய உம்மத்தில் இணைந்து கொண்டுள்ள அனைத்துப் பிரிவுகளையும் அணைக்கும் பகுதி. இதனைத் தான், எத்துனை வேறுபாடுகள் இருந்தாலும் ஒரே கிப்லாவைப் பின்பற்றுகின்றவர்கள் அல்லது உம்மதுல் இஜாபா என்று அழைப்பார்கள். இரண்டாவது, இந்த வட்டத்துக்கு வெளியில் இருப்பவர்கள். அதாவது இஸ்லாத்தின் சர்வதேசப் பரிமாணத்துடன் அல்லது இஸ்லாத்தின் தூது கிடைக்கப்பெற வேண்டிய கூட்டத்துடன் சம்பந்தப்பட்டது. இவர்கள், உம்மதுல் இஜாபாவில் இணைந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட வேண்டியவர்கள். இந்த இரண்டு பரிமாணங்களுக்கு இடையிலும் வெளிப்படையாக முரண்பாடு இருக்கின்ற பொழுதிலும் உம்மத்தை உயிர்ப்பிக்கும் வேலைத் திட்டம் இந்த இரு பரிமாணங்களையும் உள்ளடக்கி ஒன்று மற்றையதை மிகைக்காத வண்ணம் அமையப் பெறுமாக இருப்பின் மாத்திரமே அதனை இஸ்லாமிய மூலத்தைக் கொண்ட செயற்பாடு என நாம் அடையாளப்படுத்தலாம்.(7)

---

நன்மாராயம் சொல்பவராகவும் எச்சரிக்கையாளராகவும் அனுப்பி வைத்திருக்கிறோம்." **(ஸபா:28)**

(7) இதனால் தான் த∴வா என்ற விடயம் அது எந்தளவு இஸ்லாமியப் பண்பைப் பெற்றிருந்தாலும் எந்தவொரு நாட்டுக்கும் உரிய அரசியல் வேலைத் திட்டமாக, அமையாமல் இருப்பது அவசியமாகிறது. ஏனெனில் நாடு என்பதும் அரசியல் என்பதும் பௌதீகக் காரணிகளுக்குக் கட்டுப்பட்டவை. அதில் பிரதானமாக அரசியல் எல்லைகள் மற்றும் இருப்பு, செல்வாக்கு, எல்லைகள் போன்ற மோதல்களுடன் சம்பந்தப்பட்டவை. இவை த∴வாவுடன் நேரடியாக முரண்படக் கூடியவையுமாகும்.

### 2. நபியவர்கள் உருவாக்கியது ஓர் உம்மத்தையா அல்லது நாட்டையா?

மீண்டும் ஒரு முறை உருவாக்கக் கட்டத்திற்குச் சென்று வருவோம். சிலர், நபியவர்கள் ஒரு நாட்டை உருவாக்கியதாகக் கருதுகின்றார்கள். என்றாலும் ஒரு நாட்டை உருவாக்குவதென்பது நபியவர்களுக்கு ஏனையவர்களை விடவும் சிறப்பைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒரு விடயமல்ல. நாடுகளை உருவாக்கியோர் தான் எத்தனை! பின்னர் அவை இல்லாமலே போயுள்ளன. நபியவர்கள் ஓர் உம்மத்தை உருவாக்கினார்கள் என்ற விவாதங்கள் அற்ற, தெளிவான உண்மையை அவர்கள் மறந்து விட்டார்கள்.

நவீன காலத்தில் மாற்றத்திற்காக உழைக்கும் இஸ்லாமிய இயக்கங்கள் தமது பிரதானமானதொரு சிந்தனையாகக் கொண்டிருப்பது, நபியவர்கள் இஸ்லாத்திற்கான நாட்டை உருவாக்கினார்கள்; அதன் மூலம் தீனை நிலைநாட்டவும் த.்.வாவின் அடிப்படைகளை ஸ்திரப்படுத்தவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பதாகும். அதாவது நாட்டை உருவாக்குவதென்பது ஓர் இறை கட்டளை; அது சமூக, அரசியல் தேவைகளுக்கு ஏற்ப நடைபெறுகின்ற இயல்பான ஒரு வளர்ச்சியல்ல. அந்த வகையில் இஸ்லாம் என்பது ஏக காலத்தில் மார்க்கமும் நாடும் ஆகும். இதன் அடிப்படையில் நாடு என்பது ஒரு மூல விவகாரமாக மாறுகின்றது. ஆக, இஸ்லாத்துக்கு அதிகார சிந்தனை ஒன்று கட்டமைக்கப்படுகின்றது.

இந்த கூற்றுகளைச் சற்றே மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருக்கின்றது. நபியவர்கள் ஒரு நாட்டை உருவாக்கினார்களா? இல்லையா என்ற வாதத்துக்குள் நுழையாமல் அன்னாரது வாழ்வில் இந்த அதிகாரக் கட்டமைப்பு இருக்கவில்லை என்பதற்கான ஆதாரத்தை முன்வைப்பது மாத்திரம் போதுமானது என நினைக்கின்றோம். அதிகாரக் கட்டமைப்பு இரண்டு மட்டங்களைக் கொண்டது. ஒன்று தீர்மானம் எடுக்கும் மேல் மட்டம்; மற்றையது, செயற்படுத்தும் கீழ் மட்டம். நபிகளாரின் வாழ்விலும ஸஹாபாக்களுடனான அன்னாரின் உறவாடலிலும் இது போன்ற ஒரு கட்டமைப்பைக் காண இயலவில்லை. அல்-குர்ஆன் கூறுகின்றது:

مُحَمَّدٌ رَسولُ اللَّهِ وَالَّذينَ مَعَهُ أَشِدّاءُ عَلَى الكُفّارِ رُحَماءُ بَينَهُم - الفتح: ٢٩

---

அதே சமயம் த.்.வாவின் பொறுப்புகளும் சுமைகளும் ஒரு நாட்டைப் பொறுத்தவரை, அது எவ்வளவு பெரிய நாடாக இருந்தாலும் பாரமானவை. இந்தக் கருத்து அரசியல், அல்-குர்ஆனின் பெறுமானங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று சொல்வதுடன் முரண்படவும் மாட்டாது.

**"முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார். அவருடன் இருப்பவர்கள், காபிர்களிடம் கண்டிப்பானவர்கள்; தங்களுக்கிடையே இரக்கமிக்கவர்கள்..." (பத்ஹ் 48:29)**

இந்த வசனம், நபிகளாருக்கும் அன்னவரின் ஸஹாபாக்களுக்கும் இடையில் உடனிருத்தல் வகை உறவு தான் இருந்திருக்கின்றது; வரையறையற்ற அடிபணிதலோ, கண்மூடித்தனமான தக்லீதோ இருக்கவில்லை என்பதை உணர்த்துகின்றது. அவர்கள் தோழர்களே அன்றி பின்பற்றாளர்கள் அல்லர். அனைத்து விடயங்களிலும் அவர்கள் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். தமக்கு மத்தியில் பரஸ்பரம் இரக்கம் காட்டிக் கொள்கின்றார்கள். அல்லாஹ் தனது தூதுவருக்கு ஏவியன தவிர்த்து அவர்கள் கட்டளை இடுபவரும் கட்டளையைப் பின்பற்றுபவரும் இல்லை. இந்த விடயத்தில் அல்லாஹ்வால் நபியவர்கள் கட்டளையிடப்படுவது போல் தான் தோழர்களும் கட்டளையிடப்படுகின்றாகள். நபியவர்கள் அல்லாஹ்விடமிருந்து எத்திவைப்பவராகவும் விளங்கப்படுத்துபவராகவும் இருக்கின்றார்கள்.

இந்த வசனம் ஸூரா அல்-பத்ஹின் இறுதி வசனமாகும். அன்று அல்-குர்ஆன் இறங்கிய சமூகத்தின் சமூக, அரசியல் விவகாரங்களையும் மதீன சமூகத்தின் ஆன்மீக, பௌதீகப் பக்கங்களையும் இது பேசுகின்றது. ஆரம்பத்தில் ஈமானைப் பற்றியும் மு.்.மின்களுக்கும் முனாபிக்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டையும் விளக்குகின்றது. இந்தப் பீடிகையுடன், தூதுவருக்குச் சத்தியப் பிரமாணம் செய்கின்றவர்கள், அல்லாஹ்வுக்குச் சத்தியப் பிரமாணம் செய்பவர்களாவர் என்கின்றது. நபியவர்கள் எந்த ஒரு தலைவரையும் போன்றவரல்லர். அன்னவரை மானுட தலைவர்களுக்கு ஒப்பிட முடியாது. எந்தத் தலைவரையும் நபியவர்களுக்கு ஒப்பீடு செய்வதும் தகாது. ஒரு ஜமாஅத்தின் அல்லது கட்சியின் அல்லது சமூகத்தின் தலைவர்களுள் எவரும் நபியவர்களுக்கும் அவர்களது பண்புகளுக்கும் ஒப்பிடப்பட மாட்டார்கள். ஏனெனில் நபிகளார் அல்லாஹ்வின் தூதர். அவனது அனுமதிப்படி பிறர் கட்டுப்படக் கூடிய ஒருவராக அன்னவர் இருக்கின்றார்.

وَما أَرسَلنا مِن رَسولٍ إِلّا لِيُطاعَ بِإِذنِ- النساء: ٦٤

**"அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்ப்படிவதற்காகவேயன்றி (மனிதர்களிடம்) நாம் தூதர்களில் எவரையும் அனுப்பவில்லை..." (நிஸா 4:64)**

பெரும்பாலான இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் நபியவர்களுக்கும் தமது தலைவர்களுக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாட்டை இல்லாமல் செய்யவே முயற்சி செய்திருக்கின்றன. கட்டுப்படுவது கடமை என்பதிலும் கட்டளைகளைச் செயற்படுத்துவதில் எந்த வாதமும் மாற்றுக் கருத்தும்

முன்வைக்கக் கூடாது என்பதிலும் பெரும்பான்மையின் முடிவன்றி, தலைவரின் முடிவே இறுதி முடிவு என்பதிலும் அவர்கள் தமது தலைவர்களை நபிகளாருக்குச் சமானமானவர்களாக நோக்குகின்றார்கள். அது போலவே ஜமாஅத்தை அல்லது கட்சியை முஸ்லிம் உம்மத்துக்குச் சமானமாகக் கருதி, அதிலிருந்து இடைவிலகக் கூடாது என்றும் அவ்வாறு இடைவிலகுவது, அதற்கு எதிராகச் செயற்படுவது போலாகும் என்றும் கருதுகிறார்கள். இவையனைத்தும் நபிகளாருக்கு மாத்திரம் உரியவை; அன்னவரைத் தவிர வேறு எவருக்கும் வழங்கப்பட முடியாதன.

அடுத்து, முனாபிக்குகளில் பின்வாங்கியவர்கள் குறித்தும் கனீமத்துகளைச் சேர்க்கின்ற பொழுது எத்துணை உற்சாகமாக இருக்கின்றார்கள் என்பதையும் தியாகங்கள் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில் எவ்வாறு போலி நியாயங்களை முன்வைத்து தப்பிக் கொள்கின்றார்கள் என்பதையும் இந்த ஸூரா பேசுகின்றது. தொடர்ந்து மொத்தமான ஒரு பாய்ச்சலை ஸூரா சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, இதற்கு முன்னர் செயற்பட்டுக் கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட வட்டத்தை விட்டும் த.்.வா வெளியில் வருகிறது. இதற்கு முன்னர் த.்.வா எதிர் கொண்ட அனைத்து சவால்களும் அறபு தீபகற்பத்துக்குள்ளே ஆனவையாகும். அல்-குர்ஆன் கூறியது:

قُل لِلمُخَلَّفِينَ مِنَ الأَعرابِ سَتُدعَونَ إِلى قَومٍ أُولي بَأسٍ شَديدٍ تُقاتِلونَهُم أَو يُسلِمونَ

- الفتح: ١٦

**“பின் தங்கி விட்ட நாட்டுப்புறத்து அறபிகளிடம் நீங்கள் சீக்கிரத்தில் மிக்க பலசாலிகளான ஒரு சமூகத்தாரிடம் (அவர்களை எதிர்த்துப் போரிட) அழைக்கப்படுவீர்கள். அவர்களுடன் நீங்கள் போரிட வேண்டும். அல்லது முற்றிலும் பணிய வேண்டும்...” (பத்ஹ் 48:16)**

சாராம்சமாக, ஸூரதுல் பத்ஹ் எமக்கு அன்றைய மதீன சமூகத்தின் சமூக, அரசியல் கட்டமைப்பையும் அதன் வளர்ச்சி நிலையில் வெற்றி என்ற குறிப்பிடத் தக்க புதியதொரு கட்டத்தையும் விளக்குகின்றது. எவ்வாறாயினும் தீர்மானம் எடுக்கும் முறையானது அதிகாரப் படிநிலை ஒழுங்கில் அமைந்திருக்கவில்லை; உடனிருப்பு முறையிலேயே அமைந்திருந்தது. அதாவது நாம் முன்னர் கண்ட, அல்-குர்ஆன் கூறும் உடனிருத்தல் அணுகுமுறையிலேயே காணப்பட்டது.

ஹுதைபியா உடன்படிக்கையின் நிபந்தனைகள் தீமானமாகி விட்டன. முஸ்லிம்கள் எவ்வகையிலும் இணங்க இயலாத அம்சங்களைக் கொண்டிருந்த நிலைமை. இந்த சூழலில் அது எவ்வாறு நிறைவேறியது என்பதை நபியவர்களது ஸீரா எங்களுக்குச் சொல்லிக் காட்டுகின்றது.

நபியவர்கள் தாமாக அதைத் தீர்மானிக்கவில்லை; அல்லாஹ்வின் கட்டளைப்படியே செய்தார்கள். அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَهُوَ الَّذِي كَفَّ أَيدِيَهُم عَنكُمُ وَأَيدِيَكُم عَنهُم بِبَطنِ مَكَّةَ مِن بَعدِ أَن أَظفَرَكُم عَلَيهِم -
الفتح: ٢٤

**“இன்னும், அவன் தான் உங்களுக்கு அவர்கள் மீது வெற்றி அளித்த பிறகு, மக்காவினுள் அவர்களுடைய கைகளை உங்களை விட்டும் உங்கள் கைகளை அவர்களை விட்டும் தடுத்துக் கொண்டான்…” (பத்ஹ் 48:24)**

அந்த உடன்படிக்கையின்படி, அவர்கள் இந்த வருடம் மக்காவினுள் நுழைய முடியாது. குறைஷிகளிடமிருந்து தப்பித்து வரும் முஸ்லிம்கள் அவர்களிடமே திருப்பியனுப்பப்படுவார்கள். ஸஹாபாக்கள் நபிகளாரிடம் கேட்டார்கள்: ‘அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் இதனையா எழுதப் போகின்றீர்கள்?’ நபிகளார் கூறினார்கள்: ‘ஆம், எங்களிடம் இருந்து அவர்களிடம் செல்பவர்களை அல்லாஹ் எம்மை விட்டும் தூரமாக்கட்டும். அவர்களில் இருந்து எம்மிடம் வருவோர்க்கு அல்லாஹ் ஏதேனும் ஒரு வழியைக் காட்டுவான்.’ தாம் கொண்டு வந்த கால்நடைகளை அறுக்குமாறும் தமது தலைகளைச் சிரைத்துக் கொள்ளுமாறும் தமது ஸஹாபாக்களிடம் நபிகளார் கூறினார்கள். எவரும் அவற்றைச் செய்ய முன்வரவில்லை. அனைவரும் மனம் தளர்ந்து போயிருந்தார்கள். பின்னர் உம்மு ஸலமாவின் ஆலோசனைப்படி அல்லாஹ்வின் தூதர் தமது கால் நடையை அறுத்து, தலையையும் சிரைத்துக் கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து ஸஹாபாக்களும் தமது கால்நடைகளை அறுத்து மாறி மாறி தலைகளைச் சிரைத்துக் கொள்ளலானார்கள். மாற்றுக் கருத்துச் சொல்ல இடமில்லாத ஒரு விவகாரத்தில் கூட ஸஹாபாக்களது நடத்தை இவ்வாறு தான் இருந்தது. நபிகளாருடனான அவர்களது பிணைப்பு அடிபணிதல் அன்றி, உடனிருத்தல் என்ற வடிவிலேயே காணப்பட்டது. அல்லாஹு தஆலா அவர்களது உள்ளங்களை அன்பால் பிணைத்து வைத்திருந்தான்.

ஆட்சியாளர்களுக்கு அல்லது கலீபாவுக்கு உயர் அதிகாரத்தை வழங்கும் சிந்தனைகளை விட்டும் இது எத்துனை வித்தியாசமானது? அவை, அவர்களைப் பூமியில் அல்லாஹ்வின் நிழலாகவும் மார்க்கத்தினதும் உம்மத்தினதும் பாதுகாவலர்களாகவும் சித்தரிக்கின்றன. இதனைத் தான் நவீன காலத்தில் இஸ்லாமிய இயக்க வாதிகள் கையில் எடுத்திருக்கின்றார்கள். நவீன அரசு பற்றிய சிந்தனையையும் அனைத்தையும் கட்டியாளுகின்ற அதன் அதிகாரப் போக்கையும் இதன் அடிப்படையிலேயே வடிவமைத்திருக்கின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தூதைச் சுமப்பதற்கான ஓர் உம்மத்தைக் கட்டி எழுப்புவதற்காகத் தான் தமது வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதற்கு நாம் ஆதாரம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த உம்மத், உலகத்தார் அனைவரையும் நோக்கிச் செல்லக் கூடிய பாதையை அமைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنّاسِ - آل عمران: ١١٠

**“மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்...”[8] (ஆல இம்ரான் 3:110)**

த.்.வாவுக்கான தனது பாதையைத் திறந்து, உலகத்தாரை நோக்கிச் செல்லும் வழியில் இஸ்லாம் சாம்ராஜ்யங்களையும் தடுத்து நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் தான் தனது பாதையில் உள்ள பௌதீகத் தடைகளை இல்லாது செய்யும் வகையில், இஸ்லாத்தின் முன்னால், போராட்டம் என்னும் தெரிவையும் அல்-குர்ஆன் முன்வைத்திருந்தது.

تُقَاتِلونَهُم أَو يُسلِمونَ - الفتح: ١٦

**“...அவர்களுடன் நீங்கள் போரிட வேண்டும்; அல்லது முற்றிலும் பணிய வேண்டும்...” (பத்ஹ் 48:16)**

அப்பொழுது தான் விரும்பியவர்கள் தெளிவான ஆதாரத்துடன் ஏற்றுக் கொள்ளவும் முடியும்; மறுக்கவும் முடியும். அன்றிருந்த சாம்ராஜ்யங்களுடனான இந்த மோதல் ஒரு வகையில் இயல்பானதொரு தேவையாக, அரசின் தோற்றத்திற்கு வழி வகுத்தது எனலாம். பின்னர் நடைமுறையில் இருந்த போட்டியில் அதுவும் ஒரு சாம்ராஜ்யமாக வளர்ச்சியடைந்தது. அது ஓர் இறை கட்டளையாக இருக்கவில்லை.

(8) சில அல்-குர்ஆன் விரிவுரைகள் இந்த வசனம் ஸஹாபாக்களை நோக்கி மாத்திரமே பேசியுள்ளது என்று கூறியுள்ள அதேவேளை மற்றும் சில, இல்லை இது பொதுவானது என்கின்றன. அல்-குர்ஆனில் உம்மத் என்பதற்கான பொருளை நாம் விளங்கிக் கொண்டதன் அடிப்படையில், இந்த விளக்கங்கள் முரண்பாடானவையல்ல. ஏனெனில் உம்மத் என்பது இயங்கு தன்மை கொண்ட எப்பொழுதும் தன்னைப் புதுப்பிக்கும் தன்மை கொண்டதுமாகும். ஆம், நபியவர்கள் ஓர் உம்மத்தை உருவாக்கினார்கள். அந்த உம்மத் மதீனாவில் இருந்து தனது த.்.வாவை ஆரம்பித்து, அடுத்து அறபு தீபகற்பத்தை நோக்கியும் அடுத்த கட்டமாக அதனைத் தாண்டி வெளியிலும் சென்றது. அது தனது பணியைத் தொடர வேண்டும் எனின், அதன் கட்டமைப்பு தொடர்ந்தும் புனர் நிர்மாணம் செய்யப்படல் வேண்டும்.

இயல்பான முரண்பட்ட அமைப்புக் காரணமாக த:்.வாவுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்தது. ஏனெனில் அரசின் அழைப்பு த:்.வாவின் அழைப்புடன் முரண்படுகின்றது. அரசு என்பது ஒரு பௌதீகக் கட்டமைப்பாகும். அதற்கு, தனது இருப்பு, அபிவிருத்தி முதலியவற்றுடன் சம்பந்தப்பட்ட வலுச் சமநிலை சார்ந்த தேவைகள் இருக்கின்றன.(9) அரசு என்பது உங்களில் ஒருவராக இருக்கும்

(9) பௌதீக வலுச் சமநிலை சார்ந்த தேவை என்பது அடிப்படையில் தவறானது அல்ல. மாற்றமாக அதிகமான சந்தர்ப்பங்களில் த:்.வாவின் பாதையில் உள்ள தடைகளை அகற்றுவதற்கு அது காரணமாக அமையும். ஆனால் அவற்றிற்கிடையிலான இயல்பான முரண்பாட்டின் காரணமாக சில சமயங்களில் அது த:்.வாவின் பாதையில் ஒரு தடையாகவும் மாறிவிடுகின்றது. சில சமயம் இந்த இடைவெளியைத் தான் ஸூரது அபஸ எமக்குச் சுட்டிக் காட்டுவதாக இருக்க முடியும். அந்த ஸூரா சொல்லும் கதையில் நபியவர்கள் இந்தப் பௌதீக வலுச் சமநிலை பற்றிய தேவையில் சற்று கவனம் செலுத்தினார்கள். நபியவர்கள், குறைஷிகளின் தலைவர்கள் இஸ்லாத்தை ஏற்பது த:்.வாவுக்கான கதவுகளைத் திறந்துவிடும் என்றும் குறிப்பாக தமது தலைவர்களால் பாதிக்கப்படுவார்கள் என்று கருதப் படும் பலவீனர்களைப் பாதுகாக்க அது உதவும் என்றும் கருதினார்கள். அதனால் தன்னிடம் அறிவைத் தேடி வந்த பலவீனமான குருடரைப் புறக்கணித்து விட்டு தலைவர்களில் கவனம் செலுத்தினார்கள். இதனை அல்லாஹ் கண்டித்து, இந்த வேதம் ஒரு ஞாபகமூட்டல், அவன் நாடுகிறவர்களுக்கே அது பயனளிக்கும் என்றான். த:்.வா தான் பிரதான இலக்காகவும் ஏனையவை அனைத்தும் அதற்குத் துணை செய்யும் காரணிகள் என்ற நிலை இருந்த பொழுதே இந்த முரண்பாடு நடைபெற்றது. இந்நிலை மாறி த:்.வா பல்வேறு இலக்குகளில் ஒன்று என்று மாறினால் அல்லது த:்.வா இலக்கு என்று இல்லாமல் ஒரு வழிமுறையாக மாறினால் எவ்வாறு இருக்கும்.

சில சமயங்களில் எமது வரலாற்றில் த:்.வாவுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு முரண்பாட்டு எல்லை வரை சென்றமைக்கான உதாரணங்களைக் காணலாம். அரசு என்பது உம்மத்திற்கானது என்ற நிலையில் இருந்து மாறி ஒரு குடும்பத்திற்கானது என்ற குலப்பண்பு மிகைத்த ஒரு நிலையில், அங்கு த:்.வா பின்னோக்கிச் சென்று, சாம்ராஜ்யத்தை நோக்கிய அழைப்பு தான் முதன்மையானதாக மாறிவிடுகின்றது. யுத்த வெற்றிகளும் அவை த:்.வாவுடன் முரண்பட்டாலும் சாம்ராஜ்ய அழைப்பையே பலப்படுத்துகின்றன. இப்னு கல்தூன் அவர்கள் கூறுகின்ற வார்த்தைகளில் இருந்து நாம் இந்தக் கருத்தையே புரிந்து கொள்ள முடிகிறது. 'ஜாஹிலிய்யாக் காலத்திலும் இஸ்லாமியக் காலத்திலும் அறபுகளுக்கு மொரோக்கோ குறித்த பெரிய ஈடுபாடு இருக்கவில்லை. ஏனெனில் அங்குள்ள பர்பர் இனத்தவரைத் தான் தம்மை விட்டும் ஏனைய உம்மத்துக்களைத் தடுப்பதற்குப் பயன்படுத்தி வந்தார்கள்... பின்னர் இஸ்லாமிய மார்க்கம் வந்தது. அறபுகள் தமது மார்க்கத்தின் வெற்றியின் மூலம் ஏனைய உம்மத்துகளை வெற்றி கொண்டனர். அவர்கள் மொரோக்கோவுக்கும் வந்து

பொறுப்பானவர் என்ற நிலையிலிருந்து உங்களுக்குப் பொறுப்பானவர் அல்லது உங்களுக்கு எதிராகச் செயற்படுபவர் என்ற நிலைக்கு மாற்றமடையுமாயின், அரசு உம்மத்தை விட்டும் பிரிந்துவிடும்; த.ஃ.வாவுக்கு அது ஒரு சுமையாக மாறிவிடும். ஏனெனில் இங்கு அரசு, பிளவையும் மோதலையும் தூண்டி விடுவதொன்றாகவே ஆகி விட்டிருக்கும்.(10)

---

அவர்களது நகரங்களையும் கைப்பற்றினர். இதனால் பர்பர்களது கடுமையான போரை அவர்கள் எதிர் கொண்டனர்.

பர்பர்களது மார்க்கத்தையும் அவர்களது செயல்களையும் குழப்பிக் கொண்ட ஒரு நிலையை நாம் அவதானிக்கிறோம். அபூ முஹம்மத் இப்னு அபூ ஸைத் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: பர்பர்கள் தராபிலிஸுக்கும் தன்ஜாவுக்கும் இடையில் பன்னிரண்டு தடவைகள் மதம் மாறி விட்டனர். தாரிக் பின் ஸியாதும் மூஸா பின் நுஸைரும் பர்பர்களை மொரோக்கோவில் கலங்கடித்து விட்டு அவர்களில் அதிகமானவர்களை ஸ்பெய்னுக்கு எடுத்துச் செல்லும் வரை அவர்கள் இஸ்லாத்தில் உறுதியாக இருக்கவில்லை. ஸ்பெய்ன் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் அங்கேயே தங்கி விட்டனர். அதன் பின்னர் தான் மொரோக்கோவில் இஸ்லாம் நிலையாக மாறியது. பர்பர்கள் இஸ்லாத்திற்குக் கட்டுப்பட்டு மதம் மாறுவதை மறந்தார்கள். பின்னர் கவாரிஜ் சிந்தனைகள் அவர்களில் செல்வாக்குச் செலுத்தியது... அவர்கள் இபாழிய்யா சுப்ரிய்யா போன்ற பல பிரிவுகளாக மாறினர்... பின்னர் அறபு இளவரசர்களைக் கொலை செய்யும் அளவுக்கு சென்றார்கள். யஸீத் இப்னு அபூ முஸ்லிம் அவர்களை அவரது சில செயற்பாடுகளுக்காக பழிவாங்கும் வகையில் கொலை செய்தார்கள். ஹி. 122இல் ஹிஷாம் இப்னு அப்துல் மலிக்கின் காலத்தில் அப்துல்லாஹ் இப்னு ஹப்ஹாப் என்ற கவர்னருக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அதனையடக்கப் படையனுப்பி பர்பர்களைத் தோற்கடித்து அவர்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டதுடன், அவர்களது சொத்துக்கள் கனீமத்துக்களாகவும் மாற்றப்பட்டன... பர்பர்கள் தாம் முஸ்லிம்களுக்கு கனீமத்தாக மாறுவோம் என்பதனை உணர்ந்ததனால் தான் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்...

*(10)* உமையாக்களுடன் நடந்த பிரச்சினைகள் பின்னர் அப்பாஸிய்யாக்களுடனும் தொடர்ந்தன. பர்பர் என்னும் நோய் பரவி அரசுக்கு பெரும் தடையாக மாறினர். மேலுள்ள வசனங்கள் த.ஃ.வாவுக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாட்டின் தீவிரத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது அரசைப் பொறுத்தவரை ஓர் உம்மத்துக்குரிய அரசாகவன்றி ஒரு குடும்பத்துக்குரிய அரசாக மாறி, இன மற்றும் குல பேதங்களை வெளிப்படுத்தியது. த.ஃ.வாவைப் பொறுத்தவரை அறபி, அஜமி என்ற வேறுபாடு இல்லாமல் உலகத்தார் அனைவரையும் நோக்கிச் செல்லும் தனது பாதையை அமைத்துக் கொண்டது. இவ்விரு நிலைகளுக்கும் இடையில் தீவிரமான முரண்பாடு வெளிப்பட்டது. அதே போன்று மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளல் மற்றும் அநியாயக்கார அரசுக்குக் கட்டுப்படல் என்ற இரு நிலைகளுக்கும் மத்தியில்

எனவே உம்மத்தை நிலைநாட்டுவது தான் அடிப்படையானது. அரசை உருவாக்குவது அதன் கிளையாகத் தோன்றுவதாகும். இதற்கு மாற்றமாக நடைபெற முடியாது. இஸ்லாமிய அரசு என்ற பெயருடன் தோன்றும் ஓர் அரசு, உம்மத்தை அடிப்படையாகக் கொள்ளாதுவிடுமாயின், அது த.ஃவாவினதும் உம்மத்தினதும் செயற்பாடுகளை இல்லாது செய்வதாகவே அமையும். ஏனெனில் அது ஒரு பிரிவினருக்கான, குடும்பத்துக்கான, ஜமாஅத்துக்கான ஓர் அரசாகவே காணப் படும். அங்கு நலன்களுக்கு மத்தியில் முரண்பாடுகளும் தொடர்ந்து மோதல்களுமே பெருகும்.

அதிகமான இஸ்லாமிய இயக்கங்களின் இருக்கின்ற 'கிலாபத்' அரசை உருவாக்குவதென்பது உம்மத்தைப் புனர் நிர்மாணம் செய்யாமல் சாத்தியப்பட மாட்டாது. ஏனெனில் கிலாபத் என்னும் பிரதிநிதித்துவமானது ஓர் உம்மத்தின் பிரதிநிதித்துவமாகும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنَّاسِ - آل عمران: ١١٠

**"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்." (ஆல இம்ரான் 3:110)**

---

முரண்பாடு தென்பட்டது. உண்மையில் பர்பர்கள் பன்னிரண்டு தடவைகள் மதம் மாறினார்கள் என்பது அவர்கள் இஸ்லாத்தை மறுத்தார்கள் என்பது பொருளல்ல. மாற்றமாக அதிகாரத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்தமையாகவே காணப்பட்டது. இங்கு தான் கோத்திர அதிகார அரசு என்ற தர்க்கத்திற்கும் த.ஃவா என்ற தர்க்கத்திற்கும் இடையிலான தீவிரமான முரண்பாடு வெளிப்படுகிறது. ஆனால் இந்த முரண்பாடு த.ஃவாவுக்கும் உம்மத்தின் அரசுக்கும் இடையில் காணப்படவில்லை. ஏனெனில் உம்மத்தின் அரசு எப்பொழுதும் த.ஃவாவின் இலக்குகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. ஆனால் கோத்திர அதிகார அரசைப் பொறுத்தவரையில், அது தனது அதிகாரத்தை விரிவுபடுத்துவதிலேயே கவனம் செலுத்துகிறது.

இதனால் தான் டமஸ்கஸிலும் பின்னர் ஈராக்கிலும் காணப்பட்ட மத்திய அரசுகள் இயல்பிலேயே மொரோக்கோவில் நீடிப்பது சாத்தியப்படவில்லை. ஹி. 155இல் பனூ மித்ரார் அரசு அங்கு தோன்றியது. ஹி. 164இல் ருஸ்துமிய்யா அரசும் ஹி. 172இல் அதாரிஸா அரசும் ஹி. 184இல் அகாலிபா அரசும் தோற்றம் பெற்றன. அதாவது, ஆரம்பத்திலேயே கிலாபத் அரசிலிருந்து மொரோக்கோ விடுபட்டு விட்டது; ஒற்றுமையை நிலைநாட்டத் தவறி விட்டது; அதிகார ஒருமைப்பாடும் இல்லாமல் போய் விட்டது. மாற்றமாக ஒரு பிரிவினைக் காரணியாகவே அது காணப்பட்டது. இருந்தபோதிலும் உம்மத் அவர்களை உள்வாங்கிக் கொண்டது. த.ஃவா செயற்பாட்டின் காரணமாக அவர்களுடனான நெருக்கமும் உறவும் மேம்பட்டது. ஆனால் அதிகாரம் இந்த உறவுக்கு தொடர்ந்தும் தடையாகவே இருந்து வந்துள்ளது.

கிலாபத் என்பது உம்மத்தின் ஒருமைப்பாட்டையே வேண்டி நிற்கின்றது. அதிகார ஒருமைப்பாட்டையல்ல. அதிகார ஒருமைப்பாடு என்பது, கடந்த காலங்களில் காணக்கிட்டியது போல, அகன்று விரிந்த சாம்ராஜ்யம் ஒன்றினைத் தோற்றுவிக்கும். ஆனால் கிலாபத் அவ்வாறான ஒன்றைத் தோற்றுவிக்காது. அது எவ்வாறு சாத்தியமாகலாம்? அங்கிருப்பதெல்லாம் குறுகிய குழுவாதங்கள் மாத்திரமேயாகும். உம்மத்தில் இருக்கின்ற பன்முகத்தன்மைக்கு அங்கு இடம் இருக்காது.

கிலாபத் என்ற சிந்தனையை அல்-குர்ஆனில் தேடிப்பார்க்கும் ஒருவர் பல்வேறுபட்ட விளக்கங்களைக் கண்டு கொள்வார். க.ல.ப. (خ ل ف) என்ற அடிப்படைச் சொல் அல்-குர்ஆனில் நூற்றி இருபத்தைந்து தடவை வந்துள்ளது. அவற்றில் 'அல்லாஹ்வின் பிரதிநிதித்துவம்' என்ற கருத்தில் பத்துத் தடவை அது பதிவாகியுள்ளது. இவற்றை ஆய்வு செய்து பார்த்ததில் மூன்று பரிமாணங்களில் இக்கருத்தை விளங்க முடிகின்றது.

### முதலாவது பரிமாணம்: பூமியில் மனிதனின் பிரதிநிதித்துவம்

அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِذ قالَ رَبُّكَ لِلمَلائِكَةِ إِنّي جاعِلٌ فِي الأَرضِ خَليفَةً قالوا أَتَجعَلُ فيها مَن يُفسِدُ فيها وَيَسفِكُ الدِّماءَ وَنَحنُ نُسَبِّحُ بِحَمدِكَ وَنُقَدِّسُ لَكَ قالَ إِنّي أَعلَمُ ما لا تَعلَمونَ وَعَلَّمَ آدَمَ الأَسماءَ كُلَّها ثُمَّ عَرَضَهُم عَلَى المَلائِكَةِ فَقالَ أَنبِئوني بِأَسماءِ هٰؤُلاءِ إِن كُنتُم صادِقينَ قالوا سُبحانَكَ لا عِلمَ لَنا إِلّا ما عَلَّمتَنا إِنَّكَ أَنتَ العَليمُ الحَكيمُ قالَ يا آدَمُ أَنبِئهُم بِأَسمائِهِم فَلَمّا أَنبَأَهُم بِأَسمائِهِم قالَ أَلَم أَقُل لَكُم إِنّي أَعلَمُ غَيبَ السَّماواتِ وَالأَرضِ وَأَعلَمُ ما تُبدونَ وَما كُنتُم تَكتُمونَ - البقرة: ٣٠ - ٣٣

**"உம் இறைவன் வானவர்களை நோக்கி நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன் என்று கூறிய போது, அவர்கள் (இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப் போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள். அ(தற்கு இறை)வன் நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன் எனக் கூறினான். இன்னும் (இறைவன்) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான்; பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக்காட்டி, நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாயிருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள் என்றான். அவர்கள் (இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவை தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை.**

**நிச்சயமாக நீயே பேரறிவாளன்; விவேகமிக்கவன் எனக் கூறினார்கள். ஆதமே! அப்பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக! என்று (இறைவன்) சொன்னான். அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்த போது நிச்சயமாக நான் வானங்களிலும் பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவேன் என்றும் நீங்கள் வெளிப்படுத்துவதையும் நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா? என்று (இறைவன்) கூறினான்." (பகரா 2:30–33)**

ஸூரதுல் பகராவின் இந்த வசனங்கள் பிரதிநிதித்துவம் பற்றிய பொது அடிப்படைகள் குறித்துப் பேசுகின்றன. அதாவது மனிதப் பிரதிநிதித்துவம் குறித்துப் பேசுகின்றன. அல்லாஹ் ஏனைய படைப்பினங்களுக்கு வழங்காத பண்புகளை மனிதனுக்கு வழங்கி, இந்தப் பொறுப்பைச் சுமப்பதற்கு அவனைத் தகுதியானவனுமாக ஆக்கியதை இவை விவரிக்கின்றன. அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தித் துதித்தலில் மலக்குமார்கள் ஆதமை விடவும் முன்னிலை வகித்தாலும் இந்தப் பொறுப்பைச் சுமப்பதற்கு அவை போதுமானவையாக இருக்கவில்லை. இந்தப் பூமியைப் படைத்து, அதில் நுணுக்கமான ஒழுங்குகளையும் நிலையான விதிகளையும் ஏற்படுத்தி, அதன் படைப்புகளையும் சமநிலையில் அமைத்ததன் பின்னர், இதனை ஏதேனும் ஒரு நம்பிக்கைப் பொறுப்பில் வைக்க அல்லாஹ் நாடினான். பிரதிநிதித்துவம் என்பது, நம்பிக்கைப் பொறுப்பையும் உள்ளடக்கியிருக்கின்றது. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது கதையைப் பேசுகின்ற பொழுது அல்லாஹ் கூறுகின்றான்:

اخلُفني في قَومي وَأَصلِح وَلا تَتَّبِع سَبيلَ المُفسِدينَ - الأعراف: ١٤٢

**"...நீங்கள் என்னுடைய சமூகத்தாருக்கு என் கலீபாவாக இருந்து, (அவர்களைத்) திருத்துவீர்களாக! குழப்பமுண்டாக்குபவரின் வழியைப் பின்பற்றாதிருப்பீராக! என்று..." (அஃராப் 7:142)**

நம்பிக்கைப் பொறுப்பு எனக் கூறும் போது அதனை மேற்கொள்பவருக்கு ஏதேனும் ஒரு வடிவில் சில அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியிருக்கும். இதனால் தான் அந்தப் பிரதிநிதியூடாக குழப்பங்கள் ஏதும் நிகழலாம் என மலக்குகள் கருதினார்கள். தமக்குக் கட்டளையிடப்பட்டவற்றை மாத்திரமே செயற்படுத்துபவர்கள் மலக்குகள். அவர்களுக்குள் கேள்வி தோற்றிய இடம் இது தான். பிரதிநித்துவத்துக்கு ஆதம் தெரியப்பட்டமை அல்ல அவர்களது ஆதங்கம். இந்தப் பூமியில் அல்லாஹ் வைத்துள்ள விதிகள், இரகசியங்களுடன் ஒன்றித்துப் பயணிக்கக் கூடிய ஆற்றல்களை ஆதமுக்கு வழங்கியுள்ளமை தான் இந்தப் பொறுப்பைச் சுமப்பதற்கு தகுதியானவராக அவரை ஆக்கியுள்ளது. இந்த அமானிதத்தின் இயல்பு ஆதமுக்கு கற்பிக்கப்பட்டது:

وَعَلَّمَ آدَمَ الأَسماءَ كُلَّها - البقرة: ٣١

**“இன்னும் (இறைவன்) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் ஆதமுக்குக் கற்றுக் கொடுத்தான்...” (பகரா 2:31)**

இந்தப் பொறுப்பை ஏற்றுச் செயற்படுத்தவே அவனுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் இந்த நம்பிக்கைப் பொறுப்பானது மனிதனுக்கு இயல்பாயமைந்ததல்ல; அல்லாஹ்வால் வழங்கப் பெற்றதாகும். அல்லாஹ் மானுடர்க்கு வழங்கிய அதிகாரங்களின் எல்லைக்குள் நின்று அவன் தன் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். அதனை மீறிச் செல்ல அவனால் இயலாது. அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنَّ اللَّهَ يُمسِكُ السَّماواتِ وَالأَرضَ أَن تَزولا وَلَئِن زالَتا إِن أَمسَكَهُما مِن أَحَدٍ مِن بَعدِهِ - فاطر: ٤١

**“நிச்சயமாக வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகிவிடாதவாறு நிச்சயமாக அல்லாஹ்வே தடுத்துக் கொண்டிருக்கின்றான். அவை இரண்டும் விலகுமாயின், அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்த முடியாது...” (பாதிர் 35:41)**

பொறுப்பு வழங்கப்பட்ட சோதனைகளின் கட்டம் தொடர்கிறது. அதன் பின்னர் வருவது கூலி கொடுக்கும் கட்டம்.

### இரண்டாவது பரிமாணம்: சமூகங்களின் பிரதிநிதித்துவமும் உம்மத்துகள் மாறி மாறிப் பொறுப்பேற்றலும்

இந்த விடயம் குறித்துப் பல குர்ஆன் வசனங்கள் வந்துள்ளன:

وَإِلى عادٍ أَخاهُم هودًا قالَ يا قَومِ اعبُدُوا اللَّهَ ما لَكُم مِن إِلٰهٍ غَيرُهُ أَفَلا تَتَّقونَ قالَ المَلَأُ الَّذينَ كَفَروا مِن قَومِهِ إِنّا لَنَراكَ في سَفاهَةٍ وَإِنّا لَنَظُنُّكَ مِنَ الكاذِبينَ قالَ يا قَومِ لَيسَ بي سَفاهَةٌ وَلٰكِنّي رَسولٌ مِن رَبِّ العالَمينَ أُبَلِّغُكُم رِسالاتِ رَبّي وَأَنا لَكُم ناصِحٌ أَمينٌ أَوَعَجِبتُم أَن جاءَكُم ذِكرٌ مِن رَبِّكُم عَلى رَجُلٍ مِنكُم لِيُنذِرَكُم وَاذكُروا إِذ جَعَلَكُم خُلَفاءَ مِن بَعدِ قَومِ نوحٍ وَزادَكُم فِي الخَلقِ بَسطَةً فَاذكُروا آلاءَ اللَّهِ لَعَلَّكُم تُفلِحونَ - الأعراف: ٦٥ - ٦٩

**“இன்னும், ஆது கூட்டத்தாரிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை (நபியாக அனுப்பி வைத்தோம்). அவர், என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனையன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை. நீங்கள் (அவனுக்கு) அஞ்சி(ப் பேணி) நடக்க வேண்டாமா?**

**என்று கேட்டார். அவருடைய சமூகத்தாரில் நிராகரித்தவர்களின் தலைவர்கள், (அவரை நோக்கி) நிச்சயமாக நாங்கள் உம்மை மடமையில் (மூழ்கிக் கிடப்பவராகவே) காண்கின்றோம். மேலும் நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யர்களில் ஒருவராகக் கருதுகிறோம் என்று கூறினார்கள். அதற்கு அவர், என் சமூகத்தாரே எந்த மடமையும் என்னிடம் இல்லை. மாறாக, அகிலங்களின் இறைவனாகிய (அல்லாஹ்வின்) தூதன் ஆவேன் என்று கூறினார். உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக உங்களிலுள்ள ஒரு மனிதருக்கு உங்கள் இறைவனிடமிருந்து நற்போதனை வந்துள்ளது பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? நூஹுடைய சமூகத்தாருக்குப் பின்னர் அவன் உங்களைப் பூமியில் பின்தோன்றல்களாக்கி வைத்து, உங்கள் உடலில் பலத்தையும் அதிகமாக்கியதை நினைவு கூறுங்கள். எனவே அல்லாஹ்வின் அருட்கொடைகளை எல்லாம் நினைத்துப் பாருங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள் (என்றும் கூறினார்)." (அஃராப் 7:65-69)**

மேலும் ஓர் இடத்தில்,

وَإِلَى ثَمُودَ أَخَاهُمْ صَالِحًا قَالَ يَا قَوْمِ اعْبُدُوا اللَّهَ مَا لَكُمْ مِنْ إِلَٰهٍ غَيْرُهُ قَدْ جَاءَتْكُمْ بَيِّنَةٌ مِنْ رَبِّكُمْ هَٰذِهِ نَاقَةُ اللَّهِ لَكُمْ آيَةً فَذَرُوهَا تَأْكُلْ فِي أَرْضِ اللَّهِ وَلَا تَمَسُّوهَا بِسُوءٍ فَيَأْخُذَكُمْ عَذَابٌ أَلِيمٌ وَاذْكُرُوا إِذْ جَعَلَكُمْ خُلَفَاءَ مِنْ بَعْدِ عَادٍ وَبَوَّأَكُمْ فِي الْأَرْضِ تَتَّخِذُونَ مِنْ سُهُولِهَا قُصُورًا وَتَنْحِتُونَ الْجِبَالَ بُيُوتًا فَاذْكُرُوا آلَاءَ اللَّهِ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ قَالَ الْمَلَأُ الَّذِينَ اسْتَكْبَرُوا مِنْ قَوْمِهِ لِلَّذِينَ اسْتُضْعِفُوا لِمَنْ آمَنَ مِنْهُمْ أَتَعْلَمُونَ أَنَّ صَالِحًا مُرْسَلٌ مِنْ رَبِّهِ قَالُوا إِنَّا بِمَا أُرْسِلَ بِهِ مُؤْمِنُونَ - الأعراف: ٧٣ - ٧٥

**"ஸமூது கூட்டத்தாரிடம் அவர்கள் சகோதரராகிய ஸாலிஹை (நம் தூதராக அனுப்பி வைத்தோம்). அவர் (அவர்களை நோக்கி) என் சமூகத்தார்களே; அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை. இதற்காக, நிச்சயமாக உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு தெளிவான அத்தாட்சியும் வந்துள்ளது. அல்லாஹ்வுடைய இந்த ஒட்டகமானது உங்களுக்கு ஓர் அத்தாட்சியாக வந்துள்ளது. எனவே இதை அல்லாஹ்வின் பூமியில் (தடையேதுமின்றி) மேய விடுங்கள். அதை எத்தகைய தீங்கும் கொண்டு தீண்டாதீர்கள். அப்படிச் செய்தால் உங்களை நோவினை செய்யும் கடும் வேதனை பிடித்துக் கொள்ளும் என்று கூறினார். இன்னும் நினைவு கூறுங்கள்: ஆது கூட்டத்தாருக்குப் பின் உங்களைப் பூமியில் பின் தோன்றல்களாக்கி வைத்தான். பூமியில் உங்களை வசிக்கச் செய்தான். அதன் சமவெளிகளில் நீங்கள் மாளிகைகளைக் கட்டியும் மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்தும் கொள்கிறீர்கள். ஆகவே நீங்கள் அல்லாஹ்வின் இந்த அருட்கொடைகளை நினைவு**

கூறுங்கள். பூமியில் குழப்பம் செய்பவர்களாகக் கெட்டு அலையாதீர்கள் (என்றும் கூறினார்). அவருடைய சமூகத்தாரில் (ஈமான் கொள்ளாமல்) பெருமையடித்துக் கொண்டிருந்த தலைவர்கள் பலஹீனர்களாக கருதப்பட்ட ஈமான் கொண்டவர்களை நோக்கி நிச்சயமாக ஸாலிஹ் அவருடைய இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட தூதரென நீங்கள் உறுதியாக அறிவீர்களோ? எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், நிச்சயமாக நாங்கள் அவர் மூலம் அனுப்பப்பட்ட தூதை நம்புகிறோம் என்று (பதில்) கூறினார்கள்." **(அஃராப் 7:73–75)**

மற்றுமொரு வசனம்:

فَإِن تَوَلَّوا فَقَد أَبلَغتُكُم ما أُرسِلتُ بِهِ إِلَيكُم وَيَستَخلِفُ رَبّي قَومًا غَيرَكُم وَلا تَضُرّونَهُ شَيئًا إِنَّ رَبّي عَلى كُلِّ شَيءٍ حَفيظٌ - هود: ٥٧

"நீங்கள் (இவ்வுபதேசத்தைப்) புறக்கணிப்பீர்களாயின் எதற்காக நான் உங்களிடம் அனுப்பப் பட்டேனோ அதனை நிச்சயமாக நான் உங்களிடம் சேர்ப்பித்து விட்டேன். இன்னும் என்னுடைய இறைவன் நீங்கள் அல்லாத (வேறு) ஒரு சமூகத்தை உங்களுக்கு பதிலாக வைத்து விடுவான். அவனுக்கு எப்பொருளையும் கொண்டு நீங்கள் அவனுக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது. நிச்சயமாக என் இறைவன் யாவற்றையும் பாதுகாப்பவனாக இருக்கின்றான் (என்றும் கூறினார்)." **(ஹூத் 11:57)**

மேலும் அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَلَقَد أَهلَكنَا القُرونَ مِن قَبلِكُم لَمّا ظَلَموا وَجاءَتهُم رُسُلُهُم بِالبَيِّناتِ وَما كانوا لِيُؤمِنوا كَذلِكَ نَجزِي القَومَ المُجرِمينَ - يونس: ١٣

"(மனிதர்களே) உங்களுக்கு முன்னிருந்த எத்தனையோ தலைமுறையினர்களை, அவர்கள் அநியாயம் செய்த போது நிச்சயமாக நாம் அழித்திருக்கின்றோம். அவர்களிடம் அவர்களுடைய (இறை) தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். எனினும் அவர்கள் நம்பவில்லை. குற்றம் செய்யும் மக்களுக்கு நாம் இவ்வாறு கூலி கொடுக்கின்றோம்." **(யூனுஸ் 10:13)**

மேலும் குர்ஆன் கூறுகின்றது:

وَاتلُ عَلَيهِم نَبَأَ نوحٍ إِذ قالَ لِقَومِهِ يا قَومِ إِن كانَ كَبُرَ عَلَيكُم مَقامي وَتَذكيري بِآياتِ اللَّهِ فَعَلَى اللَّهِ تَوَكَّلتُ فَأَجمِعوا أَمرَكُم وَشُرَكاءَكُم ثُمَّ لا يَكُن أَمرُكُم عَلَيكُم غُمَّةً ثُمَّ اقضوا إِلَيَّ وَلا تُنظِرونِ فَإِن تَوَلَّيتُم فَما سَأَلتُكُم مِن أَجرٍ إِن أَجرِيَ إِلّا عَلَى اللَّهِ وَأُمِرتُ أَن أَكونَ مِنَ

الْمُسلِمِينَ فَكَذَّبوهُ فَنَجَّيناهُ وَمَن مَعَهُ فِي الفُلكِ وَجَعَلناهُم خَلائِفَ وَأَغرَقنَا الَّذينَ كَذَّبوا بِآياتِنا فَانظُر كَيفَ كانَ عاقِبَةُ المُنذَرينَ - يونس: ٧١ - ٧٣

“மேலும் (நபியே!) நீர் அவர்களுக்கு நூஹ்வின் சரித்திரத்தை ஓதிக் காண்பிப்பீராக! அவர் தம் சமூகத்தாரை நோக்கி, என் சமூகத்தாரே! நான் (உங்களிடையே) இருப்பதும் நான் (உங்களுக்கு) அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவூட்டுவதும் உங்களுக்குப் பளுவாக இருக்குமானால் நான் அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கை வைத்துள்ளேன். (உங்கள் முயற்சியில் ஏதேனும்) குறைவு செய்துவிட்டதாகப் பின்னர் உங்களுக்கு ஐயம் ஏற்படாதவாறு, நீங்கள் இணை வைப்பவற்றையும் ஒன்று சேர்த்துக் கொண்டு, நீங்கள் யாவரும் சேர்ந்து உங்கள் காரியத்தை முடிவு செய்யுங்கள். பின்னர் (எனக்கெதிராக) நீங்கள் திட்டமிடுவதை என்னில் நிறைவேற்றுங்கள். இதில் நீங்கள் தாமதம் செய்ய வேண்டாம் என்று கூறினார். ஆனால், நீங்கள் (என் உபதேசத்தைப்) புறக்கணித்து விட்டால் (எனக்கு எவ்வித இழப்புமில்லை) ஏனெனில் (இதற்காக) நான் உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை. எனக்குரிய கூலி அல்லாஹ்விடமேயன்றி (வேறெவரிடத்தும்) இல்லை. நான் அவனுக்கு (முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களில் (ஒருவனாக) இருக்குமாறே நான் ஏவப்பட்டுள்ளேன் (என்று கூறினார்). அப்பொழுதும் அவர்கள் அவரைப் பொய்யரெனவே கூறினார்கள். ஆகவே, நாம் அவரையும் அவருடன் இருந்தவர்களையும் கப்பலில் (ஏற்றிக்) காப்பாற்றினோம். மேலும் அவர்களைப் (பூமிக்கு) அதிபதிகளாகவும் ஆக்கினோம். நம்முடைய அத்தாட்சிகளைப் பொய்யெனக் கூறியவர்களை மூழ்கடித்தோம். அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்ட அவர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக.” **(யூனுஸ் 10:71–73)**

மேலும் அல்-குர்ஆன் அறிவுறுத்துகின்றது:

وَعَدَ اللَّهُ الَّذينَ آمَنوا مِنكُم وَعَمِلُوا الصّالِحاتِ لَيَستَخلِفَنَّهُم فِي الأَرضِ كَما استَخلَفَ الَّذينَ مِن قَبلِهِم وَلَيُمَكِّنَنَّ لَهُم دينَهُمُ الَّذِي ارتَضى لَهُم وَلَيُبَدِّلَنَّهُم مِن بَعدِ خَوفِهِم أَمنًا يَعبُدونَني لا يُشرِكونَ بي شَيئًا وَمَن كَفَرَ بَعدَ ذلِكَ فَأُولئِكَ هُمُ الفاسِقونَ - النور: ٥٥

“உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும் இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும் அவர்களுடைய அச்சத்தை திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும் அல்லாஹ் வாக்களித்திருக்கிறான். அவர்கள் என்னோடு (எதையும் எவரையும்) இணை வைக்காது. அவர்கள் என்னையே வணங்குவார்கள். இதன் பின்னர்

**(உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரிக்)கிறாரோ அவர்கள் பாவிகள் தாம்." (நூர் 24:55)**

அல்லாஹ் ஓரிடத்தில் வினவுகின்றான்:

أَمَّن يُجيبُ المُضطَرَّ إِذا دَعاهُ وَيَكشِفُ السّوءَ وَيَجعَلُكُم خُلَفاءَ الأَرضِ أَإِلٰهٌ مَعَ اللَّهِ قَليلًا ما تَذَكَّرونَ - النمل: ٦٢

**"கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும் உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகக் குறைவேயாகும்." (நம்ல் 27:62)**

இந்த வசனங்கள் சமூகங்களின் அல்லது உம்மத்துகளின் பிரதிநிதித்துவம் குறித்துப் பேசுகின்றன. ஏனைய படைப்புகளுக்கு மத்தியில் மனித இனத்தைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்தமை என்ற பொது அடிப்படையின் கிளையாக இது அமைகின்றது. இந்த வசனங்களில் மிகத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருப்பது போல் இந்தப் பிரதிநிதித்துவமானது ஒரு சிறப்புரிமையோ, இறுதிப்பேறோ அல்ல. சமூகங்களுக்கு மத்தியில் பொறுப்புகள் மாறி மாறி ஒப்படைக்கப் படும் ஒரு முறைமையாகும். ஒரு சமூகம் அடுத்த சமூகத்தை மிகைத்து பொறுப்பினைப் பெற்றுக் கொள்கின்ற போது அப்பொறுப்பு மேலும் கடுமையானதாகவும் பளுவானதாகவும் இருக்கும். அவர்கள் மத்தியில் தீமைகள் உச்சத்தைத் தொடும் வரை அவர்களுக்கு இப்பொறுப்பில் அவகாசம் இருக்கும். பின்னர் பொறுப்பு வேறு ஒரு சமூகத்துக்கு மாறிச் செல்லும். பின்னர் புதிய சமூகத்தார் எவ்வாறு செயற்படுகின்றார்கள் எனப் பார்க்கப் படும். இவ்வாறே தொடர்பறாது இந்த சுழற்சி இயங்கி வரும். ஆக இந்தக் கருத்திலான பிரதிநிதித்துவம் முஃமின்களுக்கோ, ஸாலிஹானவர்களுக்கோ உரியதல்ல. பலமும் பிறரை மிகைப்பதற்குரிய காரணிகளையும் பெற்ற எந்த ஒரு சமூகத்துக்கும் உரியதாகும். இதனை அடைந்து கொள்வார் எவருக்கும் அது சோதனையாகவும் அமைந்துவிடும்.

### மூன்றாம் பரிமாணம்: தனி மனிதப் பிரதிநிதித்துவம்

அல்லாஹு தஆலா குறிப்பிடுகின்றான்:

يا داوودُ إِنّا جَعَلناكَ خَليفَةً فِي الأَرضِ فَاحكُم بَينَ النّاسِ بِالحَقِّ وَلا تَتَّبِعِ الهَوى فَيُضِلَّكَ عَن سَبيلِ اللَّهِ - ص: ٢٦

**“(நாம் அவரிடம் கூறினோம்) தாவூதே நிச்சயமாக நாம் உம்மை பூமியில் பின்தோன்றலாக ஆக்கினோம். ஆகவே மனிதர்களிடையே சத்தியத்தைக் கொண்டு (நீதமாக)த் தீர்ப்பு செய்யும். அன்றியும் மனோ இச்சையைப் பின்பற்றாதீர். (ஏனெனில் அது) உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி கெடுத்துவிடும்...” (ஸாத் 38:26)**

இந்தத் தனிமனிதப் பிரதிநிதித்துவமானது இயற்கையை வசப்படுத்திக் கொடுத்தல் என்னும் கருத்தில் அமைந்த, வரையறுக்கப்பட்ட ஒன்றாகும. அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட இயற்கை மீதான ஓர் அதிகாரமாக இது காணப்படுகின்றது. இவ்வகைப் பிரதிநிதித்துவம் தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் அன்னவருக்குப் பின்னால் ஸுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அல்லாஹ்வின் ஷரீஆத்தின் அடிப்படையில் அமைந்த, மனிதத் தெரிவுக்குட்பட்ட மார்க்க அதிகாரம் ஒன்றைச் செயற்படுத்துவதல்ல இது. அல்-குர்ஆன் கூறுகின்றது.

وَلَقَد آتَينا داوودَ مِنّا فَضلًا يا جِبالُ أَوِّبي مَعَهُ وَالطَّيرَ وَأَلَنّا لَهُ الحَديدَ أَنِ اعمَل سابِغاتٍ وَقَدِّر فِي السَّردِ وَاعمَلوا صالِحًا إِنّي بِما تَعمَلونَ بَصيرٌ وَلِسُلَيمانَ الرّيحَ غُدُوُّها شَهرٌ وَرَواحُها شَهرٌ وَأَسَلنا لَهُ عَينَ القِطرِ وَمِنَ الجِنِّ مَن يَعمَلُ بَينَ يَدَيهِ بِإِذنِ رَبِّهِ وَمَن يَزِغ مِنهُم عَن أَمرِنا نُذِقهُ مِن عَذابِ السَّعيرِ - سبأ: ١٠-١٢

**“இன்னும், நிச்சயாக நாம் தாவூதுக்கு நம் (மேன்மையான) அருளை வழங்கினோம். மலைகளே! (அவர் தஸ்பீஹ் செய்யும் போது) அவருடன் (அத்துதியை) நீங்களும் எதிரொலியுங்கள். பறவைகளே! (நீங்களும் அவ்வாறே செய்யுங்கள் என்றோம்). மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம். வலுப்பமுள்ள போர்க் கவசங்கள் செய்வீராக! அவற்றின் கண்ணிகளை பலமுள்ளவையாக ஒழுங்குபடுத்திக் கொள்வீராக! நற்கருமங்கள் செய்வீராக! நீர் செய்பவற்றை உற்று நோக்குபவனாக இருக்கின்றேன் (என்றும் சொன்னோம்). (அவருக்குப் பின்னர்) ஸுலைமானுக்குக் காற்றை (வசப்படுத்திக் கொடுத்தோம்). அதனுடைய காலைப் பயணம் ஒரு மாத தூரமாகவும் மாலைப் பயணம் ஒரு மாத தூரமாகவும் இருந்தது. மேலும் நாம் அவருக்காக செம்பை ஊற்றுப் போல் உருகியோடச் செய்தோம். தம் இறைவனுடைய அனுமதிப்படி அவருக்கு முன் உழைப்பவற்றில் ஜின்களிலிருந்தும் (வசப்படுத்திக் கொடுத்தோம்). அவர்களில் எவர் (அவருக்கு ஊழியம் செய்வதில்) நம்முடைய கட்டளையைப் புறக்கணிக்கின்றாரோ, அவரைக் கொழுந்து விட்டெரியும் (நரக) வேதனையைச் சுவைக்கும்படி நாம் செய்வோம் (என்று எச்சரித்தோம்).” (ஸபா 34:10–12)**

மற்றோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَقد فتَنّا سُلَيمانَ وَأَلقَينا عَلى كُرسِيِّهِ جَسَدًا ثُمَّ أَنابَ قالَ رَبِّ اغفِر لي وَهَب لي مُلكًا لا يَنبَغي لِأَحَدٍ مِن بَعدي إِنَّكَ أَنتَ الوَهّابُ فَسَخَّرنا لَهُ الرّيحَ تَجري بِأَمرِهِ رُخاءً حَيثُ أَصابَ وَالشَّياطينَ كُلَّ بَنّاءٍ وَغَوّاصٍ وَآخَرينَ مُقَرَّنينَ فِي الأَصفادِ - ص: ٣٤ - ٣٨

**"இன்னும் நாம் ஸுலைமானைத் திட்டமாகச் சோதித்தோம். அவருடைய அரியணையில் ஒரு முண்டத்தை எறிந்தோம். ஆகவே அவர் (நம்மளவில்) திரும்பினார். என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப்பெருங் கொடையாளியாவாய் எனக் கூறினார். ஆகவே, நாம் அவருக்குக் காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அது அவருடைய கட்டளைப்படி அவர் நாடிய இடங்களுக்கெல்லாம் இலகுவாக (அவரைச் சுமந்து) சென்று கொண்டிருந்தது. மேலும், ஷைத்தான்களிலுள்ள கட்டடங் கட்டுவோர், முத்துக்குளிப்போர் ஆகிய யாவரையும்.. சங்கிலியால் விலங்கிடப்பட்டிருந்த வேறு பலரையும் (நாம் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம்)." (ஸாத்: 34–38)**

நபிகளாரது தூதுத்துவம் சர்வதேசப் பண்பு கொண்டது. என்றாலும் கூட, அல்-குர்ஆன், அன்னவரை பூமியில் தனது பிரதிநிதி என எங்கும் குறிப்பிடவில்லை. இதன் மூலம், தனிமனிதப் பிரதிநிதித்துவக் காலம் நிறைவு பெற்று விட்டது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இதனைத் தான்,

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ أَفَإِنْ مَاتَ أَو قُتِلَ انْقَلَبْتُمْ عَلَى أَعْقَابِكُمْ

-آل عمران 144

**"முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இறைவனின்) தூதரே அன்றி (வேறு) அல்லர். அவருக்கு முன்னரும் (அல்லாஹ்வின்) தூதர்கள் பலர் (காலம்) சென்று விட்டார்கள். அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால் நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா?" (ஆல இம்ரான் 3:144)**

என அல்-குர்ஆன் வினவுகின்றது.

தனிமனிதப் பிரதிநிதித்துவத்தில் மற்றொரு வகை இருக்கின்றது. அதாவது மனிதப் பிரதிநிதித்துவம் எனும் பொதுமையின் நீட்சியாக அமைந்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ் அருளியுள்ள விடயங்களில் அவன் நம்பிக்கைப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுவது அது. இந்தப் பிரதிநிதித்துவமும் சோதனையானது என்றே அல்-குர்ஆன் வழங்குகின்றது.

آمِنوا بِاللَّهِ وَرَسولِهِ وَأَنفِقوا مِمّا جَعَلَكُم مُستَخلَفينَ فيهِ فَالَّذينَ آمَنوا مِنكُم وَأَنفَقوا لَهُم أَجرٌ كَبيرٌ - الحديد: ٧

**"நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும், அவன் உங்களை (எந்த சொத்துக்கு) பின் தோன்றல்களாக ஆக்கியுள்ளானோ, அதிலிருந்து (அல்லாஹ்வுக்காகச்) செலவு செய்யுங்கள். ஏனெனில் உங்களில் எவர்கள் ஈமான் கொண்டு, (அல்லாஹ்வுக்காகச்) செலவும் (தானம்) செய்கிறார்களோ, அவர்களுக்கு (அவனிடம்) பெரியதொரு கூலி இருக்கிறது." (ஹதீத் 57:7)**

மேற்கண்ட வாசகங்கள் அனைத்தையும் ஆய்ந்து பார்க்கும் போது அவதானிக்க முடியுமாகவுள்ள ஒரு பொது உண்மையைப் பார்ப்போம். அல்லாஹ் தனது படைப்புகளுக்கு வழங்கும் பிரதிநிதித்துவமானது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கிய பிரதிநிதித்துவத்தைப் போன்றதல்ல என்பதுவே அந்த உண்மை. அல்-குர்ஆன் கூறுகின்றது:

وَقالَ موسى لِأَخيهِ هارونَ اخلُفني في قَومي وَأَصلِح وَلا تَتَّبِع سَبيلَ المُفسِدينَ -الأعراف: ١٤٢

**"...அப்போது மூஸா தம் சகோதரர் ஹாரூனை நோக்கி, நீங்கள் என்னுடைய சமூகத்தாருக்கு என் கலீஃபாவாக இருந்து, (அவர்களைத்) திருத்துவீர்களாக! குழப்பமுண்டாக்குபவரின் வழியைப் பின்பற்றாதிருப்பீர்களாக! என்று கூறினார்." (அஃராப் 7:142)**

மேலும் அது கூறுகின்றது:

وَلَمّا رَجَعَ موسى إِلى قَومِهِ غَضبانَ أَسِفًا قالَ بِئسَما خَلَفتُموني مِن بَعدي أَعَجِلتُم أَمرَ رَبِّكُم وَأَلقَى الأَلواحَ وَأَخَذَ بِرَأسِ أَخيهِ يَجُرُّهُ إِلَيهِ قالَ ابنَ أُمَّ إِنَّ القَومَ استَضعَفوني وَكادوا يَقتُلونَني فَلا تُشمِت بِيَ الأَعداءَ وَلا تَجعَلني مَعَ القَومِ الظّالِمينَ - الأعراف: ١٥٠

**"(இதனையறிந்த) மூஸா தன் சமூகத்தாரிடம் கோபத்துடன், விசனத்துடன் திரும்பி வந்த போது, (அவர்களை நோக்கி) நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த இக்காரியம் மிகவும் கெட்டது. உங்கள் இறைவனுடைய கட்டளை( வேதனை)யைக் (கொண்டு வர) அவசரப்படுகிறீர்களா? என்று கூறினார். பின்னர் வேதம் வரையப் (பெற்றிருந்த) பலகைகளை எறிந்து விட்டு, தம் சகோதரர் (ஹாரூன்) உடைய தலை( முடி)யைப் பிடித்துத் தம் பக்கம் இழுத்தார். அப்போது (ஹாரூன்) என் தாயின் மகனே! இந்த மக்கள் என்னை பலஹீனப்படுத்தி என்னை கொலை செய்யவும் முற்பட்டனர்.**

**ஆகவே (என்னுடைய) பகைவர்களுக்கு என்மூலம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி விடாதீர். இன்னும் என்னை அநியாயக்காரக் கூட்டத்தாருடன் சேர்த்து விடாதீர் எனக் கூறினார்." (அஃராப் 7:150)**

அல்லாஹ் தனது படைப்புகளுக்கு வழங்கும் பிரதிநிதித்துவமும் மனிதர்கள் தமக்கு மத்தியில் வழங்கிக் கொள்ளும் பிரதிநிதித்துவமும் வேறுபட்டாலும் அவற்றுக்கிடையிலும் ஓர் ஒற்றுமை இருக்கின்றது. அதாவது பிரதிநிதித்துவம் என்பதில் நம்பிக்கைப் பொறுப்பும் உள்ளடங்கியிருக்கின்றது. வெறுமனே ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நகரும் வாரிசுரிமை போன்றதல்ல அது:

فَأَرسَلَ فِرعَونُ فِي المَدائِنِ حاشِرينَ إِنَّ هؤُلاءِ لَشِرذِمَةٌ قَليلونَ وَإِنَّهُم لَنا لَغائِظونَ وَإِنّا لَجَميعٌ حاذِرونَ فَأَخرَجناهُم مِن جَنّاتٍ وَعُيونٍ وَكُنوزٍ وَمَقامٍ كَريمٍ كَذٰلِكَ وَأَورَثناها بَني إِسرائيلَ - الشعراء: ٥٣ - ٥٩

**"(அவ்வாறு அவர்கள் சென்றதும்) பிர்அவ்ன் (ஆட்களைத்) திரட்டுபவர்களைப் பட்டணங்களுக்கு அனுப்பி வைத்தான். நிச்சயமாக இவர்கள் மிகவும் சொற்பத் தொகையினர் தான். நிச்சயமாக இவர்கள் நம்மை(ப் பெருங்) கோபத்திற்குள்ளாக்கி விட்டனர். நிச்சயமாக நாம் அனைவரும் எச்சரிக்கையுடனே இருக்கிறோம். அப்போது நாம், அவர்களைத் தோட்டங்களை விட்டும் நீரூற்றுக்களை விட்டும் வெளியேற்றி விட்டோம். இன்னும், (அவர்களுடைய) பொக்கிஷங்களை விட்டும், கண்ணியமான வீடுகளை விட்டும் (அவர்களை வெளியேற்றினோம்). அவ்வாறு தான் (அவர்களை நடாத்தினோம்); அத்துடன் பனூ இஸ்ராயீல்களை அவற்றுக்கு வாரிசுகளாகவும் நாம் ஆக்கினோம்." (ஷுஅரா 26:53–59)**

ஆனால் வாரிசுரிமை என்பது அல்லாஹ்வுடன் சம்பந்தப்படுத்திப் பேசப் படும் பொழுது பிரதிநிதித்துவத்துக்கு எதிர்பொருள்பட பேசப்படுவதைக் காணலாம். ஆதம் நபி முதலாக அன்னவரது சந்ததிகளுக்குரிய பிரதிநிதித்துவம் முடிந்து விட்டால் பூமியும் அதில் உள்ள அனைவரும் அல்லாஹ்வுக்கே மீண்டும் சொந்தமாக வேண்டும்.

إِنّا نَحنُ نَرِثُ الأَرضَ وَمَن عَلَيها وَإِلَينا يُرجَعونَ - مريم: ٤٠

**"நிச்சயமாக நாமே, பூமியையும் அதன் மீதுள்ளவர்களையும் வாரிசாகக் கொள்வோம்; இன்னும் நம்மிடமே (அனைவரும்) மீட்கப்படுவார்கள்." (மர்யம் 19:40)**

நாம் மேலே பேசியவற்றிலிருந்து கிலாபா என்பது தனிமனிதர்களோ, சமூகங்களோ அதிகாரத்துக்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு பொறுப்புக்கு

ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி வருதல் என்ற கருத்தை விடவும் ஆழமான ஒன்று என்பதைப் புரிந்து கொள்ளலாம். உண்மையில் கிலாபத் என்பது மனிதன் படைக்கப்பட்டமைக்கான நோக்கம் என்ன, உலக வாழ்வில் அவனது பணி என்ன முதலான வினாக்களுக்கான முழுமையான பதிலாகும். மனிதன் உட்பட அனைத்துப் படைப்புகளையும் அவனை வணங்குவதற்காகவே அல்லாஹ் படைத்துள்ளான். படைப்புகள் அனைத்தும் அவனைத் துதி செய்கின்றன.

تُسَبِّحُ لَهُ السَّماواتُ السَّبعُ وَالأَرضُ وَمَن فيهِنَّ وَإِن مِن شَيءٍ إِلّا يُسَبِّحُ بِحَمدِهِ وَلٰكِن لا تَفقَهونَ تَسبيحَهُم إِنَّهُ كانَ حَليمًا غَفورًا - الإسراء: ٤٤

**“ஏழு வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவர்களும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றனர். இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை. எனினும் அவற்றின் துதி செய்வதை நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள். நிச்சயமாக அவன் பொறுமையுடையவனாகவும் மிக மன்னிப்பவனாகவும் இருக்கின்றான்.” (இஸ்ரா 17:44)**

இந்த வசனம் உணர்த்துவது போல் ஒவ்வொரு படைப்புக்கும் வணக்கத்திற்கான பிரத்தியேக முறையொன்று இருக்கின்றது. அல்லாஹு தஆலா ஆதமையும் அவரது சந்ததியையும் இந்தப் படைப்பினங்களுக்கு மத்தியில், அதிலும் ஆதமை விடவும் அல்லாஹ்வைத் துதி செய்து கண்ணியப்படுத்துகின்ற மலக்குகளின் மத்தியில் படைத்தான். மட்டுமல்ல அத்தனைக்கும் மேலாக ஆதமையே தனது பிரதிநிதியாகத் தேர்வு செய்கின்றான் எனில், ஏனைய அனைத்துப் படைப்புகளையும் விட வித்தியாசமான ஒரு பொறுப்பு அன்னவருக்கு இருக்கின்றது என்பது தெளிவு. இந்தப் பிரதிநிதித்துவ வட்டத்திற்குள்ளேயே ஆதமுடைய வணக்கம் காணப்பட வேண்டும். இல்லாது விடின் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பில் குறைபாடு செய்வதாகவே அமையும்.

கிலாபத் அல்லது பிரதிநிதித்துவம் என்ற அல்-குர்ஆனின் இந்த சிந்தனையின் ஒளியில் நின்று முஸ்லிம்கள் தமது கிலாபத்தின் பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும். பூமியில் மனிதனுக்கான, அல்லாஹ்வின் பிரதிநிதித்துவமே அவனது தோள்களில் பெரும் சுமையாக விளங்குகின்றது. இந்நிலையில் இறுதித் தூதுத்துவத்தின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் முஸ்லிம்களுக்கு கிலாபத்தின் சுமை அதனிலும் பன்மடங்கு பளுவானதாகவே விளங்கும். ஏனெனில் இஸ்லாமிய கிலாபத் என்பது ஓர் உம்மத்தின் பிரதிநிதித்துவமாகும். இது ஓர் அதிகாரம் அல்ல. இந்த அமானிதத்துக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதும் அல்லாஹ்வின் வழியில் இதன் மீது பயணிப்பதும் மானுடரின் தவறுகள் காரணமாக

ஏற்படக் கூடிய குழப்பங்களைச் சீர்செய்து அதனைப் பாதுகாப்பதும் ஒரு தனிமனித செயற்பாடாகவோ அல்லது ஓர் அரசியல் தீர்மானமாகவோ இருப்பதை விடவும் பாரிய ஒன்றாகும். என்றாலும் இது ஒவ்வொரு முஸ்லிம் தனிமனிதனது பொறுப்பையும் இல்லாது செய்துவிடவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு பணி இருக்கவே செய்யும்.

அல்லாஹு தஆலா இணைக்க வேண்டும் எனக் கூறியவற்றைத் துண்டிப்பதும் பூமியில் குழப்பம் விளைவிப்பதுமே எந்தவோர் உம்மத்தும் தனது பிரதிநிதித்துவப் பணியைச் சரிவரச் செய்வதற்குத் தடையாக இருக்கின்ற பிரதான காரணிகளாகும்.

الَّذينَ يَنقُضونَ عَهدَ اللَّهِ مِن بَعدِ ميثاقِهِ وَيَقطَعونَ ما أَمَرَ اللَّهُ بِهِ أَن يوصَلَ وَيُفسِدونَ فِي الأَرضِ أُولئِكَ هُمُ الخاسِرونَ - البقرة: ٢٧

**"இ(த் தீய)வர்கள் அல்லாஹ்விடம் செய்த ஒப்பந்தத்தை, அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முறித்துவிடுகின்றனர். அல்லாஹ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று கட்டளை இட்டதைத் துண்டித்து விடுவதுடன் பூமியில் குழப்பத்தையும் உண்டாக்குகிறார்கள். இவர்களே தாம் நஷ்டவாளிகள்." (பகரா 2:27)**

முஸ்லிம்கள் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்துவது தான் நாம் முதன் முதலில் செய்ய வேண்டிய பணியாகும். அவர்கள் மத்தியில் சமாதானத்திற்கான அடிப்படைகளை இடுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

يا أَيُّهَا الَّذينَ آمَنُوا ادخُلوا فِي السِّلمِ كافَّةً وَلا تَتَّبِعوا خُطُواتِ الشَّيطانِ إِنَّهُ لَكُم عَدُوٌّ مُبينٌ - البقرة: ٢٠٨

**"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தீனுல் இஸ்லாத்தில் (சமாதானத்தில்) முழுமையாக நுழைந்து விடுங்கள். தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்." (பகரா 2:208)**

முஸ்லிம்கள் மத்தியிலான சமாதானம் இல்லாமல் இஸ்லாமிய கிலாபத் ஒன்றைப் பற்றிப் பேசுவது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும். உம்மத்தை மையப்படுத்திய கிலாபத்தை எழுச்சி பெறச் செய்வதில் எந்த ஓர் அரசியல் ஒழுங்கினதும் வெற்றி, சமாதானத்தைச் சாத்தியப்படுத்துவதிலேயே தங்கியிருக்கின்றது. பரந்து விரிந்த நிலப்பரப்பு, நூற்றாண்டுகளாக நீட்சி பெற்ற காலம் என்பன வெற்றியின் அடையாளங்களாக இருக்க மாட்டா. இவ்விரு காரணிகளையும் அடக்குமுறையிலும் இரத்தக் களரியின் அடிப்படையிலும் தோற்றம்

பெற்ற சாம்ராஜ்யங்களிலும் காணலாம். ரோம சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இதனைத் தெளிவாகக் காண முடிந்தது. அதனுடைய மன்னராட்சி, மக்களாட்சிக் கட்டங்களிலும் சரி; சிலை வணக்க, கிறிஸ்தவ ஆட்சிக் கட்டங்களிலும் சரி, எல்லா நிலைகளிலும் இப்பண்பு நன்றாகவே தெரிந்தது.

இஸ்லாமிய இயக்கங்கள் சிலவற்றின் சிந்தனைகளில் நாம் காணும் அதிகார வாசனை, புதியதொன்றல்ல. இஸ்லாமிய அரசியல் குறித்து எழுதப்பட்டன அனைத்தும் 'உம்மத்' என்பதை ஆரம்ப காலத்தில் கலீபா என்ற பாத்திரத்திலும் நவீன காலத்தில் அரசு என்ற பாத்திரத்திலும் சுருக்கி விட்டுள்ளன.(11) இந்த இரண்டிலும் உம்மத் என்பது

---

*(11)* இந்த சிந்தனைகள் உம்மத் என்பதை கலீபா என்ற நபரில் சுருக்கி விட்டுள்ளன. அவர் தான் உம்மத்தையும் மார்க்கத்தையும் பாதுகாக்கப் பொறுப்பானவர்; அவரது நாட்டம் மக்களது நாட்டத்தின் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இமாம் இப்னு கல்தூன் அவர்கள் கிலாபாவை வரைவிலக்கணப்படுத்தும் பொழுது, 'ஷரீஆப் பார்வையின் அடிப்படையில் அனைவரினதும் உலக, மறுமை நலன்களுக்குப் பொறுப்பாக இருத்தல்... இது உண்மையில் மார்க்கத்தைப் பாதுகாத்தல் மற்றும் உலகை நிர்வகித்தல் ஆகியவற்றில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருத்தலாகும்.'

இமாம் இப்னு தைமிய்யா அவர்கள் அரசின் கடமைகள் பற்றி அவரது அல்ஹிஸ்பா பில் இஸ்லாம் என்னும் நூலில், முஹ்தஸிப் என்பவரது பணிகள் பற்றிப் பேசும் பொழுது, முஹ்தஸிபைப் பொறுத்தவரையில், அவருக்கு நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் அதிகாரம் இருக்கிறது. இது கவர்னர்கள் மற்றும் நீதிபதிகளது பணிகளில் அடங்காதவையாகும்... முஹ்தஸிப், ஐந்து நேரத் தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுமாறு பொதுமக்களை ஏவுவதுடன், தொழாதவர்களுக்கு அடித்தல் மற்றும் சிறையிலடைத்தல் போன்ற தண்டனைகளை வழங்குவார். கொலைத் தண்டனை இதுவல்லாத வேறவற்றிற்கு வழங்குவார்... இவர் ஜும்ஆத் தொழுகை மற்றம் ஜமாஅத் தொழுகைகளை ஏவுவார். உண்மை மற்றும் அமானிதங்களை நிறைவேற்றுதல் போன்ற நல்ல பண்புகளை ஏவுவதுடன் பொய், ஏமாற்று போன்ற தீய பண்புகளையும் தடை செய்வார். அத்துடன் அளவை நிறுவை மோசடி, உற்பத்திகள், வியாபாரம், மத நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களில் நடைபெறும் ஏமாற்றுகள் போன்றவற்றையும் தடுப்பார் என்கின்றார்.

இவ்வாறு, ஓர் அரசு தலையீடு செய்ய முடியுமான பரப்பு, தலையீடு செய்ய முடியாத பரப்பு என்பனவற்றிற்கிடையில் ஒரு குழப்பம் இருப்பதைக் காணலாம். ஒரு தனிமனிதனுக்கும் அவனது இரட்சகனுக்கும் இடையிலான பரப்பிலும் இங்கு அரசு தலையிடுகிறது. இதன் மூலம் அரசு என்பது அல்லாஹ்வுக்குப் புறம்பாக வணங்கப் படும் ஒரு சிலை போன்று கருதப்படுகின்றது. எமது எண்ணங்களும் கூட அதனை நோக்கியதாகவே அமைக்கப்படுகிறது. இந்தத் தலைப்பில் எல்லா மத்ஹபுகளிலும்

காணாமலாக்கப்பட்டிருக்கின்றது. கோத்திர அரசியல் முறைமையின் தாக்கத்தால் விளைந்தது இது. அங்கு கோத்திரத் தலைவரிடத்தில் தான் அனைத்துப் பொறுப்புகளும் இருக்கும்.[(12)] அத்துடன்

---

ஆரம்ப மற்றும் நவீன காலங்களில் பேசப்பட்ட அனைத்தையும் தொகுக்க நினைத்தோம் எனின், அவற்றை எழுதி முடிப்பதற்கு தாள்கள் போதாமல் போகலாம். மக்களை நேர்வழிப்படுத்தும் பணியை இஸ்லாமிய அரசு தான் செய்ய வேண்டும் என்ற ஒரு சிந்தனை பரவலாக இருக்கிறது. மக்களை குறிப்பிட்ட ஒரு வடிவில் வார்த்தெடுக்கும் பணியை அரசு செய்கிறது என்று நினைக்கிறார்கள். இது உண்மையில் உம்மத் என்ற எண்ணக்கருவை கலீபாவுக்கு அல்லது ஆட்சியாளருக்கு உரிய வகையில் மாற்றியமைத்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியேயன்றி வேறில்லை. ஏனெனில் ஆட்சியாளர் என்பவர் உலகில் அல்லாஹ்வின் நிழல் என்று பார்க்கப்படுகிறார். ஆனால் உண்மையில், ஓர் அரசினால் அதிகபட்சம் செய்ய முடியுமானது எது எனின், மக்கள் நேர்வழி தவறாமல் இருப்பதற்காக உம்மத் மேற்கொள்ளும் பணிகளில் பங்களிப்புச் செய்வதைத் தவிர வேறில்லை. அல்லாஹ் தனது அடியார்களை தனக்கு மிகவும் நெருக்கமாக வைத்திருக்கிறான். தனக்கும் அவர்களுக்கும் மத்தியில் இடைத்தரகர்களை இல்லாமல் செய்துள்ளான். அதிகமாக இடைத்தரகர் அவசியம் என்று கருதப்படக் கூடிய துஆவிலும் கூட அல்லாஹ் அதனை இல்லாமல் செய்திருப்பதைக் காணலாம். அல்-குர்ஆன் கூறுகிறது: ”எனது அடியார்கள் என்னைப் பற்றி உங்களிடம் கேட்டால், நான் அருகாமையில் இருக்கிறேன்; என்னை அழைப்பவருக்குப் பதில் அளிக்கிறேன். அவர்கள் என்னிடம் கேட்கட்டும்; என்னை ஈமான் கொள்ளட்டும். சில சமயம் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்” (பகரா:186) என்கின்றது. கஷ்டப்படுகின்றவனது துஆவுக்குப் பதில் அளித்து, அவனது சிரமத்தைப் போக்குவது அல்லாஹ்வால் மாத்திரமே சாத்தியப்படுகின்றது என்பதை தனது அடியார்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளான்.

*(12)* அல்-குர்ஆன் கூறுகின்றது: ”கஷ்டப்படுகின்றவன் அழைக்கின்ற பொழுது அதற்குப் பதில் அளித்து அவனது கஷ்டத்தைப் போக்குகின்றவன் யார்...?” **(நம்ல்:62)** உதவி தேடுதல் என்பதை அவனுடன் மாத்திரம் சம்பந்தப்படுத்தியிருக்கிறான். அவனது அடியார்கள் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்று சொல்லுமாறு கட்டளையிட்டுள்ளான். அதாவது இபாதத் என்பது அல்லாஹ்வுக்குரிய உரிமை; உதவி தேடுதல் என்பது மனிதனுக்குரிய உரிமை என்பதைக் குறிப்பது போல் இது இருக்கிறது. அல்லாஹுத் தஆலா தான் மனிதனுக்கு மிகவும் நெருக்கமானவன் என்பதையும் தானே மனிதனைப் பொறுத்தவரையில் முதன்மையானவன் என்பதையும் அவன் அன்பாளன்; கண்ணியமானவன் என்பதையும் எப்பொழுதும் உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கிறான். மனிதன் அவனை மாத்திரம் சார்ந்திருந்து, அவனிடமே துஆச் செய்து அவனிடமே பொறுப்புச் சாட்டி வாழ்வது தான் அவனது கடமையாகும். இதனால் தான் நாம் அல்-குர்ஆனில் நபியவர்களுக்கு ஸகாத்தை எடுக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டிருக்கின்ற அதேவேளை மு.்.மின்களுக்குத் தொழுவிக்குமாறு

'மீட்சி பெற்ற பிரிவினர்' என்ற சிந்தனையும் இதில் தாக்கம் செலுத்தியிருக்கின்றது.

மீட்சி பெற்ற பிரிவினரது இஸ்லாம் தான் சரியானது; அந்த இஸ்லாத்தை ஆட்சித் தலைவர் ஒருவர் ஊடாக, அவர் தான் இஸ்லாமிய அகீதாவின் பாதுகாவலர் என்ற வகையில், மேலிருந்து அதிகார பூர்வமாக முன்வைக்க வேண்டும் எனக் கூறுவர். உம்மத் பற்றிய சிந்தனை மறைந்து, குழுவாதத்தின் அடிப்படையில் சிந்திக்க முற்படுகின்ற பொழுது, பிறரை இல்லாமலாக்கி அல்லது சேய்மைப்படுத்தி தம்மைத் தாம் நிலைப்படுத்திக் கொள்ளும் முனைப்பு தோற்றுகிறது. இந்த நிலையில், பலப்பிரயோகம் உள்ளே நுழைந்து கொள்கின்றது; அவ்வேளை, மாற்றத்தை மேற்கொள்வதற்கான சிறந்த வழி அதிகாரப் பிரயோகம் என்றே கொள்ளப் படும். சமூகம் தனக்கு மத்தியிலான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் அதற்குரிய வழியாக அடக்குமுறையைத் தெரிவு செய்து கொள்கின்றது. ஒரு சமூகம் அனுமதிக்கும் அளவு அடக்குமுறையும் அதிகாரமும் வளர்கின்றது.

---

கட்டளை இட்டதைக் காண முடியாதுள்ளது. விதிவிலக்காக அச்ச சந்தர்ப்பத்திற்கான தொழுகையின் வடிவம் குறித்து விளக்க முற்பட்ட சமயத்தில் தொழுகை நடாத்துமாறு நபியவர்களுக்கு ஒரு கட்டளை வந்துள்ளது. "நீங்கள் அவர்களுடன் இருக்கும் பொழுது, அவர்களுக்குத் தொழுகையை நடாத்தினால், அவர்களில் ஒரு பிரிவினர் உங்களுடன் நின்று தொழுகையில் ஈடுபடட்டும்" (நிஸா:102) என்கின்றது. இங்கு தொழுகை நடாத்தினால் என்ற கருத்தைக் குறிக்க அறபு மொழியில் 'அகம்த லஹுʺம்' என்ற வசனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கட்டளை வடிவில் அன்றி, ஒரு செய்தி சொல்லும் வடிவிலேயே அமைந்துள்ளது. அதே சமயம் 'அகம்த பிஹிம்' என்ற பிரயோகத்தைப் பயன்படுத்தவில்லை. இந்த இரண்டு பிரயோகங்களுக்கு இடையிலும் நுணுக்கமான வேறுபாடு இருக்கிறது. ஏனெனில் 'அகம்த பிஹிம்' என்பது பின்னால் நின்று தொழுபவர்கள் தமது நாட்டத்திற்கு அப்பால்பட்டுக் கட்டுப்படுகிறார்கள் என்ற கருத்தைத் தருகிறது. இது எம்மை சிந்திக்க வைக்கிறது. அல்லாஹுʺத் தஆலா தொழுகைக்காக மு:மின்களை அழைக்கின்ற பொது வழிமுறையாக அதானை அமைத்துள்ளான். பின்னர் அவர்கள் கூட்டாகவோ அல்லது கூட்டாக முடியாத பொழுது தனியாகவோ தொழுகையை நிறைவேற்றுவர். இதனால் தான் இஸ்லாமிய நகரங்களில் சந்தைப் பள்ளிவாயல்களில் பல தொழுகைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை நாம் காணலாம். சிலர் தொழுகைக்குரிய ஆரம்ப நேரத்திலும் மற்றும் சிலர் நடுவிலும் இன்னும் சிலர் இறுதி நேரத்திலும் தொழுகையில் ஈடுபட்டுள்ளனர். முஸ்லிம் உம்மத்தின் அறிஞர்களோ அல்லது ஆட்சியாளர்களோ அனைவரும் ஆரம்ப நேரத்திலோ அல்லது வேறு ஒரு நேரத்திலோ எல்லோரும் தொழ வேண்டும் என்று ஏதோ ஒரு நேரத்தைக் கட்டாயமாக்கியதைக் காண முடியாது.

சமூக மாற்றத்தில் அதிகாரத்துக்கான முக்கியத்துவத்தை மறுப்பதல்ல இது. அதிகாரம், உம்மத்தை மையப்படுத்தி வரையறை செய்யப்பட வேண்டுமேயன்றி, மீட்சி பெற்ற பிரிவினர் என்பதை மையப்படுத்தி வரையறுக்கப்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு. மீட்சி பெற்ற பிரிவினரை மையப்படுத்தி அதிகாரம் அமைவது எமக்குள்ளேயே ஒரு தரப்பினர் அடுத்த தரப்பினர் மீது அத்துமீறுவதற்கான வழியை உருவாக்கிவிடும். இது எமக்கான தண்டனையின் ஒரு வடிவமாக அமைந்து விடவும் கூடும்.

قُل هُوَ القادِرُ عَلى أَن يَبعَثَ عَلَيكُم عَذابًا مِن فَوقِكُم أَو مِن تَحتِ أَرجُلِكُم أَو يَلبِسَكُم شِيَعًا وَيُذيقَ بَعضَكُم بَأسَ بَعضٍ - الأنعام: ٦٥

**"(நபியே!) நீர் கூறும். உங்கள் (தலைக்கு) மேலிருந்தோ அல்லது உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்குத் துன்பம் ஏற்படும்படி செய்யவும். அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி உங்களில் சிலர் சிலருடைய கொடுமையை அனுபவிக்கும்படி செய்யவும். அவன் ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான்..." (அன்ஆம் 6:65)**

### மூன்றாவது: உம்மத்தின் புனர் நிர்மாணமும் மாறா மனோ நிலையும்

இங்கு மாறா மனோ நிலை என்பது அல்-குர்ஆனின் இறைவாசகங்களையும் ஸுன்னாவின் முன்மாதிரிகளையும் முதல் முஸ்லிம் பரம்பரையினர் விளங்கிக் கொண்ட முறையிலேயே தற்போதும் விளங்க முற்படுகின்ற மனோ நிலையைக் குறிக்கின்றது. அதாவது, குறிப்பிட்ட ஒரு காலத்து சிந்தனைகள், நிகழ்வுகளுடன் மாத்திரம் இறை வசனங்களை மட்டுப்படுத்தி நோக்குகின்ற ஒரு பார்வை. ஆரம்ப பரம்பரையினரின் சிந்தனா கட்டமைப்பு உரிய பகுப்பாய்வுக்கோ, திறனாய்வுக்கோ உட்படுத்தப் பட்டில்லை. நவீன இஸ்லாமிய சிந்தனை கூட அந்தக் கட்டமைப்பை உள்ளிருந்து ஆய்வு செய்யவோ, சமூகவியல் நோக்கில் பகுத்துக் காணவோ முனைவதில்லை. அவ்வாறு செய்திருப்பின், மனித ஈடுபாடு, கால, இட, சூழல் மாற்றங்கள், பௌதீக விதிகளின் செல்வாக்கு முதலியன அந்தக் கட்டமைப்பில் எத்துனை பெரிய மாற்றங்களை உண்டு பண்ண முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருக்க முடியும். அதேவேளை இடையறாது நிகழ்ந்து வரும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தலையீடுகளின் தாக்கங்களது அளவையும் கணிக்க முடிந்திருக்கும்.

மேற்குலகமானது அல்லாஹ், வஹி, மறைவானவை முதலானவற்றை மானுட வாழ்வுடன் இணைக்காமல் அப்புறப்படுத்திக் காண்கின்ற மனோபாவத்தைக் கொண்டுள்ளது. இஸ்லாமிய உலகமோ, அதன் அறிவியல் பாரம்பர்யங்களுடன் உறவாடுவதற்கான ஒரு கோட்பாட்டுச்

சட்டகம் இல்லாத சிந்தனைச் சிக்கலில் இருக்கின்றது. மட்டுமல்ல, அவற்றுக்கான விளக்கங்களைக் கண்டு கொள்வதில் இந்த மாறா மனோ நிலைத் தர்க்கத்துடன் எப்போதும் ஒரு மோதல் நிலை இருந்தே வந்துள்ளது. கடந்த காலங்களைப் புனிதத்துக்குள்ளாக்கும் இந்த மனோ நிலை, காலமாற்றத்தைப் புரிந்து கொள்ள மறுக்கிறது. ஆக இந்தக் கோட்பாட்டினால் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளவோ, இழந்து போனவற்றை மீட்டெடுக்கவோ, குர்ஆனின் மேலான்மையை நிலை நிறுத்தவோ சாத்தியமற்ற நிலையே காணப்படுகின்றது.

சில சிந்தனையாளர்களும், அழைப்பாளர்களும் மறந்து போன ஒரு விடயம் இருக்கின்றது. அதனை நினைவுறுத்த வேண்டியது நமது கடப்பாடு. இமாம் ஷாபி, பக்தாதில் தனது சட்ட மரபைக் கட்டியெழுப்பினார். 'அல்-ஹுஜ்ஜா' என்ற தனது நூலையும் அங்கேயே எழுதினார். பக்தாதில் இருந்த மாணவர்கள் அதனைக் கற்றார்கள். பக்தாதிலிருந்தும் எகிப்துக்குச் சென்ற இமாமவர்கள், தனது முழு சட்ட மரபையும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தினார். அதன் விளைவாக, சுமார் பதின்மூன்று விவகாரங்கள் தவிர்ந்த ஏனையவற்றில், தமது பக்தாத் காலத்து கருத்துகளுக்கு மாற்றமான கருத்துகளையே அவர் பிரஸ்தாபித்தார். அதனால் அன்னவரிடத்தில் பழைய கருத்து, புதிய கருத்து என இரண்டு மரபுகள் இருக்கின்றன. இமாம் அவர்கள் வெறுமனே ஐம்பது வருடங்கள் அளவு வாழ்ந்த ஒரு மனிதர். அன்றைய கால கட்டத்தில் எகிப்துக்கும் பக்தாதுக்கும் இடையிலான நாகரிக, கலாச்சார வேறுபாடுகள், இன்று உதாரணமாக அறபுத் தீபகற்பத்துக்கும் இந்தியத் தீபகற்பத்துக்கும் அல்லது தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார, நாகரிக வேறுபாடுகளின் அளவுக்கு ஆழமானவையாக இருக்கவும் இல்லை. ஆனால் சம கால சட்டவியலாளர்கள் சிலர் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் அறபு தீபகற்பத்தின், அல்லது கூபாவின் கலாச்சாரப் பின்னணியில் உருவான சட்ட மரபுகளை இன்றைய முஸ்லிம்கள் மீது பிரயோகிக்க முனைகின்றார்கள். ஊசியின் துளையில் ஒட்டகத்தை நுழைவிக்க முயற்சிக்கின்றார்கள். இஸ்லாத்தின் சர்வதேச அல்லது அகிலத்துவத் தன்மை என்பதன் பொருள் என்ன என்பதையும் அதன் பிரயோகம் என்ன என்பதையும் விளங்கிக் கொள்ளாமையின் காரணமாகவே இது நடைபெறுகின்றது. அகிலத்துவத் தன்மை என்பது, நிலையான பெறுமானங்களின் ஒளியில் வேறுபட்ட மரபுகளை உள்ளீர்க்கும் ஆற்றலைக் குறிக்கின்றது.

சமூக மாற்றத்தை வரலாற்று நிகழ்வுகளை மீளக் கொண்டு வருதல் மூலமே நிகழ்த்த முடியும் எனக்கருதுவது இந்த மாறா மனப்பான்மையின் வெளிப்பாடுகளில் ஒன்று. அதாவது, இந்த உம்மத்தைக் கட்டி எழுப்புவதற்கு முதலில் ஸஹாபாக்கள் சமூகத்தைப் போன்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும்; மதீன அரசைப் போன்றதோர் அரசை உருவாக்க வேண்டும்.

நவீன உலகை முஸ்லிம் கலீபாவுக்குக் கட்டுப்பட வைக்கும் பணியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம் கலீபா தாருல் இஸ்லாத்தில் இருந்து கொண்டு மஹ்தி தோன்றும் வரை அல்லது ஈஸா நபி இறங்கும் வரை தாருல் குப்ருக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பார். இந்தக் கனவின் கைதியாகவே நவீன இஸ்லாமிய சிந்தனை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதற்கான காரணங்கள், தமக்குரிய செயல் வழிகள் அனைத்தும் அவர்களிடம் இருக்கின்றன. அனைத்தும் கற்பனைகள். இவர்களது பார்வைகளும் அறிவுகளும் தொடர்புபட்டுள்ளது கடந்த காலத்துடனேயே; நிகழ் காலத்தையோ, எதிர் காலத்தையோ நோக்கியன அல்ல அவை.

நவீன காலத்தில் சிலர், வடிவம் சற்று வேறுபட்டாலும் கடந்த காலத்தை மீட்டெடுக்கும் ஒரு வழிமுறையையே முன்வைக்கின்றார்கள். 'இன்று எம்மில் நிகழ்ந்திருக்கும் மாற்றங்கள் தான் எம்மைப் பீடித்துள்ள நோய்; நாம் பழைய நிலைக்கு மீண்டு செல்வது தான் நோய்க்கான மருந்து' என்கின்றார்கள். அதாவது, அல்-குர்ஆன் வசனங்களைக் குறிப்பிட்டதொரு சமூக, கலாச்சார, வரலாற்றுக் காலப்பகுதிக்குரிய பிரயோகமாக விளக்கம் அளிக்கின்றார்கள். எமக்கான மூலம் அந்தக் காலப்பகுதி தான். அதனுடனேயே நாம் ஏனையவற்றை ஒப்பு நோக்க வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடு. இது காலத்தை விட்டும் சேய்மைப்பட்ட ஒரு சிந்தனை மட்டுமல்ல, உம்மத்தை விட்டும் கூட சேய்மைப்பட்டது. ஏனெனில் இங்கு ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப் படும் சட்டங்கள் அல்லது நிகழ்வுகள் அனைத்தும இந்த உம்மத்தின் வயது பத்து அல்லது சற்று மேம்பட்டதாக இருந்த போது காணப்பட்டவையாகும். இன்று அந்த உம்மத்தின் வயது பதினான்கு நூற்றாண்டுகளையும் கடந்து விட்டது. ஆக, பண்டைய அந்த நிகழ்வுகளை இன்றைய சூழலில் ஏற்றிப் பார்ப்பது எவ்வாறு பொருந்தும்? மேலும் இந்த உம்மத்துடன் இன்னும் எத்தனையோ சமூகங்கள் தமது கலாச்சாரத்துடனும் நாகரிகத்துடனும் வரலாற்றுடனும் வந்து இணைந்து இரண்டறக் கலந்து விட்டுள்ளன. மிகப் பரந்த பௌதீக எல்லைகளுக்கு இந்த உம்மத் வியாபகம் அடைந்திருக்கின்றது. உம்மத்தினுள் பல பிரிவுகளும் கட்சிகளும் தோன்றியுள்ளன. இவை அனைத்தையும் புறக்கணித்து, இந்த மாற்றங்களுக்கெல்லாம் முன்னம் இருந்த நிலைக்கு நாம் மீண்டு செல்ல வேண்டுவது எவ்வாறு நிகழலாம்?[13]

---

*(13)* நபியவர்களது மரணத்திற்குப் பின்னர் ஒரு தசாப்தம் கடப்பதற்கு முன்னரே இஸ்லாமிய உலகம் கண்ட மிகப் பெரிய மாற்றங்களை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நன்கு அறிந்து கொண்டிருந்தார்கள். ஹி. 7இல் கைபர் யுத்த வெற்றிக்கும், பின்னர் இஸ்லாமிய உலகில் நடைபெற்ற எகிப்து, ஈராக், ஷாம் பிரதேச வெற்றிகளுக்கும் இடையிலேயே இந்த வேறுபாட்டைக் காணலாம். அதனால் உமர்

**நான்காவது: உம்மத்தைப் புனர் நிர்மாணம் செய்வதற்கான வழிமுறையாக அல்ஹனீபிய்யா**

அல்குர்ஆன் கூறுகின்றது:

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا فِطرَتَ اللَّهِ الَّتي فَطَرَ النّاسَ عَلَيها لا تَبديلَ لِخَلقِ اللَّهِ ذٰلِكَ الدّينُ القَيِّمُ وَلٰكِنَّ أَكثَرَ النّاسِ لا يَعلَمونَ مُنيبينَ إِلَيهِ وَاتَّقوهُ وَأَقيمُوا الصَّلاةَ وَلا تَكونوا مِنَ المُشرِكينَ مِنَ الَّذينَ فَرَّقوا دينَهُم وَكانوا شِيَعًا كُلُّ حِزبٍ بِما لَدَيهِم فَرِحونَ - الروم: ٣٠ - ٣٢

**“ஆகவே, நீர் உம்முகத்தை தூய் (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும். அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை; அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறிய மாட்டார்கள். நீங்கள் அவன் பக்கமே திரும்பியவர்களாக இருங்கள். அவனிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள். தொழுகையையும் நிலை நிறுத்துங்கள். இன்னும் இணைவைப்போரில் நீங்களும் ஆகிவிடாதீர்கள். எவர்கள் தங்கள் மார்க்கத்தில் பிரிவினைகளை உண்டாக்கி (பல) பிரிவுகளாகப் பிரிந்து விட்டனரோ; (அவர்களில் ஆகிவிட வேண்டாம். அவ்வாறு பிரிந்த) ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களிடமிருப்பதைக் கொண்டே மகிழ்வடைகிறார்கள்.” (ரூம் 30:30–32)**

இங்கு முகத்தை நிலைப்படுத்தல் என்பது, இலக்கைச் சீர் செய்வதாகும். மார்க்கத்தைப் பின்பற்றி அதனைச் சரிவரக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே, ஏதேனும் ஒரு விடயத்தில் பார்வையைச் சீரமைத்து இலக்கை சரியான திசையில் நெறிப்படுத்த வேண்டும் என்ற கட்டளைக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளது. அப்பொழுது தான் அவர் தனது ஒவ்வோர் அசைவிலும் செயற்பாட்டிலும் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்து கொள்ள முடியும். மார்க்கத்தை விளங்குவதிலும் செயற்படுத்துவதிலும் எமது இலக்கு சீராக இருக்கிறது என்பதை, ஏனைய இலக்குகளை விட்டும் அது எந்தளவு வேறுபட்டுள்ளது என்பதில் இருந்தே

ரழியல்லாஹு அன்ஹு வெற்றி கொள்ளப் படும் நிலங்களை யுத்த வீரர்களுக்கு மத்தியில் மாத்திரம் பிரித்துக் கொடுக்கும் தீர்மானத்தை மாற்றியமைத்தார்கள். ‘இது தான் முஸ்லிம்களின் கடைசி பரம்பரையினர் என்றிருப்பின் வெற்றி கொள்ளப் படும் அனைத்து நிலங்களையும் நபியவர்கள் கைபரை படைவீரர்கள் மத்தியில் பிரித்துக் கொடுத்தது போல் நானும் செய்திருப்பேன்’ என்றார்கள்.

அறிய முடிகிறது. இங்கு தான் 'ஹனீபிய்யா' முக்கியத்துவம் பெறுகின்றது. அதன் பொருள் தான் என்ன?

ஹனப (حنف) எனும் வினைச் சொல், ஒன்றை விட்டும் திசை திரும்புதல் என்ற கருத்தைத் தருகின்றது. அல்-ஹனீப் என்பது, தீங்கை விடுத்து நன்மையை நோக்கித் திரும்புதல் எனப் பொருள்படுகின்றது. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வழிமுறையை வல்ல அல்லாஹ், அல்ஹனீபிய்யா என்று அழைத்தான். ஏகத்துவ சிந்தனையை விண்ணகத்திருந்து பெற்றுக் கொள்ளும் முன்னர் அவர் பின்பற்றிய வழியை அது குறிக்கின்றது.

அன்னாரின் இந்தப் பயணத்தின் ஆரம்பத்தில், தமது சமூகத்தில் பரவலாகக் காணப்பட்ட நம்பிக்கைகளின் மீது அவரது வெறுப்பு உருவாகியது. தாமே தமது கரங்களால் செய்த சிலைகளை வணங்கிய அவர்கள் அவற்றைத் தமது கரம் கொண்டே உடைத்தல் பெரும்பாவம் எனக் கொண்டனர். சிலை வணக்கச் சிந்தனையைத் தோற்றுவிக்கின்ற, கடவுள் பற்றிய இந்தப் பௌதீக, சடவாத சிந்தனையிலிருந்து முதலில் இப்றாஹீம் நபியவர்கள் விடுபட்டனர். இந்த சிந்தனை தனது கடவுளைத் தானே படைத்துக் கொள்கின்றது. இப்றாஹீம் நபி, வானங்களிலும் பூமியிலும் வணங்குவதற்குப் பொருத்தமான கடவுளைத் தேடித் தான் பார்வையைச் சுழற்றினார். சட உலகுடன் சம்பந்தப்பட்ட அனைத்துக் கருதுகோள்களையும் சோதனைக்கு உட்படுத்தி, ஒப்பிட்டு நோக்கினார். இந்தக் கருதுகோள்களில் அவரது தனிப்பட்ட தேடலில் கண்டனவும் தனது சமூகத்துடன் நடாத்திய எதிர்வாதங்களில் கண்டனவும் அடங்கும். இதன் மூலம் இப்றாஹீம் நபிகளார் சத்தியத் தேடலுக்கானதொரு பாதையை எமக்குக் காட்டித் தருகின்றார். கோள்களும் சந்திரனும் சூரியனும் அவை மானுடப் படைப்பிலும் வித்தியாசப்பட்டாலும் ஏனைய பௌதீகப் படைப்புகளைப் போன்று தம்மில் பூரணமான தன்மைகளைக் கொண்டவையல்ல என்ற புரிதல் ஏற்படுகின்றது. அவை உதித்து மறைவன; காலவோட்டத்தில் பலகட்டங்களைக் கடந்து செல்ல வேண்டுவன. ஆக, அவை மனிதனிலும் உயர்ந்தனவல்ல. படைப்பாளன் என்பவன் இந்த அனைத்து படைப்புகளை விடவும் வேறுபட்டவனாகவே இருக்க வேண்டும். அவனது இருப்பு நிச்சயமாக இவை அனைத்தையும் முந்தியதாக இருக்க வேண்டும். அவன் தான் இவற்றைப் படைத்தவனாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அல்-குர்ஆன் கூறுகின்றது:

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمَاوَاتِ وَالأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ -

الأنعام: ٧٩

**“வானங்களையும் பூமியையும் படைத்தவன் பக்கமே நான் உறுதியாக என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். நான் முஷ்ரிக்கானவனாக (இணைவைப்போரில் ஒருவனாக) இருக்க மாட்டேன் (என்று கூறினார்).” (அன்ஆம் 6:79)**

எனவே,

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا - الروم: ٣٠

**“நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக!...” (ரூம் 30:30)**

என்ற வசனத்தில் இருந்து, மு்.மின் ஒருவன் சீரிய மார்க்கத்தைப் பின்பற்றுதல் என்பது அசையும் தன்மை கொண்ட ஒரு நிலை என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அதாவது, வானத்தைத் தொலை நோக்கியால் ஆராய்கின்ற ஒருவர், அதன் குவியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அசைத்து, இலக்கை முடிந்தவரை நெருங்க எடுக்கும்(14) முயற்சியைப் போன்ற ஒரு செயற்பாடு தான் இது.

இங்கு எங்கள் கவனத்தை ஈர்க்கும் ஒரு விடயம் இருக்கின்றது. அதாவது, அல்-குர்ஆனில் ஹனீப் என்ற பிரயோகம் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கான ஒரு பண்பாகவோ அல்லது அவரது மார்க்கத்துக்கான பண்பாகவோ குறிப்பிடப்படவில்லை. இந்த சொல் அல்-குர்ஆனில் பன்னிரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் பத்து இடங்களில் குறித்த ஒரு நிலையை விளக்கும் வகையிலேயே அது பிரயோகமாகியுள்ளது. உதாரணமாக,

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا - الروم: ٣٠

**“நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக!...” (ரூம் 30:30)**

எனும் வசனத்தைக் குறிப்பிடலாம். மற்றோரிடத்தில்,

---

(14) இங்கு சரியான முடிவை அடைந்து கொள்வதன்றி, சரியானதை அடைந்து கொள்ள எடுக்கும் முயற்சியைப் பற்றியே பேசப்படுகின்றது. ஏனெனில் சரியானதை அடைதல் அல்லது அடையாமல் இருத்தல் என்பது இறுதி விளைவாகும். அது அல்லாஹ்வுடன் சம்பந்தப்பட்டது. அடியார்களுக்கு மத்தியிலான முரண்பாடுகளுக்கு அவனே தீர்ப்புச் சொல்பவன்.

وَقالوا كونوا هودًا أَو نَصارى تَهتَدوا قُل بَل مِلَّةَ إِبراهيمَ حَنيفًا وَما كانَ مِنَ المُشرِكينَ - البقرة: ١٣٥

**“நீங்கள் யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக மாறிவிடுங்கள். நீங்கள் நேர்வழியை அடைவீர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். அப்படியல்ல! (நேரான வழியைச் சார்ந்த) இப்றாஹீமின் மார்க்கத்தையே பின்பற்றுவோம். (இணைவைக்கும்) முஷ்ரிக்குகளில் நின்றும் அவரில்லை என்று (நபியே!) நீர் கூறுவீராக!” (பகரா 2:135)**

எனக் கூறுகின்றது. மேலும் இந்த சொல்லின் பன்மை வடிவமான ‘ஹுனபா’ என்ற பிரயோகமும் இதே கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

وَما أُمِروا إِلّا لِيَعبُدُوا اللَّهَ مُخلِصينَ لَهُ الدّينَ حُنَفاءَ وَيُقيمُوا الصَّلاةَ وَيُؤتُوا الزَّكاةَ وَذٰلِكَ دينُ القَيِّمَةِ - البينة: ٥

**“அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்ட வேண்டும். மேலும் ஸகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரான மார்க்கமாகும்.” (பய்யினா 98:5)**

எஞ்சிய இடங்களில் ஹனீப் என்ற சொல், ‘கான’ எனும் வினைச் சொல்லின் ‘கபர்’ ஆகப் பயன்பட்டுள்ளது. இந்த இலக்கண வடிவில் பிரயோகமாகும் போது, ஒன்றின் பண்பைக் குறிப்பதாகவோ நிலையைக் குறிப்பதாகவோ இது அமையலாம்.

ما كانَ إِبراهيمُ يَهودِيًّا وَلا نَصرانِيًّا وَلٰكِن كانَ حَنيفًا مُسلِمًا وَما كانَ مِنَ المُشرِكينَ - آل عمران: ٦٧

**“இப்றாஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை. ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான முஸ்லிமாக இருந்தார். அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை.” (ஆல இம்ரான் 3:67)**

இங்கு இரண்டில் ஒரு கருத்தை இந்த வாசகம் முழுமையாகச் சாராமல் இருப்பதன் காரணமாக அல்-குர்ஆனில் ஹனீப் என்ற பிரயோகம் ஒரு நபரைக் குறிக்காது. அசையக் கூடிய ஒரு நிலையைக் குறிக்கின்றது என்ற முடிவுக்கு வருவதில் தடையில்லை.

இங்கு ஹனீபிய்யா என்பது, குறிப்பிட்ட ஓர் இறுதிப் புள்ளியை நோக்கிச் சென்று, அதனை அடைந்து கொள்வதன் மூலம் நிலையானதோர் இலட்சிய மாதிரி அடைந்து கொள்ளப்படுகிறது என்றும் பின்னர் மாற்றத்திற்கான எந்த அவசியமும் அங்கிருக்காது என்றும் சொல்கின்ற ஒரு நிலையைக் குறிக்க மாட்டாது. ஹனீபிய்யா என்பது ஒரு மு.்.மினில் நிலையாக இருக்க வேண்டிய ஒரு பண்பாக இருந்தால் மாத்திரமே அவ்வாறு நோக்க முடியும். ஆனால் ஹனீபிய்யா என்பது, அசத்தியத்திலிருந்து சத்தியத்தை நோக்கிய ஒரு மு.்.மினின் தொடர்பறாததொரு பயணத்தைக் குறிப்பதாகவே இருக்கின்றது. இந்தப் பயணமானது அவனுக்குரிய கடமைகள் இல்லாது போகும் ஒரு காலத்தில் மாத்திரமே முற்றுப்பெற இயலும். இஸ்லாம் ஒரு கற்பனையுலக வாழ்க்கையை முன்வைக்கவில்லை. அதனால் தான்,

وَما كانَ رَبُّكَ لِيُهلِكَ القُرى بِظُلمٍ وَأَهلُها مُصلِحونَ - هود: ١١٧

**“(நபியே!) ஓர் ஊராரை, அவ்வூரார் சீர்திருந்திக் கொண்டிருக்கும் நிலையில் அநியாயமாக உம் இறைவன் அழிக்க மாட்டான்.” (ஹூத் 11:117)**

என அல்-குர்ஆன் கூறுகின்றது. ‘மக்கள் சீரானவர்களாக இருப்பதனால்’ என அது கூறவில்லை.

ஆக, ஹனீபிய்யா என்பது அசத்தியத்திலிருந்து விலகி, சத்தியத்தை நோக்கிச் செல்லும் தொடர்ந்தும் புத்தாக்கத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு செயல்வழியையே குறிக்கின்றது. ஒன்றை மறுக்கும் நிலையில் இருந்து அங்கீகரிக்கும் நிலைக்கானதோர் அறிவுபூர்வமான பயணமே அது.

எனவே நாம் உள்ளார்ந்த உணர்வுகளால் உந்தப்பட்ட ஓர் அசைவியக்கத்துக்கு முன்னால் நிற்கின்றோம். நடைமுறையுடனான அதன் உறவாடலுக்கு ஏற்ப, மனிதனை அசத்தியத்திலிருந்து சத்தியத்தை நோக்கி அது எடுத்துச் செல்கின்றது. அல்-குர்ஆன் கூறுகின்றது.

بَل مَتَّعنا هؤُلاءِ وَآباءَهُم حَتّى طالَ عَلَيهِمُ العُمُرُ أَفَلا يَرَونَ أَنّا نَأتِي الأَرضَ نَنقُصُها مِن أَطرافِها أَفَهُمُ الغالِبونَ - الأنبياء: ٤٤

**“எனினும், இவர்களையும் இவர்களுடைய மூதாதையரையும் அவர்களுடைய ஆயுட்காலம் வளர்ந்தோங்கும் வரை சுகங்களை அனுபவிக்கச் செய்தோம். நாம் (இவர்களிடமுள்ள) பூமியை அதன் அருகுகளிலிருந்து குறைத்து கொண்டு வருகிறோம் என்பதை இவர்கள் காணவில்லையா? இவர்களா மிகைத்து வெற்றி கொள்பவர்கள்?” (அன்பியா 21:44)**

மேலும் ஓர் இடத்தில்,

بَل مَتَّعتُ هؤُلاءِ وَآباءَهُم حَتّى جاءَهُمُ الحَقُّ وَرَسولٌ مُبينٌ - الزخرف: ٢٩

**"எனினும், இவர்களிடம் உண்மையும் தெளிவான தூதரும் வரும் வரையில், இவர்களையும் இவர்களுடைய மூதாதையரையும் சுகமனுபவிக்க விட்டுவைத்தேன்." (ஸுக்ருப் 43:29)**

மேலும் ஓர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

أَلَم يَأنِ لِلَّذينَ آمَنوا أَن تَخشَعَ قُلوبُهُم لِذِكرِ اللَّهِ وَما نَزَلَ مِنَ الحَقِّ وَلا يَكونوا كَالَّذينَ أوتُوا الكِتابَ مِن قَبلُ فَطالَ عَلَيهِمُ الأَمَدُ فَقَسَت قُلوبُهُم وَكَثيرٌ مِنهُم فاسِقونَ - الحديد: ١٦

**"ஈமான் கொண்டார்களே அவர்களுக்கு, அவர்களுடைய இருதயங்கள் அல்லாஹ்வையும், இறங்கியுள்ள உண்மையான (வேதத்)தையும் நினைத்தால், அஞ்சி நடுங்கும் நேரம் வரவில்லையா? மேலும், அவர்கள் முன்னால் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப் போல் ஆகிவிட வேண்டாம். (ஏனெனில்) அவர்கள் மீது நீண்ட காலம் சென்ற பின் அவர்களுடைய இருதயங்கள் கடினமாகி விட்டன. அன்றியும், அவர்களில் பெரும்பாலோர் பாஸிக்குகளாக (பாவிகளாக) ஆகி விட்டனர்." (ஹதீத் 57:16)**

எனவே இந்த மாற்றம் என்பது காலவோட்டத்தில் மெதுவாக நடைபெறும் ஒன்றாகும்.

அடுத்து மக்களில் சிலர் ஏனைய சிலரால் தடுக்கப் படும் பரஸ்பரத் தாக்கத்தினாலும் அதிகார மாற்றம் மக்கள் மத்தியில் மாறி மாறி நிகழ்வதனாலும் இந்த மாற்றம் விளைகின்றது. இவையனைத்தும் மனிதனில் பௌதீக, கருத்து மாற்றங்களை உருவாக்கி, அவற்றுடனான தனது உறவாடலில் படிப்படியாக அசத்தியத்திலிருந்தும் சத்தியத்தை நோக்கி அவன் நகர்ந்து வருவான். இவ்வாறு அது ஒரு தொடர் அசைவியக்கமாக இயங்கும். இரவும் பகலும் உள்ள காலமெல்லாம் இது தொடர்ந்து நடைபெற்றே வரும்.

ஹனீபிய்யா என்பது அசத்தியத்திலிருந்து சத்தியத்தை நோக்கிய அசைவியக்கம் என்றவகையில், சமூக மாற்றத்துக்கான ஒரு வழிமுறையாகவும் அமைகின்றது. அது ஆரம்பமாவது, இருக்கின்ற நடைமுறை பற்றிய அதன் விமரிசனத்திலிருந்தாகும். குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் நடைமுறையில் இருக்கின்ற ஒழுங்குகள், விழுமியங்கள் முதலானவற்றை மறுத்துரைப்பது தான் இதன் தொடக்கப் புள்ளி. ஏனெனில் அவை காலவோட்டத்தில் தமது இலக்கை விட்டும் திசை

மாறியிருக்கும்; தமது பணியைக் கை விட்டிருக்கும். வெறுமனே திரிபடைந்த புறத்தோற்றங்களாக மாத்திரமே அவை தென்படும். பெறுமானங்களையெல்லாம் கை விட்டு முன்னோரைப் பின்பற்றுவதில் மாத்திரம் கவனம் செலுத்தி வரும். அதாவது பரிச்சயமான, ஏற்கனவே அறிமுகமான ஒன்றை ஏற்பனவாக மாத்திரமே அவை செயல்படும்: 'எமது முன்னோர்கள் இவ்வாறு செய்து கொண்டிருந்தனர்'. இத்தகைய அறிதல் மாதிரியை விட்டு வெளிவருவதன் மூலமே மாற்றங்களை நிகழ்த்தலாம்.

وَلا تَقفُ ما لَيسَ لَكَ بِهِ عِلمٌ إِنَّ السَّمعَ وَالبَصَرَ وَالفُؤادَ كُلُّ أُولئِكَ كانَ عَنهُ مَسئولًا

- الإسراء: ٣٦

**"எதைப்பற்றி உமக்கு(த் தீர்க்க) ஞானமில்லையோ அதை(ச் செய்யத்) தொடர வேண்டாம். நிச்சயமாக (மறுமையில்) செவிப்புலனும் பார்வையும் இருதயமும் இவை ஒவ்வொன்றுமே (அதனதன் செயல் பற்றி) கேள்வி கேட்கப் படும்." (பனீ இஸ்ராயீல் 17:36)**

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் சிலைகளை உடைத்து விட்டுப் பெரிய சிலையை மாத்திரம் விட்டு வைத்ததன் மூலம் இதனைத் தான் செய்தார். தீர்க்கமான சில வினாக்களை அந்த மக்களிடம் முன்வைத்தார்.

فَأَقِم وَجهَكَ لِلدّينِ حَنيفًا - الروم: ٣٠

**"ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக!.." (ரூம் 30:30)**

என்ற அல்-குர்ஆனிய வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு, தமது காலத்து நடைமுறைகளையும் அவை உருவாக்கி வைத்திருந்த பிரயோகங்களையும் கேள்விக்குட்படுத்தலானார். இந்த அறிதல் மாதிரியை நோக்கிப் படிப்படியாக நகர்ந்த அன்னார் ஒரே இடத்துடன் நின்றுவிடவில்லை. தொடர்ந்த அசைவியக்கத்தையே அவரிடம் காண முடிந்தது. ஒரே இடத்துடன் நின்று கொள்வது, குறிப்பிட்ட ஒரு வடிவத்தில், உதாரணத்தில் அல்லது பிரயோகத்தில் எம்மைச் சுருக்கிவிடுகின்றது. இறுதியில் குறிப்பிட்ட அந்த வடிவம் அல்லது பிரயோகம் ஒரு சிலையாக மாறிவிடுகின்றது. அதனால் தான் அல்லாஹ், 'தன்னையே கடிந்து கொள்ளும் உள்ளத்தின் மீது' சத்தியம் செய்கின்றான்; வேறு உள்ளங்கள் மீது சத்தியம் செய்யவில்லை. ஏனெனில் அத்தகைய மனோ நிலை தான் எப்போதும் அசத்தியத்திலிருந்து சத்தியத்தை நோக்கிய அசைவியக்கத்துக்குத் துணை செய்யும்.

அல்லாஹு தஆலா அல்-குர்ஆனின் ஸூரதுல் ஹஜ்ஜில் ஹனீபிய்யா என்ற பிரயோகத்தை சிலை வணக்கத்திற்கு எதிர்கருத்தில்

பயன்படுத்தியிருக்கின்றமை, இன்னும் பல விடயங்களை எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

وَأَذِّن فِي النّاسِ بِالحَجِّ يَأتوكَ رِجالًا وَعَلى كُلِّ ضامِرٍ يَأتينَ مِن كُلِّ فَجٍّ عَميقٍ لِيَشهَدوا مَنافِعَ لَهُم وَيَذكُرُوا اسمَ اللَّهِ في أَيّامٍ مَعلوماتٍ عَلى ما رَزَقَهُم مِن بَهيمَةِ الأَنعامِ فَكُلوا مِنها وَأَطعِمُوا البائِسَ الفَقيرَ ثُمَّ ليَقضوا تَفَثَهُم وَليوفوا نُذورَهُم وَلْيَطَّوَّفوا بِالبَيتِ العَتيقِ ذٰلِكَ وَمَن يُعَظِّم حُرُماتِ اللَّهِ فَهُوَ خَيرٌ لَهُ عِندَ رَبِّهِ وَأُحِلَّت لَكُمُ الأَنعامُ إِلّا ما يُتلى عَلَيكُم فَاجتَنِبُوا الرِّجسَ مِنَ الأَوثانِ وَاجتَنِبوا قَولَ الزّورِ حُنَفاءَ لِلَّهِ غَيرَ مُشرِكينَ بِهِ وَمَن يُشرِك بِاللَّهِ فَكَأَنَّما خَرَّ مِنَ السَّماءِ فَتَخطَفُهُ الطَّيرُ أَو تَهوي بِهِ الرّيحُ في مَكانٍ سَحيقٍ ذٰلِكَ وَمَن يُعَظِّم شَعائِرَ اللَّهِ فَإِنَّها مِن تَقوَى القُلوبِ لَكُم فيها مَنافِعُ إِلى أَجَلٍ مُسَمًّى ثُمَّ مَحِلُّها إِلَى البَيتِ العَتيقِ وَلِكُلِّ أُمَّةٍ جَعَلنا مَنسَكًا لِيَذكُرُوا اسمَ اللَّهِ عَلى ما رَزَقَهُم مِن بَهيمَةِ الأَنعامِ فَإِلٰهُكُم إِلٰهٌ واحِدٌ فَلَهُ أَسلِموا وَبَشِّرِ المُخبِتينَ - الحج: ٢٧ - ٣٤

“ஹஜ்ஜைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும் வெகு தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகங்களின் மீதும் உம்மிடம் வருவார்கள் (எனக் கூறினோம்). தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும் குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) நாற்கால் பிராணிகள் மீது அவன் பெயரைச் சொல்(லி குர்பான் கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்). எனவே அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; கஷ்டப் படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள். பின்னர் அவர்கள் (தலைமுடி இறக்கி, நகம் வெட்டி, குளித்துத்) தம் அழுக்குகளை நீக்கி, தங்கள் நேர்ச்சைகளை நிறைவேற்றி (அந்தப் புனிதமான) பூர்வீக ஆலயத்தை தவாபும் செய்ய வேண்டும். இதுவே (முறையாகும்.) மேலும் அல்லாஹ்வின் புனிதமான கட்டளைகளை யார் மேன்மைப்படுத்துகிறாரோ அது அவருக்கு, அவருடைய இறைவனிடத்தில் சிறந்ததாகும். இன்னும் நாற்கால் பிராணிகளில் உங்களுக்கு (ஆகாதவையென) ஓதப்பட்டதைத் தவிர (மற்றவை) உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆகவே விக்கிரகங்களின் அசுத்தத்திலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். அன்றியும் பொய்யான சொல்லையும் நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காது அவனுக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களாக இருங்கள். இன்னும் எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ, அவன் வானத்திலிருந்து விழுந்து பறவைகள் அவனை வாரி எடுத்துச் சென்றது போலும் அல்லது பெருங் காற்றடித்து அவனை வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றது போலும் ஆகி விடுவான். இது தான் (இறைவன் வகுத்ததாகும்.) எவர்

**அல்லாஹ்வின் சின்னங்களை மேன்மைப்படுத்துகிறாரோ நிச்சயமாக அது உள்ளச்சத்தால் ஏற்பட்டது ஆகும். (குர்பானிக்கு என்று நிர்ணயிக்கப்பெற்ற) பிராணிகளில் ஒரு குறிப்பிட்ட தவணை வரையில் உங்களுக்கு பலனடைய (அனுமதி) உண்டு. அதன் பின்னர் (உரிய காலம் வந்ததும்) அவற்றின் (குர்பானிக்கான) இடம் அந்தப் புராதன ஆலயத்தின் பால் இருக்கிறது. இன்னும் கால்நடை(ப் பிராணி)களிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு உணவாக்கியுள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற)வற்றின் மீது அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறும்படி செய்வதற்காகவே குர்பானி கொடுப்பதை ஒவ்வொரு வகுப்பாருக்கும் (கடமையாக) ஆக்கியிருக்கிறோம். ஆகவே உங்கள் நாயன் ஒரே நாயன் தான். எனவே அவ(ன் ஒருவ)னுக்கே நீங்கள் முற்றிலும் வழிப் படுங்கள். (நபியே!) உள்ளச்சம் உடையவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!” (ஹஜ் 22:27–34)**

ஏகத்துவ சிந்தனையைப் பேசும் ஒரு ஸூராவாகும் இது. மேலும் இந்த ஸூரா, ஒவ்வொரு சமூகத்துக்கும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தக் கூடிய ஒரு வழிபாடு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது:

لِكُلِّ أُمَّةٍ جَعَلنا مَنسَكًا هُم ناسِكوهُ فَلا يُنازِعُنَّكَ فِي الأَمرِ وَادعُ إِلى رَبِّكَ إِنَّكَ لَعَلى هُدًى مُستَقيمٍ - الحج: ٦٧

**“(நபியே!) ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் வணக்க வழிபாட்டு முறையை ஏற்படுத்தினோம்; அதனை அவர்கள் பின்பற்றினர். எனவே இக்காரியத்தில் அவர்கள் திடமாக உம்மிடம் பிணங்க வேண்டாம். இன்னும், நீர் (அவர்களை) உம்முடைய இறைவன் பக்கம் அழைப்பீராக! நிச்சயமாக நீர் நேர்வழியில் இருக்கின்றீர்.” (ஹஜ் 22:67)**

இவ்வாறான வழிபாடுகள் கருத்து ரீதியான அல்லது நம்பிக்கை ரீதியான விடயங்களைத் தனது புலன்களால் நேரடியாக நிறைவேற்ற முற்படுகின்ற இயற்கையான மானிட விருப்பை நிறைவு செய்கின்றன. மனிதனைப் பொறுத்த அளவில், அவன் எவ்வளவு தான் உயர்ந்து நின்றாலும் தான் நம்புகின்ற அல்லது விரும்புகின்ற ஒரு விடயத்தை எப்போதும் உள்ளத்துள் மாத்திரம் வைத்துக் கொள்வது இயலாத ஒரு கருமம். அதனை நேரடியாகப் புலன்களால் நிறைவேற்ற வேண்டும்; அல்லது புலன்களால் புரிந்து கொள்ள முடியுமான ஒன்றாகப் பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுது தான் அதனுடன் இரண்டறக் கலந்த ஈடுபாட்டுடன் அவனால் உறவாட முடியும். இந்த இயல்புடன் தான் மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றான்.

ஆனால் நாம், கண்களால் காண முடியாத, ஏனைய புலன்களால் அறிந்து கொள்ள இயலாத அல்லாஹ்வை வணங்குகிறோம். அவனுடைய

அருளின் காரணமாக எமது இயற்கை உணர்வு நிறைவேறும் வகையில் எமது புலன்களால் அவனுடன் தொடர்பு கொள்வதற்குரிய வழிபாடுகளை எமக்கு விதி செய்துள்ளான். அதேவேளை இந்த வழிபாடுகள் பற்றிய தீர்மானங்களை மனித அறிவுக்கு விட்டுவிடாமல் அப்பொறுப்பை அல்லாஹ் தன்னிடம் மாத்திரம் வைத்துக் கொண்டான். மனித தீர்வுக்கு விடப்படுவது எல்லை மீறிச் சென்றுவிட வாய்ப்பளிக்கின்றது. சிலைகள் வணங்கப்பட்ட போதெல்லாம் அவை தம்மை அல்லாஹ்விடம் நெருக்கமாக்குகின்றன என்ற நம்பிக்கையுடன் வணங்கப்பட்டமையை நாம் காண்கிறோம் அல்லவா!

எனவே தான் அல்லாஹு தஆலா, இந்த வழிபாடுகள், கிரியைகளை கால, இட, திசைகளின் பரிமாணங்களுக்கு உட்பட்டதாக அமைத்துள்ளான். நேரம், பிறை, கிப்லா போன்ற வரையறைகள் தொழுகை, ஹஜ் முதலான கிரியைகளில் வைக்கப்பட்டுள்ளன. இவை மனிதனின் இயல்பான உணர்வுகளை நிறைவு செய்கின்றன. மேலும் பல உயர் நோக்கங்களையும் அவை பொதிந்துள்ளன. என்றாலும் இந்தப் புலன்களுக்கு உட்பட்ட செயற்பாடுகளால் அல்லாஹ்வுக்கு எந்த நலனும் கிட்டுவதில்லை என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

لَن يَنالَ اللَّهَ لُحومُها وَلا دِماؤُها وَلٰكِن يَنالُهُ التَّقوى مِنكُم كَذٰلِكَ سَخَّرَها لَكُم لِتُكَبِّرُوا اللَّهَ عَلى ما هَداكُم وَبَشِّرِ المُحسِنينَ - الحج: ٣٧

**“(எனினும்) குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை. ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காண்பித்ததற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்தும் பொருட்டு, இவ்வாறாக அவற்றை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான். ஆகவே நன்மை செய்வோருக்கு நன்மாராயங் கூறுவீராக!” (ஹஜ் 22:37)**

அதனால் தான் இந்த வழிபாடுகளைக் கண்ணியப்படுத்துவதை உள்ளத்தின் தக்வா என அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். ஆக நேரடியாக இந்த செயற்பாடுகள் நோக்கமாக அமைக்கப்படவில்லை; இந்த செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப் படும் அல்லது இந்த செயற்பாடுகள் குறித்துக் காட்டக் கூடிய, அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான தொடர்பே நோக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம் இவ்வழிபாடுகளைச் சிலை வணக்கச் செயற்பாடுகளுடன் குழப்பிக் கொள்ளாமலும் அல்லாஹ் பாதுகாத்திருக்கின்றான். அதாவது சிலைகளை வணங்குகின்றவர்களும் தமது கடவுளர்க்கு இதனையொத்த வடிவில் குர்பானிகளை வழங்குகின்றனர். அதே போன்ற ஒரு வழிபாடு தான் இது எனக் கருதுவது தவறு. அது போலவே நீண்ட காலத்தில் இந்த வழிபாடுகளின் நோக்கம் மறக்கப்பட்டு அவற்றின் புறத் தோற்ற

சடங்குகளுடன் மாத்திரம் சுருங்கிவிடுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் இப்படி ஓர் ஏற்பாடு.

ஸூரா அல்-ஹஜ் பேசுவது போல சிலை வணக்கம் என்ற சிந்தனை, வெறுமனே ஏகத்துவத்தை விட்டும் வெளிச் சென்று விட்டதோர் அம்சம் மாத்திரமல்ல; அதனையும் தாண்டிய சமூக, கலாச்சாரப் பெறுமானங்களை அது கொண்டிருக்கின்றது. அவை எமது வாழ்க்கையினுள் நாம் அறியாமலேயே கலந்துவிடக் கூடியவை; பரிச்சயமானவை; பழக்கப்பட்டவை என்ற அடிப்படையில் அவற்றை நாம் பொருட்படுத்தாது விட்டு விடுவோம். இந்தக் கருத்தையே நாம் சற்று விவாதிக்க வேண்டும். பிக்ஹ், இல்முல் கலாம் கண்ணோட்டங்களில் அல்லது பரந்த சமூக, கலாச்சார விமர்சனக் கண்ணோட்டத்தில் இந்த விடயத்தை அணுக வேண்டும்.

நாம் மேற்கண்ட அல்-குர்ஆன் வசனங்களில் அல்லாஹு தஆலா தனது நபியிடம், ஹஜ்ஜுக்காக மக்களை அழைக்குமாறும் அல்லாஹ்வின் சட்டங்களை மதிக்குமாறும் கால்நடைகளைப் பலியிடுமாறும் கட்டளையிட்டதன் பின்னர் தான் சிலைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறான். எனவே சிலைகள் என்பது, வெறுமனே அல்லாஹ் அல்லாத ஒன்றை வணங்குவது என்பதையும் விட வேறு கருத்துகளையும் கொண்டிருக்கின்றது. எந்த சமூகமாக இருந்தாலும் அது ஏகத்துவத்தைக் கடைப்பிடிக்கும் முஸ்லிம் சமூகமாக இருந்தாலும் அதன் சமூக, கலாச்சார கட்டமைப்பின் ஒரு பகுதியை சிலைகள் வடிவமைக்க முடியும். சமூக, கலாச்சார, அரசியல் சிலைகள் அங்கே காணப்படலாம். எனவே நாம், அல்-குர்ஆனின் நோக்கில் 'சிலை' என்பதன் பொருள் பற்றி அறிய வேண்டியுள்ளது.

சிலை எனும் கருத்துக்குரிய அடிப்படைச் சொல் 'வசன' (و ث ن) என்பது அல்-குர்ஆனில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது மேலே உள்ள வசனத்திலும் மற்றை இரண்டும் ஸூரா அன்கபூத்திலும் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது:

وَإِبراهيمَ إِذ قالَ لِقَومِهِ اعبُدُوا اللَّهَ وَاتَّقوهُ ذٰلِكُم خَيرٌ لَكُم إِن كُنتُم تَعلَمونَ(١٦) إِنَّما تَعبُدونَ مِن دونِ اللَّهِ أَوثانًا وَتَخلُقونَ إِفكًا إِنَّ الَّذينَ تَعبُدونَ مِن دونِ اللَّهِ لا يَملِكونَ لَكُم رِزقًا فَابتَغوا عِندَ اللَّهِ الرِّزقَ وَاعبُدوهُ وَاشكُروا لَهُ إِلَيهِ تُرجَعونَ - العنكبوت: ١٦ - ١٧

**"இன்னும் இப்றாஹீமையும் (தூதராக நாம் அனுப்பினோம்). அவர் தம் சமூகத்தாரிடம் அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள். அவனிடம் பயபக்தியுடன் இருங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், இதுவே**

**உங்களுக்கு நன்மையுடையதாக இருக்கும் என்று கூறிய வேளையை (நபியே! நினைவூட்டுவீராக). அல்லாஹ்வையன்றி சிலைகளை வணங்குகிறீர்கள். மேலும், நீங்கள் பொய்யைச் சிருஷ்டித்துக் கொண்டீர்கள். நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர நீங்கள் வணங்கி வரும் இவை உங்களுக்கு ஆகார வசதிகள் அளிக்கச் சக்தியற்றவை. ஆதலால், நீங்கள் அல்லாஹ்விடமே ஆகார வசதிகளைத் தேடுங்கள். அவனையே வணங்குங்கள். அவனுக்கே நன்றி செலுத்துங்கள். அவனிடத்திலேயே நீங்கள் திரும்பிக் கொண்டுவரப்படுவீர்கள்." (அன்கபூத் 29:16–17)**

இரண்டாவது இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் தமது சமூகத்துடனான உறவாடலின் போது கூறுவதாக,

وَقَالَ إِنَّمَا اتَّخَذْتُم مِن دونِ اللَّهِ أَوثانًا مَوَدَّةَ بَينِكُم فِي الحَياةِ الدُّنيا ثُمَّ يَومَ القِيامَةِ يَكفُرُ بَعضُكُم بِبَعضٍ وَيَلعَنُ بَعضُكُم بَعضًا وَمَأواكُمُ النّارُ وَما لَكُم مِن ناصِرينَ - العنكبوت: ٢٥

**"உலக வாழ்க்கையில் அல்லாஹ்வையன்றி (சிலரை) வணக்கத்திற்குரியவர்களாக நீங்கள் ஆக்கிக் கொண்டது (அவர்கள் மீது) உங்களிடையேயுள்ள நேசத்தின் காரணத்தினால் தான். பின்னர் கியாம நாளன்று உங்களில் சிலர் சிலரை நிராகரிப்பார்கள். உங்களில் சிலர் சிலரை சபித்துக் கொள்வர். (இறுதியில்) நீங்கள் ஒதுங்குந்தலம் (நரக) நெருப்புத் தான். (அங்கு) உங்களுக்கு உதவியாளர் எவருமில்லை." (அன்கபூத் 29:25)**

என வருகின்றது.

அல்லாஹ் அல்லாதனவற்றை வணங்குவது ஏகத்துவத்துக்கு முரணானது என இந்த வசனங்கள் கூறுவது போலவே, பின்னைய வசனம் சிலைகளின் சமூகப் பாத்திரத்தையும் விளக்குகின்றது. அதாவது அந்தச் சிலைகளை வணங்கியவர்கள் அந்தக் கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் சில சமூக, பொருளாதார நலன்களில் உடன்பட்டிருந்தார்கள். அந்தக் கடவுளைத் தமது நலன்களுடனும் ஒத்துச் செல்லும் வகையில் அவர்களே உருவாக்கியிருந்தார்கள். உண்மையில் இந்த வசனங்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உடைக்க முனைந்த கற்சிலைகளைப் பற்றிப் பேசவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

وَتَاللَّهِ لَأَكيدَنَّ أَصنامَكُم بَعدَ أَن تُوَلّوا مُدبِرينَ(٥٧) فَجَعَلَهُم جُذاذًا إِلّا كَبيرًا لَهُم لَعَلَّهُم إِلَيهِ يَرجِعونَ - الأنبياء: ٥٧ - ٥٨

**"இன்னும் நீங்கள் திரும்பிச் சென்ற பின்னர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்கள் சிலைகளுக்கு ஒரு சதி செய்வேன் (என்றும் கூறினார்). அவ்வாறே**

**அவர், அவற்றில் பெரியதைத் தவிர (மற்ற) எல்லாவற்றையும் துண்டு துண்டாக்கினார். அவர்கள் அதன்பால் திரும்புவதற்காக (அதை விட்டு விட்டார்)." (அன்பியா 21:57–58)**

சிலை வணக்க நம்பிக்கையின் ஒரு வடிவமே கற்சிலை வழிபாடு. எனவே சிலை வணக்கம் என்பது கற்சிலை வழிபாட்டை விடவும் விசாலமான ஒன்றாகும்.

'வசன்' என்பது மொழியில், ஓரிடத்தில் இருக்கும் ஒன்றைக் குறிக்கின்றது. 'வசன' என்பது ஓரிடத்தில் நிலை கொள்ளல் என்ற பொருளைத் தருகின்றது. எனவே சிலை வணக்கம் என்ற நம்பிக்கைக்கு இரண்டு நிபந்தனைகள் அவசியமாகின்றன. ஒன்று பௌதீக உருவ அமைப்பு; மற்றையது மாறாப் பெறுமானம். அந்த வகையில் பௌதீக உருவமைப்பு ஒன்று மாத்திரம் சிலை வணக்கமாகிவிடுவதில்லை. மாறாப் பெறுமானம் ஒன்றும் இங்கு அவசியமாகின்றது. அதாவது குறிப்பிட்ட ஒரு பெறுமானத்தை ஒரு பௌதீக தோற்றப்பாட்டுக்கு மாத்திரம் உரியதாக வரையறுத்து அதனுடன் பின்னிப் பிணைந்ததொன்றாகக் கருதுவது உண்மையில் அந்தப் பெறுமானம் அந்தப் பௌதீகத் தோற்றப்பாட்டில் இல்லாத போதிலும் குறித்த பெறுமானம் அந்தத் தோற்றப்பாட்டோடு இயைந்தது என்றே காட்டப் படும். எனவே சிலை வணக்கம் என்பது, உண்மைகளின் உள்ளடக்கங்களை இல்லாமல் செய்துவிட்டு அவற்றின் பௌதீகப் புறத்தோற்றங்களைக் கண்ணியப்படுத்தும் செயற்பாட்டை நோக்கி எமது புரிதலைப் படிப்படியாக நகர்த்துகின்ற ஒரு செயற்பாடாகும். அடிப்படையில் வுத், யகூஸ், யகூக், நஸ்ர் போன்ற சிலைகள் அனைத்தும் மக்கள் கண்ணியப்படுத்தி முன்மாதிரியாகக் கொண்டிருந்த ஸாலிஹான மனிதர்களின் உருவச் சிலைகள். காலப் போக்கில் அவர்களது நல்ல முன்மாதிரிகள் மக்கள் மத்தியிலிருந்தும் படிப்படியாக மறைந்து போய் அவர்களே வணங்கப் படுபவர்களாக மாறி விட்டார்கள்.

இதிலிருந்து மாறாப் பெறுமானம் ஒன்றைக் குறித்து நிற்கும் சிலை வணக்கத்திற்கும் அசைவியக்கம் ஒன்றைக் குறித்து நிற்கும் ஹனீபிய்யாவுக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகின்றது. இந்த வேறுபாட்டைத் தான் பேசுகின்றது, அல்-குர்ஆன்:

فَاجتَنِبُوا الرِّجسَ مِنَ الأَوثانِ وَاجتَنِبوا قَولَ الزّورِ حُنَفاءَ لِلَّهِ غَيرَ مُشرِكينَ بِهِ - الحج: ٣٠ - ٣١

**"...ஆகவே, விக்கிரகங்களின் அசுத்தத்திலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். அன்றியும் பொய்யான சொல்லையும் நீங்கள் விலக்கிக்**

**கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காது அவனுக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களாக இருங்கள்."** **(ஹஜ் 22:30–31)**

மனித உணர்வுகள் சில சந்தர்ப்பங்களில் நாம் அறியாமலேயே சிலை வணக்கத்தை நோக்கி எம்மை எடுத்துச் சென்றுவிடுகின்றன. அதாவது, குறிப்பிட்டதொரு உருக்குலைந்த கட்டமைப்பு கடந்த காலத்தில் பெற்றிருந்த சில பெறுமானங்களின் அடிப்படையில், அதனைக் கண்ணியப்படுத்தி சிலையாக வணங்கும் நிலைக்கு எம்மைத் தள்ளிவிடுகின்றன. அவ்வேளை ஹனீபிய்யா தான் எங்களது பாதையைச் சரி செய்வதற்கான வழியாக அமையும். ஹனீபிய்யாவின் அசைவியக்கத் தன்மையே அத்தகு கட்டமைப்புகளையும் வார்ப்புகளையும் விட்டு உயர் பெறுமானங்களை நோக்கி எம்மை வழிநடாத்தக் கூடியது.

فَأَقِم وَجهَكَ لِلدِّينِ حَنيفًا - الروم: ٣٠

**"ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக!.."** **(ரூம் 30:30)**

என்ற வசனத்தில் நாம் காணும் அசைவியக்கமானது, ஹஜ் என்ற கடமை, அதன் தாத்பர்யங்களை சில வேளை எமக்கு விளக்கக் கூடும். இந்த வசனம் எமக்கு ஒரு முஃமினின் நிலையைக் காட்சிப்படுத்துகின்றது. அவன் வான்வெளியில் தனது பார்வையைச் சுழல விட்டு, ஒவ்வொரு புள்ளியாக மாற்றி மாற்றித் தான் தேடும் இலக்கைக் கண்டு அடையும் வரை பார்வையை நகர்த்திக் கொண்டே இருக்கின்றான்.

நாம் ஹஜ் கடமைக்காக வெளியேறுதல் என்பது, எமது ஊர், குடும்பம், செல்வம், வாழ்க்கைத் தேவைகள், ஆசைகள், கவலைகள் என அனைத்தையும் விட்டு, அதாவது நாம் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கை வட்டத்தை விட்டும் வெளியே செல்வதாகும். இந்த அனைத்துத் தாக்கங்களில் இருந்தும் தூரமாகி எம்மை ஒரு முறை மீள்பரிசீலனை செய்து கொள்வதற்காகவும் எம்மைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் அத்தனை சிலைகளில் இருந்தும் விடுதலை பெறுவதற்காகவும் நாம் அங்கு செல்கின்றோம். ஹஜ் கடமையை நிறைவேற்றுபவர் தைத்த ஆடைகளைத் தவிர்ப்பதென்பது, அந்த ஆடை சுமந்திருக்கும் அனைத்து வகையான சமூக, பொருளாதார, வர்க்க வேறுபாடுகளில் இருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதாகும். இங்கு மனிதர்களுக்கு மத்தியிலான அனைத்து வேறுபாடுகளும் இல்லாது போய்விடுகின்றன. மக்கள் அனைவரும் ஒரே வெளியில், அல்லாஹ்வின் முன்னால் நிற்கும் அவனது அடியார்களாக மாத்திரமே காணப் பெறுவர். ஹஜ்ஜிலே மனிதர்கள், உயர்ந்தவர்கள் - தாழ்ந்தவர்கள், தலைவர்கள் - தொண்டர்கள் என்றெல்லாம் பிரிக்கப்படுவதில்லை; பிரிக்கப்படக் கூடாது. மானுடர் தமது

அனைத்து சார்பு நிலைகளுக்கும் அப்பாற்பட்டிருப்பார்கள். பெருமைகளும் பேதங்களும் அங்கில்லை. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வர். அங்கு மாந்தர் தம் பணியாக இருப்பது அல்லாஹ்வின் முன்னால் தமது அடிமைத்தனத்தை வெளிப்படுத்துவது மாத்திரமே. மனிதர்கள் தமது சில வழக்காறுகளை, பழக்க வழக்கங்களைச் சிறிது காலத்திற்கேனும் விட்டுவிடுகின்றார்கள். இதனால் தமது முன்னோர்களின் பாரம்பர்யங்கள் என்ற சிறையிலிருந்து விடுதலையை ஈட்டிக் கொள்ளவும் அவை குறித்த மீள்பரிசீலனைக்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகின்றது. ஷைத்தானுக்குக் கல்லெறிதல் என்பது உள்ளத்தின் ஷைத்தானிய உணர்வலைகளை எதிர்த்துப் போராடுவதாகும். இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் எவ்வாறு அசத்தியத்தில் இருந்து சத்தியத்திற்கும் தீமையில் இருந்து நன்மைக்கும் நகர்ந்து செல்கின்ற தொடர் செயற்பாட்டிலேயே தமது வாழ்வைக் கழித்தனரோ, அன்னவரை முன்னமாதிரியாகக் கொண்ட ஒரு செயற்பாடே ஹஜ். அல்லாஹ் இட்ட கட்டளையின் பிரகாரம் தமது மகனை அறுப்பதற்குத் தடையாக 'தந்தை' என்ற உணர்வை அவருள் தூண்டி விட்ட ஷைத்தானை விட்டும் இப்றாஹீம் நபிகளார் விலகிக் கொண்டமை குறிப்பிடப்பட வேண்டிய ஒரு படிப்பினை ஆகும்.

எனவே ஹஜ் என்பது எம்மைச் சிறைப்படுத்தியிருக்கும் சிலைகளின் வட்டத்திலிருந்து நாம் வெளிவருவதற்கான ஒரு மாதிரியாகும். நிஜ வாழ்க்கையில் உண்மையிலேயே அவற்றிலிருந்து நாம் விடுபடுவதற்கும் அந்த சுமைகளை இறக்கி வைப்பதற்கும் இது எம்மைத் தயார்படுத்துகின்றது. இந்த ஹஜ்ஜில் அதே சமூக, கலாச்சார, பொருளாதார, வர்க்க வேறுபாடுகள் மீள் உற்பத்தியாகின்றன என்றால், நாம் சிலை வணக்கத்தின் மற்றொரு வடிவத்தில் வீழ்ந்து விட்டோம் என்பது தான் பொருள். ஹஜ்ஜின் பெறுமானங்கள், தாத்பர்யங்களை விடுத்து அதன் புறச் சடங்குகளுடன் மாத்திரம் அதனைச் சுருக்கி விடுவோமானால் அங்கு ஒரு சிலை வணக்கம் தோன்றிவிடுகின்றது. இதனால் தான் அங்குள்ள நெரிசல் சிலபோது எந்தவித இரக்கமும் அற்றதாக இருக்கின்றது.

இதுவரை நாம் கண்டவற்றின் சாராம்சமாகச் சொல்ல வேண்டுவது, நவீன நடைமுறையில் சமூக மாற்றப் பொறிமுறையானது சில அடிப்படைகள் மீது எழ வேண்டியிருக்கின்றது என்பதாகும். அவை:

**முதலாவது அடிப்படை:** அல்-குர்ஆனின் ஹாகிமிய்யத். இது இரண்டு அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒன்று, அல்-குர்ஆன் தான் சட்ட உருவாக்க மூலாதாரமாகவும் ஏனைய அனைத்தையும் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல். அல்-குர்ஆன், பல மூலாதாரங்களில் ஒன்று அல்ல. மேலும் அதனை மூலாதாரமாகக்

கொள்வது, துண்டாடல் வாசிப்பாக அமையவும் கூடாது. துண்டாடல் வாசிப்பு, அல்-குர்ஆனைப் பிறவற்றிற்குச் சாட்சி சொல்லும் ஒன்றாகவே ஆக்கிவிடும். இரண்டு, இஸ்லாமிய அறிதல் ஒழுங்கில் 'அல்-குர்ஆனின் ஹாகிமிய்யத்' மனித வாசிப்பின் ஊடாகவே நிறைவேறுகிறது. இந்த மனித வாசிப்பு சரியானதைக் கண்டு கொள்கிறது என்பதை விடவும் அதாவது அல்லாஹ் இதனைத் தான் நாடுகின்றான் என்று திட்டவட்டமாகச் சொல்வதை விடவும் சரியானதை நெருங்கி வருவதற்கான முயற்சியாகவே காணப்படுகின்றது. அல்-குர்ஆனின் திட்டவட்டமான கருத்தைப் புரிந்து கொள்ளும் அதிகாரம் எமக்கு இருக்கின்றது எனக் கருதும் 'இறை ஹாகிமிய்யத்' எம்மையறியாமலேயே எங்களைத் தீர்வுச் சிக்கல் ஒன்றினுள் தள்ளிவிடும். அது இஸ்லாமிய அறிதல் ஒழுங்கிலன்றி வேறு ஓர் ஒழுங்கில் நாம் அல்-குர்ஆனை வாசித்து விளங்க முயல்வது போல இருக்கும்.

**இரண்டாவது அடிப்படை:** உம்மத் என்னும் மொத்தப் பார்வையின் அடிப்படையில் நடைமுறை மீதான வாசிப்பு அமைய வேண்டும். அல்லாது குழுவாத, பிரிவினைவாதப் பார்வைகளின் மீதோ அல்லது உம்மத்தை ஒரு தனிமனிதனில் சுருக்கிவிடும் அதிகார மையப் பார்வைகளின் மீதோ அமைந்துவிடக் கூடாது.

**மூன்றாவது அடிப்படை:** இஸ்லாத்தை அமுல்படுத்தல் என்பது, வரலாற்றுக் கால வடிவம் ஒன்றை மீளக் கொண்டு வருவதிலேயே தங்கியிருக்கின்றது எனக் கருதுகின்ற இறந்த கால மாறா மனப்பாங்குகளின் சிறையிலிருந்து விடுதலை பெற வேண்டும்.

**நான்காவது அடிப்படை:** நடைமுறையில் எவ்வகையிலும் செல்லுபடியாகாத இலட்சியவாத கனவுலகம் ஒன்றை இஸ்லாம் முன்வைக்கவில்லை. அசத்தியத்தில் இருந்து சத்தியத்தை நோக்கிய இடையறாத தொடர் பயணத்தையே ஒரு முஸ்லிம் மேற்கொள்ள வேண்டும். இது, தன்னைத் தானே கண்டித்துக் கொள்ளும் உள்ளத்தின் ஊடாகவே சாத்தியப்படுகின்றது. அது தனிமனித உள்ளமாக இருந்தாலும் சரி; சமூகத்தின் உள்ளமாக இருப்பினும் சரி. இல்லையேல் நாம் சிலை வணக்கப் பொறியொன்றில் விழுந்து விடுவோம். அதாவது. இஸ்லாத்தைப் பற்றிய மனிதப் புரிதலின் அடிப்படையில் அமைந்த ஒரு நடைமுறையை, அது தான் இஸ்லாத்தின் இறுதி வடிவம் என்று சுருக்கிவிடும் இடத்துக்கு நாம் வந்து விடுவோம்.

# முடிவுரை

இறுதித் தூதின் சர்வதேசத் தன்மையுடனும் அல்-குர்ஆனின் வரையறையற்ற பொதுப்பண்புடனும் இயைந்து செல்கின்ற இஸ்லாமியப் பார்வை ஒன்றினைக் கட்டியெழுப்ப வேண்டுவதன் அவசியம் தற்காலத்தில் காணப்படுகின்றது. இஸ்லாமியத் தூதின் சர்வதேசத் தன்மை என்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சம். மனித வரலாற்றின் இன்றைய காலகட்டத்தில் தாக்கம் மிக்கதாக அமைந்துள்ள இந்த அம்சத்தை நாம் சரிவர விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

அல்-குர்ஆன் அறபு மொழியில், அறபியர்களுள்ளான ஒரு தூதுவர் மீது இறங்கியது. கண்ணியமான மக்க நகரில் இறங்க ஆரம்பித்து நபிகளாரின் நகரமான மதீனாவில் நிறைவு பெற்றது. இதன் மூலம் மார்க்கம் முழுமையடைந்தது.

அறபுகள் இந்த அல்-குர்ஆனைச் சுமந்து கொண்டு பழைய நாகரிகப் பூமிகளை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் பிற சமூகங்களை நோக்கிச் சென்றமை, தானாக, அவர்களது தெரிவின் அடிப்படையில் நிகழ்ந்ததல்ல. அவ்வாறு செல்வது அவர்களது இயல்பும் அல்ல. மக்க நகருடன் கொண்டிருந்த பற்றுதல் காரணமாக அவர்கள் எங்கு பயணித்தாலும் ஆசையோடு மீண்டும் மக்காவுக்குத் திரும்பி விடுவார்கள். அவர்களை அல்லாஹ்வே அனுப்பி வைத்தான். சமூக மேலாதிக்க எண்ணத்திலன்றி இறை உந்துதலினாலேயே அது நடைபெற்றுள்ளது. அல்-குர்ஆனுடனான அவர்களது உறவானது, அவர்களால் தாமாக உருவாக்கிக் கொள்ளப்பட்ட ஒன்றாகவன்றி, ஈமானின் அடிப்படையில் அமைந்த ஒரு பொறுப்புச் சுமத்தலாகவே காணப்பட்டது. இஸ்லாத்தின் தூதை ஆரம்பத்தில் சுமந்தவர்கள் இரண்டு பணிகளை நிறைவேற்றினார்கள். அல்லாஹ்வை ஈமான் கொள்வதை நோக்கிய அழைப்பும் நன்மையை ஏவி தீமையைத் தடுத்தலும். அல்-குர்ஆன் கூறுகின்றது:

كُنتُم خَيرَ أُمَّةٍ أُخرِجَت لِلنّاسِ تَأمُرونَ بِالمَعروفِ وَتَنهَونَ عَنِ المُنكَرِ وَتُؤمِنونَ بِاللَّهِ وَلَو آمَنَ أَهلُ الكِتابِ لَكانَ خَيرًا لَهُم مِنهُمُ المُؤمِنونَ وَأَكثَرُهُمُ الفاسِقونَ - آل عمران: ١١٠

**“மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள். வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின் (அது) அவர்களுக்கு நன்மையாகும். அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர். எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்.” (ஆல இம்ரான் 3:110)**

இது மனிதப் பொது நலன்களை அடைந்து கொள்வதற்குரிய அனைவருக்குமான ஓர் அழைப்பு. இதன் சாராம்சம், மனித அடிமைத்துவத்திலிருந்து அல்லாஹ்வின் அடிமைத்துவத்தை நோக்கியும் மதங்களின் அநீதிகளில் இருந்து இஸ்லாத்தின் நீதியை நோக்கியும் உலக நெருக்கடிகளில் இருந்து லௌகீக, மறுமைகளின் பரந்த வாழ்வை நோக்கியும் மனிதர்களுக்கு வழிகாட்டுவதாகும். இவை அனைத்தினதும் பயன் அனைத்து மக்களுக்கும் உள்ளன.

எந்தவித குழுவாத, இனவாத இலாபங்களையும் எதிர்பாராது, பிறர் நலனை நோக்காகக் கொண்டது இந்த தூதுத்துவம். மட்டுமல்ல, பிறரையும் அவர்களது நாகரிக, பண்பாட்டு அம்சங்களையும் அங்கீகரித்து, அரவணைத்து, இந்தத் தூதுத்துவச் செய்தியைச் சுமந்து, அதனைப் பிறருக்கு எத்திவைக்கும் பணியில் அவர்களையும் சமபங்காளிகளாகக் கருதுகின்ற ஒரு மத்திம உம்மத் ஆக அமைந்தது இது. இந்த தூதுத்துவத்தின் அழைப்பு ஆரம்பித்து, சில தசாப்தங்கள் கடக்கும் முன்னரே அதன் ஒளி உலகின் தென்னரைப் பகுதி முழுவதும் பரவுகின்றது. கிழக்கில் தென் சீனா வரையும் மேற்கில் தென் ஐரோப்பா வரையும் இது பரந்து விட்டது. அறபியர், மொங்கோலியர், பாரசீகர், துருக்கியர், பர்பர் முதலான பல வேதம் வழங்கப்படாத, சிலை வணக்க சமூகங்களையும் அவர்களால் அரவணைக்க முடிந்தது. ஒரு பெரிய வெற்றிப் பயணத்தில் அவர்கள் அனைவரையும் சம அந்தஸ்த்துடன் இணைத்து முன்செல்ல இயலுமானது.

வேதம் வழங்கப்பெற்ற சமூகங்களைப் பொறுத்தவரையில் அவர்களுள் பலர் ஒப்பந்தங்களுடன் முஸ்லிம் உம்மத்தில் இணைந்து கொண்டனர். அம்மக்களது இன, மத, கலாச்சார தனித்தன்மைகள் பாதுகாக்கப்பட்டன. ரோம, பாரசீக சாம்ராஜ்யங்கள் வீழ்ச்சியடைந்து, பண்டைய நாகரிகப் பூமிகள் அனைத்தும் இஸ்லாத்தின் ஒளியால் பிரகாசம் அடைந்தன. விளைவாக, முஸ்லிம் உம்மத்தின் அரசு முதல் உலக அரசாக உருவானது.

கிழக்கு, மேற்கு என்ற இருமைப் போக்கைக் கடந்து செல்லவும் மத, கலாச்சார, நாகரிக பன்மைத்துவங்கள் அனைத்தையும் சர்வதேச இஸ்லாமிய அழைப்பு எனும் சட்டகத்தின் கீழ் அரவணைத்துக் கொள்ளவும் முஸ்லிம்களால் முடிந்தது. நவீன நாகரிகத்தின் உச்ச அடைவாக பன்மைத்துவத்தை அங்கீகரித்தமை அல்லது அங்கீகரித்திருப்பதாகச் சொல்லிக் கொள்கின்றமை காணப்படுகின்றது. ஆனால் சர்வதேச இஸ்லாமிய அழைப்பானது பன்மைத்துவத்தை ஏற்று அங்கீகரித்து அதனைச் சர்வதேச தளத்திற்கு ஏற்கனவே எடுத்துச் சென்று விட்டுள்ளது. எந்தவிதமான மதவாத, குழுவாத பிரிவினைக் காரணிகளுக்கும் இடமளிக்காத ஒரு முற்போக்கு மனிதப் பன்மைத்துவக் காரணியாக அது அமைந்துள்ளது. இஸ்லாம் பிறவற்றை ஈர்க்கும் ஒரு மையம். நவீன ஐரோப்பிய மையவாதத்தைப் போன்று பிறவற்றை வெளித்தள்ளும் மையமாக அது இல்லை. அதன் உம்மத்தும் ஒன்றிணைக்கும், அரவணைக்கும் ஒரு மையப்புள்ளியாகவே விளங்குகின்றது. ஏனைய மக்கள் தம்முடன் இணைந்து கொள்ள வேண்டும்; தமது மார்க்கத்தையும் பெறுமானங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எந்தவித நிர்ப்பந்தமும் இன்றி அவர்கள் பின்பற்றுவதற்குரிய தரமான ஒரு மாதிரியை இஸ்லாம் முன்வைக்கின்றது.

இங்கு முக்கியமான ஒரு விடயத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். அதாவது, சர்வதேசம் பற்றிப் பேசுகின்ற அனைவரும் அல்லது சில விவகாரங்களை சர்வதேச (Global. Universal. International) பின்புலத்திலிருந்து பேசுகின்றவர்கள் அனைவரும் நாம் புரிந்து வைத்திருக்கின்ற சர்வதேசம் என்ற கருத்தில் பேசவில்லை. மாறாக, அவற்றின் அதிகமான அழைப்புகள் -அனைத்து அழைப்புகளும் என்று சொல்ல முடியா விட்டாலும்- மேற்கின் மையவாத நோக்கில், வெள்ளை மனிதன் தான் நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் சுமந்தவன்; அவன் தான் தூய, பரந்த எண்ணங்களைக் கொண்டவன் என்ற நிலைப்பாட்டில் இருந்தே பேசுகின்றார்கள்.

எமது எண்ணத்தில் பதிந்துள்ள சர்வதேச சிந்தனை வித்தியாசமானது. அது, மனிதர்கள் அனைவரும் ஒரே மூலத்திலிருந்து படைக்கப்பட்ட ஒரு குடும்பம் என நம்புகின்றது. அனைவரும் ஆதமில் இருந்தே தோன்றினர். ஆதம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மனிதனுக்குரிய வீடாகும். அதில் எந்தப் பகுதியையும் அழிப்பதற்கோ, அதில் குழப்பங்களையும் நாசங்களையும் விளைப்பதற்கோ எவருக்கும் உரிமை இல்லை. இந்தக் குடும்பத்தில் இருப்போரின் நேர்வழிக்காகவும் அவர்களது சந்தோஷமான வாழ்வுக்காகவும் ஒரு வேத நூல் வழங்கப்பட்டிருக்கின்றது. அது இந்தப் பிரபஞ்சத்துக்கும் அதன் இயக்கத்துக்கும் ஒத்திசைவானது; சார்பு நிலைகளைக் கடந்தது; ஒவ்வொரு பரம்பரையினரதும் தேவைகளை உள்வாங்கக் கூடியது. அது தான் அல்-குர்ஆன். இந்தப் பிரபஞ்ச வேத நூலானது வாழும் பிரபஞ்சத்துடனும் அதன் இயக்கத்துடனும்

ஒத்திசைவானது. அது ஒன்று மாத்திரமே அனைத்து நபித்துவப் பாரம்பர்யங்களையும் உள்ளீர்த்து, உண்மைப்படுத்தும் ஆற்றல் பெற்றது. மனித வரலாற்றையும் தெளிவுறுத்தி அதன் நோக்கங்களை வரையறை செய்து, மறுமை வரையில் அமையவுள்ள மானுட வாழ்வை அரவணைக்கும் தன்மை வாய்ந்தது. அது போலவே கலாச்சார, நாகரிகப் போக்குகளையும் பரிசீலித்து அவற்றின் பாதையை சரி செய்யக் கூடியது. இவற்றால் தான் சர்வதேசம், அகிலத்துவம் எனக் கூறப்படுவனவற்றைச் சரியான கருத்தில் அணுகுவது இதுவே என்கின்றோம். வேறு கோஷங்களில் இந்தப் பண்புகளைக் காணல் இயலாது.

மனித இனம் முழுவதும் ஒரே குடும்பம் என்பதும் ஆதமிலிருந்து தோற்றம் பெற்றது என்பதும் ஆதம் மண்ணிலிருந்தும் படைக்கப்பட்டவர் என்பதும் தெளிவான உண்மைகள்:

كانَ النّاسُ أُمَّةً واحِدَةً فَبَعَثَ اللَّهُ النَّبِيّينَ مُبَشِّرينَ وَمُنذِرينَ وَأَنزَلَ مَعَهُمُ الكِتابَ بِالحَقِّ لِيَحكُمَ بَينَ النّاسِ فيمَا اختَلَفوا فيهِ وَمَا اختَلَفَ فيهِ إِلَّا الَّذينَ أوتوهُ مِن بَعدِ ما جاءَتهُمُ البَيِّناتُ بَغيًا بَينَهُم فَهَدَى اللَّهُ الَّذينَ آمَنوا لِمَا اختَلَفوا فيهِ مِنَ الحَقِّ بِإِذنِهِ وَاللَّهُ يَهدي مَن يَشاءُ إِلى صِراطٍ مُستَقيمٍ - البقرة: ٢١٣

**“(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும் (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான். எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள், தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்து விட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர்வழி காட்டினான். இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்.” (பகரா 2:213)**

மக்கள் ஆரம்பத்தில் ஒரே உம்மத்தாக இருந்து, பின்னர் முரண்பட்டார்கள். அதன் பின்னரே அல்லாஹு தஆலா நபிமார்களை நன்மாராயம் சொல்பவர்களாகவும் எச்சரிப்பவர்களாகவும் அனுப்பி, அவர்களுடன் மக்கள் முரண்பட்டுக் கொண்டிருந்த விடயங்களுக்குத் தீர்வுகள் காண வேதத்தையும் இறக்கி வைத்தான். என்றாலும் மக்கள் ஒற்றுமையாக இருந்த காலம் எப்போது நிறைவு பெற்றது; அவர்கள் மத்தியில் முரண்பாடுகள் எப்போது தோன்றின என்பது பற்றிய வரலாறு எங்களுக்குத் தெரியாது. எமக்குத் தெரிந்த வரலாற்றின்படி, அல்லாஹ்

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தூதுவராக அனுப்பி வைத்தான். அவர் தனது சமூகத்தில் தொளாயிரத்து ஐம்பது வருடங்கள் வாழ்ந்தார். அவரைத் தொடர்ந்து பல்வேறு நபித்துவங்கள் வரத் தொடங்கின. அல்-குர்ஆன் கூறுகின்றது:

لَقَد أَرسَلنا رُسُلَنا بِالبَيِّناتِ وَأَنزَلنا مَعَهُمُ الكِتابَ وَالميزانَ لِيَقومَ النّاسُ بِالقِسطِ وَأَنزَلنا الحَديدَ فيهِ بَأسٌ شَديدٌ وَمَنافِعُ لِلنّاسِ وَلِيَعلَمَ اللَّهُ مَن يَنصُرُهُ وَرُسُلَهُ بِالغَيبِ إِنَّ اللَّهَ قَوِيٌّ عَزيزٌ - الحديد: ٢٥

**"நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம். அன்றியும் மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கினோம். இன்னும் இரும்பையும் நாம் இறக்கினோம். அதில் கடினமான சக்தியும் மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன. (இவற்றின் மூலமாகத்) தனக்கும் தன்னுடைய தூதருக்கும் மறைமுகமாக உதவி செய்பவர் எவர் என்பதையும் (சோதித்து) அறிந்து கொள்வதற்காக அல்லாஹ் (இவ்வாறு அருள்கிறான்) நிச்சயமாக அல்லாஹ் பலம் மிக்கவன்; (யாவரையும்) மிகைத்தவன்." (ஹதீத் 57:25)**

மக்களை நேர்வழிப்படுத்தி அவர்கள் மத்தியிலான முரண்பாடுகளை இல்லாமல் செய்து, அவர்களை உண்மை, நேர்மை முதலாய பண்புகளின் மீது ஒற்றுமைப்படுத்துவதற்காக தொடர்ந்தும் தூதுத்துவங்கள் வந்து கொண்டிருந்தன. மக்கள் தூதுத்துவங்களைச் சரிவர கடைப்பிடித்திருப்பின் அவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலைபெற்று, நீதியை நிலைநாட்டுவதற்குரிய ஒரே உம்மத் தோற்றம் பெற்றிருக்க முடியும். ஆனாலும் சமூகத்தில் தீமை மற்றும் வழிகேட்டு எண்ணங்கள், மனோ இச்சைகள் மிகுந்திருந்தமையின் காரணமாக சிலர் தான் நபிமார்களின் தூதுத்துவ அழைப்புகளுக்குப் பதில் சொல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். மக்களுள் பெரும்பாலோர் ஷைத்தானின் பின்னால் வழிகேட்டில் செல்வார்கள்; தமது மனோ இச்சைகளால் வழிநடாத்தப்படுவார்கள்; தொடர்ந்தும் முரண்பாடுகளிலேயே இருப்பார்கள். நபிமார்களின் தூதுத்துவங்களும் வஹியின் வழிகாட்டலும் அவர்களை ஒற்றுமைப்படுத்த மாட்டா.

மனிதர்கள் மத்தியில் முரண்பாடுகள் தோன்றி விட்ட பின் அவற்றை இல்லாமல் செய்வது சிரமம், உள்ளத்தில் வெறுப்பும் பொறாமையும் குரோதமும் நுழைந்து விட்டால், சாதாரண வழிமுறைகள் ஊடாக அவற்றை அகற்றி விட முடியாது என்ற உண்மையை அல்-குர்ஆன் எமக்கு உணர்த்துகின்றது. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது இரு மக்களுக்கு மத்தியில் ஏற்பட்ட குரோதம், பொறாமை முதலான மோசமான உணர்வுகள் சொந்த சகோதரனையே கொலை செய்யும் அளவுக்குச்

சென்றமையை நாம் காணலாகும். தனது உள்ளத்தில் எழுந்த அத்துமீறல் உணர்வைத் தணித்துக் கொள்வது தவிர்ந்த வேறு எந்த நியாயத்தையும் அக் கொலைக்குக் கற்பிக்க இயலவில்லை. அந்த உணர்வுக்கு ஆட்பட்டு அதன் பின்னால் சென்ற பின்னர் மட்டுமே அமைதி கிட்டியது.

இதனால் தான் அல்லாஹ்ு தஆலா தனது இறுதித் தூதருக்கு ஒரு விஷேட அருளை வழங்கினான். அன்னவரைத் தனது உதவியின் மூலமும் மு.்.மின்கள் மூலமும் பலப்படுத்தினான். மு.்.மின்களது உள்ளங்களுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்தி அவனது அருளினால், அவர்களை சகோதரர்களாகவும் மாற்றியமைத்தான். மனித உள்ளங்களுக்கிடையில் செல்வங்களும் நலன்களும் ஒருபோதும் பிணைப்பை ஏற்படுத்தி விட முடியாது. உள்ளங்களின் இணைப்போ இறையருளால் ஏற்படுவது எனக் குர்ஆன் எமக்குக் கற்பிக்கின்றது. ஏனெனில் உள்ளங்களின் இணைப்பு என்பது மனிதன் மீண்டும் பிறப்பது போன்றது. ஏனையவர்களுடனான உறவைச் சீர் செய்யும் வகையில் அவனை மீளவும் வடிவமைப்பது போன்றது. இதன் மூலம் இந்தப் பூமியில் மனிதனுக்கு வழங்கப்பட்டள்ள மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குரிய ஒன்றுபட்ட ஓர் உம்மத் தோற்றம் பெறுகின்றது. அவர்கள் சிறந்த, நடுநிலையான, மக்களுக்கு சான்று பகரும் சமூகமாக இருப்பார்கள். மேலும் இந்த சிறப்பான நடுநிலைப் பண்பின் தொடர் இருப்புக்கு உத்தரவாதம் அளிப்பவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்.

அல்லாஹ்வின் மாபெரும் உதவியுடன் இறுதித் தூதைச் சுமப்பதற்குரிய முஸ்லிம் உம்மத்தைக் கட்டியெழுப்ப நபியவர்களால் முடிந்தது. பரந்து விரிந்த உலகையும் மானுட இனத்தையும் நோக்கி, அனைத்தினதும் அடிப்படை ஒன்று தான் என்ற செய்தியையும் இரட்சகன் ஒருவன், மார்க்கம் ஒன்று, நோக்கம் ஒன்று, பூமியும் ஒன்று, முழு உலகமுமே மனிதனுக்குரிய வீடு, அவனுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் அங்கே செய்யப்பட்டுள்ளன என்றெல்லாம் அன்னவரால் சொல்ல முடிந்தது. இவ்வாறே நபியவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டி, நிரந்தர தூதைச் சுமந்த ஒரே உம்மத்தைக் கட்டியெழுப்பினார்கள். இந்தத் தூது அல்லாஹ்வை நோக்கியும் அவனுக்கு மாத்திரமே அடிமைப்பட வேண்டும் என்றும், இறைத்துவமும் அதன் பண்புகளும் அவனுக்கு மாத்திரமே உரியன என்றும் அழைப்பு விடுக்கின்றது. இந்த உம்மத் உருவாக்கப்பட்டது, மக்கள் பின்பற்றுவதற்குரிய ஒரு மாதிரியாக இருப்பதற்காக. முழு மனித சமூகத்தாரும் இந்த மாதிரியைப் பின்பற்றி அதற்குச் சமானமாகத் தம்மைத் தாம் உருப்படுத்திக் கொள்ள முடியும். இதன் மூலம் பூமியில் சமூகங்களுக்கிடையிலான ஒத்திசைவு சாத்தியப்படுகின்றது. இறைவழிகாட்டலால் பூமி பிரகாசம் அடைகின்றது. பூமியை வளப்படுத்த வரும் மனிதர்கள் சீர்மையடைகின்றார்கள். அனைவரும் ஒரே இலக்குக்காக

உழைக்கின்றார்கள். பூமியின் பிரதிநிதித்துவம் எனும் அமானிதத்தைச் சுமப்பதிலும் உலக மக்கள் மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதிலும் உடன்படுகின்றார்கள். அல்லாஹ்வின் வேதநூல் பற்றிப்பிடிக்கப்படுகின்றது. அதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் சமூகங்கள் மத்தியில் பரஸ்பர அறிமுகம் ஏற்படுகின்றது. வேதநூல் கொண்டு வந்துள்ள பெறுமானங்கள், நன்மையான வழிமுறைகளை இவ்வுலகில் நிலைநாட்டுவதில் பரஸ்பர ஒத்துழைப்பு தோற்றம் பெறுகின்றது. மனித இனம் முழுவதும் ஒரே குடும்பமாய் சமாதானத்துள் நுழைந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது.

இவற்றைச் சாத்தியப்படுத்தும் வகையில் தான் ஏகத்துவத்தையும் உம்மத் என்னும் மாதிரியையும் எல்லா மனிதர்க்கும் எடுத்துச் செல்லும் பொறுப்பு இறுதித் தூதருக்கு வழங்கப்பட்டது. இதனைப் பூமியின் ஒவ்வொரு கோடிக்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் நிச்சயம் இது உலகளாவியதோர் அழைப்பாக இருக்க வேண்டும். ஓர் இனத்துக்கோ, பிரதேசத்துக்கோ, குலத்திற்கோ ஆன அழைப்பாக அது இருக்க முடியாது. அதன் சிந்தனா அதிகாரம் அல்லாஹ்வின் வேத நூலுக்கே இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, சரியும் தவறும் கொண்ட மனித வாசிப்பின் அடிப்படையில் அமைந்த அதிகாரமாகவே அது அமைய வேண்டும். தூதுத்துவம் முற்றுப் பெற்று விட்டதனால், மானுட மூல ஒருமைப்பாட்டின் அடிப்படையிலேயே இது எழ வேண்டும். வேறு வழிகளுடன் கலந்து போய்விடாமலும் மானுட மனோ இச்சைகளால் தடம்புரண்டு விடாமலும் இது நிலைபெற வேண்டும். இதன் சட்ட வரைவுகள் இலகு தன்மையும் அருளும் கூடியதாக, மக்களது சுமைகளை இறக்கி, விலங்குகளை அகற்றக் கூடியனவாக வரையப்பட வேண்டும். அப்போது தான் சிலர் ஏற்று சிலர் மறுக்கும் நிலைமைகள் ஏற்படாது அனைவரும் ஏற்கக் கூடியதாக இது அமையும். இலகு தன்மை, அருள் என்பன மட்டுமன்றி, எல்லோரையும் உள்ளடக்கும் பொதுத் தன்மையும் அனைத்தையும் உள்ளடக்கும் முழுமைத் தன்மையும் காணப்பட வேண்டும். இஸ்லாத்தின் அழைப்பு உள்ளடக்கி இருக்க வேண்டிய பொதுவான சிறப்பம்சங்களாக நாம் இவற்றைக் கொள்ளலாம்.[(1)]

---

*(1)* செமித்திய மொழிகளிலும் பண்டைய நாகரிகங்களிலும் குறிப்பாக பாபிலோனிய நாகரிகத்திலும் ஹமூராபிய சட்டங்களிலும் தீன் என்ற சொல்லுக்குப் பரவலாக வழங்கப்பட்ட பொருள், சட்டம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தீர்ப்பு, நீதிபதி போன்ற கருத்துகளுடன் இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தது. தௌராத்தின் ஆதியாகமத்தில் தீன் என்ற சொல் அல்லாஹ் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது யூதர்களின் இறை ஹாகிமிய்யத் சிந்தனைக்கு இதனோடுள்ள தொடர்பைக் காட்டுகிறது. யூதக் கலைக் களஞ்சியத்தின் நான்காம் பாகத்தில் தீன் என்ற சொல்லுக்கு ஐந்து கருத்துகள் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் அழைப்பு தொடர்பான இந்த, திறந்த, விசாலமான பார்வையானது நிச்சயமாக குறுகிய, மூடிய பிரதேச, இன, மத்ஹப் பார்வைகளைத் தடைசெய்துவிடும் என்பதில் சந்தேகங்கள் இல்லை. ஏனெனில் அல்-குர்ஆனின் சிறப்பம்சங்களுடன் இயைந்து செல்லும் இஸ்லாமியப் பார்வையை இந்தத் துண்டாடல் அணுகுமுறை ஊடாக உற்பத்தி செய்ய முடியாது. நடைமுறை வாழ்வு மீது அல்-குர்ஆன் மீண்டும் புதிதாய்ப் பிரதிபலிக்க வேண்டும் என்றால், அல்-குர்ஆன் பற்றியும் நடைமுறை பற்றியும் முழுமையான ஒரு புரிதல் அவசியப்படுகின்றது. இந்த முழுமையான புரிதல், மொத்த முறை சார் புரிதல் ஒன்றின் மூலமே சாத்தியப் படும். இன்றைய இஸ்லாமிய சிந்தனைச் செயற்பாட்டுக்குள் காணாமல் போய் விட்டதோர் அம்சம் என்றால் அது, இந்த மொத்த முறைசார் புரிதல் தான். இந்தப் புரிதல் இல்லாமல் போனதால் தான், மாற்றங்களைப் புரிந்து கொள்ளாத, மாறா மனப்பாங்கு இஸ்லாமிய சிந்தனா மரபுக்குள் வளர்ந்தது. அத்துடன் இறை வசனங்களை மொத்தமாய் நோக்காமல் பகுதி பகுதியாய்ப் புரிந்து கொள்ளும் தவறும் நிலைத்து விட்டது.

இறுதியாக நாம் தெளிவுபடுத்த வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. முன்னம் முரண்பாடுகள் பற்றிய ஒழுக்க நெறிகள் என்ற தலைப்பில் நாம் பேசிய விடயங்களின் மூலம், மையப் புள்ளியை ரத்துச் செய்து, கருத்து வேறுபாடுகளை, ஏன் முரண்பாடுகளையும் தாராளமாக அனுமதித்து, உண்மைகளை நீர்த்துப் போகச் செய்வதல்ல எமக்கிருந்த நோக்கம். இஸ்லாமிய சிந்தனை ஒழுங்கில் அல்-குர்ஆனின் மைய நிலையையும் அதன் வரையறையற்ற பொதுத் தன்மையயம் கண்டு கொள்ளும் பாதையில் வைத்த ஓர் எட்டாகவே அதைக் கருத முடியும். இதன் மூலம் ஏனைய, மூடிய, மத்ஹப் சார்ந்த அனைத்துக் கற்பனையான மையவாதங்களில் இருந்தும் விடுதலை பெறுவதே எமது நோக்கம். அல்-குர்ஆனுக்கான மைய நிலையை. முஸ்லிம்களது உணர்வுகளில்,

---

அவையனைத்தும் தீர்ப்பு, நீதி, சட்டம் போன்ற கருத்துகளைத் தரக் கூடியவையாகும். இதே கலைக் களஞ்சியத்தின் ஆறாம் பாகத்தில் தீன் என்ற சொல் கானூன் என்னும் சட்டம் என்ற கருத்தையும் அதன் மூலங்கள் என்ற கருத்தையும் உள்ளடக்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மதச் சார்பற்ற மாதிரிகளில் தோன்றிய சட்டமும் தீன் என்றே அழைக்கப்படுகிறது. எனவே வாய்வழி அறிவுப் பாரம்பரியக் காலப்பகுதிகளில் தீன் என்ற சொல் பரவலாக இந்தக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதனால் அதே பழைய நாகரிகங்களில் பயன்படுத்தப்பட்ட கருத்தையே அல்-குர்ஆனின் தீன் என்ற பிரயோகத்திற்கும் வழங்க முற்பட்டமையில் ஆச்சரியமில்லை. தீன் என்ற எண்ணக்கரு அல்-குர்ஆனின் அடிப்படையில் மீளக் கட்டியெழுப்புவதற்கான குறிப்பிடத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவும் இல்லை.

முறைப்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்கில் மீளக் கொண்டு வரும் கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. இல்லாவிடின், எல்லாக் காலங்களிலும் மானுட வாழ்வை இயக்குவிப்பதற்கான முழுமையானதொரு பிரபஞ்ச இஸ்லாமியப் பார்வையொன்றை உருவாக்கும் எதிர்பார்ப்பு சாத்தியமற்றுப் போகலாம். இந்தப் பிரபஞ்ச இஸ்லாமியப் பார்வை ஊடாகவே, 'சான்று பகரும் உம்மத்' மீளக் கட்டியெழுப்பப்பட முடியும்.

நோக்கங்களுக்குப் பின்னால் அல்லாஹ்வே இருக்கின்றான்.



கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானீ (1935-2016) சவூதி அறேபிய இமாம் முஹம்மத்-இப்ன்-ஸஊத் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்; ராபிதா-அல்-ஆலம்-அல்-இஸ்லாமியின் ஸ்தாபக உறுப்பினர்; Organization of Islamic Conference இன் இஸ்லாமிய பிக்ஹ் அமையத்தின் தலைவர்; அமெரிக்க பிக்ஹ் கவுன்ஸில் தலைவர்; International Institute of Islamic Thought நிறுவனர்களில் ஒருவர்; அறபு மொழியில் பல நூல்களைப் பதிப்பித்தும் யாத்தும் வந்துள்ளார். அன்னாரின் பல ஆக்கங்கள் தமிழ் உட்பட பல மொழிகளில் வெளியாகியுள்ளன.

Fuzin Texts
23/3 Market Road,
Dharga Town – 12090,
Sri Lanka

INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT

ISBN 978-624-5832-02-6